# பேரறிஞர் அண்ணாவின் பெருவாழ்வு

அ. மறைமலையான்

வானதி பதிப்பகம்
தி. நகர் - சென்னை-17

# இந்நூல்...

திருவள்ளுவர், சாணக்கியர், சாக்ரடீஸ், கார்ல் மார்க்ஸ், தாமஸ் ஜெபர்சன், அகிம்சை முறையை முதன் முதலில் உலகுக்களித்த காந்தியடிகள் முதலானோர், வரலாற்றில் அழியாப் புகழ் பெற்று நிற்கிறார்கள். இத்தகைய பெருமக்களைப் போலவே இன்று தமிழ் மக்களால் மிகவும் ஏற்றிப் போற்றப் பெற்றாலும் நாளை உலகம் முழுவதுமே தலைமேல் வைத்துக் கொண்டாடத்தக்க நிலையான புகழுக்கு நிலைக்களனாகத் தம்மை இளமையிலிருந்தே உருவாக்கிக் கொண்டு வந்திருப்பவர் பேரறிஞர் அண்ணா என்பதை இந்நூலைப் படிக்கும் ஒவ்வொருவரும் உணருவார்கள்.

உயர்ந்த நாதத்தைப் பொழியும் காருகுறிச்சியின் நாதசுர இசைக்குழலினின்று பிறக்கும் சுகத்தைவிட அண்ணாவைப்பற்றி ஆசிரியரின் பேனாவிலிருந்து பிறக்கும் சிந்தனைச் சுழல் நம்மைச் சுகானந்தத்தில் ஆழ்த்துகிறது. அவருடைய பேனா அறிவுக் கனலையும், அன்புப் புனலையும் அழகுத் தமிழையும் உதிர்க்கிறது. இன்று தமிழகத்தின் தலைமகனாகத் திகழும் அறிஞர் அண்ணாவின் வாழ்க்கை பற்றி முழுக்க முழுக்க ஆராய்ந்து, அண்ணாவின் மாமேதைத் தன்மையை, கல்வியறிவை, சொல்லாற்றலை, எழுத்தாற்றலை, கலையார்வத்தை, கட்சிக் காவலை, அரசியல் அறிவை, ஒளிமயமான வாழ்வை தனித்தனியே பக்கத்துக்குப் பக்கம் ஆராய்ந்து பெருங்காவியமாக, தமிழ் ஓவியமாக, ஏன் பேரிலக்கியமாகவே சமைத்துள்ளார்; இந்நூலாசிரியரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

பேரறிஞர் அண்ணாவின் வாழ்க்கை வரலாற்றைப் படிப்பதன் மூலம் தங்கத் தமிழகத்தின் அறுப தாண்டு வரலாற்றைப் படிக்கும் பயனையும் அடைகிறோம் என்ற பெருமை பெருகுகிறது. எவ்வளவு பரிசுகள் உண்டோ அவ்வளவு பரிசும் பெறத் தகுதி வாய்ந்தது இந்நூல் என்பதைத் திடமாக நம்புகிறேன். தமிழ் மக்கள் இந்நூலுக்குத் தக்க ஆதரவு தருவார்கள் என்ற நம்பிக்கையுடன் வெளியிடுகிறேன்.

ஏ. திருநாவுக்கரசு.

# நுழைவாயில்...

சிந்தனைச் சிற்பிகளே உலகை வழிநடத்தும் ஒப்பற்ற அணையா விளக்குகள்!

அத்தகைய அணையா விளக்குகளில் ஒருவரே பேரறிஞர் அண்ணா!

அண்ணா—

தோற்றத்திலே அகல் விளக்கு; தூய தொண்டிலே மெழுகுவத்தி; ஆற்றலிலே மின் விளக்கு; அன்போடும் பண்போடும் யாவரையும் அரவணைத்துப் பிறரைவிட எல்லா வகையிலும் உயர்ந்து வழிகாட்டும் பெற்றியிலே கலங்கரை விளக்கம்!

அண்ணா—

ஒரு மனோரஞ்சித மலர்!

நாம் எவ்வாறெல்லாம் நம் மனத்தை வைத்துக்கொண் அவரைப் பார்க்கின்றோமோ அவ்வாறெல்லாம் அவர் மண பவர், இனிப்பவர்!

அந்த 'மனோரஞ்சித மலர்', என் சிற்றறிவில் எப்படி யெல்லாம் மணம் வீசிற்றோ அந்த மணத்தையே இந்த நூலில் ஓரளவு கொணர முயன்றுள்ளேன்.

ஆம்; 'ஓரளவு'தான்! ஏனெனில் அவரைப் பற்றிய எல்லாச் செய்திகளையும் இணைத்துவிட்டேன் என்று நான் இறுமாப்புக் கொள்வதற்கு இல்லை; எத்தனை எத்தனையோ விடுபட்டுள்ளன.

குறிப்பாக,

தமக்கே உரிய தனி முத்திரை பொறிக்கத்தக்க ஆற்ற களைப் போலவே, அண்ணாவிடம் வேரோடியுள்ள அரிய பண்புகளும் எண்ணற்றவை.

தம்மை ஒரு மாநாட்டிலே அவசரப்பட்டுத் தூற்றிய பட்டுக்கோட்டை திரு. அழகிரிசாமி அவர்களின் பொதுத்

தொண்டினை மறவாமல், அவரது இறுதிக்காலத்தில் பண உதவி புரிந்த பெருங்கருணை—

தம்மைவிட்டு விலகிவிட்டாரே என்று வெறுப்புக் கொள்ளாமல், உலகப் பெரு நடிகர் மார்லன் பிராண்டோ வையும் விஞ்சியவர் என்று திரு. சிவாஜி கணேசனைப் புகழ்ந்த —திறமையை மதிக்கும் பெரு நோக்கு—

தம்மை விட்டுப் பிரிந்ததுடன் தாக்கவும் முனைந்தாரே என்று பகைமை கொள்ளாமல், 'கவிஞர் கண்ணதாசன் பாட்டைச் சுவைக்கத் தெரியாதவர்கள் தமிழையே அறியா தவர்கள்'—என்று உளந்திறந்து போற்றிய உயர்ந்த பண் பாடு—

*1962*-இல் தம்மைத் தோற்கடிக்கக் காஞ்சிபுரம் தொகுதியில் திரு. காமராசர் எத்தனையோ முறைகள் முற்றுகையிட்டும், 1967 தேர்தலில் ஒரு முறையேனும் விருதுநகர் தொகுதி சென்று அவரைப் பழிக்குப்பழி வாங்கும் போக்கில் வசைபாட எண்ணாமல் ஒதுங்கிய பெருந் தகைமை—

தம்மைப் பெரியார் அவர்கள் எவ்வளவோ இழித்தும் பழித்தும் ஏசியும்கூட தாம் முதலமைச்சராகப் பொறுப் பேற்றதும் செருக்குச் சிறிதுமின்றி, தம்முடைய அருந்தலைவ ரான அவர்தம் வாழ்த்துப் பெற மட்டுமே சென்னையிலிருந்து திருச்சிவரை சென்ற பெரு நன்றி—

—இப்படி எண்ணற்ற, அண்ணாவின் உன்னதமான இயல்புகளையெல்லாம் விரிவான முறையில் இந்நூலில் இணைக்க இயலாமற் போனது ஒரு பெருங் குறையே.

எனினும்கூட, அரசியல் முறையிலும் பிற துறைகளிலும் அவருடைய சிந்தனைகள், செயல்கள், முதலானவற்றை இயன்றவரையில் 'திறனாய்வு' முறையில் அணுகி இந்நூலை உருவாக்கியுள்ளேன்.

ஆப்பிரகாம் லிங்கன், எட்மண்ட் பர்க், ஹெரால்டு லாஸ்கி முதலான உலகப் பேரறிஞர்கள் எந்த அளவில்

அண்ணாவிடம் காட்சியளிக்கின்றனர் என்பதையும் ஆங் காங்கே காட்டியுள்ளேன்.

அண்ணா —

பல நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் தமிழ் மண்ணுக்குக் கிட்டிய மாபெரும் சிந்தனைப் புதையல்—வழிகாட்டி— முன்னோடி!

கால் நூற்றாண்டுக்கு முன்னரே, அவர் புகுத்திய 'அடுக்குமொழி' (உண்மையில் மோனை மொழி)—நடையை இன்று கைக்கொள்ளாத தமிழ் எழுத்தாளரோ, பேச் சாளரோ இல்லை என்னலாம். இந்தியச் செய்திப்படத் துறை யினரின் (Films Division News Review) விளக்கங்களில்கூட அண்ணாவின் 'அடுக்கு மொழி' ஒலிப்பதைக் கேட்கிறோம்.

அதேபோல் கலைத்துறையை முழுமையாக அரசியலுக் குப் பயன்படுத்தி முதன் முதல் வெற்றிகண்ட பெருமையும் உலகிலேயே அண்ணா ஒருவரையே சாரும்.

இன்னொரு வியக்கத்தக்க செய்தி என்ன தெரியுமா?

1967-இல் தமிழக ஆட்சிப் பீடத்தை அண்ணாவின் தலைமையில் இயங்கும் திராவிட முன்னேற்றக் கழகம் கைப் பற்றியதை அறிந்த அமெரிக்க நாட்டு மாபெரும் இரண்டு அரசியல் கட்சிகளுள் ஒன்றான 'குடியரசுக் கட்சி' தன்னுடைய வலிமையை வளர்க்கும் நோக்குடன் அண்ணாவின் அடிச் சுவட்டில் நடைபோட விழைவதாகச் செய்திகள் வரு கின்றன.

அண்ணா கையாண்ட இரு வழிகளை முதலில் அவர்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. மேலே குறிப்பிட்டோமே அந்த இரண்டு வழிகள்தாம்—அவை :

1. குடியரசுக் கட்சியினரின் ஏடுகள், மேடைகள் ஆகியவற்றில் இனி 'அடுக்கு மொழி'—மோனை மொழியைக் கையாள்வது.

2. கலைஞர்களுக்கு உரிய மதிப்பை அளித்து, அவர்களை அரசியல் பிரச்சாரத்துக்குப் பயன்படுத்துவது.

—அண்ணு ஒரு வழிகாட்டி—முன்னேடி என்பதற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்?

இவ்வாறு, உலகமே பின்பற்றத்தக்க 'பேரறிஞர் அண்ணுவின் பெருவாழ்வில்'—எத்தனையோ நிகழ்ச்சி அலைகள் ஆர்ப்பரித்து எழுந்து அடங்கிய வண்ணம் உள்ளன. பயிற்சியற்ற கரத்தினுல், பழக்கமில்லாத தூரிகையால், ஆர்வம் ஒன்றை மட்டுமே துணையாகக்கொண்ட ஓர் இளம் ஓவியன் வண்ணப்படம் வரைய முற்பட்டதைப்போல் அந்த அலைகளுள் சிலவற்றையே இந்நூலாக உருவாக்க முயன்றுள்ளேன்.

இந்நூலை எழுதி முடிக்கப் பலர் பல வகைகளில் ஒத்துழைப்பு நல்கியுள்ளனர். என் உடன்பிறவா இளவல் திரு. இரா. இலக்குமிகாந்தன் பி.ஏ., அண்ணன் திரு. சி. கிருட்டினமூர்த்தி, நண்பர்கள் திரு. ம. செகதீசன், திரு. கே. எஸ். இலட்சுமணன், திரு. நா. எத்திராசு ஆகியோர் குறிப்பிடத்தக்கோர் ஆவர். ஆணே பெண்ணே அழகாய் இருந்தால் மட்டும் போதுமா? கவர்ச்சியான ஆடையும் தேவை அவர்கள் பொலிவை முழுமையாக்க. அந்த முறையில் ஒரு நூல் மிகச் சிறந்த கருத்துப் பேழையாக இருப்பினும், அது நன்கு மணம் கமழ்வது அதன் வெளியீட்டெழிலையே பொறுத்துள்ளது. இத்துறையில் கைதேர்ந்த கலை, இலக்கிய ஆர்வங்கொண்ட 'வானதி பதிப்பக' உரிமையாளர் திரு. ஏ. திருநாவுக்கரசு அவர்கள் இந்நூலை அழகுற வெளியிடுகின்றூர்கள். இவர்கள் யாவர்க்கும் என் நன்றி உரியது.

'பேரறிஞர் அண்ணுவின் பெருவாழ்வு'—ஒளிக்கதிர் பட்டுத் தமிழகமும், தாரணியும் மென்மேலும் விழிப்புணர்ச்சி பெறுவதாகுக!

அன்பன்,

அ. மறைமலையான்.

# 1. தமிழகத்தின் தலைமகன்

## பாசக் கடவுள்

"நுண்ணறிவு அன்புடன் இணைந்துவிட்டால், அதனால் அடைய முடியாத எதுவும் அவனியில் இல்லை" என்றார் செருமானியக் கவிஞர் கதே.

தமிழகத்தைப் பொறுத்தவரை அவரது வாய்மொழி, வாய்மை மொழியாகவே பலித்துவிட்டது.

இலட்சக்கணக்கான தமிழ் இளைஞர்களின் இருதயக் கோவிலிலே இன்று பாசக் கடவுளாகக் கோலோச்சும் பேறு பெற்றவர் யார்?

அறிஞர் சி. என். அண்ணாதுரை அவர்களே.

## அறிவுக் கனல்! அன்புப் புனல்!

தேனைவிட இனிக்கப் பேசும் அந்தச் சீனிக் குன்றை நோக்கி, எண்ணிலடங்கா இளைஞர்படை எறும்புக் கூட்டங்களாக ஏகி மகிழ்வானேன்? அண்ணா! அண்ணா! எனக் கூவித் தொழுவானேன்?

காரணம், அவர் ஒளிவீசும் அறிவுக்கனல்! அதே சமயம் குளிர் வீசும் அன்புப் புனல்! பொல்லாங்கினை இல்லா தொழிக்கும் புரட்சித் தீ! அதே சமயம், பொல்லாதவரையும் நல்லவராக்கும் பொறுமைக் கடல்!

இவ்வாறு நுண்ணிய அறிவும் தண்ணிய அன்பும் பின்னிப் பிணைந்து உருவான பெருமனிதராய் விளங்குவதாலேயே, இன்று தமிழகத்தின் தலைமகனாய்த் தலைநிமிர்ந்து நிற்கிறார் அண்ணா!

"இந்த யுகத்தில் அவரால் அடைய முடியாது" என்று மாற்றாரால் கூறப்பெற்ற ஆட்சிப்பீடத்தை அடைந்தே காட்டிவிட்டார் அவர்!

சுருங்கச் சொன்னால், கவிஞர், கதே வகுத்துக் காட்டிய அன்பு தழுவிய அறிவின் இலக்கணத்துக்கு, இலக்கியமாகவே ஒளிவிசி நிற்கிறார் அண்ணா!

## முத்திரைப் பொன்

"சில தலைவர்கள் தாமே உருவாவார்கள்; வேறு சிலரோ பிறரால் உருவாக்கப்படுவார்கள்" என்னும் பொன்மொழி ஒன்று புவியில் உலவி வருகிறது.

அண்ணாவோ தலைவராக உருவாக்கப்பட்டவர் அல்லர்; தாமே உருவானவர். முலாம் பூசப்பட்ட போலித் தங்கம் அல்லர்! முத்திரைப் பொன்!

## கவியின் கனவு

உள்ளொளி மிக்க உண்மைக் கவிஞர்கள் நாளை நடைபெறப் போவதை இன்றே நவிலும் ஆற்றல் படைத்தவர்கள் என்று போற்றப்படுகிறார்கள். அவர்கள் கனவு நனவாகிறது; எண்ணம் ஈடேறுகின்றது; விருப்பம் உருப்பெறுகின்றது. அத்தகைய உள்ளொளி மேவிய உயர்ந்த கவிஞர்களைத் தமிழ் மண்ணும் காணத் தவறவில்லை. சான்றாக பாரதியார், பாரதிதாசன் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

## பாரதியின் ஆனந்தப்பள்ளு

1947-இல்தான் இந்தியத் துணைக்கண்டம் விடுதலை எய்தியது. ஆனால் பின்னர் வரப்போகும் விடுதலையை ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே வந்துவிட்டதாக "இன்பப் பள்ளு" இசைத்தார் மகாகவி பாரதியார்.

"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட் டோமென்று
ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே..."

—என்னும் அவரது பொருள்பொதிந்த வருங்காலக் கண்ணோட்டம் தெளிவாய் மிளிர்ந்த — ஓர் அரிய பாடலை அறியாதார் யார்? அடிமை இருளின் ஆட்சி நாட்டை அல்லற்படுத்திய அந்த நாட்களிலேயே இத்துணைத் தன்னம்பிக்கையோடு எப்படிப் பாடினார் பாரதி என்று வியக்காதாரே இலர். எவ்வாறோ அவரது கனவு நனவாகிவிட்டது; விரும்பிய விடுதலைப்பூ அரும்பி மலர்ந்துவிட்டது.

**பாரதிதாசன் கனவு**

பாடல் உலகைப் பொறுத்தவரை பாரதியாரின் நேரான வழித்தோன்றல்—சீரான மாணாக்கர் யார்?

பாரதிதாசனே!

தம் ஆசிரியர் சென்ற அடிச்சுவட்டிலேயே வீரநடை போட்டுத் தமிழ் மக்களை வீறுகொண்டு எழச்செய்தவர் அவர். தனித்தமிழ் வளர்ச்சிக்கும் சமூக மறுமலர்ச்சிக்கும் அயராது உழைத்தவர் அவர். தம் ஆசிரியர் பாரதியாரைப் போலவே அவரும் ஒரு கனவு கண்டார்; ஒரு விழைவு கொண்டார்.

" தமிழாய்ந்த தமிழ்மகனே
தமிழ்நாட்டின் முதலமைச்சாய்
வருதல் வேண்டும்"

என்பதே அவர் கண்ட கனவு ; கொண்ட விழைவு.

1967-இல் அவரது எண்ணம் ஈடேறிவிட்டது ; ஆசை நிறைவேறிவிட்டது.

ஆம் ; தமிழ் ஆய்ந்த தமிழ் மகனாகிய அறிஞர் அண்ணா அவர்களே தமிழ்நாட்டின் முதல் அமைச்சர் ஆகிவிட்டார்.

**சாலச் சிறந்த மாலுமி !**

கொந்தளிக்கும் துயர்க்கடலில் நொந்து கலங்கும் மக்களின் வாழ்வுக் கப்பலை முறையோடு செலுத்தித் திறமையோடு கரை சேர்க்கச் சாலச்சிறந்த ஒரு மாலுமி கிடைத்து விட்டார்.

இருள் சூழ்ந்த வேளையில் புதர் மண்டிய நடுக்காட்டில் தடங்கண்டு நடக்க முடியாமல் தடுமாறும் மாந்தர்க்கு ஓர் அணையா விளக்குத் துணையாக வாய்த்துவிட்டது.

நில்லா நெடும்பயணம் செல்லக் கிளம்பினோர்க்குக் கண்ணுக்கெட்டிய தூரம் மண்ணே மலையாகிக் கிடக்கும் பெரும் பாலைவனத்திடையே ஒரு சோலைவனம் தென்பட்டு விட்டது.

ஆம் ; கற்றோரும் ஏத்த, கல்லாரும் வாழ்த்த செந்தமிழால் மக்களின் சித்தமெல்லாம் கொள்ளை கொண்டு

அறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டின் தலைமகனாகவே அரியணை ஏறியிருப்பதையே இவ்வாறு குறிப்பிடுகிறோம்.

### இணையில்லா ஏந்தல்

*அவர்—*
*தமிழ் காக்கும் தளபதி!*
*அமிழ்தூறும் சொற்கொண்டல்!*
*கல்வியறிவில் கடல்!*
*கற்பனையில் ஊற்று!*
*சிறைக்கு அஞ்சாப் பறவை!*
*சீர்திருத்தச் சுடர்!*
*கலைஞர்களின் காவலர்!*
*தொழிலாளர்களின் தோன்றாத் துணை!*
*புதுமைகள் பாடும் பொன்வண்டு!*
*பொதுநலம் பேணும் கதிரொளி!*
*பழிக்குப்பழி வாங்காப் பண்பாளர்!*
*பகைவர்க்குத் துணைசெய்யும் அருளாளர்!*
*அணைத்துச் செல்வதில் பூங்காற்று!*
*அன்பைப் பொழிவதில் கோடைமழை!*
*அடக்கத்திலே ஆமை!*
*ஆண்மையிலோ அரிமா!*

### வாழ்க்கையே காவியம்

அவருடைய வாழ்க்கையே—ஒரு கலைவாழும் தமிழ்ப் பூங்கா; இலட்சியப் பேராறு; தியாகப் பெருவேள்வி ; சுவை பொங்கும் வீர காவியம்.

அதனைத் துய்க்கின்ற வகையில் துய்த்தால், உய்கின்ற வழியில் உய்யலாம்!

நேற்று அவர் தமிழகத்தின் வழிகாட்டி!
இன்று அவர் இந்தியாவுக்கு வழிகாட்டி!
நாளை அவர் உலகுக்கே வழிகாட்டி!

அந்த அரிய வழிகாட்டியின் வாழ்க்கை ஏட்டினை இனி ஒவ்வொரு பக்கமாகத் திறந்து பார்த்து மகிழ்ந்து திளைப்போமாக!

# 2. காஞ்சி தந்த காவலர்

## வரலாற்றுப் புகழ்

காஞ்சீபுரம் பல துறைகளிலும் வரலாற்றுப் புகழ் படைத்த பெருநகர் ஆகும்.

இந்திய வரலாறு படித்தவர்களுக்கு ஹர்ஷ மாமன்னரால் ஏற்படுத்தப்பட்டு ஏறத்தாழ பதினாயிரம் மாணவர்களைக் கொண்டு இயங்கிய நாளந்தா பல்கலைக் கழகம்பற்றித் தெரியாமல் இராது. அந்தப் பல்கலைக் கழகத்துக்கு இணையாக மட்டுமின்றி மேலானதாகவும் ஒரு பல்கலைக் கழகம் காஞ்சீபுரத்தை அணி செய்ததாகக் கூறப்படுகிறது.

புத்தசமய வளர்ச்சிக்குப் புத்துயிர் ஊட்டிய பெருமையும் காஞ்சீபுரத்துக்கு உண்டு.

சிற்பக்கலை என்றாலே பல்லவப் பேரரசர்களே நம் கண் முன்னே வந்து நிற்பர். அவர்கள் கொடிகட்ட ஆண்ட தலைநகராய் விளங்கியதும் இக் காஞ்சீபுரமே.

இந்தியாவுக்கு வருகைபுரிந்த சீனப் பயணியான யுவான் சியாங் பண்டை நாளிலேயே பயணக் குறிப்புக்கள் எழுதுவதில் வல்லுநர் என்று பாராட்டப் பெற்றவர். இந்திய-சீன நாட்டு மக்களிடையே நல்லுறவுச் செடி தழைப்பதற்குத் தண்ணீர் வார்த்த பெருமையும் அவருக்கு உண்டு. அத்தகைய சீனச் சான்றோர் தங்கியிருந்தார் என்ற கீர்த்தியும் காஞ்சீபுரத்துக்கு வாய்த்துள்ளது.

## சமயப் பெருமை

சமயத்துறையை எடுத்துக்கொண்டாலும், வடக்கேயுள்ள வாரணாசி எனப்பெறும் காசிக்கு இணையாகத் தெற்கே பேசப்பெறுகின்ற புண்ணிய நகரம் காஞ்சீபுரமே. ஆதி சங்கரரின் வழியில் வந்த காமகோடி பீடாதிபதியின் உறையுள் ஆகத் திகழ்வதும் இக் காஞ்சியே. இங்கு வைணவர்கள் வணங்கித் தொழும் வைகுந்தப் பெருமாள் கோவிலும்

இருக்கிறது. சிவனடியார்கள் போற்றித் துதிக்கும் ஏகாம் பரேசுவரர் கோவிலும் இருக்கிறது.

## இலக்கியப் பெருமை

பதினெண் சித்தருள் சிங்க ஏறுகத் திகழ்ந்து, தேன் சொட்டும் பாடல்கள் புனைந்தவர் பட்டினத்தடிகள். அவர் 'கச்சி—ஏகம்பனே' என்று பாடிச் சிவனைப் பரவியதோடு காஞ்சீபுரத்தின் பெயரும் பரவச் செய்திருக்கிறார். அவர் கச்சி என்றது காஞ்சீபுரத்தையே குறிக்கும். தமிழ் இலக்கியங்கள் பலவற்றுள் காஞ்சிமா நகரின் பெயர் காணப்படுகின்றது.

தமிழ் நூல்கள் ஒருபுறம் இருக்க, வடமொழியில் உள்ள பாகவத புராணத்திலேயே இந்நகர் பற்றிய செய்தி வருகின்றது. பதஞ்சலி என்பார் வடமொழிக்கு இலக்கணம் வகுத்த பேராசிரியர் ஆவார். தமிழ்மொழியாளர் தொல்காப்பியரைக் கொண்டாடுவது போலவே வடமொழியாளர் பதஞ்சலியாரைப் போற்றி மகிழ்வர். அந்தப் பதஞ்சலியாரின் நூலிலும் காஞ்சீபுரம் பற்றிய குறிப்பு தென்படுகிறது.

திருக்குறள் என்றாலே அதற்கு முன்னுளில் உரை கண்ட பதின்மரில் தலைசிறந்தவரான பரிமேலழகரின் நினைவு வராமற் போகாது. மாறுபடக்கூடிய கருத்துக்கள் பல அவர் உரையிலே காணப்பெற்றாலும், அவருடைய பரந்த உலக அறிவு, ஆழ்ந்த ஆராய்ச்சி, தேர்ந்த இலக்கியப் புலமை ஆகியவைபற்றி ஐயுறுவார் யாரும் இலர். திருக்குறள் உள்ளளவும் அதற்கு உரை கண்ட பரிமேலழகர் பெயரும் நிலைத்து நிற்கும் என்பது திண்ணம். அத்தகு தமிழ்ப் பெரியார் தோன்றிய பெருமையும் காஞ்சிமா நகர்க்கு உண்டு.

## அறிஞரால் சிறந்த ஊர்

அடிமரம் சிறுத்து, விழுதுகள் பெருத்த ஆலமரம் போன்று, புத்தசமயம் இந்தியாவில் தோன்றினும் இங்கு உருவான வளர்ச்சியுறாது, வெளிநாடுகளிலேயே தழைத்துச்

சிறப்புற்றது. அவ்வாறு இமயப் பெருமலையையும் தாண்டிச் சீனம் முதலிய நாடுகளில் சென்று புத்தருடைய பொன்னுன கொள்கைகள் பரவுவதற்குப் பாடுபட்டவர்களுள் திண்ணுகர் என்பவர் கீர்த்தி மிக்கவர். கல்வியிற் சிறந்த அத் திண்ணுகர் தோன்றியதும் இக் காஞ்சீபுரத்திலேயே.

இசைத் துறையை எடுத்துக் கொண்டால், அந்தக் கலையின் மணம் தமிழ் நாட்டாரின் இருதய நரம்புகளை யெல்லாம் தழுவிக் கொஞ்ச, அண்மைக் காலம் வரை பாங் கோடு பணியாற்றி ஓங்குபுகழ் பெற்றவர் திருநயிஞப்பிள்ளை. அவர் பிறவி எடுத்ததும் இப்பெரு நகரத்தில்தான்.

அரசியல் துறையில் பாலபாடம் மட்டுமே பயின்றவர் கள்கூட, சாணக்கியரைப் பற்றி அறியாமல் இருக்க மாட் டார்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அரசியல் நெறிமுறைகளைப் பற்றித் தமக்குச் சரியெனத் தோன்றிய வழியில் ஆழ்ந்து சிந்தித்து, 'அர்த்த சாத்திரம்' என்னும் உலகப் புகழ்பெற்ற நீதி நூலை யாத்தளித்தவர் அவர். அவர் மட்டும் பிறந்திராவிட்டால், வட இந்தியாவில், மௌரியப் பேரரசே தோன்றியிருக்குமா என்பது ஐயப் பாடே. சந்திரகுப்த மௌரியன் அரியணை ஏற உறுதுணை யாய் இருந்த அந்தச் சாணக்கியர் வடநாட்டவர் என்றே பலரும் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். ஆனல், அவர் தமிழ்நாட்டவரே என ஆராய்ச்சி வல்லுநர்கள் அறிவுறுத்து கின்றனர். அவர் பிறந்ததும் இக்காஞ்சியில்தானும்!

இவ்வாறு எண்ணிலடங்காப் பேறுகளைத் தன்னகத்தே கொண்ட காஞ்சிமாநகரின் எழில்மிக்க மண்ணில்தான் புகழ்மிக்க அண்ணு அவர்களும் பிறந்து தவழ்ந்தார்கள்.

### காஞ்சி என்றல் அண்ணு!

சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதில் தன்னிக ரற்று விளங்குபவர் திருமுருக கிருபானந்தவாரியார். அவரது உரைகளில் ஆன்மீகக் கருத்துக்கள் புதுப்பொலிவு பெறுவதுபோலவே, நகைச் சுவையும் நன்கு மிளிரும். பம்பாயில் ஒரு முறை சொற்பொழிவு ஆற்றும் பொழுது

தமக்கு முன்னே திரண்டிருந்த பொதுமக்களை நோக்கி அவர் அடியிற் கண்டவாறு ஒரு புதிர் போட்டாராம்.

"...சில பெரியவர்களுடைய ஊர்களைச் சொன்னாலே அவர்கள் பெயர்கள் என்ன என்பது தெரிந்துவிடும். உதாரணமாக, 'அரியக்குடி' என்றால் யாரைக் குறிக்கும் தெரியுமா?..." என்று கேட்டு நிறுத்தினாராம் வாரியார்.

"இராமானுச அய்யங்கார்!" என்றனராம் கூட்டத்தினர்.

இவ்வாறே இன்னும் சில ஊர்களைக் கூறி அவற்றுக்குரிய பெரு மனிதர்களின் பெயர்களைக் கேட்டு வந்தவர் இறுதியாக:

"காஞ்சி?" — என்றாராம். உடனே குழுமியிருந்த பொது மக்கள்,

"அண்ணாதுரை! அண்ணாதுரை" என்று உற்சாகத்துடன் ஆர்ப்பரித்தனராம்.

இதைக் கேட்டதும் அயர்ந்து போனாராம் கிருபானந்த வாரியார். 'காஞ்சி' என்றதும், பொது மக்களுக்குக் 'காமகோடி பீடாதிபதி, சங்கராச்சாரியார்' நினைவுதான் வரும், அவர் பெயரைத்தான் கூறுவார்கள் என்று அவர் எதிர்பார்த்திருக்கிறார். ஆனால், கூட்டத்தினரோ 'அண்ணா'வின் பெயரை முழங்கியது அவருக்கு அளவற்ற வியப்பை அளித்திருக்கிறது.

இதிலிருந்தே அண்ணாவின் பெயரும் அவரைப் பெற்றெடுத்த 'காஞ்சி'யின் பெயரும் எந்த அளவுக்கு இணைந்து தென்னகத்தில் மட்டுமன்றி வடநாட்டிலும், ஏன்? தமிழர்கள் வாழும் அகில உலகிலுமே மக்கள் மனத்திலே இடம் பிடித்துள்ளன என்பதை இனிது விளங்கிக் கொள்ளலாம்.

முன்பே நாம் எடுத்துக் கூறியதுபோன்று, காஞ்சிமா நகர்க்கு எத்தனையோ வரலாற்றுப் பெருமைகள் இருக்கின்றன. ஆயினும், அண்ணாவின் தோற்றம் மேலும் அதற்குப் பொலிவு சேர்த்துள்ளது; ஒளியைக் கொடுத்துள்ளது.

எல்லாவற்றுக்கும் மேலாகத் தம் எழுத்து வன்மையினு லும், காஞ்சியின் கீர்த்தி காசினி யெங்கும் கமழவேண்டும் என்னும் பேரார்வத்துடன் அண்ணு அவர்கள் செயல்புரிவ தையும் நாம் அறிவோம். 'காஞ்சி' என்னும் பெயரில் கிழமை ஏடு ஒன்றை நிறுவி அவர் நடத்தி வருவதையே நாம் குறிப்பிடுகிருேம். பிறந்த மண்ணின்மீது அவருக்குள்ள பெருமதிப்பையும் நன்றியுணர்வையுமே இது காட்டு கிறது.

## அண்ணுவும் காஞ்சியும்

இவ்வாறு 'காஞ்சியால்' அண்ணுவும்; 'அண்ணுவால்' காஞ்சியும், தமிழகத்தின் கவனத்தைக் கவர்ந்ததோடு நில்லாமல், இந்தியாவின் கவனத்தையும், உலகத்தின் கவனத்தையும்கூட ஈர்த்து வருவது நல்லெண்ணங் கொண்ட உள்ளங்கள் அனைத்திலும் இன்பத்தை அள்ளிச் சொரிகின்றது.

# 3. பிறப்பின் சிறப்பு

## பிறந்த நாள் பெருமை

தன்னை ஈன்று புறந்தந்த தாயையும், சான்றோனாக்க முயன்ற தந்தையையும் வணங்கிப் போற்றுதல் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் உரிய அறஞ்சார்ந்த நெறியாகும்.

அதேபோல், தன்னைத் தட்டியெழுப்பி, உலக அரங்கில் தலைநிமிரச் செய்த தன்னுடைய தலைவரை—வழி காட்டியை—வாழ்த்திக் கொண்டாடுதல் ஒவ்வொரு நாட்டுக்கும் உரிய நேரிய செயலாகும்; நன்றியுணர்வைக் காட்டிக் கொள்வதற்கான வாய்ப்பும் அதுவே. அதற்காக அந்தந்த நாடுகள் தத்தமக்கு வாய்த்த வழிகாட்டிகளின் பிறந்த நாளை அல்லது நினைவுநாளைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது ஒரு மரபாக வளர்ந்து வந்துள்ளது.

அமெரிக்க நாடு, வாஷிங்டன், ஆப்ரகாம் லிங்கன், கென்னடி போன்றவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடுவதும், சோவியத் யூனியன் லெனின், லியோ டால்ஸ்டாய் போன்றோரின் பிறந்தநாளைக் கொண்டாடுவதும், பாகிஸ்தான் ஜின்னாவின் பிறந்தநாளைக் கொண்டாடுவதும், இந்தியா மகாத்மா காந்தியடிகள், சவகர்லால் நேரு ஆகியோரின் பிறந்தநாளைக் கொண்டாடுவதும் இந்த மரபின் அடிப்படையில்தான்.

## புதுமை மணக்கும் பொன்னாள் :

தமிழகத்திலும் எத்தனையோ தலைவர்களின் பிறந்த நாட்கள் உற்சாகத்துடன் கொண்டாடப்பெற்று வருகின்றன. அவை எல்லாவற்றுள்ளும் மேலோங்கிய ஒரு தனிக் களையுடனும் புதுமை மணத்துடனும் கொண்டாடப் பெற்று வரும் நன்னாள்,

செப்டம்பர் திங்கள் 15-ஆம் நாளே !

வருங்காலத்தில் அதன் தலையாய சிறப்பு உயரவிருக்கிறது; உணரப்படவும் இருக்கிறது.

ஏனெனில், தமிழ்-சௌமிய ஆண்டு, ஆவணித் திங்கள் 30-ஆம் நாளுக்கு இணையான,

திருவள்ளுவர் ஆண்டு 1940, ஆவணித் திங்கள் 30-ஆம் நாளுக்குச் சரியான,

ஆங்கில ஆண்டு 1909 செப்டம்பர்த் திங்கள் 15-ஆம் நாளில்தான் அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்தார்கள்.

## இந்து ஏடு தந்த புகழ்!

அண்ணாவின் பிறந்தநாள் தமிழக வரலாற்றில் ஒரு பொன்னாளாகத் திகழப் போகிறது என்பது முற்றிலும் உண்மை; இது மிகைபட மொழிவதோ, அவர்மீதுள்ள ஒரு சார்பான பாசவெறியினால் பகர்வதோ அன்று.

சென்னையிலிருந்து வெளியாகி இந்தியாவில் மட்டுமின்றி, உலகின் பல்வேறு பகுதிகளிலும் தனக்கென ஒரு தனி வாசகர் வட்டத்தை உருவாக்கி வைத்திருக்கும் தரமுள்ள ஆங்கில நாளிதழாம் "இந்து" ஏட்டிலேயே, அதன் டில்லிச் செய்தியாளர், திரு. ஈ. கே. இராமசாமி என்பார் அண்ணாவின் எழுச்சிமிக்க பிறப்பைப்பற்றி அடியிற் கண்டவாறு குறிப்பிடுகின்றார்:

"...திரு. அண்ணாதுரை அவர்களின் எழுச்சி ஒரு கவர்ச்சிகரமான கருப்பொருளை வரலாற்று ஆசிரியர்களுக்கு வழங்கத்தான் போகிறது. அவர் (பிறப்பு) ஒரு எதிர்பாராத நிகழ்ச்சியா? அல்லது நிகழ்ச்சிகளை உருவாக்கும் சிற்பியா? (டில்லியிலுள்ள) 'தமிழக இல்லத்தில்' அவரைச் சிறப்பிப்பதற்காக நாடாளுமன்ற தி. மு. க. கட்சித் தலைவர் திரு. க. அன்பழகனால் அளிக்கப்பெற்ற வரவேற்பில் கலந்துகொண்ட தலைமையான காங்கிரசார் உள்ளிட்ட எல்லாக் கட்சித் தலைவர்களுமே, அவருடைய எழுச்சி ஓர் எதிர்பாராத நிகழ்ச்சி யென்றாலும்கூட அது ஒரு மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சியே என்பதை ஒப்புக்கொண்டனர். அவருடைய பணிவு ஒவ்வொருவருடைய இதயத்தையும் வெற்றி

கொண்டது. திரு. காமராசர் நீங்கலாக, பாலம் விமான நிலையத்துக்கு வந்து சேர்ந்தவுடன், திரு. அண்ணுதுரை பெற்ற உற்சாகக் கையொலி ஆரவாரத்தைப் போல, வேறு எந்தத் தென்ளுட்டுத் தலைவரும் பெற்றதே இல்லை..."

—அண்ணுவின் பிறந்த நாள், தமிழக வரலாற்றில் ஓர் இணையில்லாத் திருநாள்தான் என்பதற்கு ஈ. கே. இராமசாமி என்பவரின் இக்கூற்று ஒரு சிறு பதச் சோறே ஆகும்.

## பெருமை மிக்க பெற்ருேர் :

ஓர் இல்லத்தின் மாட்சிக்கு நல்லணியாக—செல்வமாக—அமைவது எது? நல்ல மக்கட் பேறே.

'..............நன்கலம் நன்மக்கட் பேறு' என்கிருர் திருவள்ளுவர்.

அத்தகைய நன்மகனுகவே தம் பெற்ருேர்க்கு வந்துதித்தார் அண்ணு.

அவருடைய தந்தையார் பெயர் திருவாளர் நடராசன் என்பதாகும்; தாயார், திருமதி பங்காரு அம்மாள் ஆவார்.

பெற்ருேர்கள் அப்படியொன்றும் பெருஞ் செல்வம் படைத்தவர்கள் அல்லர்; மிகவும் எளிமையான வாழ்க்கை வாழ்ந்தவர்களே அவர்கள்.

"...நான் சாமானியன்; மிகவும் சாதாரணக் குடும்பத்தில் பிறந்தவன்" என்றும்,

"...நான்கூடப் பிற்பட்ட இனத்தைச் சார்ந்தவன்தான்" என்றும்,

அண்ணுவே ஓரோர் சமயம் கூறியுள்ளார்.

## வைரக்கல்லின் வளர்ப்புத்தாய் !

திருவாளர் நடராசன்—திருமதி பங்காரு அம்மாள் இருவர்க்கும் அண்ணு பிள்ளையாகப் பிறந்தபோதிலும் வளர்த்த பெருமை யாவும் அவருடைய சிற்றன்னை திருமதி இராசாமணி அம்மையாரையே சாரும். 'தொத்தா! தொத்தா!' என்று செல்லமாக அழைத்து அவரிடம் உயிரையே விடுவாராம் அண்ணு.

"குழந்தைகளுக்குப் பொருள் தேடி வைப்பதைவிட, அவர்களுக்கு நல்ல பழக்க வழக்கங்கள் உண்டாகுமாறு செய்வதே, தந்தை தேடி வைக்கும் உண்மைச் செல்வம் ஆகும்''

—என்கிறார் அறிஞர் வாட்லி.

அண்ணாவிடம் இளமைப் பருவத்திலேயே அமைதி தழுவிய பழக்க வழக்கங்களும், பண்பாடுகளும் இடங் கொண்டதற்கு அவருடைய சிற்றன்னையின் வளர்ப்பு முறையும் பெரும் காரணமாக இருந்திருக்கிறது. அண்ணாவைத் தேடி யார் சென்றாலும் அவர்களைத் தக்கவாறு வரவேற்று கவனிப்பதையெல்லாம் முன்னின்று மேற்கொண்டவர் இராசாமணி அம்மையார். அவர் அளித்த ஊக்கத்தாலும் ஆக்கத்தாலுமே, கல்வியிலும் சரி, அரசியலிலும் சரி இத்துணைப் பெருநிலையை அண்ணா எய்த முடிந்தது என்னில் அது மிகையன்று.

அண்ணாவின் முன்னேற்றத்தில் அவருடைய சிற்றன்னை கொண்டிருந்த பங்குபற்றி முத்தமிழ்க்காவலர், திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் ஓர் இடத்தில் மிக அருமையாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

"(அண்ணாதுரை) தமிழ் மக்களின் வாழ்வுக்காகத் தன் வாழ்வைப் பாழ்படுத்திக் கொண்டவர் என்று கூறலாம். இதற்காக நண்பர் அண்ணாதுரை அவர்களுக்குத் தமிழ் மக்கள் நன்றி செலுத்தவேண்டும். அதைவிட அதிகமாக அவரை வளர்த்து ஊக்குவித்து நாட்டின் பொது வாழ்வுக்குத் தந்து உதவிய அவருடைய தொத்தாவுக்கு (சிற்றன்னை இராசாமணி அம்மையாருக்கு) நன்றியும் வணக்கமும் செலுத்த தமிழ் மக்கள் என்றும் கடமைப்பட்டவர்களாவர்.''

எனவே, சிற்றன்னை இராசாமணி அம்மையாரே, அண்ணா என்னும் வைரக்கல்லுக்கு முதற்பட்டை தீட்டியவர் என மொழியலாம் அல்லவா?

# 4. பெரியோர் இட்ட பெயர்

அண்ணாவுக்குக் குழந்தைப் பருவத்தில் வைக்கப் பெற்ற பெயர் என்ன?

அண்ணாதுரை என்பதே!

''அண்ணாதுரை என்ற பெயர் பெரியவர்கள் வைத்தது தான்''—என்று அவருடைய அன்னையார் பங்காரு அம்மாள் பகர்ந்துள்ளார்கள்.

அந்தப் பெரியவர்களோ, பெற்றவர்களோ, தம்மால் சூட்டப் பெறும் குழந்தை, பிற்காலத்தில் தன் பெயரில் உள்ள முதல் மூன்று (அண்ணா) எழுத்துக்களாலேயே தமிழக இளைஞர்கள் அனைவரையும் தன்வயப்படுத்திவிடும் என்று எண்ணியே இருக்கமாட்டார்கள்.

## தாரக மந்திரம்

இன்றோ 'அண்ணா'—என்னும் அந்த மூன்று எழுத்துக்கள், தமிழகம் எங்கும் எதிரொலிக்கும் 'தாரக மந்திரம்' ஆகிவிட்டன! இரும்புள்ளம் கொண்ட மாற்றாரையும் ஈர்க்கும் காந்தக்கல் ஆகிவிட்டன! உடன் பிறந்த அண்ணன்—தம்பிகளிடம் ஒட்டாத உள்ளங்களில்கூட குடும்பப் பாசத்தைக் கொழுந்துவிடச் செய்யும் குல விளக்காய் ஒளிர்கின்றன!

ஒரு தலைவரின் பெயரே, அவருடைய நாட்டு மக்களின் உள்ளத்திலே 'அண்ணன்' என்னும் இரத்த பாசத்தை வளர்த்து, அவரைக் கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றும் இலட்சக்கணக்கான தொண்டர்களை உருவாக்கியதாக உலகில் வேறு எங்குமே வரலாறு இல்லை. ஆனால், தமிழகத்தில் அந்த அற்புதம் நிகழ்ந்துள்ளது. அதுவும், அறிஞர் சி. என். அண்ணாதுரை அவர்களின் பெயர் ஒன்றுமட்டுமே அத்தகைய அற்புதம் விளைவிக்கும் ஆற்றல் மிக்கதாய் விளங்குகிறது!

## புகழ் சேர்த்த புனை பெயர்கள்

அண்ணாவின் இயற்பெயர் 'அண்ணாதுரை'யே என்றாலும், அவர் கதை...கட்டுரைகளைப் பல புனைபெயர்களில் எழுதியுள்ளார்.

தாம் பிறந்த தமிழ்—சௌமிய ஆண்டை மறந்து விடாமல் 'சௌமியன்' என்னும் புனை பெயரில் எழுதியுள்ளார்.

'பரதன்' என்னும் புனைபெயரிலும் கம்பராமாயண ஆராய்ச்சியான 'கம்பரசம்' முதலான கட்டுரைகளை வரைந்துள்ளார்.

# 5. இனிக்கும் இளமை

## இளமைக் கனவுகள்

"சிறு பருவத்து நினைவுகளாகிய இனிய கனவுகள் எக்காலத்தும் முடிவு பெறுவதில்லை"

—என்கிறார் காண்டேகர்.

அண்ணா தம்முடைய இளமைப் பருவத்தில் என்னென்ன கனவுகள் கண்டாரோ, நாம் அறியோம். காந்தியடிகளைப் போன்ற ஆன்மீக அரசியல்வாதிகளும், நேருவைப் போன்ற முழு அரசியல்வாதிகளும், மார்க்சிம் கார்க்கி போன்ற இலக்கியப் படைப்பாளர்களும், தாகூரைப் போன்ற கவிதைக் கடவுளர்களும் தத்தம் இளம் பருவ நிகழ்ச்சிகளைச் சுவைமலிய தொகுத்துக் கொடுத்திருப்பது போல், அண்ணா தம்முடைய பிஞ்சுப் பருவ நிகழ்ச்சிகளையும் நினைவுகளையும் முறைப்படுத்தி எழுதியிருப்பதாகத் தெரியவில்லை. இனியேனும் அவ்வாறு அவர் வரைந்து தருவது வருங்காலத் தலைமுறையினர்க்குப் பெரும் பயன் வழங்குவதாகும்.

ஆயினும் அவர் வாயிலாகவும், மற்றவர்கள் வாயிலாகவும் அவ்வப்போது வெளிப்போந்த ஒன்றிரண்டு இளமைக் காலச் செய்திகளை ஈண்டுக் காண்போம்:

## பலூனுக்கு அழுத பாலகர்

அண்ணாவுக்கு ஏழு அல்லது எட்டு அகவை (வயது) நடந்துகொண்டிருந்த சமயம். அப்பொழுது 'பார்க்பேர்' எனப்படும் பொருட்காட்சி சென்னை நகரில் மிகச் சிறப்பாக நடந்துகொண்டிருந்தது. அதைக் காண்பதற்குத் திரளான மக்கள் வெளியூர்களிலிருந்தெல்லாம் வருவது வழக்கம். அதைக் கண்டுகளிக்க தம் அன்னையாருடன் சென்னைக்குச் சென்றார் அண்ணா. எழும்பூர் புகைவண்டி நிலையத்தில் இறங்கி இருவரும் நின்றுகொண்டிருந்தனர்.

அப்பொழுது ஒருவன் பலூன் விற்றுக்கொண்டு சென்றான். சின்னஞ்சிறு பையனான அண்ணாவுக்குப் பலூனை வைத்துக்கொண்டு விளையாட வேண்டும் என்ற ஆசை வந்து விட்டது. எனவே பலூன் வாங்கித் தருமாறு தம் அன்னையைக் கேட்டார்.

"பொருட்காட்சிக்குப் போன பிறகு வாங்கித் தருகிறேன்" என்றார் அன்னை.

ஆனால், அப்பொழுதே வேண்டும் என்று அண்ணா அடம் பிடித்தார்; கண்களையும் கசக்கினார்.

இதைக் கவனித்தவண்ணம் இருந்தான் ஒரு திருட்டு ஆள்.

"என்னம்மா, சின்னக்குழந்தை பலூன் கேட்டு அழுகிறான்...வாங்கிக் கொடுத்தால் என்ன?"

—என்று அண்ணாவுக்குப் பரிந்து பேசினான். அத்துடன் நில்லாமல்,

"வா, தம்பி, நான் உனக்கு வாங்கித் தருகிறேன்."

—என்றவாறே அண்ணாவின் கையைப் பற்றி ஏதோ உரிமை உள்ளவன்போல் அப்பால் அழைத்துச் சென்றான்.

சிறிது தூரம் சென்றதும் கூட்டம் இல்லாத இடமாகப் பார்த்துக் கொண்டான். அண்ணாவின் கழுத்தில் பளபளத்த தங்கச் சங்கிலி அவன் கண்களைக் கவர்ந்தது. அதை மெள்ளக் கழற்றுவதற்கு முற்பட்டான்.

உடனே,

"அம்மா கிட்டே போகணும்; அம்மா கிட்டே போகணும்"

—என்று அழத் தொடங்கிவிட்டார் அண்ணா. அவர் எழுப்பிய அழுகுரல் பக்கத்தில் இருந்தவர்கள் செவியில் விழுந்தது; திருடனின் கள்ள முயற்சி அவர்களுக்குப் புலனாகி விடவே அவனைப் பிடிப்பதற்காகப் பாய்ந்து வந்தார்கள். அவர்களிடம் அகப்பட்டுக் கொள்ளாமல் அவன் ஓடியே போய்விட்டான். பிறகு, அழுதவண்ணம் நின்றிருந்த அண்ணாவை அழைத்துப் போய் சுற்றியிருந்தவர்கள் அன்னையிடம் ஒப்படைத்தார்கள்.

சென்னையில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக மாநாடு ஒன்றில் அண்ணாவே இந்நிகழ்ச்சியைப் பற்றித் தெரிவித்துள்ளார்.

### பக்திமான் அண்ணா

காஞ்சிபுரம் சமய வரலாற்றில் ஒரு தனியிடம் வகிப்பது குறித்து முன்பே கண்டோம்; கோவில்கள் மலிந்த அவ்வூரில், தேர், திருவிழா போன்ற வேடிக்கைகளால் இடையறாத தெய்வ சிந்தனை ஊட்டப்பெற்று வரும் மக்கள், சமயத்தில் பற்றும், ஆலய வழிபாட்டில் நம்பிக்கையும் பூண்டிருப்பதில் வியப்பேதும் இல்லை. அப்போது கடவுள் வழிபாடு பற்றிய பகுத்தறிவுக் கதிர்கள் பரவாத காலமும் ஆகும்.

அக்காலத்திற்கேற்ப அண்ணாவின் பெற்றோர்களும், சிற்றன்னையும் ஆழ்ந்த சமயப் பிடிப்பு உள்ளவர்களாக வாழ்ந்தார்கள். அவர்களுடைய அரவணைப்பில் வளர்ந்த சிறுவராகிய அண்ணாவும் 'ஆலயந் தொழுவது சாலவும் நன்று' என்று எப்போதோ அவ்வை பாடிய வாக்கை நிறை வேற்றிய வண்ணந்தான் இருந்தார்.

ஆயினும், அந்தச் சின்னஞ்சிறு வயதிலேயே சமயச் சீர் திருத்தம் பற்றிய ஒரு சிறு ஒளிப்பொறி அவர் உள்ளத்தில் அவரை அறியாமலே விழுந்துவிட்டது.

எப்படி? அதைச் சற்றுச் சிந்திப்போம்!

விலங்கினின்றும் வேறுபட்டு மனிதன் விளங்குவதற்குக் காரணம் என்ன? நன்மை எது? தீமை எது? அவற்றுள்ளும் தேவையானது எது? தேவை இல்லாதது எது? ஆற்றக் கூடியது எது? ஆற்ற இயலாதது எது? அடையக்கூடியது எது? அடைய முடியாதது எது? என்றெல்லாம் பகுத்துணரக் கூடிய அறிவே. அத்துடன் அவனுக்கென்று அவனது உள் ளத்தின் ஆழ—அகலத்தைக் காட்டும் சில தனிப் பண்புகளும் உள்ளன. அவையே அவனது தரத்தை உயர்த்துவன; தன்மையை வளர்ப்பன.

மொத்தத்தில், கருணையூற்றாய், அறிவுச் சுடராய் மனிதன் 'மனிதனாகவே' உண்மையில் வாழவும், நாளடை

வில் அம் மனித நிலையினும் மேம்பட்ட பிறிதொரு மாண்பு நிலை எய்தவும், தன் உள்ளம், உரை, உடல் மூன்றிலும் தூய்மையின் ஒளி வீசுமாறு தன்னை அவன் பழக்கிப் பண்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்குத் துணைபுரியும் நன்னோக்குடன் உலகின்கண் அவ்வப்போது தோன்றிய ஆன்றோர்கள் படைத்தளித்த பாதைகளில் சில 'நெறிகள்' ஆகவே நின்றன; பல சமயங்கள் ஆக மாறின.

திருவள்ளுவர் போன்றவர்கள் வகுத்தளித்த வழிகள் நெறிகளாக வழிகாட்டின; மகாவீரர், புத்தர், ஏசு, நபி போன்றவர்கள் எடுத்துரைத்த கொள்கைகள்—நீதிகள்—சமயங்களாக மலர்ந்தன.

உயர்ந்த குறிக்கோள்களுடன் உதித்த பல சமயங்கள் காலவெள்ளத்தின் அரிப்பிலே சிக்குண்டு, தம்முடைய தொடக்கக்கால தூய இலட்சியங்களை மறந்தன. மேலும், தத்தம் கோட்பாடுகளைச் செயல்படுத்துவதில் அறிவாராய்ச்சிக்குப் பொருந்தாத பாதைகளை அவை தேர்ந்தெடுத்ததால், அவை பெயரளவில் சமயங்களாக இருந்தாலும், அவற்றின் முதுகெலும்பாய் நின்ற உண்மையான தத்துவங்கள் பல ஒவ்வொன்றாக வீழ்ச்சியுற்றன; புதைந்தும் போயின.

## மறு ஆய்வுக்குரிய வழிபாடு

அண்ணா இந்து சமயக் குடும்பத்தில் பிறந்தவரே. அந்த இந்து சமயம் வெளிநாடுகளில் பரவி வளராமல் இந்தியாவினுள்ளேயே சிறைப்பட்டிருந்ததற்கு, அதனுடைய சில சாத்திர முறைகளும், சடங்கு வகைகளும், சாதிப் பிரிவுகளுமே காரணம் என்று இயம்புவாரும் உளர். அதன் வழிபாட்டு முறைகளிலும் மறு ஆய்வுக்கு உரியன எத்தனையோ உள்ளன.

குறிப்பாக, உற்சவ காலங்களில் தெய்வத்தைத் தொழுவதற்கென்று ஆலயங்களுக்குப் போகின்றவர்கள் எவ்வாறு நடந்து கொள்கின்றார்கள்? புனிதமாய்க் கருதப்பட வேண்டிய இடத்தில், தாங்கள் வந்திருக்கும் நோக்கத்தையே மறந்து 'காட்டாற்று வெள்ளமாய்ப் பெருகித் திரண்டு ஒரு

வரையொருவர் இடித்துப் புடைத்துக்கொண்டு கோப-தாபங்களை வளர்த்துக்கொண்டு—அடிதடிகளைக்கூட நிகழ்த்திக்கொண்டு ஓர் ஒழுங்கோ, கட்டுப்பாடோ இல்லாமல் நடந்துகொள்ளும் போக்கு எதைக் காட்டுகிறது?' அவர்களுக்கும் பக்திக்கும் இடையே நீண்ட பள்ளம் விழுந்துவிட்டதைத்தான் படம் பிடித்துக் காட்டுகிறது. இன்றுங்கூடச் சிற்றூர்த் திருவிழாக்களில் பெருங் கும்பலாகக் கூடிக் கொண்டு குத்து—வெட்டுகள் நிகழ்வதைக் காண்கிறோம்.

## அமைதி எங்கே

பொதுவாக, கிறித்துவ மாதா கோயில்களிலோ, இசுலாமியப் பள்ளி வாசல்களிலோ தொழுகையின்போது நிலவுகின்ற பேரமைதி, இந்துக் கோவில்களில் இல்லவே இல்லை. இரைச்சலும் கூச்சலுமே எதிரொலி எழுப்பி அங்கு இழைய வேண்டிய தெய்வீகச் சூழ்நிலையைக் கெடுத்துவிடுகின்றன.

இளம் பக்தரான அண்ணாவுக்கு இந்தச் சந்தடி நிலை அறவே பிடிக்கவில்லை. எனவே, கோவில்களில் கூட்டம் இருக்கும்பொழுது செல்லாமல் கூட்டம் குறைவாக இருக்கும்போது மட்டும் ஆண்டவனைத் தொழுவதற்குப் போவாராம். அத்துடன் கும்பல் மிகுதியாக வரும் ஆலயங்களை விட்டுவிட்டுச் சீண்டுவார் அற்றுக் கிடக்கும் ஆலயங்களாகப் பார்த்துச் செல்வாராம்.

## பகுத்தறிவுப் பகலவன்

"இளமையெனும் பக்குவமான வயதில்தான் எந்தவிதக் குணப் பண்பும் உருப்பெறுகிறது. எந்தவித எண்ணமும் ஆழமாக வேரூன்றுகிறது" என்கிறார் பிளேட்டோ.

பக்தராகத் திகழ்ந்த அண்ணா பகுத்தறிவுப் பகலவனாக மாறியதிலிருந்து பிளேட்டோவின் கூற்றில் உள்ள உண்மையை நாம் உணர்கிறோம்.

சின்ன வயதில், கோவில்களில் தாம் கண்ட அமைதியற்ற சூழலும், அறிவுக்குப் புறம்பான வழிபாட்டு முறைகளும் மெள்ள மெள்ள அண்ணாவின் உள்ளத்தில் ஆழப் பதிந்

திருக்கவேண்டும். அவையே பிற்றை நாளில் அவரையொரு புரட்சிமிக்க பகுத்தறிவாளராக மாற்றுவதற்கு வித்தாக அமைந்திருக்க வேண்டும் என நாம் எண்ணுவதற்கு இடம் இருக்கிறது.

## தீராத விளையாட்டுப் பிள்ளை

'தீராத விளையாட்டுப் பிள்ளை' என்று கண்ணனைப்பற்றி மகாகவி பாரதியார் பாடினார்.

அண்ணாவும், சிறுவயதில் தீராத விளையாட்டுப் பிள்ளையாகவே இருந்திருக்கிறார்.

விளையாட்டு என்பது உடல் வலிமைக்கு மட்டும் உகந்தது அன்று; உள்ளத்தைப் பண்படுத்திச் செம்மை செய்வதும் அதுவே. பொறாமையற்ற போட்டி மனப்பான்மையை உருவாக்கி, ஆற்றலைக் காட்டுவதில் மற்றவர்களைக் காட்டிலும் தான் முந்தி நிற்கவேண்டும் என்னும் ஓர் இலட்சியப் பிடிப்பை ஏற்படுத்தி, எத்தனை முறை தோற்றாலும் தளர்ந்து படுத்துவிடாமல் நிமிர்ந்து நிற்கும் எஃகின் உறுதி நிலையை உண்டாக்கி, வெற்றியைத் தழுவுவதற்குத் தான் எய்தவேண்டிய இலக்கைத் தெளிவாய்த் தேர்ந்தெடுத்து அதனைக் குறிபார்த்து அடிக்கின்ற அல்லது அடைகின்ற கூர்மையான திறத்தைக் கொடுத்து மனித மனநிலையைப் பக்குவப்படுத்தும் வலிமை வாய்ந்தது விளையாட்டு.

வெளி விளையாட்டு—உள் விளையாட்டு என இருவகையாக விளையாட்டுக்களைப் பிரிக்கலாம் எனினும், எந்த ஒரு சின்ன விளையாட்டிலும்கூட மேற்குறித்த பண்பு நலன்கள் படிந்துள்ளமை தெளிவு.

## அண்ணா ஆடிய விளையாட்டு

அண்ணாவுக்கு மிகவும் பிடித்த விளையாட்டு எது?

'கேரம்' விளையாட்டு என்று கூறப்படுகிறது.

அழுக்குப்படாத நயமான நாகரிக விளையாட்டுக்களுள் 'கேரம்' விளையாட்டும் ஒன்று. பார்வைக்கு எளிய விளையாட்டுப்போல் தோன்றினாலும், குழிக்குள்ளே காய்களைத்

தள்ளுவதற்குக் கரத்திலே உரமும், கண்ணிலே தெளிவும், மனத்திலே குறிபார்த்து அடிக்கும் கூர்மையும் வேண்டும். இவை யாவும் நிரம்பப்பெற்று, விளையாட்டில் வெற்றி வீர ராகவே விளங்கியுள்ளார் அண்ணு.

நயமான நாகரிகமான அழகுத் தமிழில் சொல்லாற்றல் மிக்க அண்ணு, தோற்றத்தில் எளியவராக இருப்பினும், ஆற்றும் செயல்களில் வல்லவராகவே திகழ்ந்து வந்துள்ளார். இனிக்கப் பேசியே எதிர்த் தரப்பினரைக் குறிபார்த்து வீழ்த்தி 'அரசியல் விளையாட்டிலே' அவர் தலைநிமிர்ந்து நிற்ப தற்கு அந்த நாளில் அவர் ஆடிய 'கேரம்' விளையாட்டு சீரிய அடித்தளமாக அமைந்திருக்கும் போலும்!

# 6. கல்விக்கடல்

## அறிஞர் ரஸ்கினின் அமுதவாக்கு

"கல்வியின் இலட்சியம் பொருள்களை அறிவது மட்டு மன்று, வேலைக்கு அடிகோலுவதும் அன்று, சான்றோனாகவும் அறிஞனாகவும் ஆக்குவதேயாகும்" என்கிறார் ரஸ்கின்.

உலகப் புகழ்பெற்ற தலைசிறந்த கல்வி வல்லுநர்களில் முதலிடத்தில் வைத்துப் போற்றப்படுபவர் அறிஞர் ரஸ்கின். காந்தியடிகளின் அறிவுக் கண்ணைத் திறந்துவிட்டதில் ரஸ்கி னின் எழுத்துக்களுக்குப் பெரும் பங்கு உண்டு. ஆடம்பர மற்ற எளிய வாழ்வும், ஆணவமற்ற தியாகத் தொண்டும் காந்தியடிகளிடம் ஆழமாக வேர் விடுவதற்குக் காரணமாக இருந்தவை ரஸ்கினின் கருத்துக்களே.

அத்தகு மாண்பு படைத்த ரஸ்கின் அவர்கள் வகுத் தளித்த கல்வியின் இலக்கணத்துக்கு மிகப் பொருத்தமான இலக்கியமாகத் திகழ்பவர் அண்ணா அவர்கள்!

## புடமிட்ட பொன்

பணமும், பதவி உயர்வும் அளிக்கும் அரசாங்க அலுவல் பார்ப்பதற்குற்ற வெறுங் கருவியாக மட்டும் கல்வியை அவர் கருதவில்லை; அவ்வாறு கையாளவும் இல்லை. அறிஞர் ரஸ்கின் விழைந்தவாறே பண்பு நலன்கள் எல்லாம் படிந்த ஒரு சான்றோராகவும், எதையும் பகுத்துணர்ந்து தெளியும் அறிஞராகவும் தம்மைப் புடம் போட்டுப் பொலிய வைத்துக் கொள்ளவே அவர் தமது கல்வியறிவைப் பயன்படுத்திக் கொண்டார்.

## தொடங்கியது எங்கே ?

அவர் எங்கெங்கு, எவ்வாறு கல்வி கற்றார் என்பன போன்ற செய்திகளை ஈண்டுச் சிறிது காண்போம்.

காஞ்சிபுரத்திலேயே உள்ள பச்சையப்பர் தொடக்கப் பள்ளியில்தான் அண்ணாவின் பள்ளி வாழ்க்கை தொடங் கிற்று.

உயர்நிலைப்பள்ளி இறுதி வகுப்புவரை (எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பு) அங்கேயே அவர் கல்வி பயின்றார்.

## அரசு வண்டியோட்ட அடிப்படை

அவ்வாறு படிக்குங் காலத்தில் வீட்டிலிருந்து பள்ளிக் கூடம் சற்றுத் தொலைவில் இருந்ததால், மாட்டு வண்டியில்தான் செல்வாராம் அண்ணா. அதுவும் வண்டியில் பூட்டப்பட்ட மாடுகளின் மூக்கணாங் கயிறுகளைத் தம் கையில் வைத்துக்கொண்டு தாமே வண்டியை ஓட்டிச் செல்வாராம். பிற்காலத்தில் அரசாங்க வண்டியைத் திறம்பட ஓட்டுவதற்குரிய பயிற்சியை இளமைப் பருவத்திலேயே மாட்டு வண்டியை ஓட்டியதன் மூலம் பெற்று விட்டார் போலும் அண்ணா!

## நிகரற்ற நினைவாற்றல்

அந்தச் சின்ன வயதிலேயே அண்ணாவுக்கு நிரம்ப நினைவாற்றல் இருந்திருக்கிறது. ஒருமுறை பாடத்தைப் படித்தாலே அதில் உள்ள கருத்துக்களைச் சிந்தையில் பதித்துக் கொள்ளும் திறம் படைத்தவராக அவர் விளங்கியுள்ளார். சில மாணவர்கள், சாதாரண நாட்களில் வகுப்பிலே கெட்டிக் காரராகத் திகழ்வார்கள். ஆனால், தேர்வு வந்ததும் நடுங்கிப் போவார்கள். 'தேர்வுக் காய்ச்சல்' என்கிற ஒன்றும்கூட அவர்களைத் தாக்கித் தடுமாற வைத்துவிடும்? ஆனால் அண்ணாவுக்கோ அம்மாதிரியான இடர்ப்பாடு எதுவும் ஏற்பட்டதில்லை. தேர்வுகள் எழுதுவதென்றால் அவருக்கு ஒரே கொண்டாட்டந்தான்.

பார்ப்பவர்களுக்குப் பள்ளி நூல்களையே தொடாத விளையாட்டுப் பிள்ளைபோல் தோற்றமளிக்கும் அவர், புள்ளிகளை மட்டும் நிறைய எடுத்துக் குவித்துவிடுவார். இந்தக் காலத்தில் அரசியல் 'தேர்தல் புலி'யாகத் திகழ்வதைப் போன்றே அந்த நாட்களில், 'தேர்வுப் புலி'யாக வீறு நடை போட்டுள்ளார் அவர்.

இதுபற்றி அவர்தம் அன்னையாரே என்ன இயம்புகிறார் தெரியுமா?

"பள்ளிக்கூடத்தில் படிக்கும்பொழுதுகூட அவனுக்கு ஞாபக சக்தி மிகவும் அதிகம். வீட்டிலே படிக்கவே மாட்

-டான். ஆனால் மார்க்குகள் என்னவோ நிறைய வாங்கு வான். படிக்கவில்லையே என்றோ, வேறு எதற்காகவோ என்றைக்குமே ஒரு சொல் அவனைத் திட்டியது கிடையாது. நான் கண்டிக்கிற மாதிரி அவன் என்றைக்குமே நடந்த தில்லை.''

இதிலிருந்து, அண்ணாவின் இயற்கையான அறிவையும், தம்மை வதைத்துக் கொள்ளாமல் தேர்வில் வெற்றி பெறும் வன்மையையும் நாம் அறிகிறோம்.

ஆனால் அண்ணா கொண்டிருந்த, உழைத்துப் படிக்கா மலே புள்ளிகள் பெற்றுவிடும் போக்கு, எல்லா மாணவர் களுக்கும் இயைந்தது அன்று; பயன் தருவதும் அன்று. விளையாட்டுத்தனமாகப் படிக்காமலே வெற்றி பெற்று வந்துவிடும் அந்தக் கவலையற்ற போக்கு, பள்ளி இறுதி வகுப்பில் அவரைப் பலி வாங்கியே விட்டது. இதை மாணவர் உலகு நன்கு மனத்தில் பதியவைத்துக் கொள்ள வேண்டும்.

''இரண்டு தடவை எஸ். எஸ். எல். சி. தேர்வில் தவறிப் போய், அதனைப் பிறகுதான் தேர்ச்சி பெற்றேன்'' என்று அண்ணாவே ஓரிடத்தில் கூறியுள்ளார்.

## தோல்வி தந்த பாடம்

பள்ளி இறுதி வகுப்பில் ஏற்பட்ட இந்தத் தோல்விகள் ஒரு வகையில் அவருக்கு நலம் பயப்பனவாகவே முடிந்தன. உழைத்துப் படிக்கவேண்டும் என்னும் உறுதியையும், எதை யும் ஊன்றிப் படிக்கவேண்டும் என்னும் எச்சரிக்கையையும் அவை அவருக்கு அளித்தன. அவருடைய கல்விப் பாதை யிலும், கருத்தூன்றிச் சிந்திப்பதிலும் ஒரு பெரும் திருப்பமே உண்டாயிற்று. அதன் பிறகு கல்லூரி வாழ்வில் தோல்வி என்பது அவரைத் தொட்டுப் பார்த்ததாகக்கூடத் தெரிய வில்லை. தோல்விக்குப்பின் வெற்றி என்பதற்கு அண்ணாவே ஓர் அரிய சின்னம்!

## விந்தை நிகழ்ச்சி

பள்ளி இறுதி வகுப்பில் அண்ணா தேர்வு எழுதிக் கொண் டிருந்த வேளையில் ஒரு விந்தையான நிகழ்ச்சி நடைபெற்ற தாகக் கூறப்படுகிறது.

தேர்வு எழுதிக் கொண்டிருந்தபோதே, அண்ணா கையைச் சட்டைப் பையினுள் விட்டிருக்கிறார். பின்னர் எழுதுவதை நிறுத்திவிட்டு, ஒரு கையால் முகத்தை மறைத்துக்கொண்டு மறுகையையும் முகத்தருகே கொண்டு செல்லும்போது, மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்த ஆசிரியர் அவரைக் கவனித்துவிட்டார். புரியக்கூடாத குற்றம் புரிந்துவிட்டவரைப் புலனாய்ந்து கண்டுபிடித்து விட்டாற்போல், மற்ற மாணவர்கள் எழுதுவதைப் பார்த்து அண்ணா எழுதுவதாக (காப்பி அடிப்பதாக) அவர் குற்றஞ் சாட்ட முனைந்து விட்டார். அவருடைய குற்றச்சாட்டைக் கேட்டு அண்ணாவுக்கு அடக்க முடியாத சிரிப்பே வந்து விட்டது. எனினும் அதனைப் புன்னகையாக மாற்றிக் கொண்டு மெள்ளத் தன் பையில் கையை விட்டார்; பொடி மட்டை ஒன்றை வெளியே எடுத்துக் காட்டினார்.

''தேர்வைத் திறம்பட எழுதவேண்டுமானால் இது நிரம்பவும் தேவைப்படுகிறது. ஆகவே, அருள்கூர்ந்து இதைப் பற்றி யாருக்கும் சொல்லி விடாதீர்கள்''

என்று, தாம் பொடிபோடும் பழக்கத்தை மிகவும் நயமாகச் சொல்லி ஆசிரியரிடம் தம் நிலைமையைத் தெளிவுபடுத்தினார் அண்ணா.

அதற்குமேல், அண்ணாவின்மீது என்ன நடவடிக்கை தான் எடுக்க முடியும்?

### வறுமைக்கனல்

உயர்நிலைப்பள்ளிப் படிப்பு முடிந்ததும் கல்லூரியில் படிக்க விழைந்தார் அண்ணா. ஆனால், அவருடைய குடும்பமோ செல்வச் செழுமை இல்லாதது. மேற் படிப்புக்குப் போதுமான பொருளாதார வசதி அவ்வளவாக இல்லை. இன்றுங்கூட எத்தனையோ கூர்த்த மதிபடைத்த மாணவர்களின் கல்லூரிக் கல்விப்பயிர் வறுமைக் கனல்பட்டுக் கருகிச் சாம்பலாகவில்லையா! அதே அவல நிலைதான் அண்ணாவுக்கும் ஏற்படும்போல் இருந்தது.

### முதல் அலுவல்

கவலை முகில்கள் நெஞ்சைக் கவ்வியிருந்த அந்த நாட்களையும்கூட வீணே கழிக்க விரும்பவில்லை அண்ணா.

கைகளைக் கட்டிக்கொண்டு வெறும் மனிதராக வீட்டில் உட்கார்ந்திருந்தால் என்ன ஆகும்! ஏதேனும் அலுவல் பார்த்தால் ஊதியமாவது கிடைக்கும் அல்லவா? எனவே வேலைதேடும் படலத்தில் ஈடுபட்டார் அண்ணா. காஞ்சிபுரத்திலேயே நகராட்சி அலுவலகத்தில் எழுத்தராகப் (Clerk) பணியாற்றும் வாய்ப்புக் கிட்டியது. அதனை நழுவ விடாமல் உவப்போடு அலுவல் பார்த்து வந்தார் அவர்.

## கல்விச் சலுகையில் கல்லூரிப் படிப்பு

இந்நிலையில் ஓர் இனிப்பான செய்தி வந்தது. அவர் செவிகளிலே அது தேனைப் பெய்தது. பிற்பட்ட வகுப்பினர்க்குக் கல்விச் சலுகை உண்டென்றும், அந்தச் சலுகையைப் பயன்படுத்தி அவர் கல்லூரிப் படிப்பைத் தொடரலாம் என்பதே அச் செய்தி.

இதைப்பற்றி அண்ணாவே நெஞ்சம் நெகிழக் குறிப்பிட்டுள்ளார்.

"நான் படித்ததுகூட பிற்பட்ட வகுப்பினருக்குரிய சலுகைகளைப் பெற்றுத்தான். கல்லூரியில் படிக்கும் அளவுக்குச் சொல்ல இயலாத நிலையில் இருந்ததால், எங்கள் ஊரிலே கொஞ்சகாலம் எழுத்தனாக (Clerk) நான் பணிபுரிய நேர்ந்தது. நான் முற்போக்கு இனத்தைச் சேர்ந்தவனாக இருந்திருந்தால், நான் கல்லூரிக்குச் சென்றிருக்க முடியாது. கல்லூரிப் படிப்புப் பெற்றிருக்க முடியாது."

இவ்வாறு கல்விச் சலுகை தந்த மனத்தெம்போடு, காஞ்சிபுரத்தைவிட்டுச் சென்னைக்குச் சென்றார் அண்ணா. அங்குள்ள பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்தார். இப்பொழுது சைனா பசாரில் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி உள்ள இடத்தில்தான் முன்பு அண்ணா பயின்ற கல்லூரி இருந்தது. அது வேறு இடத்துக்கு மாற்றப்பட்டுவிட்டது.

## மெச்சத்தக்க பச்சையப்பர்

'பயன் கருதாது வாரி வழங்கும் வள்ளல் தன்மையில் வையம் முழுமையும் எடுத்துக் கொண்டாலும் தலைசிறந்து நிற்பது தமிழகமே...'

என்றெல்லாம் போற்றப்பெற்ற—கைம்மாறு கருதாக் கருணை மழையாம் ஆய் போன்ற வள்ளல்களால் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே புகழ் என்னும் அரியணையேறிக் கோலோச்சி வருவது இத்தமிழ் மண்ணே. பண்டைக் கொடைத்திறம் இன்றும் வற்றிவிடவில்லை எனப் பகர்வது போல் இவ்விருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே கொடைவள்ளலாய்ப் புகழொளி வீசியவர் திரு. பச்சையப்ப முதலியார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கண்ட, செட்டி நாட்டரசர் திரு. அண்ணாமலைச் செட்டியாரைப் போலவும், காரைக்குடியில் கல்லூரிகள் பல எழுப்பிய திரு. அழகப்பச் செட்டியாரைப் போலவும், கல்விக்காகத் தம் செல்வத்தை ஈந்தவர் திரு. பச்சையப்ப முதலியார் ஆவார். அவர் பெயரில் இயங்கும் கல்விச்சாலைகள், அவருடைய பரந்த மனப்பாங்கையும் சிறந்த கொடைத் திறனையும் பாரெங்கும் பரப்பும் சீரான சின்னங்களாய்த் திகழ்கின்றன.

பச்சையப்பரின் பட்டறைகளில் உருவான கூர்மையான படைக்கலனே அண்ணா. அறிவொளி வீசும் சிந்தனைச் சிற்பியொருவரை இந்த அகிலத்துக்கு அளித்ததன் மூலம் காலமெல்லாம் புகழொளி வீசும் நிலையை எய்தியுள்ளன பச்சையப்பரின் கல்வி நிலையங்கள்.

## கவலை தந்த கட்டிடங்கள்

சென்னையில் அண்ணா படித்துக் கொண்டிருந்த காலத்தில் இப்போது இருப்பதைப் போன்ற எழில்மிகு கட்டிடம் பச்சையப்பர் கல்லூரிக்கு இல்லை. நெருக்கடி மிகுந்த சைனா பஜாரில்தான் அது இயங்கியவண்ணம் இருந்தது.

தாம் பயின்ற பள்ளி—கல்லூரி ஆகியவற்றின் கட்டிடங்கள் எத்துணை இரங்கத்தக்க நிலையில் இருந்தன என்பதை அண்ணா மிக வேடிக்கையாகக் கூறியுள்ளார்.

"நான் படித்த பச்சையப்பன் கல்லூரி சைனா பசாரில் (அப்போது) இருந்தது. ஒரு காதில் ரோம் நாட்டு வரலாறு விழும்; இன்னொரு காதில் வெளியே விற்கப்படுகின்ற சாமான்களின் விலை விழும்.

"நான் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டுப் பொதுத் தொண்டில் ஈடுபட்ட நேரத்தில் கல்லூரியை வேறு இடத்தில் மாற்றியமைக்க அப்போதிருந்த கல்லூரி முதல்வர் **திருவேங்கடம் பிள்ளை** அவர்களே நிதி திரட்டும் பணியில் ஈடுபட்டு அதன் பிறகுதான் இப்போதுள்ள எழிலான கட்டிடம் அமைந்தது.

"நான் காஞ்சியில் படித்த பச்சையப்பன் துவக்கப் பள்ளியும் அப்போதிருந்த அதே நிலையில்தான் இன்றும் இருக்கிறது. 'பணம் தாராளமாக இருந்தால் அதைப் புதுப்பிக்கலாமே' என்று பல நேரங்களில் நான் எண்ணியது உண்டு. பாடப் புத்தகத்தைப் பார்ப்பதைவிட—பள்ளி ஆசிரியரைக் கவனிப்பதைவிட—மேலே (கூரையைத்) தான் பார்த்துக் கொண்டிருப்போம்! எங்கே இடிந்து விழுமோ என்ற பயம்! அப்படிப்பட்ட பள்ளியிலே—கல்லூரியிலே நாங்கள் படித்தோம்."

### ஒரு மைல் ஓட்டக்காரர்

ஒரு மைல் ஓட்டப் பந்தயத்தில் வெற்றியைத் தழுவுவதற்கு நுணுக்கம் அறிந்தவர்கள் ஓர் உத்தியைக் கையாளுவார்கள். தொடக்கத்தில் ஆமைபோல் அடிபோட்டு, முடிவிலே முயலாய்ப் பாய்வதே அவ்வரிய உத்தி.

படிப்பைப் பொறுத்தவரை அண்ணாவும் அவ்வுத்தியைக் கையாண்டவராகவே காட்சி தருகிறார். உயர்நிலைப்பள்ளி இறுதி வகுப்புத் தேர்விலே இரண்டு முறைகள் தோல்வியிலேயே புரண்டு துவண்டவர், கல்லூரிக்கு வந்ததும், இன்டர்மீடியட்—இடைநிலை வகுப்பில்—'முதல் வகுப்பு' (1st Class) மாணவராய்த் தேர்ச்சி பெறுவதென்றால் அது விந்தையிலும் விந்தையல்லவா?

இவ்வாறு முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருந்தும் மேற்கொண்டு படிப்பைத் தொடர முடியாத சூழ்நிலையில் சிக்குண்டார் அண்ணா. பள்ளம் விழுந்துவிட்ட அவரது குடும்பப் பொருளாதாரம் அவர் உள்ளத்தைக் குடைந்தெடுத்தது.

### கருணைமிக்க கல்லூரி முதல்வர்

அப்போது பச்சையப்பன் கல்லூரித் தலைவராகத் திரு. சின்னத்தம்பி அவர்கள் பணியாற்றிக் கொண்டிருந்

தார். கல்லூரி 'இன்டர்' தேர்வில் 'முதல் வகுப்பில்' தேர்ச்சியுற்றதைப் போன்றே வருங்காலத்தில் அரசியல் தேர்விலும் அண்ணு 'முதல் வகுப்பில்' வெற்றி பெற்று விடுவார் என்று அவர் கணித்துவிட்டார் போலும். எனவே தான், அதற்கு வலிமை வாய்ந்த பின்னணியை அமைத்துக் கொடுக்க விழைந்தவராய், அண்ணுவை பி. ஏ. ஆனர்ஸ் வகுப்பில் சேர்ந்து பயிலுமாறு கேட்டுக்கொண்டாராம்.

ஆனுல், அண்ணுவோ, குடும்ப நிலையை மனத்திற் கொண்டு, தம் இயலாமையை எடுத்துச் சொல்லியிருக்கிருர். கல்லூரித் தலைவரோ அவருடைய கூற்றை ஏற்றுகொள்பவராக இல்லை. அண்ணுவைத் தனியே அழைத்து—

"நம்மைச் சேர்ந்தவர்களில், யாரும் உன்னைப்போல் நன்ருகப் படித்து தேர்வில் பெரும் எண்கள் பெற்று, முதல் வகுப்பில் வருவது அரிது. மிகச் சிலரே அப்படியுள்ளனர். ஆகையால் உன்னைப் போன்றவர்கள் முன்னேற வேண்டியது மிக மிக இன்றியமையாதது அல்லவா?" என்று கேட்டு ஊக்க மூட்டிஞராம். மேலும் அண்ணுவின் இலவசக் கல்விக்குரிய எல்லா உதவிகளும் புரிவதாக வாக்களித்தாராம்.

கருணையுள்ள அக்கல்லூரி முதல்வரால் அண்ணுவின் கல்விப் பயணம் கல்லூரியில் தொடர்ந்து நடந்தது.

## அறிவுத் தாகத்தால் அலைந்தவர்

கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த காலத்தில் பாடப் புத்தகங்களில் மட்டுமே தம்மைப் புதைத்துக் கொள்ளும் 'புத்தகப் புழு'வாக அண்ணு அடைபட்டுக் கிடக்கவில்லை. மிதமிஞ்சிய அறிவுத் தாகங் கொண்டு 'நூல் நிலையங்கள் எங்கே! எங்கே!' என்று அலையாய் அலைந்திருக்கிருர். சென்னையில் உள்ள தங்கசாலைத் தெருவில் பண்டிட் ஆனந்தம் என்பவர் அந்த நாளிலேயே தனிப்பட்ட முறையில் நூல் நிலையம் ஒன்றை நடத்தி வந்தார். அண்ணுவின் அறிவுத் தாகத்தைத் தீர்க்கும் தண்ணீர்ப் பந்தலாக அது விளங்கிற்று. சென்னைப் பல்கலைக்கழக நூலகத்துக்கும் அண்ணு அடிக்கடி செல்வது வழக்கம்.

''கன்னிமாரா லைப்ரரியையே கரைத்துக் குடித்தவர்'' என்னும் ஒரு வழக்காறே ஏற்பட்டுத் தமிழகத்தில் உலவி வருவதை யாவரும் அறிவர்.

## எழுத்தில் புலி

ஒரு சமயம், கல்லூரிப் பேராசிரியர் ஒருவர் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பொருட்டு, ஒரு குறிப்பிட்ட பொருள்பற்றிக் கட்டுரை எழுதி வருமாறு கட்டளை இட்டார்.

பின்னர், கட்டுரைகளைத் திருத்த முற்பட்ட அவர், அண்ணாவின் கட்டுரையைக் கண்ணுற்றதும் திகைப்பில் ஆழ்ந்தார். அவருடைய புதுமை மணக்கும் கருத்துக்களும், பொருத்தமான விளக்கங்களும் பேராசிரியரை வியப்பு வெள்ளத்தில் வீழ்த்தியது.

அடுத்த நாள், கல்லூரி வகுப்பறையினுள் நுழைந்ததும் அண்ணாவைத் தம்மிடம் அழைத்தார் பேராசிரியர். தம் முன்னே நிற்கும் அந்தச் சாதாரண மாணவரை நோக்கி:

''உன் கட்டுரைகளுக்கு வேண்டிய கருத்துக்களை எந்தப் புத்தகத்திலிருந்து எடுத்து எழுதினாய்!'' என்று வினவினார்.

''என் கட்டுரையில் காணப்படும் கருத்துக்கள் யாவும் என் சொந்தச் சிந்தனையில் தோன்றியவையே! அவற்றை எந்தப் புத்தகத்திலிருந்தோ, பத்திரிகையிலிருந்தோ நான் எடுத்தெழுதவில்லை'' என்று அடக்கமாக விடையிறுத்தார் அண்ணா. அவருடைய அறிவுக் கூர்மையைக் கண்டு பேராசிரியரின் வியப்புக் கடல் மேலும் பன்மடங்காக விரிந்தது.

இவ்வாறு அண்ணா எழுதிய ஆங்கிலக் கட்டுரைகள் பல. கல்லூரிப் பேராசிரியர்கள் பலரும் மூக்கில் விரல் வைக்கும் படியான மொழி அழகுடனும், எழில் நடையுடனும் அவர் தம் கட்டுரைகள் கற்கண்டாய் இனித்தன. அவற்றுள் எல்லோராலும் ஒருமனதான பெரும் பாராட்டுப் பெற்றது, 'மாஸ்கோ அணி வகுக்கலாம்' (Moscow May Parade) என்னும் கட்டுரையாகும்.

மேற்கூறியவற்றால், பிற்காலத்தில் எழுத்துத் துறையில் 'எழுஞாயிறாக ஏற்றம்பெறப் போகிறார்' என்பதற்குரிய ஒளியின் சாயல், அண்ணாவின் கல்லூரி வாழ்விலேயே காணப்பட்டது என்பதை அறியலாம்.

## பேச்சில் அரிமா

கல்லூரி மாணவப் பருவத்தில் எழுத்தில் புலியாகத் திகழ்ந்தது போன்றே பேச்சிலும் அரிமாவாக விளங்கினார் அண்ணா. அவைக் கூச்சமோ நடுக்கமோ அவரிடம் அணுவளவும் இல்லை. எந்தப் பொருள் என்றாலும் கேட்பவரின் சிந்தை மகிழத் தேன் மழைபோல் பேசத் தொடங்கிவிடுவார் அவர்.

அதுவும் விவாத அரங்குகளில் பங்கு பெறுவதென்றால் அண்ணாவுக்கு அளவுகடந்த ஆசை. பயிலும் பருவத்திலேயே 'விவாதம் விவேகத்தை வளர்க்கும்' என்பதை ஒரு கொள்கையாகவே அவர் கொண்டிருந்தார்; கூறி வந்தார். கல்லூரியில் எந்த விவாதம் நிகழ்ந்தாலும் அதில் தவறாமல் அவர் கலந்து கொள்வார்.

"அண்ணா கல்லூரியில் படித்த காலத்தில் அவர் கலந்து கொள்ளாத விவாத அரங்கு எதுவும், பச்சையப்பன் கல்லூரியில் நடந்ததே இல்லை" என்று அவருடைய நண்பர்கள் பெருமிதத்தோடு கூறுகின்றனர்.

குறிப்பாக ஒய். எம் சி. ஏ. பேச்சு அரங்கில் அறிவு இயல் துறையில் பங்குகொண்டு அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் மாணவர்கள் உள்ளத்தில் மயக்கமூட்டும் மதுவாகவே இருந்திருக்கின்றன. அந்த நாளிலேயே மேடைப் பேச்சிலே தென்றலின் குளிர்ச்சியையும், தேனின் இனிமையையும் கலந்து பொலிவையும் ஒளியையும் புகுத்திய பெருமை அண்ணாவுக்கு உண்டு.

பிற்றை நாளில் பேச்சுக் கலையிலே ரோம் நாட்டு மார்க்கஸ் ஆண்டனியைப் பிரதிபலிப்பவராக அண்ணா பீடுநடை போடுவதற்கான அடிக்கல் அவரது கல்லூரி நாட்களிலேயே நாட்டப்பட்டுவிட்டது என்பதில் ஐயமே இல்லை.

## நிலைமகனுக்கும் கலை முதல்வன்

இவ்வாறாக, எழுத்து—பேச்சு ஆகியவற்றால், பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் மனத்தில் மட்டுமல்ல, பேராசிரியர்கள் கூட்டத்திலும் பேரிடம் ஒன்றைப் பிடித்துக் கொண்டுவிட்ட அண்ணா—

அறிவொளியைப் பரப்பிக்கொண்டிருந்த அண்ணு—

அக்கல்லூரியைவிட்டு 1934-ஆம் ஆண்டு வெளியேறினுர்.

சாதாரண இளைஞராகவா?

அல்ல.

'கலை முதல்வன்' (M.A.) பட்டம்பெற்ற எழில் மகனுக!

தமிழகத்தின் தலைமகனுக உயரப்போகும் தளபதியாக!

## கல்விக் கருத்து மணிகள்

கல்வியைப்பற்றிக் கல்விச் செல்வராம் அண்ணு அவர்கள் சிந்தியுள்ள கருத்து மணிகள் ஆழ்ந்த சிந்தனைக்கு உரியன; அறிவுக்கு மெருகைத் தருவன.

"படிப்பே இல்லாமல் திறமைபெற முடியாது. அப்படி யாராவது இருந்தால் விதிவிலக்காக ஓரிருவர் இருக்கலாம். ஆனுல், 'படித்ததனுல் திறமை போய்விட்டது' என்று யாரும் சொல்லமாட்டார்கள்."

* * *

"கட்டிடத்திற்குச் செங்கல்போல் வாழ்க்கை முன்னேற்றத்திற்குப் படிப்பு தேவை; திறமை தேவை; தேர்ச்சி தேவை."

* * *

"பொதுக்கூட்டத்தில் நிகழ்காலத்தைக் காண்கிறேம் என்ருல், பள்ளியில் வருங்காலத்தை ஓரளவு காண்கிறேம். அதன்மூலம் பயன் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது இயற்கை."

* * *

"வளருகின்ற சமுதாயத்துக்கு ஏற்ப கல்விமுறை அமையவேண்டும் என்பது மறுக்க முடியாதது.

"சமுதாயம் அனைத்தும் மகிழ்ச்சியாக இருக்கச் செய்ய வேண்டும்; நிம்மதியாக இருக்கச் செய்யவேண்டும்; நிறைவாக இருக்கச் செய்யவேண்டும். மக்கள் நிம்மதியாக வாழ்கின்றுர்கள்—அவர்களின் பிற்கால சந்ததியினரும் வாழ வழி செய்து வாழ்கின்றுர்கள். நிலையான மகிழ்ச்சியோடு, நிறைவோடு வாழ்கின்றுர்கள் என்ற நிலையை ஏற்படுத்தத்தான் மாணவர்கள் கல்வி பெறுகின்றுர்கள்!

"சமுதாயத்தை உயர்த்துவதற்குத்தான் கல்வி என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும்."

* * *

"மாணவர்கள் வைரங்களாக இருக்கவேண்டும்; வைரத்திற்கு அதிக மதிப்பு இருப்பதற்குக் காரணம் பூமியின் வெகு ஆழத்தில் அது இருப்பதே ஆகும்.

"நிலத்தின் கீழே தோண்டினுல் கிளிஞ்சல்கள் இருக்கும்—சுண்ணும்பு கிடைக்கும்—நிலக்கரி கிடைக்கும். அதற்கும் கீழே தோண்டினுல் பெட்ரோலியம் கிடைக்கும்—அதற்கும் கீழே அழுத்தி வைக்கப்பட்டிருக்கும் வைரத்துக்குத்தான் மதிப்பு அதிகம். அதைப் போலவே, மாணவப் பருவத்தை அழுத்திவைத்து வைரமாகத் திகழுங்கள்! நீங்கள் பெறுகின்ற கல்வி உங்களுக்காக மட்டுமல்ல—சமுதாயத்திற்காகக் கல்வி பெறுகின்றீர்கள் என்பதை உணர்ந்து செயல்படுங்கள்!"

* * *

"தன்னிடத்திலே படித்த மாணவர்கள் உயர்வதிலேதான் ஆசிரியர் தொழிலின் சிறப்பு மேலாடுகிறது. ஆசிரியர்கள் பணி கைம்மாறு கருதாத தியாகப் பணியாகும்."

* * *

"மதச் சார்புள்ள அரசாங்கம் கல்வி நிலையங்களை ஏற்று நடத்தினுல் அங்கே மனிதனின் சிந்தனு சக்திக்கு இடம் இருக்காது."

* * *

"கல்வி எதற்காகக் கற்கிருேம்? பகுத்தறிவு பெற, புதிய பொருளைக் காண கல்வி கற்கிருேம். நாட்டிலே நல்லறிவைப் பரப்பக்கூடிய கல்வி வேண்டும்; இதற்காகப் புதிய திட்டங்களை வகுக்கவேண்டும்."

* * *

"குழந்தை இல்லாதவர்கள் பணத்தைச் சேமித்து வைப்பதற்காக வாரிசு (வழித் தோன்றல்) தேட வேண்டுவதில்லை. அந்தச் சொத்துக்கு அரசாங்கமே வாரிசாக இருக்கவேண்டும். தனிப்பட்டவர்களிடம் சொத்து இல்லாமல் அரசாங்கத்திடம் சொத்து இருந்தால் அதை நல்லதொரு கலாசாலை அமைக்கவும் நல்ல விஞ்ஞான முறையை ஏற்படுத்தவும் பயன்படுத்தலாம்."

# 7. மண வாழ்க்கை

### வெண்ணெயும் சுண்ணாம்பும்

நம் நாட்டைப் பொறுத்தவரையில் பெண்ணாய்ப் பிறந்தவர்கள் கடைநிலைப் பிறவிகளாகவே கருதப்படுகிறார்கள்; நடத்தப்படுகிறார்கள். ஆண் பிள்ளைகளிடம் காட்டும் கவனிப்பையோ கவலையையோ பெண் மக்களிடம் அவ்வளவாகக் காட்டுவதில்லை. பெண் என்பவள் தன் வாழ்க்கையின் முக்கால் பகுதியை அயலார் வீட்டில்தானே கழிக்கப் போகிறாள் என்கிற அலட்சியம்போலும் பெற்றோர்களுக்கு!

அதே சமயம், ஆண் பிள்ளைகளையோ தங்கள் குடும்பப் பெயரை நிலைநாட்ட வந்த குலவிளக்காகவே கருதுகிறார்கள்; கவனிக்கிறார்கள். அவர்கள் எல்லாவித வாய்ப்புகளும், வசதிகளும் பெறுவதற்குச் செய்யப்படும் ஏற்பாடுகளோ எண்ணில் அடங்காதவை. என்னதான் பாசத்தையும், பரிவையும் கொட்டினாலும், பெண் மக்களுக்கு என்று கல்வி முதலானவற்றுக்குச் செலவிடுவது, சொத்தைப் பகிர்ந்தளிப்பது போன்ற சிக்கல்கள் வரும்பொழுது பெற்றோர்கள் பெரும்பாலும் ஆண் பிள்ளைகளுக்குச் சார்பாகவே நடந்துகொள்வதைக் காண்கிறோம். ஒரு கண்ணில் வெண்ணெயும், மறு கண்ணில் சுண்ணாம்பும் என்பதை 'ஆண் கண்ணில் வெண்ணெயும் பெண் கண்ணில் சுண்ணாம்பும்' எனக் கூறினால்கூடப் பொருத்தமாகத்தான் இருக்கும்.

### எல்லையில்லாச் செல்வம்

அதுவும் ஒரு குடும்பத்தில் ஒரே ஒரு ஆண் பிள்ளைதான் பிறந்திருக்கிறான் என்றால் அவனுக்குக் கிடைக்கிற கவனிப்புக்குக் குறைவே இராது. அத்தகைய ஒற்றை ஆண் பிள்ளையாகத் தம் பெற்றோர்க்கு வாய்த்தவரே அண்ணா. எனவே வீட்டில் செல்வச் செழுமை அவ்வளவாக இல்லையெனினும்,

பெற்றோரும் சிற்றன்னையும் பொழிந்த அன்பு மழைக்கு, 'செல்லத்துக்கு' எல்லையே இல்லை!

அவர்களுடைய அந்தச் 'செல்லம்' அண்ணா கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தபோது உச்சகட்டத்தை அடைந்தது. அவர் படித்து முடித்து, பட்டம் பெற்று வெளி வரட்டுமே என்ற பொறுமைகூட அவர்களுக்கு இல்லை. விரைவிலேயே அவரை மணக்கோலத்தில் மாலையுங் கழுத்துமாகக் காணத் துடித்தார்கள் அவர்கள்.

## மணம் வீசும் மணம்

எனவே பெற்றோர் சிற்றன்னை விழைந்தவாறே அவர்களுடைய கண்கள் குளிரக் காஞ்சிபுரத்தில் 1930-ஆம் ஆண்டில் அண்ணாவுக்குத் திருமணம் நிகழ்ந்தது. மங்கலக் கருவிகள் இன்னிசை முழங்க, மறையவர் பழைய மந்திரம் ஓத, பெரியவர் பலரும் வாழ்த்தினைப் பெய்ய அண்ணா தம் வாழ்க்கைத் துணைவியாக இராணி அம்மையாரை ஏற்று மகிழ்ந்தார்.

## காதல் மணமா ?

அண்ணாவுக்கு நடந்தது காதல் திருமணமா? இல்லை.

இதைப்பற்றி அவருடைய அன்னையாரே மிக அழகாகக் குறிப்பிடுகின்றார்.

"...அவன் கல்யாணங்கூட இந்தக் காலத்துப் பசங்கள் செய்கிற மாதிரி இல்லை. நாங்கள் போய்ப் பார்த்துத் தீர்மானித்த பெண்ணைத்தான் மணந்துகொண்டான்."

## மகளிர் திலகம்! மாணிக்கப் பேழை!

அண்ணாவின் மனமறிந்து நடந்துகொள்ளும் மகளிர் திலகமான இராணி அம்மையார் சென்னையில் பிறந்தார். பின்னர் அவரது குடும்பம் தஞ்சாவூரில் குடியேறிற்று. அம்மையாரின் குடும்பத்தினரும் அண்ணாவின் குடும்பத்தினரும் தூரத்து உறவினராம். அந்த உறவே அவர்களைப் பிணைக்க வைத்தது.

“ஒரு பெண்ணின் கள்ளமற்ற இதயத்தில் புகுந்து பார்த்தால் அங்கே இரக்கம், தியாகம், கற்பு என்னும் மாணிக்கங்களைக் காணலாம்”

—என்றார் ஹார்க்ரேயிங் என்னும் அறிஞர்.

இராணி அம்மையார், பண்பு நலன்களெல்லாம் கூடிப் பட்டொளி வீசும் மாணிக்கப் பேழையே ஆவார்.

பொது வாழ்வில் ஈடுபடும் எந்த ஓர் ஆடவருக்கும் அவரது துணைவி துணையாக இல்லையென்றால்,—கணவருக்குக் கடுகளவும் கவலை இல்லாதவாறு குடும்பச் சுமையைத் தானே தாங்கும் குணவதியாக அமையவில்லை யென்றால்—அந்த ஆடவரின் பணிகள் அத்தனையும் பனித்துளியாகவே கரைந்து மறையும்; மணல் வீடாகவே சரிந்து சிதறும்.

அந்த வகையில், அண்ணா மிகவும் கொடுத்து வைத்தவர் என்றே கூறவேண்டும். இராணி அம்மையார் குடும்பப் பொறுப்புக்கள் அனைத்தையும் திறம்பட மேற்கொண்டார். வீட்டைப் பற்றிய நினைவே இல்லாமல் அண்ணா நாட்டைச் சுற்றி நற்பணி ஆற்றியதற்கு அந்த நங்கை நல்லாரின் பொறுமையும் திறமையும் மிக்க துணையே காரணமாகும்.

அந்தக் குடும்ப விளக்கு தந்த பின்பலத்தைக் கொண்டே ‘அண்ணா’ என்னும் ஒளிவிளக்குத் தமிழகத்துக்கு வழி காட்ட முடிந்தது.

அதே சமயம், அண்ணா பொதுவாழ்வில் ஈடுபட்டு இன்னலுற்றபோதெல்லாம்—சிறை சென்ற நேரம் எல்லாம்—இராணி அம்மையார் அடைந்த துயருக்கும் கவலைக்கும் அளவே இல்லை. அண்ணாவின் சிறை வாழ்வு 1938-லேயே தொடங்கிவிட்டது. இந்தியை எதிர்த்தே அப்போது சிறை சென்றார். அந்த நாட்களில் தாம் அடைந்த துன்பங் குறித்து அம்மையார் கூறியவை கண்கலங்க வைப்பவை ஆகும்.

“...இந்தி எதிர்ப்பு மறியலில் ஈடுபட்டு அவர் சிறை சென்றார். முதல் முறை அவர் சிறை சென்றபோது எனக்குத் திகிலும் துயரமும் மிகவும் அதிகமாக ஏற்பட்டன.

டாக்டர் தருமாம்பாள் அம்மையார் போன்றவர்கள் தைரியம் சொல்லுவார்கள்."

—இத்துணை உயிருக்குயிரான தம் மனைவிக்குத் தாம் 1962-இல் வேலூர்ச் சிறையில் இருந்தபோது அண்ணா அளித்த பேட்டி நேரம் எவ்வளவு தெரியுமா?

இரண்டே இரண்டு நிமிடங்கள்!

ஆம்; அப்போது விலைவாசி உயர்வைக் கண்டித்துப் போராட்டம் நடத்தியதற்காக வேலூர்ச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார் அண்ணா.

## கொடுத்து வைத்தது அவ்வளவே!

ஒரு நாள், இயக்கத் தலைவர்கள் பலரும் சிறையிலிருந்த அண்ணாவைக் காணச் சிறைச்சாலைக்கு வந்திருந்தார்கள். அப்போது இராணி அம்மையாரும் தம் கணவரைக் காணச் சிறைச்சாலைக்கு வந்திருந்தார்.

அண்ணா, தம் கட்சித் தலைவர்களிடமிருந்து நாட்டு நடப்பை அறிந்துகொண்டு, வெளியில் நிலவும் சூழ்நிலைக்கேற்ப தி. மு. கழகத்தினர் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதைப்பற்றிப் பற்பல வழி முறைகளை விரிவாகவும், தெளிவாகவும் சொல்லிக் கொண்டிருந்தார்.

அதிலேயே நேரம் பறந்து கொண்டிருந்தது.

கடைசியில்தான் அருகில் நின்று கொண்டிருந்த தம் மனைவியின் நினைவு அவருக்கு வந்தது. அவரை அழைத்துப் பேச முற்பட்டார். காலங் கடந்துவிட்டபடியால் இரண்டு நிமிடங்களுக்குமேல் தம் குடும்ப நிலை குறித்து அவரால் உரையாட முடியவில்லை.

இதைப்பற்றி உணர்ச்சி ததும்ப அண்ணா என்ன சொன்னார் தெரியுமா?

"...நம்மைக் கட்டிக்கொண்ட புண்ணியவதி அவ்வளவு கொடுத்து வைத்தவள்!"

இதிலிருந்து, அண்ணா, தம் வீட்டு நலனைக் காட்டிலும் நாட்டு நலனிலேயே குறியாய் இருந்தார் என்பது நன்கு தெரிகிறது அல்லவா?

## கணவரைப்பற்றி மனைவி

தம்முடைய பெருமை மிக்க உயிருக்குயிரான கணவரைப் பற்றியும், அவர்களுடைய மணவாழ்க்கை பற்றியும், இராணி அம்மையார் என்ன கருதுகிறார்?

"...எங்களுடைய மணவாழ்க்கையில் மகிழ்ச்சியாகவே அன்று முதல் இன்றுவரை இருந்து வருகிறோம். எந்தவிதமான மனக்குறையும் ஏற்படுவதில்லை. இதுவரையில் ஒரு நாளாவது என்னை அவர் கடிந்து பேசியது கிடையாது. அவருடைய இயல்பே யாரிடமும் கோபம் வந்தால் கூடக் கடிந்து பேசாததுதான். அவர் யாரிடமும் கோபங் கொண்டு சண்டையிட்டதை நான் ஒரு நாளும் கண்டதில்லை. அவருடைய இந்த இயல்பு எங்கள் அனைவருக்கும் மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. அவருடைய நண்பர்களும் இதைப்பற்றி மகிழ்ச்சி அடைகிறார்கள்.

"இரவு வெகுநேரம் வரையில் விடிய விடியப் படிப்பதும் எழுதுவதும் அவருடைய பழக்கம். படித்துக் கொண்டோ எழுதிக்கொண்டோ இருக்கும்போது வேறு எந்தத் தொல்லையான செய்தியை யார் பேசினாலும் அது அவர் காதில் விழாது; கவனிக்கவும் மாட்டார். அவருடைய இந்த இயல்பைத் தெரிந்துகொண்ட நாங்கள் அவரிடம் குடும்பத் தொல்லைகள் எவற்றையும் கூறுவதே இல்லை. அவர் பொதுமக்களுக்குத் தொண்டு செய்வதில் ஈடுபட்டுவிட்டார் என்பதைப் புரிந்துகொண்டுவிட்டோம். அவர் செய்துவரும் தொண்டு நாட்டுக்கு நல்லது என்பதிலே எங்களுக்கும் மகிழ்ச்சிதான்.

"...எங்களுக்கு நான்கு (வளர்ப்பு) பிள்ளைகள் இருக்கிறார்கள். அவருக்கு எல்லாப் பிள்ளைகளிடமும் மிகுந்த அன்பு. வெளி ஊர்களுக்குப் போய்விட்டு எந்த நேரத்தில் வீட்டுக்கு வந்தாலும் எல்லோரையும் பார்க்கத் துடிப்பார்.

"மான், புறு, நாய் இவை வளர்ப்பதிலே என் கணவருக்கு மிகவும் விருப்பம்."

## பிள்ளைப்பாசம் பெரிது

அண்ணாவுக்கும் இராணி அம்மையாருக்கும் குழந்தைப் பேறு ஏற்படாமற் போனது ஒரு குறையே. ஆனால் அதை ஒரு குறையாகவே அண்ணா எடுத்துக் கொண்டவர் அல்லர். தம்முடைய பிள்ளைப் பாசத்தைப் பரிமளம், இளங்கோ, ஆகிய தம் வளர்ப்புப் பிள்ளைகளைக் கொண்டே நிறைவு செய்து கொள்கிறார்.

அவருடைய குழந்தைப் பாசம் குறித்து, அவர் அன்னையார் கூறிய கூற்று படித்து இன்புறத்தக்கது.

"...குழந்தைப் பருவத்தில் எப்படி இருந்தானோ அப்படித்தான் இப்போதும் இருக்கிறான். குழந்தைகளோடு விளையாடுவது என்றால் அவனுக்குக் கொள்ளை மகிழ்ச்சி. கைக் குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு கொஞ்சுவான் அது யார் வீட்டுக் குழந்தையாக இருந்தாலும் சரி; பார்ப்பன வீட்டுக் குழந்தை, நாயுடு வீட்டுக் குழந்தை என்ற வேறுபாடெல்லாம் அவனுக்குக் கிடையாது."

இதிலிருந்து இளமைக் காலத்திலிருந்தே, சாதி வேறுபாடு பாராத சான்றாண்மை கொண்டவராகவும் பாசக் கடலாகவும் அண்ணா விளங்கி வந்திருப்பது விளங்குகிறது அல்லவா?

## மணவாழ்க்கை பற்றி

திருமண வாழ்க்கையைப் பற்றி அண்ணா என்ன எண்ணுகிறார்?

"திருமணம் என்பது ஆண்-பெண் வாழ்க்கை நலத்தில் ஈடுபடுவதற்கான கூட்டு முயற்சியே ஆகும்."

"இன்பம் இல்லாத இல்லம் ஓர் இருண்ட வீடு. அதனால் இடரும் இன்னலுமே மிகுதியாகின்றன; இழிவும் பழியுமே மலிந்து விடுகின்றன. தந்தி தளர்ந்த வீணையிலிருந்து இனிய நாதம் எங்ஙனம் கிளம்ப முடியும்?"

"வாழ்க்கை முள் உள்ள ரோஜா! முள் தோலால் மூடப்பட்ட பலா. தோலைக் களைந்தெறிந்து பலாவுடன் பிணைந்துள்ள பசையையும் நீக்கிச் சுற்றுத் தோலை அகற்றினால் மட்டுமே சுளை கிடைக்கும், சுவை உண்டு."

# 8. வேலை தேடி வேட்டை

## வெளியிலும் வீசிய ஒளி

அண்ணாவின் ஆழ்ந்த சிந்தனை, அறிவுத் திறன், வாக்கு வன்மை, எழுத்து ஆற்றல், ஆகியவை பச்சையப்பன் கல்லூரிக் கட்டிடத்தின் உள்ளேயே படுத்துக் கிடக்கவில்லை. அவரிடம் இயற்கையாகவே கொழுந்து விட்டெரிந்த ஆற்றலின் ஒளி, வெளியுலகிலும் விரைந்து பரவிக்கொண்டிருந்தது. அதற்கு நல்ல வழி திறந்து விடுவதுபோல் திரு. சி. பாசுதேவ் என்பவரின் தொடர்பு அண்ணாவுக்குக் கிட்டியது.

## தொழிலாளர் தோழர்

அந்தக் காலத்தில் உறங்கிக் கிடந்த தொழிலாளர்களைத் தட்டியெழுப்பி அவர்களுடைய நலன் காக்கும் உற்ற தோழராய் உழைத்தவர்களில் திரு. வி. கலியாணசுந்தரனார், திரு. பி. பி. வாடியா, திரு. வி. சர்க்கரைச் செட்டியார் முதலானோரைத் தலைசிறந்தவர்களாகக் குறிப்பிடலாம். அவர்களுடைய வரிசையில் வைத்து வணங்கத்தக்கவரே திரு. சி. பாசுதேவ் என்பவர். அருவியின் சலசலப்புப் போல் ஆங்கிலத்தில் பேச வல்லவர் அவர். ஆனால் தமிழில் அவருக்குப் பேச வராது. அவர் தொழிலாளர் கூட்டங்களில் ஆற்றும் ஆங்கிலச் சொற்பொழிவுகளை அழகுத் தமிழில் இனிமை சொட்டப் பெயர்த்துப் பேசும் அரிய பணியினை மேற்கொண்டார் அண்ணா. இதனால் தொழிலாளர் நெஞ்சங்களில் தாம் கல்லூரியில் பயின்று கொண்டிருந்த அந்தக் காலத்திலேயே ஓர் இடத்தைப் பிடித்துக்கொண்டு விட்டார் அவர். அத்துடன் நீதிக் கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு. சி. பாசுதேவ் அவர்களின் நெருக்கமான தொடர்பும் அவருக்கு அருமையான வாய்ப்பாக அமைந்தது.

'திரு. பாசுதேவ் ஆங்கிலத்தில் பேசினால் திரு. அண்ணா துரைதான் மொழிபெயர்ப்பார்'—என்ற அளவில் வெறும் மொட்டாக அரும்பிய அவர்களுடைய தொடர்பு, நாளடைவில் இணைபிரியாத நட்பாகவே மலர்ந்து தழைக்கலாயிற்று.

## நெஞ்சில் புகுந்த நீதிக்கட்சி

'திரு. பாசுதேவ் அவர்களிடம் உண்டான நெருங்கிய தோழமை, நீதிக்கட்சியின் கொள்கைகளை நன்கு அறிந்து கொள்வதற்கும் ஆழ்ந்து சிந்திப்பதற்கும் அண்ணாவுக்குச் சிறப்பான வாய்ப்பை அளித்தது; பொது மக்களுக்குத் தொண்டு புரிய வேண்டும்' என்கிற ஆர்வத்தையும் அது ஊட்டியது.

## அதிகாரஞ் செய்ய ஆசையா ?

இந்த உள்ளத் தெளிவோடு, 'கலைத் தலைவன்' என்னும் 'எம். ஏ.' பட்டத்துடன் கல்லூரிப் படிப்பை முடித்துக் கொண்டு வெளியில் வந்த அண்ணா, தாம் மிக உயர்ந்த பதவி வகிக்க வேண்டும், பணம் பெருக்க வேண்டும் என்றெல்லாம் ஆசை கொண்டவராக அலையவில்லை. அவருடைய இந்த அடக்கத் தன்மை குறித்து அவர் துணைவியாரே அழகாகக் கூறியுள்ளார்:

"அவர் படித்துக் கொண்டிருந்தபோது என்னிடமோ நண்பர்களிடமோ நான் இந்த வேலைக்குப் போகப் போகிறேன், அந்த வேலைக்குப் போகப் போகிறேன்—என்று சொன்னது இல்லை. வேலைக்குப் போகவேண்டும், பெரிய மேம்பட்ட நிலையில்—அந்தஸ்தில் இருக்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு அப்போதே ஏற்படவில்லை. அப்போதே அவர், தமிழ்நாடு, மக்கள் சீர்திருத்தம், கல்வி என்ற இவைகளைப் பற்றித்தான் அதிகமாகப் பேசுவார். படிக்கும் போதே அரசியல் உலகோடு அவருக்குத் தொடர்பு ஏற்பட்டது. ......தன்மான இயக்கக் கொள்கைகளைப் பரப்புவதில் அவர் அப்பொழுதே ஈடுபட்டிருந்தார். கல்லூரிப் பாடங்களைப் படிப்பதோடு அவர் நின்று விடவில்லை......"

இவ்வாறாக அரசியல்—சமூகப் பொதுப் பணிக் கருத்துக்கள் தம்முடைய நெஞ்சிலே முளை விடுவதற்கு இடங்

கொடுத்துவிட்ட பிறகு அரசாங்கத்தின் மேலதிகாரியின் ஆணைகளுக்குக் கட்டுப்பட்டு "அடிமை வேலை" பார்க்க அண்ணாவுக்கு எப்படி மனம் வரும்?

ஆனால் அவருடைய அருமைச் சிற்றன்னை 'தொத்தா'வோ, அவர் வேலைக்குப் போய்ப் பெரும் பதவி வகிப்பதையே பெரிதும் விரும்பினார்.

## பட்டத்தால் பதவிப் பற்று!

பொதுவாகக் 'கலைத் தலைவன்' (எம். ஏ.) பட்டம் பெற்ற எவரும், முதலில் வருவாய்த் துறையில் (ரெவினியூ டிபார்ட்மென்ட்) நுழைந்து எவ்வாறேனும் மாவட்ட ஆட்சித் தலைவர் (கலெக்டர்) ஆகிவிட மாட்டோமா என்றே மனப்பால் குடிப்பர். அஃது இயலாவிடத்து, வேறு துறைகளிலேனும் உயர்தர அதிகாரியாக வரமாட்டோமா என்றே முயற்சி மேற்கொள்வர். அது கனியவில்லையெனில்தான், கல்லூரி விரிவுரையாளராகவேனும் காலங் கடத்துவோம் என்கிற முடிவுக்கு வருவர். அவர்களுடைய அடிப்படைத் திட்டம், கணிசமான அளவு ஊதியம் பெற்று, மற்றவர்கள் மீது அதிகாரஞ் செலுத்திப் பார்க்க வேண்டும்; சமூகத்தில் ஒரு செல்வாக்கான வாழ்வு வாழவேண்டும் என்பதே.

அண்ணாவின் சிற்றன்னைக்கும் மற்ற 'எம். ஏ.' பட்டதாரிகளைப் போலவே, தம்முடைய தமக்கை புதல்வனும் பெரிய அதிகாரியாக வரவேண்டும் என்கிற மாளாத ஆசை. அண்ணாவுக்கு உள்ளூர அத்தகைய எண்ணம் இல்லையென்றாலும் தம் வளர்ப்புத் தாயின் விருப்பத்தைத்தான் ஏன் கெடுப்பானேன் என்று வேலை தேடும் படலத்தில் அவர் ஈடுபட்டார்.

## ஏழையிடம் இரந்த வள்ளல்!

சென்னை உயர்நீதி மன்றத்தில் ஒரு வேலை காலியாக இருப்பதாக அண்ணாவுக்கு ஒரு செய்தி வந்தது. அதைப் பெறும் பொருட்டுக் காஞ்சிபுரத்திலுள்ள குறிப்பிடத்தக்க பெரிய மனிதர் ஒருவரிடம் பரிந்துரைக் (சிபாரிசு) கடிதம் பெற்றுக்கொண்டு வேலை நியமனத்துக்குத் தொடர்புள்ள அதிகாரியைக் காண்பதற்காகச் சென்னை உயர்நீதி மன்றத்

துக்குச் சென்றார் அண்ணா. தன்னை அந்த அதிகாரிக்கு அறிமுகம் செய்துவைக்க அவருக்கு முன்பே பழக்கமான ஒருவரையும் அண்ணா தம்முடன் கூட்டிப் போனார்.

இருவரும் அதிகாரியைப் போய்ப் பார்த்தனர். உடன் சென்றவர், அண்ணாவை அவருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

அண்ணாவின் பேச்சாற்றலையும், நீதிக் கட்சித் தலைவர்களிடம் அவருக்கிருந்த நெருங்கிய தொடர்பினையும் முன்பே அறிந்து வைத்திருக்கிறார் அந்த அதிகாரி. எனவே, அண்ணாவைக் கண்டதும் அவருக்கு அளவு கடந்த உற்சாகம் உண்டாயிற்று; அவரை மிக்க மரியாதையுடன் வரவேற்று மனந்திறந்து அளவளாவினார்.

அண்ணாவோ அவர் எப்போது தம் பேச்சிலே இடைவெளி அளிப்பார், எப்போது தாம் வந்த நோக்கத்தை வெளியிடலாம் என்ற சிந்தனையிலேயே தக்க சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அதற்குள் அண்ணாவை முந்திக்கொண்டு அந்த அதிகாரி என்ன சொன்னார் தெரியுமா?

"அண்ணாதுரை! நானே தங்களைச் சந்திக்க வேண்டும் என்று நீண்ட நாட்களாகவே நினைத்துக் கொண்டிருந்தேன். அதற்கான வாய்ப்புக் கிடைக்காமலே போய்விட்டது. ஆனால், நான் வந்து சந்திப்பதற்குள் தாங்களே நல்ல சமயத்தில் வந்து விட்டீர்கள்" என்று நயமாகக் கூறினாராம்.

ஓர் உயர்ந்த பதவியிலுள்ள அதிகாரி, வேலை கேட்க வந்திருக்கும் தன்னை நேரில் காண்பதற்கு முன்பே தன்னைக் காண விரும்பியிருக்கிறார் என்பதைக் கேட்டதும், அண்ணாவுக்கு உள்ளூர மகிழ்ச்சி உண்டாயிற்று. அதிகாரி மேலும் தொடர்ந்தார்...

"அண்ணாதுரை அவர்களே! நான் தங்களிடம் ஒன்றைப் பற்றிக் கூற ஆசைப்படுகிறேன். நான் மாவட்ட முன்சீப் ஆவதற்கு எனக்கு எல்லாத் தகுதிகளும் இருக்கின்றன. அப்படியிருந்தும் பல ஆண்டுகளாக என்னைத் தேர்ந்தெடுக்காமலே இருக்கிறார்கள். நீங்கள், ஆற்காடு (சர். ஏ.) இராமசாமி முதலியாருக்கு மிகவும் வேண்டியவர் என்று அறிந்துகொண்டேன். ஆகையால், தாங்கள் அருள் கூர்ந்து அவ

ரிடம் என்னைப் பற்றிக் கூறி எனக்குச் சிபாரிசு (பரிந்துரை) செய்ய வேண்டும்.''

—அதிகாரியின் வேண்டுகோளைக் கேட்டு வியப்பில் ஆழ்ந்தார் அண்ணா. தன்னை இரந்து வந்து நிற்கும் புலவரிடம் 'எனக்கு ஏதேனும் தருகிறாயா?' என்று இரக்கும் வள்ளலாகத் தோன்றினார் அவ்வதிகாரி. தமக்கு வேலை வாய்ப்புத் தரவேண்டிய அவர், தம்மிடமே மேல் வேலைக்குச் சிபாரிசு செய்யுமாறு கேட்டது அண்ணாவுக்கு வேடிக்கையாகத் தோன்றியது. அதை அவர் வெளியில் காட்டிக் கொள்ளவில்லை.

''நான் முடிந்த வரையில் உங்களுக்கு உதவி செய்ய முயல்கிறேன். தங்களைச் சும்மா பார்த்துவிட்டுப் போகலாம் என்றே வந்தேன்; நான் வருகிறேன்; வணக்கம்''—என்று திறமையாக மறுமொழி கூறிவிட்டுத் தாம் வந்த நோக்கத்தை அதிகாரியிடம் சொல்லிக் கொள்ளாமலே வெளியேறி விட்டார் அண்ணா.

## அருமையான ஆசிரியப் பணி!

சில நாட்கள் கழித்து அண்ணாவுக்கு ஒரு வேலை கிடைத்தது. அது ஆயிரம், ஐந்நூறு ஊதியம் பெறக்கூடிய வேலையோ, அதிகாரம் செலுத்தக்கூடிய வேலையோ அன்று. எளிமைக்குப் பெயர்பெற்ற ஆசிரியர் வேலைதான். அது வேனும், அந்தக் காலத்திலேயே 'எம். ஏ.' பட்டம் பெற்ற அண்ணாவுக்குக் கல்லூரி ஆசிரியர் வேலையாக அமைந்ததா? அவ்வாறும் இல்லை. ஒரு நடுத்தரப் பள்ளியில் சாதாரண ஆசிரியர் வேலைதான்!

ஆனால், அதனை மிகவும் விரும்பி மேற்கொண்டார் அண்ணா. படிப்பில் தீவிரமான ஆர்வம் இருந்தது போன்றே படிப்புச் சொல்லிக் கொடுப்பதிலும் அவருக்கு மிகுந்த உற்சாகம் இருந்தது. பணிகளில் எல்லாம் தலையாய பணி நாட்டின் வருங்காலச் சிற்பிகளை உருவாக்கும் ஆசிரியர் பணியே என்பதை உளமாரக் கருதியவர் அண்ணா. தம் எண்ணத்துக்கேற்பவே மாணவர்களுக்குப் பாடம் போதிப்பதிலும் ஈடு இணையற்று விளங்கினார் அவர்.

அண்ணா ஏற்றுக்கொண்ட இரண்டாவது அலுவல்—உத்தியோகம்தான் இந்த ஆசிரியப் பணி. முதலில், கல்லூரிப் படிப்புத் தொடங்குமுன் உள்ளூரில் சிறிது காலம் எழுத்தராகப் பணியாற்றியுள்ளார். இதுபற்றி முன்னரே குறித்துள்ளோம். சில ஏடுகள் ஆசிரியர் பணிதான் அண்ணாவின் முதற்பணி என்பதாக எழுதி வந்தன. அதனை மறுத்து அஃது இரண்டாவது பணியே என அண்ணாவே வலியுறுத்தியுள்ளார்.

அண்ணாவை ஆசிரியராக அமர்த்திக் கொள்ளும் பேறு பெற்ற பள்ளி எது தெரியுமா? சென்னையில் சைனா பசாரில் உள்ள கோவிந்தப்ப நாயக்கர் நடுத்தரப் பள்ளிதான்.

ஆனால் அப்பணி சிலகாலமே நீடித்தது.

## பறந்து செல்லும் பசுங்கிளி

ஏழை எளியவர்களை வாழ வைப்பதற்கும், மூடக் கருத்துக்களைக் குழியில் போட்டு மூடுவதற்கும் தமிழக மக்கள் தன்மானத்துடன் தலை நிமிர்ந்து நிற்பதற்கும், பரந்த உலகில் பணியாற்ற வேண்டும் என்கிற ஆர்வம், அண்ணாவின் உள்ளத்தில் பொங்கித் ததும்பிய வண்ணம் இருந்தது. ஆசிரியப் பணி சிறந்ததுதான் என்றாலும் அத்துறையைச் சார்ந்த மேலதிகாரிகளோ அண்ணாவின் ஆர்வத்துக்கு அணைபோடுகின்றவர்களாகவே இருந்தார்கள். தன் மதிப்பை இழக்கக்கூடிய அந்நிலை அண்ணாவுக்கு அறவே பிடிக்கவில்லை. எனவே, பள்ளிக் கட்டிடத்தினுள்ளே கூண்டுக் கிளியாக அடைபட்டுக் கிடக்காமல் இந்தப் பரந்த உலகை நோக்கிச் சிறகடித்துப் பறக்கத் தொடங்கிவிட்டார் அண்ணா.

## செட்டிநாட்டரசரிடம் சென்றார்

வழக்கம்போல் அண்ணாவின் சிற்றன்னை 'தொத்தா'வோ, அவர் இவ்வாறு அலுவல் ஏதும் இன்றி வானம்பாடியாகத் திரிவதை வரவேற்கவில்லை. ஏதேனும் வேலை பார்த்துவர வேண்டும் என்றே விரும்பினார்; வற்புறுத்தினார். அவரது அன்புக் கட்டளைக்கு அடிபணிந்து பிறிதொரு வேலை முயற்சியில் ஈடுபட்டார் அண்ணா.

செட்டிநாட்டரசர் டாக்டர் உயர்திரு. முத்தையா செட்டியார் அவர்களைப் பற்றித் தமிழகத்தில் அறியாதவர் இரார். அவர் நிறைந்த செல்வர்; சிறந்த கல்வியாளர். அக்காலத்தில் நீதிக்கட்சியுடன் நெருக்கமான பிணைப்புக் கொண்டு அதன் தலைவர்களில் ஒருவராகவே விளங்கியவர். 1937-38இல் இந்தி எதிர்ப்பிலும் ஈடுபட்டவர். தமிழ் நாட்டில் தமிழ்ச் சொல் என்பது மருந்துக்குக்கூட இல்லாமல், சங்கீதம் என்ற பெயரில் வேற்றுமொழிப் பாடல்களை வேண்டுமென்றே ஒரு சாரார் பாடிக்கொண்டிருந்த வேளையில், இனிய தமிழ்ப் பாடல்கள் எங்கும் எதிரொலிப்பதற்கென்று 'தமிழ் இசை இயக்கம்' என்னும் ஒன்று அக்காலத் தமிழார்வத் தலைவர்களால் தோற்றுவிக்கப் பெற்றது. அதிலே தீவிரமான பங்கு பற்றி உழைத்தவரும் ஆவார் திரு. முத்தையாச் செட்டியார். நீதிக்கட்சி தன் செல்வாக்கை இழந்துவிட்டதால் பிற்றை நாட்களில் அவர் காங்கிரசுக்கட்சியைத் தழுவிக்கொண்ட போதிலும் 'தென்னகம் தொழில் துறையில் சிறக்க வேண்டும், இந்தி ஆதிக்கத்தை எதிர்க்க வேண்டும், ஆங்கிலம் இந்நாட்டில் என்றென்றும் நீடிக்க வேண்டும்' என்பன போன்ற கொள்கைகளில் இன்றுங்கூட அழுத்தமான பிடிப்புக்கொண்டு உழைத்து வருபவர்.

அவரைக் காணச் சென்றார் அண்ணா. திரு. முத்தையாச் செட்டியாரின் தந்தையார் செட்டிநாட்டரசர் திரு. அண்ணாமலைச் செட்டியாரே சிதம்பரத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைத் தோற்றுவித்தார். அந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 'டியூட்டர்' வேலை தருமாறு கேட்பதற்கே அண்ணா செட்டிநாடு இளவரசர் திரு. முத்தையாச் செட்டியாரைக் காணச் சென்றார். அவருடன் திரு. அங்கமுத்து என்பவரும் சென்றார்.

இளவரசர் திரு. முத்தையாச் செட்டியார் அண்ணாவையும் திரு. அங்கமுத்து அவர்களையும் மிகுந்த அன்புடன் வரவேற்றார். மூவரும் இளவரசரின் அரண்மனைக்கு அருகில் உள்ள அடையாற்றில் படகில் அமர்ந்து உரையாடிக் கொண்டே சென்றனர்.

அந்த வேளையில் தமக்குக் கல்லூரியில் 'டியூட்டர்' வேலை வேண்டும் என்று தாம் வந்த நோக்கத்தை மெள்ள வெளியிட்டார் அண்ணா.

இளவரசரோ அந்த வேலை அண்ணாவுக்குத் தேவையில்லை என்று கூறிவிட்டார். அதற்குச் சரியான காரணமும் பகர்ந்தார்:

"நீங்கள் டியூட்டர் வேலையில் சேர்ந்துவிட்டால் பின்னர் நீதிக்கட்சிக்குச் சிறந்த பேச்சாளர் ஒருவர் கிடைப்பது அரிதாகிவிடும்; ஆகவே எனக்கு அந்தரங்கச் செயலாளராய் ஆக இப்போதே வந்துவிடுங்கள்; நான் உங்களுக்கு மாதம் 120 ரூபாய் தந்துவிடுகிறேன்."

மாதம் 120 ரூபாய் என்றால் இந்தக் காலத்தில் அத்தொகை 1200 ரூபாய்க்கு இணையாகும்.

எனினும்கூட அண்ணா பணத்தைக் கண்டு மயங்கி விடவில்லை. இளவரசர் திரு. முத்தையாச் செட்டியாரின் கூற்றுக்கு மறுமொழி ஏதும் உடனே பகராமல் அமைதி யாகவே இருந்துவிட்டார்.

இல்லம் வந்து சேர்ந்ததும் திரு. முத்தையாச் செட்டியார் அவர்களுக்கு அடியிற் கண்டவாறு கடிதம் அனுப்பி விட்டார் :

"...தாங்கள் குறிப்பிட்டிருந்த அலுவலை மேற்கொள்ள இயலாமைக்கு மிகவும் வருந்துகிறேன்."

கடிதத்தைக் கண்டதும் இளவரசர் திரு. முத்தையாச் செட்டியார் மிகுந்த வியப்புக்கு உள்ளானார்.

செல்வம் மிகுந்த தனியொரு மனிதரிடம் செயலாள ராகப் பணியாற்றுவதால் எங்கே தம்முடைய 'தன் மதிப்பை' இழக்க நேரிடுமோ என்று அஞ்சினார் போலும் அண்ணா! தம் உள்ளத்தில் தோன்றும் கருத்துக்களை தம் இச்சைப்படி வெளிப்படுத்த இயலாமலும் போய்விடக் கூடுமே என்றும் அவர் எண்ணியிருக்கலாம்.

## தமிழகம் பிழைத்தது

எவ்வாறோ, அண்ணா அங்கே வேலையை மேற்கொள் ளாதது தமிழக நலனுக்கு நன்மையாகவே முடிந்தது.

அண்ணாவின் வேலை தேடும் படலமும் அத்துடன் ஒழிந்தது.

பின்னர் அவர் முழுமூச்சுடன் நீதிக்கட்சியோடு தொடர்பு கொண்டு பொதுப்பணியாற்றப் புறப்பட்டு விட்டார்.

# 9. பொது வாழ்வின் நுழைவாயில்-1

## அடித்தளம் அமைத்தவர்

அண்ணா பொதுவாழ்வில் ஈடுபடுவதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்த பெருமை, தமிழகத்தில் அப்போது தழைக்க முற்பட்டிருந்த இரண்டு இயக்கங்களையே சாரும். ஒன்று பெரியார் ஈ. வே. இராமசாமி அவர்களின் தன்மான இயக்கம் (சுயமரியாதை இயக்கம்); மற்றது 'நீதிக்கட்சி' (JUSTICE PARTY).

இந்த இரு இயக்கங்களின் வரலாற்றுப் பின்னணியை ஓரளவு அறிந்து கொள்வது, அண்ணாவின் பொதுவாழ்வு நுழைவைப் புரிந்துகொள்வதற்குப் பெருந்துணை புரிவதாகும்.

## செந்தமிழ்த் திருநாடு

நம்முடைய செந்தமிழ்த் திருநாடு வடக்கே வேங்கட மலையையும், தெற்கே குமரி முனையையும், மேற்கே அரபிக் கடலையும் எல்லைகளாகக் கொண்ட பரந்த பெருநாடாகும்.

' வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ் கூறு நல்லுலகம்'

என்னும் பழம் பாடல் வரிகள் இங்கு நினைவுகூரத் தக்கன.

' நீலத் திரைக்கடல் ஓரத்திலே—நின்று
நித்தந் தவஞ்செய் குமரி எல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு'

என்று எல்லைகளைக் காட்டிப் பாரதியும் பாடியுள்ளார்.

## திராவிட இனத்தினர்

இவ்வாறு பரந்து விரிந்த தமிழகத்திற்குத் 'திராவிடம்' என்றும் பெயர். இப்பகுதியில் தொன்றுதொட்டு வாழ்ந்த

மக்கள் 'திராவிடர்' என்று அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் பழம் பெருமை வாய்ந்த ஒரு தனி இனத்தினர் ஆவர். இவர்களுக்கு என்று தனியான ஓர் தன்மையும், பண்பாடும், நாகரிகமும் உண்டு.

"நான் திராவிட இனத்தைச் சார்ந்தவன். நான் என்னைத் திராவிடன் என்று அழைத்துக்கொள்ளப் பெருமைப்படுகிறேன்."

('I belong to Dravidian Stock. I am Proud to call myself a Dravidian.)

என்று இந்திய நாடாளுமன்ற மேலவையில் (Parliament-Rajyasabha) அண்ணாவே கூறியுள்ளார்.

### ஆரியர் வருகையால்

தென்னாட்டில் வாழ்ந்த இத்தகு சீர்த்தி வாய்ந்த திராவிட இன மக்கள் ஆரியர்களின் வருகைக்குப் பிறகு பல பிரிவினராகச் சிதறுண்டனர். பல்வேறு சாதிப் பிணக்குகள் தலையெடுத்தன.

இதைப்பற்றி விசயநகரம், மகாராசா கல்லூரி வரலாற்றுப் பேராசிரியர் திரு. எம். எஸ். இராமசாமி அய்யங்கார் தாம் எழுதிய மதுரை மாவட்ட பூ வருணனை நூலில் அடியிற்கண்டவாறு தீட்டியுள்ளார்:

'ஆதிகாலத்தில் திராவிடர்கள் சாதி பேதமின்றி ஒற்றுமையாக வாழ்ந்து வந்தார்கள். பின்பு ஆரியர் திராவிட நாட்டில் வந்து குடியேறித் திராவிட மன்னர்களின் தயவைப் பெற்றார்கள். ஆரியர்களில் சிலர், அந்த மன்னர்களுக்குக் குருவானார்கள். அதன் பின்னர்தான் தமிழ்நாட்டில் 'ஆரிய நாகரிகம்' பரவத் தொடங்கிற்று.'

### திராவிடரின் சீர்குலைவு

ஆரியர்கள் தென்னாட்டில் அடி வைப்பதற்கு முன்னர் ஒரே இன மக்களாகவும், ஒரே மொழியைப் பேசுகின்றவர்களாகவும் இருந்த திராவிடர்கள், அவர்கள் வருகைக்குப் பின்னர், பல்வேறு பிரிவினராகச் சிதறுவதற்குக் காரணமாக இருந்தது அவர்களுடைய சமசுகிருத மொழியே.

அந்த ஆரிய மொழியின் ஊடுருவலால் தனித் தன்மை யோடு விளங்கிய பழந்தமிழாகிய திராவிட மொழி நான்கு, ஐந்து என்று சிதறத் தொடங்கிற்று. அவ்வாறு பிரிந்து உருவான மொழிகளே, ஆந்திரம், கன்னடம், துளு, மலையாளம் முதலானவை.

நாளடைவில், சமூக அமைப்பில் திராவிட இன மக்கள் தாழ்ந்தவர்கள் ஆனார்கள்; இந்தியத் துணைக் கண்டத்தில் ஆங்கிலேயர் ஆதிக்கம் ஏற்பட்ட பின்னர் அவர்களுடைய நிலை மேலும் மோசமாயிற்று. ஆங்கில மொழியை விரைந்து கற்ற ஆரிய இனத்தைச் சார்ந்தோராய்க் கருதப்படும் பார்ப்பனர்கள், அரசாங்கத்தில் பல்வேறு பதவிகளை வகிக்கும் வாய்ப்புப் பெற்றனர். அவ்வாறு ஆங்கிலம் சற்கத் தவறிய திராவிட இனத்தினர் செல்வாக்கிழந்தனர்—சீர் குலைந்தனர்.

திராவிட இன மக்களின் இழிந்த நிலையை ஒழித்து அவர்களுக்கு எழுச்சிமிக்க வளமான எதிர்காலத்தை உருவாக்குவதற்கு என்றே பிறப்பெடுத்து வந்த முதல் தலைவர் — தனிப்பெருந் தலைவர் — சர். பி. தியாகராயர் அவர்களே.

அவருடைய அருமையான பணியினைப்பற்றி திரு. டி. எம். பார்த்தசாரதி அவர்கள் தம்முடைய 'தி. மு. க. வரலாறு'—நூலில், மிகவும் உணர்ச்சிப் பெருக்குடன் குறிப் பிட்டுள்ளார்கள். அதனை நன்றியறிதலுடன் கீழே தரு கிறோம்:

"தமிழர் என்ற உணர்ச்சியும் தமிழ்நாடு என்ற எண்ண மும் மங்கிப் போய் எங்கு நோக்கினும் தமிழர் துன்ப வாழ்வில் சிக்கிச் சிதைந்து வந்த காலம். இந்தக் காலத்தில் தான் தமிழரின் தனிப் பெருந்தலைவராக சர். பி. தியாகராயர் தோன்றினர். வேதனை மிகுந்த காட்சி தமிழ்நாட்டைக் கப்பிக் கொண்டிருப்பதைக் கண்டார். உள்ளம் வெதும் பினர். சீறிப் போரிட்டுச் சீர்கேட்டை ஒழிக்கச் செயலில் இறங்கினர். அவரைப் பொறுத்தமட்டில் அவருக்கு ஒரு குறைவும் கிடையாது. பெருத்த வியாபாரி. பணமும்

அதனால் ஏராளமாகக் கிடைத்து வந்தது. போக போக்கி யங்கள் உண்டு. கூப்பிட்ட நேரத்தில் குற்றேவல் புரிய காத்துக் கொண்டிருந்தனர் எத்தனையோ சீமான்கள், சிற்றரசர்கள், வியாபார வேந்தர்கள், சமீன்தார்கள் ஆகியோர். உண்டு களித்து உல்லாச வாழ்வு வாழ அவர் மனம் இடந்தரவில்லை. அவரது கால்கள் அந்தப் போக போக்கியப் பாதை வழி செல்லவில்லை. அத்தகைய பாதையைவிட்டு விலகினார். தாமாகவே கல்லும் முள்ளும் காட்டாறும் கடுங்குழியும் நிரம்பிய பாதை வழிச் செல்லத் தொடங்கினார். பார்ப்பனர் அல்லாதார் சேவை என்ற பயங்கரப் பாதையில் புக ஆரம்பித்தார்...திராவிடப் பெருங்குடி மக்கட்குத் தலைமை பூண்டு அவர்கள் வாழ்வில் இருந்துவந்த அடிமைத் தனத்தை அகற்றப் பாடுபட்டுச் சமுதாயத் துறை ஆகியவற்றில் தமிழர் இடம் பெற முற்பட்டார்.''

தலைவர், தியாகராயரின் சிந்தனையில் அரும்பிய திட்டங்களை நிறைவேற்ற அவருக்குத் தக்க நண்பர்களும் கிடைத்தார்கள். டாக்டர் சி. நடேச முதலியார், பனகல் அரசர், சர். பி. டி. இராசன், சர். ஏ. இராமசாமி முதலியார், சர். ஏ. டி. பன்னீர்செல்வம், தஞ்சை—வாண்டையார், தஞ்சை—உமாமகேசுவரம் பிள்ளை, நாகை வி. பக்கிரிசாமி, சேலம்—எல்லப்பன், மதுரை—எம். டி. சுப்ரமணியம் முதலானோர் தியாகராயரின் கரத்தை வலுப்படுத்தி நாடெங்கும் திராவிட இன மக்களைத் தட்டியெழுப்பும் பணியில் ஈடுபடுவதற்கு இசைந்தனர், அவர்களுடைய முழு ஒத்துழைப்புடன்.

1916-ஆம் ஆண்டு, நவம்பர் திங்களில் திராவிட இன மக்களின் நலனைக் காப்பதற்கு என்று 'தென்னிந்திய நல உரிமைச் சங்கம்' என்னும் ஓர் அரசியல் கட்சி தோற்றுவிக்கப்பட்டது; அதன் முதல் தலைவராக சர். பி. தியாகராயர் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

அக்கட்சியின் கொள்கைகளைப் பொதுமக்களிடையே பரப்பும் படைக்கலன்களாக மூன்று நாளேடுகள் துவக்கப் பெற்றன.

'ஜஸ்டிஸ்' (Justice) என்னும் ஆங்கில நாளிதழுக்கு டாக்டர் டி. எம். நாயர் ஆசிரியர் ஆனார். திரு. பி. என். இராமன் பிள்ளை அவருக்குத் துணையாசிரியராகப் பணியாற்றினார்.

'திராவிடன்' என்னும் தமிழ் நாளிதழுக்கு திரு. பக்தவத்சலம் பிள்ளை பி. ஏ. என்பவர் ஆசிரியர் ஆனார். சாமி ருத்ரா கோடீஸ்வரரும் பண்டித வில்வபதி ரெட்டியாரும் துணை ஆசிரியர்கள் ஆனார்கள்.

'ஆந்திர பிரகாசினி' என்னும் தெலுங்கு ஏட்டுக்கு திரு. ஆ. சி. பார்த்தசாரதி நாயுடு ஆசிரியர் ஆனார்; திரு. இராகவையா நாயுடு துணை ஆசிரியர் பொறுப்பேற்றார்.

நாளடைவில், டாக்டர். டி. எம். நாயரின் கவர்ச்சி மிக்க எழுத்து வன்மையினால் 'ஜஸ்டிஸ்' ஆங்கில ஏடு கற்றறிந்த மாந்தரிடையே பெரும் செல்வாக்கைத் தேடித் தந்தது; தென்னிந்திய நல உரிமைச் சங்கக் கட்சியையும் வளர்த்துக் கொடுத்தது. கருத்துப் பெட்டகமாய் விளங்கிய அதனுடைய இணையில்லாச் சிறப்பின் காரணமாகக் காலப் போக்கில் 'ஜஸ்டிஸ்' இதழின் பெயரே அதன் கட்சிக்கு சினையாகு பெயராக அமையலாயிற்று. 'தென்னிந்திய நல உரிமைச் சங்கம்' என்றால் புரிந்துகொள்ளாதவர்கள்கூட 'ஜஸ்டிஸ்-பார்ட்டி' (நீதிக்கட்சி) என்றால் உடனே தெரிந்து கொண்டார்கள்.

இவ்வாறாக 'ஜஸ்டிஸ் பார்ட்டி' என்னும் 'நீதிக் கட்சி' கருவுற்று, உருப்பெற்றுத் தலையெடுத்து தழைக்கலாயிற்று.

தூய வெண் துகிலையே உடுத்தியதன் காரணமாக 'வெள்ளுடை வேந்தர்' என்று பொதுமக்களிடையே புகழ் பெற்றிருந்த சர். பி. தியாகராயர் 1916-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்களில் உணர்ச்சிமிக்க அறிக்கையொன்றை நீதிக் கட்சியின் தலைவர் என்னும் முறையில் வெளியிட்டார். அவ்வறிக்கை உறக்கத்தில் ஆழ்ந்திருந்த திராவிட இன மக்களின் இமைக் கதவுகளைத் திறந்துவிட்டது; புதிய எழுச்சியை அவர்களிடம் பொங்க வைத்தது. அதுமட்டுமின்றி, காங்கிரச

இயக்கச் சார்புள்ள 'ஹோம்ரூல்' இயக்கத்துக்கும் சரியான சவுக்கடி கொடுத்திருந்தது.

இந்தியாவில் வைசிராயாக இருந்த செம்ஸ் போர்டு பிரபுவும், இந்தியாவின் நலனைக் காப்பதற்கென்று, இங்கிலாந்து அரசாங்கத்தில் இந்திய அமைச்சராக இருந்த மாண்டேகு பிரபுவும் 1917-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 24-ஆம் நாள் சென்னை வந்தனர். அவர்களிடம் நீதிக் கட்சியின் சார்பில் ஓர் அறிக்கை அளிக்கப்பட்டது. 'ஹோம் ரூல்' இயக்கத்ினரும் ஓர் அறிக்கை கொடுத்தனர். ஆனால், தாழ்த்தப்பட்ட மக்களின் இன்னல் மலிந்த வாழ்க்கையை உண்மையாகப் படம் பிடித்துக் காட்டியிருந்த நீதிக் கட்சியின் அறிக்கையே ஆங்கில ஆட்சியாளரின் கவனத்தைக் கவர்ந்தது.

அவ்வறிக்கை இன்னொரு விளைவையும் ஏற்படுத்திற்று. தங்கள் முன்னேற்றத்தில் உண்மையாகவே கண்ணுங் கருத்துமாய் உழைக்கின்றவர்கள் நீதிக்கட்சியினரே என்ற நல்லெண்ணத்தைத் தாழ்த்தப்பட்ட சமூகத்தினரிடையே அது தோற்றுவித்தது. இதனால், தாழ்த்தப்பட்ட சமூக மக்கள் பெரும் எண்ணிக்கையில் நீதிக் கட்சியில் சேர்வதற்கு, அவர்களின் தலைவர்களான எம். சி. இராசா, இரட்டமலை சீனிவாசன், என். சிவராஜ் ஆகியோரின் அயரா உழைப்புக் கட்சிக்குக் கிட்டியது.

நாடெங்கும் அங்கங்கே எட்டு மாவட்ட மாநாடுகளை ஒரே ஆண்டில் நடத்தி மக்களைத் தட்டி யெழுப்பியபின் 'முதல் மாநில நீதிக்கட்சி மாநாடு' 1917-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 28, 29 நாட்களில் சென்னை வெலிங்டன் தியேட்டரில் நடைபெற்றது. தலைவர்கள் அற்புதமான கருத்து விளக்கங்களை அளித்தார்கள்.

இவ்வாறு கட்சி வளர்ச்சி பெற்றுக் கொண்டிருந்த இனிய வேளையில் ஓர் அதிர்ச்சி தரத்தக்க நிகழ்ச்சி நடந்து விட்டது. இலண்டன் மாநகருக்கு முன்பே ஒருமுறை சென்று தென்னக மக்களின் தீராத் துயர்பற்றி எடுத்துக் கூறி அங்குள்ளவர்களின் அனுதாபத்தை ஈட்டிவந்த டாக்டர் டி.

எம். நாயர் மீண்டும் சர். ஏ. ராமசாமி முதலியாருடன் இலண்டன் சென்றார். சென்றவர் திரும்பவே இல்லை. 1919-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 17-ஆம் நாள் அங்கேயே உயிர் நீத்தார்; 'ஜஸ்டிஸ்' நாளேட்டின் ஆசிரியராக நாட்டு மக்களைக் கிளர்ந்தெழத் தூண்டிய எழுத்து மன்னராக விளங்கியவர் அவர். அவர் மறைவு கட்சிக்குப் பெரும் இழப்பாகிவிட்டது.

## தமிழகத்தின் முதல் அமைச்சரவை

பின்னர், மாண்டேகு—செம்ஸ் போர்டு சீர்திருத்தத்தின் விளைவாக 1920—நவம்பர் 20-ஆம் நாள் முதல் பொதுத் தேர்தல் நடந்தது. அதிலே கலந்து கொண்ட நீதிக்கட்சி பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றியது. அப்போது சென்னை மாநில கவர்னராக இருந்த வெலிங்டன் பிரபு முறைப்படி நீதிக்கட்சித் தலைவரான சர். பி. தியாகராயரை அமைச்சரவை அமைக்குமாறு கேட்டுக் கொண்டார். ஆனால் பதவிப் பித்துச் சிறிதும் இல்லாத 'வெள்ளுடை வேந்தர்' ஏ. சுப்பராயலு ரெட்டியாரை முதலமைச்சராகவும், பனகல் அரசரை இரண்டாவது அமைச்சராகவும், கே. வி. ரெட்டி நாயுடுவை மூன்றாவது அமைச்சராகவும் நியமித்தார்; சர். பி. இராஜகோபாலாச்சாரியார் சட்ட மன்றத் தலைவர் ஆக கவர்னரால் நியமிக்கப்பட்டார்.

இதுவே தமிழகம் கண்ட முதல் அமைச்சரவை.

## காங்கிரசாரின் காழ்ப்பு!

நீதிக்கட்சி இவ்வாறு அமைச்சரவை அமைக்கும் தகுதியை அடைந்துவிட்டமை காங்கிரசுக் கட்சியினருக்கு அறவே பிடிக்கவில்லை.

'நம்மை முந்திக்கொண்டு இந்த நீதிக்கட்சி மக்களின் ஆதரவைப் பெற்றுவிட்டதே! நடைமுறைக்கு ஒத்த திட்டங்களை அளித்து, ஆங்கிலேயரின் நம்பிக்கைக்கும் உரியதாகி விட்டதே! ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வாய்ப்பையும் அடைந்துவிட்டதே!' என்றெல்லாம் ஆத்திரமுற்றனர் காங்கிரசார்.

புகைச்சலுக்கும், பொருமைக்கும், கசப்புக்கும் காழ்ப்புக்கும் ஆட்பட்டுவிட்ட அவர்கள்,

'நீதிக்கட்சி, வெள்ளையனுக்கு நாட்டைக் காட்டிக் கொடுத்த கட்சி' என்று கூசாமல் ஏசினர்.

**வஞ்சகர் வாயில் அண்ணு**

இதில் வேடிக்கை என்னவென்றால், நீதிக்கட்சி முதல் அமைச்சரவை அமைத்த காலத்தில், அதைப்பற்றி அணுவும் அறியாமல் பள்ளிப் பையனுக இருந்த அண்ணுவையும் 'வஞ்சகர் பட்டியலில்' சேர்த்துச் சிலர் வஞ்சகமாகப் பேசுவதே!

ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதாலேயே நீதிக் கட்சி காட்டிக் கொடுத்த கட்சி ஆகிவிடுமா?

**அண்ணுவின் அரிய விளக்கம்**

இதைப்பற்றி அண்ணுவே மிக அழகான விளக்கந் தந்துள்ளார் :

"அன்றைய நீதிக் கட்சிக்கு இரண்டு மகத்தான பொறுப்புக்கள் இருந்தன.

"மக்களின் விருப்பத்தை ஈடேற்றும் வகையில் செயல் பட வேண்டிய பொறுப்பு ஒன்று ; இன்னென்று, ஆங்கிலேயரின் அதிகாரத்துடன் மோதிக்கொள்ளாமல், பெற வேண்டியவைகளைப் பெறுவது என்பது; அதாவது நீதிக் கட்சியின் தத்துவம்; ஆங்கிலேயரிடம் மோதல்களை ஏற்படுத்திக்கொள்ளாமல் 'பெறவேண்டிய பயன்களைப் பெற வேண்டியது' என்பதாகும்.

"முன்பெல்லாம் காங்கிரசுக் கட்சியின் அமைச்சர்களிடம் 'மத்திய அரசுடன் போரிட்டு உரிமைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்' என்று சொன்னபொழுது, 'மத்திய அரசிடம் மோதலை ஏற்படுத்திக்கொண்டு பெறும் பயன்களைவிட அவர்களுடன் இணைந்து நின்று பெறுவதுதான் அதிகமாகும்' என்றனர்.

"காங்கிரசு ஆட்சி மத்திய அரசிடம் கொண்டிருந்த அதே தத்துவத்தைத்தான் முன்பு நீதிக்கட்சி (ஆங்கிலேய

ரிடம்) கொண்டிருந்தது. அப்பொழுது, அந்தக் காலத்தி லிருந்த வசதிகளைப் பயன்படுத்திக்கொள்ளும் கட்சியாக நீதிக்கட்சி இருந்தது.''

நீதிக்கட்சியைக் காட்டிக்கொடுத்த கட்சியாகத் தூற்றும் அவசரக்காரர்கள் அண்ணுவின் பொருள் பொதிந்த வாக்கினை ஆழ்ந்து சிந்திக்கவேண்டும்.

## காட்டிக் கொடுத்த கட்சியா?

இணைந்து செயல்படும் தத்துவம் ஒருபுறம் இருக்க, வெள்ளைக்காரர்கள் கொணர்ந்த எல்லாத் திட்டங்களுக் குமே தலையை ஆட்டும் 'பெருமாள் மாடாக'வும் நீதிக்கட்சி இருந்ததில்லை. ஆங்கிலேயர் 'இரட்டை ஆட்சி' முறை யைப் புகுத்த முற்பட்டபோது அதற்கு எதிர்ப்புக் குரல் எழுப்பியிருக்கிறது நீதிக்கட்சி; 1927-லேயே 'முழு மாநில தன்னுட்சி உரிமை' (Full Autonomy for the State Government) வேண்டுமென்று வற்புறுத்தியதும் நீதிக் கட்சியே. பின்னர், 1938-இல் பெரியார் அக்கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றதும், அதுகாறும் 'குடியேற்ற நாட்டு நிலை' (Dominion Status)யை வற்புறுத்தி வந்த தன் அடிப் படைக் கொள்கையை மாற்றி, 'முழுத் தன்னுட்சி' (Full Independence) வேண்டும் என்று குரல் கொடுத்ததும் நீதிக் கட்சியே.

காங்கிரசுத் தலைவர்களான மோதிலால் நேரு, சி. ஆர். தாசு, கோகலே போன்றவர்கள், தொடக்கத்தில் வெள்ளைய ரோடு இணங்கிப்போய் ஆட்சிப் பொறுப்பில் பங்கு பெறுவது தவறன்று என்று வாதிக்கவில்லையா? அதற் காகவே 'சுயராச்சியக் கட்சி'யையும் தோற்றுவிக்க வில்லையா? தேர்தலிலும் ஈடுபடவில்லையா?

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தலைவர்களை இன்று யாரும் 'துரோகிகள்' பட்டியலில் சேர்க்கத் துணியமாட்டார்கள். ஏனெனில் நாட்டு நலனில், அந்நிய ஆதிக்கத்தை எதிர்ப் பதில் அவர்களுடைய பணி இம்மியளவுகூடப் போலித் தன்மை பூண்டது அன்று.

அவர்களைப் போன்றுதான் அன்றிருந்த நீதிக்கட்சியும் ஆங்கிலேயருடன் இணங்கிச் சென்றே, நாட்டு மக்களுக்குத் தேவையான உடனடி நன்மைகளைப் பெறுவதில் குறியாக இருந்தது. அக்காலத்தில் தமிழகத்தைப் பிடித்திருந்த சாதிபேதச் சழக்குகளும், பொருளாதார ஏற்றத் தாழ்வுகளும், தாழ்ந்து கிடந்த சமுதாய இழிநிலையுமே இதற்குக் காரணங்கள் ஆகும்.

## புரிந்த பொல்லாங்கு என்ன?

அப்படியாயின் நீதிக்கட்சி தவறே புரியவில்லையா என்றால் புரிந்திருக்கிறது. ஆனால் அந்தத் தவறு இதுதான்:— காங்கிரசுக் கட்சி 'முழு விடுதலை' பற்றிய கொள்கையைத் தானே முந்திக்கொண்டு அறிவித்து அதற்காக முனைந்து செயல்பட்டபோது, நீதிக்கட்சி காலந்தாழ்ந்தே அக்கொள்கையை ஏற்றுக்கொண்டது. அடுத்து, சட்டத்துக்குப் புறம்பாகவும் சென்று விடுதலை பெற காங்கிரசு வேலை செய்த போது நீதிக்கட்சியோ, சட்டத்துக்கு உட்பட்டே அதனைச் சாதிக்கலாம் என்று மெள்ள ஊர்ந்தது.

## போராட்டத் தயங்கவில்லை

அதே சமயம் வெள்ளையர்கள் நாட்டு நலனுக்குக் கேட்டை விளைவித்தபோதெல்லாம், அவர்களுக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்திப் பதவியைத் துறக்கவும் தயங்காமல் போராடியிருக்கிறார்கள் நீதிக்கட்சியினர். ஓர் அரிய நிகழ்ச்சியே போதும், அவர்களுடைய துணிவையும், தொண்டின் உயர்வையும் மெய்ப்பிக்க.

வெல்லிங்டன் பிரபு சென்னை மாநில ஆளுநராக (கவர்னராக) இருந்த காலத்தில்தான் நீதிக்கட்சியின் முதல் அமைச்சரவை முகிழ்த்தது. அச்சமயம் சென்னையில் மில் தொழிலாளர் வேலை நிறுத்தம் நீடித்து நடந்துகொண்டிருந்தது. அதன் விளைவாக ஏழைத் தொழிலாளர்கள் ஆறு பேர் இறந்துபட்டனர். இந்நிலையில் தொழிலாளர் இயக்கத்தை முளையிலேயே கிள்ளி எறிய முற்பட்டார் வெல்லிங்டன். தம் எண்ணத்தைச் செயற்படுத்த தொழிலாளர் தலைவர்க-

ளான திரு. வி. க., பி. பி. வாடியா, வி. சர்க்கரைச் செட்டியார், இ. எல். அய்யர், கோடம்பாக்கம் நடேச நாயக்கர் ஆகிய ஐவரையும் நாடு கடத்துமாறு ஓர் அவசர ஆணை பிறப்பித்தார்.

ஆளுநரின் அடாத செயல் கண்டு நாட்டு மக்கள் நலனையே மூச்சாகக் கொண்டிருந்த நீதிக்கட்சித் தலைவர் சர். பி. தியாகராயர் கொதித்தெழுந்தார். அவருடைய அறிவுரைப் படி அமைச்சரவை கூடி, "தலைவர்களை நாடு கடத்தும் ஆணையை கவர்னர் (ஆளுநர்) திரும்பப் பெற வேண்டும் என்றும், இல்லையேல் அமைச்சரவை பதவி விலகவேண்டும்' என்றும் முடிவு செய்தது.

உடனே ஆளுநரைச் சந்தித்து அவரிடம் அமைச்சர்களின் பதவி விலகல் கடிதத்தை அளித்தார் சர். பி. தியாகராயர். நாட்டில் அன்று நிலவிய பொதுமக்களின் எழுச்சியைப் புரிந்து கொண்டுவிட்ட வெல்லிங்டன் பிரபு ஆளுங் கட்சியைப் பகைத்துக்கொள்ள விரும்பவில்லை. எனவே தியாகராயரின் மிரட்டலுக்கு அடிபணிந்து, தொழிலாளர் தலைவர்களை நாடுகடத்தும் ஆணையைத் திரும்பப் பெற்றார்.

இதிலிருந்து நீதிக்கட்சி என்றுமே நீதிக்காகப் போராடியதே அன்றி மாற்றார் தூற்றுவதுபோல வெள்ளையரிடம் மண்டியிட்டுக் கிடக்கவில்லை என்பது தெரிகிறதல்லவா?

## இரண்டாவது அமைச்சரவை

1923-நவம்பரில் இரண்டாவது பொதுத் தேர்தல் நடந்தது. இதிலும் நீதிக்கட்சியே வென்றது. இந்த முறை பலருடைய வற்புறுத்தலுக்கிணங்க சர். பி. தியாகராயரே முதலமைச்சர் ஆனார். பனகல் அரசர் திவான்பகதூர் சிவஞானம் பிள்ளை, ஏ. பி. பாத்ரோ ஆகியோரைச் சேர்த்துக்கொண்டு இரண்டாவது அமைச்சரவை அமைத்தார். ஆனால் அவர் சில மாதங்களிலேயே காலமாகி விட்டதால் பேராசிரியர் திரு. எம். இரத்தினசாமி (தற்போது சுதந்திராக் கட்சித் தலைவர்களில் ஒருவர்) நியமிக்கப்பட்டார்.

### கலங்கரை விளக்கு அணைந்தது

இந்த இரண்டாவது அமைச்சரவை மிகச் சிறப்பான முறையில் பணியாற்றிக்கொண்டிருந்த வேளையில் நீதிக் கட்சியின் தலையில் மட்டுமின்றி, திராவிட இன மக்களின் தலையின் மீதே ஒரு பேரிடி விழுந்தது. ஆம்; துயரக் கடலில் நிலைதடுமாறித் தவித்த திராவிட இன (பார்ப்பனர் அல்லாத) மாந்தர்க்குத் திசைகாட்டும் கலங்கரை விளக்கமாய்த் திகழ்ந்த வெள்ளுடை வேந்தர் சர். பி. தியாகராயர் 1925-ஆம் ஆண்டு சூன் திங்கள் 29-ஆம் நாள் இயற்கை எய்தினார். நாடே கண்ணீர்க் கடலில் மூழ்கியது.

பின்னர் பனகல் அரசர் நீதிக்கட்சியின் தலைவர் ஆனார். இவர் முயற்சியால்தான் அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

### மூன்றாவது அமைச்சரவை

1926-ஆம் ஆண்டு நவம்பரில் மூன்றாவது பொதுத் தேர்தல் நடந்தது. இதில் நீதிக்கட்சி பெரும் எண்ணிக்கையில் இடங்களைப் பிடிக்க முடியவில்லை. அதே சமயம் நிறைந்த இடங்களைப்பெற்ற 'சுயராச்சியக்' கட்சியினர்—அமைச்சரவை அமைக்க முன்வரவில்லை. எனவே டாக்டர் சுப்பராயன் மூன்றாவது அமைச்சரவை அமைத்தார். இவருடைய அமைச்சரவையில் முதலில் என். ஆர். ஆரோக்கியசாமி முதலியாரும், ஏ. அரங்கநாத முதலியாரும் இடம் பெற்றிருந்தனர். சிறிது காலத்தில் அவர்கள் பதவியிலிருந்து விலகிவிடவே, எஸ். முத்தையா முதலியாரும் எம். ஆர். சேதுரத்தினம் அய்யரும் அமைச்சர்கள் ஆயினர்.

### வாராது வந்த மாமணி

இந்த மூன்றாவது அமைச்சரவை முழுக்க முழுக்க நீதிக்கட்சியின் ஆதரவைக்கொண்டே நடந்தது. அமைச்சர் எஸ். முத்தையா முதலியாரின் அரும்பெரும் முயற்சியால் 'வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை' சட்டமாக்கப் பெற்றது. வீழ்ச்சியுற்ற திராவிடரை எழுச்சிகொள்ள வைப்

பதற்காக ''வாராது வந்த மாமணி''யாகும் இந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை.

### தேய்பிறை வளர் பிறையாக!

1926 மூன்ருவது பொதுத் தேர்தலுக்குப் பின்னர் நீதிக்கட்சியின் செல்வாக்கு தேய் பிறையாகக் குறையத் தொடங்கிற்று. எனவே, கட்சியையும் கட்சி ஏடுகளேயும் வலிமைப்படுத்துவதில் தீவிரமான ஆர்வங் காட்டினர் தலைவர்கள்.

'ஜஸ்டிஸ்' ஏட்டின் ஆசிரியர் பொறுப்பை சர். ஏ. இராமசாமி முதலியார் ஏற்ருர். துணையாசிரியராகத் திரு. டி. ஏ. வி. நாதன் அமர்ந்தார். 'திராவிடன்' இதழ் ஆசிரியராக திரு. கனகசங்கர கண்ணப்பரும், துணையாசிரியராகப் புலவர் பு. செல்வராசும் அலுவல் மேற்கொண்டனர். இழந்த செல்வாக்கு மீண்டும் வருவதற்கான அறிகுறிகள் தென்பட்டன. 1927-ஆம் ஆண்டு பனகல் அரசர் தலைமையில் மதுரையில் மாநில மாநாடு கூடிப் புதிய திட்டங்களைத் தீட்டியது. அத்திட்டங்களைப் பொதுமக்களிடையே பரப்பும் ஆக்கப் பணியில், திருவாளர்கள் ஜே. என். இராமநாதன், டி. வி. சுப்பிரமணியன், பட்டுக்கோட்டை அழகிரிசாமி, சேலம் சித்தையன், டி. எம். பார்த்தசாரதி, எஸ். வி. லிங்கம், எஸ். எஸ். அருணகிரிநாதர், டாக்டர் சி. கணேசன், மாயவரம் நடராசன், சேலம் நடேசன் முதலாஞேர் முழு மூச்சுடன் ஈடுபட்டு உழைத்தனர்.

### பனகல் அரசர் மறைவு

1927 ஜூலைத் திங்களில் கோயம்புத்தூரில் நீதிக்கட்சியின் மாநாடு ஒன்று கூடியது.

நீதிக்கட்சியின் தனிப்பட்ட உறுப்பினர்கள், வளர்ந்து வரும் காங்கிரசுக் கட்சியினுள் பார்ப்பனர் ஆதிக்கம் மேலோங்காமல் இருக்கவும், திராவிட இன நலன் காப்பாற்றப்படவும், அக்கட்சியினுள் புகுந்து வேலை செய்யலாம் என்றும் இரட்டை ஆட்சிமுறை நீக்கப்படவேண்டும் என்றும், 'முழு மாநிலத் தன்னாட்சி உரிமை' (பூரண மாகாண

சுயாட்சி) தரப்பட வேண்டுமென்றும் பிரிட்டன் ஆட்சியாளரை வற்புறுத்தி மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

இந்நிலையில் நீதிக்கட்சிக்கு மீண்டும் ஒரு பேரிடி விழுந்தது. தியாகராயருக்குப் பின் அக்கட்சியின் தூணாக விளங்கிய பனகல் அரசர் 1928 டிசம்பர் 16-ஆம் நாள் இயற்கை எய்தினார்.

## நான்காவது அமைச்சரவை

1929 நவம்பரில் நடந்த பொதுத் தேர்தலில் நீதிக்கட்சி மீண்டும் வெற்றி பெற்றது.

சித்தூர் திவான்பகதூர் சி. முனுசாமி நாயுடு அவர்கள் நான்காவது அமைச்சரவை அமைத்தார். இதில் சர். பி. டி. இராசன் அவர்களும், திரு. குமாரசாமி செட்டியாரும் அமைச்சர்களாக இடம் பெற்றனர்.

## நீதிக் கட்சியில் பெரியார்

இக்காலத்தில்தான், காங்கிரசிலிருந்து வெளியேறி திராவிட இனத்தவரின் முன்னேற்றங் கருதி தன்மான இயக்கம் கண்ட ஈரோடு பெரியார் ஈ. வே. இராமசாமி அவர்கள் நீதிக்கட்சியுடன் சேர்ந்து பணியாற்ற முன் வந்தார். 'திராவிடன்' நாளேட்டின் பொறுப்பும் இவரிடம் ஒப்படைக்கப்பட்டது. (பெரியார் இயக்கம், தொண்டு பற்றிப் பின்னர் விரிவாகக் காண்போம்.)

## பொப்பிலி அரசர் ஆட்சி

1932-இல் நீதிக்கட்சியின் தலைவராகப் பொப்பிலி அரசர் தேர்ந்தெடுக்கப் பெற்றார். முதலமைச்சராக இருந்த சி. முனுசாமி நாயுடுமீது கட்சியில் நம்பிக்கையற்றுப் போனதால்தான் தஞ்சையில் நடந்த சிறப்பு மாநாட்டில் இந்தத் தேர்தல் நடந்தது. பின்னர், பொப்பிலி அரசர் முதலமைச்சர் பொறுப்பேற்றார். சைமன் குழுவின் அறிக்கை வெளிவரத் தாமதம் ஏற்பட்டதால் அவரது பதவிக்காலம் ஏழாண்டுகள் வரை நீடித்தது. அவருடைய அமைச்சரவையில், செட்டி

நாட்டரசர் சர். முத்தையாச் செட்டியார் அவர்களும், சர். ஏ. டி. பன்னீர்ச்செல்வம் அவர்களும் அமைச்சர்களாகப் பணியாற்றினர்.

## நீதிக் கட்சியில் அண்ணா

பொப்பிலி அரசர் ஆட்சிக் காலத்தில்தான், நீதிக் கட்சியுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டார் அண்ணா.

கல்லூரியில் பயின்றுகொண்டிருந்த காலத்திலேயே அக் கட்சியின் கொள்கைகளில் அண்ணாவுக்கு ஈடுபாடு ஏற்பட்டிருந்தது. முளையளவில் இருந்த அந்த ஈடுபாட்டைச் செடியளவு வளர்த்துவிட்ட பெருமை, நீதிக் கட்சியைச் சார்ந்த தொழிலாளர் தலைவர் திரு. சி. பாசுதேவ் அவர்களைச் சாரும். இதைப்பற்றி முன்பே குறிப்பிட்டுள்ளோம். மாணவப் பருவத்திலேயே தொழிலாளர் நெஞ்சங்களில் இடம் பிடித்துக்கொண்டுவிட்ட அண்ணாவின் பேச்சாற்றல் நீதிக்கட்சித் தலைவர்களின் கவனத்தை யெல்லாம் கவரத் தொடங்கியதில் வியப்பேதும் இல்லை.

1934-இல் 'எம். ஏ.' பட்டம் பெற்று வெளிவந்த பின் அண்ணாவை நீதிக்கட்சியினுள் இழுப்பதற்கு அப்போது 'ஜஸ்டிஸ்' ஆங்கில ஏட்டின் பொறுப்பாளராக இருந்த திரு. டி. ஏ. வி. நாதன் அவர்களும், 'சண்டே அப்சர்வர்' (Sunday Observer) ஆங்கில ஏட்டின் ஆசிரியர் திரு. பி. பால சுப்பிரமணியம் அவர்களும் மிகவும் முயன்றனர். அவர்கள் முயற்சி வீண் போகவில்லை. அண்ணா, நீதிக்கட்சியில் நேரடியான பங்கு ஏற்று உழைப்பதற்கு இசைந்தார்.

ஒரு வைரக்கல்லின் ஒளி வீச்சைப் பெறும் பேற்றினை நீதிக்கட்சி பெற்றது!

இதுவே அண்ணா பொதுவாழ்வில் ஈடுபடுவதற்கு முன்பிருந்த நீதிக்கட்சியின் வரலாறு ஆகும். இனி அவர் தன்மான இயக்கத்துடன் எங்ஙனம் தொடர்பு கொண்டார் என்பதைக் காண்போம்.

# 10. பொது வாழ்வின் நுழைவாயில்-II

## 2. தன்மான இயக்கம்

### பெருந் தலைவர் பெரியார்

சர். பி. தியாகராயருக்குப் பின்னர், திராவிட மக்களுக்கு இன உணர்ச்சியும், மொழிப் பற்றும், பகுத்தறிவுச் சிந்தனையும் ஊட்டி அவர்களைத் தட்டி யெழுப்பிய தனிப் பெருந் தலைவர், பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்களே.

1925-ஆம் ஆண்டு வரை காங்கிரசு இயக்கம் தமிழ் நாட்டில் தழைத்து ஓங்குவதற்கு அவர் அரும்பாடுபட்டு உழைத்தார். காந்தியடிகளின் நம்பிக்கைக்கும் நன்மதிப்புக்கும் உகந்தவராக அவர் விளங்கினார்; அவருடைய திட்டங்களைச் செயற்படுத்துவதில் தீவிரமாய்த் தொண்டாற்றினார். தீண்டாமை ஒழிப்பில் முன்னணியில் நின்று 'வைக்கம் வீரர்' என்னும் பட்டமும் பெற்றார். மதுவிலக்கு வெற்றியுறும் பொருட்டுக் கள்ளுக் கடைகளின் முன்னே மறியல் செய்திருக்கிறார். தம் தோட்டத்தில் நின்ற தென்னை மரங்களைக்கூட வெட்டி வீழ்த்தியுள்ளார்.

### காங்கிரசிடம் கசப்பு

இவ்வாறு உண்மைத் தொண்டராக உழைத்துக் காங்கிரசை வளர்த்துவந்த பெரியார் நாளடைவில் அக் கட்சியின்பால் கசப்புணர்ச்சி கொண்டார். காரணம், காந்தீயக் கொள்கைகளை வாயளவில் பேசிக்கொண்டு அதே சமயம் செயல் அளவில், சாதிப் பாகுபாடுகள் தழைக்கவும், திராவிட இனத்தவர்கள் தலையெடுக்காதவாறு தடுக்கவும் ஒரு சில தலைவர்கள் மேற்கொண்ட அறம் பிறழ்ந்த போக்கேயாகும்.

## 'குடியரசு' ஏடு

அத்தகைய சாதி வெறியாளர்களைத் திருத்தவும்,

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

—என்னும் வள்ளுவர் வாய்மொழியை நிலைநிறுத்தவும், சமூக—அரசியல்—பொருளாதாரம் முதலான அத்தனைத் துறைகளிலும் தாழ்வுற்று வறுமை மிஞ்சி நிற்கும் திராவிடர்களுக்கு எழுச்சியூட்டவும், ஓர் ஏடு இருத்தல் இன்றியமையாதது என்பதைப் பெரியார் உணர்ந்தார். தம் எண்ணத்தை நிறைவேற்ற 2-5-1925-இல் 'குடியரசு'—என்னும் பெயரில் ஒரு கிழமை இதழைத் தோற்றுவித்தார். சிறந்த தமிழறிஞரும், இன்றைய சொற்பொழிவுச் சிற்பிகளுக்கு முன்னோடியாய் விளங்கியவருமான திருப்பாதிரிப்புலியூர், சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரியார் என்னும் ஞானியார் சுவாமிகள் அவ்விதழின் முதல் வெளியீட்டைத் தொடங்கி வைத்தார்.

## பெரியாரின் இலட்சியம்

'குடியரசு'—ஏட்டின் முதல் இதழிலேயே அதன் நோக்கத்தைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார் பெரியார். அது வருமாறு:

> ஒவ்வொரு வகுப்பும் முன்னேற வேண்டும். இதை அறவே விடுத்து வெறும் 'தேசம்' 'தேசம்' என்று கூக்குரல் இடுவது எமது பத்திரிகையின் நோக்கம் அன்று.
>
> மக்களுக்குச் சுயமரியாதையும் சமத்துவமும் சகோதரத்துவமும் ஓங்கி வளரவேண்டும்.
>
> உயர்வு—தாழ்வு என்னும் உணர்ச்சியே நமது நாட்டில் வளர்ந்து வரும் சாதிச் சண்டை என்னும் நெருப்புக்கு நெய்யாய் இருப்பதால் இவ்வுணர்ச்சி ஒழிந்து அனைத்துயிரும் ஒன்றென்று எண்ணும் அறிவு வளரவேண்டும்.

இந்த அரிய நோக்கத்தை நிறைவேற்றுவதில்தான் அன்றிலிருந்து இன்றுவரை குறியாய் இருந்து வந்திருக்கிறார் பெரியார். ஜாதிப் பிணக்குகளைத் தரைமட்டம் ஆக்க

வேண்டும்; அந்த முயற்சி முழு வெற்றி அடைய வேண்டுமாயின், திராவிட இனத்தைச் சார்ந்த தாழ்த்தப்பட்ட—பிற்பட்ட—வகுப்பினர் அனைவரையும் உயர் சாதியினர் அளவுக்கு உயர்த்த வேண்டும்; இதற்குச் சட்டத்தின் வாயிலாகவே பிற்பட்ட மக்களுக்குச் சலுகைகள் கிடைக்க வழி செய்யவேண்டும். இதுவே பெரியாரின் தெளிவான கோட்பாடு; உயிருக்குயிரான இலட்சியம். இதற்காகவே இந்தத் தள்ளாத வயதிலும் அவர் பாடுபட்டவண்ணம் இருக்கிறார். சுருங்கச் சொன்னால் இங்கிலாந்தில் ஆன்மீக மூட நம்பிக்கைகளுக்கு மூடுகுழி தோண்டிப் பகுத்தறிவுப் பயிர் விளைவதற்குப் பாடுபட்ட சார்லஸ் பிராட்லாவுக்கு இணையானவர் பெரியார்.

## குருகுலத்தில் சாதிக் கொடுமை ?

அக்காலத்தில் வ. வே. சு. அய்யர் என்னும் பழுத்த காங்கிரசுக்காரர் சேர்மாதேவி என்னும் ஊரில் 'தமிழ் நாட்டு குருகுலம்' என்னும் ஓர் அமைப்பை நிறுவினார். அதன் வளர்ச்சிக்காகப் பெரியார் ஈ. வெ. ரா., திரு. வி. க., டாக்டர் பி. வரதராஜலு நாயுடு, கானாடுகாத்தான் வயி. சு. சண்முகம் செட்டியார் ஆகியோர் மிகவும் பாடுபட்டனர். காங்கிரசுக் கட்சியிலிருந்தும் அதற்கு நிதி கொடுக்க ஏற்பாடாயிற்று. இந்நிலையில் சாதி வேறுபாட்டை ஒழிப்பதைத் தலையாய குறிக்கோள்களில் ஒன்றாய்க் கொண்டிருந்த காங்கிரசுக் கட்சியைச் சார்ந்திருந்தும் தாமே ஒரு காங்கிரசுக் காரராக இருந்தும் வ. வே. சு. அய்யர், தாம் நடத்தி வரும் 'குருகுலத்தில்' சாதி வெறிக்கு இடமளிக்கிறார் என்னும் புகார் கிளம்பிற்று. ஆராய்ந்து பார்த்ததில் அது உண்மையென்றும் புலனாயிற்று. பார்ப்பனப் பிள்ளைகளுக்குத் தனி உணவு, தனி உடை, தனி உறைவிடம், தனித் தொழுகை. திராவிடப் பிள்ளைகளுக்குத் தனி உணவு, தனி உடை, தனி உறைவிடம், தனித் தொழுகை. வ. வே. சு. அய்யரின் இந்தப் போக்கைக் கண்டு மிகுந்த சீற்றங் கொண்டார் பெரியார். அத்தகைய குலவெறியைக் காங்கிரசுக் கட்சியிலிருந்து அறவே களைய வேண்டும் என்றும் கங்கணம் கட்டிக்கொண்டார். அதற்குரிய முயற்சிகளிலும் ஈடுபட்டார். அதில் திராவிடர் நலனுக்காகப் போர்க்கொடி உயர்த்திய அவருக்குத் துணை

யாக—தோளோடு தோள் நிற்க—காங்கிரசுக் கட்சிக்குள் இருந்த திராவிட இனத் தலைவர்களே துணிந்து முன்வர வில்லை; தூர விலகி நின்றார்கள். ஆயினும் பெரியார் அஞ்ச வில்லை. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ அடிப்படையில் திரா விட இனத்தவருக்குச் சலுகைகள் அளிக்க அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும் என்னும் கோரிக்கையைக் காங்கிரசு மாநாடுகளில் முழங்கத் தொடங்கினார்.

## நிறைவேறாத கோரிக்கை

தம்முடைய கோரிக்கைக்குத் தரமான வடிவந் தந்து நிறைவேற்ற 1920-இல் நடந்த திருநெல்வேலி காங்கிரசு மாநாட்டிலும், 1921-இல் தஞ்சாவூர்—மாநில மாநாட் டிலும், 1922-இல் திருப்பூர்—மாநில மாநாட்டிலும், 1923-இல் சேலம் மாநில மாநாட்டிலும், 1924-இல் திருவண்ணாமலை மாநாட்டிலும், தம்மாலான முயற்சிகளை யெல்லாம் மேற்கொண்டார். சாதாரணத் தொண்டர் களிடம் அவருடைய தீர்மானத்துக்குப் பெருத்த வரவேற்பு இருந்தது. ஆயினும் மேல் மட்டத்தில் இருந்த தலைவர்கள் குறுக்கிட்டு அவருடைய எண்ணம் ஈடேறாமலே செய்து வந்தனர். இதனால் மிகவும் மனஞ் சலிப்புற்றார் பெரியார்.

## காங்கிரசைக் கை கழுவினார்

இறுதியாக, 1925-நவம்பரில் காஞ்சிபுரத்தில் நடந்த காங்கிரசு மாநாட்டிலும் தம் தீர்மானத்தை நிறைவேற்ற முயன்றார். மாநாட்டுக்குத் தலைமை வகித்தவர் தமிழ்த் தென்றல், திரு. வி. க. அவர்களே. அவரே பெரியாரின் தீர்மானத்தைத் தள்ளுபடி செய்தார்.

இதனால் வெகுண்டெழுந்த பெரியார்,

"காங்கிரசால் பார்ப்பனர் அல்லாதார் (திராவிடர்கள்) நன்மை பெற முடியாது; காங்கிரசை ஒழித்துக் கட்டுவதே இனி என் வேலை"—என்று மாநாட்டிலேயே ஆத்திரத்துடன் அறைகூவல் விடுத்தார். பின்னர் மாநாட்டைவிட்டு வெளி யேறினார். அவரைப் பின்பற்றி ஒரு பெருங் கூட்டமே மாநாட்டை விட்டு வெளியேறிற்று.

அங்கேயே, அப்போதே காங்கிரசு மாநாட்டுக்கு எதிராகப் பெரியாரின் முயற்சியால் பார்ப்பனர் அல்லாத திராவிட மக்களின் மாநாடு ஒன்று கூட்டப்பெற்றது. கோவை, திரு. டி. ஏ. இராமலிங்கஞ் செட்டியார் அதற்குத் தலைமை தாங்கினார்.

## தன்மான இயக்கத் தோற்றம்

காங்கிரசுக் கட்சியைத் துறந்து வந்த பெரியார், ஒரு தனிப்பட்ட இன ஆதிக்கத்தை அரசியலில் ஒழித்தால் மட்டும் போதாது என்றும், சமூக அளவிலும் ஒழிக்கவேண்டும் என்றும் எண்ணினார். அதற்கேற்ற திட்டங்களை வகுத்து தம்முடைய 'குடியரசு' இதழில் கட்டுரைகள் வரைந்தார்.

பின்னர் 1926-இல் பெரியார் 'சுயமரியாதை இயக்கம்' என்னும் பெயரிய தன்மான இயக்கத்தைத் தோற்றுவித்தார்.

தன்மான இயக்கத்தின் கொள்கைகளைப் பரப்புவதில், பட்டுக்கோட்டை அழகிரிசாமி, மாயவரம் நடராசன், நாகை —காளியப்பன், எஸ். வி. லிங்கம், புதுக்கோட்டை—முத்துசாமி வல்லத்தரசு, சாமி சிதம்பரனார், என். தண்டபாணிப் பிள்ளை, டி. எம். பார்த்தசாரதி, சேலம் சித்தையன், புலவர் பு. செல்வராசு, சி. கணேசன், கே. எம். பாலசுப்பிரமணியம், ப. சீவானந்தம், தங்கராசு, அய்யாக்கண்ணு மேஸ்திரி, எஸ். இராமநாதன், அ. பொன்னம்பலனார், எஸ். குருசாமி முதலானோர் தீவிரமாய் ஈடுபட்டனர்.

## நீதிக் கட்சியிடம் நேசக் கரம்

பெரியாரும் அவருடைய தொண்டர்களும் இவ்வாறு தன்மான இயக்கக் கருத்து விதைகளை நாடெங்கும் தூவிக் கொண்டிருந்த வேளையில்தான், நீதிக் கட்சியின் முழு ஆதரவுடன் டாக்டர் சுப்பராயனின் அமைச்சரவை ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்திருந்தது. அதில், எஸ். முத்தையா முதலியார் அவர்களும் அமைச்சராக இடம் பெற்றிருந்தார். அவருடைய இடையறு முயற்சியின் பயனாக வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உரிமைக்கான சட்டம் நிறைவேற்றப்பட்டதை முன்பே கண்டோம்.

தாம் எந்த 'வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ' உரிமைக்காகப் போராடிக் காங்கிரசை விட்டு வெளியேறினாரோ அதே உரிமைக்காக, நீதிக் கட்சியின் ஆதரவில் இயங்கிய டாக்டர் சுப்பராயன் அமைச்சரவை குறிப்பாக திரு. எஸ். முத்தையா முதலியார்—சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றியது. பெரியாரின் இதயத்திலே இன்பப் பாலே வார்த்தது. நன்றிப் பெருக்கோடு அவர் நீதிக்கட்சியை நோக்கினார்; தம் நேசக் கரத்தை நீட்டினார். அவரைப் போன்ற தன்னலமற்ற தலைவர்களின் ஆதரவு நீதிக்கட்சிக்கும் அப்போது மிகத் தேவையாக இருந்தது.

## அண்ணாவைக் கவர்ந்த தன்மானக் கொள்கை

பெரியார், தன்மான இயக்கத்தைத் தோற்றுவித்த பொழுது அண்ணாவின் நிலை என்ன?

அவர் அப்போது காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் பயின்று கொண்டிருந்தார். பதினாறே வயதான இளைஞர் எனினும் தமிழக அரசியல் காற்று தம்மை மெல்ல வருடிச் செல்லும் பேற்றினைப் பெற்றிருந்தார். ஏனெனில், 1925-ஆம் ஆண்டு மாநிலக் காங்கிரசு மாநாடு அவர் பிறந்த காஞ்சி மண்ணில்தான் நிகழ்ந்தது. அந்த மாநாட்டில்தான் திராவிடர் நலன்களைக் காக்க பெரியார் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உரிமை கோரித் தீர்மானம் கொண்டுவர முயன்றார். அதில் தோல்வியுற்ற அவர், காங்கிரசைவிட்டு வெளியேறியதும் அதே காஞ்சி மண்ணில்தான்; உடனே பார்ப்பனர்—அல்லாதார் மாநாட்டைக் கூட்டியதும் அதே காஞ்சி மண்ணில்தான்.

எனவே, பார்ப்பனீயம்—பார்ப்பனர் அல்லாதார் பற்றிய அரசியல் கொந்தளிப்புகள் அண்ணாவின் செவியில் விழாமல் இருக்க இடமே இல்லை; அவரும் அவற்றைக் கூர்ந்து கவனிக்கலானார்.

அண்ணா, உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டு வெளியே வரும்பொழுதெல்லாம் பெரியாரின் தன்மான இயக்கக் கருத்துக்கள் தமிழகம் எங்கும் எதிரொலி எழுப்பின; விழிப்பினை அளித்தன. திராவிட இன மாந்தர்க்குப் புதிய முறுக்கினையே கொடுத்தன!

அறிவுக்குப் பொருந்தாத சமயக் கோட்பாடுகளும், ஆற்றலைக் குலைக்கும் மூடநம்பிக்கைகளும் இந்த நாட்டை விட்டு ஒழிந்தால் அன்றி, திராவிட மக்கள் புத்துயிர் பெற வழியே இல்லை என்று உணர்ந்து தெளிந்து அதற்கு ஏற்ற வாறு, பணியாற்ற முற்பட்டிருந்த பெரியார், "பகுத்தறிவுப் பகலவனு"கவே அண்ணுவின் கண்களுக்குப் பட்டார். அந்தச் சிந்தனைச் சிற்பியின் அடிச்சுவட்டில் நடை பயிலவேண்டும் என்னும் ஆர்வத்தின் விதை, அப்பொழுதே அண்ணுவின் இதயப் புலத்தில் பதியத் தொடங்கிவிட்டது.

சென்னை பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்த பிறகோ, தன்மான இயக்கப் பற்றுதல் மேன்மேலும் தழைத்துக் கிளைப்பதற்குரிய வாய்ப்புகள் அண்ணுவுக்குத் தொடர்ந்து ஏற்படலாயின.

செங்கற்பட்டில் 1929-இல் முதலாவது தன்மான இயக்க மாநாடு நடந்ததல்லவா? அதன் எதிரொலியாகச் சென்னை மாநகரில் கொள்கைகளைப் பரப்ப வேண்டும் என்னும் உணர்ச்சி சில இளைஞரிடையே கொழுந்து விட்டெரிந்தது. திருவாளர்கள். சி. கணேசன், சிவஞானம், புலவர் செல்வராசு, அரங்கநாதம், முத்து, பிரகாசம் முதலானோர், அவ்விளைஞர்களுள் குறிப்பிடத்தக்கோர் ஆவர். அவர்கள் யாவரும் கூடி 'சுயமரியாதை இளைஞர் மன்றம்' என்னும் ஓர் அமைப்பினை நிறுவினர்; இதன் வாயிலாக விவாத அரங்குகள் நடத்தி மக்களுக்குக் கொள்கை விளக்கம் அளிக்கும் சீரிய பணியினைச் சிறப்புற ஆற்றினர்.

அப்போது பச்சையப்பன் கல்லூரியில் பயின்று கொண்டிருந்த அண்ணு தம் கல்வி வளர்ச்சியை முன்னிட்டுத் தன்மான இயக்கத்தில் நேர்முகமாகப் பங்குபெற இயல வில்லை. எனினும், சென்னையில் 'சுயமரியாதை இளைஞர் மன்றத்தினர்' ஏற்பாடு செய்த விவாத அரங்குகளில் அடிக்கடி கலந்து கொண்டார்; அதன் மூலம் இயக்கக் கருத்துக்களில் தெளிவு கண்டார்.

### சாக்ரட்டீஸ்—பிளேட்டோ சந்திப்பு!

இவ்வாருகத் தன்மான இயக்கக் கருத்துக்கள் தம் நெஞ்சிலே ஆழ வேர்விடுவதற்கு இடமளித்துவிட்ட அண்ணு

அந்த இயக்கத்தின் தந்தையை எங்கே எப்பொழுது சந்தித் தார் தெரியுமா ?

திருப்பூரில் நடைபெற்ற 'செங்குந்தர் இளைஞர் மாநாட் டில்'தான் அண்ணா முதன் முதலில் நேர்முகமாகப் பெரி யாரைச் சந்தித்தார் ; தம் தலைவராகவும் அவரை ஏற்றுக் கொண்டார். இச் சந்திப்பு பற்றி அண்ணாவே என்ன கூறு கிறார் தெரியுமா ?

"......எனக்கு அவரோடு தொடர்பு ஏற்பட்டது 1935-ஆம் ஆண்டில்தான். அப்போது நான் பி. ஏ. (ஆனர்சு) பரீட்சை எழுதியிருக்கிறேன். பரீட்சை முடிவு தெரியாத நேரம் அது. அப்போது கோவைக்கடுத்த திருப்பூரில் ஒரு வாலிபர் மாநாடு நடந்தது. அங்குதான் பெரியாரும் நானும் முதன் முதலில் சந்தித்தது. எனக்குப் பற்றும் பாசமும் ஏற்பட்டது. அவருடைய சீர்திருத்தக் கருத்துக்கள் எனக்குப் பெரிதும் பிடித்தன. பெரியார் என்னைப் பார்த்து 'என்ன செய்கிறாய் ?' என்று கேட்டார். 'படிக்கிறேன்; பரீட்சை எழுதியிருக்கிறேன்' என்றேன். 'உத்தியோகம் பார்க்கப் போகிறாயா ?' என்றார். 'இல்லை; உத்தியோகம் பார்க்க விருப்பம் இல்லை.' 'பொது வாழ்வில் ஈடுபட விருப்பம்' என்று பதில் அளித்தேன். அன்று முதல் அவர் எனது தலைவர் ஆனார். நான் அவருக்குச் சுவீகாரப் புத்திரனாகிவிட்டேன், பொது வாழ்வில் !"

இந்தச் சந்திப்பின் மூலம்,

நேருவை இனங்கண்டு ஏற்றுக்கொண்ட காந்தியடிகள் ஆனார் பெரியார் !

விவேகானந்தரை இனங்கண்டு ஏற்றுக்கொண்ட இராமகிருட்டினர் ஆனார் பெரியார் !

இவர்கள் யாவரையும் விட,

பிளேட்டோவை இனங்கண்டு ஏற்றுக்கொண்ட சாக் ரட்டீஸ் ஆனார் பெரியார் !

சாக்ரட்டீசை இனங்கண்டு குருவாய்ப் பணிந்த பிளேட்டோ ஆனார் அண்ணா !

"—என் பொதுவாழ்வில் நான் ஏற்றுக்கொண்ட ஒரே தலைவர் பெரியார்!"

—என்று தம் ஒப்பற்ற தலைவரைப்பற்றி அண்ணாவே கூறியுள்ள சொற்கள் எண்ணி மகிழற்பாலன.

# 11. முதல் தேர்தல்

விடிவெள்ளி !

"இந்த நாட்டை ஆள்வதற்குத் தேவையானது 'வேட்டு முறை' அல்ல; 'ஓட்டு முறை'!"—என்று அடிக்கடி முழங்கியுள்ளார் அண்ணா.

வன்முறைச் 'சர்வாதிகார ஆட்சி'யில் தமக்குள்ள வெறுப்பை வெளிப்படுத்தவும் மக்களாட்சி நெறியில் தமக்குள்ள விருப்பை, பிடிப்பை, நம்பிக்கையை உணர்த்தவுமே அவர் இவ்வாறு முழங்கி வந்துள்ளார்.

இதே முழக்கம், ஒரு நூற்றூண்டுக்கு முன்னர் அமெரிக்க நாட்டிலும் எதிரொலி எழுப்பிற்று. அவ்வாறு முழக்கமிட்டவர் யார் தெரியுமா?

"அது ஓர் அழகான கை; வன்மையும், உறுதியும், மென்மையும் பொருந்திய கை. நாள்தோறும் நான் அதைப் பார்ப்பேன். எனக்கு அது வலுவூட்டுகின்றது......" என்று தமக்கு எதிரே மேசையை அணி செய்யும் பித்தளையால் ஆன ஓர் அழகான வலக்கரம் பற்றிக் காலஞ் சென்ற நேரு அவர்கள் பெருமிதத்துடன் கூறுவாராம்.

அந்தக் கரத்துக்குரிய ஆண்மை மிக்க அரசியல் அறிஞர் ஆப்ரகாம் லிங்கன் அவர்களே. நாம் மேலே குறித்தவாறு வாக்குச் சீட்டின் வலிமைபற்றி அமெரிக்க நாட்டில் முழங்கியவர்.

அவரது வாழ்க்கை, வீழ்ச்சிப் பள்ளத்தில் விழுந்தவர்க்கெல்லாம் நம்பிக்கையூட்டும் விடிவெள்ளி ! தோல்விக் கணையால் துவண்டோர்க்கெல்லாம் துணிவைக் கொடுக்கும் துருவத் தாரகை !

அவர் சந்திக்காத தோல்வி இல்லை; தழுவாத வெற்றியும் இல்லை ! அவர் எய்தாத இன்னல் இல்லை; கொய்யாத இன்பமும் இல்லை ! அவர் வடிக்காத கண்ணீர் இல்லை; பிடிக்காத கோட்டையும் இல்லை ! அமெரிக்கக் குடியரசுத் தலைவர்

உறையும் 'வெள்ளை மாளிகை' (White House)யை விட மாட்சிமை மிக்க ஒரு 'கோட்டை' இந்த மன்பதையில் இன்று உண்டோ ?

## ஆப்பிரகாம் லிங்கனைப்பற்றி அண்ணு

அத்தகைய மாமனிதர் ஆப்பிரகாம் லிங்கனிடம் அண்ணுவுக்கு அளவற்ற மதிப்பு உண்டு. மக்களாட்சி மாண்பு பற்றி விளக்க முற்படும் பொழுதெல்லாம் அண்ணு அவருடைய பொன்னுரைகளை மேற்கோள் காட்டிப் பேசியிருக்கிருர்; எழுதியிருக்கிருர்.

அண்மையில் (22—3—67)-இல் சென்னை, இராயப் பேட்டை ஒய். எம். சி. ஏ. திடலில் நடைபெற்ற 'செமினி விண்வெளிக் கப்பல்' கண்காட்சியைத் திறந்து வைத்து, அமெரிக்கத் துணைத் தூதர், திரு. டாக்டர் ஆல்பர்ட் டி. பிராங்ளின் அவர்களை நோக்கி, ஆப்பிரகாம் லிங்களை நினைவு கூர்ந்து அண்ணு ஆற்றிய உரைகள் எண்ணி மகிழத்தக்கன.

"உங்கள் ஆப்பிரகாம் லிங்கனைப் பற்றி அமெரிக்க மக்கள் மதிப்பதைவிட, ஒரு துளியும் குறையாத மதிப்பை இந்திய மக்களும் கொண்டிருக்கிருர்கள். அமெரிக்காவை வளமடையச் செய்ய உங்கள் குடியரசுத் தலைவர்கள் தொடர்ந்து மேற்கொண்ட முயற்சிகள் எங்களுக்குப் பாடங்கள்—அமெரிக்க சனநாயகத்தின் (மக்களாட்சி முறையின்) வழிமுறைகளை அறிந்து பேணிக் காக்க நாங்கள் மிகவும் விரும்புகிருேம்.

'Government of the people for the people and by the people' (மக்களுக்காக மக்களால் ஆன மக்களின் ஆட்சி)—என்பன போன்ற (ஆப்பிரகாம் லிங்கன்) இலட்சிய வரிகள் எங்களுக்குப் பாடம்!"

—என்று அண்ணு பகர்ந்துள்ள வார்த்தைகள் லிங்கனிடம் அவருக்குள்ள பெரு மதிப்பையே காட்டுகின்றன. இந்தப் புகழ் மாலை மட்டுமா ?

"இப்போது நீக்ரோ அடிமை அல்ல ! சந்தைச் சதுக்கத்திலே அவனைக் கட்டி வைத்து அடிக்க, சட்டம் இடம் கொடுப்பதில்லை. இப்போது அவன் அங்காடிப் பொருள் அல்ல, ஆப்பிரகாம் லிங்கன் அடிமை முறையை ஒழித்ததால்!"

—என்று தம்முடைய 'காஞ்சி' ஏட்டிலே தீட்டிப் போற்றியுள்ளார் அண்ணா.

## அறிஞர்களின் அற்புத ஒற்றுமை

1809–ஆம் ஆண்டில் பிறந்தவர் ஆப்பிரகாம் லிங்கன். சரியாக ஒரு நூற்றாண்டு கழித்து 1909–இல் பிறந்தவர் அண்ணா.

"துப்பாக்கி வேட்டைவிட ஓட்டுச் சீட்டுத்தான் வலிமையானது."

—என்று முழங்கிய ஆப்பிரகாம் லிங்கனுக்கும், அதே பொருள் பொதிந்த கருத்தைத் தமிழகத்தில் பரப்பும் அண்ணாவுக்கும் விந்தையான சில ஒற்றுமைகள் உள்ளன.

லிங்கன் ஏழைக் குடிசையில் பிறந்தவர்; அண்ணாவும் எளிய குடும்பத்தில் பிறந்தவர்!

லிங்கன் இரவு முழுதும் புத்தகங்களை விழுந்து விழுந்து படிப்பவர்; அண்ணாவும் விடிய விடியப் புத்தகங்களில் புதைந்து கிடப்பதில் புலி!

ஐம்பது மைல் சுற்றுவட்டத்தில் அவர் படிக்காத புத்தகங்களே இல்லை என்று பெருமை பெற்றவர் லிங்கன்; மிகப் பெரிய பல்லாயிரக் கணக்கான நூல்களைக் கொண்ட 'கன்னிமாரா' நூலகத்தையே கரைத்துக் குடித்தவர் என்று பெயர் பெற்றவர் அண்ணா.

ஆடம்பரம் என்பது துளியும் இல்லாதவர் லிங்கன்; அதே ஆடம்பரமற்ற முறையில் அடக்கத்தின் சின்னமாய்த் திகழ்பவர் அண்ணா.

சினம் என்பதே சிறிதும் தீண்டாதவர் லிங்கன்; 'ஆத்திரம் வந்து பார்த்ததே இல்லை' என்று தம் மனைவி முதல் கட்சித் தொண்டர் வரை பாராட்டும் அளவுக்குப் பொறுமைக் கடலாய் விளங்குபவர் அண்ணா.

நகைச்சுவை சொட்டப் பேசி எதிரிகளின் வாயை அடக்குவதில் வல்லவர் லிங்கன்; அதே நகைச்சுவை மணம் வீச மாற்றுக் கட்சியினரும் போற்றும் அளவுக்கு மேடைப் பேச்சுக்கே இலக்கணம் வகுத்தவர் அண்ணா.

ஊராருடன் எப்போதும் நன்கு பழகுபவர் லிங்கன்; தனிமையை விரும்பாமல் எப்பொழுதுமே தம்மைச் சுற்றி

னும் நண்பர் குழாம் சூழ்ந்திருக்க உரையாடிக் களிப்பவர் அண்ணா.

ஒடுக்கப்பட்ட நீக்ரோ இன மக்களின் விடுதலைக்குப் பாடுபட்டவர் லிங்கன்; தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட இன மக்களின் எழுச்சிக்காக உரக்கக் குரல் கொடுத்தவர் அண்ணா.

எல்லாவற்றுக்கும் மேலாக,

இருவருமே, மக்களாட்சி மரத்தின் ஆணி வேரான வாக்குச் சீட்டின் வலிமையில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்கள்.

ஆனால் அதே வாக்குச் சீட்டைத் தாங்கள் முதன் முதலில் கலந்து கொண்ட தேர்தலில் தாங்கள் இருவரும் பெற வேண்டிய அளவு பெற முடியாமல் தோற்றவர்கள்!

முதன் முதல், இல்லியனாஸ் மாநிலச் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்ட லிங்கன் வெற்றியைத் தழுவ முடியவில்லை.

முதன் முதல் சென்னை மாநகராட்சிக்குப் பெத்து நாயக்கன் பேட்டையில் போட்டியிட்ட அண்ணாவும் வெற்றியை அணைக்க முடியவில்லை.

இந்த விந்தையான ஒற்றுமையை என்னவென்று இயம்புவது!

## நீதிக்கட்சியின் நிலை

1935-ஆம் ஆண்டில்தான் அண்ணா முதன் முதலில் தேர்தல் களத்தில் குதித்தார்.

கல்லூரியைவிட்டு வெளிவந்திருந்த அவர் நெஞ்சைக் கவர்ந்திருந்தவை நீதிக் கட்சியின் கொள்கைகளாகும். தொழிலாளர் தோழர் சி. பாசுதேவ், 'ஜஸ்டிஸ்' ஏட்டின் துணையாசிரியர் திரு. டி. ஏ. வி. நாதன், 'சண்டே அப் சர்வர்' ஆசிரியர் திரு. பி. பாலசுப்பிரமணியம் ஆகியோருடைய தொடர்பும் நீதிக் கட்சியின்பால் அவருக்கிருந்த பிடிப்பை வலுப்படுத்திய வண்ணம் இருந்ததை முன்பே கண்டோம்.

அன்று நீதிக்கட்சியின் நிலை என்ன?

1916-ல் 'தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்'—என்னும் பெயரில் திராவிட இன மக்களுக்கு (பார்ப்பனர் அல்லா

தாருக்கு) என்றே தோற்றுவிக்கப் பெற்ற நீதிக்கட்சி (Justice Party), ஏறத்தாழ இருபதாண்டுக்கால அரசியல் ஆக்கப் பணிகளுக்குப் பின்னர், பழைய பொலிவையும், வலிவையும் இழந்து வரப்போகும் தோல்விச் சாக்காட்டின் சவக்களையோடு, தொய்ந்து நைந்து கரைந்த வண்ணம் இருந்த காலம் அது. ஏழை—எளிய திராவிடர் முன்னேற் றங் கருதி 'வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறை'க்கே வழி வகுத்த அக்கட்சியில் பட்டாடைக்காரர்களும், பதவிப் பித்தர்களும் மலிந்து விட்டார்கள். ஆணவப் போக்கும், அதிகாரச் செருக்கும் ஆங்கில அரசாங்கம் அளித்த சிறப்புப் பட்டங்கள் தந்த வீண் பெருமையும் கொண்ட அவர்கள் பொதுமக்களை விட்டு வெகுதூரம் விலகிப் போய்விட் டார்கள்.

அத்தகைய மனவளங் குன்றிய அவர்கள், ஏழைக் குடும்பத்தில் பிறந்து, எளிய ஆடையே உடுத்தி 'எம். ஏ.' பட்டம் பெற்றிருந்தும்கூட அந்தக் கல்வித் தரத்தைக் காட்டும் செருக்குச் சிறிதும் இன்றி, ஒரு கூட்டத்தில் சிக்கி விட்டால் கண்டுபிடிப்பது கடினம் என்று கூறும் அளவுக்குக் குட்டையான வடிவங் கொண்ட அண்ணாமீது, அசட்டை யான—அலட்சியமான...பார்வையை வீசியதில் வியப்பேதும் இல்லை. அதுமட்டுமா? தமக்கு இணையான செல்வச் செழிப்பு இல்லாத அவரை நீதிக் கட்சியின் சார்பாகத் தேர்தலில் நிறுத்தவும் அவர்கள் தயங்கினர், தடுத்தனர். 'அவருக்கு என்ன தகுதி இருக்கிறது?" என்று கேள்விக் கணையும் தொடுத்தனர். அவர்கள் குறிப்பிட்ட தகுதி, பணத்தால் அளக்கப்பட்டு வருவதேயன்றி வேறு அன்று. அண்ணா பெற்றிருந்த 'கலைத்தலைவன்' எனப்படும் 'எம். ஏ.' பட்டமோ எதிரே இருப்போர் இதயங் குளிர இனிக்க இனிக்கப் பேசும் அவர் சொல்லாற்றலோ, தொழிலாளர் உட்பட பல்லாயிரக்கணக்கான பொதுமக்களிடம் அவர் பெறத் தொடங்கியிருந்த செல்வாக்கோ, 'மாடிவாழ் மனிதர்'களுக்குத் தகுதியாகப் படவில்லை. எனவேதான் சென்னை மாநகராட்சித் தேர்தலில் அண்ணா நீதிக்கட்சியின் சார்பில் நிற்பதை அவர்கள் எதிர்த்தனர்.

## புதர் நடுவே பூ !

புதர்களின் நடுவே அழகான பூ ஒன்று பூத்தமர்திரி அந்த ஆணவக்காரர்களின் நடுவே ஒரு நல்ல உள்ளமும் இருக்கத்தான் இருந்தது. அந்த உள்ளத்துக்குரிய பெரு மனிதர் யார் தெரியுமா?

செட்டி நாட்டு இளவரசர் சர். திரு. எம். ஏ. முத்தையாச் செட்டியார் அவர்களே?

திரு. முத்தையாச் செட்டியார் அவர்களைப்பற்றி நாம் முன்பே குறிப்பிட்டுள்ளோம்.

அவர் வணிகர் குலத்தில் பிறந்தவர்; ஆனால், வாழ்க்கைப் போக்கில் 'வணிகத் தன்மைக்'கு ஒரு வரம்பு கட்டித் தம்முள் 'மனித உணர்வு' (Humanitarian Sense) மலரச் செய்தவர். பஞ்சணையில் படுத்துப் புரளும் பேறு பெற்ற நிலையிலும் பஞ்சம்—பசியால் நலிந்தோர்க்காகப் பரிந்து பேசுகின்றவர்; தாய் மொழியாம் தமிழுக்கு ஊறு ஏற்படப் போகிறது என்று உணர்ந்ததும் இந்தித் திணிப்பை எதிர்த்துச் சென்னை மாநகரிலே தெருத் தெருவாகக் கொடி தூக்கிக்கொண்டு முழக்கமிட்டவர். வடக்கே பணச்செழிப்பு மிகுந்து, இளவரசர்களோடு படித்த நேரு, நாட்டு விடுதலைக்காக நடுத்தெருவுக்கு வந்தார்; தெற்கே, அதே பணச் செழிப்பு பூண்டு செட்டி நாட்டின் இளவரசராகவே பட்டங் கொண்ட திரு. முத்தையாச் செட்டியார், செந்தமிழைக் காக்கத் தெருத் தெருவாய் அலைந்தார்.

## எதிர்கால அரசரை ஆதரித்த இளவரசர்

பொதுமக்களில் ஒருவராகவே தம்மைக் கருதி உழைத்த அந்த இளவரசருக்குப் பொதுமக்களின் அரசராகவே—தலைவராகவே—உருவாகிக் கொண்டிருந்த அண்ணாவின் ஆற்றலைப் பற்றி அப்போதே நன்கு எடை போட முடிந்திருக்கிறது. எனவேதான், நீதிக்கட்சியிலிருந்த மற்றப் பெரும் புள்ளிகள் பணக்குறையை ஒரு காரணமாகக் காட்டி அண்ணா தேர்தலில் நிற்பதற்குக் குத்துக் கல்லாய் வழி மறித்த போது, 'அண்ணாதுரையின் ஆற்றலை நாம் குறைத்து மதிப்பிடக் கூடாது...அவர் தேர்தலில் நிற்பதற்குப் பணம் இல்லாததுதான் ஒரு தடை என்றால் அவருக்குப் போதுமான

பணத்தைக் கொடுத்து—நம்மைப் போல அவரையும் பணக்காரர் ஆக்கி—அந்தத் தடையை தகர்க்கவும் நான் தயாராக இருக்கிறேன்...'—என்று அறைகூவல் விடுத்தவர் திரு. முத்தையாச் செட்டியார். அவருடைய ஆணித்தரமான வாதத்தின் முன்னே மற்றவர்களின் விதண்டாவாதம் வேர் அறுந்த செடியாக விழுந்தது.

முடிவில்,

அண்ணு, தம்முடைய முதல் தேர்தல் களத்தில் குதித்தார்; சென்னையிலுள்ள பெத்துநாய்க்கன் பேட்டையே அவர் மாநகராட்சி உறுப்பினர் தேர்தலில் போட்டியிட்ட தொகுதி.

## காங்கிரசு கட்டிய கச்சை

அப்போது காந்தியடிகளின் தலைமையில் காங்கிரசுக் கட்சி மிக விரைந்து வளர்ந்து கொண்டிருந்தது. தமிழ்த் தென்றல் திரு. வி. கலியாணசுந்தரனுர், டாக்டர் பி. வரதராசலு நாயுடு, அரசியல் அறிஞர் சி. இராசகோபாலாச்சாரியார், திரு. சத்தியமூர்த்தி முதலான பெருந்தலைவர்களால் தமிழகத்திலும் அக்கட்சி தழைத்துப் படர்ந்த வண்ணம் இருந்தது.

அக்கட்சியின் சார்பில் திரு. மா. சுப்பிரமணியம் என்பவர் அண்ணுவை எதிர்த்துப் போட்டியிட்டார். இருவருக்கும் இடையே கடுமையாக இருந்தது போட்டி.

காங்கிரசு வேட்பாளருக்காக, அன்று ஆங்கில ஆட்சியாளரைத் தம் பேச்சு வன்மையால் அதிரவைத்துக் கொண்டிருந்த திரு. சத்தியமூர்த்தியே வேலை செய்தார். மேடையிலே தமிழ்மொழியாகிய தென்றலைத் தவழவிட்டுப் படித்த புலவர்களை மட்டுமின்றிப் படிக்காத பாமரரையும் தேசீய இயக்கத்தின்பால் திரண்டு வருமாறு செய்த திரு. வி. க.வும் காங்கிரசு வேட்பாளரை ஆதரித்து வேலை செய்தார். சீனிவாசராவ், வி. சி. கோபாலரத்தினம் போன்ற தலைவர்களும் அண்ணுவை எதிர்த்து வேலைகள் செய்தனர்.

## மாற்றுரை மருளவைத்தவர்

அவர்கள் அத்தனை பேர்களின் எதிர்ப்புக்கும் ஈடுகொடுத்துச் சளைக்காமல் தேர்தல் பணியினை மேற்கொண்டார்

இளைஞர் அண்ணா. துடிப்பு மிகுந்த அவர் சில காங்கிரசுத் தலைவர்களுக்கு அறைகூவல் விடுத்து அவர்களைத் திக்குமுக் காடச் செய்ததும் உண்டு.

இப்படித்தான் அண்ணா ஒருமுறை தாழ்த்தப்பட்ட மக்கள் நிறைந்த ஒரு கூட்டத்தில் அடியிற் கண்டவாறு ஓர் அறைகூவல் விடுத்தார்:

''அன்புள்ள தோழர்களே! உங்களையெல்லாம் சமமாகக் கருதக்கூடியவன் நான். அப்படிக் கருதிக்கொண்டிருக்கிற காரணத்தால்தான், நான் உங்களுடன் இணைந்தமர்ந்து உணவு உண்டேன். அப்படி நான் செய்ததுபோல், காங்கிர சுத் தலைவர்கள் உங்களைச் சமமாகக் கருதுகிறார்களா? இல்லையே? வேண்டுமானால், நீங்கள் உங்கள் உணவை உண்ண வரும்படியாக அவர்களை அழைத்துப் பாருங்கள். உங்கள் உணவை உண்ணமாட்டார்கள். இதிலிருந்து தெரிகிறதல்லவா அவர்கள் எந்த விதத்தில் உங்களை மதிக்கிறார்கள் என்று?''

இவ்வாறு அறைகூவல் விடுத்ததோடு அண்ணா சென்று விடவில்லை. கூட்டம் முடிந்ததும், தாழ்த்தப்பட்ட தோழர் ஒருவர் இல்லத்தில் உணவு அருந்தியே சென்றார்.

சில நாட்களில் அண்ணா சொற்பொழிவு ஆற்றிய அந்தப் பகுதியில் காங்கிரசுக் கட்சியின் கூட்டம் நடைபெற்றது. அதிலே திரு. சீனிவாசராவ் என்பவர் உரை நிகழ்த்தினார். அவர் பேசிக்கொண்டிருக்கும்பொழுதே ஓர் அன்பர் மீன் குழம்பு ஊற்றப்பட்ட சோற்றை ஒரு பாத்திரத்தில் கொணர்ந்தார். அதை அவர் முன் நீட்டி,

"இதை உண்டால்தான், நீங்கள் எங்களைச் சமமாக மதிப்பதாகக் கருதுவோம்''—என்றார்.

அண்ணாவின் பேச்சினால் விளைந்த எதிரொலியே அத் தோழரின் செய்கை.

திரு. சீனிவாசராவ் புலால் உணவு உண்ணும் பழக்கம் இல்லாதவர். எனவே, என்ன செய்வது என்று புரியாமல் விழித்தார். கூட்டத்தில் குழப்பம் ஏற்படும் போல் தோன்றியது. அதைத் தவிர்க்கும்பொருட்டு,

"நான் இறைச்சி உணவு உண்டு பழக்கம் இல்லாதவன்.

சைவ உணவு போட்டால் நானும் உங்களுடன் இணைந்து உண்பதற்கு இசைகிறேன்"—என்றார்.

அப்படியும் விடவில்லை கூட்டத்தினர். அவருடைய கூற்றையே ஒரு பிடியாகப் பற்றிக்கொண்டனர். விரைவில் சைவ உணவைச் சமைத்துக்கொண்டு அவரை உண்பதற்கு அழைத்தனர். மிகுந்த சகிப்புத் தன்மையுடன் திரு. சீனிவாச ராவ் தாழ்த்தப்பட்ட தோழர்களோடு அமர்ந்து வேண்டா வெறுப்போடு சைவ உணவை உண்டு முடித்தார்.

தாழ்த்தப்பட்ட மக்களிடையே ஓர் எழுச்சியையும் பார்ப்பனர்களிடையே ஒரு மனமாற்றத்தையும் அண்ணா இவ்வாறு ஏற்படுத்தி விட்டார்.

## வெற்றிக்கு முன்னே...?

எனினும்கூட அந்தத் தேர்தலின் முடிவு அண்ணாவிக்குச் சாதகமாக இல்லை; பாதகமாகவே இருந்தது. காங்கிரசு வேட்பாளரே வெற்றி பெற்றார்.

அந்தத் தோல்வி, அவர் சார்ந்திருந்த நீதிக் கட்சிக்கு ஏற்பட்ட தோல்வியேயன்றி, அவருடைய தனித்திறமை களுக்கு ஏற்பட்ட தோல்வியன்று. ஏனெனில், தேர்தல் கூட்டங்களில் அவருடைய சொற்பொழிவுகள் சுவையும், கருத்தும் பொதிந்து கேட்போர் உள்ளங்களைக் கிறங்கவைத் தன; அவரைத் தலைசிறந்த பேச்சாளர்களில் ஒருவர் என்று பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தின.

மேலும், அந்த முதல் தோல்வியினால் துவண்டு படுத்து விடவில்லை அண்ணா. தொடர்ந்து பணியாற்றக் கிளம்பி விட்டார்.

தோல்வி என்னும் படிக்கட்டுகளைத் தாண்டித்தான் வெற்றியென்னும் பளிங்கு மாளிகைக்குள் அடிவைக்க முடியும் என்பதை அறியாதவர் அல்லவே அண்ணா! அவருடைய அந்தத் தன்னம்பிக்கையும் தளரா முயற்சியும் வீண் போகவில்லை.

முதல் தேர்தலில் தோல்வியுற்ற ஆப்ரகாம் லிங்கன் கடைசியில் குடியரசுத் தலைவராகவே ஆகவில்லையா? அப்படித்தான் முதல் தேர்தலில் தோல்வி கண்ட

அண்ணுவும் தமிழகத்தின் முதலமைச்சராக ஆட்சிபீடம் ஏறிவிட்டார்.

## அன்னைமொழியோ? ஆலயமோ?

"ஒவ்வொரு மொழியும் ஓர் ஆலயம்; அதைப் பேசுவோரின் ஒவ்வோர் ஆத்மாவும் அங்கே புனிதமானதாக வைத்துப் போற்றப்படுகிறது"

என்ருர் அறிஞர் சாமுவேல் ஜான்சன்.

சிலர் தங்கள் மொழியைப் புனிதமான ஆலயமாக வைத்து வழிபடுவதோடு அமைதியுறுவதில்லை; அதையே மற்றவரை அடிமைப்படுத்த வாய்த்த கருவியாகக் கருதி படைக்கலஞக எண்ணிப் பயன்படுத்த முனைந்து விடுகின்றனர்.

"ஒரு மொழியை இன்னெரு மொழி அழிக்க முடியுமா?" எனச் சிலர் வினவக் கூடும்.

"எறும்பு ஊரக் கல்லுந் தேயும்" என்னும் பழமொழியையே அவர்களுக்கு நாம் விடையாகப் பகர விழைகிருேம்.

தோட்டாக்கள்—குண்டுகள்—தோல் பைக்குள்ளே செயலற்றுக் கிடக்கிறவரை தீமை இல்லைதான்; அவையே துப்பாக்கி வழியாக வெடித்து வரும்பொழுது உயிர்களையே குடித்துவிடுகின்றன. அவ்வாறே ஒரு மொழி தன்னளவில் வளர்வதோடு சாதாரண நிலையில் இயங்கும்வரை அதனுல் எந்தத் தீங்கும் இல்லைதான்; அதுவே, ஆட்சி அதிகாரம் என்னும் துப்பாக்கி வழியே பாய்ந்து வரும்பொழுது, தான் சந்திக்கிற மற்ற மொழிகளையெல்லாம் அது சாய்க்கிறது.

## விளக்கில்லா வீடு!

விளக்கு இல்லாத வீட்டில் குடியிருந்து விடலாம்; ஆனுல் மொழியறிந்த நாட்டில் வாழ்வே பாழாகிவிடும்; இருளில் புதையுண்டு திசையே தெரியாமல் இடறி மடிவர் மக்கள்.

இடிவிழுந்த பனைமரம் விறகுக்கேனும் பயன்படும். ஆனுல் மொழியறிந்த நாடு முன்னேற்றம் என்னும் படிக்கட்டில் அடிவைக்கவே முடியாத முடமாகிவிடும்.

ஏன்?

ஒரு நாட்டின் கலை, நாகரிகம், பண்பாடு, செயலாக்கம், அறநெறி, அறிவாற்றல் முதலான அனைத்தையும் வளர்க்கும் ஊட்டச் சத்துள்ள உணவு மொழியேயாகும்.

"எந்த ஒரு நாட்டு மக்களின் சிறப்புக்கும் அடிப்படைத் தத்துவமாயிருப்பது அந்நாட்டினரின் தாய் மொழியே!"

—என்றார் திரு. வி. க.

இவ்வாறு ஒரு நாட்டுக்கே அச்சாணியாய் விளங்கவல்ல அன்னை மொழி எதுவாக இருப்பினும், எத்துணை வளமும், வரலாறும் உடையதாக இருப்பினும் அயல்மொழியொன்றின் ஆதிக்கத்துக்கு ஆட்பட நேரும்போது தன்னுடைய சீர்மையிலும் நீர்மையிலும் சிதைய நேரும் என்பதில் ஐயமே இல்லை.

அதனால்தான் அந்நாளில் இந்திய விடுதலைக்குப் பாடு பட்ட தலைவர்கள், ஆங்கில மொழியின் ஆதிக்கத்தை அறவே வெறுத்தனர். அதற்கு மாற்று வழியைக் கண்டுபிடிக்க மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொண்டனர்.

ஆனால் அவர்கள் கண்டுபிடித்த மாற்றுவழி, இந்திய ஒருமைப்பாட்டுக்கே பள்ளம் பறிக்கும் என்பதை அன்றே எண்ணிப் பார்க்கத் தவறிவிட்டனர்; பிரிவினை பற்றிய சிந்தனைக்கு அது அரியணை அமைக்கும் என்பதையும் அறிய மறுத்தனர்.

## தஞ்சாவூர்க் கதம்பம்

இந்தியா என்பது ஒரே மொழி நாடு அன்று; ஒரே இனத்தவரின் நாடும் அன்று; ஒரே சமயத்தினரின் நாடும் அன்று.

மல்லிகை, மருக்கொழுந்து, ரோஜா, வெற்றிவேர், சிவந்திப்பூ, செண்டிப்பூ முதலான பல்வேறு பூக்களும் ஒன்றாய்ச் சிரிக்கும் தஞ்சாவூர்க் கதம்பம் போன்றதே இந்தியத் துணைக் கண்டம். இக் கதம்ப மாலை இதமான மணம் வீசுவதற்குப் பற்பல மொழி, இன, சமய மலர்களைச் சார்ந்தவர்களும் தத்தமக்குரிய பங்கினை ஆற்றி வருகின்றனர் என்பது கண்கூடு.

கலை நாகரிகம் ஆன்மீகம் போன்ற துறைகளில் பன்னெடுங்காலமாகவே பாரதம் முழுவதும் ஒருவகையான ஒருமையுணர்வு இழையோடிக் கொண்டிருந்தபோதிலும் அது 'அரபு நாடுகள் யாவும் ஒன்றே' என்பது போன்ற ஒருமையே அன்றி, அரசியல் ஒருமைப்பாடு என்பது இந்தியாவில் ஆங்கிலேயர் வருகைக்குப் பின்னர் உருவானதே ஆகும்.

இவ்வாறு, இந்தியா என்னும் கதம்ப மாலையில், பல்வேறு இன, மொழி, சமய மாந்தர்களாகிய மலர்களைப் பின்னிப் பிணைய வைத்துள்ள நார் இழை எது? ஆங்கிலம், ஆங்கிலம், ஆங்கிலமே!

இந்த உண்மையை ஒப்புக்கொள்ள வெட்கப்படுவானேன்? அவ்வாறு ஒப்புக்கொள்ள மறுப்பது நடு நிலைமை பிறழ்ந்த மறம் ஆகும்; நன்றிகெட்ட செயலும் ஆகும்!

## இணையில்லாத இணைப்புப் பாலம்!

கத்தியவார்ப் பகுதியில் தோன்றிய காந்தியடிகள், உத்தரப் பிரதேசத்தில் உதித்த நேரு, வங்காள நாட்டில் வளர்ந்த விபின் சந்திரபாலர், தங்கத் தமிழகம் தந்த வ. உ. சிதம்பரம் பிள்ளை முதலானோர் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்ளுமாறு, 'நாட்டு விடுதலை' என்கிற ஒரே அணிக்குள் திரளுமாறும் செய்த பெருங்கருவி—அரிய பாலம்—ஆங்கில மொழியன்றி வேறு எது?

பால கங்காதர திலகர் மகாராட்டிர மொழியிலும், லாலா லசபதிராய் பஞ்சாபி மொழியிலும், சுரேந்திரநாத் பானர்சி வங்காள மொழியிலும், பிரகாசம் பந்துலுகாரு ஆந்திர மொழியிலும், ஜி. சுப்பிரமணிய அய்யர் தமிழ் மொழியிலும் மட்டுமே பேசிக்கொண்டு இருந்திருந்தால் 'வெள்ளையன் மொழியை உதட்டால்கூட முணுமுணுப்போமோ?'—என்று ஆங்கிலத்தை அடியோடு புறக்கணிக்கும் 'பர்தா' முறையை இறுக்கிப் பற்றிக்கொண்டு இருந்திருந்தால்—இந்திய விடுதலை இயக்கம் இந்த அளவுக்கு வெற்றி பெற்றிருக்க முடியுமா? மேலே கூறப் பெற்ற தலைவர்கள்தாம் தேசியத் தலைவர்களாக (National Leaders) உருவெடுத்திருக்க முடியுமா?

இவ்வடிப்படை உண்மையை இம்மியளவும் எண்ணிப் பாராதது உலக நாகரிகந் தவழும் உப்பரிகையாய்த் திகழும் ஆங்கிலத்தை, 'அந்நிய மொழி' என்னும் ஒரே காரணங் கொண்டு உதறித் தள்ள நினைப்பது, நமக்கு நாமே கண்ணைக் கட்டிக்கொண்டு நடுச்சாலையிலே நடக்க முற்படும் 'கபோதித் தன்மை'க்கே கதவைத் திறந்துவிடும்.

## இழப்பு யாருக்கு ?

பற்பல துறைகளிலும் விற்பன்னர்களாக விளங்குவதற்குத் தேவையான அறிவுக் கருவூலங்கள் மலிந்த அருமையான புதையலே ஆங்கிலம்!

அந்த ஆங்கிலத்தை அறிந்தவனால் உருவாக்கப்பட்ட புகைவண்டியிலே ஏறி வந்து, அதே ஆங்கிலம் தெரிந்தவனால் படைக்கப்பட்ட மின்சார விளக்கை எரிய விட்டுக்கொண்டு, அதே ஆங்கிலம் பயின்றவனால் கண்டுபிடிக்கப்பட்ட ஒலி பெருக்கியின்முன்னே நின்றுகொண்டு, அதே ஆங்கிலேயனின் கிராப்புத் தலையை விடாமல் வைத்துக்கொண்டு, வெள்ளைக் காரன் மொழியை இந்த நாட்டைவிட்டு விரட்டியே தீருவோம் என்று வீர முழக்கம் புரிவதால் இழப்பு யாருக்கு? இங்கிலாந்து நாட்டவருக்கா? இல்லவே இல்லை; இந்திய நாட்டினருக்கே இழப்பு உண்டாகும்; இருண்ட நிலையும் ஏற்படும்!

## சிந்தனை செய் மனமே !

'ஆங்கிலம் ஒன்றுதானா உலகில் சிறந்த மொழி? செர்மன், உருசிய மொழிகள்கூட விஞ்ஞானச் செல்வங்கள் நிறைந்தவைதாமே! அவற்றைக் கற்றுக் கொண்டால் போகிறது!' எனச் சிலர் வீறுப்பாகப் பேசக்கூடும். ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளாக நம்மோடு நெருங்கி உறவாடி, நம் சிந்தனைக் கண்களைத் திறந்துவிட்டு, வெளியுலகைத் தெளிவாய்க் காட்டி, நம் நடை, உடை, பேச்சு, மூச்சு எல்லாவற்றினுமே இரண்டறக் கலந்துவிட்ட ஆங்கிலத்திலேயே விஞ்ஞானப் புதுமைகள் போன்றவற்றைக் கற்றுத் தேர்ச்சியுறல் எளிதா? இனிப் புதிதாக நமக்கு அறிமுகம் துளியும்

இல்லாத செர்மன், பிரஞ்சு, உருசிய மொழிகளில் அவற்றைப் பயின்று பலன் பெறல் எளிதா?

வருங்காலக் கண்ணோட்டத்துடன் நடுநிலைமையினின்றும் பிறழாமல் நாட்டின் ஒருமையையும், பெருமையையுமே தலையாய குறிக்கோளாய்க் கொண்டு ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

எந்தக் கோணத்தில் நின்று சிந்தித்தாலும்,

"இந்தியாவின் ஒருமைப்பாட்டைப் பேணிக் காக்கவும், விஞ்ஞானம் முதலான பல்வேறு துறைகளிலும் உலகின் பிற நாடுகளோடு சரிசமமாகப் போட்டியிட்டு முன்னேற்றங் காணவும், ஆங்கில மொழியை ஒரு "வரப் பிரசாதமாகவே நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்"—என்று, அரசியல் அறிஞர் திரு. சி. இராசகோபாலாச்சாரியார் அண்மையில் கூறியுள்ளார். அவருடைய கூற்றைப் போற்றி நடப்பதைத் தவிர வேறு வழி நமக்குத் தோன்றவில்லை.

## இராசாசியால் வந்த இந்தி

ஆனால், தம்முடைய இருபதாண்டுக்கால அரசியல் பட்டறிவுக்கு—அநுபவத்துக்குப்—பின்னரே இத்தகைய தெளிவு பெற்றுள்ளார் திரு. சி. இராசகோபாலாச்சாரியார் அவர்கள். ஏனெனில், முதன் முதல் இந்த நாட்டில் ஆங்கில மொழியின் இடத்தில் இந்தி மொழியை ஆட்சிப் பீடத்தில் ஏற்றிப் பார்க்க முற்பட்டவர் அவரே!

அது நிகழ்ந்தது 1937-ஆம் ஆண்டில். அவ்வாறு தமிழகத்தில் இந்தியைக் கொண்டு வந்ததன் மூலம் அறிஞர் அண்ணாவை அரசியல் களத்தில் முழுக்க முழுக்க இழுத்து விட்ட பெருமையும் திரு. இராசாசி அவர்களையே சாரும்! அவர் மட்டும், தாம் முதலமைச்சராகப் பதவி ஏற்றதும் தமிழகத்தில் இந்தியைத் திணிக்க முற்பட்டிராவிட்டால், அண்ணா தமிழ் காக்கும் வேள்வியிலேயே தயங்காமல் குதித்திருக்கமாட்டார்; அதனைத் தொடர்ந்து முழு அரசியல் வாதியாகத் தம்மை ஆக்கிக்கொண்டு மாபெரும் களபதியாக உருவெடுத்திருக்கவும் மாட்டார்!

## முதல் போருக்கு முன்

அப்போது தமிழகத்தில் நிலவிய அரசியல் சூழலை நாம் சற்று நினைவு கூர்தல் நலமாகும்.

இந்தியாவுக்கு வந்து நேரில் நிலைமைகளைக் கண்டறிந்து சென்ற 'சைமன் குழு'வின் அறிக்கை 1936-ஆம் ஆண்டு வெளியாயிற்று. அதில் காணப்பெற்ற சீர்திருத்தங்களின் கீழ் நடந்த பொதுத் தேர்தலில் நீதிக்கட்சி அடியோடு வீழ்ந்தது; நிமிர முடியாத அளவுக்குத் தோற்றுப் போயிற்று. காங்கிரசுக் கட்சி வெற்றியைத் தழுவியது.

1937-ல் பழுத்த சிந்தனைக் கூர்மையும், அழுத்தமான நெஞ்சுரமும் படைத்த திரு. இராசாசி (சி. இராசகோபாலாச்சாரியார்) அவர்கள், காங்கிரசுக் கட்சியின் சார்பில் தமிழக முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பினை ஏற்றார்.

## தனிப் பெருமை கொண்ட இராசாசி

இந்திய அரசியல் வரலாற்றில் ஒரு தனி இடம் பெற்றவர் இராசாசி. தாம் பார்ப்பனக் குலத்தவராக இருந்தும் வணிகர் குலத்தவரான காந்தியடிகளின் பிள்ளையான தேவதாஸ் காந்திக்குத் தம் புதல்வியை மணம் செய்து கொடுத்ததன் மூலம் சமூகச் சீர்திருத்தத்திலேயே ஒரு பெரும் புரட்சியை அந்த நாளிலேயே உண்டாக்கியவர்; சாதி ஒழிப்புச் செயல் வீரர்களுக்கெல்லாம் 'வழிகாட்டி'-என்னும் புகழ் மாலையைப் பூண்டவர். தீண்டாமை ஒழிப்பை முன்னிட்டுத் தாழ்த்தப் பட்ட மக்களின் ஆலய நுழைவுக்குச் சாலச் சிறந்த தொண்டாற்றியவர். எதிர்காலத்தில் என்ன நிகழும் என்பதை முன்கூட்டியே அறிந்து கொண்டுவிடும் ஆற்றல் மிக்கவர்; இதனால் 'தீர்க்கதரிசி' என்று தம் நெருங்கிய நண்பர்களால் கொண்டாடப்படுபவர்; ஆங்கிலேய ஆட்சியாளரால் உருவாக்கப் பெற்ற மிக உயர்ந்ததும், உன்னதமானதுமான பதவி, கவர்னர்—செனரல் பதவியே ஆகும். அப்பதவியைத் தாங்கும் பேறு பெற்ற முதல் இந்தியர்—ஒரே இந்தியர்—இராசாசியே! எல்லாவற்றையும்விட, காந்தியடிகளின் பல கொள்கைகளுக்கு, முதன் முதல் சட்டவரைவு (Bill) கொணர்ந்து செயற்படுத்திய பெருமையும் இராசாசி அவர்களுக்கு உண்டு.

அவ்வாறுதான், காந்தியடிகளின் மீதுள்ள பற்றுப் பெருக்கினால், 'இந்திதான் இந்த நாட்டின் தேசீய மொழி ஆகவேண்டும்' என்று அவர் கூறிவந்த கொள்கைக்குச் சட்ட வடிவந் தந்து செயற்படுத்த முனைந்தார் இராசாசி.

## இந்தித் திணிப்பு

1937-இல், தாம் தமிழக முதலமைச்சர் ஆனவுடனே, 'பள்ளிக்கூடங்களில் இந்தியைக் கட்டாய பாடம் ஆக்கு வேன்'—என்று அவர் அறிக்கை விட்டார்.

அவர்தம் கூற்றினைக் கேட்டு நாடே கொதித்தெழுந்தது. தம்முடைய அன்னைக்கே தாங்க முடியாத இன்னல் வந்து விட்டது போன்ற தவிப்புடன் தாங்கொணாத் துயரத்தில் ஆழ்ந்தனர் மக்கள்.

## ஈழத்தடிகள் எதிர்ப்பு

'நீங்கள் இந்தியைத் திணித்தால் அதை எதிர்த்து நின்று போராடுவேன்'—என்று முதன் முதல் தந்தி மூலம் அறை கூவல் விடுத்தார், ஈழத்துச் சிவானந்த அடிகள்.

புராணங்களைப் பழுதறக் கற்று அவற்றிலுள்ள பொருந் தாக் கூற்றுக்களையெல்லாம் அகழ்ந்து வெளிக்கொண்டுவரும் ஆற்றல் படைத்தவர் இவர். இவருடைய பெரிய புராண ஆராய்ச்சி இலக்கியத் திறனாய்வாளருக்கு வழிகாட்டியாக இலங்கவல்லது. அண்ணாவின் நலத்தில் மிக்க அக்கறை கொண்டவர். அவர் உடன் இருந்தே பல காலம் பணி யாற்றியவர். அண்ணாவுக்கும் இவர்பால் மிக்க மதிப்பும் பாசமும் உண்டு.

இவ்வீழத்துச் சிவானந்த அடிகள்தாம் இந்தி எதிர்ப்பு இயக்கத்துக்கு முதற் பல்லவி இசைத்தவர் எனக் கூறப்படு கிறது. அவ்வியக்கத்தின் முதல் தளபதியாக இருந்து அறப் போர் புரிந்து சிறைக்குச் சென்றவரும் இவரே.

## காங்கிரசைக் கைவிட்டவர்

இன்று சட்டமன்ற மேலவை உறுப்பினராக உள்ள வரும், தி. மு. கழகத்தின் அமைப்புச் செயலாளருமான திரு. என். வி. நடராசன் அவர்கள் உண்மை உழைப்பி னாலேயே உயர்நிலை எய்தியவர். 1937-இல் இந்தி நுழைக்கப்

பட்டபோது, அவர் இராசாசி அவர்கள் சார்ந்திருந்த காங்கிரசுக் கட்சியிலேயே இருந்தார். அண்ணு பெத்து நாயக்கன் பேட்டையில் முதன் முதல் தேர்தலில் நின்ற போது, அவரை எதிர்த்துக் காங்கிரசு வேட்பாளரை ஆதரித்துப் பேசிய பெருமையும் திரு. நடராசனுக்கு உண்டு. அவரே, தம் கட்சித் தலைவர் கட்டாயமாக இந்தியைத் திணிப்பதை வெறுத்தார். அதன் நிமித்தமாகவே, கொள்கை உறுதிப்பாடு கொண்ட அவர் காங்கிரசைவிட்டு வெளியேறினுர். பின்னர் பெரியார்—அண்ணு பாட்டையில், பீடு நடை போடத் தொடங்கிவிட்டார்.

'திரு என். வி. நடராசன் இவ்வாறு வெளியேறி வந்தது, இந்தியைப் பிடிவாதமாகத் திணிக்கும் இராசாசிக்கும், காங்கிரசுக்கும் விழுந்த முதல் அடி'—என்று அந்நாளில் பேசிக்கொள்ளப்பட்டது.

## பெரியாரின் பெருங் கிளர்ச்சி

தமிழர் நலனில் என்றுமே அக்கறை கொண்ட தன்மான இயக்கத் தந்தை பெரியார் அவர்கள் இராசாசி இந்தியைக் கொண்டுவந்து விட்டார் என்றதும் அடியுண்ட அரிமாபோல் ஆர்த்தெழுந்தார். கடுமையான கண்டனக் கணைகளை அரசாங்கத்தின்மீது தொடுத்தார்.

தாம் காங்கிரசுக் கட்சியில் இருந்தபோதே காந்தியடிகளின்மீது அளவற்ற பற்று இருந்தபோதிலும் அவருடைய இந்திக் கொள்கையை மட்டும் எதிர்த்து வந்தவரே பெரியார்.

"இந்தியைப் பொது மொழியாக்குவதால் நாட்டிற்கு நன்மையில்லை. அதனுல் தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்குத் தடையுண்டாகும். தமிழ் 'மொழியின் வளர்ச்சி குன்றும்."

—என்று, 1926-லேயே தம்முடைய 'குடியரசு' ஏட்டில் அவர் கட்டுரை வரைந்திருப்பதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதே.

அந்த நாளிலேயே இந்தியைப் பற்றிய இத்தகைய அழுத்தமான கொள்கையைக் கொண்டிருந்தவர், 1937-இல்

இராசாசி இந்தியைத் திணிக்கும்போது, வெறுமையாக வேடிக்கை பார்த்துக்கொண்டு அமர்ந்திருப்பாரா?

நாடு முழுதும் சூறாவளிப் பயணம் மேற்கொண்டார்; தம்முடைய தொண்டர்களையும் முடுக்கிவிட்டார். பூவாளூர் அ. பொன்னம்பலனார், பட்டுக்கோட்டை கே. வி. அழகிரிசாமி, கி. ஆ. பெ. விசுவநாதம், தி. பொ. வேதாசலம், எஸ். இராமநாதன் முதலானோர் இந்தியை எதிர்த்துப் போர்ப் பரணி பாடினர்.

இந்தித் திணிப்பை இவ்வாறு அரசியல் வாதிகள் மட்டுமே எதிர்க்கவில்லை. அறிஞர் பெருமக்களும் கண்டனக் குரல் எழுப்பினர். அவர்களுள் மறைமலையடிகளும் நாவலர் ச. சோமசுந்தர பாரதியாரும் குறிப்பிடத் தக்கவர் ஆவர்.

## மறைமலையடிகளின் எதிர்ப்பு

பண்டைய சங்க காலப் புகழ் மங்காத வண்ணம் தனித் தன்மை, இனிமைத் தேறல், இளமை முறுக்கு, எழிலின் சிறப்பு எல்லாம் ஒருசேரக் கலந்து, இந்த இருபதாம் நூற்றாண்டில் தமிழ் மொழி தலைநிமிர்ந்து ஒளி வீசுகிறது—ஏறு போல் வீறுநடை போடுகிறது—என்னில் அதற்கு முழுமுதற் காரணர் மறைமலை அடிகளார் அவர்களே! அரசியலிலும், சமுக இயலிலும் ஆரிய-ஆதிக்கத்தை எதிர்த்துப் பெரியார் போர்க்கொடி உயர்த்தினார் என்னில் மொழித் துறையில் அவ்வாறு போர்க்கொடி உயர்த்தியவர் மறைமலை அடிகளே! படர்ந்த பாசியை நீக்கிவிட்டுப் பளிங்கு நீருள்ளதாய்க் குளத்தைப் புதுக்குவதுபோல் விரைக வந்து கலந்த வேற்று மொழிச் சொற்களைக் களைந்துவிட்டுத் தேனுக இனிக்குமாறு செந்தமிழைப் புதுப்பித்த சிற்பியும் மறைமலை அடிகளாரே! அவருடைய அடியொற்றித்தான் 'நெடுஞ்செழியன்' 'அன்பழகன்' 'மதியழகன்' 'இளவழகனார்' 'இளங்கோவன்' 'மணிமேகலை' 'தேன்மொழி' முதலான தமிழ்ப் பெயர்கள் தலையெடுக்கலாயின. 'தனித் தமிழ் இயக்கத்தின் தந்தை!'—எனத் தமிழ் உள்ளளவும் தமிழ் மக்களால் கொண்டாடத் தக்க பெருமையும் பெற்றியும் பெற்றவர் அவரே!

"...இந்தி பொதுமொழி ஆவதற்குத் தகுதி உடையது

அன்று; இந்தி நுழைப்பால் தமிழ் கெடும்; தமிழர் துன்புறுவர்.''

—என்று அவரும் கட்டுரைகள் வரைந்தார்; கண்டனக் கணைகள் தொடுத்தார்.

## ச. சோ. பாரதியார் எதிர்ப்பு

தோற்றப் பொலிவில் மட்டுமின்றி வாக்கு வன்மையிலும் ஆண்மை மிக்கவராய்த் திகழ்ந்தவர் திரு. ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள். தேசீயக் கவிஞர், சி. சுப்பிரமணிய பாரதியாரின் இளமைக் காலத் தோழர்; அவரைப் போன்றே சின்னஞ்சிறு அகவையிலேயே கவிக்குயிலாய்ச் சிறகடித்துப் 'பாரதியார்' என்னும் பட்டம் பெற்றவர். எம். ஏ., பி. எல். பட்டம் பெற்று வழக்குரைஞர் தொழிலில் விழுப்புகழ் பெற்றிருந்த போதிலும், தமிழ் மீதுள்ள ஆராக் காதலால் தமிழ் நூல்கள் பல யாத்தவர். தம்முடைய வீறு மிகுந்த சொற்பொழிவுத் திறனால், யாழ்ப்பாணம், ஆறுமுக நாவலருக்குப் பின்னர் முதன் முதல் 'நாவலர்' என்னும் பட்டம் பெற்ற பாவலர். அவரும் இந்தித் திணிப்பைக் கடுமையாக எதிர்த்தார். முதலமைச்சர் திரு. இராசகோபாலாச்சாரியருக்கு நேரடியாகக் கடிதமும் எழுதினர், கண்டித்து.

## காஞ்சி மாநாடு

பெரியாரின் தன்மான இயக்கத்தின் சார்பிலே 1937 பிப்ரவரித் திங்களில் அண்ணா பிறந்த காஞ்சி மாநகரில் மாபெரும் இந்தி எதிர்ப்பு மாநாடு ஒன்று கூட்டப் பெற்றது. அதனை ஆர்வத்துடன் கூட்டி, அதன் வெற்றிக்காக உழைத்தவர்கள் திரு. அ. க. தங்கவேலு முதலியாரும், திரு. எஸ். வி. லிங்கமும் ஆவர். மாநாட்டுக்கு சர். கே. வி. ரெட்டி நாயுடு தலைமை தாங்கினர்; சர். எம். கிருஷ்ணன் நாயர் மாநாட்டைத் திறந்து வைத்தார்.

## தமிழ் காக்கும் தளபதி !

இந்த மாநாட்டின் நிகழ்ச்சிகள் இளைஞர் அண்ணாவின் குருதியிலே மென்மேலும் புரட்சித் துடிப்பு ஏற்பட வழி

வருத்தன. முன்பே பெரியாரின் அடிச்சுவட்டிலே பீடுநடை போடக் கிளம்பிவிட்ட அவருக்கு இப்போது புதுமுறுக்கோடு கூடிய செயல் திறன் வந்துவிட்டது.

இந்தித் திணிப்பை எதிர்த்து முழுமூச்சுடன் போர்க் களத்தில் குதித்துவிட்டார் அண்ணா!

தமிழ் காக்கும் முதல் போரின் தளபதி ஆகிவிட்டார் அண்ணா!

அந்தக் குள்ளமான உருவத்தின் சின்னஞ்சிறு பாதங்கள் நாடு முழுதும் நடந்தன; திக்கெட்டும் தோய்ந்தன!

அந்த வீணைக் குரல் கேட்டுத் தேனுண்ட வண்டாயினர் மக்கள்.

அதே சமயம், செந்தமிழுக்கு வந்துற்ற தீராத தலை வலியைச் சிந்தையிலே பதியவைத்துத் தெளிவும் கண்டனர் மக்கள். அதன் விளைவாகச் சீறியும் எழுந்தனர் கார்காலப் புயலாக.

வீழ்ச்சியுற்ற தமிழரெல்லாம் எழுச்சி கொண்டு, வெங் கொடுமைச் சாக்காட்டுக்கும் அஞ்சாது வெளிவந்தனர்.

பெரியார் பெரும்படையின் தானைத் தலைவராம் அண்ணா இட்ட ஆணையைத் தலைமேற் தாங்கி நடக்க எண்ணற்ற இளைஞர்கள் வெள்ளம்போல் திரண்டனர்.

## அறப்போர் துவங்கிற்று

மொழிப்போர், அறப்போராகவே தொடங்கிற்று. முதல் கட்டமாக, சென்னை இந்து தியாலாசிகல் உயர்நிலைப் பள்ளி முன்பும் இந்தி எதிர்ப்பு மறியல் துவங்கிற்று. சிலர் உண்ணா நோன்பும் மேற்கொண்டனர்.

எதிர்ப்பாளர்களின் வலிமை பெருகுவதைக் கண்டு அரசாங்கம் கெடுபிடிகள் செய்ய முற்பட்டது. பலரைச் சிறை செய்யவும் முனைந்தது. 'இந்தியன் எக்சுபிரசு'—போன்ற தேசிய ஏடுகள் இடித்துரைத்தும்கூட அரசாங்கம் தன் கடும் நடவடிக்கைகளைக் கைவிடவில்லை.

மக்களின் உணர்ச்சிப் பிழம்புக்கு எண்ணெய் வார்க்கும் இனிய பணியாற்றிய 'விடுதலை' ஏட்டின்மீது அரசாங்கம் வழக்குத் தொடுத்தது; அதனை வளர்த்து வந்தவர்களுக்குத் தண்டனையும் வழங்கிற்று.

## திருச்சியில் திரண்ட அணி

இந்நிலையில், 100 பேர் கொண்ட இந்தி எதிர்ப்புப் படையொன்று திருச்சியினின்றும் கால்நடையாகவே சென்னை நோக்கிப் புறப்பட்டது. 'அஞ்சா நெஞ்சினர்' என்னும் பாராட்டுப் பெற்ற பட்டுக்கோட்டை கே. வி. அழகிரிசாமி அந்த அணியினை வழிநடத்திச் சென்றார். தோழியர்: இராமாமிர்தத்தம்மையார், தோழர் முகைதீன், இராவ் சாகிப் ஐ. குமாரசாமிப் பிள்ளை, மணவை இரெ. திருமலைசாமி முதலானோர் அணியின் வெற்றிப் பயணத்துக்குப் பெருந்துணை புரிந்தவர் ஆவார்கள்.

வழியில் ஆங்காங்கே பொதுக்கூட்டங்கள் நடத்திப் பொதுமக்களிடையே கருத்து விளக்கம் அளித்துச் சென்ற இவ்வணி, சென்னைக் கடற்கரையில் பெரும் உற்சாகத்துடன் வரவேற்கப்பட்டது. இவ்வணியைச் சார்ந்தவர்கள் மறியலில் ஈடுபட்டுச் சிறை சென்றனர்.

## தாய்மொழி காத்த தாய்க்குலம்

தமிழ் காக்கும் முதல் போரில் தாய்க்குலத்தினர் ஆற்றிய அரிய தொண்டும் மிகவும் குறிப்பிடத்தக்கது. 13—11—38-இல் சென்னையில் தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாடு ஒன்று கூடியது. தமிழ்க்கடலாம் மறைமலையடிகளாரின் திருமகளும், அடிகளார் தனித் தமிழ் நடை பற்றிச் சிந்திப்பதற்கு அடியெடுத்துக் கொடுத்தவருமான திருவாட்டி, நீலாம்பிகை அம்மையார், அம்மாநாட்டுக்குத் தலைமை தாங்கினார். அம்மாநாட்டின் பயனாகப் பழைய புறநானூற்றின் மணம் மீண்டும் கமழத் தொடங்கிற்று தமிழகத்தில். அறத்தை நிலைநாட்டக் கிளம்பிய 'கண்ணகி'களாகப் பல தமிழ் அணங்குகள் கிளர்ந்து எழுந்தனர். இந்தித் திணிப்பை எதிர்த்து மறியலில் ஈடுபட்டனர்; சிறையும் சென்றனர். டாக்டர் தருமாம்பாள், மூவலூர், இராமாமிருதத்தம்மையார் முதலானோர் அத்தகைய வீராங்கனைகளில் குறிப்பிடத்தக்கோர் ஆவர். இந்த மகளிர் மாநாட்டில்தான் திரு. ஈ. வெ. ரா. அவர்களைப் 'பெரியார்' என்னும் அடைமொழியைச் சேர்த்து அழைப்பது என்று முடி

வாயிற்று. அதுமுதல், 'பெரியார்' என்பதே திரு. ஈ. வே. ரா. வைக் குறிக்கும் நிலையான பெயராய் வழங்கி வருகிறது.

### நீதிக் கட்சியும் சேர்ந்தது

சிறிது காலம் பெரியாருடன் பிணக்குற்று விலகியிருந்த நீதிக் கட்சியும் தமிழ் காக்கும் முதற் போரில் ஈடுபட்டது. பெரியாரைத் தன் தலைவராகவும் தேர்ந்தெடுத்து மகிழ்ந்தது ; செட்டிநாட்டு இளவரசர் முத்தையாச் செட்டியார், சர். ஏ. டி. பன்னீர்ச்செல்வம் போன்ற செல்வாக்கு மிக்க தலைவர்களும், சாதாரணப் பொதுமக்களுடன் இரண்டறக் கலந்து இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

### மறியலும் சிறையும்

இப்போராட்டத்தில் 1200 பேர் சிறை சென்றனர் ; நாடு, நகரெங்கும் இந்தித் திணிப்பை எதிர்த்துக் கண்டனக் கூட்டங்களும், ஊர்வலங்களும் ஒவ்வொரு நாளும் நடைபெற்றவண்ணம் இருந்தன. சென்னையில் அன்றாடம் பள்ளி முன் மறியல் செய்வது ஓயவில்லை ; தொண்டர்கள் சிறை செல்வதும் ஓயவில்லை!

### சென்னைச் சிறையில் அண்ணா !

தமிழ் இளைஞர்களை மட்டுமின்றி, முதியவர்களையும் தம் பேச்சு வன்மையால் புரட்சி வீரர்களாக மாற்றி, மறியலில் ஈடுபடுத்தி, தாமும் ஈடுபட்ட அண்ணாமீது என்னென்ன குற்றங்கள் சுமத்தப்பட்டன தெரியுமா ? குற்றம் புரியும்படி தூண்டி விடுதல், அதற்கு உடந்தையாய் இருத்தல் ஆகிய குற்றங்களே. வழக்கின் முடிவில் அண்ணாவுக்கு வழங்கப்பட்ட பரிசு நான்கு திங்கள் சிறை வாழ்வு !

சென்னைச் சிறையில், பெரியாருடன் ஒரே கொட்டடியில் தங்கும் வாய்ப்புக் கிட்டியது அண்ணாவுக்கு. அப்போது தமக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை எத்துணைச் சுவையோடு சொல்கிறார் பாருங்கள் :

"......குற்றாலத்துக்கோ, கொடைக்கானலுக்கோ செல்பவர்கள் உள்ளே நுழைந்ததும் தனக்கு வேண்டியவர்கள் இருப்பது கண்டால் எவ்வளவு மகிழ்ச்சி அடைவார்கள் ? நான் உள்ளே நுழைந்ததும், "வந்து விட்டாயா ! வா, வா !

ஆறு, எட்டா, நாலா மூன்று?" என்று கேட்டபடி நண்பர்கள் என்னிடம் அன்புடன் வந்தபோது, அதுபோன்ற மகிழ்ச்சி ஏற்பட்டது.

"நான்கு திங்கள் நாங்கள் அங்கு 'தமிழ்! தமிழ்! தமிழ்!' என்ற உணர்ச்சி வயமாகி இருந்து வந்தோம். பெரியாருடன் பன்னிரண்டு மணி நேரம் (இரவில்தான் தனித்தனியாகப் போட்டு பூட்டி விடுவார்களே) ஒன்றுக இருக்க, பேச, கேட்க, பழக அருமையான வாய்ப்பு ; இரசமான விருந்து—சுவையுள்ள காலமாக அந்த நான்கு திங்கள் கழிந்தன.

"சிறை செல்கிறேன் என்பதறிந்த என் கெழுதகை நண்பர் புலவர்—அருணகிரிநாதர், 'அங்கு நிரம்ப நேரம் கிடைக்கும்; பல்வேறு செய்திகளைப் படிக்க அது தூண்டுகோலாக இருக்கும்' என்று கூறி என்னிடம் 'அபிதான சிந்தாமணி' என்னும் புத்தகம் கொடுத்தார். பொது வாழ்வுத் துறையிலே தொடக்கக் கட்டத்தில் எனக்கு உற்ற தோழராக இருந்தவர் ! அவரே ஒரு 'அபிதான சிந்தாமணி'-மணிக்கணக்கில் பேசிக்கொண்டே இருப்போம், பற்பல செய்திகள் குறித்து. எல்லாச் செய்திகளைப் பற்றியும் ஏதேனும் ஓரளவுக்குக் கூறும் வகையான கல்வியும் கேள்வியும் படைத்தவர் ; எனவே, அவர் சிறையில் என்னோடு இருப்பது போலவே எனக்குத் தோன்றிற்று. அபிதான சிந்தாமணியைப் படித்த போதெல்லாம், அந்த 'அபிதான சிந்தாமணி'யை மறப்பதற்கு இல்லை. இப்போதும் அபிதான சிந்தாமணியைக் காணும் போதெல்லாம் எனக்கு அந்த நான்கு மாதக் கடுங்காவல் நினைவிற்கு வரும்; நினைவிலே அந்த நிகழ்ச்சி தோன்றியதும் எனக்குள்ளேயே மகிழ்ச்சி..."

இவ்வாறு தாம் சிறை வாழ்வில் கொண்ட மகிழ்ச்சி பற்றித் தீட்டிக் காட்டியுள்ளார் அண்ணு !

## இந்திக்குப் பலியான இருவர்

"மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை—எமை
மாட்ட நினைக்கும் சிறைச்சாலை"

என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனரின் எழுச்சியூட்டும் வரிகளிற் கண்டவாறே மகிழ்ச்சியோடு தன் சிறை வாழ்வைக் கழித்திருக்கிறுர் அண்ணு.

ஆனால் எல்லாருக்குமே அந்தச் சிறை 'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை'யாக அமையவில்லை! எத்தனையோ பேர் புதிய அனுபவத்தைப் பொறுக்க முடியாமல் அல்லற் பட்டனர்; அனல் பட்ட புழுவாயினர்; சிறை புகுந்தவர் களின் குடும்பத்தினரும் வெளியே குமுறி அழுதனர்; 'கோ' வென்று கதறினர்; அப்படியும் தமிழக அரசின் உள்ளக் கதவங்கள் திறக்கப்படவில்லை! இந்தித் திணிப்பும் நீக்கப் படவில்லை!

இந்நிலையில் சிறைப்பட்டிருந்த தாளமுத்து, நடராசன் ஆகிய இரு செம்மல்கள் தம் இன்னுயிரைத் தமிழ் காக்கும் முதல் போரில் முதல் காணிக்கையாகச் செலுத்தினார்கள்! அவர்களின் மறைவு தமிழ் மக்கள் அனைவர்க்கும் அதிர்ச்சி அளித்தது!

பின்னர்தான், 21—2—40-இல் கட்டாய இந்திப் படிப்பு என்பது அரசினரால் நீக்கப் பெற்றது.

இந்தித் திணிப்பை எதிர்த்து நடந்த இக்கிளர்ச்சி பற்றி அண்ணா என்ன கூறியுள்ளார் தெரியுமா?

"...அவர் (சி. இராஜகோபாலாச்சாரியார்) புகுத்தின கட்டாய இந்தியும், நம்மை நாம் உணர்ந்து, உணர்ச்சி பெற்று உறுதியுடன் உழைக்கத்தான் உதவிற்று; திராவிட இன உணர்ச்சி தலையெடுக்க உதவிற்று; அவர் அடக்குமுறை யால் நம் உணர்ச்சி மாளவில்லை; மாறாக உத்வேகம் பெற்று ஓடியது ஊற்றுப்போல. இன உணர்ச்சி பொங்கி வழிய, நம்முடைய தியாகம் தெரிய, உண்மை வெளிப்பட உழைப்பு பலனளிக்க—கட்டாய இந்தி நல்ல வாய்ப்பாக விளைந்தது; நம்மில் எத்தனை எத்தனைத் தாய்மார்கள் சிறைக்கோட்டம் புகத் தயார் என்பதை அது எடுத்துக் காட்டிற்று. எத்தனை வாலிபர்கள் இனப் போராட்டத்திற்கு இயைந்துள்ளார்கள் என்பதை அது விளக்கிற்று. தாளமுத்து, நடராசன் போல் தமது உயிரையும் தரும் மணிகளின் ஒளி தெரிய அது உதவிற்று!"

## கல்லறையில் கால்கோள்

இவ்வாறாக, தாளமுத்து—நடராசன் ஆகியோரின் கல்லறைகள் மீதுதான் தமிழ் காக்கும் முதல் போர் ஒரு முடிவுக்கு வந்து நின்றது. அதே சமயம், அவர்கள் கல்லறை

கள் மீதுதான் தமிழகத்திலே 'பிரிவினை' உணர்ச்சிக்கான கால்கோளும் ஊன்றப்பெற்றது!

ஆம், இந்தி மட்டும் தமிழகத்தில் திணிக்கப்படாமலிருந்தால் "இந்தியின் ஆதிக்கம் ஏற்பட்டுவிட்டால்; பின்னர் தமிழுக்கு வாழ்வில்லை; தமிழர்க்கு வாழ்வில்லை. எனவே, தமிழன் தனக்கு என்று தனி அரசு அமைத்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை'' என்று நாவலர் கணக்காயர்—டாக்டர்—ச. சோமசுந்தர பாரதியார் முதன் முதல் குரல் கொடுத்திருக்க மாட்டார். அவரைத் தொடர்ந்து,

'தமிழ்நாடு தமிழருக்கே!'

'திராவிட நாடு திராவிடருக்கே!' என்பன போன்ற முழக்கங்களும் எதிரொலி எழுப்பியிருக்க மாட்டா.

எனவே,

இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைக் கட்டிக் காக்க எண்ணுகின்றவர்கள் தமிழ் காக்க எழுந்த முதல் போருக்குரிய அடிப்படைக் காரணத்தை ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

## ஒருமைக் கோவிலை உடைக்கும் பிரிவினை

'ஆட்சி மொழி' என்னும் தலைமை இடத்தை—அதிகார நிலையை இந்திக்கு அளித்து அதனைக் கட்டாயமாகத் திணிக்க முற்பட்டதால்தான் 'எங்கே தமிழுக்குக் கேடு வந்துவிடுமோ?' என்று அஞ்சத் தலைப்பட்டனர் தமிழ் மக்கள்.

'இந்திய அரசியல் அமைப்பில் இந்தி படித்தால்தான் உத்தியோகம் என்கிற நிலையில் எங்கே நாம் தாழ்த்தப்பட்டவர்களாகத் தள்ளப்பட்டு விடுவோமோ?' என்று அவநம்பிக்கையும் கொண்டனர் தமிழ் மக்கள்.

அந்த அச்சமும், அவநம்பிக்கையும் அன்று தமிழுக்கு மட்டுமே ஏற்பட்டன. இன்று, இந்தியாவில் உள்ள மற்ற மொழிக்காரர்களுக்கும் உண்டாகியுள்ளன.

இதே நிலை நீடித்தால் இந்தி மட்டுமே இந்தியாவின் ஆட்சி மொழியாகும் தகுதி பெற்றது—என்ற பிடிவாதப் போக்கு நீடித்தால், பிற மொழியாளரிடையே 'பிரிவினை' எண்ணம் கோபுரத்தில் தானாக முளைத்த அரசஞ் செடியாகத் தழைத்துவிடும்; பின்னர் ஒருமைப்பாட்டுக் கோவிலை உடைத்தேவிடும்! இதனை நல்லறிவாளர் சிந்திப்பாராக!

# 12. திராவிடர் கழகத் தோற்றம்

## மொழிப் போரின் முதல் சின்னம்

தமிழ் மொழியைக் காக்க எழுந்த முதல் போராட்டத்தினுல், தமிழக அரசியலில் ஏற்பட்ட முதல் நன்மை என்ன தெரியுமா?

திராவிட இன மக்களின் நலனைக் காக்க, வெள்ளுடை வேந்தர் சர். பி. தியாகராயர் முயற்சியால் தோன்றிய நீதிக் கட்சியும்;

அதே திராவிட இன மக்களின் முன்னேற்றங் கருதி, பகுத்தறிவுப் பாதையில், வெண்தாடி வேந்தர் பெரியார், ஈ. வே. இராமசாமி அவர்களால் தோற்றுவிக்கப் பெற்ற தன்மான இயக்கமும், ஒரே கூட்டில் இணைந்ததே.

அது முதல் மொழிப்போர் விளைவித்த முதல் நன்மை— அரிய நன்மையும் ஆகும்.

இந்தித் திணிப்பை எதிர்த்ததன் நிமித்தமாக மூன்று ஆண்டுச் சிறைத் தண்டனை பெற்று 1938-இல், சென்னைச் சிறைக்கோட்டம் புகுந்து பின்னர் பெல்லாரிச் சிறைக்கு மாற்றப்பட்ட பெரியாரின் பெருந்தொண்டு நீதிக் கட்சியினரின் விழிகளைத் திறந்துவிட்டது. முன்னரே சர். ஏ. டி. பன்னீர்செல்வம் பெரியாருடன் ஒத்துழைக்க முன்வந்து விட்டார். அடுத்து, செட்டி நாட்டு இளவரசர் திரு. முத்தையாச் செட்டியார் அவர்களும் பெரியாரின் அரும் பணிகளால் பெரிதும் கவரப்பட்டார். அவர்தம் உரை ஒன்றே இதற்குத் தக்க சான்றுகும்.

"20 ஆண்டுகளுக்கு முன் நமது மாபெரும் தலைவர்களான தியாகராயர், நாயர், பனகல் அரசர் ஆகியோர் நமது தமிழ் மக்களின் நன்மைக்காக நமது நீதி இயக்கத்தை ஆரம்பித்தனர். நமது கட்சியின் உழைப்பால் தாழ்த்தப்பட்டோரும் சிறுபான்மையரும் 'மற்ற மக்களுடன் சம நிலையுடன் வாழ வசதி ஏற்பட்டது. அவர்கள் உழைப்பால்

பார்ப்பனர் அல்லாதார்கள் அளவிறந்த நன்மைகள் பெற்றனர். இடையில் நமது தலைவர்களின் மன வேறுபாட்டால் சென்ற தேர்தலில் (1936—37) தோல்வி பெற்றோம். ஆனால் நமது பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் எந்தத் தலைவர்களின் தூண்டுதலும் இல்லாது தானே தனியாகத் தனது தோழர்களுடன் நமது கட்சியின் சார்பாகச் சென்ற ஒன்றரை ஆண்டுகளாகத் தமிழ்நாடு முழுமையும் சுற்றுப் பயணஞ் செய்து சொற்பொழிவாற்றித் தமிழ் மக்களைத் தட்டியெழுப்பினார்.''

—செட்டிநாட்டிளவரசர் கொண்ட இக்கருத்தினைப் பிற நீதிக் கட்சித் தலைவர்களும் ஏற்றுக்கொள்ளும் காலம் வெகு தொலைவில் இல்லை; மிக விரைவாகவே வந்து விட்டது.

எனவே, 1938-டிசம்பர் திங்களில் சென்னையில் கூடிய நீதிக்கட்சி மாநாட்டுக்குப் பெரியார் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். அவர் அப்போது சிறையில் இருந்தார். சிறையிலிருக்கும் தங்கள் தலைவரின் படத்தை வைத்தே மாநாடு நடத்தியது புதுமையானதாக மட்டுமின்றி, மக்களுக்குப் புத்துணர்ச்சி ஊட்டுவதாகவும் அமைந்தது.

இவ்வாறாகத் தன்மான இயக்கத் தந்தையான பெரியார், நீதிக்கட்சிக்கும் தலைவராகி விட்டதால், அக்கட்சியின் அடிப்படைக் கொள்கையில் சில மாற்றங்கள் நிகழ்ந்தன. அதுகாறும், இந்தியாவுக்கு 'குடியேற்ற நாட்டு நிலை' (Dominian status) போதும் என்றிருந்த அக்கட்சியின் நோக்கம், 'முழுத் தன்னாட்சி' (Full Independence) வேண்டும் என்று மாற்றப்பெற்றது. இதைப்பற்றி முன்பே கூறியுள்ளோம்.

## தமிழ்நாடு தமிழருக்கே !

அதே 1938 டிசம்பர் திங்களில், மாநிலத் தமிழர் மாநாடு வேலூர் நகர் மன்றத்தில் மிகப் பொலிவோடு நடைபெற்றது. இம் மாநாட்டில்தான் இந்தித் திணிப்பால் தமிழர்க்கு நேரவிருக்கும் இன்னல்கள் உணரப்பெற்று, முதன் முதல் 'தனித் தமிழ்நாடு'—பற்றி உருவான முறை

யில் பேசப் பெற்றது. அதற்கான பணியில் இறங்குவது என்றும் முடிவு செய்யப் பெற்றது.

அதன் தொடர்ச்சியாக 1939-டிசம்பர் 10-ஆம் நாள் 'தமிழ்நாடு தமிழருக்கே!'—நாளாக நாடெங்கும் கொண்டாட்டங்கள் நடந்தன. இத்தகைய 'பிரிவினை' எண்ணத்துக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தது இந்தித் திணிப்பே என்று சொல்லத் தேவையில்லை. இவ்விழாவின் சிறப்பினை அண்ணாவின் அழகுத் தமிழ்ப் பேச்சு பன்மடங்கு உயர்த்திக் காட்டியது.

'தமிழன் என்றோர் இனமுண்டு;
தனியே அவர்க்கொரு குணமுண்டு'

—என்று பாடினார் நாமக்கல் கவிஞர் திரு. வெ. இராமலிங்கம் பிள்ளை.

அந்தத் தமிழனின் தனிப்பண்பையும், வீர வரலாற்றையும், வரலாற்றுப் பெருமையையும் இனிமை சொட்டச் சொட்ட எடுத்து இயம்பினார் அண்ணா. துள்ளி வரும் அவர் தம் சொல் அடுக்குகள் கேட்பவர்களின் உள்ளங்களையெல்லாமே கொள்ளை கொண்டன; அவை தமிழ் இளைஞர்களைத் துள்ளி எழச் செய்தன; துடிப்புக் கொள்ளத் தூண்டின. 'நாம் தமிழர்; நம்முடைய நாடு தமிழ் நாடு; அது நமக்கே ஆகவேண்டும்; அப்படியானால்தான், பிறமொழிகளின் ஆதிக்கத்தால் நாம் துயர் உற மாட்டோம்'—என்னும் தமிழ் உணர்வு ஓங்கி வளரலாயிற்று. இந்தி எதிர்ப்பு வெற்றியுறவும் அது ஆக்கம் அளித்தது.

## திருவாரூர் மாநாடு

1940-பிப்ரவரித் திங்கள் 21-ஆம் நாள், இந்தி கட்டாய பாடம் இல்லை என்று பள்ளிகளிலிருந்து நீக்கப்பட்டாலும், அந்த வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிவிட்டால் என்ன செய்வது? என்னும் அச்சம் தமிழகத் தலைவர்களின் உள்ளத்தைக் குடைந்த வண்ணமே இருந்தது.

இந்நிலையில், 1940-ம் ஆண்டு 24-ஆம் நாள் திருவாரூரில் மாநில நீதிக்கட்சி மாநாடு கூடிற்று. நீதிக் கட்சியின் தலைவராக முன்னர் தேர்ந்தெடுக்கப் பெற்ற பெரியாரே இம் மாநாட்டிற்கும் தலைமை தாங்கினார்.

இம் மாநாட்டில், 'தமிழ்நாடு தமிழருக்கே!' என்னும் முழக்கத்தையும், அதன் குறிக்கோளையும் விரிவுபடுத்த வேண்டும் என்னும் எண்ணம் தலையெடுத்தது.

அப்போது சென்னை மாநிலம் என்பது தமிழர்கள் வாழும் பகுதியாக மட்டும் இல்லை; பெரும்பகுதி ஆந்திர நாடும், கன்னடர்கள் வாழும் சில பகுதிகளும் மலையாளிகள் வாழும் சில பகுதிகளும் சென்னை மாநிலத்தின் அங்கங்களாய்த் திகழ்ந்தன.

## அறிஞர்கள் கண்ட திராவிடம்

தமிழ், ஆந்திரம், கன்னடம், கேரளம் மற்றும் துளு முதலான மொழிகள் யாவும் தொன்மைத் தமிழரான திராவிட மொழியொன்றிலிருந்து தோன்றிய சேய்களே என்பதும், இம் மொழிகளைப் பேசுவோர் அனைவரும் 'திராவிடர்' என்னும் ஓரின மக்களே என்பதும், சர் ஜான் மார்ஷல், கால்டுவெல் பாதிரியார் போன்ற பேரறிஞர்களின் ஆராய்ச்சி முடிவுகளாகும்.

## கவிஞர்கள் கூட்டும் திராவிடம்

தக்கசிறு பிறை நுதலும்
தரித்தநறுந் திலகமும் போல்
தெக்கணமும் அதில் சிறந்த
திராவிடநற் றிருநாடும்
..........................
கன்னடமும் களிதெலுங்கும்
கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதிரத் துதித்தெழுந்தே
ஒன்றுபல ஆயிடினும்

—என்னும் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்களின் மனோன்மணீய வரிகளும் இங்கு நோக்கத்தக்கன.

இந்தியாவிற்கென நாட்டுப்பண் இயற்றிய கவிஞர் தாகூர் அவர்கள்:

சனகண மன அதிநாயக சயகே
பாரத பாக்கிய விதாதா

பஞ்சாப, சிந்து, குசராத்த, மராட்டா
திராவிட உத்கல வங்கா

என்னும் வரிகளில், தமிழகம், ஆந்திரம், கன்னடம் ஆகிய வற்றைத் தனித் தனியே கூறாது விடுத்து, அவை யாவற்றுக்கும் பொதுவாகத் 'திராவிடம்' என்னும் சொல்லைப் பெய்திருப்பதும் ஈண்டு எண்ணி மகிழத் தக்கது.

## திராவிடநாடு திராவிடருக்கே

இவ்வாறாகத் தமிழர், ஆந்திரர், கன்னடர், கேரளர் ஆகியோர் ஒரே இனத்தவரே—திராவிட இனத்தவரே—என்னும் உண்மையறிந்தும், தங்கள் இனத்தவருக்குப் பிறருடைய மொழி ஆதிக்கத்தாலும், அரசியல் ஆதிக்கத்தாலும் ஏற்பட்டு வரும் இழிநிலையைக் களைந்தெறிய மேற்குறிப்பிட்ட நான்கைந்து மொழிக்காரர்களும், தனித் தனியே பிரிந்து நின்று போராடுவதினும், இணைந்து நின்று போர்க்கொடி ஏந்துதல், திராவிட இனம் முழுமைக்கும் நலம் பயக்குமே என்று தலைவர்கள் சிந்திக்கலாயினர். 'தமிழ் நாடு தமிழருக்கே!' என்னும் குறுகிய எல்லைக்கோட்டைப் பிற திராவிட இன மக்களுக்கும் பொருந்துமாறு விரிவுபடுத்தினால் என்ன என்னும் வினாக்குறி எழுப்பினர். அதற்கு விடையாகக் கிடைத்ததே 'திராவிடநாடு திராவிடருக்கே!' என்னும் இலட்சிய நோக்கம். இதற்குத் தீர்மான வடிவந் தந்து திருவாரூர் மாநாட்டில் முன்மொழிந்தவர், 'சண்டே அப்சர்வர்'—ஆசிரியரான திரு. பி. பாலசுப்பிரமணியம்; வழி மொழிந்தவர்கள்: சி. பாசுதேவ், அறிஞர் அண்ணா.

'திராவிடர்களுடைய கலை, நாகரிகம், பொருளாதாரம் ஆகியவைகள் முன்னேற்றம் அடைவதற்குப்—பாதுகாக்கப் படுவதற்கு—திராவிடர்களின் அகமாகிய சென்னை மாநிலம் இந்திய அமைச்சரின் நேர்ப்பார்வையின் கீழ் ஒரு தனி நாடாக (திராவிட நாடாகப்) பிரிக்கப் படவேண்டும்'

—என்னும் அத் தீர்மானத்தை வழிமொழிந்து அண்ணா எடுத்துக் கூறிய ஆணித்தரமான வாதங்கள் திருவாரூர் மாநாட்டில் குழுமியிருந்த அத்தனை பேரையும் வியப்பு வெள்ளத்தில் ஆழ்த்தின. அவர்பால் மற்ற தலைவர்கள் கொண்டிருந்த மதிப்பையும் உயர்த்தின.

## விடுதலை ஏட்டில் துணை ஆசிரியர்

இன்று திராவிடர்க்கழகக் கேடயமாக வெளிவரும் 'விடுதலை' நாளேடு அன்று நீதிக்கட்சியின் சார்பில் வாரம் மும்முறை வெளியாகிக் கொண்டிருந்தது. விடுதலையின் பொறுப்பு செட்டிநாட்டிளவரசர் திரு. முத்தையாச் செட்டியார் அவர்களிடம் இருந்துவந்தது. 1939-ஆம் ஆண்டில், விடுதலை ஏட்டின் துணை ஆசிரியர் ஆனார் அண்ணா. இவ்வாறு துணையாசிரியர் ஆனதால் கட்சிக்கொள்கைகளைத் தம் இச்சைப்படி விளக்கித் தலையங்கங்கள் தீட்டுவதற்கு அவருக்கு அருமையான வாய்ப்பினை அளித்தது. அவ்வாய்ப்பைப் பயன்படுத்தி திருவாரூர் மாநாட்டுக்குப் பிறகு 'விடுதலை'யில் 'திராவிட நாடு' பற்றிய கட்டுரைகளை அடிக்கடி அவர் எழுதி வரலானார். அவை படிப்பாளரிடையே பரபரப்பை உண்டாக்கின; இன உணர்ச்சி, பிரிவினை நோக்கம் ஆகியவை பொங்கி எழுமாறும் தூண்டின.

## முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ.

அந்நாளில், பெரியாரின் முன்னணித் தொண்டர்களில் தலையாய இடம் பெற்றிருந்தவர், முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களே. இவர், மிடுக்கான தோற்றமும் எடுப்பான குரல் வளமும் கொண்ட மிகச் சிறந்த 'தமிழ்க் கொண்டல்'. பண்டைய தமிழ்ச் சங்கம் மறு பிறவி எடுத்தாற்போல், நெல்லிக்காய்களாகச் சிதறிக் கிடந்து பழக்கப்பட்டுப்போன தமிழ்ப் புலவர்கள் நாற்பத்தொன்பதின்மரை ஒன்றுய்க் கூட்டிப் 'புலவர் குழு' அமைத்திருப்பவர். திருக்குறளுக்கு இவர் காணும் புதுப் பொருள்கள் சிந்தனையைக் கிளறுவன. பெரியாருக்கு அடுத்தாற்போல் நேர ஒழுங்குப்படி (Punctuality) செயலாற்றும் ஒரே ஒரு தமிழர் தலைவர் இவர் என்னில் மிகையன்று. நேர்மையும், நெஞ்சுரமும் கொண்ட இவர், பெரியாரிடம் கருத்து வேறுபாடு கொண்டார். எனவே தாம் அப்போது தாங்கிவந்த நீதிக்கட்சியின் பொதுச் செயலாளர் பொறுப்பைத் துறந்தார்.

## பொதுச் செயலாளர் அண்ணா

திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் இவ்வாறு விலகிவிட்ட தால் கட்சியின் செயற்குழு, 'விடுதலை' ஏட்டின் துணை யாசிரியராய் நாட்டின் கெடுதலையை நீக்கப் பாடுபட்டுக் கொண்டிருந்த அண்ணாவைக் கட்சியின் பொதுச் செயலாள ராய்த் தேர்ந்தெடுத்துப் பெருமை தேடிக்கொண்டது.

பொதுச் செயலாளர் ஆகிவிட்ட அண்ணாவுக்கு, நீதிக் கட்சியின் அப்போதைய நிலைகுலைந்த நிலை, இரங்கத்தக்க தாகத் தோன்றியது. அதற்கு வலிவும் பொலிவும் ஏற்பட வழி என்ன என்பதை ஆழ்ந்து சிந்தித்தார்.

## 'திராவிட நாடு' ஏடு

காங்கிரசுக் கட்சி பல பெரும் போராட்டங்களை நடத்தி, இந்தியா முழுவதும் ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரோடிக் கொண்டிருந்த காலம் அது. எளிய வாழ்வை மேற் கொண்ட காந்தியடிகளின் அரிய தலைமையினால் அக்கட்சி படித்தவர்களிடம் மட்டுமின்றிப் பாமரர்களிடமும் நிறையச் செல்வாக்குப் பெறும் பேற்றினைக் கொண்டிருந்தது. துணைக் கண்டம் முழுமையும் தழுவிக்கொண்டிருந்த அக்கட்சியோடு சென்னை மாநிலத்தில் மட்டுமே பரவியிருந்த நீதிக்கட்சி ஈடு கொடுத்து மீண்டும் தலைதூக்குவது என்பது அன்றிருந்த விடு தலைப் போராட்டச் சூழ்நிலையில் மிகவும் கடினம் என்றே அண்ணாவுக்குப் பட்டது. எனவே, கட்சி வளரவேண்டுமாயின், புதிய வேகம் வேண்டும்; புதிய நோக்கு வேண்டும்; புதிய பாதை வேண்டும். ஆனால், அன்று நீதிக்கட்சியில் இருந்த பெருந் தலைவர்களோ மாட மாளிகைகள், கூட கோபுரங்களை விட்டு இறங்காதவர்கள்; மண் குடிசைகளைப்பற்றித் தெரியா தவர்கள்; மஞ்சங்களில்—மலர் மெத்தையில்—புரள்வதைத் தவிர நெஞ்சொடிய நிலத்தில் பாடுபடும் ஏழைகளைப்பற்றி எண்ணாதவர்கள்; திராவிட இன நாளைக் காக்கவென்றே பிறந்து தவழ்ந்த நீதிக் கட்சியென்னும் குழந்தை அவர்க ளுடைய இரும்புப் பிடியிலே சிக்கித் திணறுவதைக் கண்டார் அண்ணா. அவர்களுடைய கரங்களினின்றும் கட்சிக் குழந்

தையை விடுவித்து, ஏழைப் பாட்டாளிகளின் இனிய மடியிலே தவழவிட்டாலன்றி, பிள்ளை பிழைக்காதென்று அவர்தம் உள்ளத்திற்குத் தெளிவாய்த் தெரிந்தது; பழைய பாட்டையிலேயே நீதிக்கட்சி அசைந்து ஆடிக்கொண்டு சென்றால் இன எழுச்சியும் ஏற்படாது; நாட்டுப் பிரிவினையும் நடக்காது என்பதையும் உணர்ந்தார். அதற்கு என்ன வழி என்று அவர்தம் சிந்தனையிலே பெரும் வினாக்குறி எழுந்தது. அதற்கு விடையாக முகிழ்த்ததே 'திராவிட நாடு' கிழமை ஏடு!

1942-இல்தான் அண்ணா அதனைக் காஞ்சீபுரத்தில் தோற்றுவித்தார். அதன் வளர்ச்சிக்கு முதன்முதல் பொருளுதவி புரிந்தவர்களுள் திரு. டி. எஸ். பொன்னப்பா குறிப்பிடத் தக்கவர் ஆவர். பின்னர், நடிப்பிசைப் புலவர் திரு. கே. ஆர். ராமசாமியும் 'திராவிட நாடு' வளர்ச்சிக்குத் தம்மாலான தொண்டைப் புரிந்துள்ளார். இதழ், கருத்தைக் கவரும் ஆற்றலுடன் அண்ணாவின் எழுத்துக்களைத் தாங்கி வந்தாலும் கண்ணைக் கவரும் அளவுக்கு அதனைச் சிறப்பாக வெளியிட்ட பெருமை திரு. அங்கமுத்து, திரு. கணேசன் ஆகியோரைச் சாரும்.

தமக்கென்று சொந்த ஏடு அமைந்துவிட்டதால், அந்தத் தாளிகை (பத்திரிகை) என்னும் வானத்தில் சிறகடித்துப் பறந்தது அவரது பேனா (எழுதுகோல்)! புதிய புதிய சிந்தனைகள், கற்பனைகள், தத்துவங்கள் அருவிபோல் பெருக்கெடுத்துப் பாய்ந்தன அந்த ஏட்டிலே!

## வேம்பா ? விளக்கெண்ணெயா ?

உலக அரங்கிலே தலைநிமிர்ந்து நடைபோட, முன்னாளின் கீர்த்தி தென்னவர்க்கு ஏற்பட, என்னென்ன வழி, துறைகள் என்பன பற்றியே எண்ணிக்கொண்டிருப்பவர் அல்லவா அண்ணா? தம் எண்ணத்தின் எதிரொலிகளையெல்லாம் எழுத்தில் வடித்து தம்முடைய 'திராவிட நாடு'—ஏட்டிலே உலவவிட்டார் அண்ணா. அத்துடன் நீதிக்கட்சியின் பொதுச் செயலாளர் முறையில் கட்சி ஏடான 'விடுதலை'யிலும் சில மணியான திட்டங்களையும் அவர் வெளியிட்டார். "திராவிட நாடு திராவிடருக்கே" ஆவதற்கு ஆக்கம் அளிக்கக்கூடியவையே அத்திட்டங்கள்.

ஆனால், ஆடையிலே அழுக்குப் படாமலே 'கார்'களில் பறக்கும் கனமான தனவான்களுக்கு அண்ணாவின் திட்டங்கள் வேம்பாய்க் கசந்தன; விளக்கெண்ணெயாய்க் குமட்டின.

வேம்பும், விளக்கெண்ணெயும் நோய் நீக்கும் மாமருந்துகள் என்று யாரே அறியார்? அவற்றைப் போன்றே நாட்டின்—இனத்தின்—மொழியின் நலிவு நோய் நீக்கும் நன் மருந்துகளே அண்ணாவின் திட்டங்கள். அவற்றின் அருமையும் பெருமையும் உணராத சிலர் அவற்றை வெளிப்படையாக எதிர்க்கத் தலைப்பட்டனர்.

கட்சிக்கு எதிர் நீச்சல் அடிக்கவேண்டிய முதல் வாய்ப்பு அப்பொழுதுதான் அண்ணாவுக்கு ஏற்பட்டது.

## சேலம் மாநாடு

சேலத்திலே 1944-ம் ஆண்டிலே நீதிக் கட்சி மாநாடு ஒன்று கூடிற்று.

அந்த மாநாடு, அண்ணாவின் வாழ்வில் மட்டுமின்றி, பெரியாரின் வாழ்விலும் ஒரு பெருந் திருப்புமுனை என்றே கூறவேண்டும். ஏனெனில், அந்த மாநாட்டோடு பெரியாரின் பொதுவாழ்வுக்கே புதைகுழி தோண்டுவதற்குரிய செயல்களில் ஈடுபட்டனர் சில செல்வந்தர்கள். பட்டம் பதவிகள் பெற்றவர்களும் படித்த மேதாவிகளும் நிறைந்த நீதிக் கட்சிக்குப் படிப்பு மணம் நுகராத பெரியார் தலைவராக இருப்பதா என்ற பொருமை அவர்களுக்கு. மேலும், தமிழர்களே பெரும் எண்ணிக்கையில் உள்ள ஓர் இயக்கத்துக்குக் கன்னட மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட ஒருவர் தலைமை தாங்குவதா என்ற கேள்வியையும் அவர்கள் எழுப்பினர்.

அவர்களுடைய இந்த இரண்டு கருத்துக்களையும் தகர்த்தெறிந்து தம் தலைவரின் புகழைக் காப்பாற்றியே தீர வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டார் அண்ணா.

'பெரியார் படிக்காதவராக இருக்கலாம்; ஆனாலும் அவர், படித்தவர்களுக்கு இணையாக மட்டுமின்றி, மேலோங்கியும் நிற்கவல்ல, நுண்மாண் நுழைபுலமும், வாதத் திறனும் படைத்த பகுத்தறிவுச் சிற்பி! பெரியாரின் முன்னோர்கள் கன்னட நாட்டினராக இருக்கலாம்; ஆனால் அவர் இப்போது

முழுக்க முழுக்க தமிழ் மண்ணின் மணத்தோடு பிறந்து தமிழர்க்கே உழைத்து வருகிறார்; அப்படியே கன்னடர்தாம் என வாதத்துக்கு ஒப்புக்கொண்டாலும், அவர் திராவிட இனத்தைச் சார்ந்தவரே! எனவே அவருடைய தலைமை தமிழர்க்கு எந்த வகையிலும் பொருத்தமானதே!'

என்றெல்லாம் மாற்றுக் கருத்துக் கொண்டவர்களின் கூற்றினை மறுத்து, பெரியாரின் தலைமை நிலைப்பதற்கு முழு முயற்சி மேற்கொண்டார் அண்ணா.

## பெரியார் பெருந்துயரம்

'சேலம் மாநாட்டிலே பெரியாரின் தலைமைக்கு ஆட்டங் கொடுத்தே தீருவது என்று சில பெரும் புள்ளிகள் அடாத செயல்களில் இறங்கவும் ஆயத்தமாக இருக்கிறார்கள்.'

—என்று அண்ணாவின் செவிகளுக்குச் செய்தி எட்டிற்று.

உடனே, எதிரிகளின் எத்தகைய தந்திரச் செயலையும் முறியடிக்கும் வகையில் பல முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகளை மேற்கொண்டார் அண்ணா. நாடெங்கும் சூறாவளிப் பயணம் செய்து, பெரியாரின் தலைமைக்குத் தொண்டர்களிடையே பெருத்த ஆதரவைத் திரட்டினார்.

அச்சமயம், பெரியார் அடைந்த மனத் துயரமோ சொல்லில் அடங்கவொண்ணாதது. தன்னுடைய தலைமைக்கு இத்துணை எதிர்ப்புக் கிளம்பும் என்று அவர் எதிர்பார்க்கவே இல்லை. வேதனையில் வெந்து கருகிக்கொண்டிருந்த அவருக்கு ஆதரவான வார்த்தைகள் கூறி ஆறுதல் அளித்து வந்தவர் அண்ணாவே. அத்துடன், பெரியாரின் தலைமையைக் காப்பாற்றும் வகையில் சேலம் மாநாட்டில் ஓர் இன்றியமையாத தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்ற உறுதி பூண்டார் அவர்.

## அண்ணாதுரை தீர்மானம்

அப்போது, அண்ணா உருவாக்கியுள்ள தீர்மானத்துக்கு என்ன தலைப்பிடுவது என்று ஒரு சர்ச்சை எழுந்திருக்கிறது. அதைக் கண்ட பெரியார்,

"ஏன், அண்ணாதுரைதானே, இந்தத் தீர்மானத்தைத் தயாரித்திருக்கிறார்! அவர் பெயராலேயே, 'அண்ணாதுரை தீர்மானம்' என்றே போட்டுவிட்டால் போகிறது" என்றாராம்.

அவர் கூறியதைக் கேட்ட சிலர், "இப்படித் தனிப்பட்ட மனிதர் பெயரில் மாநாடுகளில் தீர்மானங்கள் நிறைவேற்றும் வழக்கமில்லையே" என்றார்களாம்.

அதற்குப் பெரியார்,

"ஏன்? காங்கிரசுக் கட்சியில் அப்படிச் செய்திருக்கிறார்களே! ஒரு முக்கியமான சிக்கலுக்குத் தீர்வு காண்பதற்காக சத்தியமூர்த்தி அய்யர், காங்கிரசு மாநாட்டிலே ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். அதைச் 'சத்தியமூர்த்தி தீர்மானம்'—என்றே நிறைவேற்றினார்கள். அதைப் போல நாமும் ஏன், 'அண்ணாதுரை தீர்மானம்' என்று நிறைவேற்றக் கூடாது?"

என்று எதிர்க் கேள்வி எழுப்பவே பிறகு, 'அண்ணாதுரை தீர்மானம்' என்றே சேலம் மாநாட்டில் நிறைவேற்றுவது என்று முடிவாயிற்றாம்.

## எதிர்ப்பைத் தகர்க்க அண்ணாவின் ஏற்பாடு

இவ்வாறு மாநாட்டில் அண்ணா தீர்மானம் கொணர்ந்து நிறைவேற்றப் போகிறார் என்னும் தகவல் அறிந்ததும் எதிர்த் தரப்பினர் அதைத் தோற்கடிக்கும் முயற்சியில் கச்சை கட்டிக்கொண்டு இறங்கினர். பிரதிநிதிக் கட்டணம் கட்டி முன்கூட்டியே அனுமதிச் சீட்டுப் பெற்றவர்களே அனுமதிக்கப்படுவார்கள் என்று வரையறை செய்ததுடன் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு மட்டும் நிறைந்த எண்ணிக்கையில் அனுமதிச் சீட்டுக்கள் கிடைப்பதற்கும் வழி செய்துவிட்டனர். மேலும், மாநாட்டுப் பந்தலின் நான்கு பக்கங்களிலுமுள்ள நுழைவாயில்களில் 'கூர்க்காக்களை' வேறு நிறுத்தி பெரியாரைச் சார்ந்தவர்கள் உள்ளே வர முடியாதவாறும் செய்துவிட்டனர்.

அதே சமயம், அண்ணா தாம் மாநாட்டில் நிறைவேறுவதற்கென்று கொடுத்துள்ள தீர்மானத்தைத் திரும்பப் பெற வேண்டும் என்பதற்குத் தூதும் விடுத்தனர்.

அண்ணாவோ, "நான் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன்; அதன் முடிவு என்ன என்று தெரிந்துகொள்ளத் தானே சேலம் வந்திருக்கிறேனே தவிர, அதைத் திரும்பப் பெறுவதற்கு அல்ல" என்று உறுதியாகக் கூறிவிட்டார்.

அத்துடன், மாநாடு நடைபெறும் நாளைக்கு முன்பே சேலத்துக்கு வரவேண்டாம் என்று பெரியாரையும் தடுத்து விட்டார். அண்ணு இவ்வாறு தடுத்ததற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

### பெரியாரின் பலவீனம்

சாதாரணமாகப் பெரியாரிடம் ஒரு பலவீனம் உண்டு. அவர் எவ்வளவுக்கெவ்வளவு அஞ்சாமை நிறைந்தவரோ அவ்வளவுக்கவ்வளவு விட்டுக் கொடுத்துவிடும் மனப் போக்கும் கொண்டவர். செல்வாக்குமிக்க 'பெரிய மனிதர்கள்' அவருக்கு உரிய மரியாதை அளித்து ஒன்றைச் செய்யச் சொன்னுல் செய்துவிடுவார்; ஒரு தீர்மானத்தை மாற்றிக்கொள்ளச் சொன்னுல் மாற்றிக்கொண்டு விடுவார். இதனுல் அடிப்படைக் கொள்கைகளில் உறுதியே இல்லாதவர் என்று நாம் முடிவு கட்டி விடக்கூடாது. 'பெரிய மனிதர்கள்' வார்த்தைக்கு மதிப்பளிக்க வேண்டும் என்னும் பெருந்தன்மையே காரணம்.

இதே பெருந்தன்மையைப் பயன்படுத்திக்கொண்டு எதிர்த்தரப்பில் உள்ள பெரும் புள்ளிகள் யாரேனும் நேரில் வந்து எங்கே மாநாட்டுக்கு முன்னரே பெரியாரின் மனத்தை மாற்றிவிடுவார்களோ, வஞ்சகமாக அவருக்குப் பள்ளம் பறித்து விடுவார்களோ என்னும் அச்சம் அண்ணுவுக்கு; அதனுல்தான் மாநாட்டுக்கு முன்னர் பெரியார் சேலம் வராதபடி பார்த்துக்கொண்டார் அவர். பெரியாரும் அண்ணுவின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடந்து கொண்டார்.

### புகழ்பெற்ற தீர்மானம்

வரலாற்றுப் புகழ் படைத்த அந்த 'அண்ணுவின் தீர்மானம்'தான் என்ன?

1. வெள்ளையன் ஆட்சியில் தரப்பட்ட சர், இராவ் பகதூர், திவான்பகதூர், இராவ்சாகிப் போன்ற கௌரவப் பட்டங்கள் பெற்றவர்கள், அந்தப் பட்டங்களைத் துறக்க வேண்டும். மீண்டும் அவர்களோ, மற்றவர்களோ, அத்தகைய பட்டங்களையும், விருதுகளையும் வெள்ளையரிடமிருந்து பெறக்கூடாது.

2. உள்ளாட்சி மன்றத்தில் தலைவர் முதலிய பதவிகள், கௌரவ மாஜிஸ்டிரேட், நிருவாகத் தொடர்பு கொண்ட மற்ற பதவிகளை உடனே இராசிநாமாச் செய்வதுடன் மீண்டும் பெறுதல் கூடாது.

3. தங்கள் பெயருக்குப் பின்னர் உள்ள சாதிப் பெயரைக் குறிக்கும் பட்டங்களை விட்டொழிக்க வேண்டும். எதிர் காலத்தில் எவரும் பயன்படுத்தவுங் கூடாது.

4. தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் (Justice Party நீதிக்கட்சி) என்ற பெயரை மாற்றி **திராவிடர் கழகம்** என்று பெயரிடப்பட வேண்டும்.

## கடுமையான எதிர்ப்பு

அண்ணாவின் மேற்கண்ட தீர்மானம் கட்சியின் பொருள் ஆய்வுக் குழுவில் (Subjects Committee) கடுமையான முறையில் விவாதிக்கப்பட்டது. நீதிக்கட்சியின் பழம்பெரும் புள்ளிகள், அச்சுறுத்தல், மிரட்டல் முதலான முறைகளையும் கையாண்டு :தீர்மானங்களைத் தோற்கடிக்க முயன்றனர். அதற்குக் காரணம், தங்கள் பொதுவாழ்வுப் பெருமைகள் அனைத்தும் புதைகுழிக்குப் போகப் போகின்றனவே என்னும் அச்சந்தான். ஏனெனில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு விட்டால் பிறகு வெள்ளையர்களின் தயவில் அவர்கள் சலுகை ஏதும் பெற முடியாது; பட்டம்—பதவி—விருதுகள் பெற்று வெற்றிச் செருக்கிலே திளைக்க முடியாது! தாங்கள் உயர்ந்த சாதிக்காரர்கள் என்னும் ஆணவத்தோடு மற்ற சாதிக்காரர்களைப் புறக்கணிக்க முடியாது; 'திராவிடர் கழகம்' என கட்சியின் பெயரே மாறிவிடுவதால், 'தமிழர்க்குத் தலைவராகும் தகுதியேது?' என்னும் பொல்லாக் காரணம் கூறி திராவிட இனத்தாருள் ஒருவரான பெரியாரை விரட்டியடிக்க முடியாது.

இந்த விளைவுகளையெல்லாம் எண்ணிப் பார்த்தே, நீதிக் கட்சியின் பழந்தலைவர்கள் அண்ணாவின் தீர்மானங்களைத் தங்கள் ஆற்றல்கள் அனைத்தையும் கொட்டி எதிர்த்துப் போராடினர். 35 மணிநேர விவாதத்துக்குப் பின்னரும் 35 வயதே ஆன அண்ணா ஊன்றி நின்ற கால்களைத் தீட்டித்

தந்த தீர்மான வாசகங்களை அப்பால், இப்பால், பெயர்த்தெடுத்து வைக்க முடியவில்லை அப்பெரிய மனிதர்களால்!

### பொதுமக்கள் ஆர்வம்

இந்நிலையில் பொது மாநாடு தொடங்கிற்று.

அதில் என்ன நடக்கப்போகிறது என்று அறியும் ஆர்வத்துடன், சேலம் மாநகரமே பொங்கி வழிந்தது, பொதுமக்கள் வெள்ளத்தால்! எங்குப் பார்த்தாலும், மாநாடு பற்றிய ஊகங்களும், ஆருடங்களுமே எதிரொலித்தன!

அதே சமயம், எதிர்த்தரப்பினர் பெரியாரைக் கவிழ்ப்பதற்குத் தம் கைவரிசையையெல்லாம் காட்டியவண்ணம் இருந்தனர். முன்னர் குறிப்பிட்டவாறு, பெரியாரைச் சார்ந்தவர்கள் உள்ளே புக முடியாதபடி பந்தல் நுழை வாயில்களில் தடுத்து நிறுத்தப்பட்டனர். இதனால் பந்தலுக்கு வெளியே இயக்கத் தோழர்களும் பொதுமக்களும் ஆயிரக்கணக்கில் திரண்டு அலைகடல் போல் ஆர்ப்பரித்தனர். பெருங் கலவரமே மூண்டுவிடுமோ என்று அஞ்சும் அளவுக்கு நிலைமை மோசமாகிக் கொண்டிருந்தது.

அப்போது தஞ்சை மாவட்டத்திலிருந்து வந்திருந்த இயக்க முன்னணி வீரர்களில் குறிப்பாக பட்டுக்கோட்டை அரங்கநாதன், திருவாரூர் டி. என். இராமன், தென்னன் முதலானோரும் சேலம் சித்தையன் போன்றவர்களும் கலவர நிலைமையைத் தவிர்க்கும் பொருட்டுத் தக்க நடவடிக்கையொன்றை மேற்கொண்டனர். பொதுமக்களின் ஆர்வத்தைப் புரிந்துகொள்ளாமல், குழப்பத்துக்கு வழிவகுத்து—வழிமறித்துக் கொண்டிருந்த கூர்க்காக்களை அப்பால் அகலச் செய்து, வெளியில் வெள்ளம்போல் திரண்டிருந்த கூட்டத்தினர் உள்ளே வரவும் வழி செய்தனர். இதனால் கலகம் நடைபெறுவது தவிர்க்கப்பட்டது.

பின்னர், பொது மாநாட்டில், அண்ணாவின் தீர்மானத்தை ஒட்டியும் வெட்டியும் கருத்துரைகள் வழங்கப் பெற்றன. இறுதியில் அண்ணா அளித்த விளக்கவுரை அங்குக் குழுமியிருந்த ஆயிரக்கணக்கானவர்களின் உள்ளங்களையும் கொள்ளை கொண்டது. அவர்கள் அடிக்கடி கையொலி எழுப்பி, ஆர்வத்தைக் காட்டி, அண்ணாவின் தீர்மானத்துக்

குத் தங்கள் உளம் நிறைந்த ஆதரவை உற்சாகம் பொங்க வெளிப்படுத்தினர்.

அதே சமயம், அவர் தீர்மானத்தை எதிர்த்த, பட்டம்—பதவிகளில் ஆசைகொண்ட பெரிய மனிதர்கள் மேடைமீது தொடர்ந்து அமர்ந்திருக்கவே வெட்கம் கொண்டவர்களாக, விருப்பம் இல்லாதவர்களாக, ஒருவர்பின் ஒருவராக இருந்த இடம் தெரியாமல் எழுந்து மறைந்தனர்.

முடிவில், திரண்டிருந்த மக்கள் வெள்ளத்தால் எவ்வித எதிர்ப்பும் இன்றி பெருத்த ஆரவாரத்திற்கிடையே ஒரே மனதாய் நிறைவேற்றப்பட்டது 'அண்ணாவின் தீர்மானம்!'

## விளைவுகள் என்னென்ன ?

இவ்வாறு 'அண்ணாவின் தீர்மானம்' நிறைவேற்றப்பெற்றதால் ஏற்பட்ட விளைவுகள் என்னென்ன?

1. தியாகராயர், டி. எம். நாயர், நடேச முதலியார் முதலானவர்களின் அடிச்சுவட்டில், திராவிட இன மாந்தரின் இழிநிலை ஒழிவதற்குத் தேவையான அஞ்சாமை மிக்க பெரியாரின் தலைமை காப்பாற்றப் பெற்றது.

2. கட்சி உறுப்பினர்களை, ஆங்கிலேயரால் அளிக்கப்பட்ட பட்டம்—பதவிகளைத் துறக்கச் சொன்னதன்மூலம் "வெள்ளையனுக்கு வால் பிடிக்கும் கட்சி'—என்று நீதிக்கட்சியின்மீது நீண்ட நாட்களாகவே இருந்துவந்த பழி அகல வழி வகுக்கப்பெற்றது.

3. செல்வச் சீமான்கள்தாம் அரசியல் களத்தில் தம் இச்சைப்படியெல்லாம் செல்வாக்குப் பெற முடியும் என்னும் குறுக்குச்சுவர் உடைத்தெறியப்பட்டது.

4. மனச்சான்றுக்கு இயன்றவரை மாறுபடாமல், தனக்குச் சரியென்று படும் கொள்கையில் உறுதியாக நின்று மக்களுக்காகப் பணியாற்றும் எந்த ஏழை மனிதனும்கூட அண்ணாவைப்போல் மாட்சிமை பெறலாம் என்னும் நிலைமை உருவாயிற்று.

5. சாதிகளின் பெயரால் உயர்வு—தாழ்வு கற்பிக்கும் ஆணவப் 'பேரானது' சமூகப் பெருந்தருவை அரிக்காதவாறு தவிர்க்கப்பட்டது.

6. 'திராவிடர் கழகம்'—என்னும் பெயரில், புதியதொரு மறுமலர்ச்சி இயக்கம் தமிழகத்துக்குக் கிடைத்தது.

## திராவிடர் தளபதி

இவ்வாருகப் பழமைத் தாகமும், அடிமை மோகமும் கொண்டவர்கள், பகலவனைக் கண்ட பனித்திரைபோன்று விலகி மறைய,

இளைஞர்களின் பாசறையாகிய, இனநலன் காக்கும் கோட்டையாக திராவிடர் கழகம் எழுந்தது!

# 13. தளபதி அண்ணா !

## தாயும் தந்தையும்

திராவிட இனத்தைச் சார்ந்த மக்கள் இன்று எவருக்கும் அடிபணியாமல்—கால் பிடிக்காமல்—அரசாங்கத் துறைகளிலும் சமூக நிலையிலும் தலைநிமிர்ந்து நடப்பதற்கு ஊன்றுகோலாய்ப் பணியாற்றியவர்—ஒளிவிளக்காய் வழிகாட்டியவர்—பெரியாரே என்னில் மிகையன்று.

ஆனால், அவருடைய சிந்தனைப் பட்டறையினின்றும் தெறித்து விழுந்த 'இன உணர்ச்சி'—என்னும் சிறு பொறி, புழுதிமண்ணில் புதைந்து போகாமல், மழை நீரால் அணைந்துவிடாமல், சருகுகளையும் விறகுகளையும் கொண்டு வந்து சேர்த்து அதனைப் பெருந்தீயாகக் கொழுந்துவிட்டு ஓங்கச் செய்த பெருமையில் அண்ணா அவர்களுக்கும் நிரம்பப் பங்கு உண்டு.

ஆழ்ந்து சிந்திப்போர்க்கு இன்னுமோர் உண்மை தெளிவாகப் புலனாகும். திராவிடர் கழகம் என்னும் குழந்தைக்குப் பெரியார் ஈ. வே. ரா. தந்தை என்னில் அதன் தாய், அண்ணா அவர்களே!

மாற்றுக் கருத்துக் கொண்டவர்களும்கூட வாய்கூசாது பெயரிட்டு வழங்கிய அந்த 'அண்ணாவின் தீர்மானம்'—மட்டும் சேலம் மாநாட்டிலே அண்ணா அவர்களால் கொண்டு வரப்படாமல் இருந்திருந்தால்...அது நிறைவேற முடியாமல் தோற்கடிக்கவும் பட்டிருந்தால்—தமிழக மண்ணில் 'திராவிடர் கழகம்'—என்னும் ஓர் அமைப்பே பிறவியெடுத்திருக்குமா என்பது ஐயப்பாடே! எனவே 'திராவிடர் கழகத்தைப் பெற்றுத் தந்த அன்னை, அண்ணாவே' என்பது எல்லா வகைகளிலும் பொருந்துவதே ஆகும்.

## கழகத்தை வளர்த்த கடமை வீரர்

ஒரு குழந்தையைப் பெற்றுத் தந்துவிட்டால் மட்டும் போதுமா? அதைச் சீராட்டிப் பாலூட்டி வளர்க்க வேண்டி

யதும் ஒரு தாயினுடைய கடமை அல்லவா? அந்தக் கடமையை உணர்ந்து செவ்வனே செயலாற்றும் பொறுப்புள்ள தாயாகவே, தம்முடைய பேச்சு எழுத்து என்னும் பாலமுது ஊட்டிக் கழகத்தை வளர்ப்பதில் கண்ணுங் கருத்துமாக இருந்தார் அண்ணு.

பகுத்தறிவுக் கொள்கைகளின் நறுமணம் நாடு, நகரம், பட்டி தொட்டி யெங்கும் கமழ்ந்து தழைக்கும் பொருட்டு தாம் பிறந்த ஊரான காஞ்சிபுரத்தில் 1942-இல் 'திராவிட நாடு' என்னும் கிழமை இதழ் ஒன்றைத் தோற்றுவித்தார் அல்லவா? அதில் வளமான கதை, கட்டுரைகளை வரைந்து இளம் நெஞ்சங்களையெல்லாம் இறுகத் தழுவி, கழகத்தின் பால் ஈர்த்து வந்தார் அண்ணு.

சிற்றூர்களிலும், பேரூர்களிலும் உருவான அமைப்பாக திராவிடர் கழகக் கிளைகள் எழுவதற்கு முறையான ஏற்பாடுகளை அவர் செய்தார்.

மாநிலமெங்கும் ஆங்காங்கே மாவட்டக் கழகங்கள் அமையவும் மாநாடுகள் நிகழவும் ஆவன புரிந்தார்.

## திருச்சி மாநாட்டின் சிறப்பு

அவருடைய ஆற்றலின் மணி முடிபோல் அந்த நாளில் கொண்டாடப் பெற்றது, சேலம் மாநாட்டுக்குப் பின்னர் திருச்சியில் நடைபெற்ற திராவிடர் கழக மாநில மாநாடு ஆகும்.

இம் மாநாட்டில் திராவிட நாடு ஏன் பிரிய வேண்டும் என்பதற்குத் தருக்க (logical) முறையில் அவர் அடுக்கிய ஆதாரங்கள், மறுப்புக்கள் அத்தனையையும் பொடிப் பொடி ஆக்கின.

இந்தியத் துணைக்கண்டம் ஆங்கிலேயர் துப்பாக்கி முனையைக் காட்டி, ஒரே நாடாக உருவாக்குதற்கு முன்னர் எவ்வாறு சின்னஞ்சிறு நாடுகளாகப் பிரிந்து கிடந்தது? ஐரோப்பாக் கண்டத்தில் பல்வேறு சிறிய நாடுகள் இருந்த போதிலும் எவ்வாறு வளம் பெருக்கி வாழ்கின்றன?

'ஒட்டமான்' என்னும் பேரரசிலிருந்து பிரிந்த துருக்கி நாடு எவ்வாறு வல்லரசாக வளர முடிந்தது; அதேபோல்

இந்தியப் பேரரசிலிருந்து பிரியும் திராவிட நாடு ஏன் வல்லரசாகத் தலையெடுக்க முடியாது?

அசோகர், கனிஷ்கர், ஹர்ஷர், சமுத்திர குப்தர், அக்பர் முதலான மாமன்னர்கள் காலத்திலும்கூட, எங்ஙனம் திராவிட நாட்டுப் பகுதி அந்நியர் ஆளுகைக்கு ஆட்படாமல் தனித்து இயங்கியது?

சமயம், மொழி, கலை, உளப்பாங்கு, வரலாற்றுப் பின்னணி ஆகியவற்றின் அடிப்படையில் தனி இயல்பு களோடு என்னென்ன இனங்கள் இந்தியாவில் உள்ளன?

முரண்பாடுகள் உள்ள தனி இயல்புகளைக் கொண்ட இனங்களை ஒன்றாக இணைத்துக் காட்டுவதால், தந்திரத்தில் வல்ல ஓர் இனம், பிற இனங்களை அடிமை கொண்டு ஆட்டிப் படைக்கும் நிலைமையைத் தடுக்கவும், இன வேற்றுமைகள் மலையென வளர்ந்து பிற்காலத்தில் இரத்தக் களரி ஏற்படுவதைத் தவிர்க்கவும் இந்தியாவை ஏன் இன வாரியாகப் பிரிவினை செய்யக்கூடாது?

அவ்வாறு பிரிவினை செய்வதால் ஒரு வட்டாரம், பிற வட்டாரங்களைச் சுரண்டுகின்ற கொடுமையை எவ்வாறு ஒழிக்க முடியும்?

தனித்தனி வட்டாரங்களாக இந்தியா பிரிக்கப்பட்டு விட்டால், ஒவ்வொரு வட்டாரமும் ஆங்காங்குள்ள வசதி, வாய்ப்புகளுக்கு ஏற்ப தன்னுடைய பொருளாதார நிலையை ஏன் வளர்த்துக்கொள்ள முடியாது? என்பனவற்றைப் பற்றி யெல்லாம் அழகாகவும், தெளிவாகவும், விரிவாகவும், முறை யாகவும் எடுத்துரைத்தார் அண்ணா. அவருடைய பேச்சு குற்றால அருவியின் குளுகுளுப்பும் இளமைத் துடிப்பும் பூண்டு மாநாட்டில் குழுமியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களின் உள்ளங்களையும் கொள்ளை கொண்டது.

திராவிடர் கழகச் செடியின் வளர்ச்சிக்கு திருச்சி மாநாட்டு நிகழ்ச்சிகள் அருமையான உரம் ஆக அமைந்தன. பொதுமக்கள் திரளாகக் கழகத்தில் சேரும் நிலை உருவா யிற்று. தொண்டர்கள் உற்சாகத்துடன் செயலாற்றத் தொடங்கினர்.

**மாணவர்களை எழுப்பிய மணி ஓசை!**

எந்த ஓர் இயக்கமும் தன் இலட்சியத்தை நோக்கி வெற்றிப் பயணம் நடத்த வேண்டுமென்றால், மாணவர்களாகிய படைக்கலன்கள் கண்டிப்பாகத் தேவை.

மாணவர்கள் பங்கு கொள்ளாத எந்த இயக்கமும் மண்ணில் வேர் பிடிக்க முடியாத செடியாகவே மடியும்.

'மாணவர்கள் அரசியலில் பங்கு கொள்ளக்கூடாது என்று வாய் வேதாந்தம் பேசலாமேயன்றி அவர்களுடைய துணையின்றி எந்தக் கிளர்ச்சியும் வெற்றியுறாது. அதுவும் இந்த இருபதாம் நூற்றாண்டில் உலகம் முழுவதும் நிகழ்ந்த அரசியல் மாற்றங்களை ஊன்றிப் பார்ப்பவர்களுக்கு மாணவ மணிகளின் உண்மையான ஆற்றல் நன்கு புரியும்.

பல ஆப்பிரிக்க நாடுகள் 'இருண்ட கண்டம்'—என்னும் இழிந்த நிலையைக் கிழித்தெறிந்து, 'விடுதலை' என்னும் ஒளி விளக்கை ஏந்தி இன்று உலக அரங்கிலே தலைநிமிர்ந்து நிற்பதற்கு அவ்வந் நாட்டு ஆப்பிரிக்க மாணவரே காரணம் ஆவர்.

மக்களாட்சி நெறிபோற்றும் தலைவராக உருவெடுத்துப் பின்னர் செஞ்சீனப் பொதுவுடைமைப் போக்கை இந்தோனேசியாவிலும் புகுத்த முயன்ற டாக்டர் சுகர்ணோவை அரண்மனை வாழ்வைத் துறக்கும்படி செய்து தெருவில் அலைய விட்டதில் அந்நாட்டு மாணவர் இயக்கமே பெரும் பங்கு பூண்டதையும் நாம் அறிவோம்.

ஏன், நம் இந்திய நாட்டு விடுதலைக்கே, காந்தியடிகளின் 'ஒத்துழையாமை இயக்கத்தின் பங்குதாரர்களாக' மாணவர்கள் பலர் ஆகவில்லையா? தமிழ் இலக்கியத்தில் முதல் முதல் வரலாற்றுப் புதினம் படைத்தவர் என்னும் பெருமைக்குரிய 'கல்கி—ரா. கிருட்டினமூர்த்தி' அவர்களும், மற்றும் சிலரும் அவ்வாறு படிக்கும்பொழுதே தேசீய இயக்கத்தில் பங்கு கொண்டவர்கள் தாமே?

எனவே, திராவிடர் கழகம் செழித்து வளரவேண்டுமானால், அதற்கு மாணவர்களிடையே செல்வாக்கு உண்

டாக வேண்டும் என்று அண்ணு எண்ணினர். தம் எண்ணத்துக்கு ஏற்பச் சீரான திட்டங்களை வகுத்தார்.

அவருடைய விரைவு மிக்க செயலாற்றலால், மாணவர் உலகுக்கும் திராவிடர் கழகத்துக்கும் நெருங்கிய உறவு மலர்ந்தது. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயிலும் மாணவர்கள் அண்ணுவின் கற்கண்டுப் பேச்சைக் கேட்டுக் கருத்தைப் பறிகொடுத்தனர். அவர் நடத்திய 'திராவிட நாடு'—இதழையும், அவரது புத்தகங்களையும் வைத்துக் கொண்டிருப்பதை ஒரு பெருமையாகக் கருதினர்.

அண்ணுவின் அடிச்சுவட்டில் நடைபோட முனைந்து நின்ற ஆயிரக்கணக்கான மாணவர்களின் ஆர்வம் அனைத்தையும் ஒருமுகப்படுத்தும் நோக்கத்துடன் விரைவில் "திராவிடர் மாணவர் கழகம்' உருவாக்கப் பெற்றது.

## நாவலர்—பேராசிரியர் சந்திப்பு

நீதிக் கட்சியோடு தொடர்பு கொண்டிருந்த காலத்தில் ஒருமுறை அண்ணு, சொற்பொழிவு நிகழ்த்துவதற்காகச் சிதம்பரத்தில் உள்ள அண்ணுமலைப் பல்கலைக் கழகம் சென்ருர். 'ஆற்ருேரம்'—என்னும் தலைப்பில் தமிழில் பேசினுர். "உலகம்—பழையதும், புதியதும்' (The world Old and New)—என்னும் தலைப்பில் ஆங்கிலத்திலும் உரையாற்றினுர். அவருடைய சொற்பொழிவுத் திறனைக் கண்டு அங்குக் குழுமியிருந்த மாணவர்கள் வியப்பில் ஆழ்ந்தனர்; மகிழ்ச்சியில் மிதந்தனர்.

சொற்பொழிவுகள் முடிந்த பின்னர் மாணவர்களில் இருவர் அண்ணுவைத் தனிமையில் சந்தித்து தங்கள் பாராட்டைத் தெரிவித்தனர்; அதேபோழ்து, ஓர் ஐயப்பாட்டையும் எழுப்பினர்.

"உங்கள் சொற்பொழிவில் சமதர்மம் (Socialism) காணப்படுகிறது. ஆனுல், நீங்கள் ஏன் அந்தப் பதவி வேட்டையாடும் பிற்போக்கான பணக்காரக் கட்சியாகிய நீதிக் கட்சியில் இருக்கவேண்டும்?" என்று கேட்டனர்.

"அந்தக் கட்சியில் நான் ஏன் இருக்கிறேன் என்ருல், அந்தப் பணக்காரக் கட்சியைச் சனநாயக, சமதர்மக் கட்சியாக மாற்ற வேண்டும் என்பதற்காகத்தான்."

—என்று வேடிக்கையாக விடையிறுத்தார் அண்ணா. (தம்முடைய இந்த வாக்கை பிற்காலத்தில் எவ்வாறு மெய்ப்பித்தார் என்பதை முன்னரே கண்டோம்).

அவருடைய பேச்சினால் கவரப் பெற்ற அந்த இரு மாணவர்கள், பேராசிரியர் க. அன்பழகன், நாவலர் இரா. நெடுஞ்செழியன் ஆகிய இருவருமே ஆவார்கள்.

## மாணவ மணிகள்

பிற்காலத்தில் திராவிடர் மாணவர் கழகம் பிறவியெடுத்தபோது அதன் வளர்ச்சிக்காக மேலே கூறிய இந்த இரு மாணவமணிகளையும் நன்கு பயன்படுத்திக் கொண்டார் அண்ணா.

இவர்கள் இருவர் மட்டுமின்றி, ஏ. பி. சனார்த்தனம், இரா. இளம்வழுதி, தவமணிராசன், கவிஞர் கருணானந்தம், என். எஸ். இளங்கோ, கே. ஏ. மதியழகன் முதலானோர் தொடக்க காலத்தில் மாணவர் கழகம் வேரூன்றப் பாடுபட்டவர்கள் ஆவார்.

கல்லூரி மாண்வரிடையேதான் கழகம் செல்வாக்குப் பெற முடியுமா, பள்ளிகளிலும் அதன் மணத்தை ஏன் பரப்ப முடியாது, என்று அறைகூவல் விடுப்பவர் போல் திறம்படச் செயலாற்றியவர் திரு. கலைஞர். மு. கருணாநிதி. திருவாரூர் உயர்நிலைப் பள்ளி மாணவர்களைத் தம் பதினாறு வது வயதிலேயே ஒன்று திரட்டி கழகப் பணியில் ஈடுபடுத்தினார். கையெழுத்து ஏடு ஒன்றை வெளியிட்டு மாணவத் தோழர்களுக்குக் கருத்து விளக்கம் அளித்தார். அதுவே இன்று 'முரசொலி'—நாளேடாக வளர்ந்திருப்பதாகும்.

சென்னையில் மாணவர் கழகம் வளர்ச்சியுறுவதற்கு அரும்பாடுபட்டவர்களுள் திரு. ஏ. எஸ். வேணு என்பார் குறிப்பிடத்தக்கவர் ஆவர். அகில இந்திய அஞ்சல் ஊழியர்களின் தலைவர்களில் ஒருவரான திரு. ஏ. எஸ். இராசன் எம். ஏ., அவர்க்ளின் உடன் பிறப்பாளரான திரு. வேணு, 'இளைஞர் சொற்போர்க் கழகம்', 'செல்வம் படிப்பகம்', 'அம்பேத்கார் நூல் நிலையம்'—போன்ற அமைப்புகளை நிறுவி இளைஞர்களைத் தட்டி யெழுப்பும் பணியில் ஈடுபட்டிருந்தார்.

இன்னும் எத்தனையோ மாணவமணிகள் தமிழ் நாட்டின் மூலை, முடுக்குகளில் எல்லாம் கழகத்தை வளர்ப்பதற்காக அயராது உழைத்தனர்.

## இரண்டாம் முறை இந்தித் திணிப்பு

1946-ஆம் ஆண்டில் தமிழ் மொழிக்கும், தமிழ் மாணவர்களுக்கும் சோதனைக் காலம் தோன்றியது. பள்ளிகளில் இந்தியைக் கட்டாயமாகப் படிக்கத்தான் வேண்டும் என்று அப்போதைய சென்னை மாநில இடைக்காலக் காங்கிரசு அரசு பிறப்பித்திருந்த ஆணையே அச் சோதனையாகும்!

1938-இல் முதன் முதல் திரு. சி. இராசகோபாலாச்சாரியாரால் இந்தி திணிக்கப்பட்டதும், தமிழகமே திரண்டெழுந்து முதல் மொழிப் போரை நடத்திச் சிறை சென்றதும், தாளமுத்து, நடராசன் ஆகிய இறப்புக்கஞ்சா இரு மறவர்கள் தங்கள் இன்னுயிரைப் பரிசிலாக வழங்கியதும், அவ்விந்தித் திணிப்பு 1940-இல் ஒழிந்ததும் தமிழக மக்களின் நினைவில் அழியாத் தழும்புகளாகவே நிலைபெற்றிருந்தன.

அப்போது கல்வியமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த திரு. டி. எஸ். அவிநாசிலிங்கம் செட்டியாருக்கு மட்டும் தமிழக மக்களின் மாளாத் துயரம் ஏனோ புரியவில்லை.

திரு. அவிநாசிலிங்கம் செட்டியார் உயர்ந்த பண்பாளர்; சிறந்த ஒழுக்கசீலர் ; அறப்பணிகள் பல புரியும் ஆன்றோர் ; மணம் புரிந்து கொள்ளாத ஆன்மீகவாதி; அதே சமயம், அழுத்தமான காந்தியவாதி.

காந்தியவாதிகளுக்குப் பொதுவாகவே ஒரு பலவீனம் உண்டு. காந்தியடிகள் எந்தச் சூழ்நிலையில், என்ன நோக்கத்தில், எதைச் சொல்லியிருந்தாலும், அதைப்பற்றித் தம் சொந்தச் சிந்தனைப் பட்டறையில் நடைமுறை நிலைமைகளுக்கும் பட்டறிவுக்கும் (Experience-அனுபவம்) ஏற்ப கொஞ்சமேனும் உரைத்துப் பார்க்காமல் அப்படியே கண்ணை மூடிக் கொண்டு பின்பற்றுவதே அந்தப் பலவீனம். அத்தகைய பலவீனம் திரு. அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்களுக்கும் உண்டு.

இதனுல் காந்தீயத்தையே ஒட்டு மொத்தமாகக் குற்றம் சாட்டுகிறேம் என்று பொருள் கொண்டுவிடக்கூடாது. அதே சமயம் அதில் காணப்படும் நடைமுறைக்கு ஒவ்வாத வற்றை எடுத்துச் சொல்வதும் தவருகாது. காந்தியடிகள் விடாப்பிடியாக வற்புறுத்தி வந்த மதுவிலக்குக் கொள்கையைப் பல காங்கிரசு முதலமைச்சர்களே தளர்த்துவதில் முனேந்து விட்டதும், கதர் உற்பத்தியால் காலவிரயமும், காசு விரயமுமே கண்ட மிச்சம் என்னும் கருத்து மேலோங்கி வருவதுமே நம்முடைய கூற்றுக்குத் தக்க சான்று களாகும்.

எனவே, மேலே குறிப்பிட்ட பலவீனத்துக்கு ஆட்பட்ட திரு. அவிஞசிலிங்கம் செட்டியார், காந்தீயத் திரையைக் கண்களுக்குப் போட்டுக்கொண்டு, மறைமலேயடிகளால் ஊற்றப்பெற்று விரைந்து வளர்ந்து கொண்டிருந்த தனித் தமிழ்ப் பற்றின் செழுமையையும், பெரியாரால் உமிதூவி ஊதப்பெற்ற இந்தி எதிர்ப்பு உணர்ச்சியின் வெம்மையையும், காண மறுத்ததில் வியப்பேதும் இல்லே.

அவர் சிறந்த அறவாணர் என்பதால், அவரால் தமிழுக்ும் தமிழ் நாட்டுக்கும் உண்டாக்கக்கூடிய ஊறுகளேயெல்லாம் நல்லறிவாளர் எங்ஙனம் பொறுப்பர்? ஆகவே, அவர் தம் இந்தித் திணிப்பு முயற்சியை எதிர்ப்பதில் தீவிரமாக இறங்கிற்று திராவிடர் கழகம்!

## தளபதி ஆனுர்

அந்த எதிர்ப்பு அணியின் இணேயற்ற தளபதியாக அறிஞர் அண்ணு அவர்கள் தேர்ந்தெடுக்கப்பெற்ருர்.

அவருடைய ஆணேயைத் தலேமேற் தாங்கி, திரு. டி. எம். பார்த்தசாரதி போன்ற வீர மறவர்களும், திருமதி அலமேலு அப்பாத்துரை (பன்மொழிப் புலவர். திரு. கா. அப்பாத்துரையாரின் துணேவியார்) போன்ற வீராங்கனேகளும், சென்னே மாநகரில் உள்ள பள்ளிகளின் முன்னே நாள்தோறும் மறியல் போர் புரிந்தனர்.

வன்முறையற்ற இவ்வறப் போரின் வெற்றிக்காகத் தமிழ் மக்கள் 1950 வரை காத்திருக்க வேண்டியவர்களாயினர். இந்த இடைக்காலத்தில் தமிழகத்தை மட்டுமின்றி,

திராவிடர் கழகத்தையேகூட எத்தனையோ அரசியல் சூறுவளிகள் தாக்கிச் சுழன்றடித்தன. அவற்றைப்பற்றிப் பின்னர் காண்போம்.

ஆனால், இந்த இரண்டாவது மொழிப் போரின் விளைவாகச் சாதாரண அண்ணாதுரையாக இருந்தவர், **'தளபதி—அண்ணா'**வாக உயர்ந்து விட்டார்!

# 14. குருவும் சீடரும்

**பணிவுக்கோர் அணிகலன்**

பெரியாருக்கும் அண்ணாவுக்கும் ஏற்பட்ட உறவு இருக்கிறதே அது முதலில் 'கட்சித் தலைவர்—தொண்டர்'—என்னும் முறையில்தான் ஏற்பட்டது. ஆனால் அதனைத் 'தந்தை—தனயன்' என்னும் பாசப் பகுதிக்கு உயர்த்திச் சென்றவர் பெரியார். அதனையே 'குரு—சீடர்'—என்னும் பயிற்சி முறைக்கு இழுத்துப் பணிந்தவர் அண்ணா.

இந்நாளில் பெரும்பாலான இளைஞர்கள் கல்லூரியில் அடி வைத்துவிட்டாலே போதும்; இலட்சியப் பிடிப்பு எதுவும் இல்லாமலே, அவர்களுடைய நடையிலே மதர்ப்பும், தலையிலே கனமும், உடையிலே பகட்டும், உதட்டிலே புகையும், கண்ணிலே செருக்கும், எண்ணத்தில் இறுமாப்பும் கொண்டு, தலை - கால் புரியாமல் அலைவதைக் காண்கிறோம். ஆனால் அண்ணாவோ, அன்று முதல் இன்றுவரை அடக்கத்தின் அரிய சின்னமாகவே விளங்கி வருபவர். ஆணவம் என்பது அணுவும் இல்லாமல் பணிவுக்கு அணிகலனாய்த் திகழ்ந்து வருபவர். எல்லாப் பாடங்களையுமே அந்நிய மொழியான ஆங்கிலத்திலேயே பயில்வது கடினமாயிருந்த அந்த நாளிலேயே 'கலை முதல்வன்'—என்னும் 'எம். ஏ.' பட்டம் பெற்றிருந்தும் அகந்தை என்பது கடுகளவும் இல்லாமல் வளர்ந்து வந்தவர் அண்ணா. அந்த உயர்ந்த பண்பாடும், உண்மை அறிவைப் போற்றும் உயர் உள்ளமும் இருந்ததால் தான், கல்வியின் உச்சிவரை தாம் ஏறிவிட்ட பிறகும், அதன் முதற் படிக்கட்டிலேயே பின்தங்கிவிட்ட பெரியாரைத் தம் குருவாகவே ஏற்றுக் கொண்டார் அண்ணா. 'படிப்பறிவைக் காட்டிலும் பகுத்தறிவே தலையாயது; தலைவணங்கத் தக்கது'—என்னும் நேரிய நெஞ்சங் கொண்ட அவர், பெரியாரிடம் கைகட்டி, வாய் பொத்தித்தான் அரசியல் பாடம் பயின்றிருக்கிறார்.

இப்பொழுது பொதுவாக, மாணவர்கள் ஆசிரியர்களுக்குத் தரவேண்டிய மதிப்பையோ, நன்றியுணர்வையோ தருவதாகத் தெரியவில்லை. அதனால் ஆசிரியர்களும் மாணவர்களைக் கண்டித்தால் அவர்களுடைய அலட்சியத்துக்கும் அவமதிப்புக்கும் ஆளாக நேருமோ என்னும் அச்சத்தில், ஊதியம் வாங்குவதற்கு ஏற்ப உழைத்தால் போதும் என்று ஒதுங்கிக்கொண்டு விட்டார்கள். விளைவு? மூக்கணாங்கயிறு இல்லாத முரட்டுக் காளைகளாக மாறிவிடுகின்றனர் மாணவர்கள். கல்வியின் தரம் கணிசமான அளவுக்கு இன்று தாழ்ந்திருப்பதற்கு இந்த நிலையே காரணம் என்பது கண்கூடு.

ஆனால், பெரியாருக்கும் அண்ணாவுக்கும் இடையே நிலவிய 'குரு—மாணவர்' நிலையிருக்கிறதே, அது மிகவும் கடுமையானது; பண்டைய குருகுல முறையை நினைவூட்டுவது; பெரியார் கிழித்த கோட்டை அண்ணா தாண்ட மாட்டார்; அண்ணா ஒன்று சொன்னால் அதைப் பெரியாரும் தட்டிக் கழித்துவிட மாட்டார்; அதே சமயம் அண்ணாவுக்கு அடிக்கடி 'மூக்கணாங் கயிறு'ம் போட்டுக்கொண்டே இருப்பார். ஒரு பொதுக் கூட்டத்தில் அண்ணா உணர்ச்சிவயப் பட்டுப் பேசிக் கேட்பவர்களையும் உணர்ச்சி மயமாக்கி விடுகிறார் என்று வைத்துக் கொள்வோம். அதனை ஓர் அளவு வரைதான் பொறுப்பார் பெரியார்; பிறகு தம் கைத்தடியால் கீழே தட்டி 'பேச்சுப் போதும்' என்று 'அபாயச் சங்கு' ஊதுவார்; சைகை மூலம். அண்ணாவும் அதற்குக் கட்டுப் பட்டு உடனே உரையை முடித்துக்கொண்டு விடுவார்.

## வடநாட்டுப் பயணம்

அவர்களுடைய 'குரு—மாணவர்' நிலையின் உயர்வைக் காட்ட, அண்ணாவே அண்மையில், பொதுவுடைமைத் தலைவர், திரு. ப. சீவானந்தம் அவர்களின் திருமகளுக்கு நடந்த திருமண விழாவில் கூறிய ஒரு நிகழ்ச்சி படித்து இன்புறத் தக்கதாகும்.

"...நானும் பெரியாரும் வடநாட்டிலுள்ள அரித் துவாரத்துக்குச் சென்றது நினைவுக்கு வருகிறது. மாலை நேரங்களில் பெரியார் கங்கை நதித் தீரத்தில் உலவச் செல்

வார். வெண்தாடி பளபளக்க, மஞ்சள் நிறச் சால்வையைப் போர்த்திக்கொண்டு பெரியார் முன்னே செல்வார். அவர் எனக்குக் கம்பளிக் கோட்டு வாங்கித் தராததால் (பெரியார் எத்துணை பெரிய சிக்கனவாதி என்பது இதிலிருந்தே தெரிகிறதல்லவா?—) குளிர் தாங்காமல் நான் கைகளை இறுகக் கட்டிக்கொண்டு அவர் பின்னுலேயே போவேன். இந்தக் காட்சியைப் பார்த்தவர்கள் பெரியார் அவர்களைப் 'பெரிய சாமியார்'—என்றும் என்னைச் 'சின்னச் சாமியார்'—என்றும் கருதி விட்டார்கள். பலர் பெரியார் காலில் விழுந்து கும்பிட்டார்கள்; பெரிய சாமியாருக்கு இருக்கும் பக்தியில் சீடருக்குக் கொஞ்சமாவது இருக்காதா என்று கருதி என் காலிலும் பலர் விழுந்து கும்பிட்டார்கள்.''

அண்ணு குறிப்பிடும் இந்த நிகழ்ச்சி பெரியாரோடு அண்ணு மேற்கொண்ட வடநாட்டுப் பயணத்தின்போது நடைபெற்றதாகும். அதே பயணம், அண்ணுவுக்குப் பல புதிய அனுபவங்களையும் அளித்தது.

### எம். என். ராய் சந்திப்பு

திரு. எம். என். ராய் என்பவரைப்பற்றி இக்கால இளைஞர்கள் அவ்வளவாக அறியமாட்டார்கள். நாட்டு விடுதலைக்காக வெள்ளை ஏகாதிபத்தியத்தின் அடிமைத்தளையை உடைத்தெறிய தமக்குத் தோன்றிய வழியில் பாடுபட்ட பெருந் தலைவர்களுள் அவரும் ஒருவர். 'இந்தியாவின் லெனின்'—என்று போற்றப்பெற்ற அவர் பயங்கரவாதியாகவே தம் வாழ்வைத் தொடங்கினுர். கள்ளத்தனமாகக் கடலைக் கடந்து மெக்சிகோ நாடு சென்று அங்குப் பொதுவுடைமைக் கட்சியைத் தோற்றுவித்தார். பின்னர் உருசிய நாடு சென்று, மாசுகோவில் இருந்த மாபெருந் தலைவர், லெனினைச் சந்தித்தார். அவருடைய நம்பிக்கைக்கு உரியவராகி அங்கேயே சில காலம் தங்கியிருந்தார். பிறகு இந்தியா திரும்பி, தம்முடைய புரட்சி மிக்க கருத்தோட்டங்களால் சிந்தனைச் சிற்பியாகத் திகழ்ந்து மக்களின் சிந்தனையைக் கவர்ந்த வண்ணம் வாழ்ந்தார். நேரு போன்ற பெருந் தலைவர்களே வணங்கிப் போற்றிய திரு. எம். என். ராயின்

தொடர்பு இந்த வடநாட்டுப் பயணத்தின்போது அண்ணா வுக்குக் கிட்டியது.

## குருவின் கண்டிப்பு

மேலும் இப் பயணத்தின்போது பல பொது நிகழ்ச்சி களில் பங்கு கொண்ட பெரியாரின் தமிழ்ச் சொற்பொழிவு களையும், சொல்லாடல்களையும், ஆங்கிலத்தில் பெயர்த்துக் கூறுவதே அண்ணாவின் பணி. அப்பணியை மூலமொழியின் அழகும், பொருளும் குன்றாமல் திறம்படச் செய்தார் அண்ணா. அவருடைய மொழிபெயர்ப்பே தனிமொழியோடு தனிப் பேச்சுப் போலவே இருக்கக் கண்ட பலர், அண்ணா வையே ஆங்கிலத்தில் தனிச் சொற்பொழிவுகள் நிகழ்த்து மாறு அழைத்தனர். ஆனால் என்ன காரணத்தாலோ பெரி யார், உடன்படவில்லை; அண்ணா தனியே சென்று உரை யாற்ற இசைவு தரவில்லை அவர். அப்போதும் தம் 'குரு'வுக் குக் கட்டுப்பட்ட சீடராக நடந்து கொண்டார் அண்ணா.

## ஜின்னாவின் கண்ணில் அண்ணா

பிறிதொரு சமயம் பாகிஸ்தான் நாட்டின் தந்தையும் முசுலிம்லீக் கட்சியின் தலைவருமான அறிஞர் ஜின்னாவைப் பெரியார் சந்தித்து அரசியல் நிலைமை பற்றி உரையாடினார். அப்போது உடன் இருந்து மொழி பெயர்ப்புப் பணியாற்றி யவர் அண்ணா அவர்களே!

அப்போது அண்ணாவின் ஆங்கில மொழித் திறனைக் கண்டு ஜின்னா வியந்தாராம். அது மட்டுமின்றி, அண்ணாவின் முகத்தையே கூர்ந்து நோக்கினாராம். பரந்த முகம், அகன்ற நெற்றி, அடர்ந்த புருவம், பெரிய கரிய விழிகள், அவற்றின் ஊடுருவும் ஆற்றல்—ஒளிவீச்சு—ஆகியவையெல்லாம் என் னென்ன எண்ணங்களை ஜின்னாவின் உள்ளத்தில் எழுப் பினவோ?

"இந்த இளைஞன் யார்?"—என்று கேட்டாராம் ஜின்னா.

"ஏன், நம்ப பையன்தான்,"—என்றாராம் பெரியார்.

"இல்லை, இந்த இளைஞர் சாதாரணமானவர் என்று என்னால் நம்ப முடியவில்லை. இவருடைய விழிகள் பயங்கர மானவை; இந்த ஆசியாக் கண்டத்தையே ஆட்டிப் படைக்

கும் சக்தி கொண்டவை. இவரை நீங்கள் எப்படி வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?''

—என்று தம் வியப்பை வெளியிட்டிருக்கிறார் ஜின்னா. அதற்குப் பெரியார்,

''...பையன் ரொம்ப கெட்டிக்காரர்தானுங்க; ஆனா, ரொம்ப அடக்கமானவருங்க; நல்ல பையன்; நமக்குப் புள்ளை மாதிரிங்க...''

—என்றாராம்.

இதிலிருந்து என்ன தெரிகிறது?

ஜின்னாவின் மதிப்பீடு எத்துணை சரியானது என்பதை எண்ணி வியக்கிறோம். அவர் எண்ணியவாறே அண்ணா படிப்படியாக முன்னேறி வருவதையும் பார்க்கிறோம். இன்று தமிழகத்தின் தலைமகனாகத் திகழும் அவர் நாளை ஆசியாவுக்கு மட்டுமின்றி உலகுக்கே தலைமை தாங்கும் நிலையையும் அடையத்தான் போகிறார் என்பதும் வெள்ளிடைமலை. அதற்கேற்ற தகுதியும் திறனும் நிரம்பி வழியும் மனித குல விளக்கே அவர் என்பதை நடுநிலைமை பிறழாதவர்கள் உளமார ஒப்புக்கொள்வர். அது ஒரு புறம் இருக்க, இன்னோர் உண்மையையும் இந்நிகழ்ச்சி தெளிவாக்குகிறது, அல்லவா? அண்ணாவிடம் பெரியார் கொண்டிருந்த எல்லை கட்ட முடியாத பிள்ளைப் பாசமே அது!

## 'தாங்கல்' உண்டாகத் தளவரிசை!

இவ்வாறு, 'தலைவர்—தொண்டர்' நிலையைக் கடந்து 'குரு—குருசீடர்' பயிற்சிக்கு உயர்ந்து, அதனையும் மிஞ்சும் படியாக 'தந்தை—தனயன்' என்னும் பாசக் கடலில் பெரியாரும் அண்ணாவும் நெருங்கி நீராடி உறவு பூண்டு திளைப்பதைப் பார்க்க சில 'அழுக்காற்றின் தவக்குழந்தை'களுக்குப் பொறுக்கவில்லை. இருவர்க்கும் இடையே மனத்தளவில் 'தாங்கல்'—உண்டாவதற்குரிய தளவரிசையைப் போடுவதில் முனைந்து நின்றனர்.

'அய்யா, உங்களை மிஞ்சிச் செல்வாக்குப் பெற அண்ணாதுரை சதி செய்வதாகத் தெரிகிறது' என்று பெரியாரிடமும்,

'அண்ணா, நீங்கள் எவ்வளவோ ஓடாய் உழைத்தும், நீங்கள் எவ்வளவோ பெரிய அறிவாளியாய் இருந்தும் உங்களை எவ்வளவு அலட்சியமாகப் பேசுகிறார், நடத்துகிறார் தெரியுமா?' என்று அண்ணாவிடமும்,

'தூபம்' போட்டனர் சிலர். அந்தத் 'தூபம்' புகைப் படலங்களை எழுப்புவதோடு அடங்கிவிடவில்லை; பொறி பறக்கும் தீக் கொழுந்துகள் எரியும் அளவுக்குக் கனன்றது! அதன் வெம்மை முதலில் திராவிட மாணவர் கழகத்தைத் தாக்கத் தொடங்கிற்று.

## பெரியாருக்குப் பிடிக்காத இயக்கம்

மாணவர் இயக்கங்களின் வலிமையைப் பொறுத்தே ஒரு நாட்டின் அரசியல் மாற்றங்களின் விரைவும் வினைவும் அமைந்துள்ளன. அதனால்தான் மாணவர் உலகில் திராவிடர் கழகம் வேரோடுவதற்கு ஆவன புரிந்தார் அண்ணா என்று முன்பே குறிப்பிட்டோம். அவ்வாறு அவர் அப்பழுக்கற்ற நல்ல நோக்கத்துடன் ஆற்றிய அருந்தொண்டே எங்கே தம்முடைய செல்வாக்கைக் குறைத்துவிடுமோ என்று அஞ்சும் அளவுக்குப் பெரியாரைத் தப்புக் கணக்குப் போடும்படி வைத்துவிட்டன சூழ்நிலைகள். எனவே, திராவிட மாணவர் கழக நடவடிக்கைகளைப் பெரியார் அவ்வளவாக வரவேற்காதது மட்டுமின்றி, அவற்றின்பால் தமக்குள்ள வெறுப்பினையும் இலைமறை காய்மறையாக வெளிப்படுத்தினார். இதனால் இளைஞர் பாசறையின் ஓட்டத்தில் தேக்கம் ஏற்பட்டது.

அதன் தொடர்ச்சியாக பெரியார் — அண்ணா உளப் பிணக்கில் குறிப்பிடத்தக்க பங்கு வகித்தது, பாவேந்தர் பாரதிதாசனருக்குப் பொற்கிழி வழங்க வேண்டும் என்று அண்ணா மேற்கொண்ட முயற்சியாகும்.

## புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

இவ்விருபதாம் நூற்றாண்டில் தமிழர்களைத் தட்டி யெழுப்பிய புரட்சிக் கவிஞர் ஒருவர் இருந்தார் எனில், அவர் பாரதிதாசன் அவர்களே! புதுச்சேரியில் பிறந்த கனக. சுப்புரத்தினம், அதே புதுச்சேரியில் ஆங்கிலேய ஆட்சியை எதிர்த்ததன் நிமித்தமாகத் தலைமறைவு

வாழ்க்கை (Exile) வாழ்ந்த சுப்பிரமணிய பாரதியாரின் கவிதைகளால் கவரப்பெற்று, அவர்தம் தொண்டராகித் தம்மைப் 'பாரதிதாசன்' என்றே அழைத்துக் கொண்டவர் ஆவார்.

"...நாமக்கல் கவிஞர். வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்களின் கவிதைகளில் எளிமை இருக்கும்; கவிமணி. தேசிக விநாயகம் பிள்ளை கவிதைகளிலோ எளிமையோடு அழகும் சேர்ந்திருக்கும்; ஆனால் பாரதிதாசன் கவிதைகளிலோ எளிமையும் அழகும் மட்டுமின்றிப் புரட்சியும் ஓங்கி நிற்கும்."

—என்று நாவலர், இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மிகவும் போற்றிப் புகழ்ந்துள்ளார் பாரதிதாசனை. அவருடைய கூற்று வெறும் அன்புப் பெருக்கினால் உந்திய வெற்றுப் புகழ்ச்சி அன்று; ஆராய்ச்சியில் வல்லவர்களும் ஒப்புக்கொள்ளத்தக்க உண்மையே அது!

தமிழ்நாட்டில் புரட்சிக் கனல் தெறிக்கும் உணர்ச்சி மிக்க பாடல்களைப் பாரதிதாசனை விஞ்சி இதுகாறும் எந்தப் புலவரும் பாடியதும் இல்லை; இனிப் பாடப் போவதும் இல்லை.

'புதியதோர் உலகம் செய்வோம்—கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்'

என்றும்,

'கொலைவாளினை எடடா மிகு
கொடியோர் செயல் அறவே'

என்றும்,

ஆத்திரந் தெறிக்க வேறு யாரால்தான் 'பா'த் தொடுக்க முடியும்?

## 'காண்டேகர்' அண்ணா

இந்திய நாட்டின் கதைத் துறை வளர்ச்சி பற்றி சற்றே ஈடுபாடு கொண்டவர்களும்கூட, மராட்டியக் கதை மன்னர் திரு. வி. ச. காண்டேகரைப்பற்றி அறியாமல் இருக்க மாட்டார்கள். அவருடைய கற்பனை மலர்களில் உவமையென்னுந் தேன் குடங்குடமாய்ச் சுரந்து வழியும். ஆனால், அறிஞர் அண்ணாவோ, அந்தக் காண்டேகரையும்

வெல்லும் அளவுக்கு உவமை மழை பொழிவதில் வல்லவர். இவ்வுண்மையை, அண்ணாவின்மீது வசைபாடியே வயிறு வளர்ப்போரும்கூட ஒப்புக்கொள்வர். அத்தகு ஆற்றலைத் தாமே நிரம்பப் பெற்றிருந்தும் 'தமிழ் நாட்டுக் காண்டேகர்' என்று அண்ணா யாரைக் கொண்டாடினார் தெரியுமா?

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களையே !

## பொற்கிழி அளிக்க நற்பணி

மக்களிடையே விடுதலை வேட்கையைப் பாட்டின் மூலம் பரப்பிய பெருமை பாரதியாரைச் சாரும் எனில், பாட்டின் மூலம் நாட்டின் மறுமலர்ச்சிக்குத் தேவையான பகுத்தறிவுச் சிந்தனையையும், தனித்தமிழ்ப் பற்றையும் முறையே பெரியார், மறைமலையடிகளின் பாட்டையில் சென்று வளர்த்த பெருமை பாரதிதாசனையே சாரும்.

அவரைச் சிறப்பிப்பது தமிழன்னையையே சிறப்பிப்ப தாகக் கருதினார் அண்ணா. எனவே, பண்டைய தமிழ் நாட்டில் புரவலர்கள் புலவர்களுக்குப் பொற்கிழி அளித்துப் போற்றிய பொன்னான வரலாற்றை மீண்டும் கண்ணாலே காண விழைந்தார் அண்ணா. பொதுமக்களிடையே பொற் காசுகள் திரட்டும் நற்பணியில் அவர் ஈடுபட்டார். தோழர் கள் முல்லை முத்தையா, டி. என். இராமன் முதலானோரின் ஒத்துழைப்புடன் கவிஞருக்கென ஏறத்தாழ 25,000 ரூபாய் வரை சேர்த்தார். சென்னை, பச்சையப்பன் கல்லூரியில் நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் தலைமையில் பாராட்டு விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் புரட்சிக் கவிஞருக்குப் பொன்னாடை போர்த்தி 25,000 ரூபாய் கொண்ட பொற்கிழியும் வழங்கப்பெற்றது. கட்சி வேறு பாடு இன்றித் தமிழகத் தலைவர்கள் யாவரும் கூடி, கவிஞர் மீது வாழ்த்து மலர் பொழிந்தனர்.

ஆனால் பெரியாரோ...?

கவிஞரைப் பாராட்ட வராதது மட்டுமின்றி, கண் டிக்கவும் கண்டித்தார் அண்ணாவை. மனக்கவலை ஏதுமின்றி கவிதை மழை பொழியப் பாவேந்தர்க்கும் பணக் கொடை வழங்க முற்பட்ட அண்ணாவின் செயல் அறவே பிடிக்கவில்லை பெரியாருக்கு. என்ன காரணமோ? "பாரதிதாசனுக்கு

என்ன வந்தது? இரண்டு பாட்டுப் பாடிவிட்டால் ஒரு புலவர். அவருக்கெல்லாம் பண முடிப்பு. இதற்கெல்லாம் அண்ணாதுரையின் முயற்சி, எதற்கும் கேட்டுச் செய்ய வேண்டாமோ?" என்று கண்டித்தார் அவர்.

மாணவர் இயக்க வளர்ச்சியில் அக்கறை காட்டாத பெரியாரின் போக்கினால் முன்பே உள்ளம் ஒடிந்திருந்த அண்ணா, கவிஞர்க்குப் பொற்கிழி வழங்கியதைக் கண்டித்ததைக் கண்டு இடிந்தே போய்விட்டார்!

## கருஞ்சட்டைப் படை

அடுத்து, பெரியார்—அண்ணா பிணக்குக்குக் கதவைத் திறந்துவிட்ட பேறு 'கருப்புச் சட்டை'யைச் சாரும்.

அணிகின்ற சட்டையைக் கொண்டே ஒரு குறிப்பிட்ட சாராரைத் தனியாகப் பிரித்துக் காண்பதற்கான வழிமுறைகள் உலகில் நெடுங்காலத்துக்கு முன்பிருந்தே கைக்கொள்ளப்பட்டு வந்துள்ளன. காவல் (போலீஸ்) துறையினர் காக்கி உடையும், வழக்குரைஞர்கள் கருப்புக் கோட்டும் அணிவது இந்த அடிப்படையில்தான்.

அரசியலில் இத்தகைய வழக்கத்தை நுழைத்த முதல் கட்சி நாம் அறிந்தவரை பொதுவுடைமைக் கட்சியே! தன்னுடைய தொண்டர்கள் புரட்சியின் சின்னமாகச் சிவப்பு நிறச் சட்டை அணிய வேண்டும் என்று அது விதி செய்தது.

பின்னர், இரண்டாம் உலகப் போரில் இட்லரின் தோழராய் விளங்கிய இத்தாலிய நாட்டுச் சர்வாதிகாரி முசோலினி தம் கட்சித் தொண்டர்கள் கருப்புச் சட்டை அணிய வேண்டும் என்று கட்டளையிட்டார். இத்தாலியில்தான் முதன் முதல் 'கருப்புச் சட்டைத் தொண்டர் படை' ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

தென்னாட்டில் திராவிடர் கழக வலிமையை வளர்க்கும் பொருட்டுத் தீவிரமான தொண்டர்படை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று கருதப்பெற்றது. எத்தகைய தியாகமும் புரியச் சித்தமாயுள்ள அத்தொண்டர்களை இனங்கண்டு கொள்ளவும், திராவிடமக்களின் இழிந்த நிலையை—இருண்ட வாழ்வை எடுத்துக்காட்டவும் அத்தொண்டர் படையைச்

சார்ந்தோர் கருப்புச் சட்டை அணியவேண்டும் என முடிவு செய்யப்பெற்றது.

## கண்ணியத்தில் கண்ணுனவர்

என்ன காரணத்தாலோ பெரியார், தொண்டர் படையினர் மட்டுமின்றி, திராவிடர் கழக உறுப்பினர்கள் அத்தனை பேருமே கருப்புச் சட்டை அணியவேண்டும் என்று காலப் போக்கில் வற்புறுத்தத் தொடங்கிவிட்டார்; எல்லா உறுப்பினர்களும் அணியவும் தலைப்பட்டு விட்டார்கள். அண்ணுவுக்கோ இந்த ஏற்பாடு கட்டோடு பிடிக்கவில்லை.

'வழக்காடும் நேரத்தில்தான் வழக்குரைஞர் கருப்புக் கோட்டு அணிகின்றுர்; வீட்டிலும் அவர் அதைப் போட்டுக் கொள்ளத் தேவையில்லை. அலுவல் பார்க்கும் நேரத்தில் தான் காவல்காரர் (போலீஸ்காரர்) காக்கி உடையில் காட்சி தருகிருர். (துப்பறியும் துறையை இங்கு நினைக்க வேண்டாம்) அதேபோல, போராட்டம் நடத்தும்பொழுது மட்டுமே—அதில் ஈடுபடுகின்ற தொண்டர்கள் மட்டுமே கருப்புச் சட்டையை அணிகின்ற மரபினை உருவாக்க வேண்டும். தொண்டர் படையைச் சாராத எல்லா உறுப்பினர்களும், எல்லா நேரத்திலும் அணியவேண்டும் என்று ஆகிவிட்டால் பிறகு 'கருப்புச் சட்டை'க்குக் கிடைக்கக் கூடிய மதிப்புக்குக் கேடு வரும். மேலும் கழகத்தைச் சார்ந்த ஒருவர் தவருன நடத்தை உள்ளவர் என்று வைத்துக் கொள்வோம். அவர் எல்லா வேளைகளிலுங் கருப்புச் சட்டை அணிந்து, 'குடி, கூத்தி' என்று ஈடுபட்டுவிட்டால் அப்போது பொதுமக்கள் யாரை இழிவாகப் பேசுவார்கள்? 'அதோ பார், ஒரு கருப்புச் சட்டைக்காரன் குடித்துவிட்டுப் புரள்கிருன்; அதோ ஒரு கருப்புச் சட்டைக்காரன் கூத்தி வீட்டுக்குப் போகிருன்' என்றுதானே கூறுவார்கள். இதனுல் இழுக்கு ஏற்படுவது யாருக்கு? தவறு புரிகின்ற தனி மனிதனுக்கா? அல்ல; அவன் அணிந்திருக்கும் கருப்புச் சட்டைக்கு! அதன் மூலம் அச்சட்டையினரைக் கொண்ட திராவிடர் கழகத்துக்கு—அதன் தலைவர்களுக்கு—ஏன்? இலட்சியத்துக்குக்கூட இழுக்கு ஏற்படுகிறது. எனவேதான் எல்லாரும் கருஞ்சட்டை அணிவதை எதிர்க்கிறேன்;

கழகத்தின் ஒரு பிரிவாகத் தீவிரப் பணிக்கென்று அமைக்கப் பட்டுள்ள தொண்டர் படையினர் மட்டுமே அதை அணிய வேண்டும் என்று வற்புறுத்துகிறேன்.'

என்றெல்லாம் நியாயமாக வாதிட்டுப் பார்த்தார் அண்ணா.

கட்சியின் கண்ணியம் காக்கப்படவேண்டும் என்பதே அவர் கவலை.

## பெரியார் பிடிவாதம்

'நான் ஒன்று சொல்வது, அதற்கு இந்த அண்ணாதுரை திருத்தம் கூறுவதா? அதெல்லாம் முடியாது? திராவிடர் கழகத்தைச் சேர்ந்த எல்லாருமே கருப்புச் சட்டை அணியத் தான் வேண்டும்' என்று அழுத்தமாகப் பேசத் தொடங்கி விட்டார், பிடிவாதத்துக்குப் பெயர் பெற்ற பெரியார்.

## தளபதிக்குப் பணியா போர்வீரனா ?

அண்ணாவிடம் எப்பொழுதுமே ஒரு தனிச் சிறப்பான இயல்பு ஒன்று உண்டு. 'தம்முடைய கருத்துக்கு உடன்பாடு இல்லாததாக இருந்தாலும் சரி, தம்முடைய கருத்துச் சரி யானது என்று ஏற்றுக்கொள்ளப்படாவிட்டாலும் சரி, தளபதி என்ன ஆணையிட்டாலும் அதை அப்படியே நிறை வேற்றும் போர்வீரனைப் போலவே, ஒரு கட்சியின் தலைவர்— அல்லது தலைமையகம், என்ன கட்டளையிடுகிறதோ அதற்கு அப்படியே தலைவணங்கிக் கட்டுப்பட்டு நடப்பதே தொண் டர்களின் கடமை' என்பது அண்ணாவின் திண்ணமான எண்ணம். தம்முடைய அந்த உறுதியான கோட்பாட்டை ஒட்டியே, கருத்து மாறுபாடு தோன்றிய பல வேளைகளிலும் தலைமைக்குக் கட்டுப்பட்டு அவர் நடந்து வந்திருக்கிறார். அதாவது, குரு கிழித்த கோட்டைத் தாண்டாத சீடராகவே தம்மைப் பக்குவப்படுத்திக் கொண்டு வந்திருக்கிறார் அண்ணா.

## எரியுண்ட மதுரை மாநாடு

பெரியாரின் தலைமையில் 1946 மே திங்களில் மதுரை மாநகரில் கருஞ்சட்டைத் தொண்டர்படை மாநாடு ஒன்று

நடந்தது. பழைய கோட்டை இளைய பட்டக்காரர் காலஞ் சென்ற திரு. என். அருச்சுனன் அவர்கள் கழகக் கொடியை ஏற்றிவைக்க, மாநாட்டைத் திறந்து வைக்கும் பணியை மேற்கொண்டவர், அண்ணா அவர்களே! ஆனால் கழக வளர்ச்சி கண்டு பொறாமையும் பீதியும் உற்ற காங்கிரசுக் கட்சியைச் சார்ந்த சிலர், காலிகளைத் தூண்டிவிட்டு மாநாட்டுப் பந்தலுக்குத் தீ வைக்குமாறு செய்தனர். தொண்டர்களும் ஆங்காங்கே தொல்லைகளுக்கு உள்ளாயினர். மாநாடு குழப்பத்தில் முடிந்தது.

## கருஞ்சட்டைக்குத் தடையா?

இந்த இக்கட்டான சூழ்நிலையைப் பயன்படுத்திக் கழகத்தை ஒடுக்கத் திட்டமிட்டது காங்கிரசு ஆட்சி. கருஞ் சட்டைப் படையைச் சட்டத்துக்குப் புறம்பான அமைப்பு என்றும் அறிவித்தது.

அரசினரின் இந்த 'ஓரஞ்சார் முடிவினைக்' (Partial Decision) கண்டிக்க சென்னை 'மெமோரியல் மண்டபத்தில்' ஒரு மாபெரும் கூட்டத்தைக் கூட்டினார் பெரியார். அதற்கு முன்னால் சென்னை மீரான் சாகிப் தெருவில் உள்ள அவர் இல்லத்தில் திராவிடர் கழகச் செயற்குழு நடைபெறவும் ஏற்பாடாகியிருந்தது. அரசாங்கத்திற்கு எதிர்ப்புக் காட்டும் அறிகுறியாக அக்கூட்டங்களுக்கு வரும் எல்லாருமே கருஞ் சட்டை அணிந்து வரவேண்டும் என்றும் பெரியார் வேண்டு கோள் விடுத்திருந்தார்.

## குருசொல் மீறு அருமைச் சீடர்

கருஞ்சட்டையை யார் அணியவேண்டும், யார் அணியக் கூடாது என்றெல்லாம் முன்பு நாம் குறிப்பிட்டவாறு, அண்ணா மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்த காலம் அது. எனவே அவர் செயற்குழுக் கூட்டத்திற்கு வரமாட் டார் என்றும், வந்தாலும் கருஞ்சட்டை அணியமாட்டார் என்றும் அங்குக் குழுமியிருந்த பலரும் உறுதியாகக் கருதிக் கொண்டிருந்தனர்.

ஆனால் அண்ணாவோ, குரு சொல்லை மீறாத அருமையான சீடர் அல்லவா? எனவே, மற்றவர்கள் கருதியன யாவும்

கற்பனையே என்று மெய்ப்பிப்பவர்போல் பெரியார் இல்லத்தில் நடந்த செயற்குழுக் கூட்டத்திற்குத் தவருமல் வந்தார். அத்துடன் மெமோரியல் மண்டபக் கூட்டத்திலும் கலந்துகொண்டார். சாதாரண உடையிலா? அல்ல; கருஞ் சட்டைக் கோலத்தில்! அதுவும் அவருடைய சொந்தச் சட்டை அன்று; நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின் நீண்ட சட்டை! அவரை அந்தக் கோலத்தில் கண்டதும் மக்களின் மனத்திலே உற்சாகம் பீறிட்டது; மகிழ்ச்சி வெள்ளத்திலே அவர்கள் நீச்சலடித்தனர்!

இவ்வாறு குருவுக்கேற்ற அருமருந்தன்ன சீடராய்த் திகழ்ந்த அண்ணு 'நாட்டு நலனைக் காக்கும் ஒரு கொள்கை'— என்று வரும்பொழுது, அக்கொள்கையையும் தம் குருவுக்குக் காணிக்கையாகப் பலிகொடுத்துவிட்டு வாய்பொத்தி அடங்கிக் கிடந்தாரா?

# 15. விடுதலை வேட்கை!

## உரிமை என்னும் ஒளி!

"எல்லா நாடுகளிலும் உரிமை வளர்ந்தோங்கினால் ஒழிய, ஒரு நாட்டில் மட்டும் உரிமை என்பது வளர முடியாது. உரிமை நிலை நிற்கவும், வெற்றி பெறவும் நாம் என்ன தியாகம் ஆனாலும் செய்வோம்; என்ன சுமையானாலும் தாங்குவோம்; என்ன துன்பம் வந்தாலும் ஏற்போம்..." என்றார் ஜான் எஃப் கென்னடி.

அடிமை இருளை அகற்றி, அந்த உரிமை ஒளியைப் பெறுவதற்காக இந்தியத் தலைவர்கள் பட்ட இன்னல்களும் தொல்லைகளும் எண்ணில் அடங்கமாட்டா.

## தியாகத் திலகங்கள்

திலகர் முதல் சிதம்பரம் பிள்ளைவரை, லாலா லசபதிராய் முதல் திருப்பூர் குமரன் வரை, வீரசவர்க்கார் முதல் சுப்பிரமணிய சிவா வரை, பகவத்சிங் முதல் வாஞ்சிநாதன் வரை, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் முதல் முத்துராமலிங்கத் தேவர்வரை, இந்நாட்டுத் தலைவர் பெருமக்கள் ஏற்காத இடர்கள் இல்லை; எண்ணாத சிறைக்கம்பி இல்லை; தூக்காத சுமைகள் இல்லை; செய்யாத தியாகங்கள் இல்லை.

## திசை திரும்பியது ஏன்?

வெள்ளையரின் கொடுங்கோன்மையினின்றும் நாட்டை விடுவிக்கும் பொருட்டு இவ்விந்தியத் தலைவர்களைச் சொந்த நலன்களையெல்லாம் தூரத்தில் ஒதுக்கி வைத்துவிட்டுப் புரிந்த போராட்டங்களும், அடைந்த தண்டனைகளும் அண்ணாவின் நெஞ்சிலும் ஆழமாகப் பதியவே பதிந்தன.

ஆனால், பிற்பட்ட சமூகம் ஒன்றில் எளிய குடும்பத்தில் பிறந்த அவர்தம் இளமைக் காலச் சூழ்நிலைகள் அவரை வேறு திசைநோக்கித் திருப்பி விட்டுவிட்டன.

1. திராவிட இனத்தைச் சார்ந்தவர்கள், அளவுக்கு மீறி நீக்கிரோக்களைப் போன்று அழுத்தி வைக்கப்பட்டிருந்த இழிநிலையும்,

2. தாழ்த்தப்பட்ட மக்களுக்கென்று கச்சைக் கட்டிப் போராடிய காந்தியடிகளின் தொண்டர்கள் என்று தம்மை அழைத்துக் கொண்டவர்களே காங்கிரசுக் கொள்கைக்கு முரணாகக் கடைப்பிடித்த சாதி வெறியும்,

3. விடுதலை இயக்கத்தின் தூண்களில் ஒருவராய் விளங்கிய பெரியாரே, அவ்வியக்கத்தினால், 'தமிழர்கள் தலை யெடுக்க வழியே இல்லை' என்று மேற்கொண்ட காங்கிரசுத் துறவும்—அண்ணாவின் சிந்தனையை இன எழுச்சியை நோக்கியே இழுத்துச் சென்றுவிட்டதில் வியப்பேதும் இல்லை.

## விடுதலை வேட்கை!

அந்நாளைய நாட்டு நிலைமை மட்டும் மேற்குறித்தவாறு அமைந்திராவிட்டால், அண்ணா ஒரு விடுதலைப் போராட்ட வீரராகத்தான் இந்நேரம் விளங்கியிருப்பார். இதில் ஐயமே இல்லை. ஒரு தேசீயத் தலைவர்க்குரிய தகுதி (A National Leaders Status) அண்ணாவுக்கும் கிட்டி அவர் ஓர் அகில இந்தியத் தலைவராகிவிட வேண்டும் என்னும் வெற்றார்வத்தில் நாம் இவ்வாறு விளம்பவில்லை. நாடாளுமன்ற மேலவையில் (Rajya Sabha) அங்கம் பெற்ற அன்றே அவர் அந்நிலையை எய்திவிட்டார் என்பது வெள்ளிடை மலை. எனவே, அடிமைத் தளையை அறுத்தெறிந்து உரிமை ஒளியில் உலவவேண்டும் என்னும் விடுதலை வேட்கையில் அவருக்கிருந்த அசைக்க முடியாத நம்பிக்கையையும் ஆர்வத்தையும் நாம் இங்கே இட்டுக்கட்டியோ, கற்பனையாகவோ குறிப்பிட வில்லை.

ஏனெனில், நீதிக்கட்சியோடு நெருங்கித் தொடர்பு கொண்ட அந்தக் காலந்தொட்டே வெள்ளையர் ஏகாதிபத்தியத்தின்மீது வெறுப்புத்தான் கொண்டிருந்தார் அண்ணா. தாம் ஒரு கட்சியைச் சார்ந்துவிட்டபடியால், அதன் கட்டுப்பாட்டுக்குக் களங்கம் ஏற்படாதவாறு அதன் கட்டளையை நிறைவேற்றுவதே ஒரு கண்ணியமான தொண்

டனின் கடமை என்னும் அளவில் அடங்கி இருந்தாரேயன்றி எப்போது விடுதலை பெறுவோம், வெள்ளையரை விரட்டி யடிப்போம் என்று எண்ணியபடியேதான் அவர் இருந்தார். இதற்கு எத்தனையோ சான்றுகளை நம்மால் எடுத்துக்காட்ட முடியும்.

## ஆளுநர் அதிகாரத்துக்கு அஞ்சாதவர் !

நீதிக்கட்சிகள் சார்பில் இயங்கிய 'விடுதலை' ஏட்டின் துணையாசிரியராக 1930-ல் அண்ணு பொறுப்பேற்றதுபற்றி முன்பே குறிப்பிட்டோம். அவருடைய பேச்சு எவ்வாறு உணர்ச்சிப் பிழம்பாக இருக்குமோ அவ்வாறே அவர்தம் எழுத்தும் இளமைத் துடிப்புக் கொண்டதாகும். அந் நாளில் 'விடுதலை' ஏட்டில் அவர் தீட்டிய ஒவ்வொரு தலையங்கமும் இதனை மெய்ப்பிப்பதாகவே அமைந்திருக்கிறது. அதே சமயம் அண்ணுவின் கணிப்பு—ஆற்றல் (Foreseeing talent), அஞ்சா நெஞ்சம், நாட்டு நலனையே தலையாய குறிக்கோளாகக் கொண்ட பொதுநலப் போக்கு முதலானவற்றைப் பறைசாற்றுகின்ற முறையிலும் அத்தலையங்கங்கள் விளங்கியுள்ளன.

"லார்டு ரெங்கின்"—என்பவர் சென்னை மாநில ஆளுநராக (கவர்னராக)ப் பதவி ஏற்றிருந்த சமயம், அவர் ஆளுந் திறமையற்றவர் என்பது அண்ணுவின் கணிப்பு. அவருடைய ஆற்றலற்ற தன்மைகளை விளக்கி 'விடுதலை' ஏட்டில் தலையங்கமே எழுதிவிட்டார் அண்ணு. அது எல்லாரையுமே திடுக்கிட வைத்தது.

நீதிக்கட்சித் தலைவர்களில் பலர் வெள்ளையர்களோடு இணங்கி நடப்பதே நல்லது என்று நம்பிக்கொண்டிருந்த காலம் அது. அண்ணுவோ தம் கட்சியினரின் கண்டனத்துக்கு ஆளாக நேருமே, ஆளுநரின் தண்டனைக்கும் இலக்காக நேருமே என்றெல்லாம் அஞ்சாமல் எழுதிவிட்டார் தலையங்கத்தை. அது ஆளுநரின் பார்வைக்கும் சென்றுவிட்டது. உடனே ஆளுநர் மாளிகையிலிருந்து சர். ஏ. டி. பன்னீர்ச் செல்வம் அவர்களுக்குத் தாக்கீது ஒன்று வந்தது.

'...அந்தத் தலையங்கம் எழுதியதற்கு வருத்தம் தெரிவித்து அதே விடுதலையில் எழுதியாக வேண்டும்'—என்று

அதில் கண்டிருந்தது. அத்தாக்கீதை எடுத்துக்கொண்டு நீதிக்கட்சித் தலைவர்களுள் ஒருவரான திரு. பன்னீர்ச் செல்வம் அவர்கள், அதே கட்சியின் சார்பில் வெளிவரும் 'விடுதலை'—ஏட்டின் துணையாசிரியராம் அண்ணாவைச் சந்திக்க ஈரோடு ஏகினார். ஆளுநரின் தாக்கீதைக் காட்டி, தலையங்கம் தீட்டியதற்கு வருந்துவதாக 'விடுதலை'யில் எழுதுமாறு அண்ணாவை மிக்க அன்போடு கேட்டுக்கொண்டார். ஆனால் துணிவுக்கும், தன்மான உணர்வுக்கும் பெயர்பெற்ற அண்ணாவோ,

"...லார்டு ரெங்கினைப்பற்றி 'விடுதலை'யில் எழுதியது எழுதியதுதான்; என் கையால் அதற்கு வருத்தம் தெரிவித்து எழுத முடியாது"—என்று கண்டித்துக் கூறிவிட்டார்.

திரு. பன்னீர்ச்செல்வம் அவர்கள் திகைப்பில் ஆழ்ந்தார். அண்ணாவின் 'குரு'வான பெரியாரைப் பார்த்து முறையிட்டாவது தாம் வந்த நோக்கத்தை நிறைவேற்றி விடலாம் என்று நினைத்தார் அவர். ஆனால், பெரியாரோ அண்ணாவின் கருத்தே சரி என்று அடித்துப் பேசிவிட்டார். திரு. பன்னீர்ச்செல்வம் அவர்களின் முயற்சி தோல்வியிலேயே முடிந்தது.

அதன்பின்னர், பலநாட்கள் சென்று அண்ணாவைச் சந்தித்த பன்னீர்ச்செல்வம் அவர்கள்,

"...ரெங்கினைப்பற்றி எழுதியதற்கு வருத்தம் தெரிவித்து எழுதமுடியாது என்று தாங்கள் கூறியது மிகமிகச் சரி. ரெங்கின் நிருவாகத் திறமையற்றவர் என்று நீங்கள் முன கூட்டியே மதிப்பிட்டு எழுதியது மிகவும் பொருத்தந்தான்!"

—என்று அண்ணாவின் கணிப்பு ஆற்றலை மிகுதியாகப் புகழ்ந்தாராம்.

இதிலிருந்து என்ன தெரிகிறது? எத்துணைதான் அதிகார வலிமைமிக்க ஆளுநராக இருந்தபோதிலும், வெள்ளையரிடம் குறைகண்டவிடத்துக் கண்டிக்கத் தயங்கியவர் அல்லர் அண்ணா. தம் கட்சியில் செல்வாக்கு மிக்க ஒருவர் எடுத்துச் சொல்லியுமேகூட, வெள்ளையருக்குப் பின்பாட்டுப் பாடும் வேலையில் அவர் இறங்கவே இல்லை. இதனால் ஆளுநரின் சீற்றத்துக்கு ஆளாகித் தண்டனை கிட்டினும் அதனை ஏற்பதற்கும் ஆயத்தமாகவே இருந்தார் அண்ணா.

**நாட்டைக் காட்டிக் கொடுப்பதா?**

அடுத்து, விடுதலைப் போராட்டத்தை முடுக்கும் பொருட்டு, காந்தியடிகள் நாடு முழுதும் 'தனி நபர் சத்தி யாக்கிரகம்'—நடைபெற ஏற்பாடுகள் செய்து கொண்டிருந் தார். இந்தத் தனிநபர் சத்தியாக்கிரகத்தின் முதல் தளபதி யாகத் தன்னலமற்ற மனித மாண்புக்கே மணிமுடிபோல் ஒளிரும் ஆச்சார்ய விநோபாபாவே அவர்களைக் காந்தியடிகள் தேர்ந்தெடுத்ததும், அவர் சிறை சென்று மீண்டதும் வரலா றறிந்த செய்திகள் ஆகும். ஆங்கில ஆட்சியாளர் விடுதலைப் போராட்ட வீரர்களைக் கொடுமையாக நடத்துவதைக் கண்டிக்கும் வகையில் அப்போது ஆட்சிப் பொறுப்பினை ஏற்றிருந்த காங்கிரசு அமைச்சரவைகள் பதவியினின்றும் வெளியேறின. தமிழகக் காங்கிரசு அமைச்சரவையும் அவ் வாறே பதவியைத் துறந்தது.

1941இல் ஏற்பட்டுவிட்ட இந்த நிலையைச் சமாளிக்க காங்கிரசுக் கட்சிக்கு அடுத்த பெரும்பான்மை வலிமை பெற்றிருந்த நீதிக்கட்சியை அமைச்சரவை அமைக்குமாறு கேட்டுக்கொண்டார் ஆளுநர் (கவர்னர்).

ஆளுநரின் அழைப்பைப்பற்றி ஆராயும் பொருட்டு நீதிக் கட்சியின் செயற்குழு கூடிற்று. அங்கு வருகைபுரிந்த நீதிக் கட்சித் தலைவர்களுள் பெரும்பாலானோர், ஆங்கில ஆளுநரின் அழைப்பைப் புறக்கணியாமல் அமைச்சர்கள் ஆவதற்கே மிகவும் விழைந்தனர்.

விடுதலை வேள்வியிலே தீக்குளித்து வாழ்வா, சாவா என்று ஒரு பேரியக்கம் போராடிக் கொண்டிருக்கும் வேளை யில் அதற்குத் துணைதான் புரிய முடியவில்லை யென்றால், அதன் முயற்சிகளுக்கு அணையாவது போடாமல் ஒதுங்கலாம் அல்லவா? பலர் தம் வாழ்வையே பலியாக்க முன்னிற்கும் போது, சிலர், பதவிகளைப் பற்றிக் களிகொள்ளக் கருதியது வேதனை தந்தது அண்ணாவுக்கு. விடுதலைப் போராட்டத்தில் நேரடியாகப் பங்கு பெறமுடியாத நிலையில், நாட்டைக் காட்டிக் கொடுக்கும் நயவஞ்சகச் செயலை அறவே வெறுத் தார்; எனவே நீதிக்கட்சியினர் அப்போது அமைச்சரவை

அமைப்பது தவறு என்று எதிர்த்தார். தம் எதிர்ப்பினை வெளிக்காட்ட அச் செயற்குழுக் கூட்டத்தில்,

"நீதிக்கட்சிக்காரர்களாகிய நாம், கவர்னர் அழைப்பை ஏற்றுக்கொள்ளக் கூடாது"

—என்று தீர்மானம் கொண்டுவந்தார் அவர்.

அண்ணுவின் நேரிய உள்ளமும், நெஞ்சினுள் கனன்று கொண்டிருந்த விடுதலை வேட்கையும் மற்றவர்களுக்குப் புரியவில்லை. சர். ஏ. டி. பன்னீர்ச்செல்வம், சர். ஏ. முத்தையாச் செட்டியார் போன்ற பெருந்தலைவர்களே அண்ணுவின் தீர்மானத்தை எதிர்த்தனர். ஆனுல், செயற்குழுவுக்குத் தலைமைதாங்கிய அப்போது நீதிக்கட்சியின் தலைவராக இருந்த பெரியார் அவர்களே அண்ணுவின் தீர்மானத்தை முன்மொழிந்ததால், தீர்மானம் நிறைவேறிற்று.

இதனுல், நாட்டைக் காட்டிக் கொடுக்கும் நச்சுச் செயலிலிருந்து நீதிக்கட்சியை அண்ணு அப்போது காப்பாற்றிவிட்டார்.

வெள்ளையர் ஆட்சிமீது அண்ணுவுக்கிருந்த வெறுப்புக்கு இதுவும் ஓர் அருமையான எடுத்துக்காட்டு அல்லவா!

### போருக்கு ஆதரவா?

இரண்டாம் உலகப்போர் நடந்துகொண்டிருந்த சமயம். போரில் ஈடுபட்ட பிரிட்டனை ஆதரிக்கக் கூடாது என்று காங்கிரசுக் கட்சி முடிவெடுத்தது. இந்தியாவை அடிமைப்படுத்தியிருக்கும் பிரிட்டனின் வலிமையைக் குறைத்து எந்த வகையிலேனும் விடுதலைத் திட்டத்துக்கு விரைவு ஏற்படுத்த வேண்டும் என்பதே காங்கிரசின் நோக்கம். ஆனுல், நீதிக்கட்சியோ போரில் பிரிட்டனையே ஆதரிக்க வேண்டும் என்று உறுதி பூண்டது. இட்லரைப் போன்ற சர்வாதிகாரி ஒருவன் வெற்றி பெற்றுவிட்டால் பின்னர் உலகில் மக்களாட்சி முறைக்கே சவக்குழி தோண்டப்பட்டுவிடும் என்று நீதிக்கட்சி அச்சங்கொண்டதே அதற்குக் காரணம். இரண்டாம் உலகப்போரின் கொடுமைகளை அறிந்தவர்கள், பிரிட்டன் தோற்கக் கூடாது என்று நீதிக்கட்சி மேற்கொண்ட முடிவு நியாயமானது என்றே ஒப்புக்கொள்வர்.

அஃது எவ்வாருயினும், அண்ணுவைப் பொறுத்தவரை, "இரண்டுங் கெட்டான்' நிலையிலேயே அவர் இருக்க நேர்ந்

தது; ஒருபுறம் தாம் சார்ந்த கட்சிக்குக் கட்டுப்பட்டு போர்ப் பிரச்சாரத்தில் ஈடுபட வேண்டியிருந்தது; மறுபுறம், நாடு விடுதலை பெறுவதற்கு வெள்ளையரின் வலிமையைக் குறைக்க இதைவிட வேறு சமயம் வாய்க்குமா என்ற மன உளைச்சலும் அவருக்கு உண்டாயிற்று.

எனவே, கட்சியின் கட்டளைக்கு உட்பட்டுச் சிற்சில கூட்டங்களில் பிரிட்டனுக்கு ஆதரவாகப் பேச நேர்ந்த போதிலும், வேறு சிலரைப் போல அல்லாமல், அப் பேச்சுகளுக்காக அரசாங்கம் கொடுக்க முன்வந்த ஊதியத்தை அறவே வாங்க மறுத்துவிட்டார் அண்ணா!

''விடுதலை'' ஏடு நீதிக்கட்சியின் சார்பில் நடைபெற்று வந்ததல்லவா? போர்ப் பிரச்சாரம் புரிவதற்காக, அந்த ஏட்டின் நிருவாகப் பொறுப்பை அரசாங்கத்திடம் ஒப்படைப்பது என்று கட்சி முடிவெடுத்தது. அந்தச் சூழ்நிலை உருவானதுமே, அண்ணாவின் இருதயத்தினுள் அமுங்கிக் கிடந்த விடுதலை வேட்கை விழித்துக் கொண்டது. 'விடுதலை'யின் துணையாசிரியராக இருந்த அவர், வெள்ளை அரசாங்கத்தின்கீழ்ப் பணிபுரிய மறுத்து, அவ்வேட்டோடு தாம் கொண்டிருந்த தொடர்புகள் அத்தனையையும் துண்டித்துக்கொண்டு விட்டார்.

அண்ணாவின் சொல்லாற்றலை அன்றைய வெள்ளையர் அரசாங்கம் நன்றாகவே அறிந்து வைத்திருந்தது. போர்ப் பிரச்சாரம் புரிய அவரைத் தக்கவாறு பயன்படுத்திக் கொள்ளவும் விழைந்தது. எனவே, தென்னாற்காடு மாவட்டத்தின் போர் முயற்சி அமைப்பாளராகப் பணியாற்றுமாறும் அதற்குக் கணிசமான ஊதியம் அளிப்பதாகவும் அண்ணாவுக்கு அழைப்பு விடுத்தது அரசாங்கம். அண்ணாவோ அதற்கு உடன்பட முடியாது என்று மறுத்துவிட்டார்.

அண்ணாவின் இந்த உறுதி, வெள்ளையர் ஆட்சிமீது அவருக்கிருந்த வெறுப்பைக் காட்டுவதாகவும் விளங்குகிறது அல்லவா?

## காந்தி நெறியில் காஞ்சி—அண்ணா

சேலத்திலே 1944-இல் கூடிய நீதிக்கட்சி மாநாடு பற்றி முன்பே விரிவாகக் கண்டோம். அதிலே நிறைவேற்றப்

பெற்ற அண்ணாவின் தீர்மானத்தின் கருப்பொருள்தான் என்ன? அதன் முதல் விதியே—

"வெள்ளையன் ஆட்சியில் தரப்பட்ட சர். இராவ்பகதூர், திவான்பகதூர், இராவ் சாகேப்—போன்ற கௌரவப் பட்டங்களைத் துறக்கவேண்டும். மீண்டும் அவர்களோ, மற்றவர்களோ அத்தகைய பட்டங்களையும் விருதுகளையும் வெள்ளையரிடமிருந்து பெறக்கூடாது."

—என்று அறுதியிட்டுக் கூறவில்லையா?

பட்டம்—பதவிகளைத் துறக்குமாறு கூறிய காந்தியடிகளின் கொள்கையோடு அண்ணாவின் உள்ளம் ஒட்டி நிற்பதைத்தானே இது காட்டுகிறது.

## விடுதலை வீரர்க்கு அஞ்சலி

விடுதலைப் போரில் பங்குகொண்ட தமிழக மறவர்கள் பட்டியலில் வாஞ்சிநாத அய்யருக்குத் தனிச் சிறப்பான இடம் உண்டு. அவர் அஞ்சா நெஞ்சினர்; துணிவும், துடிப்பும் மிக்கவர். அடிமை இருளை அகற்ற வேண்டும் என்பதில் தணியா ஆர்வம் கொண்டவர். அந்த நாளில் திருநெல்வேலி மாவட்டக் கலெக்டராக இருந்த ஆஷ்துரை என்பார் வெள்ளையரின் ஏகாதிபத்தியக் கொடுமையின் சின்னமாகவே விளங்கினார். அவர்தம் அடக்குமுறை கண்டு ஆத்திரங் கொண்டெழுந்த வாஞ்சிநாத அய்யர் மிக்க துணிச்சலோடு அவரைச் சுட்டுக் கொன்றார். அந்தக் குற்றத்திற்காகப் பகைவர்களிடம் சிக்கி மண்டியிடக் கூடாது—தண்டனை பெறக் கூடாது—என்பதற்காகத் தம்மைத் தாமே சுட்டுக் கொண்டார். எந்தக் காங்கிரசுக் கட்சியின் இலட்சிய வெற்றிக்காக வாஞ்சிநாதய்யர் வீர இறப்பைத் தழுவினாரோ அந்தக் காங்கிரசாரின் ஆட்சி அவருடைய முதுமையடைந்த மனைவிக்கு ஓய்வுக்கால ஊதியம் அளிக்கத் தயங்கியது. தள்ளிப் போட்டுக்கொண்டே வந்தது. ஆனால் அண்ணா முதல் அமைச்சர் ஆனவுடன் அந்த அம்மையாரின் வேண்டுகோளை நிறைவேற்றி அவருடைய வயிற்றிலே பாலை வார்த்திருக்கிறார். தியாகிகளுக்குச் செலுத்தவேண்டிய நன்றிக் கடனையும் செலுத்தியுள்ளார் அண்ணா.

இதுபற்றித் தமிழக சட்ட மன்றத்தில் அண்ணா வெளியிட்டுள்ள தகவல் எண்ணி இன்புறத் தக்கதாகும்.

''வாஞ்சிநாதய்யரின் விதவை மனைவி 'பென்ஷன்' கோரி, மனுச் செய்து கொண்டிருந்தார். வாஞ்சிநாதய்யர் தம்முடைய கடைசிக் காலத்தில் செய்த இறுதிக் காரியத்தைத் தியாகச் செயல் என்று ஒப்புக்கொள்ள முந்தைய (காங்கிரசு) அரசு மறுத்தது. ஆஷ்துரையைச் சுட்டுக் கொன்ற வாஞ்சிநாதய்யர் தம் உயிரையும் போக்கிக் கொண்டார். அவர் அப்படிச் செய்தது விடுதலைப் போராட்டத்தில் உயிர் இழந்ததாகக் கருதப்படாமல் தன் உயிரை அவர் போக்கிக் கொண்டதாக முந்தைய அரசாங்கம் கருதி, அந்த அம்மையாரின் கோரிக்கையை ஏற்பதில் தயக்கம் காட்டி வந்தது. ஆனால் வாஞ்சிநாதய்யருடைய உள்நோக்கம் சுதந்திரப் போராட்டம் என்பதால் அவரது மனைவியாருக்குக் 'பென்ஷன்' (ஓய்வுக்கால ஊதியம்) கொடுக்க உத்திரவிட்டிருக்கிறேன்.'' (பலத்த கைதட்டல்!)

அண்ணா பிறப்பித்துள்ள இந்த ஆணை, இந்திய நாட்டு விடுதலையில் உள்ளூர அவர் கொண்டிருந்த அக்கறையையும், விடுதலை வேள்வியில் மூழ்கிக் குளித்த தியாகிகளின்பால் அவருக்குள்ள பெருமதிப்பையும் நன்கு பறைசாற்றுகிறது அல்லவா?

மேலே காட்டப்பெற்ற அத்தனை நிகழ்ச்சிகளையும் மிஞ்சுவதாக உள்ளது, ஆகஸ்டுப் பதினைந்தாம் நாள் ஆகிய 'விடுதலை நாளை'—மகிழ்ச்சியோடு கொண்டாட வேண்டும் என்று அவர் வெளியிட்ட அறிக்கையாகும்.

## பெரியார் தந்த அதிர்ச்சி

பெரியார் ஈ. வே. ரா. சிறந்த சிந்தனையாளர்; தீவிரமான செயல்வீரர். இதிலே யாருக்கும் கருத்து மாறுபாடு இருக்க முடியாது.

ஆயினும், அவர் வெளியிடும் சில திட்டங்கள், எடுக்கின்ற முடிவுகள் மக்களுள் பெரும்பாலானோரை திகைப்பில் மட்டுமின்றி அதிர்ச்சியிலும் ஆழ்த்தி விடுவதுண்டு.

இந்திய விடுதலை நாள் குறித்து அவர் எடுத்த முடிவும் அதிர்ச்சியில் ஆழ்த்துவதாகவே அமைந்தது.

நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட காங்கிரசுக் கட்சியைச் சார்ந்தவராகத்தாம் தம் அரசியல் வாழ்வைத் தொடங்கினர் பெரியார். அதன் ஆணைகளுக்குக் கட்டுப்பட்டு எத்தனை எத்தனையோ ஆக்கப் பணிகளைப் புரிந்தும் இருக்கிறார்.

தமிழகத்தில் அந்த நாளில் காங்கிரசுக் கட்சி தழைத்துப் படர்வதற்குத் தளராப் பணிபுரிந்த தலைவர் அவர். ஈரோட்டிலுள்ள தம் இல்லத்திற்குக் காந்தியடிகளே வந்து தங்கும் அளவுக்குச் செல்வாக்குப் பெற்றிருந்தவர். 'விடுதலை'—என்னும் காங்கிரசின் இலட்சிய வெற்றியில் பெரியாரின் பெருந் தொண்டுக்கும் நிறையப் பங்கு உண்டு. கருத்து வேறுபாட்டினல் வெளியேறி யிருந்தாலும்கூட அந்தக் கட்சியின் வளர்ச்சிக்காக முன்பு அவர் உழைத்த உழைப்பும் அளித்த ஆக்கமும் இல்லை என்று ஆகிவிடுமா? எனவே, காங்கிரசின் இலட்சியம் சித்திபெற்று இந்தியத் துணைக்கண்டம் விடுதலை பெற்ற அந்த நன்னளில் இன்ப வெள்ளத்தில் மிதப்பவர்களுள் முதலிடம் பெற்றிருக்க வேண்டியவர் பெரியாரே!

ஆனல், அவரோ, இருள் அழிந்து ஒளி புலரும் அந்த இணையற்ற இனிய நாளைத் 'துக்க நாள்' ஆகக் கொண்டாடுமாறு தம் தொண்டர்களுக்கு ஆணையிட்டார்!

## விடுதலை வேட்கையின் விழிப்பு

பெரியாரைப்போல், அண்ணு காங்கிரசுக் கட்சியில் பங்கு கொண்டது இல்லைதான்; காந்தியடிகளைக் கண்டு பேசியதும் இல்லைதான்; அவருடைய கட்டளைக்குக் கட்டுப்பட்டு விடுதலைப்போரில் இறங்கியதும் இல்லைதான். என்ருலும்கூட கடலுக்கடியே செல்லும் நீரோட்டம்போல அவருடைய அடித்தளத்திலே விடுதலை வேட்கை இழையோடிக்கொண்டே இருந்தது. அதைப்பற்றி முன்பே விளக்கியுள்ளோம்; பல சான்றுகளையும் காட்டியுள்ளோம். அந்த விடுதலை வேட்கை இப்போது புதுப்பொலிவுடன் விழித்துக் கொண்டது! அவருடைய நடுநிலைமைச் சிந்தனைச் சுடரும் கொழுந்துவிட்டு ஒளி சிந்தியது!

ஒருவர் தலைவர் ஆவதற்குரிய முதல் தகுதி பணிய வேண்டிய வேளை பார்த்துப் பணிந்து கிடப்பதும் நிமிர வேண்டிய நேரம் பார்த்து நிமிர்ந்து நிற்பதும் ஆகும். தலைமையின் விழிகள் பஞ்சடைந்து விடும்பொழுது பாதை தெரியாமல் தடுமாறும்பொழுது, அதன் கரத்தைப்பற்றிச் சரியான வழியில் அழைத்துச் செல்ல வேண்டியதும் ஓர் உத்தமத் தொண்டனின் உயர்ந்த கடமையாகும்.

அந்தக் கடமையைத்தான் காலம் பார்த்து ஆற்ற முற்பட்டார் அண்ணா. ஆமையையும் விஞ்சக்கூடிய அடக்கத்துக்குப் பெயர் பெற்றவர்தாம் அண்ணா; ஆனால் தம் மனச்சான்றின் கழுத்தையே முறிக்கும் அளவுக்கு அவரால் முடங்கிக் கிடக்க முடியாது; தமக்குச் சரி யென்று பட்ட உண்மையை நிலைநாட்ட ஆர்த்தெழுவதில் அரிமாவையும் விஞ்சக்கூடிய ஆண்மை படைத்தவரே அவர்.

*1947*-ஆம் ஆண்டு ஆகஸ்டுப் பதினைந்தாம் நாள், இந்தியத் துணைக்கண்டத்துக்கு விடுதலை கிட்டிய நன்னாள் மட்டும் அன்று;

அண்ணாவின் ஆண்மைக்குப் புதுமுடி புனையவாய்த்த பொன்னாளும் ஆகும்.

ஆம்; தம்மை எதிர்த்தவர்களை யெல்லாம் பனிப் படலத்தைச் சிதற அடிக்கும் பகலவனைப் போல் வீழ்த்தி யெழுந்து வீறுநடை போட்டுக்கொண்டிருந்த பெரியாரைத் துணிந்து எதிர்த்து அறிக்கை வெளியிட்டு விட்டார் அண்ணா.

## ஆகஸ்டு 15—அறிக்கை!

அந்த ஆகஸ்டுப் பதினைந்தாம் நாள் கொண்டாட்டத் தினால் உண்டான மகிழ்ச்சியையும் விறுவிறுப்பையும்விட, அண்ணாவின் அறிக்கையை முழுக்க முழுக்கத் தாங்கி வந்த 'திராவிட நாடு' இதழைக் கும்பல் கும்பலாக இளைஞர் களும், முதியவர்களும், திராவிடர் கழகத்தைச் சேர்ந்த வர்களும், சேராதவர்களும் படிக்க முற்பட்டதால் அன்று ஏற்பட்ட பதற்றமும், பரபரப்பும் மிகமிக மிகுதியாகும்.

அந்த அறிக்கையின் சில பகுதிகள், அண்ணாவின் கூரிய சிந்தனை, சீரிய நடுநிலைமை, எந்த முகாமில் இருந்தாலும் தியாகிகளைப் போற்றித் துதிக்கும் உயர்ந்த பண்பாடு, கொள்கைக்காக எத்தகைய இடர் வந்தாலும் அஞ்சாமல் எடுத்துரைக்கும் நெஞ்சத் துணிவு முதலான எத்தனையோ பண்பு நலன்களையெல்லாம் இன்றும் படம் பிடித்துக் காட்டுகின்றன.

அந்த அறிக்கைப் பகுதிகளில் சில வருமாறு:

"திராவிடர் கழகத்தாராகிய நாம் அன்னிய ஆட்சியாகிய ஆங்கில ஆட்சி கூடாதென்பதை 1939-ஆம் ஆண்டிலிருந்து வலியுறுத்தி வந்திருக்கிறோம்.

"இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி கடுமையாக நடைபெற்ற நேரத்திலே சென்னையில் நடைபெற்ற மாகாண ஜஸ்டிஸ் கட்சி (நீதிக்கட்சி) மாநாட்டிலும் 'பூரண சுயேச்சைத் தீர்மானத்தை' நிறைவேற்றி இருக்கிறோம்.

"பல ஆண்டுகளாகவே அன்னிய ஆட்சி நீங்கத்தான் வேண்டும்; அது எமது விருப்பம்; ஆனால் ஆங்கில ஆட்சியை ஒழித்துவிட்டு, அந்த இடத்திலே ஆரிய ஆட்சியை ஏற்படுத்தவே காங்கிரசு முயலுகிறது; அதற்காகவே நாங்கள் காங்கிரசை எதிர்க்கிறோம்—காங்கிரஸ் கையாளும் முறைகள் சரியானவை அல்ல என்று படுவதால், நாங்கள் அம்முறைகளை ஆதரிக்கவில்லை. நாங்கள் காங்கிரசை எதிர்க்கிறதாலேயே சுயராச்சியத்துக்கு விரோதிகள் அல்ல; அன்னிய ஆட்சியை விரும்புகிறவர்கள் அல்ல" என்பதை ஆயிரம் மேடைகளிலே பேசி இருக்கிறோம். 'வெள்ளைக்காரனை நீ 'நாளைக்குப் போ' என்று சொன்னால், நாங்கள் 'இன்றே போ' என்று கூறுகிறோம்" என்றும் பேசியிருக்கிறோம்.

"ஆக, பிரிட்டனின் ஏகாதிபத்திய ஆட்சி ஒழிய வேண்டும்; ஒழிக்கப் பாடுபடுவோம்; பிரிட்டன் ஆட்சி நமக்குக் கேடுபல செய்திருக்கிறது. எனவே நம்முடைய வெறுப்புக்கும் கண்டனத்துக்கும் ஆளாக வேண்டியதே ஆகும்— என்பதைப் பன்முறை எடுத்துச் சொல்லி, நம்மை மற்றக் கட்சியினர் ஏகாதிபத்தியத் தாசர்கள் என்று கூறிய

தும், விண்பழி என்று எடுத்துக்காட்டி வந்ததுடன் போருக்குப் பிறகு, வந்த ஆட்சி தானுகவே விலகும் என்று முன் கூட்டியே கூறிய நாம் அந்த ஆட்சி விலகும் நாளாகிய ஆகஸ்டுப் பதினைந்தாம் நாளை மகிழ்ச்சி தரக்கூடிய நாளாகவே கருதவேண்டும். அதுவே, இதுவரை நாம் கொண்ட போக்குக்கும் நமது கொள்கைக்கும் ஏற்றது.

"இன்று நமது கழகத்துக்குத் தலைவராக உள்ள பெரியார், காங்கிரசில் தலைமைவகித்து, இந்த ஆட்சியை எதிர்த்துக் கஷ்ட—நஷ்டம் அடைந்திருக்கிறார். ஆகவே, விடுதலை விழா கொண்டாடப் பாத்தியதை கொண்டவர்களிலே அவர் மிகமிக முக்கியமானவர். அவருடைய கட்சியினராகிய நமக்கு உரிமை இருக்கிறது.

"சுயராச்சியப் போராட்டம் என்ற உடன் சூது மதியினரான சிலர் அந்தச் சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு சுயநல வேட்டையாடியதும், முரண்பட்ட கொள்கைகள், திடீர் மாறுதல்கள், பண மூட்டைகள், சுரண்டுபவர் ஆகியோர் மட்டுமேதான் நமது கண்களுக்குத் தெரியவேண்டும் என்பதில்லை. நாட்டு விடுதலைக்காக, சிறையிலே வாடியவர்கள், தீவுகளுக்குத் துரத்தப்பட்டவர்கள், குடும்ப சுகத்தை இழந்தவர்கள், தடியடியால் இறந்த குமரன், தூக்கு மேடை ஏறிய பகவத்சிங், சொத்தைப் பறி கொடுத்த சிதம்பரம் பிள்ளை ஆகிய வீரத்தியாகிகள் தோன்றுவர்—தோன்றுவதால்—அவர்களுக்கு வீரவணக்கம் செலுத்த வேண்டுவதே முறை. ஆகஸ்டுப் பதினைந்தாம் நாள் அப்படிப்பட்ட எண்ணற்ற வீரர்களின் கனவுகள் நனவான நாள்...அவர்களை மதிக்க மறுப்பது தமிழ் மரபுக்கே கேடு ஆகும். அவர்கள் சிந்திய இரத்தமும் கண்ணீரும் நமது வீர வணக்கத்துக்கு உரியன. அவர்கள் நமக்கு வழிகாட்டிகள். நாம் கோரும் திராவிட நாடு திராவிடருக்கு என்பதற்காக அவர்களைப் போல வீரத் தியாகத்துக்குத் தயாராக வேண்டும் என்ற உறுதியைப் பெறவேண்டும். அந்த உறுதி பெற வீரர்களை வணங்குவது முறை. சரி. அவசியம். நீங்காக் கடமையும் ஆகும்.

"உலகம் முழுவதும் கூர்ந்து கவனிக்கும் ஒரு மகத்தான சம்பவத்தை, நமது கொள்கையை மட்டுமே அளவு கோலாகக் கொண்டு அளந்து பார்ப்பதோ உதாசீனம் செய்வதோ சரியாகாது.

"—நம்முடைய வீர இளைஞர்கள்மீது இதுநாள் வரையிலே சுமத்தப்பட்ட பழிச்சொல், நாம் ஆங்கிலேயரின் அடிமைகள் என்பது.

"அந்த ஆங்கிலேய ஆட்சி முடியும்போது நாம் துக்கம் கொண்டாடுவது இந்தப் பழிச் சொல்லை நாமாகவே நம்மீது சுமத்தும்படி அவர்களை வற்புறுத்தி அழைப்பதாகும். நமது வாழ்நாளில் நாம் பிரிட்டனின் ஏகாதிபத்திய ஆட்சியை ஏற்க விரும்பாதவர்கள்; அது ஒழிய வேண்டும் என்ற நோக்கமுடையவர்கள்; காங்கிரசார் பழி சுமத்தியதுபோல, நாம் பிரிட்டானியரின் அடிமை அல்ல என்பதை விளக்க, நமக்கு இருக்கும் ஒரே நாள் ஆகஸ்டுப் பதினைந்து.

"ஆகஸ்டுப் பதினைந்தாம் நாள் இரண்டு நூற்றாண்டுகளாக இந்தத் துணைக் கண்டத்தின்மீது இருந்து வந்த பழிச்சொல்லை, இழிவை நீக்கும் நாள். அது திராவிடருக்குத் திருநாள்! துக்க நாள் ஆகாது!"

அண்ணாவின் இந்த ஆணித்தரமான வாதங்களிலிருந்தே நாட்டின் விடுதலையில் அவருக்கிருந்த நாட்டத்தின் ஆழத்தையும், வெள்ளையர் ஆட்சிமீது அவர் கொண்டிருந்த கசப்பின் உச்சத்தையும் நாம் நன்கு கணிக்கலாம்.

இந்த அறிக்கையின் எதிரொலியாகப் பெரியாரைக் கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றும் தோழர்களால், தம் மீது எத்துணைக் கொடுமையான பழியும், இழிவும் சுமத்தப்படும் என்பதை உணர்ந்தே இருந்தார் அண்ணா. எனவே அவர்களுக்கெல்லாம் முன்கூட்டியே விடையிறுக்கும் முறையில் தம்முடைய கடமையுணர்வு பற்றியும், கழகக் கொள்கைகளோடு தமக்குள்ள நெருங்கிய உறவுபற்றியும் அவ்வறிக்கையின் இறுதிப் பகுதியிலேயே தெளிவுபடுத்திவிட்டார் அவர்.

"இவ்வளவு கூறும் நான் இதற்கு முன்பு கழகம் எடுத்துக் கொண்ட எந்த முக்கியமான திட்டத்துக்கும் வேலை முறைக்

கும் கட்டுப்படாமல் இருந்தவன் அல்லன். கழகம் நெருக்கடியான கட்டத்திலே இருந்தபோதெல்லாம் விட்டுவிட்டு ஓடினவன் அல்ல. பட்டம், பதவிகளை வைத்துக்கொண்டு விட்டுவிட முடியாது என்று கூறினவன் அல்ல. தேர்தலுக்கு நிற்கக்கூடாது என்று கட்சி தீர்மானித்த பிறகும் தேர்தலுக்கு நின்றவனல்ல. சிறைபுக வேண்டிய கட்டம் வந்தபோது ஒளிந்துகொண்டவனும் அல்ல. அடிக்கடி கட்சி பலவற்றைத் தேடிக் கொண்டவனும் அல்ல. கட்சிக்குள்ளாகவே, சேலம் மாநாட்டின்போது செல்வந்தர்களின் மயக்க மொழிகளில் விழ்ந்தவனுமல்ல. ஆனால் இந்த ஆகஸ்டுப் பதினைந்தாம் தேதி பற்றிய பிரச்சினை உண்மையில் என்போன்ற எண்ணற்றவர்களுக்கு மனவேதனை தரத்தக்க விதத்திலே, தவறான முறையிலே திருப்பப்பட்டிருக்கிறது. ஆகவே, ஆகஸ்டுப் பதினைந்தாந் தேதியைத் துக்கநாள் என்று அறிவித்து அதற்காக அறிக்கைகள் வெளியிட்டு வருவது தவறு என்று தெரிவிக்கலானேன்.

"ஆகஸ்டுப் பதினைந்தாந் தேதி நாமும் கலந்துகொள்ள வேண்டிய மகிழ்ச்சி தரும் நாள். உலகத்தின் முன்பு நம் மதிப்பை உயர்த்தும் நாள் என்று மனப்பூர்வமாக நம்புகிறேன். நம்புவதுடன் ஆகஸ்டு 15-ஆம் தேதி விழாக் கொண்டாடுவது எந்த வகையில் தவறோ துரோகமோ அல்ல என்று எண்ணுகிறேன்."

அண்ணாவின் இந்த அறிக்கை,

1. அடிமைத்தளையின் மீதிருந்த அவருக்குள்ள வெறுப்பை வெளிப்படுத்திற்று.

2. விடுதலையின் மீதிருந்த அவரது வேட்கையின் வேர்ப்பிடிப்பைப் புலப்படுத்திற்று.

3. எந்த ஒரு சாதாரண மனிதப் பிறவியும்கூட, தன்னோடு விடுதலை பெறும்போது இயல்பாக—நியாயமாக அடையக்கூடிய மகிழ்ச்சித் துடிப்பையும் முழக்குவதாயிற்று.

4. தந்தைக்கே நிகரான தலைவரே ஆயினும், நாட்டின் பொதுநலனைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு அவர் என்ன கூறினாலும் சரியென்று கூறும் 'தலையாட்டி பொம்மை'யாக

இயங்குகின்ற 'வழிபாட்டு முறை'யை எல்லா நேரங்களிலும் கடைப்பிடிக்கத் தேவையில்லை என்பதையும் உணர்த்துவ தாயிற்று.

5. ஆமையையும் விஞ்சக்கூடிய அடக்கமுடையவரே யாயினும், கொள்கைபற்றிய சிக்கல் எழும்பொழுது அண்ணு ஊமை அல்லர்—கோழை அல்லர்—என்பனவற்றையும் உறுதிப்படுத்துவதாயிற்று.

என்னதான் நியாயம் படைத்ததாக இருப்பினும் ஆகஸ்டுப் பதினைந்துபற்றிய அண்ணுவின் அறிக்கையால் ஏற்பட்ட எதிரொலிகளோ எழுத்தில் வடிக்கவொண்ணு தவை. அவற்றைப்பற்றி அடுத்த அதிகாரத்தில் காண் போம்.

# 16. ஊடலும் கூடலும்

**அறிக்கையின் எதிரொலி !**

பெரியார், 'தெய்வ நம்பிக்கை' இல்லாதவர் ; அதனை எதிர்ப்பவர். ஆனால், அதே பெரியாரையே 'தெய்வம்'போல் நம்பி வழிபடக்கூடியவர்கள் திராவிடர் கழகத்தில் எத்தனையோ பேர் இருந்தனர்; இன்றும் இருக்கின்றனர்.

அவர்களால், 'ஆகஸ்டுப் பதினைந்து துக்கநாள்' என்று கூறிய பெரியாரின் கருத்துக்கு மாறாக அண்ணாவின் அறிக்கையை எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்? எனவே, அவர்கள்,

"தந்தை பெரியாரைவிட இந்த அண்ணாதுரைக்கு என்ன தெரியும்" என்று ஏசத் தலைப்பட்டனர்.

"தலைவரின் வார்த்தைக்கு மறு வார்த்தையா? இந்த அண்ணாதுரையைச் சும்மா விடுவதாவது?"

என்று சிலர் ஆத்திரத்தைக் கொட்டினர்; அவமானப் படுத்தவும் முற்பட்டனர். இன்னுஞ் சிலரோ அவர் உயிருக்கே உலைவைக்க முயல்வதாகவும் அப்போது செய்தி அடிபட்டது. அது எந்த அளவுக்கு உண்மையோ ?

ஆனால், வேறொரு உண்மை மட்டும் தெளிவாகப் புலனாயிற்று.

ஒரு வல்லரசின் ஏகாதிபத்தியக் கொடுங்கோன்மை அடிமைச் சிறையில் நெடுங்காலம் அடங்கிக்கிடந்த ஒரு நாடு அறப்போர் வழியில் நின்றுபெற்ற விடுதலையின் அருமையை—இனிமையை—நிகரற்ற இன்றியமையாமையை—முழுமையாக உணர்ந்தவர்கள் மிகக் குறைவாகவே அப்போது திராவிடர் கழகத்தில் இருந்தார்கள் என்பதே அவ்வுண்மை !

ஏனெனில், அண்ணாவின் அறிக்கையை ஆதரித்தவர்களைக் காட்டிலும் எதிர்த்தவர்களே மிகுதியாக இருந்தனர். காரசாரமான வாதங்களும் கண்டனக் கணைகளும் அவரை

நோக்கி எண்ணற்ற அளவில் பாய்ந்து வந்தன. வாழ்த்திய நாவெல்லாம் வசைபாடின; போற்றிய கரமெல்லாம் புழுதியை அள்ளி வீசின.

### எதையும் தாங்கும் இதயம்

இவ்வாறு எதிர்ப்புக் கிளம்பும் என்று முன்னரே உணர்ந்துதான் இருந்தார் அண்ணு. அதற்காக நாட்டு நலனைப் பொறுத்த ஒரு தலையாய நிகழ்ச்சி பற்றி—முக்கிய மான சிக்கல் பற்றி—வாய்மூடி மௌனியாகவும் அவரால் அடங்கிக் கிடக்க முடியவில்லை. அதனுல்தான் ஆகஸ்டுப் பதினைந்து இன்ப நாளே என்று அறிக்கை வெளியிட்டார்.

அதற்குக் கிடைத்த கண்டனப் பரிசிலைக் கண்டு அண்ணு துவண்டாரா? சோர்ந்தாரா? இல்லை.

அவர்தாம், "எதையும் தாங்கும் இதயம் வேண்டும்"—என்று மனித குலத்துக்கே மணிமொழி வழங்கியவ ராயிற்றே?

ஆகவே, தம் நெஞ்சத்தைச் சுமையாக்கிக் கொண் டிருந்த துயரத்தையெல்லாம் சுமந்துகொண்டு, கழகக் கொள்கைகளை விட்டு வழுவாதவராகவே இருந்தார். எழுத்துப் பணியில் முழுமூச்சுடன் இறங்கினுர். சூறுவளி வேகத்தில் சொற்பொழிவுகள் ஆற்றுவதைக் குறைத்துக் கொண்டாலும் அவ்வப்போது மேடையேறி தம் அரிய கருத்துமணிகளை வழங்கவும் அவர் தவறவில்லை.

### பெரியாரின் பிறந்த நாள்

இந்நிலையில் பெரியாரின் பிறந்த நாள் வந்தது.

1879-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள்—17-ஆம் நாளில் தான் பெரியார் பிறந்தார். ஒவ்வோர் ஆண்டும் அந்த நாளை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவர் கழகத்தினர். இயக்க ஏடுகள் பாராட்டுக் கட்டுரைகள் வெளியிட்டுப் பெரியார்மீது வாழ்த்து மலர்களைப் பொழிவார்கள்.

1947—ஆகஸ்டுப் பதினைந்துக்குப் பின்னர் திராவிடர் கழகத் தோழர்களிடையே கருத்து மாறுபாடுகளின் சல சலப்பு ஏற்பட்டிருந்தது அல்லவா? அண்ணுவும் பலத்த கண்

டனத்துக்கு ஆளாகி இருந்தார் அல்லவா? ஆகவே, இம் முறை பெரியார் பிறந்த நாளைப் பொறுத்து அண்ணு எப்படி நடந்துகொள்ளப் போகிருர் என்பதை அறிய நாடே ஆவலுடன் விழிகளை அகல விரித்துப் பார்த்தவண்ணம் இருந்தது.

அண்ணுவோ பகைவர்க்கும் அருள்புரியும் பண்பாளர்; கொள்கை வேறு, அக்கொள்கையைக் கொண்ட தனி மனி தரின் பண்பு நலன் வேறு என்று பகுத்துப் பார்த்து யார் மீதும் வெறுப்புக் கொள்ளாத மனப்பாங்கு கொண்டவர். எனவே, விடுதலை நாள் பற்றிய கருத்து வேறுபாட்டிலேயே விழுந்து கிடக்காமல், தனி வாழ்க்கையில் பெரியார் தம் மிடம் கொண்டிருந்த பாசத்தையும், தமக்குக் கொடுத்த பயிற்சியையும் மறந்து விடாதவராக அண்ணு, பெரியாரைப் பாராட்டி எழுதிவிட்டார்.

பெரியாரின் 69-ம் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, "இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?' என்னும் தலைப்பில் அண்ணு தீட்டிய அருமையான கட்டுரை அவர்தம் நன்றியறிதலுக்கோர் நற்சான்று ஆகும்.

"......இவ்வளவு நீண்டகாலம் பொதுவாழ்வில் இருக்கும் வாய்ப்பு ஒரு சிலருக்கே கிடைத்திருக்கிறது. ஆச்சாரியார் (இராசாசி) ஓர் எடுத்துக்காட்டு. ஆனல் அவருடைய பொதுவாழ்விலே ரோஜா அதிகம்; முள் குறைவு. பெரி யாருக்கோ, கள்ளி காளான் நிறைந்த பாதையிலே நடந்து சென்று புதுக் கழனி தேடுவது போன்ற பொதுவேலை— இதிலே அவர் இவ்வளவு நீண்ட காலம் ஈடுபட்டிருப்பது, ஆச்சாரியார் இருப்பதைவிட விசேஷமான சம்பவம் என் பதில் ஐயம் இல்லை—பெரியாருக்குக் கிடைத்திருப்பது போன்ற ஆர்வம் மிக்க இளைஞர்கள், திராவிடத் தலைவர் களிலே வேறு யாருக்கும் கிடைத்ததில்லை. 'இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்?' என்று மனேன்மணிய ஆசிரியர் (பேராசிரியர் சுந்தரம் பிள்ளை) கூறியதுபோல, பெரியார் நம்பிக்கையுடன் கூறலாம், கூறவேண்டும்...... அவருக்கு இனியும் ஓயா உழைப்பா?...இத்தனை வயதிலும் இப்படி இடுப்பொடியப் பாடுபடுவதா?...அவருடைய

பெரும் படைக்கு அவர் பொறுப்பும், ஆசியும், அளித்து அனுப்பவேண்டும், 'இன்னின்ன செயலைப் புரி!'—என்று!...''

—அண்ணாவின் இந்த வார்த்தைகளைக் கொண்டே பெரியாரிடம் அவர் கொண்டிருந்த பெருமதிப்பும், தள்ளாத உடலம் ஓயாத உழைப்பினால் சாய்ந்துவிடக் கூடாதே என்ற அவரது கவலையும் நன்கு புலனாகும். ஆனால், இந்தக் கட்டுரையிலும், சிலர் குறை கண்டுபிடித்துப் பெரியாரிடம் கோள் மூட்டியதும் உண்டு.

அவற்றைப் பற்றியெல்லாம் பொருட்படுத்தாத அண்ணா, தம் கடமையிலேயே குறியாய் இருந்து, தம்மாலான பணிகளைப் புரிவதிலேயே குறியாய் இருந்தார்.

## நிலையும் நினைப்பும்

அதுகாலை, 23-9-47-ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பொதுப் பேரவைத் தொடக்க விழாவில் கலந்து கொள்ளவும் ஒப்புக்கொண்டார். திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பட்டமளிப்பு விழா மண்டபத்தில், 'நிலையும் நினைப்பும்' என்னும் தலைப்பில் அவர் ஆற்றிய சொற்பொழிவு ஒப்புயர்வற்ற கருத்துப் பேழையாகும்!

ஒரு திங்களுக்கு முன்னர்தான், பெரியாரை எதிர்த்து அண்ணா அறிக்கை வெளியிட்டிருந்தார். ஆகவே, அது பற்றி ஏதாவது விளக்கந் தருகிறாரா, கழகத்தில் தம்முடைய நிலைமை பற்றித் தெளிவுபடுத்துவாரா, இல்லை, கட்சிக்குள் எழும்பியுள்ள பலத்த கண்டனக் கணைகளைத் தாங்க முடியாத நிலையில் கழகத்தைவிட்டு வெளியேறுவது போன்ற முக்கிய முடிவுகளைப் பற்றிச் சூசகமாகவேனும் ஏதாவது தெரிவிப்பாரா—என்றெல்லாம் அறிந்துகொள்ளும் ஆர்வத்துடன் பெருந்திரளாகக் குழுமி இருந்தனர் பல்கலைக் கழக மாணவர்கள்.

ஆனால், அண்ணாவோ கொடுத்த தலைப்பினின்றும் அணுவும் பிறழாமல், அரசியலைச் சிறிதும் கலவாமல், பெரியார்மீது வசைமாரி பொழியாமல் விடுதலை நாள் பற்றித் தாம் விடுத்த அறிக்கை சரியே என்று வாதமும்

புரியாமல், திராவிடர் கழகத்தின் உயிர்க் கொள்கைகளில் ஒன்ருன 'பகுத்தறிவுப் பணி' பற்றியே சிறப்பான முறையில் விரித்துரைத்த அழகும், தெளிவும், ஆழமும், ஆராய்ச்சியும் அங்குக் குழுமியிருந்த மாணவர்கள் அத்தனை பேரையும் வியப்பு வெள்ளத்தில் ஆழ்த்தின. இப்படியொரு தத்துவங்கள் பொதிந்த அற்புதச் சொற்பொழிவை அண்ணு நிகழ்த்துவார் என்ருே, தலைவரின்பால் தமக்குள்ள கருத்து மாறுபாடுகளைத் துளியும் வெளிக்காட்டாமல் பொறுப் புணர்ச்சியோடு தங்களைக் கவர்வார் என்ருே அவர்கள் எதிர்பார்க்கவே இல்லை.

''...ஒரு நாட்டின் நிலை அதன் நினைப்பை உருவாக்குகிறது. உன்னத நிலையில் உள்ள ஒரு நாட்டின் நினைப்பு உயர்ந்திருக்கும்; தாழ்ந்த நிலையில் உள்ள நாட்டின் நினைப்பு தாழ்ந்திருக்கும்.

...நிலைக்கேற்றபடி நினைப்பு இருக்கும்; ஆனல் சில வேளைகளில் நிலைக்கேற்றபடி நினைப்பு இருப்பதில்லை. மூன்ருவது அடுக்கு மேல்மாடியில் உலவுகிற தொழிலாளியின் நினைப்பு அவன் நிலை உயர்ந்திருக்கிற அளவு உயர்ந்திருப்பதில்லை.

...திருட்டுத்தனமாகக் கனி தேடி மரம் ஏறியவனுடைய நினைப்பு எப்படி இருக்கும்? எந்த அளவுக்கு அவன் நிலை உயர்ந்திருக்கிறதோ, அந்த அளவு அவன் நினைப்பு தாழ்ந்திருக்கும்...அவன் இருப்பது மரத்தின் உச்சியில்; ஆனல் அவன் மனம் இருப்பது தரையில்!

...சங்க காலத்திலுள்ள தமிழ் நாட்டின் நினைப்புக்கு இந்நாள் தமிழ்நாட்டின் நினைப்பு எவ்வளவோ தாழ்ந்திருக்கிறது!

...நாடு நிலை உயர்ந்திருந்தும் நினைப்பு உயராததற்குக் காரணம் மூடநம்பிக்கை. நிலை உயர்ந்த அளவுக்கு நினைப்பு உயர்வதற்கு ஒரே மார்க்கம் பகுத்தறிவைப் பரப்பவேண்டும்.

...பகுத்தறிவால் பண்படாத எந்த உள்ளத்தில் நல்லெண்ணத்தை விதைத்தாலும் அது நல்ல விளைவைத் தராது.

...விஞ்ஞானம் இந்த நாட்டில் விழலுக்கு இறைத்த நீராகிவிட்டது. பாலைவனத்தில் வீசிய பனிக்கட்டி போல, குருடனிடம் காட்டிய முத்து மாலையைப்போல, செவிடன் கேட்ட சங்கீதம்போல விஞ்ஞானம் மதிப்பற்றிருக்கிறது.

...மாணவர்கள் மக்களிடம் சென்று அவர்கள் மனத்திலே உள்ள மாசை நீக்கிப் பகுத்தறிவைப் பரப்பிவிட்டுப் பிறகு விஞ்ஞானத்தைப் பற்றிப் பிரச்சாரம் செய்யவேண்டும்."

இவ்வாறு, தம்முடைய நிலை, நாட்டு மக்கள் நினைப்பு, நாட்டின் நிலை, அதைக் குறித்து மாணவர் கொள்ள வேண்டிய நினைப்பு—முயற்சி ஆகியவை பற்றியெல்லாம் விரிவாகத் தெளிவுபடுத்திய அண்ணா,

"இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்"— என்று மனோன்மணீய ஆசிரியரின் மணிமொழியைக் கூறி முடித்த திறன், மாணவர்களிடையே பெருத்த ஆரவாரம், மகிழ்ச்சி, எழுச்சியை உண்டு பண்ணிற்று.

சில நாட்களுக்கு முன்னர், பெரியாரின் பிறந்த நாள் பற்றிய பாராட்டுக் கட்டுரையில் எந்த மணிமொழியை எடுத்துக் காட்டியிருந்தாரோ அதே மணிமொழியை இந்தப் பேச்சின் இறுதியிலும் அண்ணா கையாண்ட நயம் மாணவர்களை வியப்பில் ஆழ்த்தியது. அவர், தம் தலைவரின் கொள்கைப் பாசறையை விட்டுத் தடம் புரண்டு விடவில்லை என்பதையும் உறுதிப்படுத்தியது.

## தூத்துக்குடி மாநாட்டில் தூற்றல்

ஆனாலும் பெரியாரின் சினம் அடங்கவில்லை. அண்ணாவைப் பற்றிய பேச்சு காதில் விழுந்தாலே எரிச்சல் அடைந்துவிடும் நிலையிலேயே இருந்தார்.

தூத்துக்குடி மாநாடு அவருடைய எரிச்சலுக்கு மணி முடி சூட்டுவதுபோல் இருந்தது.

பெரியார் தம்மைப் புறக்கணிக்கிறார் என்பதை உணர்ந்த அண்ணா, மனம் ஒடிந்த நிலையில் தூத்துக்குடி மாநாட்டுக்குச் செல்லாமல் இருந்துவிட்டார். அது பற்றிப் பெரியாரிடம் மாநாட்டிலே கேள்வித்தாள் ஒன்று சென்

திருக்கிறது. அதற்குப் பெரியார் என்ன விடையிறுத்தார் தெரியுமா?

"...முத்தன் ஏன் வரவில்லை? முருகன் ஏன் வரவில்லை? அப்புறம் எம். எஸ். சுப்புலட்சுமி ஏன் வரவில்லை? சுந்தராம் பாள் ஏன் வரவில்லை? என்று கேட்பீர்கள்போல் இருக் கிறதே!"—பெரியாரின் எரிச்சலின் அளவை இதிலிருந்தே புரிந்துகொள்ளலாம்.

அதே சமயம், மாநாட்டுக்கு வந்திருந்த தொண்டர் களோ அண்ணாவைக் காணமல் அவர்தம் அற்புதச் சொற் பொழிவைக் கேட்க முடியாமல் மிகுந்த ஆற்றுமைக்கு ஆளாயினர். இடையில் புகுந்து சிலர் அண்ணாவின்மேல் வெறுப்பை வளர்க்கும் திருப்பணியில் ஈடுபட்டதும் உண்டு.

எல்லா நிகழ்ச்சிகளையும் பொறுமையோடு கவனித்து வந்தார் அண்ணா.

## ராஜபார்ட் ரங்கத்துரை

பெரியாரின் எரிச்சலாலும், பொருமைக்காரர்களின் பொல்லாங்கு உரையாலும், அதே சமயம் கழகத்தின் சில உண்மைத் தொண்டர்களின் உள்ளன்பாலும் பற்பல எண்ணக் கொந்தளிப்புகளுக்கு இலக்காகியிருந்த அண்ணா கழகத்தில் அப்போதைய தம் அவல நிலையையும் அதனால் கழகம் அடைந்துள்ள தேக்க நிலையையும் 'ராஜபார்ட் ரங்கத் துரை'—என்னும் உயிரோவியமாகத் தம்முடைய திராவிட நாடு இதழிலே தீட்டிக் காட்டினர். அதிலே வெளிப்பார் வைக்குப் பெரியார் தம்மீது வெறுப்புற்றவராகத் தோற்ற மளித்தாலும், உள்ளூர தமக்காக வருந்தாமல் இருக்க முடியாது என்பதையும் உணர்த்திக் காட்டினர்.

அந்த உருவகக் கதையில் பெரியாரை 'குருமூர்த்தி' என்ற பாத்திரத்துக்கும் தம்மை 'ராஜபார்ட்-ரங்கத் துரைக்கும்', ஒப்பிட்டிருந்த அண்ணா, '...அவர்களின் கூட் டுறவின் கடைசிப் பலன், அந்தக் கண்ணீர்த் துளிகள்தான் போலும்!'

—என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்தக் 'கண்ணீர்த் துளிகள்' என்னும் இரு சொற்களே பின்னர் பெரியாரின் வாயில் மட்டுமின்றி, அவரை விட்டுப் பிரிய நேரும்பொழுதெல்லாம் அண்ணாவின் எழுத்துக்களி லும் நிலையான இடம் பெற்றுவிட்டன.

## மரத்துண்டு

'ராஜபார்ட் ரங்கத்துரைக்குப்' பின்னர், 'திராவிட நாடு' இதழில் 'மரத்துண்டு'—என்னும் உருவகக் கதை யொன்றையும் எழுதினார் அண்ணா. தாம் எந்த அளவுக் குத் தலைவரால் ஒதுக்கப்படுகிறோம் என்பதை மிக உருக்க மாக அதில் படம் பிடித்துக் காட்டியிருந்தார்.

## விலகவில்லை; ஒதுங்கி நிற்கிறேன்

இவ்வாறு மனக்கசப்புகள் தொடர்ந்துகொண்டே இருந்தபோதிலும் அண்ணா கழகத்தைவிட்டு விலகிவிட வில்லை. 'திராவிட நாடு' இதழ்மூலம் இயக்கப் பணியைத் தொடர்ந்து நடத்திக்கொண்டே இருந்தார். அதில் ஒரு முறை கேள்வி...பதில் பகுதியில், மாற்றுக் கட்சியினர் யாவரும் ஏமாற்றத்துக்கு இலக்காகும் வண்ணம் கழகத் தோடு தமக்குள்ள பிடிப்பு எத்தகையது என்பதையும் நயமாகக் கோடிட்டுக் காட்டியிருந்தார்.

தாங்கள் திராவிடர் கழகத்தை' விட்டு வெளியேறி விட்டீர்களா?

—இது வினா.

'விலகவில்லை; ஒதுங்கி நிற்கிறேன்.

—இது அண்ணா அளித்த விடை.

இதிலிருந்தே கழகக் கொள்கைகளில் அண்ணாவுக்கு இருந்த அழுத்தமான பிடிப்பையும், தலைவரிடம் கருத்து மாறுபாடு இருந்தாலும் அவர் உணர்ந்து திருந்தும்வரை பொறுத்திருப்போம் என்ற உறுதிப்பாட்டையும் விளங்கிக் கொள்ளலாம்.

## அனைத்துக் கட்சி இந்தி—எதிர்ப்பு மாநாடு

மேலே காட்டிய கசப்புகள் மறைவதற்கு விரைவி லேயே தமிழக ஆட்சிப் பீடத்தில் அப்போது கொலு

வேறியிருந்த காங்கிரசு அமைச்சரவை வழிவகுத்துக் கொடுத்தது.

முதலமைச்சராக இருந்த திரு. ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாரும், கல்வியமைச்சராய் இருந்த திரு. அவனுசி லிங்கம் செட்டியாரும் இந்தி என்னும் வேதாளம் முருங்கை மரத்திலிருந்து இறங்கிவிடாமல் கவனிப்பதில் முனைந்து நின்றனர். பள்ளி மாணவர்களின் தலையில்—இதயத்தில்—ஏற்றிவைத்த கட்டாய இந்தி என்னும் கற்பாறையை இறக்கவே முடியாது என்று அடம்பிடித்தனர்.

இந்தப் பிடிவாதப் போக்கில் பெருநெருப்பை மூட்டி இந்தித் திணிப்பினின்றும் தமிழகத்தை விடுவிக்கும் பொருட்டு பெரியார் எல்லாத் துறைகளையும், கட்சிகளையும் சார்ந்த அறிஞர்களையும், அரசியல் தலைவர்களையும் ஒன்றாய்க் கூட்டி மாநாடு ஒன்றை நடத்தினர்.

**17-7-48**இல், நடைபெற்ற அந்த இந்தி எதிர்ப்பு மாநாட்டுக்கு 'தமிழ்க் கடல்'—மறைமலையடிகள் தலைமை தாங்கினர். தமிழ்த் தென்றல் திரு. வி. க. மாநாட்டைத் திறந்து வைத்தார்.

இம் மாநாட்டின் சிறப்புகளில் குறிப்பிடத்தக்கது என்னவெனில் முதல் மொழிப் போராட்டத்தில் கலந்து கொள்ளாத—கண்டித்த—தமிழ் எழுத்தாளர்களின் தலைவர். திரு. நாரண துரைக்கண்ணன், திரு. ம. பொ. சிவஞான கிராமணி ஆகியோரும் இம் மாநாட்டில் கலந்துகொண்டு இந்திக்கு எதிர்ப்புத் தெரிவித்ததே ஆகும்.

### அண்ணாவின் முழக்கம்

அம் மாநாட்டில், அதுகாறும் ஒதுங்கினாற்போல் இருந்த அண்ணாவும் ஆர்வத்துடன் கலந்துகொண்டு வீர உரை ஆற்றினர்.

"......மறைமலையடிகளாரும், திரு. வி. க. அவர்களும் இந்தி நுழைவால் தமிழ் கெடும்; தமிழ் கலாச்சாரம் கெடும் என்று அழுத்தந்திருத்தமாகக் கூறிவிட்ட பிறகு, அவர்கள் சாட்சியம் நமக்குக் கிடைத்துவிட்ட பிறகு போர் முழக்கம் செய்வது தவிர நமக்கு வேறென்ன வேலையிருக்கிறது?"

—என்று அவர் எழுப்பிய அறப் போர்க் குரல் மாநாட்டு மண்டபத்தையே அதிரவைத்தது!

அதன் பின்னர், தலைவர்க்கும் தளபதிக்கும் நடுவே நீண்டிருந்த இடைவெளி குறையலாயிற்று.

கழகத்துக்கு அண்ணாவின் ஒதுங்கிய போக்கால் ஏற்பட்டிருந்த சூனிய நிலை—வெறுமைக் கோலம்—பெரியாரின் மனத்தையும் தைக்கத் தொடங்கிற்று.

நல்லெண்ணங்கொண்ட சிலர் அண்ணாவையும் பெரியாரையும் தனித் தனியே சந்தித்து அவர்களை இணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

அவர்களுடைய முயற்சி வீண்போகவில்லை; விழலுக்கு இறைத்த நீராகிவிடவில்லை.

தனயனைக் காணத் தந்தை துடித்தார்; தந்தையைச் சேரத் தனயனும் துடித்தார்.

அவர்களுடைய இணைப்புக்கு உருவான வழிவகுத்தது ஈரோடு தனி மாநில மாநாடே!

**ஈரோடு மாநாடு**

1948-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 23-24 ஆகிய இரு நாட்களிலும் ஈரோட்டில் நடைபெற்ற அந்த திராவிடர்க் கழகத் தனி மாநில மாநாடு பலவகையிலும் சிறந்து விளங்கியதாகும். அதற்கு அண்ணாவே தலைமை தாங்கினார். கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் நாட்டு வாழ்த்துப் பாட மாநாடு பொலிவோடு தொடங்கிற்று.

ஆகஸ்டுப் பதினைந்து அறிக்கைக்குப் பின்னர் அண்ணாவும் பெரியாரும் இணையவே மாட்டார்கள் என்று மனப்பால் குடித்தவர்களின் எண்ணங்களில் எல்லாம் மண்ணை அள்ளிப் போட்டது அம் மாநாடு!

அப்போது தமிழகத்தில் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் தலைமை அமைச்சராக இருந்தார்; அவினாசிலிங்கம் செட்டியார் கல்வி அமைச்சராக இருந்தார். மீண்டும் இந்தியைத் திணிக்கும் வேலையில் அவர்கள் ஈடுபட்டிருந்தனர், அவர்கள் முயற்சியைத் தகர்க்கும் பொருட்டு

இரண்டாவது மொழிப் போருக்கான இன்றியமையா முடிவு எடுக்கவும் நடைபெற்றது அம் மாநாடு.

### திரு. வி. க. வேண்டிய திராவிடநாடு

பழம்பெரும் காந்தியவாதியாக இருந்தவரும், தம்முடைய தண்மை மருவிய 'தென்றல்' நடையால் தமிழக மாந்தரைத் தம் எழுத்தாலும் பேச்சாலும் ஈர்த்துவந்தவரும், இந்திய ஒருமைப்பாடு குறித்து வற்புறுத்தி வந்தவருமான திரு. வி. க. அவர்களை ஒரு பிரிவினை வாதியாகக் காட்டியது அம்மாநாடு! 'திராவிட நாடு'—படத்தைத் திறந்து வைத்து,

'இந்தியா விரைவில் சமதர்ம நாடாக மாறுவதற்கான அறிகுறிகள் எதுவும் கிடையாது. முதலாளிகளின் ஆதிக்கமே ஓங்கி வருகிறது. தென்னாட்டைச் சுரண்டுவதிலேயே அதன் முழு நோக்கமும் இருந்து வருகிறது. இந்தக் கேட்டிலிருந்து நாம் தப்புவதற்காக ஒரே ஒரு வழி உண்டு. அது தான் நமது நாட்டை வடவர் தொடர்பிலிருந்து அறவே அறுத்துக்கொள்வது. நமது நாட்டை நமதாக்கிக்கொள்வது. 'திராவிட நாடு திராவிடருக்கே!'—என்பதாகும்.'

—என்று அவர் எழுப்பிய முழக்கம் இன்றும் பலருடைய செவிகளில் எதிரொலிப்பதாகும்!

### அழகிரி அழவைத்தார்

ஆண்மைமிக்க சிங்க ஏறுய் அஞ்சா நெஞ்சினராய்த் தமிழ் மக்களைத் தட்டி எழுப்பிக் கொண்டிருந்த பட்டுக்கோட்டை அழகிரிசாமி, எலும்புருக்கி நோய்க்கு இரையாகித் தம் நெடிய உருவம் குறுகிக் குலைந்துவிட, நிற்கக்கூட முடியாமல்,

'...இந்த மாநாட்டுக்குப் பிறகு (இந்தியை எதிர்த்து மீண்டும்) சிறை செல்லவேண்டி நேரிடும்......என்னைப் பொறுத்த வரையில் என் உடல் நிலையைக் கவனித்தால் எனக்கு இதுவே கடைசி மாநாடாக இருக்குமோ என்று அஞ்சுகிறேன். என் தலைவனுக்கு இறுதி வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளவே இன்று வந்தேன்.'

—என்று சோகம் ததும்பிடக் கூறியதும் குழுமியிருந்த அனைவரும் 'கோ'வென்று கதறியதும் கண்ணீர் வெள்ளத்தில் மிதந்ததும் இந்த மாநாட்டில்தான்! அந்த மாபெரும் மறவர் அழகிரி அவர்களின் வாக்குப் பொய்க்கவில்லை. அடுத்த சில திங்களிலேயே கழகத் தலைமை கவனிக்காத நிலையில் அண்ணா அவர்கள் நோய் நீங்க நிதி உதவிக்கு ஆவன செய்தும்கூட, 1949-ஆம் ஆண்டு மார்ச் 28-ஆம் நாள் இயற்கை எய்திவிட்டார்.

## பெரியார் தந்த பெட்டிச் சாவி

அடுத்து, ஈரோட்டு மாநாட்டு நிகழ்ச்சிகளுக்கெல்லாம் மணிமுடிபோல் விளங்கியது,

"நான் இன்று எனது பெட்டிச் சாவியை அண்ணாவிடம் உங்கள் முன்னிலையில் கொடுத்துவிடுகிறேன்"

—என்று பெருத்த ஆரவாரத்துக்கிடையே பெரியார் கூறியதே ஆகும்.

அப்போது அவர் அண்ணாவைப் புகழ்ந்த புகழ்ச்சிதான் என்னே?

"நான் பொதுத் தொண்டில் ஈடுபட்டு நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டன. எனக்கோ வயது எழுபதுக்கு மேலாகின்றது. எத்தனை நாட்களுக்குத்தான் இனியும் என்னால் உழைக்க முடியும்?...நமது இயக்கத்தில் பலர் இருக்கிறார்கள், கட்சியின் நலன் நாடி உழைக்க! ஏன், இன்றைய மாநாட்டின் தலைவர் அண்ணாதுரை ஒருவர் போதும் நமது கழகத்தை நடத்திச் செல்ல! அவர் படித்தவர்; பகுத்தறிவுவாதி; நல்ல எழுத்தாளர்—பேச்சாளர்; அத்துடன் உங்கள் அபிமானத்தைப் பூரணமாகப் பெற்ற வாலிபர்! அவர் ஒருவரே போதும் நம்மை நடத்திச் செல்ல. என்னைப் பொறுத்த வரையில் நான் கூறுகிறேன், எனக்கு வயதாகிவிட்டது. வயதாகிய தந்தை தன் பொறுப்பைத் தன்னுடைய மகனிடம் ஒப்படைத்து விடுவதுதான் நியாயம்; உலக நடைமுறையும் கூட. ஆகவே, நான் இன்று எனது பெட்டிச் சாவியை அண்ணாவிடம் உங்கள் முன்னிலையில் கொடுத்து விடுகிறேன். எனவே, தந்தை தன் கடமையைச் செய்துவிட்டான். இனி,

தலையன் தன் கடமை—பொறுப்புணர்ச்சி ஆகியவற்றை உணர்ந்து நடக்கவேண்டும்."

—பெரியாரின் உரையைக் கேட்ட பொதுமக்களின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை; உற்சாகத்திற்குக் கங்குகரையே இல்லை!

## நெஞ்சக் கடலின் நீரோட்டம்

இவ்வாறாக அண்ணாவின் நெஞ்சக் கடலின் நீரோட்டம் போல் ஓடிக்கொண்டிருந்த 'விடுதலை வேட்கை'யினால்—ஆகஸ்டுப் பதினைந்து இன்ப நாளே என்று அவர் விடுத்த அறிக்கையினால்—தமிழகத்தில் ஏற்பட்டிருந்த கொந்தளிப்பு அடங்கிற்று; கழகத்தை வாட்டிய கவலை நீங்கியது; தந்தைக்கும் தனயனுக்கும் உண்டான பிணக்குத் தகர்ந்தது.

ஆனால் இந்த அமைதி நிலை தொடர்ந்து நீடித்ததா? தாம் பலர் முன்னிலையில் அறிவித்தவாறே பெரியார், கழகப் பொறுப்பினின்றும் தம்மை விடுவித்துக் கொண்டாரா? பெட்டிச் சாவியை அண்ணாவிடம் தந்தாரா?

# 17. பெரியாரின் திருமணம்

## இயக்கத்தின் இலட்சியங்கள் ?

பெரியார் தன்மான இயக்கத்தை எதற்காகத் தோற்று வித்தார்?

சமூகத்தில் நிலவிவரும் சாதி—சமயப் பிணக்குகளை நீக்குவதற்கு மட்டுமா? சாத்திர, சம்பிரதாயச் சடங்குகளை ஒழிப்பதற்கு மட்டுமா? விஞ்ஞான மனப்பான்மைக்கே வழி ஏற்படாத வகையில் மெய்ஞ்ஞானத்தின் பெயரைப் போலி யாகச் சொல்லிக்கொண்டு, அஞ்ஞானப் பிணத்திற்கே பட்டுக்கம்பளம் விரித்து மகிழும் பாமரத் தன்மையையும், குருட்டு நம்பிக்கைகளையும் குழி தோண்டிப் புதைப்பதற்கு மட்டுமா?

அல்ல.

பெண்ணடிமையைக் களைந்தெறிந்து பெண்ணின் பெரு மையை உயர்த்துவதற்காகவும் எழுந்ததே தன்மான இயக்கம்—பகுத்தறிவு இயக்கம்!

அதற்காகச் சீர்திருத்தத் திருமண முறையையே நாட்டில் புகுத்தியவர் பெரியார். அவருடைய வாய்மொழி யைப் பொன்னேபோல் போற்றி இதுகாறும் தமிழகத்தில் ஆயிரக்கணக்கான பகுத்தறிவுத் திருமணங்களும், கலப்புத் திருமணங்களும், தமிழ்த் திருமணங்களும் நடைபெற்றுள் ளன; நடைபெறுகின்றன.

## பெண்ணடிமை மண்ணாக...

அவரே பல சீர்திருத்தத் திருமணங்களுக்குத் தலைமை தாங்கியும், முன்னின்றும் நடத்திக் கொடுத்திருக்கிறார். அம் மாதிரி வேளைகளில், "ஆணுக்குப் பெண் அடிமையானவள் அல்லள்...அந்த அடிமைத்தனத்தின் சின்னமான தாலியை அணிவதுகூடப் பகுத்தறிவுக்குப் பொருந்தாது. அப்படித் தாலி அணியத்தான் வேண்டும் என்றால் பெண் மட்டும் ஏன்

அணியவேண்டும்? ஆண்களும் அப்படித் தாலி அணிய வேண்டும் என்று வற்புறுத்த வேண்டும். அல்லது தாலிக்குப் பதிலாக, டாலர் கோர்த்த சங்கிலியை இருவருமே அணியலாம்...பெண்ணின் அடிமை நிலைமையால்தான் நம் நாடு பின் தங்கிவிட்டது. அறிவுக்குப் பொருத்தமில்லாமல் நடைபெறும் திருமணங்களையெல்லாம் ஒழித்துக்கட்டவேண்டும்''

—என்று அன்று மட்டுமல்ல, இன்றுங்கூட முழங்கி வருபவரே பெரியார்.

### உலகத் தலைவர்களுள் ஒருவர்

அவருடைய அறிவாராய்ச்சிக்குப் பொருத்தமான கொள்கைகளால் கவரப்பட்டுத்தான், அண்ணா முதலான ஆயிரக்கணக்கான இளைஞர்கள், அவர்தம் தன்மான இயக்கத்தில் பங்கு கொண்டார்கள். அவரையும் சாக்ரடீஸ், சார்லஸ் பிராட்லா, கார்ல்மார்க்ஸ், இங்கர்சால் முதலான பகுத்தறிவுச் செம்மல்களுக்கு இணையானவராக வைத்துப் பணிந்தார்கள்; அவர் அறிவித்த கொள்கைகளுக்காகத் தங்கள் வாழ்க்கையையே காணிக்கையாக்கவும் துணிந்தார்கள்.

### காய் பறிக்கும் வேளையில் கால் வழுக்கலா?

இவ்வாறு பகுத்தறிவைப் பரப்புவதில், மூட பக்தியைச் சாடுவதில், பொருந்தாத் திருமணங்களைப் போக்குவதில் முன்னணி வீரராய்த் திகழ்ந்து 'உலகத் தலைவர்' என்னும் பரிசிலைப் பெறும் பந்தயத்தில் ஓடிக்கொண்டிருந்த பெரியார் திடீரென்று தேங்கி நின்றார்.

தென்னை மரத்தில் தேங்காய் பறிக்கப் போகும் வேளையில், கால் வழுக்கிச் சரேலென்று இறங்கித் தரையிலேயே வந்து நின்றால் எப்படி இருக்கும்? கொள்கை மரத்தின் உச்சாணிக் கொம்புக்குப் போய்ப் புகழ்க் கனியைக் கொய்ய வேண்டியவர், அடிமரத்தையே கோடெறி கொண்டு பிளக்கத் துணிந்தால் எப்படி இருக்கும்?

எந்தப் பொருந்தாத் திருமணத்தைத் தம் உயிரைக் கொடுத்தும் அடிக்கடி கண்டித்து வந்தாரோ அதே பொருந்

தாத் திருமண முறைக்குப் பெரியாரே இரையாகிவிட்ட நிலையைத்தான் இங்கு வருத்தத்தோடு குறிப்பிடுகிறோம்.

## இராசாசியுடன் என்ன பேச்சு?

1949-ஆம் ஆண்டு மே திங்கள் 14-ஆம் நாள். அப்போது இந்தியாவின் கவர்னர்-ஜெனரல் ஆக இருந்த திரு. இராச கோபாலாச்சாரியார் திருவண்ணுமலை வந்திருந்தார். அவரைத் தமக்கு இன்றியமையாத் தொண்டு புரிந்துகொண் டிருந்த திருமதி மணியம்மையோடு சென்று கண்டார். ஒரு மணி நேரம் தனித்துப் பேசிக்கொண்டிருந்தார். அந்தப் பேச்சின் விளைவே—சந்திப்பே பெரியாரைச் சாதாரண மனிதர்களுள் ஒருவராக மாற்றியது; 'தொண்டு' என்னும் கிளையில் அமர்ந்துகொண்டே கொள்கை என்னும் அடிமரத் தைச் சொந்த நலம் என்னும் அரத்தால் அறுக்கவும் தூண் டிற்று; 71 வயதான நிலையில் தம்மைவிட நாற்பத்தைந்து வயது இளையவரான பெண்ணை மணப்பதற்கும் அவர் மனத் தில் இடங்கொடுத்தது!

அன்றிருந்த அரசியல் சூழ்நிலையில் இராசாசியைப் பெரியார் திருவண்ணுமலையில் சந்தித்ததும், தனிமையில் பேசிக்கொண்டிருந்ததும், திராவிடர் கழகத்தவரிடையே பலத்த ஐயப்பாடுகளையும், அச்சங்களையும் எழுப்பின. அந்த மறைவுப் பேச்சு (இரகசியம்) என்ன என்பதை அறியும் ஆர்வமும் தலைதூக்கி நின்றது. அதை அறிந்து கொள்வதற் கான முதற் பழியைச் சுமந்துகொண்டவரும் அண்ணுவே.

கோவையில் 1949—மே—திங்களில் முத்தமிழ் மாநாடு ஒன்று நடைபெற்றது. அதற்குப் பெரியாரும் வந்திருந் தார்; அண்ணுவும் சென்றிருந்தார். இராசாசியைச் சந்தித் துப் பல நாட்கள் ஆகியும் தங்கள் பேச்சுப் பற்றிப் பெரியார் அறிக்கையேதும் வெளியிடாது போகவே, அதனுல் மனக் கவலை உற்றிருந்த தோழர்களுக்குத் தெளிவு கிடைக்கட்டும் என்னும் நோக்கத்தில், அண்ணு தம் உரையின்போது,

'திருவண்ணுமலையில் ஆச்சாரியாரை நம் தலைவர் கண்டு பேசியதன் காரணத்தை வெளியிட விரும்புகிறேன்.'

—என்ருர்.

அண்ணுவுக்குப் பின்னர் பேசிய பெரியார், அவர் வேண்டுகோளுக்கு விடையிறுக்கும் முகத்தான்,

"...இராசகோபாலாச்சாரியாரை நான் திருவண்ணு மலையில் சந்தித்தது என்னுடைய சொந்த விஷயம். அதற்கும் நம் கட்சிக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை"

—என்ருர்.

பெரியாரின் இந்த வார்த்தைகள் மாநாட்டில் கூடியிருந்தோரைத் திடுக்கிட வைத்தன. ஒளிவு-மறைவு என்பது எதுவும் இல்லாமல் எதையுமே வெளிப்படையாகப் போட்டு உடைக்கும் பெரியார் திருவண்ணுமலைப் பேச்சை மட்டும் இவ்வாறு மூடி மறைப்பது கழகத் தோழர்களுக்கு பெரும் அதிர்ச்சியாக இருந்தது. 'சொந்த விஷயம்' என்று சொன்ன பிறகு இதில் அதிர்ச்சியடைய என்ன இருக்கிறது என்று கேட்கலாம்.

## தந்தைக்கும் சொந்த நலமா?

பொதுவாழ்வில் ஈடுபட்ட பிறகு அதுவும் அண்ணுவைத் தம் அரசியல் தத்துப் பிள்ளையாக வரித்துக்கொண்ட பிறகு 'சொந்த விஷயம்' என்றும், 'பொது விஷயம்' என்றும் எதையுமே பிரித்து நடந்து வந்தவர் அல்லர் பெரியார். அதனுல்தான் 'சொந்த விஷயம்' என்று பெரியார் கூறிய பிறகும், கழகத்தவரால் அமைதியுற முடியவில்லை.

## நம்பிக்கை நலிவானேன்?

அடுத்து, கோவையிலிருந்து சென்னை திரும்பிய பெரியார், விடுதலை ஏட்டில் 'விளக்கம்' என்று 19-6-49இல் ஓர் அறிக்கை வெளியிட்டு, தொண்டர்களை மேலும் ஒரு பேரதிர்ச்சிக்கு இலக்காக்கினுர். அவ்வறிக்கையில்,

"...நம்பிக்கையான ஒருவர் எனக்குக் கிடைக்கவில்லையென்ருல், அதற்கு யாரும் கோபித்துக்கொள்ளக் கூடாது... நம் இயக்கத்துக்குத் தொண்டாற்ற, பொறுப்பேற்க, முழு நேரத் தோழர்கள், தங்களை முழுக்க ஒப்படைப்பவர்கள் யார் இருக்கிருர்கள்?—இருந்தார்கள்?..." என்றெல்லாம்

காணப்பட்ட வரிகள் கழகத்தவரின் நெஞ்சில் கடுமையான புண்ணை ஏற்படுத்தின.

ஈரோடு மாநாட்டிலே, 'நமது இயக்கத்திலே பலர் இருக்கிறார்கள் கட்சியின் நலன் நாடி உழைக்க;...ஏன், அவர்—அண்ணாதுரை ஒருவர் போதும் நமது கழகத்தை வழி நடத்திச் செல்ல'—என்று கூறிய பெரியாரே, இயக்கத்தில் தமக்கு நம்பிக்கையானவர் யாரும் இல்லையென்றும், இயக்கத்தை நடத்திச் செல்ல யார் இருக்கிறார்கள் என்றும் எழுதினால், தோழர்களுக்கு எப்படி இருக்கும்? எப்படிப் பொருந்தும்?

## தெளிவான சில உண்மைகள்?

28-6-49-இல், விடுதலையில் மீண்டும் ஓர் அறிக்கை வெளியிட்டார். அதிலிருந்து திருவண்ணாமலையில் இராசாசியுடன் நடத்திய மறைவுப் பேச்சு என்ன என்பது விளங்கிற்று. அத்துடன் சில உண்மைகளும் தெளிவாயின.

1. தமக்கு அதுகாறும் 5, 6 ஆண்டுகளாகத் தொண்டு புரிந்து வந்தவரும், கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டவருமான திருமதி மணியம்மை அவர்களிடந்தான் பெரியாருக்கு முழு நம்பிக்கை உண்டாகியிருக்கிறது.

2. தம் சொந்தச் சொத்துக்களுக்கும் கழகச் சொத்துக்களுக்கும் பாதுகாப்பாக 'டிரஸ்ட்' (பொருள் பொறுப்புக் குழு) ஒன்றை திருமதி மணியம்மை தலைமையில் அமைக்கப் போகிறார்; அதன் மூலம் மணியம்மை பெரியாரின் 'வாரிசு' ஆகிறார்.

3. இதனால், அண்ணாவிடமோ மற்றக் கழக முன்னணித் தலைவர்களிடமோ பெரியாருக்கு நம்பிக்கை இல்லை.

4. ஈரோடு மாநாட்டில் 'பெட்டிச் சாவியை அண்ணாதுரையிடம் உங்கள் முன்னிலையில் ஒப்படைக்கிறேன்' என்று மக்களைப் பார்த்துப் பெரியார் கூறியது வெறும் பேச்சுக்குக் கூறியதேயன்றி உண்மையன்று. அரசியல் அளவில்கூட பெரியாரின் வழித்தோன்றல் (வாரிசு) மணியம்மையே அன்றி, அண்ணா அல்லர்.

5. பிள்ளையில்லாத பெரியார் அவர்களுக்கு அவருடைய அண்ணன் பிள்ளை திரு. ஈ. வெ. கி. சம்பத் மீதும் நம்பிக்கையில்லை. ஆகவே திரு. சம்பத், பெரியாரின் 'வாரிசாகப்' போவதில்லை.

—பெரியாரின் 28-6-49 அறிக்கையைக் கண்டபின் தலைவர்கள்முதல் தொண்டர்கள்வரை, பெரியாரின் போக்கு, செயல், கொள்கை பற்றிய வாதப் பிரதிவாதங்கள் வலுவடைந்தன. கசப்புணர்ச்சி மேலோங்கியது.

## மணஞ் செய்ய மனு

இந்த அறிக்கைக்கு முன்னரே, தமக்கும் மணியம்மைக்கும் பதிவுத் திருமணம் நடைபெறுவதற்குப் பதிவாளருக்கு விண்ணப்பம் அனுப்பிவிட்டிருக்கிறார் பெரியார். அது அவ்வளவாக வெளியில் தெரியாமல் இருந்தது. ஆனால் சென்னையிலிருந்து வெளிவந்த ஒரு நாளேடு அம்பலப்படுத்தி விட்டது.

## தொண்டர்கள் திண்டாட்டம்

பெரியார் மணியம்மை திருமணச் செய்தி அறிந்ததும் கழகமே கலகலக்கும் அளவுக்குக் கொந்தளிப்பு ஏற்பட்டது. குமுறும் எரிமலை ஆயினர் தொண்டர்கள்.

71 வயது ஆன பெரியார், 26 வயதே ஆன மணியம்மையை மணம் புரிவது, அவர் வளர்த்துவந்த பகுத்தறிவுக்கே கொடுக்கப்பட்ட மரண தண்டனையாகத் தோன்றியது. 'பொருந்தாத் திருமணங்களை வாய் கிழியக் கண்டித்துப் பேசினோமே, இப்போது நம் தலைவரே பொருந்தாத் திருமணம் புரிகிறாரே, இனி எந்தத் துணிவோடு பகுத்தறிவு பற்றி மேடையேறிப் பேசுவோம், எந்த முகத்தோடு பொது மக்களைச் சந்திப்போம்?' என்று கழகத்தவர் நெஞ்சுவெடிக்கக் கண்ணீர்த் துளிகளைச் சிந்தினர். சிந்தியதோடு நிற்கவில்லை; தத்தம் எதிர்ப்புக்களையும் வெளிப்படையாகக் காட்டினர்.

### அருகிருந்தும் அறிந்தார் யார்?

அந்த நாளில் பெரியார் எங்கே சுற்றுப்பயணம் சென்றாலும் அவருடைய 'அந்தரங்கச் செயலாளர்' போல் கூடவே சென்று பெரியாருக்குப் பெருந்துணை புரிந்தவர் திரு. என். வி. நடராசன். அவருக்குக்கூட உண்மையைச் சொல்லவில்லை பெரியார்.

அப்போது 'விடுதலை' ஏட்டின் ஆசிரியராக இருந்தார் திரு. சா. குருசாமி. 'கல்கி'யைப் போன்றவர்களால்தான் நகைச்சுவையாக எழுத முடியும் என்று கூறப்பட்ட காலத்தில் கழகத்திலும் அதற்கு ஆள் இல்லாமல் இல்லை என்று அறைகூவல் விடுப்பவர்போல், 'குத்தூசி' என்னும் புனை பெயரில் அளவிறந்த நகைச்சுவைக் கட்டுரைகளை வரைந்து தள்ளியவர் திரு. குருசாமி. அவரும் பெரியாரிடம் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தவரே. அவரிடமும் தம் திருமணச் செய்தியைப் பற்றிக் கலந்து பேசவில்லை பெரியார்.

தமிழர்கள் தலையெடுக்க, 'வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை'க்குச் சட்ட வடிவந் தந்த முன்னாள் அமைச்சராக இருந்த திரு. எஸ் முத்தையா முதலியார் அவர்களிடம் பெரியாருக்கு பெருமதிப்பும், ஆழ்ந்த ஈடுபாடும் உண்டு. அவருக்கும் தெரியாது பெரியார்—மணியம்மை திருமண ஏற்பாடு.

பெரியார் காலால் இட்ட வேலையைத் தலையால் செய்யவும் தயங்காத எத்தனையோ தொண்டர்களுள், அவருக்கு மிகவும் பிடித்தமானவர்களாக விளங்கியவர்கள் திரு. கே. கோவிந்தசாமி, திரு. சி. டி. டி. அரசு ஆகியோர் ஆவர். அவர்களாலும்கூட திருமணச் செய்தியை முன்கூட்டியே அறிய முடியவில்லை.

### முதுகெலும்பே முறிவதா?

என்றாலும்-பதிவாளர் அலுவலக அறிக்கைப் பலகையில் திருமண அறிக்கை வெளியான செய்தி விரைந்து பரவிற்று நாடெங்கும். கொள்கைக்காகத் தம் உயிரையும் கொடுக்கச் சித்தமாக இருந்த கழகத்தினர்க்கு என்ன செய்

வது என்று புரியவில்லை. நடுக்கடலில் கப்பல் கவிழ்ந்து விட்டால் அதிலிருந்த பயணிகள் என்ன பாடுபடுவார்கள்! அத்தகைய துயரக் கடலுக்கு இரையாகி விட்டவர்போல் கழகத்தினர் தவித்தனர்; தத்தளித்தனர். முதுமையின் இறுதிப் பகுதி நோக்கி விரைந்து கொண்டிருக்கும் பெரியார், புரிந்துகொள்ளப் போகும் பொருந்தாத் திருமணத்தால், திராவிடர் கழகத்தின் முதுகெலும்புக் கொள்கையான பகுத்தறிவுப் பணிக்கே 'முறிவு' ஏற்படப் போகிறதே என்று அச்சங்கொண்ட சில தலைவர்கள், எவ்வாறேனும் திருமணத்தைத் தடுத்து விட்டால் என்ன என்று சிந்தித்தனர்.

## அண்ணா கொண்ட அடக்கம்

*இந்தச் சமயத்தில் அண்ணாவின் நிலை என்ன?*

கோவை முத்தமிழ் மாநாட்டில் திருவண்ணாமலையில் திரு. இராசகோபாலாச்சாரியாருடன் பெரியார் நடத்திய மறைவுப் பேச்சு என்ன என்று கேள்வி எழுப்பியதோடு அமைதியாக அவர் ஒதுங்கியிருந்தார். நாட்டிலே பகுத்தறிவு வித்துக்களை விதைத்து அவை, பயிராக வளர்ந்து கதிர்விடப் போகும் பருவத்தில், விதைத்தவரே சூறைக் காற்றாக மாறி அழிக்கப் போகிறாரே என்ற ஆறாத்துயரம் அண்ணாவுக்கு. எனினும் அதை மற்றவர்களைப் போல் படபடப்பினை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. பெரியார்மீது அவர் வைத்திருந்த 'குரு பக்தி' அவர் கரங்களைக் கட்டிப் போட்டே வைத்திருந்தன.

ஆனால், கட்சியின் எதிர்கால நலனைக் கருதி திரு. சா. குருசாமி, திரு. ஈ. வெ. கி. சம்பத், திரு. என். வி. நடராசன் மூவரும், சலிப்புற்று ஒதுங்கினாற்போல் இருந்த அண்ணாவைச் சந்திக்கக் காஞ்சீபுரம் சென்றார்கள். அண்ணா போட்டுக்கொண்டிருந்த அடக்கக் கட்டினையும் அவிழ்த்து விட்டார்கள். "ஏதாவது நடவடிக்கை எடுத்து தலைமையைத் திருத்தவேண்டாமா? கட்சியைக் காப்பாற்ற வேண்டாமா?"—என்றும் அவர் அமைதியைக் கலைத்தனர்.

### திரு. சம்பத்தின் தவிப்பு

வந்திருந்த மூவருள் மிகவும் துடிப்பாக அண்ணாவை உசுப்பிவிட முனைந்தவர் திரு. சம்பத் அவர்களே.

அவர் ஏன் இத்துணை ஆத்திரப்படுகிறார்—ஆவேசங் கொள்கிறார் என்பது அண்ணாவுக்குப் புரியும்.

பெரியார் அவர்களின் திருமணத்தால் கழகத்தின் வேர்க் கொள்கைக்கு வெந்நீர் விடப்படுகிறது என்பது ஒருபுறம் இருக்க, நேரடியாக முதலில் பாதிக்கப்படும் மனிதர் ஒருவர் உள்ளார் என்றால் அவர் திரு. சம்பத்தே.

பெரியாரின் உடன் பிறந்த அண்ணனின் மூத்த மகன் சம்பத். பெரியாருக்கோ, திருமதி நாகம்மையாரை மணந்து கொண்டதன் மூலம் பிள்ளை ஏதும் இல்லை. இந்நிலையில், அவருடைய சொத்துக்கள் இயல்பாகவே தம்மையே வந்தடையும் என்று கனவு கண்டு கொண்டிருந்திருக்கலாம் சம்பத். ஆனால், பெரியாரின் மறுமண ஏற்பாட்டால், சம்பத்துதான் 'வாரிசு'—என்றிருந்த உறுதி நிலை உளுத்த மூங்கில் ஆகிறது; வாய்ப்பு நழுவிப் போகிறது. அதனால்தான் பெரியார் மறுமணம் புரிந்துகொள்வதில் சம்பத்துக்கு அவ்வளவு ஆத்திரம் என்று ஊகிக்க இடம் இல்லாமல் இல்லை.

அதேசமயம், பெரியாரை மறுமணம் பற்றிச் சிந்திக்க வைத்தவரே திரு. சம்பத்துதான் என்றும் கூறப்படுகிறது. திரு. சம்பத்தின் நடவடிக்கைகளில் அவர் கொண்ட வெறுப்பினாலேயே, திருமதி மணியம்மையிடம் பொறுப்புக்களை விடுவது பற்றிச் சிந்தித்தார் என்றும் சிலர் கூறக் கேட்கிறோம். இதில் எந்த அளவுக்கு உண்மையோ யாம் அறியோம்.

'சம்பத்தின் மீதுதான் நம்பிக்கை இல்லையென்றால், தம்முடைய வாரிசாக ஒரு பெண்ணைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டுமா? அடுத்தாற்போல், பெரியாரையே கண்கண்ட தெய்வமாக வணங்கிப் போற்றும் 'அண்ணா இல்லையா?'

—என்னும் கேள்விகள் இங்கே எழக்கூடும். அவற்றுக்கும் தக்க விடைகள் உள்ளன.

பெரியாரிடம் தாம் வாங்கிப் பெருக்கிய 'பாசம்'' என்னும் நிதியை, சம்பத்திடம் திருப்பி வழங்கிக்கொண்டிருந்தார் அண்ணு! பெரியார் எவ்வாறு அரசியலில் தம் தத்துப் பிள்ளையாக அண்ணுவை ஏற்றுக் களித்தாரோ, அதேபோல் அண்ணுவும், சம்பத்தைத் தம் உடன் பிறந்த தம்பியினும் மேலாக நேசித்தார். இவ்வுண்மையைப் பெரியாரும் அறிவார். எனவே, சம்பத்தைப் புறக்கணித்து அண்ணுவிடம் சொத்துக்களை ஒப்படைத்தால், எங்கே அண்ணுவே தம் இரக்க குணத்தால் சொத்துக்களைச் சம்பத்திடமே கொடுத்துவிட்டால் என்ன செய்வது என்று பெரியார் அஞ்சிஞரோ என்னவோ?

பெரியார், இவ்வாறு சம்பத்திடம் கொண்டிருந்த அவநம்பிக்கையும் அண்ணுவுக்குத் தெரியும்; சம்பத்துக்குப் பெரியாரிடம் ஏற்பட்ட ஆத்திரமும் அவருக்குப் புரியும்.

எனினும்கூட, 'பெரியார்—சம்பத் பிணக்குகளை' முன் வைத்துப் பார்க்காமல் மணியம்மையாரின் மணத்திஞல் கட்சிக் கொள்கைக்கு ஏற்படக்கூடிய களங்கத்தைப் பற்றியே பெரிதும் கருத்தைச் செலுத்திஞர் அண்ணு.

அவருடைய ஆழ்ந்த சிந்தனையைப் புரிந்துகொள்ளாமல், அவரைச் சந்திக்கக் காஞ்சீபுரம் வந்த திரு. சம்பத்தும், திரு. குருசாமியும் அளவுக்கு மீறிப் பரபரப்பைக் காட்டினர்; ஆத்திரத்தைக் கொட்டினர். இளமைத் துடிப்புள்ள சம்பத்து தான் உணர்ச்சிப் பிழம்பாய் மாறிஞர் என்ருல், வயதில் சற்று மூத்தவரான திரு. குருசாமியும் அவரோடு சேர்ந்து குமுறிக் கொதித்தார்.

''என்ன அண்ணு! நாம் சும்மா இருக்கக்கூடாது! உடனே ஒரு கண்டனக்கூட்டம் சென்னையில் போட்டே தீர வேண்டும். கூட்டம் போடுங்கள்; நானே தலைமை வகித்து நடத்துகிறேன்''—என்று முழக்கமிட அவர் தயங்கவில்லையாம்.

ஆனல், அடக்கத்தின் தனிப்பெரும் சின்னமான அண்ணுவோ,

"...ஆத்திரப்பட வேண்டாம்; வேண்டுகோள் விடுப்போம்; விளைவைப் பொறுத்திருந்து பார்ப்போம்"—என்று வந்திருந்தவர்களை அமைதிப்படுத்தினார்.

பின்னர் தம் பொறுப்பினை உணர்ந்து, அதனை நிறைவேற்ற, திரு. சா. குருசாமி, திரு. என். வி. நடராசன், திரு. சம்பத் ஆகியோருடன் சென்னைக்குக் கிளம்பினார் அண்ணா.

## பெரியாரைக் காணத் தூதுக் குழு

சென்னை கோவிந்தப்ப நாயக்கன் தெருவில் தங்கியிருந்த அண்ணாவைக் கழக முன்னணி வீரர்கள் பலரும் வந்து சந்தித்தார்கள்; தங்களுக்குத் தகுந்த வழியைக் காட்டுமாறும் வேண்டினார்கள். அண்ணாவும் பலப்பல யோசனைகளையும் வெளியிட்டார்.

அவற்றின்படி, ஏற்காடு சென்று அங்கு ஓய்வு எடுத்துக் கொண்டிருந்த பெரியாரைச் சந்தித்து, திருமண ஏற்பாட்டைக் கைவிடுமாறு வேண்டிக் கொள்வதற்காக முதல் தூதுக்குழு புறப்பட்டது. குடந்தை நகரில் கழகத்தைக் கட்டிக் காத்து வளர்த்த திரு. கே. கே. நீலமேகம் அவர்களைத் தலைவராகவும், திரு. சா. குருசாமி, திரு. என். வி. நடராசன், திரு. வேலூர் திருநாவுக்கரசு, திரு. கடலூர் குருசாமி ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட அத் தூதுக்குழு தோல்வியையே தழுவியது.

அடுத்தாற்போல், திரு. டி. எம். பார்த்தசாரதி, திரு. காஞ்சி மணிமொழியார், திரு. கண்ணபிரான், திரு. சி. வி. இராசன் ஆகியோரைக் கொண்ட தூதுக் குழுவும் வெற்றி இலக்கை எட்ட முடியாமலே திரும்பிற்று.

பின்னர், திராவிடர் கழக மத்திய நிருவாகக் குழு உறுப்பினர்கள் 32 பேர்களும், மற்றும் பல தலைவர்களும், பெரியாருக்குக் கண்டனக் கடிதங்கள் வரைந்தனர்; தம் மறுமண முடிவை அவர் மாற்றிக் கொள்ளாவிட்டால், தாங்கள் கழகத்தை விட்டே விலகிக் கொள்வதாகவும் எச்சரிக்கை விடுத்தனர்.

உருக்கமான அறிக்கை

வேண்டுகோள், கண்டனக் கணை, எச்சரிக்கை—எதற்கும் மசியவில்லை பெரியார்.

எனவே, 3-7-49இல், சென்னையில், அண்ணாவின் தலைமையில் இயக்கத்தின் முன்னோடித் தலைவர்கள் பலரும் கூடி அறிக்கையொன்று வெளியிட்டனர்.

"...பொருந்தாத் திருமணம் புரிந்துகொள்ளத் துணிபவர்களை எவ்வளவு காரசாரமாகக் கண்டித்திருக்கிறோம்!—எவ்வளவு ஆவேசமாகக் கண்டித்திருக்கிறோம்! இப்போது, எவ்வளவு சாதாரணமாக நம்மையும் நமது உணர்ச்சிகளையும் நமது கொள்கைகளையும் இயக்கத்தையும் எவ்வளவு அலட்சியமாகக் கருதி, நமது தலைவர் 72-ஆம் வயதிலே திருமணம் செய்துகொள்வதாகத் தெரிவிக்கிறார்!—நாட்டு மக்களின் நகைப்புக்கு இடமாக்கி, 'வெட்கித் தலை குனிந்து போங்கள், எனக்கென்ன?' என்று தெரிவித்து விட்டார்.

"அந்தோ! எவ்வளவு பெரிய தாக்குதல்! எத்துணை அவமானம் தரும் காரியம்! இதற்கோ இவ்வளவு எழுச்சி பெற்றோம்? இந்தப் பழியை ஏற்றுக்கொள்ளவா இந்த அளவு வளர்ந்தோம்? என்ன நம் நிலை! என்னே நம் கதி! எங்கே நமக்குப் புகலிடம்? என்னதான் நமக்கு எதிர்காலம்? எதிரே பெரும் இருள்! சுற்றிலும் கேலி பேசுவோர்! இடையே நாம்! நெஞ்சிலே பெரும் வேதனை! கண்ணீர்! கை கால்களிலே நடுக்கம்! இதற்கோ இந்த வளர்ச்சி?

எம்மை ஆளாக்கிவிட்ட தலைவரே! இந்தக் கதிக்கு எம்மை ஆளாக்கவோ இவ்வளவு உழைப்பும் பயன்பட வேண்டும்? உலகின்முன் தலைகாட்ட முடியாத நிலைமையில் எம்மைச் செய்யும் அளவுக்கு நாங்கள் தங்களுக்கு இழைத்த குற்றம் என்ன? நீங்கள் காட்டிய வழி நடந்தோமே, அதற்கா இந்தப் பரிசு? புயலை எதிர்த்துச் செல்லுங்கள் என்று தாங்கள் கட்டளையிட்டபோதெல்லாம் 'சரி' என்று சொல்லால் அல்ல, செயலால் காட்டினோமே, அதற்குப் பரிசு இதுதானா?

"முத்தமிட வந்த குழந்தையின் மூக்கைக் கடித்தெறியும் தாயை நாங்கள் கண்டதில்லை. தந்தையே! நாங்கள் செய்த தவறுதான் என்ன? இந்தத் தகாத காரியத்தைத் தாங்கள் செய்து எங்கள் தன்மானத்தை அறுத்தெறிவது ஏன்?..."

—என்றெல்லாம் அந்த அறிக்கையிலே அண்ணா உருக்கமாகத் தீட்டியவையும்கூட பெரியாரின் உள்ளத்தை அசைக்கவில்லை.

## திருச்சியில் தி. க. செயற்குழு

பின்னர், 10-7-1949 அன்று திருச்சி தென்னூரில் திரு. தி. பொ. வேதாசலம் அவர்கள் இல்லத்தில் பின்புறத் தோட்டத்தில் திராவிடர் கழக மத்திய நிருவாகக் குழு கூடிற்று. 46—மத்திய செயற்குழு உறுப்பினர்களில் 32-பேர் கூட்டத்தில் கலந்து கொண்டனர். கூட்டத்தின் இறுதியில், இயக்க நலன் கருதி பெரியார் தம் திருமண முயற்சியைக் கைவிட வேண்டும் என்றும், அவரை அவ்வாறு கேட்டுக் கொள்வதற்காகத் திருவாளர்கள். தி. பொ. வேதாசலம், எஸ். எஸ். பழனிச்சாமி, ஜி. பி. சோமசுந்தரம், நீதிமாணிக்கம், கே. கே. நீலமேகம் ஆகியவர்களைக் கொண்ட தூதுக்குழு ஒன்று பெரியாரை நேரில் சந்தித்துப் பேச வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. செயற்குழுக் கூட்டத்தில் பங்குகொண்ட 32 உறுப்பினர்களுள் ஒருவர் தவிர மற்ற எல்லோருமே அத்தீர்மானத்தை ஆதரித்தனர்.

## மங்களமான மணச் செய்தி!

ஆனால் அத் தீர்மானம் பயனற்றதே ஆகும். ஏனெனில், 10-7-49-இல்தான் மத்திய செயற்குழு கூடி மேற்கண்டவாறு தீர்மானத்தை நிறைவேற்றிற்று. பெரியாரோ 9-7-49-லேயே, தாம் திட்டமிட்டிருந்தவாறு திருமணத்தை முடித்துக்கொண்டு விட்டார்!

அந்த 'மங்களகரமான' செய்தி செயற்குழுக் கூட்டத்துக்கு 'மங்களம்' பாடும்பொழுதுதான் வந்து சேர்ந்தது!

அந்தச் செய்தியைக் கேட்டதும் திருச்சியில் கூடிய அத்தனை நிருவாகக் குழு உறுப்பினர்களும் அதிர்ச்சிக்கு ஆளாயினர்!

அவர்கள் மட்டுமா? நாடே பரபரப்புக்கு உள்ளா யிற்று!

## மேனாட்டுப் பாணியையும் மிஞ்சிய பெரியார்!

நினைத்த நேரத்தில் பழைய ஆடையைக் களைந்தெறிந்து புதிய ஆடையைப் புனைவதுபோல, எத்தனையோ கணவர் களையும் மனைவிகளையும் மாற்றி மாற்றி மணப்பதையும், சொத்து சுகங்களை முன்னிட்டுக் கிழவிகள் இளைஞர்களை மணப்பதையும், கிழவர்கள் இளம் பெண்களை மணப்பதை யும் பொருந்தாப் போக்காகக் கருதிப் பழக்கமில்லாத மேல் நாடுகளில் ஒன்றான அமெரிக்க நாட்டிலேயே, சில ஆண்டு களுக்கு முன் எழுபது வயதுக்கு மேற்பட்ட நீதிபதி ஒருவர், இளம் பெண் ஒருத்தியை மணம் புரிந்து கொண்டதற்குப் பலத்த எதிர்ப்பைக் கிளப்பினர் என்றால், கற்புக்கும், பெண் களின் கண்ணிய வாழ்க்கைக்கும் மதிப்பளிக்கும் தமிழ் நாட்டில், பொருந்தாத் திருமணங்களை ஒழிப்பதையும் ஒரு குறிக்கோளாய்க் கொண்டிருந்த பெரியாரே, மேனாட்டுப் 'பாணி'யிலே தம் 'சொந்த நலனை'யே பெரிதாய்க் கருதி மணம் புரிந்து கொண்டார் என்னில், பொதுமக்கள் வியப் பிலும் திகைப்பிலும் ஆழ்வது இயற்கைதானே!

## கண்ணீர்க் குளத்தில் கழகம்

கழகத் தோழர்களின் நிலையோ...?

காங்கிரசுக் கட்சியினரும் மற்றக் கட்சியினரும், ஏளனக் கணைகளை இரக்கமின்றி வீச எந்தக் கட்சியையும் சாராதவர் களும் வெந்த புண்ணில் வேல் பாய்ச்ச, அழுகையும் ஆத்திர மும் பீறிட்டுக் கிளம்ப, கண்ணீர்க் குளத்திலேயே மிதந்தனர் கழகத் தோழர்கள்!

# 18. வெள்ளி முளைத்தது!

பெரியார் முடித்துக்கொண்ட திருமணம் திராவிடர் கழகம் என்னும் மணிமண்டபத்தின்மீது வீசப்பட்ட குண்டாகவே கருதப்பட்டது.

தொண்டர்களிடையே துயரவெள்ளம் பொங்கிப் புரண்டது! எங்கு நோக்கினும் திகைப்பு, குழப்பம், மலைப்பு, மருட்சி!

கழகத்துக்கு ஏற்பட்டுவிட்ட இந்த 'இழவு வீட்டு'—நிலையிலும் அமைதியையே கடைப்பிடிக்கச் சொன்னார் அண்ணா.

"...இந்தத் திருமணம் நடைபெறுவது கூடாது. இது நிறுத்தப்பட்டு நாம் எப்பொழுதும்போல் பெரியார் தலைமையிலே கழகப் பணிபுரிய வேண்டும் என்ற நல்லெண்ணத்திலிருந்து சிறிதும் வழுவாதபடியேதான் கடைசிவரை முயற்சி செய்தோம். ஆனால் திருமணம் நடந்தேறிவிட்டது. இனிச் செய்யவேண்டியது என்ன என்பதை அவசரமும் ஆத்திரமும் இன்றி, தூண்டிவிடுவோர், தூபம் இடுவோர், சிண்டு முடித்துவிடுவோர், கண்டதைக் கிளறிப் பார்ப்போர், சந்தி சிரிக்கவைப்போர் என்போருக்கு இரையாகாமல், யோசித்துத் தீர்மானிக்க வேண்டும்.

...விரோதத்தைக் கிளப்பிவிடுவதும், தப்பெண்ணம் கண்டுபிடித்துவிடுவதும் சுலபம்;—ஆனால் நேர்மையல்ல. பொறுத்திருந்து, தீர யோசித்துக் காரியம் செய்வது—எந்த வகையிலும் நன்மை பயக்கக்கூடியது.

—பிரச்னை தனிப்பட்ட மாச்சரியம் குரோதம் ஆகியவைகளைக் கொண்டு நடத்தும் விளையாட்டல்ல. பல ஆண்டுக் காலமாக இருந்துவரும் பந்தம், பாசம் ஆகியவை சம்பந்தப்பட்டதுமாகும். இந்த ஒரு வேண்டுகோளை அவர் மதிக்கக் கூடப் பயன்படவில்லை என்ற நெஞ்சு நோகும் நிலையில் உள்ளவர்கள், இனிக் கொள்கைக்கு முரண்பாடின்றி எப்படிப் பணிபுரிவது என்ற சிக்கலில் தள்ளப்பட்டிருக்கும் பிரச்சினையாகும்.

ஆகவேதான், அமைதியாகச் சிந்தியுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்......''

அண்ணாவின் இந்த வேண்டுகோள், துயருற்ற தொண்டர்களுக்கும், குழப்பமுற்ற பொதுமக்களுக்கும் திறனைக் கொடுத்தது.

அவர் வாக்குப்படியே கழகத்தைச் சார்ந்தவர்கள் பொறுமையையே தழுவிக் கிடந்தனர்.

## தொண்டர்தம் பெருமை சொல்லப்போமோ?

இரண்டு திங்கள்கள் பறந்தோடிவிட்டன.

அதற்கு மேலும் கழகத் தோழர்களின் பொறுமையைச் சோதிக்க விரும்பவில்லை அண்ணா, மீண்டும் ஒரு வேண்டுகோள் விடுத்தார் அவர்:

''...பெரியாரின் திருமணம், கட்சிப் பெருமையின்மீது வீசப்பட்ட ஈட்டி. இயக்கத்தின் மாண்பு, அதன் தலைவரின் தகாத செயலால் தரைமட்டம் ஆகிவிடும். உரத்த குரல் எடுத்து ஊரெல்லாம் சுற்றினாலும் தலைவர் போக்கால் ஏற்பட்ட கண்ணியக் குறைவைக் காப்பாற்ற முடியாது. போற்றிப் பரப்பிவந்த இலட்சியங்களை மண்ணில் வீசும் அளவுக்குத் தலைவரின் சுயநலம் கொண்டுபோய் விட்டது. இனி அவரின்கீழ் இருந்து தொண்டாற்றுவதால் பயன் இல்லை. உழைத்து நாம் சிந்தும் வியர்வைத் துளிகள் அவரது 'சொந்த' வயலுக்கு நாம் பாய்ச்சும் தண்ணீராகவே ஆகும்! என்று கருதி 'இவரது தலைமை கூடாது; அது மாறும்வரை கழகப் பணியிலிருந்து விலகி நிற்கிறோம்'—என்பதாக எண்ணற்ற (கிளைக்) கழகங்களும் தோழர்களும் நிருவாகக் குழு உறுப்பினர்களும் கண்ணீர்த் துளிகளைச் சிந்தி ஒதுங்கி நிற்கின்றனர்.

கட்சியின் நரம்பும், சதையும் (ஊழியர்கள்) ஆடாமல் போகவே அதன் வேலைகள் அத்தனையும் அப்படியே ஸ்தம்பித்து (தேங்கி) நிற்கின்றன...

...தலைவர் பெருமையைத் துதிபாடுவதில் கண்ணுக்கு இருந்த காரணத்தால், ஒவ்வொருவரும் தாங்கள் தங்கள் தொண்டின் தரத்தைச் சிந்தித்துப் பார்த்ததுகூட கிடையாது. ஆனால் இன்று அந்த உண்மை வெள்ளிடை மலையாகி

விட்டது. கழகத்தைச் சார்ந்த உழைப்புச் சக்தி எங்கு இருக்கிறது என்பது விளங்கிவிட்டது. கழகம் வளரத் தொண்டர்களின் சேவையே அதிக முக்கியமானது என்று தெளிவாகிவிட்டது. ஒரு கட்சியின் நரம்பு, இரத்தம், சதை எல்லாம் தொண்டர்கள்தான் என்பதை யாவரும் அறியும்படி ஏற்பட்டுவிட்டது.

...இரண்டு மாதங்களாகக் கழகப் பணிகள் நடைபெறவில்லை; இந்த 'அசையாத நிலை' தொண்டர்களின் சேவையை விளக்கியுள்ளது. தொண்டர்கள்தான் கட்சியின் ஜீவநாடி; அவர்கள் அசைந்தால்தான் (கழகம்) இயங்கும் என்பது தெரிந்துவிட்டது.

...தன்னலமற்ற கொள்கை வீரர்களின் 'மாபெரும் சக்தி'—கழகப் பணிகளிலிருந்து ஒதுங்கி நிற்பதால் முன்போல எந்தக் காரியங்களும் நடைபெறவில்லை; கட்சித் தொண்டு, பிரச்சாரம் எதுவும் நடக்கவில்லை.

...இந்த அசையா நிலை தலைவரைத் (பெரியாரை) திடுக்கிடச் செய்திருக்க வேண்டும்... ஆனால், அவரது 'இலட்சியம்' இயக்கத்தைப்பற்றி, அதன் வளர்ச்சியைப்பற்றி இருப்பதாகத் தெரியவில்லை. 'ஏதோ பார்ப்போம்'—என்ற விதண்டாவாத எண்ணமே அவரது போக்கில் தென்படுகிறது. எனவே, அவராக விலகுவார் என நாம் எதிர்பார்ப்பதற்கு இல்லை.

...ஆகவே, மேற்கொண்டு கழக ஆக்கத்திற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுத்தான் ஆகவேண்டும். இதில் இன்னும் நாள் ஓட்டக்கூடாது. நல்லதொரு முடிவு கண்டு நம் நாட்டுப் பணி மீண்டும் முன்போல் முழங்கவேண்டும்.

இதற்கான முடிவுகள் இரண்டொரு வாரத்தில் செய்யப்பட்டாக வேண்டும். அதற்கான வேலைகள் ஆரம்பமாகிவிடும் என்று நம்புகிறேன். விரைவில் வெள்ளி முளைக்கும், வேதனையும் விம்முதலும் நீங்கி, வெற்றிப் பாதையில் நடப்போம்."

—அண்ணாவின் இந்த அறிக்கையிலிருந்து 'உருள் தேர்க்கு அச்சாணி அன்ன...' தொண்டர்களிடம் அவர் வைத்துள்ள நம்பிக்கையும் நன்மதிப்பையும் நாம் தெற்றென விளங்கிக் கொள்ளலாம்.

கண்ணைப் பொத்தும் கும்மிருட்டில் குழப்ப முகில்களும் திரை விரித்துக் கிடக்கும் பயங்கர வேளையில் "அதோ வெள்ளி முளைக்கப் போகிறது!"—என்று நைந்த உள்ளங் களுக்கு நம்பிக்கை ஊட்டுவதாகவும் அமைந்திருந்தது இவ் வறிக்கை.

## 'மாலை மணி'—நாளேடு

பின்னர், 30-7-49-ல், கழக முன்னணி வீரர்களின் கூட்டம் ஒன்று பெத்தாம்பாளையம் பழனிச்சாமி அவர்கள் தலைமையில் சென்னையில் கூடியது. அதில் இறுதியாகப் பேசிய அண்ணா ஓர் அரிய கருத்தினை வெளியிட்டார்.

"...நமது எண்ணத்தை நாடு அறிய—நமது செயலை எதிரிகள் கண்டு அஞ்சி மனமாற்றம் அடைய—நாம் மேற் கொள்ளும் திட்டத்தில் வெற்றி காண—நமக்கு ஒரு தின இதழ் மிகமிக அவசியம் ஆகிறது. இப்போது நமக்கு இருப் பவை எல்லாம், வார, மாத—இதழ்கள்தாம். அவைகள் மட்டும் போதா. ஆகவே, வசதியுள்ள யாராவது முன்வந்து ஒரு தினசரி நடத்தும் பொறுப்பை ஏற்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்."

அண்ணாவின் இந்த வாக்கினைத் தலைமேற் தாங்கி செய லாற்ற முன் வந்தார் திரு. டி. எம். பார்த்தசாரதி அவர்கள். அவர் வளம் மிகுந்தவர் அல்லர்; ஆயினும் இயக்க வளர்ச்சி யில் அடிநாள் தொட்டு ஆர்வங்காட்டி வருபவர்.

"நண்பர் டி. எம். பார்த்தசாரதி இன்னல்களுக்கு இடையில் எப்போதும் இருந்து இருந்து பழகிப் போனவர்—தழும்பேறிப் போன நிலை."

—என்று அண்ணாவாலேயே பாராட்டு மாலை சூட்டப் பெற்ற அவர், இனம் விளங்காத ஒரு துணிவின் உந்தலி னாலேயே நாளேடு நடத்தும் மலைபோன்ற பொறுப்பினைச் சுமக்க முன்வந்தார். அதே சமயம் ஒரு விதியையும் விதித் தார்.

"...நான் தினசரி இதழை நடத்தும் பணியினை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அறிஞர் அண்ணா அதற்கு ஆசிரிய ராக இருக்கச் சம்மதிக்க வேண்டும்."

—என்பதே அது.

அண்ணாவும், ஆசிரியராகப் பொறுப்பேற்க இசைவு தந்தார்.

அப்போது காஞ்சியிலிருந்து வெளியாகும் 'திராவிட நாடு'—என்னும் கிழமை இதழை நடத்திக்கொண்டுவந்தார் அவர்.

'—இந்த ஏட்டிலேயே ஒரிரு பக்கங்களைத் தவிர மற்றவை யாவும் என்னாலேயே எழுதப்படுபவை'—என்று அண்ணாவே கூறியுள்ளார்.

இந்நிலையில் திரையுலகும் அவரது எழுத்துத் திறனில் திளைத்து மகிழ்ந்து கொண்டிருந்த வேளையும் அது.

அத்துடன் கழகத்தின்மீது விழுந்த பேரிடியின் அதிர்ச்சி தாங்காமல் வருந்தும் தோழர்களுக்கு ஆறுதலும் அறிவுரையும் பகர்ந்து, சிக்கல்கள் அத்தனைக்கும் தீர்வு கண்டு புதுப்பாதை வகுத்துத் தரவேண்டிய பொறுப்பும் அவர் தலைக்குமேல் பெருஞ்சுமையாய் அழுத்திக்கொண்டிருந்தது.

இத்தகைய இடுக்கண்களுக்கும், இடி—பாடுகளுக்கும் இடையே தெளிந்த சிந்தனையோடு நாளேட்டின் ஆசிரியராகச் செயலாற்ற அண்ணா ஒப்புக்கொண்டமை வியக்கத் தக்க நிகழ்ச்சியே ஆகும்!

அண்ணா—டி. எம். பார்த்தசாரதி இருவரின் கூட்டு முயற்சியால், 10-8-49 அன்று 'மாலை மணி'—என்னும் நாளேடு வெளியாயிற்று.

## வெள்ளோட்ட முயற்சி வீணாகவில்லை

அண்ணாவிடம் எத்தனையோ சிறப்பியல்புகள் குடி கொண்டுள்ளன. எனினும் அவை யாவற்றினும் அவர்தம் ஆற்றல்களின் தனித்தன்மையைப் பறைசாற்றும் உயிரோட்டத்துடன் ஒளிர்வது எது தெரியுமா? வெறும் புறக் கண் கொண்டு பார்ப்போர்க்கு ஒரு பொருளும், அகக்கண் கொண்டு ஆழ்ந்து நோக்குவார்க்கு ஒரு பொருளும் அளிக்க வல்ல உட்பொருள் ஒன்று, அவருடைய எழுத்து, பேச்சு, செயல் ஆகிய எதுவாயினும் அதிலே பொதிந்து கிடக்கும். அதை எல்லாராலும் புரிந்துகொள்வது கடினம்; புரிந்து கொண்டவர்களும் குறைவு.

'மாலே மணி'—என்னும் பெயரில் ஒரு நாளேடு வேண்டும் என்று அண்ணு விழைந்தது, நாட்டு நடப்பை அறிந்து கொள்ளவும், அறிவிக்கவும் மட்டுமா? அல்ல. அதன் மூலம், (1) பெரியாரின் பொருந்தாத் திருமணச் செயலுக்கு எந்த அளவுக்கு எதிர்ப்பு இருக்கிறது? (2) பகுத்தறிவுக் கொள்கையினிடத்து அழுத்தமான பற்றும் பிடிப்பும் இந்த நாட்டில் எத்தனே பேருக்கு இருக்கக்கூடும்? (3) வெள்ளத்தில் நட்ட பயிர் வேர் பிடிக்காது என்பதுபோல் பெரியாரை எதிர்த்து வெளியேறிய எத்துணைப் பெரிய தலேவர்களும் தலேயெடுத்ததே இல்லே என்கிறபோது தாமும் (அண்ணுவும்) தம்மைச் சார்ந்தவர்களும், தனிக் கட்சி நடத்த முடியுமா? (4) ஆகஸ்டுப் பதினைந்து இன்ப நாள் தான் என்று தாம் அறிக்கை விட்ட காலத்தில் தம்மை எதிர்த்தவர்களும், ஏசியவர்களும் எந்த அளவுக்கு மன மாற்றமும் மனப் பக்குவமும் அடைந்திருக்கிருர்கள்? (5) தமிழக மக்களிடத்தில் தம்முடைய (அண்ணுவினுடைய) தலேமைக்கு நிலேயான உறுதியான உளமார்ந்த வரவேற்பு இருக்குமா?

—என்றெல்லாம் எடைபோட்டுப் பார்த்துத் தமக்குத் தாமே சேர்த்துக் கொள்ளவே, ஓர் அரிய கருவியாக 'மாலே மணி'—ஏட்டை வெளிக்கொணர விழைந்தார் அண்ணு.

அவருடைய இந்த 'வெள்ளோட்ட' முயற்சி வீண் போகவில்லே.

'மாலே மணி'—ஒலிக்கத் தொடங்கி சில நாட்களுக்குள்ளே, கழகத்தவருள் பெரும்பாலான தொண்டர்களுக்குப் பெரியாரிடம் ஏற்பட்டிருந்த மனக்கசப்பும், அண்ணுவிடம் வைக்கத் தொடங்கிய முழு நம்பிக்கையும் நன்கு எதிரொலிக்கலாயின.

'தலேவர்'—என்றும் 'தந்தை' என்றும் பாசந் ததும்ப அழைக்கப் பெற்ற பெரியாரின் பொருந்தாத் திருமணத்தால் பகுத்தறிவுக் குழந்தைக்கு விழுந்த சவுக்கடிகளேக் காணச் சகிக்காமல் ஆயிரக்கணக்கானேர் சிந்திய 'கண்ணீர்த் துளிகள்' கங்குகரையற்ற பெருவெள்ளமாய்ப் பெருக்கெடுத்தோடிய அவலக் காட்சியையும் 'மாலே மணி' மூலம் பொது மக்கள் காண முடிந்தது.

## பிளவுற்ற கழகம்

பெரியார் என்ன சொன்னாலும், எதைச் செய்தாலும் அது சரியாகத்தான் இருக்கும் என்று எதையுமே ஆய்ந்து பார்க்க அஞ்சும்—மறுக்கும் பக்தர்களுக்கே உரித்தான 'வழி பாட்டு' முறையைக் கடைப்பிடிப்பவர்கள் ஓர் அணியாகவும்,

பெரியாரே சொன்னாலும்கூட, செய்தாலும்கூட அந்தச் சொல்லோ, செயலோ அவரே வலியுறுத்தி வளர்த்து வந்துள்ள பகுத்தறிவுக்குப் பொருந்தினாலன்றி எதனையுமே ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்ற இலட்சியப் பிடிப்புக் கொண்டவர்கள் பிறிதோர் அணியாகவும்,

திராவிடர் கழக உறுப்பினர் பிளவுற்றனர்.

## பரணி பாடி வந்த பகலவன்

இப்பொழுதுதான், இருளைக் கிழித்து ஒளியைக் கொடுக்கும் உறுதியோடு எழுந்தனன் பகலவன்! முகிலைப் பிளந்து, குளிர் ஒளி சிந்தும் குழைவுடன் மலர்ந்தது முழுமதி!

ஆம்; குழம்பிய நெஞ்சங்களுக்குத் தெளிவினை அளிக்கும் திண்மையுடன் எழுந்தார் அண்ணா. தங்கள் எதிர்கால ஒளிவிளக்கைத் தமிழக மக்கள் இனங்கண்டு வழிநடக்கும் வகையிலே தமக்குரிய கடமையை உணர்ந்து செயலாற்ற முற்பட்டார், அந்தத் தமிழ்த்தாயின் தலைமகன்.

## வித்தினை ஊன்றிய வித்தகர்

அண்ணா அவர்கள் 'மாலை மணி' நாளிதழில் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க, பெரியாரின் பொருந்தாத் திருமணத்தால் வருந்திக் கொண்டிருந்த திராவிடர் கழக மத்திய செயற்குழு உறுப்பினர்கள் யாவரும் 17—9—1949 சனிக்கிழமையன்று சென்னை, பவழக்காரத் தெரு, 7ஆம் எண்ணுள்ள இல்லத்தில் கூடினார்கள்.

திரு. கே. கே. நீலமேகம் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்கள்.

அந்தக் கூட்டத்தில் மற்றவர்களைப்போல் அண்ணா அவர்கள் பேசவில்லை; மாறாக, ஓர் அறிக்கையை எழுதிக் கொணர்ந்து படித்தே காட்டினார்கள்.

அவ்வறிக்கை வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும். ஏனெனில் அதில்தான், பெரியாரிடம் பிணக்குற்று திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்தவர்கள் எல்லாரும் ஓர் அமைப்பின்கீழ் இயங்குவதற்குரிய விதையைப் பதித்திருந்தார் அண்ணா.

அந்த விதை 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்பதே.

அதுவே இன்று முளையாக, செடியாக, தருவாக வளர்ந்து, பூத்துச் சிரித்துக் காய்த்துக் குலுங்கி ஆட்சிப் பொறுப்பு என்னும் கனியையும் அளித்துள்ளது.

அவ்வறிக்கையில், 1. பெரியாரின் பொருந்தாத் திருமணத்தால் கழகத்தவரிடையே கொந்தளிக்கும் கசப்புணர்ச்சி, 2. அதனைப் பயன்படுத்திக்கொண்டு மாற்றுக் கட்சியினர் பகுத்தறிவு இயக்கத்தின் பணிகளைத் தகர்ப்பதற்காகக் காட்டக்கூடிய கைவரிசை, 3. கழகத்தில் பெரும்பான்மையார் எதிர்ப்பது தெரிந்திருந்தும் தலைமையைத் துறக்க மனமில்லாத பெரியாரின் பிடிவாதம், 4. அதற்காக கட்சியினர் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றினாலும் பயனில்லாமல் போகக்கூடிய வீண் விளைவுகள், 5. அவ்வாறு தலைவரோடு போராடுவதிலேயே நாட்டுக்கு ஆற்றவேண்டிய பொதுப்பணிகளுக்கு ஏற்படக்கூடிய ஆற்றல்—அழிவுகள் ஆகியவற்றைப்பற்றியெல்லாம் விரிவாக ஆராய்ந்திருந்தார் அண்ணா.

"பெரியாரின் தலைமை வேண்டாம்; அதே சமயம், அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றி அவரைத் தாழ்த்தவும் வேண்டாம். அவரைத் தலைவராகக் கொண்ட திராவிடர் கழக அமைப்பிலே ஒட்டிக்கொண்டு இருக்க வேண்டாம்; அதே சமயம் திராவிடர் கழகத்தின் நல்ல கொள்கைகளையெல்லாம் உதறித் தள்ளவும் வேண்டாம்."

—என்று, புதர்களின் நடுவே தடங்காணும் தனித்திறமையுடன், பல்வகையான எண்ணக் குழப்பங்களுக்கு நடுவே அண்ணா வகுத்தளித்த தெளிவான பாதை கழக முன்னணி வீரர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி தரக்கூடியதாக அமைந்திருந்தது.

## வெள்ளி முளைத்தது

இவ்வாறாக, தென்னக மக்களின் இன்னல்களையெல்லாம் துடைத்து, இன்ப உலகுக்கு இட்டுச் செல்லும் 'விடிவெள்ளி' யாகத் 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்னும் ஓர் அமைப்பு 17-9-1949 அன்று அண்ணா அவர்களின் பொன்னுரை அறிவுரையோடு முகிழ்த்தெழுந்தது.

அன்று மாலையே, சென்னை இராயபுரம், இராபின்சன் பூங்காத் திடலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்க விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

பெத்தாம்பாளையம் திரு. பழனிச்சாமி அவர்கள் தலைமையில் நிகழ்ந்த அம் மாபெரும் கூட்டத்தில், மழைத் தூற்றலையும் பொருட்படுத்தாது வெள்ளமெனத் திரண்டிருந்த பொதுமக்களின் ஐயப்பாடுகள் அனைத்தும் அகலும்வண்ணம் தி. மு. கழகத்தின் கொள்கைகள் என்னென்ன என்று தெளிவாக விளக்கிப் பேசினார் அண்ணா.

''திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிவிட்டது. திராவிடர் கழகத்திற்குப் போட்டியாக அல்ல? திராவிடர் கழகத்தின் அடிப்படைக் கொள்கைகளின் மீதேதான் திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது.

1. சமுதாயச் சீர்திருத்தம், 2. பொருளாதாரத் துறையிலே சமதர்மக் குறிக்கோள், 3. அரசியல் துறையிலே வடநாட்டு ஏகாதிபத்தியத்தினின்றும் விடுதலை—ஆகிய கொள்கைகள்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்பாடுகளாகும்.

''கொள்கைக்கே புறம்பாக சனநாயகத்திற்கே அப்பாற்பட்டுத் தமது போக்கிலேயே சென்று கொண்டிருக்கிறார் பெரியார். அவர் தலைமையிலே வேலை செய்ய மனம் ஒப்பவில்லை; செயலாற்றும் வகை கிடையாது என்ற நிலை ஏற்பட்டு விட்டது. அவர் வகுத்த பாதையிலிருந்து அவரே தவறி விட்டார்—தடுமாறி விட்டார். இயக்கம் பெரிது; இயக்கத்தின் கொள்கைகள் மிகமிகப் பெரிது. 'கொள்கையை விட்டுக்கொடுக்க மாட்டோம்; கொள்கைக்கு இழுக்கும் வர விடமாட்டோம்; தவறு செய்பவர் தலைவரேயானாலும் கண்டிக்கத் தயங்கோம்' என்ற குரல் நாடெங்கும் கேட்டது.

தலைவர் தம் வழியே செல்கிறார்; தவறை உணராது சரியென்று சாதித்துக்கொண்டு.

"இத்தனை ஆண்டுகளிலும் நான் அறிந்த தலைவர்—தெரிந்த தலைவர்—பார்த்த தலைவர், அவர் (பெரியார்) ஒருவர்தான். வேறு தலைவரின் தலைமையில் நான் வேலை செய்தது கிடையாது. செய்யவும் மனம் வந்ததில்லை; வராது. அதே காரணத்தினால்தான், திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக்கூடத் தலைவரை ஏற்படுத்தவில்லை. அவசியம் என்று கருதவில்லை. இதயபூர்வமான தலைவர், இதயத்திலே குடியேறிய தலைவர், நமக்கெல்லாம் அப்போது நல்வழி காட்டிய பெரியார் அமர்ந்த பீடத்தை......தலைவர் பதவியை நாற்காலியைக் காலியாகவே வைத்திருக்கிறோம். அந்தப் பீடத்திலே, நாற்காலியிலே வேறு ஆட்களை அமர்த்தவோ, அல்லது நாங்களே, அல்லது நானே அமரவோ விரும்பவில்லை."

"நான் மிகமிகத் தெளிவாகவே கூறிவிடுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் எந்தவிதத்திலும் திராவிடர் கழகத்துக்கு எதிரானது அல்ல; எதிர் நோக்கம் கொண்டதும் அல்ல; கொள்கை ஒன்றே."

"இரு கழகங்களும் இரு திக்குகளிலுமிருந்தும் வடநாட்டு ஏகாதிபத்தியத்தை ஒழித்து, வைதீகக் காட்டை அழித்துச் சமதர்மப் பூங்காவைத் திராவிடத்தில் செழிக்கச் செய்தல் வேண்டும். அதிலே எந்தக் கழகம் பூங்கா அமைத்தாலும் அதில் பூக்கும் பூக்கள், காய்கள், கனிகள் திராவிடத்தின் எழுச்சியை, மலர்ச்சியைத்தான் குறிக்கும். இரு பூங்காவும் தேவை; ஒன்றோடொன்று பகைக்கத் தேவையில்லை, அவசியமும் இல்லை. எது பூத்தாலும் மாலையாகப் போவது திராவிடத்துக்குத்தான் என்ற நல்ல எண்ணம் வேண்டும்."

"கொள்கையைப் பரப்புவதே நமது முதல் பணி. பகைமை உணர்ச்சியை அடியோடு விட்டொழிக்க வேண்டும்; பகை உணர்ச்சியை வளர்த்து எதிரிகளுக்கு இடங் கொடுத்து ஏமாளியாகத் தேவையில்லை."

தி. மு. கழகத் துவக்க நாள் அன்று அண்ணா நிகழ்த்திய முதல் கொள்கை அறிவிப்புச் சொற்பொழிவின் சில பகுதிகளை மேலே நாம் காட்டியுள்ளமை, வெறும் 'நினைவு கூர்த

'லோடு' ஒதுக்கி விடுவதற்கு அன்று; அந்தத் தொடக்கச் சொற்பொழிவை ஒட்டி எந்த அளவுக்கு அண்ணாவாலும், தி. மு. கழகத்தாலும் நடக்க முடிந்தது என்பதை இணைத்துப் பார்ப்பதற்கேயாம்.

அத்துடன், தி. மு. கழகம் ஆட்சிப் பொறுப்பேற்கும் தகுதியினை அடைந்ததும், சில ஆங்கில நாளேடுகளைச் சார்ந்த அரசியல் திறனாய்வாளர்கள் ஒரு கருத்தினை விநயமான முறையில் வெளியிட்டார்கள். 'பொது மக்களின் பெரும் ஆதரவைப் பெற்று ஆளுங் கட்சியாகியுள்ளபோதிலும் தி. மு. க.வின் அடிப்படைக் கொள்கைகள் என்ன என்பது தெரியவில்லை; இனிமேல்தான் அவற்றை அக்கட்சி உருவாக்கித் தெளிவாக்கிச் செயல்படுத்திக் காட்டவேண்டும்' என்பதே அக்கருத்து.

அந்தத் திறனாய்வாளர்களின் ஐயப்பாட்டைத் தி. மு. க. துவக்க நாள் சொற்பொழிவிலேயே அண்ணா தீர்த்து விட்டார் என்பதை ஊன்றிப் பார்ப்போர் உணர முடியும்.

'...சமுதாயத்துறையிலே சீர்திருத்தம், பொருளாதாரத் துறையிலே சமதர்மக் குறிக்கோள், அரசியல் துறையிலே வடநாட்டு ஏகாதிபத்தியத்தினின்றும் விடுதலை—ஆகிய கொள்கைகள்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்பாடுகள்.'

—என்று கூறியிருப்பதைவிட வேறு என்ன சிறப்பான அடிப்படைக் கொள்கைகளை ஒரு கட்சியிடமிருந்து எதிர் பார்க்க முடியும்?

'திராவிட நாடு பிரிவினை வேண்டாம்' என்று கூறியதன் மூலம் தி. மு. க.வின் அரசியல் துறையின் அடிப்படைக் கொள்கை மாறவில்லையா? என்று சிலர் கேள்வி எழுப்பக் கூடும். இதைப்பற்றிப் பின்னர் விரிவாக விவாதிக்க இருக்கிறோம். எனினும்கூட, 'அரசியல் துறையிலே வடநாட்டு இந்தி மொழி ஏகாதிபத்தியத்தினின்றும் விடுதலை'—என்றும், 'மத்திய அரசின் அதிகாரக் குவிப்பினின்றும் விடுதலை'—என்றும் சிறிது மாற்றிச் சிந்தித்தோமானால், அண்ணாவின் தொடக்ககால அரசியல் கொள்கை பெரும் அளவு மாறி விடவில்லை என்பது விளங்கும்.

அடுத்து, இரு கழகங்களுக்கும் இடையே பகையுணர்ச்சிக் கூடாது என்ற தம் கொள்கைக்கேற்பவே, திராவிடர் கழகத்தினர் எவ்வளவோ தம்மை இழித்தும் பழித்தும் ஏசியும்கூட, அக்கழகத்தைத் தனிமைப்படுத்தி அதன் கொள்கைகளைக் காரசாரமாக விவாதித்தோ, கண்டித்தோ பேசினவரல்லர் அண்ணா.

மூன்றாவதாகப் 'பெரியார் அமர்ந்த தலைவர் பீடத்தை—பதவியை - நாற்காலியைக் காலியாகவே வைத்திருக்கிறோம்' என்று அறிவித்ததற்கு ஒப்பவே தி. மு. கழகத்தில் 'தலைவர் பதவி' என்னும் ஒன்று உருவாகாதவாறே செய்து விட்டார் அண்ணா. அக்கட்சியில் 'அவைத் தலைவர்' என்னும் ஒரு பதவி உண்டாக்கப்பட்டிருந்தாலும், அது கழகப் பொதுக்குழுக் கூட்டங்கள் அவ்வப்போது திறம்பட, அமைதியாக நடத்திச் செல்வதற்காக மட்டுமே ஏற்படுத்தப்பட்டதேயன்றி, கட்சியின் 'பொதுச் செயலாளர்' பதவியைப் போன்று அதிகாரத் தலைமை பூண்டது அன்று.

நான்காவதாக, 'இன்னும் அவருக்கும் எனக்கும் உள்ள பற்று பாசம் அகலவில்லை; என்னை விடவில்லை.' 'பொது வாழ்வில் அவருக்கு நான் சுவீகாரப் புத்திரனாகி விட்டேன்...'—என்றெல்லாம் அண்ணா அன்று குறிப்பிட்டிருந்தார். தம் வாழ்நாளில் தாம் கூறிய வார்த்தைகளை 'வெறும் பேச்சாக்கி'—அரசியல் காற்றிலே பறக்க விடவில்லை அண்ணா. தம்மை எல்லை மீறிப் பெரியார் இழித்துப் பேசிய காலத்தும், தமக்காகத் தம்மைச் சார்ந்தவர்கள் பெரியாருக்குப் பதிலடி கொடுத்துவிடத் துடியாய்த் துடித்த நேரத்திலும், தம் ஒரே தலைவரிடம் தாம் கொண்டிருந்த பழைய பாசத்துக்குப் பாடை கட்டி விடாமல், பெரியாருக்குரிய மரியாதை அளித்தே பேசி வந்திருக்கிறார் அவர். அண்ணாவின் இப் பெருந்தன்மையைப் பெரியாரும் இன்றும் உளந்திறந்து ஒப்புக் கொண்டுள்ளார். ஆட்சிக்கு வந்ததும், திருச்சி சென்று பெரியாரை அண்ணா வணங்கியெழுந்த காட்சி, அன்னவரின் ஆழமான பாச உணர்ச்சிக்கும் அற்புதமான நன்றியறிதலுக்கும் அரியதோர் நற்சான்று ஆகும்.

ஐந்தாவதாக, 'பழைமையும் பாசிசமும் முறியடிக்கப் படும்வரை ஓயமாட்டோம், உழைப்போம், உருவான

பலனைக் காண்போம். அப்போது பெரியார், "பயல்கள் பரவாயில்லை; உருவான வேலைதான் செய்கிறார்கள்"—என்று உள்ளம் மகிழும் நிலை வரத்தான் போகிறது' என்று அண்ணா கூறியவாறே இன்று பெரியார் தி. மு. க. ஆட்சியின் செயல் திறனைப் பாராட்டுவதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

## வாக்குப் பலித்தது

அவை யாவற்றையும் விஞ்சக்கூடியதாக அந்தத் துவக்க நாள் சொற்பொழிவின் இறுதியில் அண்ணா தமக்குப் புதுக் கட்சியின் வளர்ச்சியிலே இருந்த அசையா நம்பிக்கையை அழகு வழிய வெளிப்படுத்தினார்.

"...திராவிட முன்னேற்றக் கழகம் ஓர் ஒட்டுமாஞ்செடி தான். மண்வளம் ஏராளம். அதே பூமி. நீர்பாய்ச்ச, பதப் படுத்த, பாத்திகட்ட முன்னிற்போர் பலர். ஒட்டுமாஞ்செடி (தி. மு. க.) பூத்துக் காய்த்துக் கனி குலுங்கும் நாள் வந்தே தீரும்!"

—அண்ணாவின் இந்த அருமையான வாக்கு, பெருமித மான நம்பிக்கை இன்று பலிக்கத்தானே பலித்தது!

## கட்சிப் பெருக்குக் காரணம்

தென்னகத்தின் விடிவெள்ளியாய்—கலங்கரை விளக்க மாய்—வழிகாட்ட முகிழ்த்த தி. மு. கழகத்திற்கு, அப்படி யொரு பெயரை அண்ணா சூட்டியதிலும் ஓர் உட்பொருள் உண்டு.

முன்பு, தென்னிந்திய நல உரிமைச் சங்கமாகிய 'நீதிக் கட்சி'யைத் 'திராவிடர் கழக'மாக ஆக்கிப் பெயர் மாற்றம் கண்டவரும் அண்ணாவே.

பின்னர், 'திராவிடர் கழக'த்திலிருந்து பிரிந்தவர்களைக் கொண்ட அமைப்புக்குத் 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்று பெயர் சூட்டியவரும் அண்ணாவே.

முன்னைய பெயர் மாற்றத்திலும் சரி, பின்னைய பெயர் சூட்டலிலும் சரி, அண்ணாவின் இதயத்தில் அவ்வப்போது ஆட்சி செலுத்திய அரசியல் அலைகளின் எதிரொலிப்புகளைக் காணலாம்.

முன்பு 'நீதிக் கட்சி'யைத் 'திராவிடர் கழகம்'—ஆக மாற்ற முனைந்தபோது அண்ணாவின் உள்ளத்தில் திராவிட இன மக்களைத் தட்டி யெழுப்பவேண்டும் என்னும் 'இனவழிச் சிந்தனை' (Racial Outlook) மட்டுமே மேலோங்கி நின்றது.

ஆனால் 'திராவிடர் கழக'த்திலிருந்து, 'திராவிட முன்னேற்றக் கழக'த்தைத் தோற்றுவித்த பிறகோ, அண்ணாவின் இதயத்தில் 'இனவழிச் சிந்தனைக்குக் கிட்டியிருந்த தலைமையிடத்தை, 'நிலவழிச் சிந்தனை'யும் (Geographical Outlook), அரசியல்—பொருளாதார வழிச் சிந்தனையும் (Politico-Economical Outlook) கைப்பற்றிக்கொண்டு விட்டன.

இந்தப் பாகுபாட்டின் நுட்பத்தை, திராவிடர் கழகத்தின் சாதாரணக் கொள்கைகளைத் தீவிரமாகச் செயற்படுத்த எழுந்ததுதானே திராவிட முன்னேற்றக் கழகம் என்று மேலெழுந்த வாரியாகப் பார்ப்பவர்கள், உய்த்துணர்ந்து கொள்வது கடினம். 'முன்னேற்ற' என்னும் சொல்லைத் தவிர இரு கழகங்களின் பெயர்களையும் சரி, அடிப்படை இலட்சியங்களையும் சரி, வேறுபடுத்திக் காட்ட வேறு என்ன இருக்கிறது என்றே பலரும் கருதினார்கள்; இன்னும் சிலர் கருதிக் கொண்டிருக்கிறார்கள்.

'இரு கட்சிகளும் கொள்கையளவில் ஒன்றே!'—என்று அண்ணா தொடக்கத்தில் குறிப்பிட்டதும் மயக்கத்தைக் கொடுத்திருக்கலாம். அதே சமயம், அண்ணா மட்டும், உள்ளூர, இரு கட்சிகளுக்கும் பொதுவான அடிப்படைத் தத்துவங்களில் ஓசைப்படாமல் ஒரு வரையறையோடு கூடிய பாகுபாட்டை உருவாக்கிக் கொண்டே வந்திருக்கிறார். இவ்வுண்மை தி. மு. கழகத்தைச் சார்ந்த முன்னணி வீரர்களுக்கே பலகாலம் தெரியாமல் இருந்திருக்கிறது.

கொள்கை மயக்கத்திற்கு ஆட்பட்டிருந்த அவர்கள், இரு கழகங்களின் பெயர்களுக்குரிய பொருளைப்பற்றிய சர்ச்சையை அண்ணாவிடமே எழுப்பினர்.

"நாம் திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து வந்தது, அதனுடைய கொள்கையைத் தீவிரமாகச் செயற்படுத்துவதற்குத்தான். ஆகவே நம்முடைய புதுக்கட்சியை 'திராவிடர் முன்னேற்றக் கழகம்' என்று அழைப்பதை

விடுத்து, 'திராவிட முன்னேற்றக் கழகம் என்று அழைப்பது எங்ஙனம் பொருந்தும்?''

—என்று அண்ணாவிற்கு அடுத்த கட்டத் தலைவர்களே ஐயப்பாட்டினை எழுப்பினர்; சிலர், 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்பது தவறு என்று அடித்துப் பேசுவதற்கும் முற்பட்டனர்; அதனைத் 'திராவிடர் முன்னேற்றக் கழகம்' என்று திருத்திக் கொள்ளத்தான் வேண்டும், என்று அறிவுரை பகரவும் தலைப்பட்டனர்.

அவர்களுடைய ஐயப்பாட்டையும், அறிவுரையையும் கேட்டுப் புன்னகையே புரிந்தார் அண்ணா. தாம் சார்ந்த கட்சியைத் 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்றே ஏன் அழைக்க வேண்டும் என்பதற்கு அருமையான விளக்கமும் கொடுத்தார் அவர்.

''...திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்த நம் கட்சிக்குத் 'திராவிடர் முன்னேற்றக் கழகம்' என்று பெயர் இருப்பது தானே பொருந்தும் என்று சில நண்பர்கள் கேட்கிறார்கள். அவர்கள் கேள்வியிலே பொருள் இருக்கிறது. அதே சமயம் நாம் இன்னும் சற்று விரிவான கண்ணோட்டத்துடன் நம் கட்சியின் பெயரை அணுக வேண்டுகிறேன். 'திராவிடர் முன்னேற்றக் கழகம்' என்று கூறும்பொழுது, அதில் திராவிடர்கள் மட்டுமே அங்கம் பெறலாம் என்று அரண் எழுப்புவதாக அமைந்து விடுகிறது. இப்போதுள்ள உலகச் சூழ்நிலைக்கு, காலப் போக்குக்கு இது உகந்ததாக எனக்குப் படவில்லை. நம்முடைய கட்சியின் இலட்சியம் திராவிட நாட்டைச் செழுமையான பூமியாகப் பேணிக் காப்பதாகும். அத்தகைய திராவிட மண்ணில், திராவிடர்கள் மட்டுமே வாழலாம் என்று வரையறை செய்வது குறுகிய நோக்கமாகும். முடியாத செயலுமாகும். இந்த மண்ணுக்கு நன்றியுள்ளவர்களாக நடந்துகொள்ளும் எந்த இனத்தவரும் இன்னலின்றி இன்ப வாழ்வு வாழப் பணியாற்றுவதே நம் கட்சியின் இலட்சியமாக இருக்க வேண்டும். இங்கே திராவிடரும் வாழலாம், ஆரியரும் வாழலாம், கிறிஸ்தவரும் வாழலாம், முசுலிமியரும் வாழலாம் என்கிற பரந்த நோக்கத்தோடு நாம் பணியாற்ற வேண்டும். அதே சமயம், நம் திராவிட நாட்டுக்கே உரிய, பண்பாட்டைக் காக்கவும், தொழில்வளத்

தைப் பெருக்கவும் நாம் பின்வாங்கத் தேவையில்லை. 'திராவிடர் கழகம்' போல் இன நலனுக்காக மட்டும் போராடாமல், பூகோள அடிப்படையில் 'திராவிடம்' முழுமைக்கும் நன்மைகள் உண்டாக—முன்னேற்றம் காண—நாம் பாடுபட வேண்டியிருப்பதால், 'திராவிடர் முன்னேற்றக் கழகம்' என்பதைவிட 'திராவிட முன்னேற்றக் கழகம்'—என்று நம் கட்சிக்குப் பெயர் இருப்பதே எல்லா வகையிலும் பொருந்தும் என்பது என் தாழ்மையான எண்ணம்."

—அண்ணாவின் இந்த அரிய விளக்கத்திலிருந்து, அவருடைய அரசியல் சிந்தனைகளில் ஏற்பட்டு வரும் விரிந்த கண்ணோட்டத்தை நம்மால் விளங்கிக்கொள்ள முடிகிறதல்லவா ?

இவ்வாறாக, 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்னும் பொருத்தமான பெயரைப் புனைந்த புதிய கட்சி, அண்ணாவின் ஆற்றல் மிக்க தலைமையினால் எவ்வாறு அருகுபோல் வேரோடி, ஆல்போல் தழைக்க முடிந்தது என்பதை அடுத்து வரும் அதிகாரங்களில் காண்போமாக!

# 19. தி. மு. க. வின் முதல் வெற்றி

## குயிலின் மௌனம்

"மழை பொழிவதைப் பார்த்துக் குயில் மௌனம் சாதிக்கிறது; தவளைகளோ கத்துகின்றன; அறிஞர்கள் தங்களுக்கு அனுகூலமான நிலைமை உருவாகும்வரை ஒதுங்கியே இருப்பார்கள்"

—என்றார் அறிஞர், நகீம் என்பவர்.

1947-ஆகஸ்டுப் பதினைந்து 'விடுதலை நாள்'—இன்ப நாளே என்று அறிக்கை விடுத்ததன் எதிரொலியாகத் தமக்கு ஏற்பட்ட எதிர்ப்பைக் கண்டு இவ்வாறுதான் ஒதுங்கியிருந்தார் அண்ணா. எனினும் கழகத்தைவிட்டு விலகிவிடவில்லை. கண்ணியத்தை விட்டுச் செயல்படவில்லை; கண்ணீர்த் துளிகளைச் சிந்தியவண்ணமே, பிறர் இழித்துரைப்பதையும், எள்ளி நகைப்பதையும் இதயம் வெடிக்கும் அளவுக்குப் பொறுத்துக்கொண்டார் அவர்.

அந்தப் பொறுமை அவரது எதிர்காலத்தை—அரசியல் வாழ்வை வெறுமையாக்கிவிடவில்லை; செழுமை கொள்ளவே செய்தது.

பெரியாரின் தலைமைக்கு—உருவான செயலாற்றலுக்கு-அனுகூலமான நிலைமையை உருவாக்கிக் கொடுத்தது. அதன் விளைவாக முகிழ்த்தெழுந்ததே 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்பதை முன்னரே கண்டோம்.

தலைவரிடம் தாம் கொண்டிருந்த குரு—பக்தியால் மட்டுமின்றி, இனம் விளங்காத ஒரு தனிப்பட்ட பாசத்தினாலும் பெரியாரிடம் தமக்கு ஏற்பட்ட கருத்து மாறுபாடுகளையெல்லாம் பல ஆண்டுகளாகப் பொறுத்துக் கொண்டுதான் இருந்தார் அண்ணா. அதே சமயம், நாட்டு நலனுக்காகத் தாம் ஆற்றவேண்டிய பணியின் பொறுப்பையும் அவர் உணர்ந்திருந்தார்; அதைத் தட்டிக் கழிக்க அவர் விரும்பவில்லை. காலம் கை கொடுத்தது; கடமையாற்ற முற்பட்டுவிட்டார்.

## 'பெருமை'க்குப் பெருமை சேர்ப்பவர்

''சரியான நேரத்தில் சரியான முடிவெடுத்து, சரியாய்ச் செயல்படுத்தும் மனிதனுக்குப் பெருமை தவிர வேறு இல்லை''

—என்றார் அறிஞர், கானிங்.

அவருடைய மணிமொழியை மெய்ப்பிப்பதற்கென்றே மனிதப் பிறவி எடுத்தவர்போல், 'பெருமை'—என்னும் சொல்லுக்கே பெருமைதேட வந்தவர்போல், தம்முடைய சிந்தனைக் கருவில் உருவான தி. மு. கழகக் குழந்தையைச் செவ்வனே வளர்ப்பதற்கு அரும்பாடுபட்டார் அண்ணா.

## விழிப்பிலே வெற்றி

புறக்கண் கொண்டு நோக்குவார்க்கு அண்ணா ஒரு சோம்பேறி; தூங்குமூஞ்சி! ஏனெனில், பொதுவாக எல்லாருமே சுறுசுறுப்புடன் இயங்குகின்ற காலைவேளையில், பகற் பொழுதில் நெடுநேரம் அவர் உறக்கத்தோடு உறவாடி வந்ததே இதற்குக் காரணம். அவருடைய இந்தப் பழக்கத்தைப் பார்த்தறிந்த சிலர்.

''அண்ணாதுரை ஒரு சோம்பேறி! அவராவது ஒரு தனிக் கட்சிக்குத் தலைமை பூண்டு அதைத் தழைக்க வைப்பதாவது?''

—என்று தவறாக எடை போட்டனர்.

ஓர் அரசியல் வாதியின் வெற்றி பகற்பொழுதில் விழித்திருப்பதில் மட்டுமா அடங்கியிருக்கிறது?

தன்னுடைய இட்சியத்தில்—அதற்காகத் தான் தேர்ந்தெடுக்கும் பாதையில்—செல்லுகின்ற பயணத்தில்—தான் மேற்கொள்ளும் விழிப்பிலும்—அந்த இலட்சிய நிறைவுக்காக இரவையும் பகலாக்கிக்கொண்டு இடையறாது உழைக்கும் உழைப்பிலுமே எந்த ஓர் அரசியல்வாதியின் வெற்றியும் இனிதே பொலிகிறது.

அண்ணாவும் அத்தகைய உழைப்புத் திலகங்களுள் ஒருவராகவே தம்மை உருமாற்றிக் கொண்டார். நாள்தோறும், நாடு முழுதும் தேனில் குளித்தெழுந்த செழுந்தமிழ்ச் சொற்களால் தம்முடைய இலட்சியப் பண்ணை உற்சாகமாகப்

பாடினார். மற்றவர்கள் மனச்சோர்வடையும் மாலை வேளை களில் அவருக்கு மருந்தாக—விருந்தாக புத்துணர்ச்சியளிக் கும் கருத்துக் கனிச்சாறு அவர்தம் நாவூற்றினின்றும் பொங்கிப் பீறிட்டது! மற்றவர்கள் அயர்ந்து உறங்கும் அமைதியான இரவில், உறக்கத் தளையை உதறியெறிந்து விட்டு அவரது கரத்திலிருந்து எழுத்தோவியங்கள் கிளைத்துச் சிரித்தன!

## விழுதுகளை வளர்த்த அடிமரம்

மேலும், தாம் இல்லாவிட்டால் கழகமே இல்லை என்னும் ஆணவப் போக்கு அணுவும் இல்லாதவர் அல்லவா அண்ணா? எனவே, புதிய கட்சியின் பொறுப்புக்கள் அத்தனையையும் தம் தலைமீதே சுமத்திக்கொண்டு தொல்லைப்படவும் அவர் விழையவில்லை. சுற்றியிருந்த தோழர்களிடம், கட்சியை வளர்க்கும் பணிகளைப் பகிர்ந்தளித்தார்.

ஓர் ஆலமரம் மரகத மண்டபமாய்ப் படர்ந்து தழைப்ப தற்கு அடிமரத்தின் வலுவிருந்தால் மட்டும் போதுமா? விழுதுகளும் உரங்கொண்டு விளங்குவது மிகவும் வேண்டற் பாலது. இப் பேருண்மையை உணராத எந்தத் தலைவரும், தம் கட்சியைச் செழுமையாகவோ,—முழுமையாகவோ வளர்க்க முடியாது.

அதனால்தான் படிப்பறிவாலும் பட்டறிவாலும் (அநுப வத்தாலும்) மதிநலம் மிக்க அண்ணா, திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் ஆலமரத்தின் அடிமரம் என்பதை உணர்ந் திருந்தாலும், பெருமளவு விழுதுகள் இறங்கவும், இறங்கிய விழுதுகள் உரங்கொண்டு திகழவும் ஊட்டச் சத்து அளிப்ப தில் உளமார ஈடுபட்டார். இதனால், அவருடைய தம்பி களின் தொகை பெருகிற்று; அவர்கள் தங்கள் 'அண்ணா'வின் மீது பொழிந்த பாசத்தின் தரமும் முறுகிற்று! வேலைவாங்கு வதில் கெட்டிக்காரராக விளங்கினார் அண்ணா!

"...தம்பி! நினது இல்லத்தில் தமிழ் தழைக்கட்டும்! நின் ஆற்றல் தமிழைக் காத்திடப் பயன்படட்டும்! நின் வீரம் வளரட்டும்! அவ்வீரம் தாயகத்தின் மாண்பு காத்திடப் பயன்படுத்தப்பட வேண்டும்! மரபு மறவாதோனே! மாண்பு

மிகுந்திட வேண்டும் என்பதிலே நாட்டம் மிகக்கொண்ட நல்லோய்! வெல்க உன் முயற்சிகள்! பெற்றிடும் வெற்றிகள் மற்றையோர்க்கும் வழங்கத்தக்க பேறுகளை உனக்கு அளிக்கட்டும்! ஏறுநடை உடையோனே! வீரர்வழி வந்தோனே! மாற்றார்க் கஞ்சா மறக்குடிப் பிறந்தோனே!...''

...என்றெல்லாம் தம் தம்பிகளுக்கு உணர்ச்சியும் உற்சாகமும் ஊட்டி வந்தார் அண்ணா. அது மட்டுமா?

"...என் தம்பிகள் ஒரு குறையும் இல்லாத தங்கக் கம்பிகள்!...ஆயிரம் ஆபத்துகள் அடுத்து வந்தாலும்—அஞ்சி ஒதுங்காது அறப்போர் ஆற்றும் அடலேறுகள்! தீரர்கள்! தென்னாட்டை வாழ்விக்க வந்த பொன்னான வீரர்கள்! என் தம்பிமார்கள் முகங்களைப் பார்க்கின்றேன்;—அங்கே, சேரன் செங்குட்டுவன் நிழலாடுவதைப் பார்க்கின்றேன்! அவர்களுடைய அந்த அழகிய கண்களைப் பார்க்கின்றேன்;—அங்கே புத்தம் புதியதோர் புறநானூறு புன்முறுவல் புரிவதைப் பார்க்கின்றேன்! அவர்களுடைய ஆற்றல் தவழும் தோள்களைப் பார்க்கின்றேன்; அங்கே கனக—விசயர்கள் அன்றோர் நாள் பெற்ற தோல்வியைப் பார்க்கின்றேன்! அவர்களுடைய இனிய கைகளைப் பார்க்கின்றேன்; அந்தக் கைகளிலே செந்தமிழ் சிரித்து விளையாடுவதைப் பார்க்கின்றேன்! உடனே ஒரு கணம் என்னையே நான் எண்ணிப் பார்க்கின்றேன்; 'இப்படிப்பட்ட அஞ்சா நெஞ்சர்களை அருந்தம்பிகளாகப் பெறும் பேறு பெற்றேனே!'—என்று பெருங்களிப்பு உறுகிறேன்..."

—என்றெல்லாம், அண்ணா, புகழ்ப் பரணி பாடினார் தம் தம்பிகள்மீது!

இந்த எழுச்சிமிக்க வரிகளைக் கண்ட பின்னர் கூனனும் நிமிரமாட்டானா? கோழையும் வாளேந்தமாட்டானா?

எனவே, கழக முன்னணி வீரர்கள், உழைப்பே தம் உயிர் மூச்சாக, காற்றினும் கடிய வேகத்துடன் ஆற்றி வந்தனர் அளப்பரும் பணிகளை. அண்ணாவின் அரிய கருத்துக்களை—சிந்தனை ஒளிக் கதிர்களை—இலட்சிய முழக்கங்களைத் தமிழகம் எங்கும் எதிரொலித்தனர்.

## கழகத்தைக் காக்கும் விழுதுகள்

'தம்பியுடையான் படைக்கஞ்சான்' என்னும் முது மொழியை மெய்ப்பிக்கக் கிளம்பிய முன்னணி வீரர்கள்—அண்ணாவின் வலக்கரங்கள்—பலர் ஆவர். அவர்களுள் சிலர், அண்ணாவைவிட அகவையளவில் (வயதளவில்) பெரியவர் களாக இருந்தபோதிலும், அவர்தம் தம்பிகளுள் ஒருவராக மதிக்கப் பெறுவதையே பெருமையாகக் கருதி உழைத்தவர் களும் இருந்தார்கள்—இருக்கின்றனர். தி. மு. க. தோன்றிய காலத்தில் அம் முன்னணி வீரர்களுள் தலையாய இடம் பெற்ற பெரு மறவர்களாகக் குறிப்பிடத்தக்கவர்கள்:—

நாவலர் இரா. நெடுஞ்செழியன், பேராசிரியர் க. அன்பழகன், சிந்தனைச் சிற்பி சி. பி. சிற்றரசு, என். வி. நட ராசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, ஈ. வெ. கி. சம்பத், கலைஞர் மு. கருணாநிதி, டி. கே. சீனிவாசன், கே. ஏ. மதியழகன், குடந்தை கே. கே. நீலமேகம், 'சேலத்துப் பெரியார்' ஜி. பி. சோமசுந்தரம், அன்பில் தருமலிங்கம், மதுரை எஸ். முத்து, ப. உ. சண்முகம், நாஞ்சில் கி. மனோகரன், பெத்தாம்பாளை யம் பழனிச்சாமி, இரெ. இளம்வழுதி, தில்லை வில்லாளன், என். எஸ். இளங்கோ, சேலம் சித்தையன், போளூர் சுப்பிர மணியம், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, நடிக மணி டி. வி. நாராயணசாமி, தூத்துக்குடி கே. வி. கே. சாமி, எம். எஸ். சிவசாமி, காரைக்குடி ராமசுப்பையா, காஞ்சி கல்யாணசுந்தரம், காஞ்சி மணிமொழியார், ஏ. கே. வேலன், பொன்மலை ஜி. பராங்குசம், திருச்சி 'சாம்பு'—என்னும் சங்கரன், திருச்சி எம். எஸ். மணி, துறையூர் அழக முத்து, எஸ். ஏ. இராசமாணிக்கம், நாகூர் அனிபா, சென்னை வி. முனுசாமி, என். சீவரத்தினம், டி. எம். பார்த்தசாரதி, ஏ. எஸ். வேணு, சி. டி. டி. அரசு, சி. வி. எம். அண்ணாமலை, எம். பி. வடிவேலு, முல்லை சத்தி, முருகு சுப்பிரமணியம், பெரியண்ணன், குறிஞ்சிப்பாடி சாம்பசிவம், கோவில்பட்டி ஈ. வி. ஏ. வள்ளிமுத்து, எஸ். நீதிமாணிக்கம், கே. கோவிந்தசாமி, எஸ். ஆர். சுப்பிரமணியம், அரங் கண்ணல், ஈழத்தடிகள், எஸ். எஸ். கே. சாமி, டி. என். இராமன், கே. பி. சுந்தரம், எஸ். ஆர். சுப்பிரமணியம்,

ப. கண்ணன், எஸ். எஸ். இராசேந்திரன், சிவாஜி கணேசன், மாயூரம் கிட்டப்பா, மன்னை நாராயணசாமி, முத்துப் பேட்டை தருமலிங்கம், வி. எம். ஜான், கே. எம். கண்ண பிரான்.

மற்றும் பலர் ஆவர்.

இது ஒரு முழுமையான பட்டியல் அன்று; இதிலே எத்தனையோ முன்னணி வீரர்களின் பெயர்கள் விடுபட்டிருக்கலாம். அத்துடன் மேலே குறிப்பிடப் பெற்றவர்களுள் சிலர் குறிப்பாக திரு. ஈ. வே. கி. சம்பத், சிவாஜி கணேசன் போன்றவர்கள் கட்சியைவிட்டுப் பின்னர் விலகிச் சென்றதும் உண்டு. சிலர் அரசியலை விட்டே ஒதுங்கிப் போனதும் உண்டு.

அதேபோல், தி. மு. க. துவங்கிய நாளில் அங்கம் பெறுமற் போனாலும், பிற்காலத்தில் வந்து சேர்ந்து பெருமதிப்புப் பெற்ற முன்னணி வீரர்களும் உள்ளனர்; 'டார்பிடோ' ஏ. பி. சனார்த்தனம், சேலம் க. இராசாராமன், அறந்தாங்கி ஆ. துரையரசன் முதலானவர்களை இந்த வரிசையில் குறிப்பிடலாம்.

புதிதாக வந்து சேர்ந்து, கழக மண்டபத்தின் பெருந் தூண்களாகத் தம்மை உயர்த்திக் கொண்டவர்களுள் மக்கள் திலகம் எம். ஜி. ராமச்சந்திரன், கவிஞர் கண்ணதாசன் முதலானோரைக் குறிப்பிடலாம். ஆனால் திரு. கண்ண தாசன், பின்னர் கழகத்தை விட்டுப் பிரிந்து விட்டார்.

'ஆடவர்கள் மட்டுந்தான், தி. மு. கழக வளர்ச்சிக்கு ஆக்கம் அளித்தனரா?' என்னும் கேள்விக்கே இடம் இல்லாதவாறு, எத்தனையோ வீரமகளிரும் அண்ணாவின் அடிச்சுவட்டில் வீறுநடை போட்டுள்ளனர்.

அத்தகைய மங்கையர்குலத் திலகங்களுள், மூவாலூர் இராமாமிருதத்தம்மையார், டாக்டர். எஸ். தருமாம்பாள், டாக்டர். சத்தியவாணிமுத்து அம்மையார், திருமதி. அலமேலு அப்பாத்துரை முதலானோரைக் குறிப்பிடலாம்.

தி. மு. கழகத்தில் உறுப்பினர் என்னும் முறையில் நேரடியாகப் பங்குபெறுவிடினும், அண்ணாவின் சிந்தனை வித்துக்களை நாடெங்கும் தூவி செடியாக, தருவாகச் செழிக்கச்

செய்தவர்களுள் மறக்கவொண்ணு மாமனிதர் கலைவாணர், என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் ஆவார்கள்.

பன்மொழிப் புலவர், கா. அப்பாத்துரையார் போன்ற இன்னும் எத்தனையோ தமிழ் அறிஞர்களும், நீதிபதிகளும், டாக்டர்களும், அரசாங்க ஊழியர்களும்கூட மறைமுகமாகவும் நேர்முகமாகவும் கழக வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டதும் உண்டு. இவர்களுள், மத்திய அரசின் பொறுப்பில் உள்ள இரயில்வே துறையில் இருந்துகொண்டே வெளிப் படையாகத் தொண்டாற்றிப் பிறகு அத்துறைக்கே முழுக்குப் போட்டுவிட்டு வெளியேறி முழு அரசியல்வாதியாகவே மாறிய தலைசிறந்த எழுத்தாளரும், தத்துவமேதையுமான திரு. டி. கே. சீனிவாசன் அவர்களின் துணிவுமிக்க தொண்டு குறிப்பிடத்தக்கதாகும். தொழிலாளர் நலனில் அக்கறை கொண்ட திரு. எஸ். இராகவானந்தமும் இந்த வரிசையில் வைத்து எண்ணத்தக்கவர் ஆவார்.

இவ்வாருக, பற்பல இதயங்களின் எண்ண எழுச்சி—இடையரு உழைப்பு இவற்றின் மொத்த உருவமாகத் திராவிட முன்னேற்றக் கழகம் 'நாளொரு கிளையும், பொழுதொரு அமைப்பும்' ஆக செழுமை மேவித் தழைக்கலாயிற்று.

## எங்கும் பறக்கும் இருவண்ணக் கொடி

அரசியல், பொருளாதார, சமுதாய வாழ்வில் உள்ள இருண்ட நிலையை உணர்த்தும் கருப்பு நிறத்தை மேல்பாதியிலும், மும்மூன்று துறைகளிலும் நிலவும் இருள் நிலையை இல்லாது ஒழித்து, ஒளிநிலை உருவாவதை அறிவுறுத்தும் சிவப்பு நிறத்தைக் கீழ்பாதியிலும் கொண்ட இருவண்ணக் கொடிகள், நாடு—நகரெங்கும் பட்டொளி வீசிப் பறக்கலாயின.

புதிய கட்சி உதயமாகி ஒரு திங்கள் முடிவதற்குள்ளேயே நாடு முழுவதும் ஆங்காங்கே ஏறத்தாழ அறுநூறு கிளைக்கழகங்கள் எழுந்துவிட்டன. அக்கிளைக் கழகங்களுக்குமேல் ஒவ்வொரு வட்டத்திலும் (தாலுக்கா ஒரு வட்டக் கழகமும், அதற்குமேல் ஒவ்வொரு மாவட்டத்திலும் (District) மாவட்டக் கழகமும் உருவெடுத்தன. இம்

மாவட்டக் கழகங்கள் அனைத்தும் கட்சியின் உயர்மட்ட அமைப்பான பொதுக் குழுவுக்கும் அதனின்றும் தேர்ந்தெடுக்கப்பெறும் செயற்குழுவுக்கும் கட்டுப்பட்டவைகளாகும். இவை யாவற்றையும் இயற்றும் மூளையாக—முதல் பொதுச்செயலாளராகத்தான் அண்ணு தேர்ந்தெடுக்கப் பெற்றிருந்தார். எடுத்த எடுப்பிலேயே ஐம்பதினாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கழகத்தின் உறுப்பினர் ஆகிவிட்டனர்.

## முதல் வெற்றி

ஒரு கட்சியின் வளர்ச்சி அது சந்திக்கும் சமர்க்களங்களையும், சாதிக்கும் சாதனைகளையுமே பொறுத்துள்ளது. தி. மு. கழகத்தைப் பொறுத்தவரையில் அவற்றுக்கான வாய்ப்புக்கள் நிறைய ஏற்பட்டன.

ஓர் ஆண்டு முடிவதற்குள்ளேயே ஒரு வெற்றியினைத் தழுவும் நற்பேற்றினையும் அது பெற்றது. எவ்வாறு தெரியுமா?

'இந்தித் திணிப்பு' என்னும் வேதாளம் 1938 முதல் அடிக்கடி முருங்கை மரத்தில் ஏறுவதும் இறங்குவதுமாகத் தமிழகப் பள்ளி மாணவர்களின் தலை எழுத்தோடு விளையாடி வருகிறது. இதைப்பற்றி முன்பே குறிப்பிட்டுள்ளோம். அந்த 'இந்தி வேதாளம்' 1950 ஆம் ஆண்டிலும் தன் கோமாளித்தனத்தைக் காட்டத் தொடங்கிற்று. ஆம், 2—5—50 இல், அப்போது தமிழகக் கல்வியமைச்சராக இருந்த திரு. மாதவமேனன் உயர்நிலைப் பள்ளிகளில் இந்தியைக் கட்டாய பாடம் ஆக்கி ஆணை பிறப்பித்தார்.

அதனை எதிர்க்கும் அறப்போரில் தீவிரமாய் இறங்கிற்று தி. மு. கழகம். அரசாங்கமோ, அதிகாரம் என்னும் இரும்புக் கரங்கொண்டு தொண்டர்களை நசுக்க முற்பட்டது; ஆயினும் துவண்டு சோர்ந்துவிடவில்லை அத்தூய மறவர்கள்! அரசாங்க ஆணையைக் காட்டிலும் அண்ணுவின் சுண்டு விரற்கடை குறிப்பால் உணர்த்தும் ஆணையையே அவர்கள் பெரிதாய் மதித்தனர். அதை நிறைவேற்ற முழு மூச்சுடன் அணிவகுத்தனர். கொடுமைமிக்க தடியடியோ, சிறைவாசமோ அந்தக் கொள்கைக் குன்றுகளை ஒன்றும் செய்ய

முடியவில்லை; அவர்கள் உறுதியை உடைக்க முடியவில்லை; ஆடவர்களைப் போன்ற மகளிர் குலமும் இவ்வறப்போரில் மாளாத் துயர்களுக்கெல்லாம் ஆளாயிற்று. இறுதியில், தமிழக மாணவர்களுக்குப் பூட்டப்படவிருந்த பொல்லாத் தளைகள் பொடிப்பொடியாயின; தமிழ்த்தாயின் தன்மானம் காக்கப்பெற்றது.

இரண்டே திங்கள்களில் தி. மு. கழகத்தின் எதிர்ப்பு வலிமைக்கு ஈடுகொடுக்க முடியாத அரசு, தன் 'திணிப்பு வேலையை' நிறுத்திக்கொள்வது என்று தீர்மானித்தது.

*18—7—1950*-இல் 'இந்தி கட்டாய பாடம் இல்லை; விருப்பப் பாடமே' என்று கல்வியமைச்சர் திரு. மாதவ மேனனே மறு ஆணை பிறப்பித்தார்.

இது திராவிட முன்னேற்றக் கழகத்துக்குத் தொடக்க நாட்களில் கிட்டிய முதல் வெற்றி என்றே பெருமிதத்துடன் கூறலாம்.

இந்த வெற்றியினால் விளைந்த பெற்றிமிக்க களிப்பிலே தாம் மட்டும் திளைக்காமல் தம் தம்பிகளையும் திளைக்கச் செய்து அறிக்கை விடுத்தார் அண்ணா.

'தாம்இன் புறுவ(து) உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்'

என்னும் வாய்மொழியையே அண்ணாவின் அவ்வறிக்கை நினைவுறுத்துவதாய் அமைந்திருந்தது.

"இந்தி எதிர்ப்பிலே வெற்றி கண்டுவிட்டோம். இந்தி விருப்பப் பாடம்தான் என்று அறிவித்து விட்டார் கல்வி அமைச்சர். இந்த வெற்றிச் செய்தியை துண்டுப் பிரசுரங்கள், பொதுக்கூட்டங்கள் மூலம் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்துங்கள். இந்தியை எதிர்த்து அறப் போரில் ஈடுபட்ட உள்ளூர் கழகத் தோழர்களுக்கு நன்றியும் மகிழ்ச்சியும் வாழ்த்தும் தெரிவியுங்கள். நமது அறப் போர் பலன் தந்துவிட்டது. அதை மக்களுக்குத் தெரிவியுங்கள்."

அண்ணாவின் இவ்வமிழ்தச் சொற்களைக் கண்டு தங்கத் தம்பிகளின் உள்ளத்தில் பொங்கிப் பீறிட்டது உற்சாகம். அவர்கள் தொடர்ந்து பல அறப்போர்க் களங்களில் குதிப்பதற்கு ஆயத்தமாகிவிட்டார்கள்.

# 20. எழுத்துரிமைப் போர்

## 'திராவிட நாடு'—இதழ்மீது வழக்கு

**1946**-ல் சென்னை மாநிலத்தில் காங்கிரசுக் கட்சியின் இடைக்கால அரசு (Interim Government) ஏற்பட்டது. 'ஆந்திரகேசரி' டி. பிரகாசம் அவர்கள் முதல் அமைச்சர் ஆனார். ஐதராபாத் நீங்கலாகவுள்ள ஆந்திர மாநிலமும், கேரளத்திலுள்ள மலபார் மாவட்டமும், மைசூர் மாநிலத்திலுள்ள பெல்லாரி மாவட்டமும் அப்போது தமிழகத்தோடு இணைந்து, சென்னை மாநிலம் என்னும் பெயரில் பரந்த பெரிய மாநிலமாகத் திகழ்ந்து வந்தது.

ஆந்திரப் பகுதியைச் சார்ந்தவரான திரு. பிரகாசம் அவர்களுக்குப் பின்னர், தமிழகப் பகுதியைச் சார்ந்த ஒருவர் முதலமைச்சர் ஆகவேண்டும் என்னும் வேட்கை இயல்பாகவே எழுந்தது. அதன் விளைவாகக் காந்தியடிகளின் அடிச்சுவட்டில் அணுவும் பிறழாமல் நடந்து, ஏழைகளின் தோழராய், உழைப்பாளிகளின் உற்ற நண்பராய், எளிமைக்கே எழில் சேர்ப்பவராய் விளங்கிய திரு. ஓமாந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்கள் முதல் அமைச்சர் ஆகவேண்டும் என்று பலரும் விழைந்தனர். ஆனால், திரு. பிரகாசம் அவர்களோ திரு. ஓமாந்தூராரை எதிர்த்துப் போட்டியிட்டார்; ஆனால் தோல்வியுற்றார்.

காங்கிரசுக் கட்சிக்குள் நடந்த இந்தப் 'போட்டி' பற்றி 4—4—48, 18—4—48 நாளைய 'திராவிட நாடு' இதழ்களில் திறனாய்வு செய்திருந்தார் அண்ணா.

அந்நாளில், அண்ணாவின் சிந்தனைக் கடலில் ஒரு தனிப்பட்ட இனநலன் பற்றிய எண்ண அலைகளே மேலோங்கி ஆர்ப்பரித்தவண்ணம் இருந்தன. எனவே, அவற்றின் நிழலோட்டம் அவர்தம் கட்டுரைகளிலும் ஆதிக்கம் செலுத்தின.

"நாடாளும் கட்சியிலே நல்லவர் என்று நாட்டு மக்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒரு தலைவருக்குக் காரணமின்றி—வெளியே பகிரங்கமாகக் காரணம் ஏதும் கூறப்படாத நிலையில் போட்டி ஏற்பட்டிருக்கிறது. அவருடைய குணம் சந்தேகிக்கப்படவில்லை; மாற்றுத் திட்டம் எதுவும் தீட்டப்படவில்லை; என்றாலும், அவருக்குப் போட்டி! அது ஏன்?"

"ஒரே கூட்டத்துக்குள் இருந்துகொண்டு, ஒரே கொடி, ஒரே கட்சி என்று சொந்தம் பேசிக் கொண்டிருந்தாலும், 'தமிழகக் காந்தி' என்று தக்கோர் புகழ்ந்தாலும், சுயநலக் கூட்டத்தாரின் சூழ்ச்சியும் வீண் பகையும், வகுப்புவாத வெறியும் தாக்கியபடிதான் இருக்குமென்றால் காங்கிரஸ் (ஓமாந்தூர்) இராமசாமியாக இருப்பவர் எந்த விதத்தில் திராவிட (பெரியார்) இராமசாமியைவிட அதிக மேலான நிலையில் இருக்கிறார் என்று கேட்கிறோம்."

"பிராமணர்—பிராமணர் அல்லாதார் என்ற வேறுபாடு கருதாது அனைவருமே இந்தியத் தாயின் சேய்கள் என்பதாகக் கூறி பெருமகிழ்வும், பெருமிதமும் கொண்டு நின்ற இராமசாமி ரெட்டியார் போன்ற ஒருவருக்கு எதிர்ப்பு இருப்பதா?"

"நாம் நாற்பது கோடி மக்கள்; ஆனால் நாலாயிரம் சாதிகளாகப் பிளவுபட்டுப் பாழானோம். 'உன் சாதி பெரியது; என் சாதி உயர்ந்தது; நீ மட்டம்; நீ தாழ்ந்த சாதி' என்று நமக்குள் சண்டையிட்டு நாசமானோம். இதைச் சாதகமாகக் கொண்டான் அன்னியன். பாழான சாதி பேதம் இந்த நாட்டில் இருக்கும் வரையில் நாடு உருப்படாது. வீணான சாதிபேதத்தாலேதான் நம் நாடு வெள்ளைக் காரனிடம் இவ்வளவு காலம் அடிமைப்பட்டு இருந்தது. தமிழர்கள் சாதிபேதத்தை அடியோடு விட்டொழிக்க வேண்டும். 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என்னும் நமக்குள் ஒற்றுமை வேண்டும்; வகுப்புவாதம் கூடாது!"

"பார்ப்பனீயத்தின் பலனாக ஒரு பெரிய திராவிட சமுதாயம் சின்னாபின்னப்பட்டுப் போய்க் கிடக்கிறது. பிறர்க்கு அடிமைகளாக, பேசும் ஊமைகளாக நடைப்பிணங்களாகப் போய்விட்டனர். தகப்பனுக்கு மேக வியாதி இருப்பின்,

பிறக்கும் குழந்தை குருடாகவும் பிறக்கலாம் என்பர் மருத்துவ நூல் கற்றோர். குருட்டுக் குழவிக்குக் குவலயத்தின் குதூகலக் காட்சி எங்ஙனம் தெரியும்? அதுபோல்தான் திராவிட சமுதாயம், பார்ப்பனீயம் என்னும் மேக நோயால் பீடிக்கப்பட்டிருக்கிறது. பிறக்கும் திராவிடன் குருடனு கிறான்.''

—அண்ணாவின் இக் கருத்துக்களைத் தாங்கிய கட்டுரைகள் தமிழக அரசின் உயர்மட்டத்தில் ஒரு பெரும் பரபரப்பை உண்டாக்கின. சட்டத்துக்குப் புறம்பான முறையில் வகுப்புக் கலவரங்களைத் தூண்டிவிடக்கூடிய அக்கட்டுரைகளைத் 'திராவிட நாடு' வெளியிட்டது குற்றமே என்று கூறி, அதன் உரிமையாளரான அண்ணா 25—6—49-க்குள் பொறுப்புத் தொகையாக ரூ. 3000 கட்டியாக வேண்டும் என்று 25—5—49-ல் கட்டளையிட்டது அரசாங்கம். ஒரு மாத தவணைக் காலத்திற்குள் அதாவது 25—6—49-க்குள் அவ்வாறு ரூபாய் மூவாயிரமும் கட்டப்படாவிட்டால், 'திராவிட நாடு' ஏடு வெளிவர முடியாமல் நின்று போய்விடும்.

### எண்ணாக் கண்ணாடி எய்திய வெற்றி!

அண்ணாவின் எண்ணக் கருவூலத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியே 'திராவிட நாடு'. செந்தமிழ் சிரித்து விளையாடும்; சிந்தனைக் கத்திக்குப் புதுச்சாணை தீட்டும் அந்த ஏட்டுக்கு இப்படியொரு இடர் ஏற்படும், தடை எழும்பும் என்று கழகத்தவர்கள் எதிர்பார்க்கவே இல்லை. எனவே, செய்தியறிந்ததும் அவர்கள் கொதித்தெழுந்தனர்; தங்களுடைய ஆதரவையும் ஆர்வத்தையும் நன்கொடை வடிவில் வாரி இறைத்தனர்.

அந்த நன்கொடையைக் கொண்டே பொறுப்புத் தொகை மூவாயிரம் ரூபாயையும் அண்ணா கட்டி முடித்தார். அரசினரின் ஆணையை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் வழக்கும் தொடுத்தார்.

நீதிபதி பி. வி. இராசமன்னார், நீதிபதி சந்திரா ரெட்டி (இருவருமே சென்னை உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதிகளாகும் தகுதியும், பேரும் பெற்றவர்கள்) இருவரும்

அடங்கிய 'பெஞ்சின்' முன்னே விசாரணைக்கு வந்தது வழக்கு.

மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது வழக்கு விசாரணை. முடிவில் 4—11—1949ஆம் நாள் அன்று அண்ணாவின் கட்டுரைகளில் சட்டத்துக்குப் புறம்பான கருத்துக்கள் இடம் பெற்றிருப்பதாக முழுமையாக உறுதி செய்ய முடியாது என்பதைத் தெளிவுபடுத்தி, நீதிபதிகள், அரசினரின் ஆணையைத் தள்ளுபடி செய்தனர்; அண்ணா முன்பே கட்டிவிட்ட ரூபாய் மூவாயிரத்தையும் அவருக்கே திருப்பிக் கொடுத்துவிடவேண்டும் என்று தீர்ப்பளித்தனர்.

இது அண்ணாவின் எழுத்து வன்மைக்குக் கிட்டிய இணையற்ற மாபெரும வெற்றியாகும்.

இவ்வாறு உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்ததும் அரசினர், பொறுப்புத் தொகை ரூபாய் மூவாயிரத்தையும் அண்ணாவிடமே திருப்பி அளித்தனர். அந்தத் தொகையை அண்ணா என்ன செய்தார் தெரியுமா? தாமே அதை எடுத்துக் கொள்ளவில்லை; அப்படியே எடுத்துக்கொண்டிருந்தாலும் அவரது பாசப் புனலில் நீச்சலடிப்பதையே நிகரற்ற செல்வமாய்க் கருதும் தம்பிமார்கள் தட்டிக் கேட்கப் போவதும் இல்லை. எனினும்கூட அத்தொகை முழுமையையும் நன்கொடை வழங்கிய ஏழை—எளிய மக்களுக்கு அவரவர்களுக்குரிய தொகையை அண்ணா திருப்பி அனுப்பிவிட்டார்.

இதிலிருந்தே, அண்ணாவின் நாணயமும், பணப்பித்துப் பிடிக்காத பண்பாடும் நன்கு விளங்குகின்றன அல்லவா?

## 'ஆரிய மாயை'—நூல் வழக்கு
## மேதைகளுக்குச் சோதனைகள்

உலகப் புகழ்பெற்ற எழுத்தாளர்களில் பெரும்பாலோர் தத்தம் அரசினரின் அடக்குமுறைக்கு ஆளாகி அவ்வப்போது எல்லையற்ற அல்லல்களுக்கு இரையாகித்தான் இருக்கின்றனர்.

## இலக்கியச் சிற்பி டால்ஸ்டாய்

இந்தப் பரந்த உலகம் முழுவதையும் எடுத்துக் கொண்டாலும். இதுகாறும் தோன்றியுள்ள சிறந்த இலக்கியச் சிற்பி

களுள் இணையற்ற தலைமைச் சிற்பியாக நிரந்தரமான ஓர் இடத்தைப் பற்றி நிற்பவர் மாபேரறிஞர் லியோ டால்ஸ்டாய் அவர்களே! அரைத்த மாவையே அரைக்கும் சில எழுத்தாளர்களைப்போல அல்லாமல், மனித வாழ்வின் அவிழ்க்க முடியாத பற்பல சிக்கல்களையும் பல்வேறு கோணங்களில் நின்று பார்த்து அவற்றுக்குப் படிப்படியே எவ்வாறெல்லாம் தீர்வு காணலாம் என்பதைத் துணிந்து சொல்ல முற்பட்டவர் அவர். சிலரைப்போல் இருக்கும் பொருளின் எழிலை வடித்துவிட்டதாக இறுமாப்புக் கொள்பவர் அல்லர் அவர். இருக்க வேண்டியது என்ன என்பதையும் எழில் குலுங்க வகுத்துக் காட்டுவதே ஓர் உண்மையான இலக்கியச் சிற்பியின் கடமை என்பதை உணர்த்திக் காட்டியவர் அவர். சுருங்கச் சொன்னால் அவர் வெறும் படப்பிடிப்பு எழுத்தாளர் அல்லர்; மக்களுக்குப் பயன் தரத்தக்க வாழ்க்கைப் பாதைகளைப் 'படைத்துக் காட்டும் கடவுள்' ஆவர் அவர்.

(1) பெண்களின் உள்ளக் குமுறலை வெளிக்கொணர்ந்து, அவர்களுடைய இருள் கப்பும் வாழ்க்கையில் ஒளியேற்ற வேண்டும் என்று அழுத்தமாக வற்புறுத்தும் அழகான பாங்கு—(2) சண்டை புரிவதில் நெப்போலியனைப் போல் எத்துணை பெரிய தானைத் தளபதியாக இருப்பினும் பனிமழை போன்ற இயற்கையின் ஆற்றலுக்கு மண்டியிடத்தான் வேண்டும் என்பதை எடுத்துக்காட்டி, போரினும் அமைதியே மேலானது என்பதை வலியுறுத்தி வன்முறை மனப்போக்கின்மீது தொடுக்கும் நளினமான தாக்குதல்—(3) கொடுமைக்கெல்லாம் கொடுமையான வறுமையை ஒழித்துக்கட்டி, தம்மிடம் இருப்பதை எல்லார்க்கும் வழங்கிப் பொதுவுடைமையாக்கும் இரக்கப் பண்பு கொண்டவர்களே உண்மையான தெய்வத்தன்மை வாய்ந்தவர்கள் என்பதை உணர்த்துகின்ற நயமான பாடம்—அழகிய தனித்தன்மை வாய்ந்த எழுத்தாற்றல்களினால் தன்னிகரற்று உயர்ந்தவர் டால்ஸ்டாய். அவரது சிந்தனைக் கண்ணோட்டத்தின் தெளிவு, நம் அண்ணா அவர்களுக்கும் உண்டு.

அத்தகைய மாமேதை டால்ஸ்டாய் அவர்களே, தம்முடைய புரட்சிமிக்க கருத்துக்களின் காரணமாக அப்போதைய உருசியநாட்டு அரசின் அடக்குமுறைக்கு ஆளாக

நேர்ந்ததுண்டு. அவருடைய நூல்களுக்குத் தடை விதித்துக் கொடுமை செய்தனர் அரசினர்.

### எமிலி சோலா

பிரஞ்சு இலக்கிய மேதை எமிலிசோலாவைப் பற்றி இலக்கிய ஆர்வம் கொண்ட யாரும் அறியாமல் இருக்க முடியாது. அவரும் தம் எழுத்தின் நிமித்தமாக அரசினரின் அடக்குமுறைக்கு ஆளானவரே! தம் நண்பர் ஒருவர் அநியாயமாகத் தண்டிக்கப்பட்டதை எதிர்த்து எழுதியதற்காக நாட்டை விட்டே ஓட்டம் பிடிக்க நேர்ந்தவர்.

### பெர்ட்ரண்ட் ரஸ்ஸல்

இந்த இருபதாம் நூற்றுண்டில் மேலைநாடுகளின் தத்துவப் பேரொளி (The Great Light of Western Philosophy) யாகத் திகழும் பெர்ட்ரண்டு ரஸ்ஸல் (Bertrand Russel) சவகர்லால் நேரு அவர்களுக்கு மட்டுமின்றி, நம் அண்ணுவுக்கும் பிடித்தமான எழுத்து வேந்தர். அத்தகு சிறப்புவாய்ந்த ரஸ்ஸல் அவர்களும் எழுத்தின் காரணமாக இன்னல்களுக்கு இலக்கானவர். சமூக அமைப்பிலே புரட்சிகரமான மாறுதலைத் தோற்றுவித்துவிடும் என்று காரணம் கூறி, அவருடைய 'Marriage and Morals'—திருமணம் மற்றும் ஒழுக்க விதிகள் என்னும் நூலுக்குத் தடை விதித்தது அமெரிக்க அரசு; அதனுல் விளைந்த இடர்கள் ஏராளம்!

### அண்ணு சந்தித்த அடக்குமுறை

இத்தகைய உலகப் பேரறிஞர்களின் பட்டியலில் தமக்கும் ஓர் இடத்தை உருவாக்கிக்கொண்டு வருபவர் அல்லவா அண்ணு? எனவேதான், அம்மேதைகளுக்கு எழுத்துத் துறையில் ஏற்பட்ட சோதனைகள் அண்ணுவுக்கும் ஏற்பட்டன. அச்சோதனைகளுள் ஒன்றே 'ஆரிய மாயை' நூல்மீதான வழக்கு!

### இன எழுச்சியூட்டிய இருபெருந் தலைவர்கள்

அழுக்கப்பட்ட பந்து எம்பி எழும்; அழுத்தப்பட்ட இனமும் என்றுவது ஒருநாள் வீறு கொண்டு எழும். அத்

தகைய இன எழுச்சிக்குப் பாடுபடும் தலைவர்கள் இன்று உலகெங்கும் விரவியிருக்கிறார்கள்.

நீக்ரோ இனத்தின் எழுச்சிக்காக ஆல்பெர்ட் லுதுலி (Albert Luthuli) என்பார் தென்னாப்பிரிக்க நாட்டிலே போராடியதைக் கண்டோம். அமைதியாகத் தாம் நடத்திய அந்த அறப்போருக்காகவே அவருக்கு 'நோபல் பரிசு' வழங்கப்பட்டதையும் அறிவோம். அவரைப் போலவே நீக்ரோ இன எழுச்சிக்காக அமெரிக்க நாட்டிலே மார்ட்டின் லூதர் கிங் போராடுவதைக் காண்கிறோம். அவரும், தம் அறப்போர் நெறியின் காரணமாக 'நோபல் பரிசு' வழங்கப் பெற்றுள்ளார்.

## அம்பேத்கார்—காந்தியடிகள் அரிய தொண்டு

அந்த நீக்ரோ இனத்தவரைப்போல்தான் இந்த நாட்டில் ஆதி திராவிட மக்கள் கொடுமைகளுக்கு உள்ளாயினர். அவர்களுடைய எழுச்சிக்காகவும், விழிப்புக்காகவும் ஒரு புறத்தில் டாக்டர் பி. ஆர். அம்பேத்காரும், மகாத்மா காந்தியடிகளும் போராடினர். இவர்களுடைய இடையறாப் பணிகளால் இன்று ஆதி-திராவிட மக்கள்—தாழ்த்தப்பட்ட அரிசன, மலைவாசி மக்கள்—ஓரளவு முன்னேறிவிட்டனர்—முன்னேறி வருகின்றனர் என்பது கண்கூடு.

## பிராமணர் அல்லாத பிற்பட்ட வகுப்பார்

இந்த ஆதி திராவிட இன மக்கள் கிடந்த பாதாள நிலைக்குச் சற்று மேலே இருப்பதுதான் பிற்பட்ட சமூகம். இது அன்றும் முன்னேறவில்லை; இன்றும் முன்னேறவில்லை. ஆதி திராவிட இன மக்கள் அடைந்த இழிநிலை நூறு பங்கு என்றால், இந்தப் பிற்பட்ட வகுப்பினர் (Backward Communities) சுமந்து வரும் இழிநிலை எழுபத்தைந்து பங்குக்குக் குறையாது. சமூகம், அரசியல், பொருளாதாரம் முதலான எல்லாத் துறையிலும் பின்தங்கிப் போன இந்த மக்களே தென்னாட்டில் 'திராவிட இனத்தவர்', 'பிராமணர் அல்லாதவர்' (Non-Brahmins) என்று வழங்கப்படுகின்றனர்.

ஆதி திராவிட மக்களோடு சேர்ந்து அவர்களும் எழுச்சியுறவேண்டும் என்பதற்காகவே சர். பி. தியாகராயர்,

டி. எம். நாயர், டாக்டர் நடேசன் போன்றவர்கள் பாடு பட்டார்கள். அவர்களை அடுத்து இன்று பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் பாடுபட்டு வருகிறார்கள்.

## இதயத்தில் வளர்ந்த இனப்பற்று

இளமைக் காலத்திலேயே, ஒடுக்கப்பட்ட பிற்பட்ட வகுப்பு ஒன்றில் பிறந்ததன் காரணமாக அண்ணா எவ்வாறு இன உணர்வால் சுண்டி இழுக்கப்பட்டார் என்பதை முன்பே கண்டோம். நீதிக்கட்சித் தலைவர்களின் தோழமை யால் முளைவிட்டுச் செடியாகிக் கொண்டிருந்த இனப்பற்று, பெரியாரைத் தலைவராக ஏற்றுக்கொண்டபின் அண்ணாவின் சிந்தனையில் பெரு மரமாய் உருவாகித் தழைத்ததில் வியப் பேதும் இல்லை.

## வீழ்ச்சிக்கு வித்திட்டவர் யார்?

ஓர் இனம் வீழ்ச்சியுற்றது என்று கூறும்போது, அவ் வாறு அதை 'வீழ்த்திய இனம் அல்லது நெறி' எது என்பதை யும் எழுச்சியூட்ட வந்தவர்கள் கூறும்படிதான் நேரும்.

நீக்ரோ இனத்தவரின் வீழ்ச்சிக்கு வெள்ளையர் இனமே காரணம் என்று வாதிக்கப்படவில்லையா? இன்று அமெரிக்க நாட்டையே 'வெள்ளையர் நாடு' என்றும் 'நீக்ரோ நாடு'— என்றும் இரு பகுதிகளாகப் பிரித்தால்தான் என்ன என்னும் புதிய கருத்தே அங்கே உதயமாகவில்லையா?

அப்படித்தான் திராவிட இனத்தவர் எப்படி அழுத்தப் பட்டார்கள் என்ற வினா எழுந்தது; அவர்களுக்கு என்று தனி நாடே அமைத்துவிட்டால் என்ன என்ற வேட்கையும் எழுந்தது.

இவ்வாறு மிகப் பெரிய ஓர் இனத்தைச் சார்ந்த மக்கள் மிக இழிந்த நிலைமைக்குத் தள்ளப்பட்டது எப்படி, யாரால், ஏன் என்ற கேள்விகள் எழுந்தபோது சாதிப் பாகுபாடு களுக்கு வித்தாய் அமைந்த 'வருணாச்சிரம' முறையை—(குல ஒழுக்க நெறியை) நாட்டில் புகுத்திய ஆரிய நெறி முறை யைத்தான், எழுச்சியூட்ட வந்த தலைவர்கள் விடையாகப் பகர நேர்ந்தது.

### ஆதாரங் காட்டவே 'ஆரிய மாயை!'

ஓர் இனத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாகப் பிறிதோர் இனம் அல்லது நெறிமுறையைச் சுட்டிக் காட்டும்பொழுது அதற்குச் சரியான சான்று காட்ட வேண்டாமா? அவ்வாறு காட்டாவிட்டால், ஒரு குறிப்பிட்ட சமூகத்தின்மீது அபாண்டப் பழி சுமத்திய குற்றம் ஏற்பட்டுவிடாதா? அத் தகைய குற்றச்சாட்டுக்கு இலக்காகாமல் இருக்கும் பொருட்டு இழிநிலையில் இருக்கும் திராவிட இனத்தவர்க்கு ஏன் எழுச்சியூட்ட வேண்டும் என்பதற்கான ஆதாரங்களை யும் வரலாற்றுப் பின்னணிகளையும் கட்டுரைகளாக வரைந் தார் அண்ணா. அவையே 'ஆரிய மாயை' நூல் ஆயிற்று.

### வரலாற்றுப் பின்னணி

ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தென்னாட்டில் மட்டு மின்றி, மொகஞ்சதாரோ, ஹாரப்பா பகுதிகளைக் கொண்ட வடஇந்தியாவிலும் திராவிட நாகரிகம் எவ்வாறு செழித்து ஓங்கியது என்பதையும், ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவில் நுழைந்த ஆரிய நாகரிகத்தால் அது எங்ஙனம் தன் சீர்மையை இழந்து சிறுமையுற்றது என்பதையும், புகழ் வாய்ந்த பழைய வரலாற்றுக்குப் புத்துயிர் அளிக்கும் வகை யில் இன்றைய திராவிட இன மாந்தர் ஏன் எழுச்சி கொள்ள வேண்டும் என்பதையும், 'ஆரிய மாயை' நூலில் விரிவாக மட்டுமின்றி உணர்ச்சித் துடிப்போடும் விளக்கியுள்ளார் அண்ணா.

### ஆரிய அறிஞரும், ஆங்கில அறிஞரும்

தம்முடைய வாதங்களுக்கு ஆதாரமாக ஆங்கிலப் பேரறிஞர்களின் நூல்களைச் சுட்டிக்காட்டும் அளவோடு அண்ணா நிற்கவில்லை; 'ஆரியப் பேரறிஞர்'களின் ஆராய்ச்சி யுரைகளையும் தமக்குத் துணையாக இழுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரெஞ்சுப் பாதிரியார் ஆபி. ஜே. ஏ. டுபாய்ஸ் (Abbe. J. A. Dubois), ஏ. எல். சாண்டர்ஸ் முதலான எத்தனையோ, மேனாட்டு அறிஞர்களின் கூற்றுக்களை எடுத் துக் காட்டியதுடன் நின்றாரா? இல்லை. ஆரிய இனத்தைச்

சார்ந்தவர்களான திரு. பி. டி. சீனிவாச அய்யங்கார் எம். ஏ. ('இந்தியச் சரித்திரம்') திரு. எம். எஸ். இராமசாமி அய்யங்கார் ('மதுரை ஜில்லா பூவருணனை நூல்') திரு. பி. வி. இராம கிருஷ்ண ராவ் எம். ஏ., பி. எல். ('தொடக்க கால ஆந்திர தேச அரசபரம்பரைகள்' (Early Dynasties of Andhra Desa) —முதலானவர்களின் கூற்றுக்களையே வாதங்களுக்கு அண்ணா ஆதாரங்களாகத் தேடித் தந்திருப்பது சிந்தனைக் குரியது ஆகும்.

## இளமைத் துடிப்பில் எழுந்த நூல்

*1943-இல்தான் அண்ணாவின் 'ஆரிய மாயை' நூல் வெளியாயிற்று. அப்போது அவருக்கு முப்பத்து நான்கே வயது. இளமையின் உணர்ச்சித் துடிப்பு உச்சாணிக் கொம்பேறிக் கடுமையான வேகத்தைக் காட்டும் கால கட்டம் அது. எனவே, அந்தத் துடிப்புத் தெறிக்கச் சொற்களைக் கொட்டி, அவர் நூலைப் படைத்திருந்ததில் வியப்பேதும் இல்லை. மீளாத் துயிலில் ஆழ்ந்துவிட்ட ஓர் இனத்தவர் மிடுக்கோடு விழிப்புற்று எழ, எந்த ஓர் எழுச்சித் தலைவரும் தேர்ந்தெடுக்கக்கூடிய பாதையே அது.*

## இனம் பற்றிய எண்ண வளையம்

*ஆனால், அதே துடிப்புடன், இந்த ஐம்பத்தெட்டாம் வயதிலும் (1967) அப்படியொரு நூலை அண்ணா ஆக்கித் தருவாரா என்னில் அது ஐயப்பாட்டிற்குரியதே? அவ்வாறு எழுத முற்படமாட்டார் என்றும் துணிந்து மொழியலாம்.*

*அவருடைய எழுத்தாற்றலில் தளர்ச்சி ஏற்பட்டுவிட்டதாக இதற்குப் பொருள் கொண்டுவிடக் கூடாது. சிந்தனைத் திறனில் முதிர்ச்சி ஏற்பட்டுள்ளது என்று இதனை நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். அதுவே உண்மையும் ஆகும்.*

> மேலும், 'இனம்' பற்றிய அவரது எண்ண வளையம் இப்பொழுது எவ்வளவோ பெரிதாக விரிவடைந்துவிட்டது. ஒரு தனிப்பட்ட இனநலனுக்கு மட்டுமே போராடும் நிலையைவிட்டு மேலே சென்று, அவ்வினத்தோடு தொடர்பும் தோழமையும் கொண்ட பிற இன மாந்தரும் கூடி வாழ்கின்ற

நிலப்பகுதி முழுவதுமே முன்னேற வேண்டும் என்று செயலாற்றும் அளவுக்கு அவரது "அகம்" (உள்ளம்) அகலமாகியிருக்கிறது. அத்துடன் தம்முடைய இனத்தவர் வளர்ச்சியை ஒரு காலத்தில் அறிந்தோ அறியாமலோ பாழ்படுத்தியவர்களாயிற்றே என்று பகைமையைப் பாராட்டி, ஒரு குறிப்பிட்ட இனத்தைப் பழி வாங்க வேண்டும் என்னும் இழிந்த நோக்கமும் இப்போது அவரிடம் இல்லை. மாண்பு மிக்க உலகப் பெருந்தலைவர்களுக்கே உரிய ஆழ்ந்த தெளிவான அமைதியான சிந்தனையும், பரந்த மனப் பான்மையும் அவரிடம் வந்து படிந்துவிட்டதே இதற்குக் காரணம்.

## எழுத்துரிமை பறிக்கப்பட்டது

'ஆரிய மாயை'—நூல் 1943-ஆம் ஆண்டிலேயே வெளி வந்து, மூன்று பதிப்புகள் வரை செலவாகி, ஏறத்தாழ ஏழு ஆண்டுகள் பறக்கும்வரைகூட, அது ஒரு தகாத நூலாக அரசினரின் கண்களுக்குப் படவில்லை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் தனிக்கட்சி துவக்கி அதன் தன்னிகரற்ற வழிகாட்டியாக அண்ணா வளர்ந்த பிறகு, அவரது வளர்ச்சியைப் பார்க்கப் பொறுக்காததாலோ என்னவோ 1950-இல் அப்போதைய அரசு 'ஆரிய மாயை' நூலைச் சட்டத்துக்குப் புறம்பானதாக்கித் தடை விதித்தது; அதன் ஆசிரியராகிய அண்ணாவை மட்டுமின்றி, அதனை வெளியிட்ட திருச்சி 'திராவிடப் பண்ணை' உரிமையாளர் திரு. கண்ணப்பன் அவர்களையும் குற்றவாளிக் கூண்டிலே ஏற்றிப் பார்த்தது.

## சிறையிலே தியாகச் செம்மல்

திருச்சி நீதிமன்றத்தில் நடந்த இவ்வழக்கின் முடிவில் இந்தியன் பினல்கோடு சட்டம் 153-A பிரிவின்படி, அண்ணா அவர்கள் குற்றவாளியே என்று கூறப்பட்டார். 700 ரூபாய் அபராதம் அல்லது ஆறு மாதம் வெறுங்காவல் சிறை என்று தண்டனையும் விதிக்கப்பட்டார். அபராதம் செலுத்தி வெளியே வருவதைக் காட்டிலும் சிறையினுள் சென்று

தியாக வேள்வியில் குதிப்பதையே அண்ணு பெரிதும் விரும்பினர்.

மக்களாட்சி மலர்ந்திருப்பதாய்க் கூறப்படும் ஒரு நாட்டில், எழுத்துரிமைக்குத் தடைவிதிக்கலாமா என்பதை நேரிய உள்ளங் கொண்டோர் ஆழ்ந்து சிந்திக்கவும், அடக்கு முறையின்பால் வெறுப்பை உமிழவும் அண்ணுவின் சிறை நுழைவு வழியமைத்துக் கொடுத்தது.

### பழைய தலைவருடன் புதிய அநுபவம்

இந்தச் சிறை வாழ்வின்போது அண்ணுவுக்குப் புதிய அநுபவம் ஒன்று ஏற்பட்டது. தாம் எந்தத் தலைவரைத் தெய்வமாக வழிபட்டாரோ, பிறகு எந்தத் தலைவரின் கொள்கைக்குப் புறம்பான பொருந்தாத் திருமணத்தால் பிரிந்து சென்று தனிக்கட்சி கண்டாரோ, அதே தலைவரோடு, சேர்ந்து சிறையில் உறைய வேண்டியிருந்ததே அந்த அநுபவம்!

அதைப்பற்றித் 'தம்பிக்கு' மடல் பகுதியில், தம்முடைய ஏட்டில், அண்ணு எவ்வாறு எழில் கொஞ்சத் தீட்டியுள்ளார் பாருங்கள்.

"...திருச்சியில் எனக்குக் கிடைத்த வாய்ப்பு எப்படிப் பட்டது தெரியுமா தம்பி! பெரியாரும் அதே நாளில் அதே விதமான தண்டனை பெற்று அதே சிறைக்கு வந்தார்.

'ஆரிய மாயை'—என்னும் ஏடு தீட்டியதற்காக எனக்குச் சிறை.

'பொன் மொழிகள்'—தீட்டியதற்காகப் பெரியாருக்குச் சிறை.

திருச்சிக் கோர்ட்டாருக்கு இப்படியொரு காட்சியைக் காணவேண்டுமென்று ஆசைபோலும்! இரண்டும் தனித்தனி வழக்குகள்; தனித்தனியாகத்தான் விசாரணைகள்; எனினும் தீர்ப்பு மட்டும் ஒரே நாளில், ஒரே நேரத்தில் அளிக்கப் பட்டது. பிரிந்து நெடுந்தூரம் வந்துவிட்ட என்னை, அன்று அந்தக் கோர்ட்டில் பெரியாருக்குப் பக்கத்திலே நிற்கச் செய்து, வேடிக்கை பார்த்தது வழக்கு மன்றம். போலீஸ் அதிகாரிகள் அதைத் தொடர்ந்து ஒரே வானில் (Van) ஏற்றிச் சென்றனர். அதைத் தொடர்ந்து திருச்சி மத்திய சிறையிலே இருந்த அதிகாரி, பெரியார் கொண்டுவந்திருந்த

சாமான்களைக் கணக்குப் பார்த்துச் சரியாக இருக்கிறதா என்று கூறும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார். என் வாழ்க்கையில் நான் மறக்க முடியாத சம்பவம். எனக்கு உள்ளூர பயம். கேள்விக் கணையுடன் நிறுத்திக் கொள்ளாமல் அன்புக் கணையையும் ஏவினால் என்னால் எப்படித் தாங்கிக்கொள்ள முடியும் என்றெல்லாம் அச்சப்பட்டேன்.

பக்கத்துப் பக்கத்து அறை; பகலெல்லாம் திறந்துதான் இருக்கும்; பலர் வருவார்கள். இங்கு சிறிது நேரம் அங்கு சிறிது நேரம்; இன்னும் சிலர் கூர்ந்து கவனித்தபடி இருப்பார்கள், நாங்கள் இருவரும் பேசிக்கொள்கிறோமோ என்று. அவர் அறைக்கு உள்ளே இருக்கும்போது நான் வெளியே மரத்தடியில்! அவர் வெளியே வர முயற்சிக்கிறார் என்று தெரிந்ததும் நான் அறைக்கு உள்ளே சென்றுவிடுவேன்.

இப்படிப் பத்து நாட்கள்!

நாளைய தினம் எங்களை விடுவிக்கிறார்கள்—முன் தினம் நடுப்பகலுக்கு மேல் ஓர் உருசிகரமான சம்பவம் நடைபெற்றது. பெரியாருக்கு வேலைகள் செய்துவந்த 'கைதி' என் அறைக்குள் நுழைந்து, 'ஐயா தரச் சொன்னார்'—என்று சொல்லி, என்னிடம் ஆறு பிஸ்கட்டுகள் கொடுத்தான். கையில் வாங்கியதும் என் நினைவு பல ஆண்டுகள் அவருடன் இருந்தபோது கண்ட காட்சிகளின்மீது சென்றது.

மறுநாள் திடீரென்று விடுதலை கிடைத்தது. அந்த வேடிக்கையையும் கேள், தம்பி! எங்களை விடுதலை செய்யப் போகிறார்கள் என்ற செய்தி உள்ளே எங்களுக்குத் தெரிவதற்கு முன்பே வெளியே தெரிந்துவிட்டிருக்கிறது. எனவே எங்களை அழைத்துச் செல்ல நண்பர்கள் வெளியே ஏற்பாடுகள் செய்யத் தொடங்கிவிட்டிருந்தனர். நமது (தி. மு.) கழகத்தார் ஏற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டு நேரத்தை மறந்துவிட்டனர்; எனவே சிறைக்கதவு திறக்கப்பட்டு எங்களை வெளியே அனுப்பியதும் வாசற்படியருகே பெரியாரை அழைத்துச் செல்ல வந்தவர்கள் கொண்டுவந்த மோட்டார் தான் இருந்தது. அதற்கு என்னையும் அழைத்துச் சென்றனர். இது போதாதென்று போட்டோ எடுப்பவர் ஒருவர் ஓடி வந்தார். 'இருவரும் அப்படியே, நெருக்கமாக நில்லுங்கள்' என்று போட்டோ எடுத்துவிட்டார். அது வெளியிடப்பட

வில்லை...வேதாசலம் அவர்கள் வீடுவரையில் சென்று அவர் இறங்கிக்கொண்டார். நான் அதே மோட்டாரில் சாம்பு இல்லம் சென்றேன்.

கவனித்தாயா தம்பி, எனக்கு ஏற்பட்ட இந்த அநுபவத்தை. திராவிட முன்னேற்றக் கழகம் என்ற ஒரு தனி அமைப்புக்குப் பெரியதோர் ஆபத்து இந்தப் பத்து நாட்கள் என்று நண்பர் ஒருவர் கூறினார். உண்மைதான். நான் அவ்வளவு சுலபத்தில் மனதைக் கரைய விட்டுவிடுபவன் தான். ஆனால், பத்து நாட்கள் அவருடன் பேசி மீண்டும் பழைய நட்பைப் பெறுவதற்கான வாய்ப்பு என்னைத் தட்டித் தட்டி அழைத்தபோதும் நான் அந்த எண்ணத்திற்கு இடங் கொடுக்காதிருந்தேன். காரணம் கொடியவன் என்பதல்ல. நான் ஓர் அமைப்புக்குப் பொறுப்பாளியாக்கப்பட்டு விட்டதால், நான் மேற்கொள்ளும் எந்த நடவடிக்கையும் அந்த அமைப்பை உருக்குலைக்கக் கூடியதாக இருக்கக்கூடாது என்ற நேர்மையான எண்ணத்தினால்தான்.''

—பாசத்திற்கே இலக்கணமாய்த் திகழ்ந்து, அந்தப் பாசப் புனலாலேயே ஒரு மாபெரும் இயக்கத்தையே வளர்த்துவிட்ட அண்ணா, அதே பாச மலரைத் தனித்துச் சிறையில் இருந்தபொழுது தம்முடைய 'குரு'வே சொரிந்த நிலையிலும்கூட அதன் மனத்திலே மயங்கிச் சென்றுவிடாமை, தம்மை நம்பி அணி திரண்டுகொண்டிருக்கும் இலட்சக்கணக்கான இளைஞர்களை நட்டாற்றில் கைவிட்டு விடக்கூடாது என்ற அண்ணாவின் பொறுப்பு உணர்வையே காட்டுகிறது.

## உணவா ? உயிர்மூச்சா ?

பாசம் என்பது உணவைப்போல் தேவையானதுதான்; ஆனால் இலட்சியமோ உயிர் மூச்சுப்போல் இன்றியமையாதது மட்டும் அன்று; இணையில்லாததும் ஆகும். இரண்டுக்கும் மோதல் ஏற்படுமானால், பாசத்தைக்கூட விட்டுவிடலாம்; ஆனால், இலட்சியத்தை ஒருவன் விடமுடியுமா?

இதைத்தான் காட்டுகின்றன, 'ஆரிய மாயை' வழக்கு பற்றி அண்ணா வரைந்துள்ள பொன்னுரைகள்.

## அடலேறு அண்ணாவுக்குக் கடற்கரையில் வரவேற்பு!

சிறையிலிருந்து விடுதலையாகித் திருச்சி நகரில் உள்ள தம் பழம்பெரு அருமை நண்பர் திரு. சாம்புவின் இல்லஞ் சென்ற அண்ணா, பின்னர் புகைவண்டி மூலம் சென்னைக்குப் புறப்பட்டார். அங்கோ எழும்பூர் இரயில் நிலையத்தில், வாழ்த்தும், வரவேற்பும் அவருக்காகக் காத்திருந்தன மிகப் பெரும் அளவில்! சென்னை வீதிகளில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார் அண்ணா. அன்று மாலை கடலின் அலைகள் மிகுதியா, மனிதர்களின் தலை மிகுதியா என்று கணிக்க இயலாதவாறு, கடற்கரையில் நடைபெற்ற பாராட்டுப் பொதுக்கூட்டத்தில், இலட்சக்கணக்கான பொதுமக்கள் பங்கு கொண்டு உற்சாகமான வரவேற்பு அளித்தனர் அண்ணாவுக்கு!

## தடையை மீறிக் கிளர்ச்சிகள்

'ஆரிய மாயை'—வழக்குக்குப் பின்னர், எழுத்துரிமை—பேச்சுரிமையை நிலைநாட்டும் பொருட்டு அரசினரின் அடக்குமுறையை எதிர்த்து நடவடிக்கை எடுப்பது குறித்து தி. மு. கழகம் சிந்திக்கத் தொடங்கிற்று. 1950ஆம் ஆண்டு அக்டோபர் 23ஆம் நாள் சென்னையில் கூடிய தி. மு. க. தலைமைச் செயற்குழு சில முக்கியமான தீர்மானங்களை நிறைவேற்றிற்று.

அவற்றின்படி, 24—10—50ஆம் நாள் சென்னைக்கு வருகை புரிந்த, துறையில்லா மத்திய அமைச்சர் (Minister without portfolio) திரு. சி. இராசகோபாலாச்சாரியாருக்குத் தி. மு. க. தொண்டர்கள் கறுப்புக்கொடி காட்டினர். பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் போன்ற பெருமக்கள் அடி தடிக்கு ஆளாயினர்.

குன்றத்தூரில் கழகக் கூட்டத்துக்கு 144—தடையுத்தரவு விதிக்கப்பட்டதை மீறியதால் துப்பாக்கிச் சூடே நிகழ்ந்தது. மாங்காடு குட்டி என்பவருக்கு மார்பிலே குண்டுக் காயம். திரு. என். வி. நடராசன் கைதானார்.

நாரணமங்கலத்திலும், சென்னை மாநகரிலும் பேச்சுரிமையை நிலைநாட்ட தடையுத்தரவு மீறப்பட்டுக் கழகத் தோழர்கள் பலர் கைதாயினர்.

### இலட்சிய வரலாறு—வெற்றி

'ஆரிய மாயை'—நூலைப் போல, அண்ணாவின் சிந்தனை மணித்திரள்கள் தாங்கி இன எழுச்சியைத் தூண்டுகின்ற நூல் 'இலட்சிய வரலாறு'. அதற்குத் தடை விதித்து வழக்குத் தொடுத்தது அரசு. அதனை எதிர்த்து நீதிக்குப் போராடியதில் அண்ணாவுக்கு வெற்றி கிட்டிற்று.

### ஆசைத்தம்பி அடைந்த துயர்

'காந்தியார் சாந்தியடைய...?' என்னும் நூல் எழுதியதற்காக திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி சிறையில் தள்ளப் பட்டு மொட்டையும் அடிக்கப்பட்டார். ஆனால் உயர்நீதி மன்றம், கீழ்மன்றம் அளித்த தண்டனையைத் தள்ளுபடி செய்யும் அளவுக்கு; தி. மு. க. தலைமை நிலையம் எதிர்வழக் காடிற்று.

### புலவர் செல்வராசு வெற்றி

'கருஞ்சட்டை ஒழிய வேண்டுமா?'—என்னும் நூலை எழுதிய புலவர் பு. செல்வராசு அடக்குமுறைக்கு ஆளாக நேர்ந்தார். ஆனால், அரசு தொடுத்த வழக்கு நீதிமன் றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது.

### மத்திய அமைச்சர்களுக்குக் கறுப்புக்கொடி

முன்னர் குறிப்பிட்ட தீர்மானத்திற்கிணங்க, தமிழ கத்துக்கு வருகை புரிந்த மத்திய அமைச்சர்களான ஆர். ஆர். திவாகர், அரிகிருஷ்ண மகதாப், கே. எம். முன்ஷி, கோபால்சாமி அய்யங்கார், சகசீவன்ராம் முதலானவர் களுக்குக் கறுப்புக்கொடி காட்டப்பட்டது.

### பாரதிதாசன் நூலுக்குத் தடை

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் சிறப்பியல்பு கள் பற்றி முன்பே எடுத்தியம்பியுள்ளோம். இந்திய விடுதலை இயக்கக் கோட்பாடுகள் விரைந்து பரவுவதற்குப் பாரதி யாரின் பாடல்கள் எவ்வாறு பயன்பட்டனவோ அவ்வாறே தன்மான இயக்கத்தின் பகுத்தறிவுக் கருத்துக் கதிர்கள் தமிழகமெங்கும் ஒளிவீசுவதற்கு பாரதிதாசன் அவர்களின்

எழுச்சியூட்டும் கவிதைகள் இணையற்ற பணிபுரிந்திருக்கின்றன.

சீன நாட்டைப் பொதுவுடைமைத் தத்துவம் மணக்கும் செஞ்சீனமாக மாற்றியதில், மா-சே-துங்கின் புரட்சிப் பாடல்களுக்கும் பெரும்பங்கு உண்டு.

ஸ்பெயின் நாட்டில் முடியாட்சி வீழ்ந்து குடியாட்சி மலர்வதற்கு கவிஞர் இபனேஜ் என்பவரின் புரட்சிப் பாடல்கள் பெருந்துணை புரிந்துள்ளன!

அவ்வாறுதான் சாதிப் பிணக்கொழிந்த சமுதாய மறுமலர்ச்சிக்குப் பாரதிதாசன் கவிதைகள் அளித்த ஆக்கத்திற்கும் ஊக்கத்திற்கும் அளவே இல்லை. அண்ணாவின் இனிய சொற்பொழிவிலும் எழில் மிக்க உரைநடையிலும் பரிமளித்த உயிரோட்டமும் உணர்ச்சிப் பெருக்கும் அவருடைய கவிதைகளிலும் மோலோங்கி நின்றன.

அந்த நாட்களில் தன்மான இயக்கத்தைச் சார்ந்த எந்தப் பேச்சாளரும், தம் உரையின் முடிவிலோ முதலிலோ பாரதிதாசனின் கவிதையொன்றைப் பாடுவதைப் பெருமையாகவே கருதினர். அத்தகைய மரபினை உருவாக்கியவர்களில் முன்னோடிகளாக விளங்கியவர்கள், பேராசிரியர் க. அன்பழகன், நாவலர் இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் ஆவார்கள். அண்ணா அவர்களுக்குப் பாரதிதாசன் கவிதைகளிடம் ஏற்பட்டிருந்த ஆழ்ந்த ஈடுபாட்டையும், இதயக் கவர்ச்சியையும் பற்றிக் கூறவே தேவையில்லை. ஒரு முறை வானொலியில் பேசிய அவர்,

'இருட்டறையில் உள்ளதடா உலகம் சாதி
இருக்கிறது என்பானும் இருக்கின் றானே?
மருட்டுகின்ற மதத்தலைவர் வாழ்கின் றாரே
வாயடியும் கையடியும் மறைவ தெந்நாள்?
சுருட்டுகின்றார் தம்கையில் கிடைத்த வற்றைச்
சொத்தெல்லாம் தமக்கென்று சொல்வார் தம்மை
வெருட்டுவது பகுத்தறிவே இல்லை யாயின்
விடுதலையும் கெடுதலையும் ஒன்றே யாகும்!'

—என்று 'பாண்டியன் பரிசு'—காவியத்தில் வரும் ஒரு பாட்டைக் கூறித் தம் உரையை முடித்த அழகு, மிக அருமையாய் அமைந்திருந்தது.

இவ்வாறு பாடல்களில் மட்டுமே பாரதிதாசன் அவர்கள் புரட்சித் தீயைப் பொங்கியெழச் செய்யவில்லை; நாடக இலக்கியங்களிலும் அற்புத உணர்ச்சித் துடிப்பு ஓங்கியெழுமாறு எழுதிக் காட்டினார். அவருடைய 'இரணியன் அல்லது இணையற்ற வீரன்'—என்னும் நாடகம் அத்தகைய உணர்ச்சித் துடிப்பளிக்கும் நாடகங்களுள் ஒன்றாகும். பக்திமான்கள் பரப்பிய இதிகாச, புராணக் கதைகளில், இரணியன் ஒரு கொடியவனாகவே காட்டப்பட்டுள்ளான். ஆனால், 'இரணியன் திராவிட இனத்தைச் சார்ந்தவன்; எனவேதான் அவனது ஆற்றல் உயர்வையும் ஆட்சித் திறனையும் கண்டு பொறாமையுற்றவர்கள், அந்தத் தூயவனைத் தீயவன் என்று மக்கள் நம்புமாறு செய்துவிட்டார்கள். அந்தப் பொல்லாக் கருத்தை இல்லாமற் செய்யவேண்டும்' என்ற புதிய சிந்தனையுடன் மேற்குறிப்பிடப்பெற்ற நாடக நூலை ஆக்கியிருந்தார் பாரதிதாசன்.

அரசினரோ அந்நாடகம் 'வகுப்புக் கலவரத்தை' (Communal riots) வளர்க்கவல்லது என்று குற்றஞ் சாட்டினர். எழுத்துரிமையைப் பறிக்கும் அரசினரின் எதேச்சாதிகாரப் போக்கை வன்மையாக எதிர்ப்பது என்று தி. மு. கழகம் முடிவெடுத்தது.

1949—செப்டம்பர் திங்கள் பதினேழாம் நாளில் திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க நாள் உரையிலேயே இந் நாடகத்துக்கு விதிக்கப்பட்ட தடையை உடைக்க வேண்டும் என்று தம் தோழர்களுக்கு அறிவுறுத்தினார் அண்ணா:

"...நமது இயக்க நாடகங்கள் தடை செய்யப்படுகின்றன சர்க்காரால். தகாத செயல்தான் இதுவும். தடை செய்யப்பட்ட நாடகங்களில் முதலாவதானது, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் இயற்றிய 'இரணியன் அல்லது இணையற்ற வீரன்' என்பது. திராவிட முன்னேற்றக் கழக முன்னணியாளரைக் கேட்டுக் கொள்கிறேன்; மன்றாடிக் கேட்கிறேன்; அவர்களின் முக்கிய வேலை, முதல் வேலை இந்த நாடகத்தை ஆங்காங்குப் பொதுமக்கள்முன் நடத்திக் காட்டும் திட்டம் வகுப்பதே..."

—அண்ணாவின் இவ் வாக்கை நிறைவேற்றுவதில் கண்ணுங்கருத்துமாகவே இருந்தனர் கழகத் தோழர்கள். 1949-இல் அவர் விடுத்த வேண்டுகோளை 1951-லும் அவர்கள் மறக்கவில்லை. அந் நாடகத்தைப் பொதுமக்கள் யாவரும் கண்டுகளிக்கும்வண்ணம், திறந்தவெளி அரங்கில் நடத்திக் காட்டவும் பலர் முன்வந்தனர். வட ஆற்காடு மாவட்டத்தில் மூன்று இடங்களில் இவ்வாறு தடையை மீறி நாடகம் நடத்தப்பட்டது. ஆனால், போலீசாரோ நாடகம் நடந்துகொண்டிருக்கும்போதே குறுக்கே மறித்து நடிகர்களையும், நடத்தியவர்களையும் சிறைப்பிடித்தனர். நடிகர்கள் தத்தம் பாத்திரங்களுக்கேற்பப் புனைந்திருந்த ஒப்பனையையும், உடைகளையும்கூடக் களைய விடாமல் காவல் நிலையத்துக்கு (Police Station) இட்டுச் சென்றனர். நாடகத்தில் நடித்த அனைவர்மீதும் வழக்குத் தொடரப்பட்டு, தண்டிக்கப்பட்டனர்.

இவ்வாறு எழுத்துரிமை காக்கும் கிளர்ச்சியையும் தீவிரமாக நடத்திற்று தி. மு. கழகம்.

# 21. வளர்ச்சிப் படிகள்

### 'அறிவகம்'—மலர்ந்தது

கழக வளர்ச்சிக்குரிய ஆக்கப் பணிகள் தொடர்ந்து நடைபெறலாயின. அவற்றுள், கழகத் தலைமை நிலையம் இயங்குவதற்கென்று புதிய கட்டிடம் ஒன்றைத் தொடக்கத்தில் வாங்கியது குறிப்பிடத்தக்கதாகும். சென்னை, இராயபுரம், சூரியநாராயண செட்டித் தெருவில், அண்ணாவின் முழு முயற்சியால் ரூபாய் முப்பதாயிரத்துக்கு அக்கட்டிடம் வாங்கப்பெற்றது.

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் வாழ்கின்ற மாளிகை 'வெள்ளை மாளிகை' (White House) என்று வழங்கப்படுவது போலவே, தி. மு. கழகத் தலைமை நிலையம் இயங்கும் இக் கட்டிடம், 'அறிவகம்' என்று பெயர் சூட்டப்பெற்றது. 2—12—1951-இல் அண்ணாவின் தலைமையில் திரு. வி. எம். ஜான் இக் கட்டிடத்தைத் திறந்து வைத்தார்.

### முதல் மாநில மாநாடு

தி. மு. கழகம் துவங்கி ஈராண்டுகள் கழித்து, பல்வேறு கிளர்ச்சிகளுக்கும், ஆக்கப் பணிகளுக்கும் மணிமுடி சூட்டுவதுபோல், முதல் மாநில மாநாடு சென்னையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. 1951-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள், 13, 14, 15, 16—நாட்களில், சென்னை, எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில் நிகழ்ந்த அம் மாநாட்டுக்குக் கழகச் சட்ட விதிகளின்படி, பொதுச்செயலாளர் என்ற முறையில் அண்ணா தலைமை தாங்கினார்.

பல இன்றியமையாத் தீர்மானங்கள் இம் மாநாட்டில் நிறைவேற்றப்பெற்றன.

### கண்ணீர்த் துளிகளே!

மாநாட்டின் தலைவரான அண்ணா தம்முடைய அழகான சொற்பொழிவை,

"கண்ணீர்த் துளிகளே! என் கண்ணின் மணிகளே! கழகக் காவலர்களே!..." என்று தொடங்கிய பெற்றி, எதிரே குழுமியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் வெள்ளத்தை உற்சாக வெள்ளத்தில் ஆழ்த்தியது.

அமெரிக்க நாட்டில், சிகாகோ நகரில் அகில உலக அனைத்துச் சமய மாநாட்டில் தமக்கு முன் உரையாற்றியவர்கள் எல்லாரும், 'சீமாட்டிகளே! சீமான்களே! (Ladies and Gentlemen) என்று பொதுப்பட விளித்துத் தம் சொற்பொழிவைத் தொடங்கிச் செல்ல, ஆனால் இந்தியாவிலிருந்து சென்றிருந்த சமயச் சான்றோர் விவேகாநந்தரோ, 'சகோதரர்களே! சகோதரிகளே!' (Brothers and Sisters) என்று பாசந் துளும்ப தம் உரையைத் தொடங்கியதன் மூலம் ஒரு பெரும் ஆரவாரத்தை அம் மாநாட்டிலே உண்டாக்கி விட்டார் அல்லவா? அதைவிடப் பெருத்த ஆரவாரத்தைக் 'கண்ணீர்த் துளிகளே!'—என்று தம் உரையைத் தொடங்கியதன் மூலம் அண்ணா எழுப்பிவிட்டார் அம் மாநில மாநாட்டில்!

'கண்ணீர்த் துளிகளே!' என்னும் இரு சொற்களில் அப்படி என்ன உற்சாக ஆரவாரம் உண்டுபண்ணும் மாய சக்தி உள்ளது என்று சிலர் எண்ணக்கூடும்.

ஆனால், மிகுந்த பொருள் உணர்வோடுதான் அந்த இரு சொற்களையும் பயன்படுத்தினர் அண்ணா. அவருடைய முற்கால வாழ்க்கை வரலாற்றை மட்டுமின்றி எழுத்தோவியங்களையும் ஆழ்ந்து பார்த்தவர்களுக்கும், பயின்றவர்களுக்குமே அவற்றின் உண்மை தெளிவாகப் புலனாகும்.

அண்ணா இரக்கப் பண்பும், பாச உணர்வும் மிகுதியாகக் கொண்ட மனிதத்தன்மை வாய்ந்தவர். பெரியாரைத் தம் தலைவராக ஏற்றுக்கொண்டபின் அவரைத் தந்தை போலவும் கருதி அவர்மீது பாச மழையைப் பொழிந்து வந்தார் அவர். அதனால்தான் பெரியாரின் கட்டளைகளும், கட்டுப்பாடுகளும், செயல்களும், சிந்தனைப் போக்கும் தமக்கு உடன்படாத போதெல்லாம், மனத்திற்குள் தவியாய் தவித்து, உடனே மறுப்புக் கூற இயலா நிலையில் கண்ணீர்த் துளிகளைச் சிந்துவது அண்ணாவின் வழக்கம். தாம் வடிக்கும் கண்ணீர்த் துளி

களைப்பற்றிப் பின்னர் தம்முடைய கட்டுரை—கதைகளிலும் வரைந்து காட்டுவதுண்டு.

பெரியாரால் தாம் புறக்கணிக்கப்பட்ட நிலையில் 'ராஜ பார்ட்—ரங்கதுரை' என்னும் உருவகக் கதையொன்றை தமது 'திராவிட நாடு' இதழில் தீட்டினுர் அல்லவா? அதன் இறுதியிலேயே 'கண்ணீர்த் துளிகள்' என்னும் சொற்களைப் பெய்திருக்கிறுர் அண்ணு.

அதன்பின் பெரியாரின் பொருந்தாத் திருமணம் பற்றி வெளியிட்ட அறிக்கைகளில் எல்லாம் இந்தச் சொற்கள் அடிக்கடி வந்திருப்பதைக் காணலாம். பெரியாரை விட்டுப் பிரிவதற்கு வெள்ளோட்ட முயற்சியாக 'மாலை மணி'—நாளேட்டைத் துவக்கிய பிறகு அதிலே பெரியாரின் போக்கைப் பிடிக்காதவர்களின் பெயர்களை வெளியிட்ட காலை, அந்தப் பட்டியலுக்குத் தலையாகக் 'கண்டனக் கணைகள்' என்று இல்லாமல் படிப்பவர்களின் உள்ளத்தைத் தொடுகின்றவண்ணம், 'கண்ணீர்த் துளிகள்' என்றே தலைப்புக் கொடுத்தார் அண்ணு. வெடிக்கும் நெஞ்சக் குமுறலை வெளிப்படுத்தும் இச்சொற்கள், பெரியாருக்கோ 'நாராசமாக'ப்பட்டன. எனவே, அவற்றில் புதைந்திருந்த துயரத்தின் ஆழத்தைத் துளியும் பொருட்படுத்தாமல், தி. மு. கழகத்தைக் குறிப்பதற்கேற்ற கேலிச் சொற்களாகவே பெரியார் அவற்றை ஆக்கிவிட்டார். தி. மு. கழகத்தைப் பற்றிப் பேசவோ, எழுதவோ நேரும்போதெல்லாம் 'கண்ணீர்த் துளிகள்' என்னும் வார்த்தைகளையே ஏளனமாகப் பயன்படுத்தினுர் அவர்.

பெரியார் இவ்வாறு ஏளனம் செய்வதைக் கண்டு எரிச்சல் அடையத் தேவையில்லையென்றும், அந்த இகழ்ச்சியையே புகழ்ச்சியாக எடுத்துக்கொண்டு நம்முடைய கடமையைப் புரியவேண்டும் என்றும், மறைமுகமாகத் தம் தோழர்களுக்குச் சுட்டிக்காட்டவே, தம்முடைய தலைமை உரையைக் 'கண்ணீர்த் துளிகளே!' என்று மாநில மாநாட்டில் நிகழ்த்தத் தொடங்கினுர் அண்ணு. அவருடைய உள் எண்ணத்தைப் புரிந்து கொண்டதால்தான், அவர் அச்சொற்களைக் கூறியதும் அத்துணை உற்சாகத்துடன் ஆரவாரம் புரிந்தனர் மாநாட்டுக்கு வந்திருந்த மக்கள்.

**'நம் நாடு' - ஏடு**

ஒரு படைவீரனுக்கு எப்படித் துப்பாக்கி மிகவும் தேவையோ அவ்வாறே, ஒரு கட்சிக்கு என்று ஏடு (பத்திரிகை) இருத்தல் மிகவும் இன்றியமையாதது.

பொதுவுடைமைக் கட்சியின் அதிகாரம் பெற்ற ஏடாகச் சோவியத் நாட்டில் 'பிராவ்தா' (Pravda) வெளிவருகிறது; சீன நாட்டில் 'செங்கொடி' வெளிவருகிறது.

அவ்வாறுதான், கட்சியின் அதிகாரம் பெற்ற ஏடாக ஒன்றை வெளியிடவேண்டும் என்று கழகத்தினர் நெடுநாட்களாகவே எண்ணி வந்தனர். தி. மு. கழகக் கொள்கைகளைத் தாங்கி 'மாலை மணி' ஏடு, 1949 முதற்கொண்டே பணியாற்றி வந்தாலும் அது திரு. டி. எம். பார்த்தசாரதி அவர்களுக்கு மட்டுமே உரிமை உள்ளதாகும். பொருளாதார இடிபாடுகளால், அதையும் அவரால் சரிவர நெடுங் காலம் வெளிக்கொணர இயலவில்லை. எனவே, கட்சிக்கென்று தனி ஏடு துவக்குவதற்கு தீவிர நடவடிக்கைகளை அண்ணா மேற்கொள்ளலானார். முதலில் காஞ்சியிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த தம்முடைய 'திராவிட நாடு' கிழமை இதழையே நாளிதழாக மாற்றிவிடலாமா என்று எண்ணினார். ஆனால் போதிய பொருள் வசதி பெருகாததால், அதுபற்றிய முயற்சியை அண்ணா கைவிட்டார்.

பின்னர், 1953-ஆம் ஆண்டு ஜூன் 15-ஆம் நாள் முதல், 'நம் நாடு' நாளேடு, கட்சியின் அதிகாரம் பெற்ற இதழாக (Official Organ) வெளிவரத் தொடங்கிற்று. பொதுச் செயலாளரான அண்ணா, அதன் ஆசிரியராகவும் பொறுப் பேற்றார்.

**மும்முனைப் போராட்டம்**

1953 ஜூலை திங்களில் தி. மு. கழகம் நடத்திய மும்முனைப் போராட்டம் அதன் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க திருப்புமுனை ஆகும். அப்போது அரசாங்கம் அள்ளி வீசிய அடக்குமுறைக் கணைகளை பொதுமக்களுக்குக் கழகத்தின்பால் இரக்கமும், பிடிப்பும் ஏற்ப வழிவகுத்துக் கொடுத்தன.

திரு. சி. இராசகோபாலாச்சாரியார் அவர்கள் தமிழக முதலமைச்சராக இருந்த காலம் அது. அவர் புதிதாகக்

குலத்தொழில் கல்வி ஒன்றைக் கொண்டுவந்து நிறைவேற்ற முனைந்தார். அத்திட்டப்படி, 6 முதல் 11 வயது வரையுள்ள குழந்தைகள் பாதிநாள் மட்டும் பள்ளியில் படித்துவிட்டு மறு பாதிநாளில் வெளியே தத்தம் குலத்துக்குரிய தொழிலைக் கற்கவேண்டும். இதனால், திராவிட இன மக்களின் கல்வி வளர்ச்சி சீரழிக்கப்பட்டு அவர்கள் வாழ்வே தேய்ந்துவிடும் என்று தி. மு. கழகம் அஞ்சியது. எனவே,

"(1953) ஜூலை 14-ஆம் தேதி, புதிய கல்வித் திட்டத்தை எதிர்த்து சென்னை முதலமைச்சர், இராசகோபாலாச்சாரியார் இல்லத்தில் மறியல் செய்வது என்றும், இந்த மறியலைத் தலைமை தாங்கி நடத்தி வைக்க தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களை நியமிப்பது..." என்றும் தி. மு. க. தலைமைச் செயற்குழு தீர்மானித்தது.

சிமென்ட் தொழில் என்றாலே 'டால்மியா' என்னும் பெயர்தான் உடனே நம் நினைவுக்கு வரும். வடநாட்டு முதலாளியான அந்த டால்மியா மோசடிக் குற்றம் சாட்டப்பெற்று வழக்குகளில் சிக்கித் தத்தளித்து வருவதை இந்திய நாடே அறியும். அந்த டால்மியாவின் பெயர் திருச்சி மாவட்டத்திலுள்ள 'கல்லக்குடி' என்னும் ஊருக்கு ஏனோ ஏற்பட்டுப் பெருமை வாய்ந்த அந்தப் பழம்பெயர் மறைந்தே போய்விட்டது. தென்னாட்டுத் தலைவர்கள் எவருடைய பெயரையும் வடநாட்டார் தம் ஊர்களுக்கு விரும்பிச் சூட்டும் பெருந்தன்மை பெற்றிராதபோது தென்னாட்டில் மட்டும் பழம்பெருமையை இழக்கும் அளவுக்கு ஒரு வடநாட்டார்—அதுவும் (மோசடிக் குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் இலக்காகக் கூடிய) ஒரு முதலாளியின் பெயரை ஓர் ஊரின்மீது ஏன் சுமத்தவேண்டும் என்று தன்மான உணர்வு மிக்க தமிழர்கள் எண்ணத் தலைப்பட்டனர். அவர்கள் உணர்வுக்கு மதிப்பளித்து,

"திராவிடத்தின் அவமானச் சின்னமாக விளங்கும் 'டால்மியாபுரம்' என்னும் இப்பெயரை மாற்றி, அதற்குரிய 'கல்லக்குடி' என்னும் பெயரை (புகைவண்டி நிலையப் பெயர்ப்பலகை முதலானவற்றில்) இடும்வரை அங்கு அறப்போர் நடத்துவது" என்று தி. மு. க. செயற்குழு முடி

வெடுத்தது. அவ்வறப்போரின் முதல் தலைவராகக் கலைஞர் மு. கருணாநிதி நியமிக்கப் பெற்றார்.

திரு. பி. ஜி. கெர் அவர்களின் தலைமையில் அமைந்த மாநிலங்கள்—மனு அனுப்புக் குழு (States Reorganisation Commission) வின் பரிந்துரைப்படி இந்தியாவில் உள்ள மாநிலங்கள் அனைத்தும் மொழிவழியாக மாற்றி அமைக்கப் பெற்றன. அப்போது, சித்தூர் மாவட்டத்தில் உள்ள மக்கள் பெரும்பாலோனோர் தமிழராக இருந்தும், அம் மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைக்கப்பெறவில்லை. அதை மீட்பதற்காகத் தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞான கிராமணியார் தொடங்கிய போராட்டத்தில் தம்முடைய கட்சியும் கலந்துகொள்வதை அண்ணா விரும்பினார். அறப்போரின் ஒரு கூறாக, 144 தடை ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்த திருத்தணியில் புகைவண்டியை நிறுத்தும் கிளர்ச்சி தி. மு. க. தோழர் ஏ. எல். சி. கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்றது. இவ்வாறு கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களை இந்தியத் தலைமையமைச்சராகவிருந்த பண்டித சவகர்லால் நேரு, கண்டித்துப் பேசியதுடன், அவர்களது செய்கை 'முட்டாள்தனமானது' (Nonsense) என்று இழிவாகவும் வசைபாடினார். இதனால் கொதிப்படைந்த மக்களின் மனக்குமுறலை வெளிப்படுத்த நாட்டின் ஒரு பகுதி குடிமக்களை அவ்வாறு 'முட்டாள்' என்றெல்லாம் இழித்துப் பழிப்பது, தலைமையமைச்சர் நிலையில் உள்ள ஒருவரின் தகுதிக்கு உகந்ததன்று என்று எடுத்துக்காட்ட தி. மு. கழகம் முடிவு செய்தது. அதற்காக,

"இந்தியத் துணைக்கண்டத்தின் தலைமையமைச்சர் பண்டித நேரு, தமிழ் நாட்டு மக்கள் ஈடுபடும் போராட்டங்களையெல்லாம் 'நான்சென்ஸ்', 'முட்டாள்தனம்' என்று கூறியதைக் கண்டிக்கும் வகையில் ஜூலை 15இல் தமிழகம் எங்கும் இரெயில் நிறுத்தம் செய்து, கண்டனத்தைத் தெரிவிப்பது."

—என்று தி. மு. கழகச் செயற்குழு முடிவெடுத்தது. இவ்வாறாக,

(1) குலக் கல்வித் திட்டத்தை எதிர்த்து முதலமைச்சர் இராசகோபாலாச்சாரியார் வீட்டின்முன் மறியல்.

(2) இரெயில் நிறுத்தக் கிளர்ச்சி.

(3) 'டால்மியாபுரம்' என்பதைக் 'கல்லக்குடி'யாக மாற்றுவதற்கான அறப்போர்.

—என்று மூன்று முனைகளிலும் கழகத் தோழர்களை ஈடு படுத்தும் தீர்மானங்களை 1953 ஜூலை 13ஆம் நாள் தி. மு. கழகத் தலைமைச் செயற்குழு சென்னையில் நிறைவேற்றிய அன்று இரவே, அறிஞர் அண்ணா, இரா. நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத், கே. ஏ. மதியழகன், என். வி. நடராசன் ஆகிய ஐவரும் கைது செய்யப்பட்டனர்.

ஆயினும் குறிப்பிட்ட நாட்களில், முன்னர் முடிவெடுக் கப்பட்டிருந்தவாறே மூன்று முனைகளிலும் போராட்டங்கள் வெற்றிகரமாக நடந்தன. கலைஞர் மு. கருணாநிதி முதலான கழக முன்னணி வீரர்கள் கைது செய்யப்பட்டனர். அர சினரின் அடக்குமுறை ஈவு—இரக்கமற்ற முறையில் தலை விரித்து ஆடிற்று. ஆங்காங்கே துப்பாக்கிச் சூடுகளும் நிகழ்ந்தன. அதனால், கல்லக்குடியில் நால்வரும் அநியாய மாக உயிர் இழந்தார்கள். பலர் படுகாயமுற்று அவதி யுற்றார்கள்.

ஒரே நாளில் ஐயாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் சிறை பிடிக்கப்பட்டது, எந்த நாட்டிலும் எந்தக் காலத்திலும் நடந்திராத கொடிய நிகழ்ச்சியென்று பொதுமக்களால் பேசிக்கொள்ளப்பட்டது.

(1) இந்த மும்முனைப் போராட்டத்தில் திரு. இராச கோபாலாச்சாரியார் கொண்டுவந்த 'குலக் கல்வித் திட்டம்' ஒழிக்கப்பட்டது. (2) தி. மு. கழகத்திற்குள்ள உண்மை யான வலிமையை மற்றவர்கள் உணர்ந்து வியப்புக் கொள் வதற்குரிய வாய்ப்பு ஏற்பட்டது. (3) 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு' என்னும் தாரக மந்திரத்தைக் கட்சிக்கு மட்டு மின்றி உலகம் முழுமைக்கும் வழங்கிய அண்ணாவின் செயல் திறனும் நன்கு வெளிப்பட்டது.

# 22. தேர்தல் சிந்தனை

## மக்களாட்சி மணக்கும் இடம்

"அமைதியுடன் இணைந்து வாழவேண்டிய மக்கள் அதே அமைதியுடன் ஒன்றாய்க் கூடி விவாதிக்கக் கூடியவர்களாகவும் இருக்கவேண்டும்"

—என்றார் அறிஞர் ஹெரால்டு லாஸ்கி.

இவ்வாறு மக்களாட்சி நெறிமுறை மாண்புற்று ஒளிரும் வண்ணம் மனிதர்கள் அமைதியாகக் கலந்து வாதிக்கக்கூடிய இடம், சட்டமன்ற—நாடாளுமன்ற அமைப்புக் கூடங்களே அல்லவா?

ஓர் இயக்கம் எத்துணைதான் இணையற்ற வளர்ச்சி பெற்று இருப்பினும் இலட்சக்கணக்கான உறுப்பினர்களைக் கொண்டிருப்பினும், எண்ணற்ற நற்பணிகளை ஆற்றியிருப்பினும் அதற்குச் சரியான மரியாதையும், முறையான மதிப்பீடும், உண்டாவது அது சட்டமன்றங்களில் நிலையான இடத்தைப் பிடித்த பின்னர்தான்.

நாளேடுகளும் கிழமை ஏடுகளும்கூட, சட்டமன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் அங்கம் பெற்றவர்களுக்கு அளிக்கின்ற விளம்பரத்தையோ தனிச் சிறப்பையோ தனிப்பட்ட முறையில் வெளியே தொண்டு செய்யும் தலைவர்களுக்கு, அவர் எத்துணைப் பெரியவராக இருப்பினும் அவ்வளவாகத் தருவதில்லை.

இந் நடைமுறை நிலைமைகளையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்த அண்ணா, வெறும் சமூக மறுமலர்ச்சி இயக்கமாக மட்டுமே இயங்கிக்கொண்டிருந்த தம் கட்சியை முழு அரசியல் கட்சியாக எவ்வாறு மாற்றுவது என்பதுபற்றித் தீவிரமாகச் சிந்தித்தவண்ணம் இருந்தார்.

## தேர்தல் வாயில்

மக்களாட்சி (சனநாயகம்) என்னும் மாளிகைக்கு வழிவிடும் முதல்வாயில் தேர்தலே. அந்த வாயிலில் நுழைய

விடும் இசைவுச் சீட்டுப் பொதுமக்களின் வாக்குச் சீட்டே. மக்களாட்சி அரசு முறையை மேற்கொண்ட ஒரு நாட்டில் தேர்தலில் ஈடுபடாத எந்தக் கட்சியும் முழு அரசியல் கட்சி என்னும் தகுதிக்கு உரியதாகாது.

1949-இல் தி. மு. கழகம் தொடங்கிய பிறகு அது காண நேர்ந்த முதல் பொதுத் தேர்தல் 1952-ஆம் ஆண்டில் நடைபெற்றது. நாடெங்கும் நாள்தோறும் கழகக் கிளைகள் கிளைத்தவண்ணம் இருந்தாலும், தேர்தலில் ஈடுபட்டு வெற்றிவாகை சூடும் அளவுக்குத் தம் கட்சிக்குப் போதிய வலிமை ஏற்படவில்லை என்றே அண்ணா எண்ணினார். அதனால்தான் '52-தேர்தலில் தம் கட்சியை அவர் ஈடுபடுத்தவில்லை. அதே சமயம், காங்கிரசல்லாத எதிர்க்கட்சிகளுக்குக் கழகத்தவர் ஆதரவு அளிப்பதை அவர் வரவேற்றார். அவ்வாறே கழகத்தின் ஆதரவு பெற்ற எதிர்க் கட்சியினர் கணிசமான அளவில் வெற்றி பெற்றனர்.

அந்த வெற்றியைக் கண்ணுற்ற பின்னரே, தேர்தலில் பங்குகொள்ள வேண்டாம் என்று முன்னர் கொண்டிருந்த கொள்கையை மறு ஆய்வு செய்யவேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டார் அண்ணா.

'இனி நெடுங்காலத்துக்குத் தி. மு. கழகத்தை, வெறும் சமூக மறுமலர்ச்சி இயக்கமாக மட்டும் கட்டிப் போட்டு வைப்பது காலத்துக்கேற்ற செயல் அன்று; அதுவும் தன் செல்வாக்கைத் திறம்பட வெளிப்படுத்தித் தேர்தல் வேள்விகளில் குதித்து வெளிவரும் முழு அரசியல் கட்சியாகத் தன்னை ஆக்கிக் கொள்ளவே வேண்டும்.'

—என்ற எண்ணம், கழகத் தோழர்களிடத்தேயும் உருவாகிக்கொண்டிருந்த காலம் அது.

இந்நிலையில்தான், பற்பல கிளர்ச்சிகள் என்னும் வளர்ச்சிப் படிகளில் அடியெடுத்து வைத்து மேலேறிக் கொண்டிருந்த தி. மு. கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு திருச்சி மாநகரில் நிகழ்வதற்குரிய ஏற்பாடுகள் செய்யப் பெற்றன. மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராகப் பணியாற்ற செயல்வீரர் அன்பில் தருமலிங்கம் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

## திருச்சி மாநில மாநாடு

அம் மாநாட்டுக்கு வருமாறு தம் தம்பிமார்களை எவ்வளவு அற்புதமான எழில் சொட்டும் எழுதுகோலால் அண்ணா தட்டி எழுப்புகிறார் பாருங்கள்!

"...திருச்சியில் நடைபெறும் மாநில மாநாடு திக்கற்றோருக்கு ஒரு திட்டம் காட்டும் திருச்சபை—வாழ்விழந்தோருக்கு வழிகாட்ட எடுத்துக் கொள்ளப்படும் ஒரு நன் முயற்சி—வழி தவறியோருக்கு நன்னெறி பற்றிய விளக்கம் அளித்திடும் பெருமுயற்சி! 'ஒளியிழந்த கண்ணினரே நமது முன்னோர் வாழ்ந்த வகை கூறிடக் கேண்மின்; பிறகு உமது கண்களிலே ஓர் புத்தொளி பூத்திடும்!'—என்று எடுத்தியம்பும் ஓர் மருத்துவக் கூடம்—இம் மாநாடு!

"...திருச்சிக்குத் தீரர்கள் அழைக்கப்படுகிறார்கள்—திருவாளர்கள் அல்ல! தோழர்கள் கூடுகிறார்கள். சீமான்கள் அல்ல! வைரம் அல்ல, காட்டச் சொல்வது, எஃகு உள்ளத்தை! மலர்த் தோட்டம் அல்ல மாநாடு, மறவர் பாசறை! வெற்றிலையைத் தின்றுவிட்டு வேடிக்கைத் தெந்தினம் பாடிட அல்ல; வேதனைப் படுகுழியில் வீழ்ந்துள்ள தாயகத்தை மீட்கவும், அதற்காக வெந்தழல் மிக்கதோர் அகழியைக் கடந்தாக வேண்டும் என்ற நிலையிருப்பினும் துணிந்து இறங்கி, கருகி மாண்டவர் போக மீதமுள்ளோர் முன்னேறிச் சென்று தாயின் தளைகளை உடைத்தெறிந்து அன்னையை (தமிழை) அரியாசனம் ஏறச் செய்து 'நான் உனது மகனலனோ! நீ எனக்கு வாய்த்த தாய் அலவோ?' என்று தழதழத்த குரலிற் கேட்டு அன்னையின் அன்புக் கண்ணீரைக் காணிக்கையாகப் பெற்றுப் பெருமைப்பட ஓர் பெரும்படை கூடுகிறது திருச்சியிலே, மே—17, 18, 19, 20—நாட்களில். வீரம் அறிந்தவனே! வெற்றி பெற்றுத் தரத்தக்க திறம் மிகுந்தவனே! களம் காணக் கலங்காத அடலேறே! என் அருமைத் தம்பி! வா! காண்போர் மனம் மகிழவும், காணாதார் மனம் ஏங்கவும் ஏறு நடையுடன் வா!......

"...வெட்ட வெளியில் வேகவைக்கும் வெய்யிலைப் பொருட்படுத்தாது கொட்டகை அமைக்கவும் கோலம்

கிடைத்திடச் செய்யவும், திருச்சி தோழர்கள் முயற்சி எடுத்துக்கொண்டுள்ளனர்...

"...தம்பி! நாம் நமது குடும்பத்தின் முழு வலிவும் பூரணப் பொலிவும் திருச்சி மாநில மாநாட்டில் விளங்கிடும் வகையில் கூடிட வேண்டாமா?

"...பெற்ற தழும்புகளைக் கண்டு பெருமிதம் அடைந்திட மட்டுமல்ல, இழித்தும் பழித்தும் பேசிடும் இயல்பினரை இனி நாம் பொருட்படுத்தப் போவதில்லை என்பது பற்றிப் பேசிடமட்டுமல்ல, எதிர்ப்போர் ஏளனம் செய்வோர் ஆகியோரின் திட்டத்தைத் தகர்த்தெறிய வழிவகை காண மட்டுமல்ல, நமது 'வரலாறு' பற்றிய ஆய்வுரையை நாட்டினர் அறியச் செய்ய மட்டுமல்ல.

"சீரிய நம் கொள்கை வெற்றி பெறத்தக்க செயல் திட்டம் காணக் கூடுகிறோம்!......

"...உன் எழுச்சி, நாடெங்கும் எதிரொலிக்கட்டும்.

உன் முழக்கம் மாநிலமெங்கும் கேட்கட்டும்.

உன் பரணி நாம் முன்னம் தரணி ஆண்டோர் என்பதை அனைவருக்கும் அறிவிக்கட்டும்.

குன்றுகளிலும் சிற்றூர்களிலும், வயலோரங்களிலும், ஆலைகளிலும், பள்ளிகளிலும், பணி மனைகளிலும், பட்டினங்களிலும், அங்காடிகளிலும், பண்புள்ளோர் காணப்படும் எல்லா இடங்களிலும் இன்றிலிருந்து தம்பி, எடுத்துக் கூறு! திருச்சி தீரரை அழைக்கிறது, மே—17, 18, 19, 20—நாட்களில் என்பதை.

தேனென இனிக்கும் சேதி என்பர் திராவிடர்; பிறர்க்குத் தேள்கடிபோல் தோன்றும் இச் சேதி!

புதியதோர் அரசு காணப் புறப்படுவோம்!

புல்லர்தம் புரட்டாட்சி ஒழித்திடப் போரிடுவோம்!

திரு இடம் காண்பதற்கே திரண்டிடுவோம். தீரரெலாம் திருச்சி மாநகரில்தானே!"

—அண்ணாவின் இந்த அழைப்பு தம்பிகளின் உணர்ச்சிகளை மட்டுமா தட்டி யெழுப்புகிறது?

தாகூரின் வசன கவிதை போல தமிழின் அழகை யெல்லாம் அள்ளிச் சுமந்து வரும் போர்ப் பரணியாகவும் இவ்வழைப்பு இனிக்கவில்லையா?

அதுமட்டுமா? பின்னால் நிகழப்போகும் ஒரு மாபெரும் நிகழ்ச்சிக்கான திட்டத்திற்குரிய வித்தும் இதிலே நீறுபூத்த நெருப்பாய் மறைந்து கிடக்கிறது.

அதைத்தான் நாம் தடித்த எழுத்துக்களில் மேலே குறிப்பாக உணர்த்தியுள்ளோம்.

குறிப்பிட்டவாறே, 1956-ஆம் ஆண்டு மே திங்கள் 17, 18, 19, 20—நான்கு நாட்களிலும் தி. மு. கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு திருச்சியில்,—கலைஞர்களின் கைவண்ணத்தையெல்லாம் சிறப்புறத் தாங்கி ஒரு தனி எழிலுராகவே விழிகளுக்கு விருந்தளித்த மாபெரும் பந்தலில்—கூடிற்று.

முதுபெரும் முன்னணி மறவர் திரு. சி. பி. சோமசுந்தரம் மாநாட்டைத் திறந்து வைத்தார்.

4—7—55-இல், சென்னையில் கூடிய தி. மு. கழகத்தின் புதிய பொதுக்குழு தேர்ந்தெடுத்த புதிய பொதுச் செயலாளர் ஆன நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மாநாட்டுக்குத் தலைமை தாங்கினர்.

அவரைத் தலைமை தாங்குமாறு வழிமொழிந்து அண்ணா ஆற்றிய உரை இருக்கிறதே மிகமிக அற்புதமானது.

''தம்பீ! வா! தலைமை தாங்க வா; உன் ஆணைக்கு நாங்கள் எல்லோரும் அடங்கி நடப்போம்; தலைமை ஏற்று நடத்தவா !''

அவ்வளவுதான்; இதற்குமேல் ஒரு சொல்லும் அண்ணாவின் இதழ்க்கடையினின்றும் உதிரவில்லை.

இப்படி அவர் சுருக்கமாகக் குறுகத் தறித்த குறள் போலத் தம் உரையை முடிப்பார் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை; அதே சமயம் ஒரு மாபெரும் இயக்கத்தை ஒரு தலைவர் எங்ஙனம் காட்டிக் காக்க வேண்டும் என்னும் பொறுப்பையும், அவருக்குத் தொண்டர்கள் எவ்வாறு கட்டுப்பட்டு நடக்கவேண்டும் என்னும் பொறுப்பையும் அண்ணா சுட்டிக்காட்டிய நயத்துக்கோ எல்லையே இல்லை!

எனவே, அந்த மாநாட்டுப் பந்தலே அதிர்ந்து போகுமாறு அங்குக் குழுமியிருந்த இலட்சக்கணக்கான மக்களும் கையொலி எழுப்பி உற்சாக ஆரவாரஞ் செய்தனர்.

அண்ணாவின் வாழ்நாளிலேயே எங்காவது, என்றாவது அத்தகைய இரத்தினச் சுருக்கமான இனிய சொற்பொழிவை அவர்தாம் நிகழ்த்தியதுண்டா? நாம்தாம் கேட்டதுண்டா?

தி. மு. கழகத்தில் தலைமைச் செயற்குழுவும், பொதுக் குழுவும் ஆராய்ந்து முடிவு கண்டதற்கிணங்க, அந்த மாநில மாநாட்டின் இறுதி நாளில் 'பொதுத் தேர்தலில் தி. மு. கழகம் போட்டியிட வேண்டுமா, வேண்டாமா?' என்று மாநாட்டிற்கு வந்திருந்தோரிடையே வாக்கெடுப்பு நடத்தப் பெற்றது.

வந்திருந்தோருள் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து பேர் தேர்தலில் போட்டியிடவேண்டும் என்றும், ஐந்துபேர் போட்டியிடக் கூடாதென்றும் வாக்களித்தனர்.

இம்முடிவினையொட்டி,

"பொதுத் தேர்தலில் தி. மு. கழகம் போட்டியிடுவது என்று இந்த மாநில மாநாடு தீர்மானிக்கிறது."

—என்னும் தீர்மானத்தைத் தலைவர் இரா. நெடுஞ்செழியன் மாநாட்டின் முன் வைத்தார்.

மக்கள் ஒரே மனதாய் அத்தீர்மானத்தை நிறைவேற்றினார்கள்.

இவ்வாறு ஒரு கட்சி, தான் பொதுத் தேர்தலில் ஈடுபடுமுன், பொதுமக்களின் கருத்தை அறிய முற்பட்டது உலக வரலாற்றிலேயே அதுகாறும் நடைபெறாத வியத்தகு நிகழ்ச்சியாகும். சாதாரணமாகப் பொதுத் தேர்தலில் நிற்பதென்று தானே முடிவெடுத்த பின்னர்தான் எந்தக் கட்சியும் பொதுமக்களை மதித்து அணுகுவதுண்டு. ஆகவே தேர்தல் களத்தில் குதிப்பதற்கு முன்கூட்டியே பொதுமக்களின் கருத்தை அறிய முற்பட்டதன் மூலம், அண்ணாவின் தலைமையில் அமைந்த தி. மு. கழகம் ஒரு புதிய மரபினையே தோற்றுவித்த பெருமையையும் பெற்றுக்கொண்டு விட்டது.

"நாம் தேர்தலில் ஈடுபடுவது இதுவே முதல் தடவையாகும் என்பது மட்டுமல்ல; பலம் பொருந்திய காங்கிரசுக் கட்சிக்கும் தேர்தலில் பலமான போட்டி ஏற்படுவதும் இதுவே முதல் தடவையாகும். அதை யோசித்து உங்கள் பங்கை தி. மு. கழகத்திற்கு அளியுங்கள்; கழகத்திற்கு

வெற்றியைத் தேடித் தாருங்கள். அந்த வெற்றியே நமது இலட்சியப் பாதையை நோக்கி நடப்பதற்கு ஊக்கமளிக்கட்டும்''

—என்று மாநாட்டின் முடிவில் அண்ணா பிறப்பித்த ஆணையை அவர்தம் அருமைத் தம்பியர் தலைமேல் வைத்துக் கொண்டாடினர்; அவர் சொற்படியே திட்டமிட்டுச் செயலாற்றினர்; பட்டிதொட்டி யெங்கும் கழகக் கிளைகள் முளைவிடச் செய்தனர்; அவருடைய இலட்சியப் பண்களை மூலைமுடுக்கெல்லாம் இசைத்தனர்; எதிரொலித்தனர்!

அண்ணாவின் செம்மையான தலைமையாலும், தம்பியாரின் உண்மையான உள்ளம் ஒன்றிய உழைப்பினாலும், தி. மு. கழகம், முழு அரசியல் கட்சியாக உருவெடுத்தது; உயர்ந்தது.

தமிழக அரசியல் வானிலே வெறும் விண்மீனாக மின்னத் தொடங்கிய ஒரு கட்சி முழு நிலவாய் ஒளி பொழியும் தகுதியினையும் எய்தியது!

# 23. சட்ட மன்ற நுழைவு

## தலைசிறந்த அரசு முறை

இந்தப் பரந்த உலகு எத்தனையோ வகையான அரசு முறைகளைச் சந்தித்துள்ளது. அவற்றுள் முடியாட்சி முறையும், குடியாட்சி முறையும், இவை இரண்டுங் கலந்த முறையும்கூட உண்டு.

எனினும், இதுகாறும் எழுந்துள்ள அரசு முறைகளில் எல்லாம் மிகச் சிறந்தது என்று கடைசியாகக் கண்டு பிடிக்கப்பெற்று, பல நாடுகளிலும் கடைப்பிடிக்கப் பெற்று வரும் அரசுமுறை பாராளுமன்ற முறையிலான மக்களாட்சி (Parlimentary Democracy) அரசு முறையே ஆகும்.

தேவையான நன்மைகளைத் தேவையான நேரத்தில் வேகமாகத் தரமுடியாத ஆமை யந்திரமே இந்த மக்களாட்சி அரசு முறை. ஆயினும்கூட இதுவரை இவ்வுலகங் கண்ட ஆட்சிப் பாதைகளைவிட இது மாட்சிமிக்கது என்று அறிஞர்கள் மதிக்கிறார்கள் ஏன்?

## மக்களாட்சியால் மலரும் நன்மை

இந்த நெறிமுறையால், 1. 'கடவுளும் அரசனும் ஒன்றே' என்றும், 'கடவுளைப் போலவே, அவரது பிரதிநிதியான அரசனும் வழிபாட்டுக்குரியவனே' என்றும் கூறிக்கொண்டு மக்களை மண்புழுவாய் நடத்தி நசுக்கிய ஜேம்ஸ் மன்னன் போன்றவர்களின் மமதைக் கொழுப்பு மண்ணோடு மண்ணாக்கப்பட்டது. 2. கூடி வாழும் விலங்கு (Social Animal) எனப் படும் மனித இனத்தின் உரிமைகளும் ஒரு தனி மனிதனின் ஆதிக்க வெறியாகிய கொடிய கால்களின் கீழே மிதியுண்டு புதைந்துவிடாமல் காப்பாற்றப்பட்டுள்ளன. 3. பொருள், குலம், சமயம் முதலான புதர்கள் மண்டிச் சமூக வாழ்வின் பாதையை மறைத்துப் பயணத்தைக் கெடுத்தாலும், மனிதனுக்கு மனிதனோ ஆணுக்குப் பெண்ணோ உயர்வு-தாழ்வு

கற்பிக்க முடியாத இணையான பிறவிகளே என்னும் உயரிய நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

### பாராளுமன்றத்தின் தாய்

இத்தகைய மாண்பு மலிந்த மக்களாட்சிக் குழந்தையைப் பெற்றுத் தந்தது பிரிட்டன் நாடே. அதனை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகப் பேணி வளர்த்து ஆளாக்கிய பெருமையும் அதனையே சாரும். இதனாலேயே 'பாராளுமன்றத்தின் தாயே' (Mother ot Parliment) என்று பிரிட்டன் நாடு அழைக்கப்படுகின்றது. அத்தகைய 'தாய்மை நிலை'யை அடைவதற்குமுன் அது சந்திக்க நேர்ந்த சோதனைகளும் வேதனைகளும் எண்ணில் அடங்கா.

1688-இல் கிராம்வெல் (Cromwell) தலைமையில் நடந்த உள்நாட்டுப் போருக்குப் பின்னர்தான், பிரிட்டனில் பாராளுமன்றக் குழந்தை முறையாகக் கருக்கொண்டது. ஆயினும் அதற்கு வலுவான புலன் உறுப்புக்கள் சரியாக அமைந்தது, 1832-இல் ஏற்பட்ட முதலாம் சீர்திருத்தச் சட்டம் (First Reform Act of 1832) என்னும் மாமருந்தாலேயே! அதை உருவாக்கிய மருத்துவர் ஏர்ல்கிரே (Earl Grey) ஆவார். அவரைத் தொடர்ந்து புரட்சிகரமான சீர்திருத்தச் செம்மல், ஜான் பிரைட், ஜான் ரஸ்ஸல் பிரபு (தற்போதுள்ள பெர்ட்ரண்ட் ரஸ்ஸலின் பாட்டனார்), கிளாட்ஸ்டன் டிஸ்ரேலி, ஜோசப் சேம்பர்லின், ஜான் ஸ்டுவர்ட் மில், திருமதி எம்மலின் பங்குர்ஸ்ட், திருமதி பெத்திக்லாரன்ஸ், லாயிட் ஜார்ஜ் போன்ற பெருமக்களால் ஊட்டச் சத்து கொடுக்கப்பட்டு வந்த இப் பாராளுமன்ற முறை, ஸ்டான்லி பால்ட்வின் காலத்திலேயே முழுமையான ஆளாக உருவெடுத்துத் தலை நிமிர்ந்தது.

### இந்தியாவில் மக்களாட்சி

நம் இந்தியத் தலைவர்களின் எழுச்சியால், கல்வியறிவில் பின்தங்கியிருந்த நம் நாட்டிலும் அத்தகைய பாராளுமன்ற அரசு முறையைப் படிப்படியாக இயங்க வைப்பதற்கு ஆங்கிலேயர் இசைந்தனர். நம் இந்தியாவோ சிறிய நாடு அன்று; அயர்லாந்து, ஸ்காட்லாந்து, இங்கிலாந்து மூன்றும்

அடங்கிய பெரும் பிரிட்டன் (Great Britain) நாட்டைப் போல் பன்மடங்கு பெரிய துணைக் கண்டமே (Sub-Continent) இந்தியா. அதனால்தான், நாடு முழுமைக்கும் பொதுவாக டில்லியில் பாராளுமன்றத்தை நிறுவினாலும், அதன் விழுதுகளாக ஆங்காங்கே மாநிலங்கள்தோறும் சட்ட மன்றங்களையும் (State Legislature) நிருவாக வசதிக்காக ஏற்படுத்தும் நிலைமை உண்டாயிற்று.

## தமிழகச் சட்டமன்றம்

அந்த முறையில்தான், ஆந்திரா, மலபார், உள்ளிட்ட சென்னை மாநிலத்திலும் சட்டமன்றம் ஏற்பட்டது. அதில் முதன் முதல் இடம் பிடித்த கட்சி, திராவிட இனத்தவராகிய பார்ப்பனர் அல்லாதாருக்காகப் பரிந்து வாதாடிய நீதிக் கட்சியே. தன்னை முந்திக்கொண்டு இவ்வாறு அது ஆட்சியைக் கைப்பற்றி விட்டதால் காங்கிரசுக் கட்சி கொண்ட காழ்ப்பைப் பற்றியும், பின்னர் அதுவே நீதிக்கட்சியை நிலைகுலையச் செய்துவிட்டு, திரு. இராசகோபாலாச்சாரியார் தலைமையில் அமைச்சரவை அமைத்தது பற்றியும் முன்னரே விரிவாக்கியுள்ளோம்.

1947-இல் இந்தியத் துணைக் கண்டம் விடுதலை பெறுவதற்கு முன்னர் பத்து ஆண்டுகளும், விடுதலை பெற்றதற்குப் பின்னர் பத்து ஆண்டுகளும், சென்னை மாநிலத்தில், ஆட்சி பொறுப்பினைத் தன்னுடைய ஏகபோக உரிமையாக்கிக் காங்கிரசுக் கட்சி ஆண்டுவந்தது. இடையில் திரு. பி. இராமமூர்த்தி, ப. ஜீவானந்தம், மணலி கந்தசாமி, எம். கலியாணசுந்தரம் போன்ற பொதுவுடைமைக் கட்சியினர் வலுவான எதிர்ப்பைக் கொடுத்து வந்த போதிலும், அறிவுக் கூர்மைமிக்க இராசாசி, பாட்டாளிகளின் தோழர் காமராசர் போன்றவர்களின் ஆற்றல்மிக்க அயராப் பணிகளால், நடுவில் சற்றுத் தோய்ந்தாற்போல் தோன்றிய காங்கிரசுக் கட்சி மீண்டும் பீடுநடை போடத் தொடங்கிவிட்டது. போதாதற்குப் பெரியாரின் பெருந் துணையும் அதற்குக் கிட்டிவிட்டது.

இந்நிலையில்தான், அதுகாறும் வெறும் சமூக மறுமலர்ச்சித் தொண்டராகவே பணியாற்றி வந்த அண்ணா

1957-இல் நடந்த பொதுத் தேர்தலில் ஈடுபட்டதன் மூலம் முழு அரசியல்வாதியாக மாறினார்; அரசு என்னும் வண்டியைத் தன்னிச்சைப்படிக் காங்கிரசுக் காளைத் தடம்புரண்டு இழுத்துச் சென்றுவிடாதவாறு அதைச் சரியான சுவட்டில் செலுத்தும் மூக்கணாங் கயிறாகவும் அவர் விளங்கினார்.

## தேர்தல் திருவிழா

தேர்தல் என்றாலே பரபரப்பான திருவிழாதான். அதிலே வாக்காளர் தெய்வங்களிடம் வரங்கேட்டு வேட்பாளர்கள் தவங்கிடக்கும் வேடிக்கை இருக்கிறதே, அதுவே மக்களாட்சி நெறியின் முதல் வெற்றி! மாபெரும் வெற்றி!

தேர்தலில் இறங்கிவிட்ட, மாளிகை மனிதர்களும், மண்டைக் கனம் கொண்டவர்களும் காலில் புழுதியேற, கண்கள் பஞ்சடைய, கொளுத்தும் வெயிலினிலே கொட்டும் மழையினிலே கழுத்தில் சுளுக்கேற கரங்கூப்பிப் பல்லைக் காட்டி, கொஞ்சும் அழகுக்கு வேறு எந்த அழகும் ஈடாமோ?

நன்மைகளைப் பெய்வதில் நாட்களை மிகக் கடத்தி, மெதுவாக ஊர்ந்து வரும் குறைபாட்டைக் கொண்டிருந்தாலும், மனிதத் தன்மையையே மாசு படுத்துகின்ற 'புற்று நோய்' போன்ற பொல்லாச் செருக்கினைச் சிதைத்து ஒழிப்பதற்கேனும் தேர்தல் பயன்படுகிறது அல்லவா?

தி. மு. கழக வேட்பாளர்களைப் பொறுத்தவரை, இந்த இடர்ப்பாடு எதுவும் அவர்கள் வழியை மறிக்க இடமில்லை. ஏனெனில், அவர்களோ ஏழை, எளியவர்கள்; வாழ்வில் வதை பட்டவர்கள். அவர்கள் வழிகாட்டியான ஒளிவிளக்காம் பேரறிஞர் அண்ணாவும் எளிய குடும்பத்தில் தோன்றி, இன்னல் வெள்ளத்திலேயே எதிர்நீச்சல் போட்டுக் கரையேறியவர். எனவே, தாம் பேசும் மேடை நோக்கிப் பெருந் திரளாய்ப் பொதுமக்களைக் கவர்ந்து இழுத்தவர்களுக்கு, அதே பொதுமக்களின் வீடு நோக்கிச் சென்று வாக்குகளைக் கேட்பது எளிதாகவே இருந்தது.

**எதிர்பாராத இடர்ப்பாடுகள்**

அதே சமயம், வேறு சில இடர்ப்பாடுகள் தி. மு. கழகத்தின் எதிரே தோன்றி அறைகூவல் விடுத்தன; அல்லல்களையும் கொடுத்தன.

1. 1959—மார்ச்சு திங்களில் தேர்தல் நடந்த காலத்தில், தி. மு. கழகத்தைச் சார்ந்தவர்கள், இளைஞர்களாகவே இருந்தார்கள்! அண்ணாவைத் தவிர, அவருக்கு அடுத்த கட்டத்தில் இருந்த முன்னணித் தலைவர்களேகூட நாற்பது வயதையும் தாண்டாதவர்களாக இருந்தார்கள்.

இதனால், இளைஞர் உலகில் செல்வாக்குப் பெற்றிருந்த அளவுக்கு முதியவர்களைக் கவர்ந்திழுப்பது கடினமாக இருந்தது தி. மு. கழகத்துக்கு.

2. 'தெய்வச் சிலைகளையே போட்டு உடைக்கும் பழுத்த நாத்திகரான பெரியாரின் சீடர்கள்தானே/ தி. மு. கழகத்தினர்! அந்தக் கடவுள் இல்லை என்கிற கட்சிக்கா?'—என்ற பரவலான கருத்தும் முதியவர்களிடையே நிலவியிருந்தது. கடவுள் கொள்கையைப் பொறுத்தவரையில் பெரியாரோடு இணங்கியிருந்த காலத்தில் அண்ணா கொண்டிருந்த பிடிவாதம் அவரை விட்டுப் பிணங்கி வெளிவந்தபின் படிப் படியாகத் தளர்ந்து கொண்டிருந்தது. 'கடவுளே இல்லை'—என்று கண்டித்துப் பேசும் பெரியாருக்கும், 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்'—என்னும் திருமூலர் திருமந்திரத்தை ஏற்றுக்கொள்ளும் அண்ணாவுக்கும் எத்துணையோ வேறுபாடு உண்டு. முன்னவர் உலகை இயக்குகின்ற ஒரு பேராற்றலை அடியோடு ஒப்புக் கொள்ள மறுப்பதற்கும், அத்தகைய ஒரு பேராற்றலை ஒப்புக்கொண்டு அதே சமயம் அதனைக் கற்பனைச் சேற்றில் அமுக்கி எடுத்து, மக்களின் பகுத்தறிவுச் சிந்தனையை தகர்த்தொழிக்கும் மூடத்தனமான நம்பிக்கைகளையும், நடவடிக்கைகளையும் அண்ணா கண்டிப்பதற்கும், கண்டிப்பாக வேறுபாடு இல்லையா?' ஆனால், 'பெரியாரைப் போல் கடவுளே இல்லை என்று முழுமையாகச் சொல்லவில்லை; மூடபக்தியைத்தான் நாங்கள் ஏற்கவில்லை'—என்கிறதெல்லாம் வெளிப்படையாக எடுத்துரைத்து மக்களைத் தம் பக்கம் திருப்ப முடியாத இக்கட்டிலும் தி. மு. கழகம்

அப்போது சிக்கியிருந்தது; தேர்தல் காலத்தில் அதற்கு நேரமும் இல்லை.

3. தி. மு. கழகத்தின் உயிர் கொள்கையாக முன்னர் விளங்கிய 'திராவிட நாடு பிரிவினை' என்பது, தமிழக இளைஞரிடையே பரவிய அளவுக்கு, கேரளம், ஆந்திரம், கருநாடகம் ஆகிய பிற திராவிட நாட்டுப் பகுதிகளில் செல்வாக்குப் பெற முடியாமல் திணறிற்று; அதைப் பரப்புவதற்குத் தி. மு. கழகத் தலைவர்கள் உருவான செயல் திட்டம் எதையும் மேற்கொள்ளவும் இல்லை. தம் கொள்கையைப் பிற பகுதியில் பரப்பாமல் இருந்ததை அவர்களின் அசமந்தப் போக்கை—மாற்றுக் கட்சியினர் நன்கு பயன்படுத்திக் கொண்டு, 'திராவிட நாடு பிரிவினை' என்பது நிறைவேறவே முடியாத பகற்கனவே என்று வாதம் செய்வது எளிதாக இருந்தது.

4. 'சனநாயகமாவது வெங்காயமாவது'—என்று பெரியார் கூறுவதற்கேற்ப கல்வியறிவில் கடைக் கோடியில் நிற்கும் இந்தியாவைப் போன்ற ஒரு நாட்டில், மக்களாட்சியின் உண்மையான மதிப்பை மக்கள் முழுமையாக உணர்ந்திருப்பார்கள் என்று உரைக்க முடியாது. வயது வந்தவர்கள் அனைவருக்கும் வாக்களிக்கும், உரிமை வந்துவிட்ட நிலையில், அவர்களுடைய 'பாமரத்தன்மை'யின் அடிவேரான கல்லாமையைப் பயன்படுத்திக்கொண்டு, 'சாதியைக் கூறி, காசைக் காட்டி' அவர்களைப் பணம் படைத்தவர்கள் திருப்புவது எளிது என்கிற சூழ்நிலையும் அப்போது நிலவி வந்தது. சாதி ஒழிப்பைத் தன் தலையாய குறிக்கோள்களில் ஒன்றாகக் கொண்டிருந்த தி. மு. கழகம், பணவலிமை அற்றிருந்ததும் அதன் தேர்தல் வெற்றிகளைப் பாதிப்பதாக இருந்தது.

இன்னும் எத்தனையோ சில்லரை இடர்ப்பாடுகள் எழுந்த போதும் அவற்றைத் துரும்பென ஒதுக்கித் துணிந்து தேர்தல் களத்தில் குதித்தது.

## தேர்தல் தந்த நன்மை

இவ்வாறு தேர்தலில், ஈடுபட்டதால் இன்னொரு மாபெரும் நன்மையும் அந்தக் கட்சிக்கு உண்டாயிற்று.

வெறும் சமுதாயச் சீர்திருத்த இயக்கமாக இருந்தபோது, அதை ஒரு சமயப் பகையான—மத விரோதமுள்ள—கட்சியாகப் பெரும்பாலான மக்கள் ஒதுக்கித் தள்ளி வந்தனர்; அது எவ்வளவுதான் உயர்ந்த கொள்கைகளைக் கூறினாலும் அவற்றுக்குச் செவிமடுப்பதே 'பாவம்' என்று ஒதுங்கிச் சென்றார்கள். இதனால், தமிழ்நாட்டின் சில பகுதிகளில் தி. மு. கழகம் நுழையவே முடியாத நிலைமையும் இருந்தது. ஆனால், தேர்தலில் இறங்கும் அளவுக்குத் தன்னை ஒரு முழு அரசியல் கட்சியாக மாற்றிக்கொண்ட பிறகு, தன்னுடைய திட்டங்கள், கொள்கைகளைப் பிரசாரம் செய்வதில் எந்த ஒரு சமூக மக்களையும் தனிப்படுத்தித் தாக்குவதைக் கைவிட்டு ஒரு நிதானப் போக்கைக் கடைப்பிடித்தனர் தி. மு. கழகத் தலைவர்கள். அத்துடன், தங்கள் சொற்பொழிவுகளில் புரட்சிக் கனல் தெறிப்பதைச் சற்று மாற்றிக் கொண்டு நகைச்சுவையைப் பொழிவதிலும் கவனம் செலுத்தினர். இதனால், புரட்சியைச் செரிக்க முடியாத வயது வந்தவர்கள் நகைச்சுவையில் திளைக்கத் தொடங்கி தி. மு. க. என்னதான் சொல்லுகிறது என்று சிந்திக்கவும் முற்பட்டனர்.

மேலும், ஒரு தொகுதியில் தி. மு. கழகத்தவர் போட்டியிடுகிறார் என்றால், அத்தொகுதியில் உள்ள ஒவ்வொரு சிற்றூருக்கும் வாக்குக் கேட்கும்பொருட்டு அவர் சென்று தான் ஆகவேண்டும். அவ்வாறு செல்லும் பொழுதெல்லாம் அந்தந்தச் சிற்றூரிலும் கூட்டம் நடத்தப்பட்டது; கொடி ஏற்றப்பட்டது; அப்படியே கிளைக் கழகமும் அமைக்கப்பட்டது. 1957-இல் தி. மு. கழகம் தன் சொந்தக் காலில் நின்று போட்டியிட்ட சட்டமன்றத் தொகுதிகளிலும், பிற கட்சிகளுக்கென்று துணைபோன தொகுதிகளிலும் இவ்வாறே கிளைக் கழகங்கள் மளமளவென்று தலையெடுத்தன. இந்த விரைவான வளர்ச்சி, நாட்டின் பிற பகுதிகளிலும் மனத்துக்கு நிறைவான முறையில் எதிரொலித்தது.

எனவே, 1957 பொதுத் தேர்தல், தி. மு. க. அரசியல் வளர்ச்சி ஏணியின் முதற்படியாய் அமைந்தது என்றாலும் மிகையன்று. தேர்தலிலே முன்னர் குறிப்பிட்ட இடர்ப்பாடுகளால் பெரும் வெற்றியினைப் பெற முடியாமற் போனாலும்

அந்தத் தேர்தலைச் சாக்கிட்டாவது, தொகுதிதோறும்—அந்தந்தத் தொகுதிகளில் உள்ள சிற்றூர்தோறும்—தி. மு. கழகம் ஆயிரக்கணக்கில் கிளைகளை அமைத்துக் கிளைத்துச் செழிக்க வழி ஏற்பட்டது அல்லவா?

## பொதுத் தேர்தல் போட்டி

1957-மார்ச்சு திங்களில் நடைபெற்ற பொதுத் தேர்தலில், சென்னை சட்டமன்றத்திற்கென 205 தொகுதிகளிலும், டில்லிப் பாராளுமன்றத்திற்கென 41 தொகுதிகளிலும் போட்டி நடைபெற்றது. தி. மு. கழகம் எல்லா இடங்களிலும் தன் வேட்பாளர்களை நிறுத்தி வைக்கவில்லை. 12—சட்டமன்றத் தொகுதிகளுக்கும் 11—பாராளுமன்றத் தொகுதிகளுக்கும் மட்டுமே அது போட்டியிட்டது. அதே சமயம் 7—சட்டமன்றத் தொகுதிகளிலும் 5—பாராளுமன்றத் தொகுதிகளிலும் பிற வேட்பாளர்களின் வெற்றிக்காக ஆதரவு நல்கியது.

தி. மு. கழகம், தனக்கே உரிய புதுமையான பாணியில் சிறப்பான உத்திகளைக் கையாண்டுத் தேர்தல் பிரசாரத்தை முடுக்கிவிட்டது. தமிழ் மணக்கும் அடுக்குமொழிகளைத் தாங்கிய சுவரொட்டிகள் சுவருக்குச் சுவர், முச்சந்திக்கு முச்சந்திக்குப் பெரும் கேள்விக் குறிகளை எழுப்பின. 'நாவலர் பாணிப் பேச்சாளர்' என்றும், 'கலைஞர் பாணிப் பேச்சாளர்' என்றும், 'மனோகரன் பாணிப் பேச்சாளர்' என்றும், இளந் தலைமுறையினர் பலர் கிளர்ந்தெழுந்து இரவைப் பகலாக்கிச் சொற்பொழிவு மழை பொழிந்தனர்.

## காஞ்சித் தொகுதியில் அண்ணா

அறிஞர் அண்ணா, தாம் பிறந்த மண்ணாகிய காஞ்சீபுரம் தொகுதியில் நின்று சென்னைச் சட்டமன்றத்துக்குப் போட்டியிட்டார். அவரை எதிர்த்து நின்றவர், செல்வமும் செல்வாக்கும் படைத்த டாக்டர் சீனிவாசன் என்பவர் ஆவார்.

முதலமைச்சர் திரு. காமராசரும் பிற அமைச்சர்களும், தொடர்ந்து காஞ்சீபுரத்தில் முகாம் இட்டு, அண்ணாவை

முறியடிப்பதில் முழு மூச்சாய் ஈடுபட்டனர். அவர்களோடு பெரியாரும் சேர்ந்து கொண்டார்.

## பெரியாரின் பேரெதிர்ப்பு

அண்ணாவின் தோல்வியில் பெரியார் மிகுதியான ஆர்வமும், அக்கறையும் காட்டியதில் வியப்பேதும் இல்லை. தம்முடைய திருமணத்தைக் காரணங்காட்டித் தம்மைவிட்டுப் பிரிந்து சென்ற அண்ணா, அரசியல் வாழ்வைப் பொறுத்த வரை அழிந்தே போவார் என்றே பெரியார் நினைத்தார். அண்ணாவோ அவர் ஊகங்களையெல்லாம் உடைத்தெறிந்து ஓங்கி வளர்ந்துவிட்டார்! அந்த ஆத்திரந்தான் பெரியாருக்கு; இல்லையென்றால் அண்ணாவை வீழ்த்துவதில் அத்துணை தீவிரமாக இறங்கியிருக்கமாட்டார். அவருடைய ஆத்திரத்துக்கு இன்னொரு பின்னணியும் உண்டு.

'பகுத்தறிவுப் பகலவன்'—என்றும், 'வைக்கம் வீரர்' என்றும், 'சீர்திருத்தச் சிற்பி' என்றும் கொண்டாடப்பெறும் பெரியாரால்தான், உறங்கிக் கிடந்த தமிழினத்தார் விழித்தெழுந்தனர் என்பது உண்மை; சாதிக் கொடுமை என்னும் நச்சுப்பொய்கை ஓரளவேனும் தூர்க்கப்பட்டது என்பதும் உண்மை. மூடபக்தியென்னும் முடைநாற்றத்தை அவரது பகுத்தறிவுக் கொள்கையாம் 'பினைல்' தடுப்பு மருந்துதான் மாற்றியமைத்தது என்பதும் உண்மை. அதே சமயம் அவரிடமும் சில குறைபாடுகள் இருந்தன. சில்லறைக் குறைபாடுகளே என்றாலும், தம்மைப் பின்பற்றுவோரின் உள்ளத்தை உறுத்தக் கூடியனவாகவும் அவை அமைந்திருந்தன. 1. பிறரைக் கலந்து யோசித்து எதையும் முடிவு செய்யாத போக்கு. 2. தாம் ஒரு முடிவுக்கு வந்து விட்டால், அது தவறானது என்று பெரும்பாலானோர் கூறினாலும் அதை நிறைவேற்றியே தீருவது என்னும் முரட்டுப் பிடிவாதம். 3. தாம் படித்தவராக இல்லாத காரணத்தால் எங்கே கல்வியறிவு மிக்க தொண்டர்கள் தம்மை மீறிக் 'குருவுக்கு மிஞ்சிய சீடர்கள்'—ஆகிவிடுவரோ என்னும் வீணான அச்சம். 4. தம்மையே கதியென்று வந்துவிட்ட தொண்டர்களே ஆயினும் அவர்கள் நோய்—நொடியாலோ

பிற இடுக்கண்களாலோ பாதிக்கப்படும்பொழுது அவர் களுக்குக் கட்சி நலனை முன்னிட்டுப் பொருளுதவி புரிவதுகூட எங்கே பொதுமக்களால் தவருகப் பேசப்படுமோ என்று மேற்கொண்ட அளவுக்கு மீறிய சிக்கனம்...முதலானவையே பெரியாரிடம் இருந்த சில குறைபாடுகள். பெரியாரின் இந்தக் குறைபாடுகளால் மட்டுமின்றித் தம்முடைய சொந்தக் குறைபாடுகளாலும், அல்லது கருத்து மாறுபாடுகளாலும் கூட அவருடைய மிக நெருங்கிய தொண்டர்களாக விளங்கிய பலர், அவரைவிட்டு அவ்வப்போது விலகிச் சென்றனர். முன்னுள் அமைச்சர் திரு. எஸ். இராமநாதன், காலஞ் சென்ற பொதுவுடைமைத் தலைவர் திரு. ப. ஜீவானந்தம், காலஞ்சென்ற தமிழ்ப் புலவர் திரு. சாமி சிதம்பரனுர், (இவரும் பின்னர் பொதுவுடைமைக் கட்சியின்பால் ஈடுபாடு கொண்டுவிட்டார்) திருவாசகமணி. திரு. கே. எம். பால சுப்பிரமணியம், (இவர் சிறந்த சமயச் சொற்பொழிவாள ராகத் தற்பொழுது விளங்குகிருர்) முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம், திரு. கே. எம். வல்லத்தரசு, (இவர் புதுக்கோட்டை...குறுநில மன்னர் நாடு விடுதலை பெற்ற இந்தியாவுடன் இணைவதற்கு அரும்பாடுபட்டவர்) காலஞ்சென்ற குத்தூசி சா. குருசாமி, திரு. தி. பொ. வேதாசலம் முதலானவர்கள் பெரியாரிடம் பொதுப் பணியாற்றுவதற்குரிய பயிற்சியினைப் பெற்றுப் பின்னர் அவரை விட்டுப் பிரிந்தவர்களுள் குறிப்பிடத்தக்கோர் ஆவர். இவர்கள் ஒவ்வொருவரும் எழுத்திலோ, பேச்சிலோ அல்லது இரண்டிலுமோ மிகச் சிறந்த ஆற்றல் பெற்றவர்கள். எனி னும்கூட பெரியாரை மிஞ்சியோ, அவருக்கு இணையாகவோ கூடத் தமிழகத்தின் தனித்தலைவர்களாகத் தலையெடுக்க முடியவில்லை. இவர்களில் சிலர் புதிய கட்சிகளைத் தோற்று விக்க முயன்றனர்; ஆனுல் தோல்வியையே சந்தித்தனர். சிலர், பொதுவுடைமைக் கட்சி போன்ற அகில இந்தியக் கட்சிகளில் சார்ந்தனர்; ஆயினும் அங்கே இரண்டாங்கட்ட—மூன்றுங் கட்டத் தலைவர் அளவுக்குத்தான் உயரமுடிந்ததே அன்றிப் பெரியாரைப்போலத் தனித் தலைவர்களாகத் தலைநிமிர முடிய வில்லை. சிலருக்கோ அரசியல் வாழ்வே பாலைவனமாய்ப் பாழாகவும் பாழாயிற்று! அவர்களைப்போலத்தான் அண்ணு

வும் தம்மை விஞ்சும் அளவுக்குத் தமிழகத்தில் செல்வாக்குப் பெறமுடியாது என்றே பெரியார் திடமாக நம்பினர்; அவர் செல்லாக் காசாகிச் சீரழிய வேண்டுமென்றும் உளமார விரும்பினர்.

தம்மை எதிர்த்து வெளியேறிய ஒரு தொண்டர், தம்மினும் மேலான ஓர் உன்னத நிலையை எய்துவதைச் சராசரி அறிவுபடைத்த எந்தத் தலைவரால்தான் சகித்துக்கொள்ள முடியும்? எனவே அண்ணுமீது பெரியாருக்கு எழுந்த ஆத்திரம் வியப்புக்குரியதன்று; இயற்கையானதே.

தம்முடைய அந்த ஆத்திரத்தைத் தீர்மானித்துக் கொள்ளும் பொருட்டுத்தான் பெரியார், காஞ்சீபுரம் தொகுதிக்கே சென்று அண்ணுவை எதிர்த்துத் தேர்தல் சொற்பொழிவு நிகழ்த்தினர். அப்போது அவரை அறியாமல் சொல்லக்கூடாத இழிமொழிகளையெல்லாம் கூடச் சொல்லித் தீர்த்தார்.

அண்ணுவோ 'எதையும் தாங்கும் இதயம்' படைத்தவர் அல்லவா? ஒரு தந்தை ஏசுவதை ஒரு தனயன் தாங்கிக் கொள்வது இல்லையா? அப்படித்தான் எல்லாச் சுடுசொற்களையும் சுமப்பதற்குத் தம்மைப் பழக்கப் படுத்திக்கொண்டார் அவர். அவருடைய இந்த அளப்பரிய பொறையுடைமை (சகிப்புத் தன்மை) விழலுக்கிறைத்த நீராகி விடவில்லை; வெற்றிக்கனி தரும் வித்தாகவே அமைந்தது.

## வெற்றி பெற்ருர் அண்ணு

இறுதியில், காமராசர் முதல் கடைசிக் காங்கிரசாரி வரை கண்மூடித்தனமாக விடுத்த எதிர்ப்புக் கணைகளையெல்லாம் பொடிப்பொடியாக்கி, பெரியார் மூட்டிய நெருப்புத் தாக்குதலையெல்லாம் கருப்பஞ் சாருய்க் கருதி, தம்முடைய தரமான வாதத்திறமையாலும், சளைக்காத உழைப்பினுலுமே அண்ணு அவர்கள் பழுத்த காங்கிரசுக்காரரான டாக்டர் சீனிவாசன் என்பவரை வியக்கத்தக்க முறையில் வெற்றி கொண்டார்.

அண்ணுவின் வெற்றிச் செய்தி, அவர்தம் தம்பியரின் இதயத்தில் மட்டுமின்றி, தமிழகத்தின் வளர்ச்சியில் நாட்ட

மும் நடுவுநிலைமையும் கொண்டவர்களின் இதயத்திலும் இன்பப்பாலை வார்த்தது!

## வரலாற்றில் திருப்புமுனை

1957-இல் பேரறிஞர் அண்ணாவின் முதல் சட்டமன்ற நுழைவு, அவருடைய வாழ்க்கை வரலாற்றில் மட்டுமின்றி, தமிழக வளர்ச்சி வரலாற்றிலும் மிகப் பெரிய திருப்புமுனையாகும்.

அவர் சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்றதை அகில இந்தியாவும் கூர்ந்து கவனித்தது; வியப்போடு மட்டுமின்றி அதிர்ச்சியோடும் நோக்கியது. அத்தகைய அதிர்ச்சிக்குக் காரணம் இல்லாமல் இல்லை.

இந்தியப் பேரரசிலிருந்து திராவிட நாட்டைப் பிரிவினை செய்தால்தான் வளரும் வடக்குக்கு இணையாகத் தேயும் தென்னாட்டை முன்னேற்ற முடியும் என்று தி. மு. கழகம் வற்புறுத்திக் கொண்டிருந்த காலம் அது. 'அதனுடைய பிரிவினைக் கொள்கைக்குப் பொதுமக்களிடையே ஆதரவே இல்லை?' என்று முழுப் பூசணிக்காயையும் சோற்றில் மறைக்க முயன்ற தமிழகக் காங்கிரசாரின் கூற்றுக்கு மாறாக அண்ணாவும், அவரது தம்பியர்களும் 15 சட்டமன்றத் தொகுதிகளையும், 2 பாராளுமன்றத் தொகுதிகளையும் கைப்பற்றியது, தி. மு. கழகத்துக்கும் பொதுமக்களிடையே செல்வாக்கு உள்ளது என்பதை மெய்ப்பிப்பதாகவே இந்தியாவின் பிற பகுதியில் உள்ளவர்கள் கருதினார்கள். இந்நிலையில், பிரிவினைவாதிகள் சட்டமன்றத்தில் பெரும் அளவில் வருங் காலத்திலே இடம் பிடித்துக்கொண்டு விட்டால் நாட்டின் ஒருமைப்பாடு ஆட்டங் கொடுத்துவிடுமே என்றுதான் அவர்கள் அதிர்ச்சியுற்றார்கள்.

இந்தியப் பேரரசிலிருந்து 'நாகாலாந்து' என்று நாகர்களுக்காகத் தனிநாடு வேண்டிப் பிசோ (Phizo) என்பவர் பலகாலமாகப் போராடிவரும் செய்தியை யாவரும் அறிவர். அவரோ, மக்களின் வாக்கைப் பெற்று மக்களாட்சி நெறி வழியே தம் கோரிக்கையை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்னும் நம்பிக்கையில்லாதவர். எனவே கிளர்ச்சிகள் மூலமே, தம் இலட்சியத்தை நிறைவேற்றத் துடிக்கும்

புரட்சிக்காரராய்த் திகழ்கிறார். சட்டத்திற்குக் கட்டுப்படாமல், மக்களாட்சி நெறிக்கு மாறுபட்டுப் போராடும் பிசோ போன்றவர்களை ஒடுக்குவது அரசாங்கத்துக்கு மிகவும் எளிது. ஆனால் சட்டத்துக்கு உட்பட்டுப் பொதுமக்களின் பொன்னான வாக்குகளையும் பெற்றுச் சட்டமன்றத்தையும் கைப்பற்றி பிரிவினைக் கொள்கையை ஒரு கட்சி நிறைவேற்றி முற்பட்டுவிடுமானால், அதை எப்படிச் சமாளிப்பது என்பதே இந்தியத் தலைவர்களின் சிந்தையைக் கலக்கிற்று. அதனால்தான் அண்ணாவின் சட்டமன்ற நுழைவை அவர்கள் அதிர்ச்சியோடு நோக்கினர்.

கொள்கைகளும், அக்கொள்கைகளால் ஏற்படக்கூடிய பின் விளைவுகளும் எவ்வாறு இருப்பினும், ஒரு கட்சித் தேர்தல் களத்தில் குதித்து, பொதுமக்களின் வாக்குகளைப் பெற்றுவிட்ட பிறகு அதற்கு உரிய மதிப்பை அளித்து வரவேற்பதுதான் அரசியல் நாணயம் என்னும் முறையில் அண்ணாவின் சட்டமன்ற நுழைவை வரவேற்பவர்களும் உண்டு.

## 'ஆனந்த விகடனின்'—வரவேற்பு

இந்த வகையில், தமிழ்நாட்டில் செல்வாக்கு மிகுந்த ஏடுகளில் ஒன்றான 'ஆனந்த விகடனின்' வரவேற்புரை குறிப்பிடத்தக்கதாகும்.

எழுத்தாளர்களை ஊக்குவித்து, அவர்கள் இதயங்குளிர ஆக்கம் அளித்தால்தான், அவர்களிடமிருந்து உயர்ந்த அணிகலன்கள் தமிழன்னைக்குக் கிட்டும் என்னும் பெரு நம்பிக்கை கொண்ட ஏடு 'ஆனந்த விகடன்'. பெருந்தொகைகளைப் பரிசாகவும், அன்பளிப்பாகவும் எழுத்தாளர்களுக்கு வாரி வழங்குவதன் மூலம் எழுத்துலகிலே ஒரு மாபெரும் புரட்சியையே உண்டுபண்ணிய பெருமை அதற்கு உண்டு. ஒரு குறிப்பிட்ட சமூக—சமய—மொழிச் சார்பானவர்களுக்கு மட்டுமே ஊக்கமளிக்கும் வகையில் கதை, கட்டுரை வெளியிடுவதன் மூலம், உலகமட்டத்தை எட்டும் அளவுக்கு அதன் இலக்கியப் பணி உயர்ந்துள்ளதா என்பதுபற்றி மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டவர்கள்கூட, எழுத்தாளர்களுக்கு அது அளிக்கும் பொருட்கொடையை உளமாரப் புகழ்கின்றனர்.

இவ்வாறு, புகழாரம் பூண்ட 'ஆனந்த விகடன்', தொடக்க காலத்திலிருந்தே காங்கிரசுக் கட்சிச் சார்புடைய தாகும். அதுவே, மாற்றுக் கட்சியினரான அண்ணுவைச் சட்ட மன்றத்துக்கு வரவேற்று எழுதியது வியப்புக்குரியது தானே!

"...(அண்ணுதுரையின் வருகையால்) சட்ட சபையிலும் ஒரு புது விழிப்பு ஏற்படும். கேள்விகளும், மந்திரிகளின் பதிலும் காரசாரமாக இருக்கும். அண்ணுதுரை என்ன சொல்கிருர் என்று பொதுமக்கள் அக்கறையுடன் கவனிப்பார்கள். தமிழர் நலத்திற்கான காரியங்கள் போட்டி போட்டுக்கொண்டு செய்யப்படும். அம்முறையில் அண்ணுதுரையின் வெற்றியை வரவேற்கிருேம்...மகத்தான வெற்றி கிடைத்திருப்பதைப் பார்க்கும்போது அண்ணுதுரைமேல் மக்களுக்குள்ள அபிமானம் நன்கு புலனுகிறது."

—17-3-57-ஆம் தேதியிட்ட 'ஆனந்த விகடன்' இதழில் 'வருக அண்ணுதுரை!'—என்னும் தலைப்பின்கீழ் வந்த சில பகுதிகளையே மேலே காட்டியுள்ளோம்.

பத்தாண்டுகள் கழிந்துவிட்ட போதிலும் 'ஆனந்த விகடன்' இதழில், 'வருக அண்ணுதுரை!'—என்னும் தலைப் பின்கீழ் வந்த சில பகுதிகளையே மேலே காட்டியுள்ளோம்.

பத்தாண்டுகள் கழிந்துவிட்ட போதிலும் ஆனந்த விகடனின் ஊகங்களை மீண்டும் நினைவு கூர்ந்து பார்க்கும் பொழுது, 'அவை எவ்வளவு மெய்யான ஆருடங்கள் ஆகிவிட்டன!'—என்று நம்மால் வியப்புருமல் இருக்க முடியவில்லை.

## தமிழகத்தின் எட்மண்ட் பர்க்!'

இங்கிலாந்து நாட்டுப் பாராளுமன்ற வரலாறு அறிந்தவர்கள் 'எட்மண்ட் பர்க்' (Edmund Burke) என்னும் பெயரை எளிதில் மறக்க முடியாது. ஏனெனில் பதினெட்டாம் நூற்ருண்டில் தம்முடைய ஆணித்தரமான வாதத் திறமையால் பிரிட்டானியப் பாராளும் மன்றத்தையே ஒரு கலக்குக் கலக்கியவர் அவர்!

1729-இல் அயர்லாந்திலுள்ள டப்ளினில் பிறந்தார் எட்மண்ட் பர்க். இலண்டன் சென்று சட்டம் பயின்ருர். அந்த

நாளில் நடுத்தர மக்களுக்காகப் பாடுபட்ட விக் (Whig) கட்சி அவரை மிகவும் கவர்ந்தது; விரைவில் அதன் உறுப்பினர் ஆனார். தம்முடைய முப்பத்தி ஏழாம் வயதில் இங்கிலாந்துப் பாராளுமன்றத்துக்குப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அங்கே அவரது வாக்கு வன்மை வரலாற்றுப் புகழ் பெறுவதாயிற்று. தாமே ஒரு வெள்ளையராக இருந்தும், தம் நாட்டினரான வெள்ளையரின் ஏகாதிபத்தியத் திட்டத்தால் எல்லையற்ற இன்னல்களுக்கு இலக்கான இந்திய நட்டாவருக்காகவும், அமெரிக்க நாட்டவருக்காகவும் பரிந்து பேசிய பெருந்தகையாளர் எட்மண்ட் பர்க். இராபர்ட் கிளைவுக்குப் பின்னர், இந்தியாவின் முதல் கவர்னர்—செனரலான வாரன் ஹேஸ்டிங்ஸ்தான் இந்நாட்டில் வெள்ளையர் ஆட்சியின் வேர்ப் பிடிப்பை வலுவடையச் செய்தவர். அவர் புரிந்த அடாத செயல்களுக்கு அளவே இல்லை. அவர்மீது 'அரசுத் துரோகக் குற்றப்' (Impeachment) காட்டி, அவரைக் கதிகலங்க வைத்தவர் எட்மண்ட் பர்க். அண்ணாவுக்கும் எட்மண்ட் பர்க்குக்கும் ஒரு சில ஒற்றுமைகளும் உண்டு.

அண்ணாவின் சொற்பொழிவுத் திறனைப்பற்றிச் சொல்லத் தேவையில்லை. அவரைப் போலவே எட்மண்ட் பர்க்கும் ஆற்றல் மிக்க அற்புதமான சொற்பொழிவாளர்.

எட்மண்ட் பர்க்கைச் சந்தித்தவர்கள் 'அவர் ஓர் அசாதாரண மனிதர்' (Extra Ordinary man) என்றே கூறுவார்கள். அண்ணாவைச் சந்திப்பவர்களும் 'அவர் ஓர் அசாதாரண மேதை'—என்றே புகழ்வார்கள்.

மேலும் கீழுமாக வேட்டி முந்தானை தொங்குவதைச் சரிசெய்து உடுத்தக்கூடத் தெரியாதவர்கள் என்று வேடிக்கையாகச் சொல்லும் அளவுக்குக் கசங்கிய உடையும் கலைந்த தலைமுடியுமாகக் கவர்ச்சியற்றுக் காட்சியளிப்பவர் அண்ணா. அத்துடன் பொடி உறிஞ்சுதல் வேறு! எட்மண்ட் பர்க்கும் இப்படித்தான் கவர்ச்சியின்றிக் காட்சியளிப்பாராம். அவருடைய நடவடிக்கைகள் அருவருக்கத்தக்கனவாகவும் இருக்குமாம்!

28-1-1766-இல் எட்மண்ட்பர்க் நிகழ்த்திய முதல் பாராளுமன்றச் சொற்பொழிவே அவரைத் தலைசிறந்த அரசியல் அறிஞராக உயர்த்திவிட்டது. 30-4-1957-இல்

அண்ணா ஆற்றிய முதல் சட்டமன்றச் சொற்பொழிவும் அப்படித்தான், அவரைத் தலைசிறந்த பாராளுமன்றவாதியாக (Parliamentarian) வெளியுலகுக்கு அறிமுகம் செய்தது.

## சட்டமன்றத்தில் முதல் முழக்கம்

டாக்டர் யூ. கிருஷ்ணாராவ் புதிய சட்டமன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை வாழ்த்தி நிகழ்த்திய அண்ணாவின் அந்த முதல் சொற்பொழிவில்தான் எத்துணை இன்பத் 'தேறல்' நிகர்த்த இலக்கிய மணம் கமழ்கிறது பாருங்கள்!

"...சட்டமன்றத் தலைவர் அவர்களே! துணைத் தலைவர் அவர்களே! தங்களுடைய கட்டளைக்கு அடங்கி நல்ல முறையில் தங்களுடன் ஒத்துழைத்து இந்தச் சபையின் கண்ணியத்தைக் காப்பாற்றுவதில் எங்களுக்கு உண்மையில் நல்ல நம்பிக்கை இருப்பதையும், இநிலை பிறருக்கும் நம்பிக்கை ஏற்பட வேண்டும் என்ற உறுதிப்பாடு இருப்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

"...உடல் இளைத்தோர்க்கு மருத்துவராக (சட்டமன்றத் தலைவரான திரு. யூ. கிருஷ்ணாராவ் ஒரு டாக்டர்; அதைத்தான் இங்கு நயமாகக் குறிப்பிடுகிறார் அண்ணா) அவரின் பக்கத்தில் நின்று நின்று பலம் ஊட்டுவதுபோலவே அரசியலில் இளைத்தோர்க்குப் பக்கத்தில் தாங்கள் நின்று பலம் ஊட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (206 உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றத்தில் தம் கட்சியைச் சார்ந்தவர்கள் 15 பேரே இருப்பதையே மறைமுகமாக அண்ணா இவ்வாறு குறிப்பிடுகிறார்.) எங்களைப் பொறுத்தவரையில் அரசியல் அநுபவத்தையும் ஆற்றலையும் அதிகமாகப் பெற்றுவிட்டோம் என்று கூறுவதற்கில்லை...

"...நம் நாட்டில் சனநாயகம் குழந்தைப் பருவத்தில் இருக்கிறது. அதிலும் நாங்கள் இதுபோன்ற பாராளுமன்ற சனநாயக அமைப்புகளின் நடவடிக்கைகளுக்குப் புதியவர்கள்—அநுபவம் இல்லாதவர்கள். அந்த வகையில் குழந்தை தவறு செய்துவிட்டால்—குறும்புத்தனமாக நடந்து கொண்டால்—தாய் அதிகமாக அடித்துவிடாமல் கண்டித்துக் கட்டியணைத்துக் கொள்வதுபோல எங்களையும் தாங்கள் புன்சிரிப்

போடு கூடிய கட்டளையினால் திருத்த வேண்டும்; சனநாயக வாதிகளாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளு கிறேன்...

"...அரசியல் என்னும் இந்த இரயில் வண்டிக்குள் ஆதிக்கம் வாய்ந்தவர்கள் (ஆளும் கட்சியினராகிய காங்கிர சார்) இருப்பார்கள். எங்கள் வருகையைக் கண்டு அவர்கள் முகம் சுருங்கும் வகையில் அவர்களைப் பார்த்து, காலை மடக்கிக் கொள்ளுங்கள் என்று நாங்கள் சொல்வதற்கு முன்னாலேயே, நீங்கள் உங்களுடைய கருணைப் பார்வையினா லேயே அவர்கள் காலை மடக்கிக்கொண்டு எங்களுக்கு இடந் தரச் செய்ய வேண்டும்; நியாயத்திற்காகக் கருணை உள்ளத் தோடு நீங்கள் தீர்ப்பளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். தங்களுடைய ஆட்சியின்கீழ் இந்த மன்றத்தின் கண்ணியம் உண்மையிலேயே சிறப்புறும் என்று சொல்லி இந்தச் சபையின் கண்ணியத்தையும் கௌரவத்தையும் காப்பதில் எங்களுக்கு ஏதாவது பங்கு கிடைக்குமானால் மகிழ்ச்சி அடைவோம் என்று கூறி வணக்கம் தெரிவித்துக் கொள்கிறேன்."

மேலே காட்டியுள்ள, முதல் சட்டமன்றச் சொற் பொழிவின் சில பகுதிகளிலிருந்தே, (1) ஒரு பாராளுமன்ற வாதி எவ்வளவு கண்ணியமாக நடக்க வேண்டும், (2) ஆளுங்கட்சியினர் எதிர்க்கட்சியினரை எந்த அளவுக்கு மதிக்க வேண்டும், (3) ஒரு சட்டமன்றத் தலைவர் ஆளுங் கட்சியை ஒரு தட்டாகவும், எதிர்க்கட்சிகளை ஒரு தட்டாக வும் தாங்கி, துலாக்கோலைப்போல எத்துணை நடுநிலைமை யோடு நடக்க வேண்டும்—நல்ல தீர்ப்புகளை வழங்க வேண்டும், (4) சட்டமன்றத்தின் கௌரவத்தைக் காக்கும் பொருட்டு அதன் தலைவருக்கு எவ்வளவு கட்டுப்பட்டு மற்ற உறுப்பினர்கள் நடக்க வேண்டும்—என்பனவற்றையெல் லாம் சுருங்கச் சொல்லி விளங்க வைத்துவிட்டார் அண்ணா!

இங்கிலாந்து நாட்டு எட்மண்ட்பர்க்கே, இன்று மட்டும் உயிரோடு இருந்தால், பாராளுமன்றவாதி எவ்வாறு இருக்க வேண்டும் என்ற பாலபாடத்தைப் பயில்வதற்கு நம் அண்ணாவிடமே வருவார் என்று பகரும் அளவுக்கு

அண்ணாவின் முதல் சட்டமன்றச் சொற்பொழிவு பொன்னே போல் பொலிகிறது—ஒளிர்கிறது, இல்லையா?

### சட்டமன்றத் தலைவரின் சான்றிதழ்

இந்த முதல் உரை மட்டும் அன்று; அடுத்தடுத்து அண்ணா சட்டமன்றத்தில் நிகழ்த்திய ஒவ்வொரு உரையுமே, கற்கண்டுக் கட்டிதான்! கருப்பஞ்சாறுதான்!

"...நான் அண்ணாதுரை அவர்களுடைய பேச்சைத் தினமும் சட்டசபையில் கேட்டுக்கொண்டிருக்கிறேன். இலட்சக்கணக்கானவர்களில் நானும் ஒருவன். எப்படியானாலும், திரு. அண்ணாதுரை அவர்கள், 'என் முக்கிய சிஷ்யர்களில் ஒருவனாக நீயும் வந்து சேருவாய்!' என்று கூறி என்னை அழைத்துக்கொள்வார் என்று எதிர்பார்க்கிறேன். பேசுவதில் மட்டுந்தான் சிஷ்யன் என்று சொன்னேன். காலமாறுதலில் மற்ற துறைகளில்கூட அண்ணாவுக்கு நானும் ஒரு சிஷ்யனாகி விடுவேனோ என்னவோ தெரியவில்லை."

—என்று அப்போதைய சட்டமன்றத் தலைவரான டாக்டர் யூ. கிருஷ்ணாராவ் அவர்களின் பாராட்டைவிட, அண்ணாவின் அழகு வழியும் சட்டமன்றச் சொற்பொழிவுகளுக்குப் பிறிதொரு அணிந்துரை வேண்டுமா என்ன?

# 24. சென்னை மாநகராட்சியில் தி. மு. க.

## செயல் திறனில் தீரர்!

சட்டமன்ற நுழைவுக்குப் பின்னர், 'வெறும் வாய்ச் சொல்லில் வீரர்' ஆக மட்டும் விளங்க விரும்பவில்லை அண்ணா. செயல் திறனிலும் தம் தீரத்தைக் காட்ட விழைந்தார் அவர்.

## தண்டலம் மாநாடு

தம்முடைய அந்த ஆர்வத்தின் அறிகுறியாக தாம் போட்டியிட்டு வென்ற காஞ்சீபுரம் தொகுதியில் உள்ள 'தண்டலம்' என்னும் சிற்றூரில் ஒரு மாநாட்டுக்கு ஏற்பாடு செய்தார். அதற்கு அப்போதைய முதலமைச்சராக இருந்த திரு. காமராசர் அவர்களை அழைத்து வந்தார்.

'அமைச்சரே! நம் நாட்டில் மாதம் மும்மாரி பொழிகிறதா?...மக்கள் வளமாக வாழ்கிறார்களா?'—என்று கோலோச்சும் மன்னன் கொலுமண்டபத்தை விட்டு வெளி வராமல் கேட்கும் 'நாடக பாணி அரசியல்' மக்களாட்சி நெறி முறையிலும் தொடர்ந்து தலையெடுக்கக் கூடாது என்னும் தூய நோக்கில்தான் அண்ணா—'தண்டலம் மாநாட்டுக்கு' ஏற்பாடு செய்தார்; அங்கே முதலமைச்சரும் பொது மக்களும் நேர் கலந்து உரையாடி, நெஞ்சம்விட்டுப் பழகும் வாய்ப்பினை ஏற்படுத்தினார். அந்தக் 'கோரிக்கை மாநாடு' மாபெரும் வெற்றியைத் தேடித் தந்தது; அதனால் அண்ணாவின் செல்வாக்குப் பொதுமக்களிடையே மேலும் உயர்ந்தது.

## நேருவின் வசைமழை

பண்டித சவகர்லால் நேரு, இந்திய விடுதலைக்காகப் பாடுபட்ட அரும்பெரும் தளபதி. 'என்னுடைய நெஞ்சம்

---

நினைப்பதைத்தான் நேருவின் வாயிலிருந்து கேட்கிறீர்கள்'— என்று காந்தியடிகளே கூறும் அளவுக்கு அவரது அரசியல் வழித்தோன்றலாகத் திகழ்ந்தவர்; வாழ்நாளில் ஒன்பது ஆண்டுக் காலத்திற்குமேல் சிறைப் பறவையாகத் திகழ்ந்த தியாகச் செம்மல்; பகைவர்க்கும் அருள்புரியும் பண்பாளர்; 'கபடு' என்பதே அறியாத நிமிர்ந்த நெஞ்சினர்; நேர்மையின் திலகர்.

இத்துணைச் சிறப்புக்கள் அமைந்தவராக விளங்கிய நேருவிடமும் ஒரு பெருங்குறைபாடு இருந்தது. அதுதான் அவரது நெருப்பினுங் கொடிய முன்கோபம்.

"சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்"

—என்று வள்ளுவர் பெருந்தகையே எச்சரிக்கவில்லையா?

அந்தப் பொல்லாச் சினம் பொங்கி எழுந்துவிட்டால் தாம் என்ன சொல்கிறோம் என்பதே அவருக்குத் தெரியாது. தம்முடைய சுடுசொற்களைக் கேட்டு மற்றவர்கள் மனம் புண்படுமே என்றெல்லாம் அவர் சிந்திப்பதே இல்லை; இறுதி வரை அவர் இதில் திருந்தவும் இல்லை.

முன்னரே, 'சித்தூர் தமிழர் போராட்டத்தை' நேரு வாய்த்துடுக்காக வசைபாடியது பற்றியும், அதன் நிமித்தமாகவே மும்முனைப் போராட்டங்களுள் ஒன்றான 'இரயில் நிறுத்தக் கிளர்ச்சி' ஏற்பட்டது என்பது பற்றியும் விரிவாகக் குறிப்பிட்டுள்ளோம். அதே வாய்த் துடுக்கு 1959-லும், நேரு பெருமகனாரை விட்டு அகலவில்லை.

அச்சமயம் பெரியார் ஈ. வே. ரா. அரசியல் சட்டத்தைக் கொளுத்துகின்ற கிளர்ச்சி ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தார். அதைக் கேட்டு நேருவுக்கு எரிச்சல் ஏற்பட்டு விட்டது. உடனே,

"...இந்தக் கிழடுகளையெல்லாம் எங்காவது பைத்தியக்கார விடுதிக்கு அனுப்பினால் என்ன?...அவர்களுடைய செய்கை முட்டாள்தனமானது; அதற்காக, அவர்களை மூட்டை முடிச்சுகளுடன் நாட்டைவிட்டேகூட ஓட்டிவிட வேண்டியதுதான்" என்று பெரியாரை வாய்க்கு வந்தவாறு வசைபாடி விட்டார்.

## பெரியார் ஓர் பேர் இயக்கம்

தமிழக வரலாற்றில் 'பெரியார்' என்பவர் ஒரு தனி நபர் அல்லர்; ஒரு மாபெரும் இயக்கம்! சாதி—சமய ஆணவத் தளைகளையெல்லாம் அறுத்தெறிந்து தமிழர்கள் இன்று தலை நிமிர்ந்து நடக்கிறார் என்னில் அதற்கு முழுமுதற் காரணர். இரட்சகர் (Redeemer) பெரியாரே! இவ்வுண்மையை முழுமையாக உணர்ந்தவர் அண்ணா. தம்மைத் தொடக்க கால அரசியல்வாதியாக உருவாக்கிய தம்முடைய ஆசானை நேரு இழித்துப் பேசியதை அண்ணாவால் பொறுக்க முடியவில்லை. எனவே, நேருவுக்குத் தம் எதிர்ப்பினைக் காட்ட நினைத்தார் அவர்.

## கறுப்புக்கொடி போராட்டம்

6—1—1958-இல் நேரு சென்னை மாநகர் வருவதாகத் திட்டமிட்டிருந்தார். அப்போது அவருக்குக் கறுப்புக் கொடி காட்டுவதென்று தி. மு. கழகப் பொதுக்குழு முடிவெடுத்தது. அதைப்பற்றி விளக்குவதற்காக சென்னையில் 3—1—58-இல் ஒரு பொதுக்கூட்டத்திற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், அக்கூட்டம் நடைபெற அதிகாரிகள் இசைவு தரவில்லை. எனினும் தடையை மீறிப் பேச்சுரிமையை நிலைநாட்ட குறிப்பிட்ட இடத்தில் கூட்டம் நடந்தே தீரும் என்று அறிக்கை விட்டார் அண்ணா.

அதைத் தொடர்ந்து அடக்குமுறை அவிழ்த்து விடப்பட்டது. அண்ணாவும், பிற முன்னணி வீரர்களும் முன் கூட்டியே சிறை விருந்து பரிமாறப்பட்டனர். எனினும் பொதுமக்களின் எழுச்சித் தீயை அரசினால் அவ்வளவு எளிதில் அடக்கிவிட முடியவில்லை; அது கொழுந்துவிட்டே எரிந்தது!

நேரு பெருமகனார் 6—1—58-இல் சென்னையில் காலடி வைத்த வேளை நன்றாக இல்லை. தமிழக அரசு எத்தனையோ எச்சரிக்கையான ஏற்பாடுகளைச் செய்திருந்தும்கூட, கருங்கடல் அலைகளைப்போலப் பல்லாயிரக்கணக்கான கறுப்புக் கொடிகள் நேருவுக்கு வரவேற்புக் கொடுத்தன. அவற்றின் உணர்ச்சித் துடிப்பைக் கண்டு அதிர்ச்சிக்கு ஆளானார் நேரு.

அவருடைய பயணத் திட்டங்கள் பற்பல மாறுதல்களுக்கு இரையாயின. முடி மன்னரைப் போலவே அடிபணியப் பெற்ற நேரு, தமக்கு இத்துணை எதிர்ப்புக் கிளம்பும் என்று எதிர்பார்க்கவே இல்லை.

அன்று சென்னை நகரமே குழப்பத்தில் தத்தளித்தது. குதிரைப் படையாலும், வேறு முறைகளாலும், காவல் துறையினர் ஆடிய அடாத ஆட்டத்துக்கு அளவே இல்லை; அவர்களுடைய அதிகார வெறிக்கு இருவர் பலியாயினர். பலர் காயமுற்றனர்.

இவ்வாறாகத் தம்முடைய பழைய குருவான பெரியாரை ஒருவர் இழித்துப் பேசுகிறார் என்றால், அவர் 'ஆசியாவின் சோதி'யாகவே இருந்தாலும், அவருக்குத் தகுந்த பாடங் கற்பிக்கவும் தயங்கியவர் அல்லர் அண்ணா.

## உள்ளாட்சி மன்றங்கள்

ஒரு நாட்டின் நிருவாகம் சீராக நடைபெறுவதற்கு ஆங்காங்கே உள்ள, ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி மன்றங்களும் செவ்வனே இயங்க வேண்டும். அவற்றில் பழுதுகள் படியத் தொடங்கிவிட்டால், போறை விழுந்த பூவரசம் மரம்போலவே, அரசு யந்திரமே நிலைகுலைந்து போகும்.

அதனால்தான், மேனாட்டினர் அரசாங்கத்துக்கு அடுத்த நிலையில் உள்ளாட்சித் துறை மன்றங்களுக்கு (Civic Bodies) உரிய மதிப்பளிக்கின்றனர். ஓர் அரசியல் கட்சி நாட்டின் முக்கியமான நகரங்களின் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வலிமையை அடைந்து விட்டால், அடுத்து அது அரசாங்கத்தையே கைப்பற்றுவது எளிது என்று அவர்கள் கருதுகின்றனர்.

## மேற்கு செர்மனி எடுத்துக்காட்டு

எடுத்துக்காட்டாக, மேற்கு செர்மனித் தலைநகரான போன் (Bonn) மாநகராட்சி, டாக்டர் அடினாரைத் தலைவராகக் கொண்ட கிறிஸ்டியன் சனநாயகக் கட்சியின் வசமே பலகாலம் இருந்தது. அண்மையில், அக்கட்சியை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்திய வில்லி பிரண்ட் (Willy Brandt)

என்பவரின் கட்சி அதனைக் கைப்பற்றி விட்டது. அவரே, அம்மாநகராட்சி மன்றத்தின் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்று விட்டார். இவ்வாறு போன் (Bonn) மாநகராட்சி யையே கைப்பற்றி விட்டதால், மேற்கு செர்மனி அரசாங் கத்திலேயே வில்லிபிராண்ட் இடம் பெற்று விட்டாலும் வியப்படைவதற்கு இல்லை என்று அரசியல் திறனாய்வாளர் 'ஆருடம்' கூறினர். அவர்கள் ஊகம் பொய்த்து விடவில்லை. கடைசியாக நடைபெற்ற தேர்தலில் அடினுரின் கட்சி முழு வெற்றி பெற முடியவில்லை. அதே சமயம் வில்லிபிராண்ட் டின் கட்சிக்கு எதிர்பார்ப்பதற்குமேல் கணிசமான வெற்றி கிட்டியது. அண்மையில், திரு. கெய்சங்கர் தலைமையில் அமைந்த மேற்கு செர்மனி அமைச்சரவையில், வில்லி பிராண்ட்டும் ஓர் அமைச்சராக இடம் பெற்றுவிட்டார்.

இதே போலத்தான், தமிழக அரசைக் கைப்பற்று வதற்கு முன்னர் சென்னை மாநகராட்சியைக் கைப்பற்று வதில் தீவிரமாய் இறங்கிற்று தி. மு. கழகம்.

## அண்ணு விரும்பிய சென்னை மாநகராட்சி

அண்ணு எப்பொழுதுமே குறைந்த நம்பிக்கை வைத்து, நிறைந்த பலன் வருவதையே விரும்புகின்றவர். அளவு மீறிய நம்பிக்கை (Over-Confidence) வைத்து, அவதிப்படும் இயல்பு அவருக்கு இல்லை. இதனுல், தன நம்பிக்கையே இல்லாதவர் என்று அவரைச் சிலர் தவருகவும் எடை போடுவதுண்டு. வெற்றி கிட்டும் என்று உறுதியாகத் தெரிந் தால் அன்றி அதைப்பற்றித் தம்பட்டம் அடிப்பானேன்? பிறகு தோல்வி என்றதும் துவண்டு விழுவானேன்? என்ற போக்கில்தான் அவர் எந்த முயற்சியில் ஈடுபட்டாலும் குறைந்த நம்பிக்கையே கொள்வது வழக்கம். சென்னை மாநகராட்சித் தேர்தலைப் பற்றியும் அத்தகைய கருத்தைத் தான் அண்ணு கொண்டிருந்தார்.

## கலைஞர் கருணுநிதியின் அரசியல் ஊகம்?

ஆனுல், அரசியல் விளைவுகளை ஊகிப்பதில் கலைஞர் மு. கருணுநிதி கைதேர்ந்தவர். ஆன்மீகவாதிகளைக் கேட் டால், 'அவர் வாக்கில் விஷம் இருக்கிறது; அதனுல்தான்

அவர் என்ன சொன்னாலும் தவறாமல் பலிக்கிறது!' என்று வியப்போடு கூறுவார்கள். ஆனால், நாம் அவரை அந்தக் கண்ணோட்டத்துடன் நோக்கவில்லை. எனவே அரசியல் ஊகத் திறமை (Proficiency in Political Prophecy) நிரம்பப் பெற்றவர் என்று பாராட்டும் அளவோடு நின்று கொள் கிறோம். அவருடைய ஊகத் திறமைக்கு ஒரு சிறிய நிகழ்ச் சியே போதிய சான்றாகும்.

மாநகராட்சித் தேர்தலில் கலந்துகொள்வது பற்றிக் கட்சியின் மேலிடத் தலைவர்கள் விவாதிக்கின்ற வேளை.

அண்ணா சொல்கிறார்: "சென்னை மாநகராட்சியில் நூற்றுக்கு இருபது இடங்களைப் பிடித்து விட்டாலே, போது மானது; அதுவே இன்றுள்ள நிலையில் நமக்கு மாபெரும் வெற்றியாகும்."

கருணாநிதி சொல்கிறார்.

"...மாநகராட்சித் தேர்தலில் இருபது இடங்களை மட்டு மல்ல; காங்கிரசுக் கட்சியைக் காட்டிலும் அதிகப்படியான இடங்களையேகூட நம்மால் பிடிக்க முடியும். ஏன், மேயர் பதவியையேகூட நம்மால் பிடித்துவிட முடியும்!..."

அண்ணா சொல்கிறார்:

"...தம்பி, கருணாநிதி கூறுவதுபோல் சென்னை மாநகராட்சியை மட்டும் நம் கழகம் கைப்பற்றி விடுமானால்—அதற்கு ஆகவேண்டிய முயற்சிகளை அவர் மேற்கொள்வா ரானால்—அவருக்குத் தங்க மோதிரமே பண்ணிப் போடு வேன்!"

**மாநகராட்சியில் தி. மு. க.**

1959-ஆம் ஆண்டில் நடைபெற்ற சென்னை மாநகராட் சித் தேர்தலில் 90 இடங்களுக்கு மட்டுமே கழகம் போட்டி யிட்டது! காங்கிரசோ 100 இடங்களுக்கும் ஆட்களை நிறுத் திற்று.

முதலமைச்சர், திரு. காமராசர் அவர்களே முன்னின்று காங்கிரசுத் தேர்தல் யந்திரத்தை முடுக்கி விட்டார்; பிற அமைச்சர்களும் அவ்வாறே தம் செல்வாக்கைப் பயன்படுத்தி வாக்குகளைத் திரட்டுவதில் ஊக்கத்துடன் ஈடுபட்டனர்

முடிவில், என்னதான் மருந்துச் செலவு செய்தும் பிள்ளை பிழைக்கவில்லை என்கிற கதையாக காங்கிரசாரின் முயற்சிகள் அனைத்தும் விழலுக்கிறைத்த நீராயின. இருபதாண்டுக் காலமாக அவர்களுடைய ஏகபோக உரிமையாக இருந்த மாநகராட்சி மன்றம் அவர்கள் கைகளை விட்டு நழுவிச் சென்றது; அதனைத் தி. மு. கழகம் கைப்பற்றிக்கொண்டது.

100 இடங்களுக்குப் போட்டியிட்ட காங்கிரசு, 37 இடங்களை மட்டுமே பிடித்து தனக்கிருந்த செல்வாக்கை இழந்தது. 95 இடங்களில் மட்டுமே வேட்பாளர்களை நிறுத்தியிருந்த தி. மு. கழகமோ 45 இடங்களைக் கைப்பற்றிய மிகப் பெரும்பான்மை வலிமை பெற்ற கட்சியாகத் தலை நிமிர்ந்தது.

1959-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24-ஆம் நாள், சென்னை மாநகரின் வரலாற்றிலேயே ஒரு பொன்னான திருப்பு முனை ஆகும். ஆம்; அன்றுதான், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த ஒருவர் — திரு. அ. பொ. அரசு அவர்கள்—முதன் முதலாக, 'ரிப்பன் கட்டிட மாளிகையில்' மேயராகக் கொலுவேறினார்.

## தங்க மோதிரம் தந்தார்!

இவ்வாறாகக் கலைஞர் மு. கருணாநிதி 'மாநகராட்சியைப் பிடித்துவிடுவோம்' என்று நம்பிக்கையோடு அளித்த வாக்குப் பலித்து விட்டது!

அண்ணாவும், தாம் வாக்களித்தவாறே தம் அருமைத் தம்பிக்கு தங்க மோதிரம் பரிசளித்து மகிழ்ந்தார்.

இதிலிருந்து, தாம் சொன்ன சொல்லைக் காப்பாற்றுவதில், கண்ணாக இருப்பார் அண்ணா என்பதும் தெளிவாகிறது அல்லவா?

# 25. சோதனைத் தீ

## எதிர் நீச்சல்

ஆற்று வெள்ளத்தில் எதிர் நீச்சல் அடித்துக் கரையேறியபின் ஏற்படக்கூடிய இன்பம், வலிமை, பெருமிதம்,—வெள்ளத்தின் போக்கிலேயே மிதந்து செல்வதில் இருப்பதில்லை.

தனி மனித வாழ்வோ, சமூக இயக்கமோ, அரசியல் கட்சியோ எதுவாயினும் தன்னுடைய பயணத்தில் குறுக்கிடும் தொல்லைகள் என்னும் வெள்ளத்தில் எதிர்நீச்சல் அடித்துக் கரையேறும் பொழுதுதான், அது முழுமையான வளர்ச்சியையும், நிறைவான மகிழ்ச்சியையும் எய்தியது ஆகிறது.

அடுக்கடுக்காகத் தொடர்ந்து வரும் சோதனைகளைச் சந்தித்து, வேதனைகளைத் தாங்கி அவற்றில் அடையும் சாதனைகளில்தான் உண்மையான சுவையிருக்கும்.

அதனால்தான் போலும் அண்ணாவின் அரசியல் பயணமும் சோதனைகள் நிரம்பிய போர்க்களமாகவே தொடர்ந்து நடை போட்டுள்ளது! அவரை அல்லற்படுத்திய கொடுஞ் சோதனைகளில் எல்லாம் கொடுமையானது 1961-இல் தி. மு. கழகமே பிளவுண்டு சிதறிவிடுமோ என்று அஞ்சும் அளவுக்கு ஏற்பட்ட சோதனையே ஆகும். திரு. ஈ. வெ. கி. சம்பத், அண்ணாவிடமே மோதலைத் தொடங்கிப் பின்னர் கட்சியை விட்டே வெளியேறிய நிகழ்ச்சியையே இவ்வாறு குறிப்பிடுகிறோம்.

## அண்ணா—சம்பத் அன்புப் பிணைப்பு

திரு. ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், பெரியார் ஈ. வே. ரா. அவர்களுடைய அண்ணன் திரு. ஈ. வெ. கிருட்டிணசாமி அவர்களின் மூத்த பிள்ளை ஆவார். பெரியாரைத் தம் தலைவராக ஏற்றுக்கொண்டு, அண்ணா ஈரோடு செல்லத் தலைப்

பட்ட நாள் முதற்கொண்டு, அண்ணாவுக்கும் நெருக்கமான பழக்கம், பற்று, பாசம் உண்டாகி வளர்ந்து விட்டன. பெரியார் எவ்வாறு அண்ணாவைத் தம் அரசியல் தத்துப் பிள்ளையாக வரித்துக் கொண்டாரோ, அவ்வாறே, அவரைப் போலவே, ஏன் அவரையும் மிஞ்சியும்கூட அண்ணா அவர்கள் சம்பத்திடம் அளவுக்கு மீறிய வாஞ்சையைப் பொழிந்து தம் உடன்பிறவாத் தம்பியாகவே வரித்துக் கொண்டார்.

தாம் எங்கே சென்றாலும் சரி; சம்பத்தையும் கூடவே அழைத்துச் செல்வார் அண்ணா. தமக்கு என்ன தின்பண்டம் கிடைத்தாலும் சரி; அதைச் சம்பத்துக்கும் பகிர்ந்தளித்தால்தான் அண்ணாவுக்கு உறக்கம் வரும்; சம்பத்துக்கும் அப்படித்தான். அண்ணாவை விட்டு அவரால் அரைக்கணமும் பிரிந்திருக்க முடியாது. அண்ணாவோடு உரையாடிக் களிப்பதென்றாலே, சம்பத்துக்குத் தணியாத வேட்கை; தனியான இன்பம்! அவர்களுடைய இந்த இணைபிரியா இதயக் கலப்பு, சில சமயம் பெரியாரின் கண்களையும் உறுத்தியதுண்டு.

## சம்பத்தின் மேடைக் கூச்சம்

அந்த நாளில், திரு. சம்பத் அவர்களுக்கு மேடைப் பேச்சு அவ்வளவாக வராது. இளம் வயதுதான்; அதற்கேற்ற துடிப்புத்தான்; ஆனாலும் ஏனோ அவைக் கோழைத் தனம் அவரை ஆட்டிப் படைத்தது. எனவே எங்காவது மேடையில் ஏறவேண்டும் என்றால் கூடியவரை தவிர்த்து விடுவார்.

## வழிமறித்த நாடு?

ஒரு சிறிய நிகழ்ச்சி!

1946-இல் திருச்சியில் திராவிடர் கழக மாநாடு நடைபெற்று முடிந்து சிலகாலமே ஆகியிருந்தது. பட்டுக் கோட்டையில் ஒரு திருமண விழாவில் கலந்து கொள்வதற்காகத் தஞ்சை வழியாக அண்ணா செல்லவிருக்கிறார் என்ற செய்தி இடையில் உள்ள எல்லா ஊர்களுக்கும் பரவி விட்டது.

அப்போது மதியம் ஒரு மணி இருக்கும்.

உரத்தநாடு, முத்தம்பாள் சத்திரக் கட்டிடத்தில் இயங்கும் உயர்நிலைப் பள்ளியை விட்டு மாணவர்கள், ஓடோடி நடுவீதிக்கு வருகிறார்கள். அண்ணாவைப் பார்த்து விட வேண்டும் என்னும் ஆர்வம் ததும்புகிறது அவர்கள் விழிகளில்?

கறுப்புநிறக் கார் ஒன்று வருகிறது. பந்தயக் குதிரையாகப் பறந்து வருகிறது. அதிலே அண்ணாவும் வேறு சிலரும் அமர்ந்திருப்பது தெரிகிறது. படிக்குளத்தின் கீழ் கரைப் பக்கமாகக் கார் கடை வீதியில் வரும்பொழுதே, மாணவர்கள் சூழ்ந்து கொள்கிறார்கள். அண்ணாவின் பயணத் திட்டபடி அவர் உரத்த நாட்டில் இறங்க வேண்டிய கட்டாயம் இல்லை. எனவே, காருக்குள்ளிருந்தவாறே, சூழ்ந்து ஓடி வருவோர்க்கு வணக்கம் செலுத்துகிறார். அப்போதெல்லாம் கார்களுக்குப் படிக்கட்டு (Foot Board) உண்டு. சற்றைக்கெல்லாம், செக்கச் சிவந்த இளைஞர் காரின் படிக்கட்டில் ஏறுகிறார். உரத்த நாட்டில் திராவிடர் கழகம் முதன் முதலாக முளைவிட்டுத் தளிர்க்க வைத்த திரு. சீதா என்பவரே அவ்விளைஞர்.

''அண்ணா! உங்கள் முகத்தைப் பார்க்கவும் உங்கள் வாயால் ஒரே ஒரு வார்த்தையாவது கேட்கவும், எவ்வளவு துடிப்போடு, இதோ இந்த மாணவர்களும், இளைஞர்களும் காரின் பின்னாலேயே ஓடி வருகிறார்கள், பார்த்தீர்களா! தயவுசெய்து, ஒரே ஒரு நிமிடம் இந்த ஊருக்காக ஒதுக்குங்கள்''

—என்று கெஞ்சுகிறார்.

அண்ணா மறுத்துப் பார்க்கிறார். இளைஞர் விடுவதாக இல்லை. கணப்பொழுதில் கடை வீதியை விட்டு, துரோபதி அம்மன் கோவில் தெருவில் உள்ள அவ்விளைஞரின்—சீதாவின்—வீடு நோக்கிக் கார் திரும்புகிறது.

அங்கே நூற்றுக்கணக்கில் மாணவர்கள் திரண்டு நிற்கின்றனர். அவர்களுடைய சார்பில் திரு. சங்கிலிமுத்து என்னும் மாணவர் அண்ணாவை வரவேற்றுப் பேசுகிறார். அண்ணாவும் அழகு ததும்ப அறிவுரை பகர்கிறார். தம் உரையினூடே, இளைஞர் சீதா தம்மை உரத்த நாட்டில் இறங்கும்படி செய்துவிட்ட ஆர்வத்தை நயமாகப் பாராட்டும்

வகையில், "...இந்த ஊரை நான் மறக்கமாட்டேன். அப்படியே, உரத்த நாடு என்னும் பெயரை நான் மறந்துவிட்டாலும், 'வழிமறித்த நாடு'—என்னும் அளவிலாவது நினைவில் வைத்திருப்பேன்"—என்று அண்ணு வேடிக்கையாகப் பேசி கை தட்டல் பெறுகிறுர்.

அப்போது சம்பத் எங்கே இருந்தார் தெரியுமா?

வெளியே, தெருவில் நின்றிருந்த காரில்தான் அமர்ந்திருந்தார் சம்பத்.

'அதோ, சம்பத்கூட இருக்கிறுரே! அவரையும் இரண்டு வார்த்தை பேசச் சொல்லலாமே!'—என்கிறது ஒரு குரல்.

'அடப் பாவமே! உமக்கு விஷயம் தெரியாதா? சம்பத்துக்கு மேடைப் பேச்சு வராது, ரொம்பக் கூச்சப்படுவார்'—என்கிறது இன்னெரு குரல்.

பின்னவர் கூறியது மெய்தான் என்பது போல சைகை செய்து புன்னகை பூக்கிறுர் சம்பத்.

இதில் வருந்தற்குரிய செய்தி என்னவெனில், அன்று அண்ணுவை வழிமறித்த திரு. சீதாவும் இன்று உயிரோடு இல்லை; அப்போது அண்ணுவை வரவேற்ற திரு. சங்கிலி முத்துவும் (பின்னல் தமிழ்ப் புலவராகி, பி. ஏ., பட்டதாரியாகி,) இன்று உயிரோடு இல்லை.

இவ்வாறு பேச்சுக் கலையில் அந்த நாட்களில் பின் தங்கி நின்ற திரு. சம்பத் இன்று எவ்வளவு சிறந்த பேச்சாளராக மாறிவிட்டார்!

## சொல்லின் செல்வர் !

கம்பராமாயணத்தில் அநுமனைத்தான் 'சொல்லின் செல்வனு'க்—கம்பர் அழகுபடத் தீட்டிக் காட்டியுள்ளார்.

இவ்விருபதாம் நூற்ருண்டுத் தமிழ் அறிஞர்களில், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராகப் பல ஆண்டுகள் பணியாற்றிய திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களுக்கும் 'சொல்லின் செல்வர்' என்னும் பட்டம் உண்டு.

அதே புகழாரம்தான் பின்னர் திரு. சம்பத்துக்கும், தம் கழகத் தோழர்களால் சூட்டப்பெற்றது.

இன்று 'சொல்லின் செல்வர்' என்றால், தமிழ்ப் புலவர்கள்தாம் 'அநுமனைப்'பற்றி நினைப்பார்கள்; திரு. ரா. பி. சேதுப்பிள்ளையைப் பற்றியும் எண்ணுவார்கள். ஆனால் பல்லாயிரக்கணக்கான பொதுமக்களுக்கு யாரைப்பற்றி உடனே நினைவுக்கு வரும் ?

திரு. சம்பத் அவர்களைப் பற்றித்தான் என்பதில் சந்தேகமே இல்லை.

## மனச்சான்றும் மறக்குமா

அத்துணைச் சிறந்த சொற்பொழிவுக் கொண்டலாக—'சொல்லின் செல்வராக'—சம்பத் எப்படி உயர்ந்தார்? யாரால் உயர்ந்தார்?

அண்ணா, அண்ணா, அண்ணாவால்தான் அவ்வாறு உயர்ந்தார்!

இப் பேருண்மையைத் திரு. சம்பத் அவர்கள் இன்று மறந்திருக்கலாம்; மறுத்தும் கூறலாம்; ஆனால், அவர் இறக்கும் பொழுதுகூடவா, அவருடைய மனச்சான்று அண்ணா புரிந்த நன்மைகளை மறந்துவிடும்? மறுக்கவும் துணியும்?

## அண்ணாவின் தத்துப் பிள்ளை

திரு. சம்பத்தை அண்ணா தம் 'தத்துப் பிள்ளையாகவே' வரித்துக்கொண்டு அரசியல் துறையில் வளர்த்து வந்தார் என்பது வெறும் ஒப்புக்குச் சொல்லும் உரையா? உளப் பூர்வமான உண்மை நிகழ்ச்சியே. அது மற்றக் கழகத் தம்பியர்களுக்குத் தாம் அளித்த சலுகைகளையும், உரிமைகளையும் மதிப்பையும்விட ஒரு படி மிகுதியாகவேதான் சம்பத்துக்கு அண்ணா அவற்றை வழங்கினார்.

ஆனால் திரு. சம்பத்தோ, அண்ணாவின் அந்தப் பெருந் தன்மையை, பேரறிவை, அடக்கத்தை, இரக்க குணத்தைத் தவறாகக் கணித்துவிட்டார்; குறைவாகவும் மதிக்க முற்பட்டுவிட்டார்.

## இதயமும் இடம் கொடுத்ததோ ?

உயிருக்குயிராய்ப் பாசத்தைக் கொட்டிய ஓர் உத்தமப் பிறவியை, வைரக் கல்லாய் ஒளியைப் பரப்பும் ஓர் அறிவுச்

சுடரை, மக்களாட்சி, நெறிமுறைக்குத் தக்க மதிப்பளிக்கும் ஒரு மணி விளக்கை, அகந்தை என்பதே அணுவும் இல்லாத ஓர் அன்புக் கடலை,—அண்ணாவை—இவ்வளவு விரைவில் உதறி எறிவதற்கு சம்பத்தின் இதயம் எப்படித்தான் இடங் கொடுத்ததோ? கொள்கை மாறுபாட்டால் அவர் விலகி யிருந்தால்கூட நம்மால் அவரது செய்கையை ஒப்புக் கொள்ள முடியும்!

## தோல்வி மனப்பான்மையின் விளைவா?

'கழகத் தலைவர்கள் வரிசையில், அண்ணாவுக்கு அடுத்த இடம் வகிக்கும்போது, இனி நாவலர் நெடுஞ்செழியனுக்குக் கூட இல்லாத வகையில் சொல்லின் செல்வர், சம்பத் துக்கே கிட்டிவிடும்போல் இருக்கிறதோ!'—என்று கழகத் தவரே வியக்கும் அளவுக்குத் தம் பேச்சு வன்மையாலும், செயலாற்றலாலும் வளர்ச்சி அடைந்துவிட்ட திரு. சம்பத் எப்படித்தான் எரிச்சல் மிக்கவராகப் பின்னர் மாறினாரோ?

கலைஞர் மு. கருணாநிதியும், புரட்சி நடிகர், எம். ஜி. இராமச்சந்திரனும் கழகத்திற்குள் பெற்றுவிட்ட மின்னல் வேகச் செல்வாக்கு திரு. சம்பத்தின் கண்ணை உறுத்தி யதே அவர் எரிச்சலுக்குக் காரணம் என்றும் சிலர் சொல்லுகிறார்கள்.

அவர்களுடைய செல்வாக்கை அழிக்க முடியாமல் தோல்வி கண்டதால்தான், அடக்கத்துக்குப் பெயர் பெற்ற அண்ணாவைத் திரு. சம்பத், பழிக்க முற்பட்டுவிட்டாரோ, என்னவோ!

## எரிச்சல் தீக்கு எண்ணெய்

அவருடைய எரிச்சலுக்கு எண்ணெய் வார்ப்பதுபோல் கழகத்திற்குள் பல நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றன.

பொதுச் செயலாளராக இருந்து, கட்சியின் கீழ்மட்டத் திலிருந்து மேல் மட்டம் வரை உறுதியான அடித்தளத் துடன் தி. மு. கழக மாளிகை எழுப்புவதற்கு இணையிலாப் பணியாற்றிய நாவலர் நெடுஞ்செழியனின் பதவிக் காலம் 1960-அக்டோபர் திங்களோடு முடிவுற்றது. அதன் பின்னர் தாமே பொதுச் செயலாளராக விழைந்துள்ளார் சம்பத்.

அங்ஙனம் முடியாத நிலையில் தம்மைச் சார்ந்தவர்களாவது அப் பதவிக்கு வரவேண்டும் என்று முயன்றுள்ளார். அவருடைய எண்ணமோ, செயலோ ஈடேறவில்லை. கழகத்தின் கட்டுக்கோப்பைக் காக்கவும், ஒற்றுமையை வலுப்படுத்தவும் போட்டிகளைத் தவிர்த்து அண்ணாவே பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். இதனால் உள்ளூர சம்பத்துக்கு ஆத்திரம் ஏற்பட்டு, நீறுபூத்த நெருப்பாகவே கனன்று கொண்டிருந்தது.

அடுத்து, 'திராவிடநாடு' இதழில் அரசியல் விளக்கக் கட்டுரை ஒன்றை அண்ணா வரைந்தார். 'எல்லாரும் இந் நாட்டு மன்னர்'—தலைப்பின் கீழ் வெளிவந்த அக் கட்டுரை, மேதை பெர்னார்ட்ஷாவின் ஆப்பிள் கார்ட் (Apple cart) என்னும் நாடகத்தைத் தழுவியதாகும்.

அக் கட்டுரை தம்மை மறைமுகமாகத் தாக்குவதாகக் சம்பத் தவறாக எடுத்துக்கொண்டு விட்டார். கவிஞர் கண்ணதாசன் அப்போது நடத்திவந்த 'தென்றல்' ஏட்டில் அதற்கு மறுப்புக் கட்டுரையும் எழுதிவிட்டார். 'அண்ணாவின் மன்னன்' என்னும் தலைப்பில் சம்பத் வரைந்த அக்கட்டுரை, கழகத்தவரிடையே பெருங் கொந்தளிப்பை ஏற்படுத்திற்று.

அதன் எதிரொலிதான், 1961-சனவரி-21, 22 நாட்களில் வேலூரில் நடைபெற்ற பொதுக் குழுக் கூட்டத்தையே பெருங் கலக்குக் கலக்கிற்று.

## வேலூர் தந்த அதிர்ச்சி

சம்பத்தும் அவரைச் சார்ந்தவர்களும், வேலூர்ப் பொதுக் குழுவில் நிறைவேற்றப் படுவதற்கென்று சில புதிய தீர்மானங்களைக் கொண்டு வருவதில் முனைந்து நின்றனர். அவருடைய திட்டங்களும், செயல்களும், பேச்சுக்களும் அண்ணாவின் ஆயிரக்கணக்கான தம்பியர்க்கு ஆத்திரத்தையே மூட்டின. அதனால் சில பரபரப்பான சூழ்நிலைகளும் ஏற்பட்டுவிட்டன. ஆனால் வெறும் சொல்லளவில் மட்டுமே நிகழ்ந்த அந்த உணர்ச்சி வெளிப்பாட்டை, வன்முறைச் செயல் என்று பொதுமக்கள் நினைக்கும் அளவுக்குத் தவறான செய்திகளையெல்லாம் மாற்றுக் கட்சி ஏடுகள் கயிறு திரித்துப் பரப்பும்வண்ணம் சம்பத் குழுவினர் நடந்துகொண்டனர்.

கழகமே உடைந்துவிட்டது என்றும் வதந்திகள் பரவத் தொடங்கிவிட்டன வெகுவேகமாக.

## அண்ணு அடைந்த வேதனை

அப்போது அண்ணு அடைந்த வேதனையோ சொல்லுந் தரமன்று.

வெறுங்கட்சி என்னும் அளவிலேயே தி. மு. கழகத்தை வளர்த்திருந்தால், அண்ணு என்ன நடந்தாலும் நடக்கட்டும் என்றே பேசாமல் இருந்திருப்பார். ஆனுல், உலக வரலாற்றி லேயே இல்லாத ஒரு புதுமையாக, ஒரு குடும்பமாகவே தி. மு. கழகத்தை அவர் சீராட்டி வளர்த்து வந்தார். அதனுல்தான் அது உடையக்கூடிய சூழ்நிலையைச் சம்பத் தோற்றுவித்தபோது அண்ணுவால் கண்ணீர்த் துளிகளைச் சிந்தாமல் இருக்க முடியவில்லை. எப்பாடு பட்டேனும் ஒற் றுமையை நிலைநாட்ட வேண்டும் என்று முழுமூச்சுடன் பாடு பட்டார் அண்ணு. சம்பத் விழைந்தவாறே தம்முடைய அதிகாரங்களையெல்லாம் விட்டுக்கொடுக்கவும் முன்வந்தார்.

## சம்பத்தின் தளராப் பிடிவாதம்

எனினும்கூட, சம்பத்தின் ஆசை தணியவில்லை; எரிச்சல் அடங்கவில்லை. அண்ணுவின் பொறுமையையும் பெருந்தன் மையையும் எல்லைமீறிச் சோதித்தார். அண்ணுவின் ஆற்றலைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் அவரை மிரட்டிப் பணிய வைத்துவிடலாம் என்ற தவமுன கருத்துக்கும் இரையாகி விட்டார். முதலில் கட்சி ஒற்றுமையைக் காப்பதாக வாக் களிப்பதும் பின்னர் அதை உடைக்கும்படியான செயல்கள் புரிந்ததுமே அவருக்கு வழக்கமாகி விட்டன.

அவைத் தலைவர் பதவி—விலகல்,

உண்ணு விரதம்,

திரு. டி. எம். பார்த்தசாரதி அவர்களின் 'தி. மு. க. வரலாறு' வெளியீட்டு விழாப் பேச்சு.

—என்று சம்பத்தின் நடவடிக்கைகள், முருங்கை மரத் தில் ஏறுவதும் இறங்குவதுமாக விக்கிரமாதித்தன் கதையில் வரும் வேதாளத்தின் விளையாட்டையே நினைவுபடுத்தின.

### சதியின் விளைவா?

திரு. ஈ. வெ. கி. சம்பத் ஆழ்ந்த சிந்தனையாளர்; தெளிந்த வாதத்திறமை படைத்தவர்; முறையான அரசியல் திறனாய்வாளர்; எல்லாவற்றிலும் மேலாக பெரியாரின் பெருங்குடும்பத்தில் பிறந்தவர். அவரைப் போன்ற பெருந் தகையாளர் நிலையில் இருக்கவேண்டியவர்கள் அண்ணாவின் அரசியல் வாழ்வைச் சீரழிக்கவும், தி. மு. கழகத்தைச் சுக்கு நூறாக உடைத்தெறியவும், முன்கூட்டியே சதித்திட்டம் தீட்டியிருப்பார்கள் என்று நம்மால் நம்ப முடியவில்லை.

ஆனால், அவரும் அவரைச் சார்ந்தவர்களும் நடந்து கொண்ட முறையோ அத்தகைய ஓர் எண்ணத்தைப் பொது மக்களிடம் தோற்றுவிக்காமலும் இல்லை.

இறுதியில், சம்பத்தின் பிடிவாதத்தின் முன்னே அண்ணா வின் பெருந்தன்மை தோற்றே போயிற்று.

ஆம்; 19—4—61-இல் தி. மு. கழகத்தைவிட்டு விலகிய திரு. ஈ. வெ. கி. சம்பத், "தமிழ் தேசியக் கட்சி" என்னும் புதிய அமைப்பினைத் தோற்றுவித்தார்.

### கழகம் உடைந்ததா?

மாற்றுக் கட்சிகள் விரும்பியவண்ணமோ, பொது மக்கள் அஞ்சியவண்ணமோ, திரு. சம்பத்தே எதிர்பார்த்த வண்ணமோ, அவருடைய வெளியேற்றத்தால்,

திராவிட முன்னேற்றக் கழகம் சுக்கல் நூறாகச் சிதறித் தெறித்துவிட்டதா?

அண்ணாவின் அரசியல் வாழ்வுகள் மண்மூடிப் போயிற்றா? அல்லவே, அல்ல?

### சம்பத் வெளியேற்றம் சரியான மருந்து

மாறாக, சம்பத்தின் வெளியேற்றம், தி. மு. கழக வளர்ச் சிக்கு மாமருந்தாகவே அமைந்தது.

1. அதுகாறும் கழகப் பணிகளைத் தம்பிகள் பார்த்துக் கொள்ள மாட்டார்களா என்று சற்று அசட்டையாகக்கூட இருந்த அண்ணா, என்றுமில்லாத துணிவோடும், சுறுசுறுப் போடும் ஆர்த்தெழுந்து தொண்டாற்ற முனைந்தார்.

2. அண்ணாவைப் பகைத்துக்கொண்டு, தி. மு. க.வை விட்டு வெளியேறினால் எங்கே சம்பத்தைப் போலத் தாமும் அரசியலில் செல்வாக்கு இழக்க நேரிடுமோ என்னும் அச்சம், இரண்டாவது—மூன்றாவது கட்டத் தலைவர்களிடையே எழுந்து அவர்களை ஓர் ஒற்றுமைப் பிணைப்பிற்குள் உட்படுத்தியது.

3. அதற்குமுன் இல்லாத ஓர் அழுத்தமான பொறுப் புணர்ச்சியை கழகத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும் அளிப்பதாகவும் சம்பத் வெளியேற்றம் அமைந்தது.

அந்தப் பொறுப்புணர்ச்சியே தி. மு. கழகம் பிற்றை நாட்களில் தேர்தல் களங்களில் பெரும் வெற்றிகளை அணைப் பதற்கு அருமருந்தாய் அமைந்தது என்பதில் ஐயமே இல்லை.

# 26. நாடாளுமன்றத்தில் அண்ணா!

## மரத்தை அரிக்கும் செல்

"பெரிய மரங்களை மாளிகை மண்டபத்துக்கு தூண்களாக அமைத்துவிட்டால் மட்டும் போதாது. மிகமிகச் சாதாரணச் 'செல்' மரத்திலே சிறு துளைகளிலே புகுந்து கொள்ளாதபடியும் பார்த்துக்கொள்ள வேண்டும். 'செல்' அரிக்க ஆரம்பித்துவிட்டால் செம்மரமும் சரி, எம்மரமும் சரி கெடும்; (அவ்வாறே) ஓர் அமைப்பு—ஸ்தாபனமும் கெடும்."

—என்று பேரறிஞர் அண்ணாவே ஒருமுறை பகர்ந்துள்ளார்.

அந்த முறையில்தான் திரு. சம்பத்தின் வெளியேற்றம், எங்கே 'செல்'—ஆக மாறிக் கட்சியின் கட்டுக்கோப்பைக் குலைத்துவிடுமோ என்று உள்ளூர அஞ்சினார் அண்ணா.

## சம்பத்தின் திட்டம் சரிந்ததேன்?

"திராவிட நாடு பிரிவினை"க் கொள்கை விரைந்து வெற்றிபெற அண்ணாவின் நடைமுறைத் திட்டங்கள் ஆமை வேகத்தில் ஊர்ந்துகொண்டிருப்பது சரியன்று; அவற்றைத் தீவிரமாகச் செயற்படுத்தவே கட்சியை விட்டு விலகுகிறோம்" என்று கூறி, தாம் துவக்கிய புதுக்கட்சிக்குத் 'தீவிர திராவிட முன்னேற்றக் கழகம்'—என்பது போன்ற புரட்சிகரமான பெயரையும் சூட்டியிருந்தாரானால் திரு. சம்பத்தும் அண்ணாவை மிஞ்சக் கூடிய மாபெரும் ஆற்றலாகவே இன்று வளர்ந்திருப்பார். நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸ் மாதிரி, அவர் ஒரு புரட்சித் தலைவராக மாறிவிட்டார் என்று நம்பியே உணர்ச்சித் துடிப்புள்ள கழக முன்னணி வீரர்கள் சிலரும் அவரைப் பின்பற்றி வெளியேறினர்.

அண்ணாவின் நற்காலந்தானோ, இல்லை தமிழகத்தின் நற்காலந்தானோ திரு. சம்பத் அவர்கள் புரட்சி வீரராக ஏறு

நடை போடுவதற்கு மாறாக, பழைய 'தேசியம்' என்னும் பகுதிக்குள்ளேயே தம் முகத்தைப் புதைத்துக் கொண்டார்.

அவருடைய சிறப்பாவான பெரியாரே "தமிழ் தேசியம் என்பதெல்லாம் சுத்தப் பித்தலாட்டம்...ஏமாற்று வித்தை" என்று கண்டிக்கும் அளவுக்குச் சம்பத்தின் புதிய கட்சி காலத்திற்கு ஒவ்வாத ஒன்றாகப் போய்விட்டது. இதனால், அவரிடம் விறுவிறுப்பையும், புரட்சி மணத்தையும் எதிர்பார்த்துவந்த பலர் ஏமாற்றம் அடைந்தனர். அவ்வாறு ஏமாற்றம் அடைந்தவர்களில் பலர் மீண்டும் தங்கள் தாய்க் கழகத்துக்கே திரும்பியும் சென்றுவிட்டனர்.

ஆனாலும், சம்பத் வெளியேறிய புதிதில் நாடெங்கும் ஒரு பெரும் பரபரப்பே ஏற்பட்டிருந்தது. அதனால் தி. மு. கழகம் எங்கே கலகலத்துவிடுமோ என்று அஞ்சும்படியாகத் தான் இருந்தது நிலைமை.

அத்தகைய அச்சத்திற்கெல்லாம் இடம் ஏது என்று அறைகூவல் விடுப்பதுபோல் நடைபெற்றது மதுரை மாநில மாநாடு.

## மதுரையில் மாநில மாநாடு

1961-ஜூலைத் திங்களில் நடைபெற்ற தி. மு. கழகத்தின் அந்த மூன்றாவது மாநில மாநாடு கழகத் தோழர்களுக்குப் புதிய உத்வேகத்தையும், பொதுமக்களுக்குப் புதிய நம்பிக்கையையும் அளிப்பதாகத் திகழ்ந்தது.

கருநாடக மாநிலத்திலிருந்து ஓய்வு பெற்ற உயர்நீதி மன்றின் நீதிபதி திரு. மேடப்பா அவர்கள் வருகை புரிந்து வாழ்த்துக் கூறியது மாநாட்டின் சிறப்பை மேலும் உயர்த்திற்று.

## அண்ணாவின் அன்புக் கட்டளை

அம் மாநாட்டின் இறுதி நாளில் தலைமை தாங்கிய பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள், தம் தம்பியருக்கு விடுத்த அன்புக் கட்டளை என்ன தெரியுமா?

"ஜெர்மன் நாட்டிலிருந்து பெரிய பத்திரிகையொன்றின் நிருபர் வந்திருப்பதாகவும் (இந்து ஏட்டின் துணையாசிரியர்) நண்பர் நரசிம்மன் தெரிவித்தார்...என் வீட்டிற்கே அவரை

வரச்சொல்லி விட்டேன்; அவரும் வந்தார். மூன்று மணி நேரம் அவர் என்னுடன் பேசிக்கொண்டிருந்தார். அவ்வளவு நேரம் பேசியபின், அவர் என்னிடம் கேட்ட கேள்வி, 'நாட்டுப் பிரிவினையை அதிகம் பேர் ஆதரிக்கிறார்கள் என்றால் அதற்கு என்ன அடையாளம்' என்பதே. இதைத்தான் பலரும் கேட்கிறார்கள்; கேட்கத்தான் செய்வார்கள். அர்த்த இராத்திரியில் கூட்டம் போட்டாலும், மலை முகட்டில் கூட்டம் நடத்தினாலும், பல்லாயிரக்கணக்கில் மக்கள் கூடு கிறார்கள் என்று அவர்களுக்குப் பதில் கூறமுடியும்?

'நாட்டுப் பிரிவினையை மக்கள் ஆதரிக்கிறார்கள் என் பதைக் காட்டவேண்டும் என்றால், 'ஓட்டு' வித்தையைக் காட்டுங்கள்; சட்டமன்றத்தில் உறுப்பினர்கள் எண்ணிக் கையை ஐம்பது, அறுபது என்று உயர்த்துங்கள், ஆட்சியைக் கைப்பற்றிக் காட்டினால் அப்போதுதான் உலகம் உங்களைக் கவனிக்கும்'' என்றார் அவர் (ஜெர்மன் நிருபர்).

''நமது மூலாதாரக் கொள்கையான 'திராவிட நாடு திராவிடருக்கே' என்பதையொட்டி, திருவண்ணாமலை சண்முகம் விடுத்த அழைப்பும், கருணாநிதி எடுத்துக் காட்டிய புறநானூற்றுப் போர்க்களக் காட்சியும் வெற்றி தருவது; நீங்கள் 1962-இல் காட்டும் உற்சாகத்தைப் பொறுத்துத் தான் இருக்கிறது.''

''மனைவியிடம் 'எவ்வளவு ஆசையாய் இருக்கிறேன் தெரியுமா?' என்று பேசிவிட்டு மாதம் இருபது நாள் வெளி யூரில் தங்கினால் என்ன பொருள்? கழகத்தின்மீது நீங்கள் காட்டும் ஆர்வம், தேர்தலில் வெற்றி பெற்றுத் தருவதிலே தான் இருக்கிறது.''

''நல்ல வயலுக்கு அடையாளம் நல்ல விளைச்சலைத் தருவது! நல்ல விளக்கிற்கு அடையாளம் நல்ல ஒளியைத் தருவது.''

''தேர்தலில் நல்ல முறையில் பணியாற்றத் தவறி விடு வீர்களேயானால், என்னை நீங்கள் நம்ப வைத்துக் கழுத்தை அறுத்தீர்கள் என்றுதான் சொல்வேன்.''

''உயிரினும் உயரிய நம் இலட்சியத்தைப் பிறர் பார்த் துக் கேவலமாகப் பேசக்கூடாது. மாநகராட்சியில் (சென்னை

யில்) வெற்றி தேடித் தந்ததைப்போல் வருகிற பொதுத் தேர்தலிலும் வெற்றி தேடித்தர வேண்டும்."

—அண்ணா விடுத்த இந்த அன்புக் கட்டளை, அடுத்து நடந்த பொதுத் தேர்தலில் நல்ல வேலைதான் செய்தது.

## 'விகடன்'—ஏடே வியந்த மாநாடு

'ஆனந்த விகடன்'—ஏடு காங்கிரசுக் கட்சிச் சார்புடை யது என்பதை முன்னரே குறிப்பிட்டுள்ளோம். சம்பத் வெளி யேற்றத்துக்குப் பின்னர் தி. மு. கழகம் கலகலக்காமல்தான் இருக்கிறதா என்று அறிந்துகொள்ள அதற்கும் ஓர் ஆசை போலும்! மதுரை மாநில மாநாட்டு நிகழ்ச்சிகளை நேரில் கண்டு வரும் பொருட்டுத் தன் துணையாசிரியர் ஒருவரையும் (திரு. மணியம் என்பதாக நினைவு) அது அனுப்பி வைத்தது. பொங்குமாங் கடல் போல் திரண்டிருந்த மக்கள் வெள்ளத் தையும், பண்டைய வரலாற்றுக் காலத்தை நினைவுபடுத்தும் கோட்டை—கொத்தளம் போன்ற மாநாட்டு நுழைவாயில்—பந்தல் முதலான அமைப்பு முறைகளையும், ஆராய்ச்சி மிகுந்த சொற்பொழிவாளர்களின் உணர்ச்சித் துடிப்பையும், இன்னும் பற்பல சிறப்பியல்புகளையும், அத்துணையாசிரியர் அற்புதமாக வரைந்து 'ஆனந்த விகடனில்' வெளியிட்டார். கழகத் தலைவர்களின் படங்களும் 'விகடன்' ஏட்டை அணி செய்தன. இதிலிருந்தே மதுரையில் நடந்து முடிந்த மூன்று வது மாநில மாநாடு எத்துணை எழிலும், சிறப்பும் வாய்ந்தது என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

## பிறந்தநாள் பெரும் பரிசு

தமிழக வரலாற்றைப் பொறுத்தவரையில், செப்டம்பர் திங்கள் மிகச் சிறந்த பேறு பெற்றதாகும். ஏனெனில், உலகப் புகழுக்கு உரிய மூன்று பெருந்தலைவர்கள் இந்தத் திங்களில் இத் தமிழ் மண்ணிலே தோன்றியுள்ளார்கள்.

முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவரும், தத்துவ ஞானியுமான டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள், தமிழகத்தைச் சார்ந்த திருத்தணியில் 1888-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 5-ஆம் நாளில்தான் பிறந்தார்.

'தன்மான இயக்கத் தந்தை'யான பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் ஈரோடு நகரில் 1879 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17-ஆம் நாளில்தான் உதித்தார்.

(செப்டம்பர் 17-தான் தி. மு. கழகத் துவக்கநாள் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. இதனுல், ஒரே கல்லில் இரு மாங்காய்களை வீழ்த்துவதுபோல அந்த நாளைக் கொண்டாடுவதன் மூலம், பெரியாரின் பிறந்த நாளைக் கொண்டாடினுற் போலவும் ஆகிறது. தி. மு. க. துவக்க நாளைக் கொண்டாடினுற்போலவும் ஆகிறது.)

'தென்னுட்டுக் காந்தி'—என்றும், 'இந்நாட்டு இங்கர்சால்'—என்றும், எதுகைமோனை எழிலுடன் கழகத் தோழர்கள் ஏற்றிப் போற்ற அவர்தம் இதயக் கடவுளாம் பேரறிஞர் அண்ணு அவர்கள், காஞ்சி மாநகரில் பிறந்ததும் இதே செப்டம்பர் திங்களில்தான்! அவர்தம் பிறந்த நாள் 15-9-1909 என்பதாக முன்னரே குறித்துள்ளோம்.

இனி, ஒவ்வொரு பெற்ருேரும், அகிலப் புகழ் பெறும் பொருட்டுத் தம் குழந்தைகள் செப்டம்பர்த் திங்களில் பிறப்பதையே பெரிதும் விழைந்தாலும் நாம் வியப்படைவதற்கு இல்லை.

பேரறிஞர் அண்ணு அவர்கள் 1961-செப்டம்பர் 15-இல் வந்த தம்முடைய 53-வது பிறந்தநாளை வழக்கம்போல் தாம் பிறந்த மனையில் — காஞ்சிபுரத்தில் — கொண்டாடவில்லை. மாருகத் தாம் புகுந்த மனையில்—மாமனுர் பதியில்—கொண்டாடினுர்!

ஆம்; அண்ணுவின் அருமைத் துணைவியார் திருமதி இராணி அம்மையாரின் பெற்ருேர், தஞ்சையம்பதியைச் சார்ந்தவர்கள்தாமே!

இராச இராச சோழன், புலிக்கொடியைப் பறக்கவிட்டு ஆண்ட அத் தஞ்சை மாநகரில், சென்னைக் கோட்டையிலேயே தமிழ்க் கொடியைப் பறக்கவிட்டு ஆளப்போகும் அண்ணுவின் பொன்னுன பிறந்த நாள் மிகக் கோலாகலத்துடன் கொண்டாடப்பெற்றது.

அந்த விழாவிலே சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது என்னவெனில் அவருடைய 53-வது பிறந்த நாளை நினைவுறுத்தும் வரையில் ரூபாய் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மதிப்புள்ள

53 வகையான பொருள்கள் பரிசிலாக வழங்கப்பட்டதே ஆகும். அப் பரிசுகளைப் பெற்றுக்கொண்டு அண்ணா ஆற்றிய நன்றியுரை இரும்பு நெஞ்சினரையும் உருக வைப்பதாகும் :

"இந்தப் பரிசுகளை எனக்கு அளித்தது பெரிதல்ல; இதை விட மகத்தான சக்தி வாய்ந்த பரிசு ஒன்றை நீங்கள் எனக்கு அளித்தாக வேண்டும். உங்களது கண்ணீரை எனது கல்லறையின்மீது நீங்கள் சிந்துவீர்களேயானால், அதுவே எனக்கு நீங்கள் தரும் பெரும் பரிசாகும்! உங்களை நம்பித்தான் அரசாங்கத்தின் அறைகூவலை ஏற்றுக் கொண்டிருக்கிறேன். எங்களைப் பொறுத்தவரையில் வீட்டிற்கும் சிறைச்சாலைக்கும் வேறுபாடு ஏதும் கிடையாது. இன்று நீங்கள் அளித்துள்ள (பரிசுப் பொருளாக) இந்த யானை என்னுடைய வீட்டில் வைத்து, மனைவி மக்கள் புடைசூழ மீட்டிக் கொண்டா இருக்கப் போகிறேன்? நிச்சயமாக இல்லை! அந்த அனுபவங்கள் எல்லாம் விடுதலை வீரர்களைப் பொறுத்தவரையில் கற்பனையாகவே இருந்து அழிந்து போய் விடக் கூடியவைகளே! இந்த ஆண்டு தஞ்சையிலே எனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்கள்; நானும் உங்களுடன் இருக்கிறேன். அடுத்த ஆண்டு என் பிறந்த நாளை எந்தச் சிறையிலாவது கொண்டாடுவதாக இருந்தால் அதுவே எனக்கு மகிழ்ச்சியைத் தரும்."

—இதயக் குருத்தின் அடிவாரத்திலிருந்து வெளிவந்த அண்ணாவின் அந்த வாக்கு, பொய்த்துப் போய்விடவில்லை; மெய்யாகவே நிறைவேறிற்று!

### வாக்குப் பலித்தது!

அடுத்த ஆண்டு (1962) தம் பிறந்த நாளை, அகவிலைப் போராட்டத்தின் காரணமாக அண்ணா வேலூர்ச் சிறையில் தான் கொண்டாடினார்!

ஒரு மாபெரும் இயக்கத்தின் ஒரு மாபெரும் ஒளி விளக்கின் வாக்குப் பலித்ததை—அரசியல் ஊகத்தை—என்னென்று வியந்து போற்றுவது!

### மூன்றாவது பொதுத் தேர்தல்

இந்தியப் பெருநாட்டின் மூன்றாவது பொதுத் தேர்தல் 1962-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் நடைபெற்றது.

தி. மு. கழகம் 142-சட்டமன்றத் தொகுதிகளுக்கும், 18 பாராளுமன்றத் தொகுதிகளுக்கும் போட்டியிட்டது.

அண்ணா, முன்போலவே, காஞ்சிபுரம் தொகுதியில் வேட்பாளராக நின்றார்.

'அண்ணாதுரையையே எதிர்த்துப் போட்டியிட்டவன் தான்'—என்று பிற்காலத்தில் பீற்றிக் கொள்ளக்கூடிய பெருமை ஒன்றைத் தவிர, அரசியல் வாழ்வில் வேறு எவ்வித ஆர்வமோ செல்வாக்கோ இல்லாத ஒருவரைக் காங்கிரசுக் கட்சியினர் அண்ணாவுக்கு எதிராக நிறுத்தி வைத்தனர்.

முதலமைச்சராக இருந்த காமராசரும், பிற அமைச்சர்களும் முன்போலவே அண்ணாவை வீழ்த்துவதில் முழு மூச்சுடன் ஈடுபட்டனர். வழக்கம்போல், பெரியாரும் அவர்களுடன் இணைந்து கொண்டார்.

## கழகம் பெற்ற வெற்றி

அந்த மூன்றாவது பொதுத் தேர்தலின் முடிவுகள், திராவிட முன்னேற்றக் கழகம், தன்னுடைய அரசியல் பயணத்தில் கணிசமான அளவுக்கு முன்னேறியிருப்பதை உலகுக்குப் பறைசாற்றின. 50 சட்டமன்றத் தொகுதிகளும், 7 பாராளுமன்றத் தொகுதிகளும் தி. மு. கழகத்தின் வசமாயின. கழகம் பெற்ற இந்தக் குறிப்பிடத்தக்க வெற்றியைக் கண்டு உள்ளூர அதிர்ச்சியுற்றனர்; மருட்சியடைந்தனர்.

ஆயினும், அந்தோ!...கழகக் காவலராம் பேரறிஞர் அண்ணா, அநியாயமாகத் தோற்கடிக்கப்பட்டார்!

## சுமக்க முடியாச் சோகச் சுமை!

அண்ணாவின் அந்த எதிர்பாராத தோல்வி, கழகத்தவரின் இதயத்திலே ஈட்டியாய்ப் பாய்ந்தது; இரத்தக் கண்ணீரையும் வடிக்க வைத்தது. தங்களுடைய பிள்ளையையோ, பெற்றோரையோ பறிகொடுத்து விட்டவர்களைப்போல துயரச் சுமையைத் தாங்க முடியாமல் ஒவ்வொரு தோழரும் உள்ளம் ஒடிந்து உட்கார்ந்து விட்டனர்.

அண்ணாவோ 'எதையும் தாங்கும் இதயம்!'—படைத்தவர் அல்லவா? தாம் அடைந்த தோல்வியால் அவர்

துவண்டு படுத்துவிடவில்லை. சோகந்தாளாமல் நெஞ்சு விம்ம நிற்கும் தம் தம்பியர்க்கு ஆறுதல் அளிக்கும் பணியில் அக்கறையோடு ஈடுபட்டார்.

## பொன்னேட்டில் பொறிக்கத் தக்கது

சென்னையில் 4—3—1962-ஆம் நாள், அன்று நடைபெற்ற தி. மு. கழகத் தேர்தல் வெற்றி விழா—நன்றியறிவிப்புக்—கூட்டத்தில், தம் தோல்வியை மனதிற்கொண்டு, தம் தோழர்களுக்கு அண்ணு அளித்த உற்சாக உரை, பொன்னேட்டில் பொறிக்கத்தக்கதாகும்!

''ஐரோப்பாக் கண்டத்தில் இசுலாமியருக்கும் கிறித்தவருக்கும் இடையே புனிதப் போர் நிகழ்ந்தது. 'ஏசு பிறந்த செருசலேம் நகருக்குள் கிறித்தவர்கள் நுழையக்கூடாது' என்று இசுலாமியர் கூறியதாலேயே அந்தப் பயங்கரச் சண்டை நிகழ்ந்தது.

''இசுலாமியருக்குத் தலைமை வகித்துப் போர் நடத்தினுன் சாலடி மன்னன். ரிச்சர்டு என்பவன் கிறித்தவருக்குத் தலைமை தாங்கினுன். ஒரு குறிப்பிட்ட நிபந்தனையின்மீது போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது. எல்லாக் கிறித்தவர்களுக்கும் செருசலேம் நகருக்குள் செல்லும் உரிமை வழங்கப்பட்டது. 'ஆனுல் ஒரு நிபந்தனை......?'—என்ருன் சாலடி மன்னன். அதாவது, 'கிறித்தவர்களின் தலைவனுன ரிச்சர்டு மட்டும் உள்ளே வரக்கூடாது'—என்பதுதான் அந் நிபந்தனை.

''அதேபோல், நான் வெளியே நிற்கிறேன்; என் அணி வகுப்பு உள்ளே செல்கிறது. தலைவன் இல்லாது அணிவகுப்பு அமைக்க முடியும்; ஆனுல் அணிவகுப்பு இல்லாத தலைவனை அமைக்க முடியாது. என் 'தோல்வியைப்பற்றி வருந்துபவர்களுக்கு நான் இதைத்தான் சொல்லிக் கொள்ளுவேன்....

''...கழகம் பெற்றுள்ள இந்த வெற்றி குறித்து நீங்கள் அடைய வேண்டிய மகிழ்ச்சியை எல்லாம் இன்றே அடைந்து விடுங்கள். நாளை முதல், இதைவிடக் கடுமையான கடமையுணர்ச்சியும், பொறுப்புணர்ச்சியும் மிக்க பணிகளில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.''

### நாடாளுமன்றத்தை நோக்கி...

பொதுத் தேர்தலுக்குப் பின்னர், கழக வளர்ச்சிக்குரிய ஆக்கப் பணிகளில் ஈடுபடுவது என்றே அண்ணா முடிவு செய்திருந்தார்.

ஆனால், அரசியல் மூதறிஞர் இராசாசி (சி. இராசகோபாலாச்சாரியார்) பேரறிஞர் அண்ணாவைப் போன்ற ஒரு கலங்கரை விளக்கு, தமிழகத்திலேயே அடைபட்டுக் குடத்து விளக்காகப் போய்விடக்கூடாது என்று எண்ணினார். அண்ணாவின் அறிவாற்றல்—வாதத் திறமை—ஆகியவற்றில் பெருநம்பிக்கை வைத்திருந்த இராசாசி, அண்ணா டில்லி நாடாளுமன்றம் சென்றால் இந்தியா முழுவதையுமே எளிதில் கவர்ந்து விடுவார் என்று கருதியதில் வியப்பில்லை. அதற்காகவே, நாடாளுமன்ற மேல் அவைக்கு (Rajya Shaba), அவர் போட்டியிட வேண்டுமென்று யோசனை கூறினார். தம்முடைய கழகத் தோழர்களும் ஆர்வத்துடன் வற்புறுத்தவே, அண்ணா இசைந்தார். 50 சட்டமன்ற தி. மு. க. உறுப்பினர்களின் வலிமையினால், போட்டியின்றியே, நாடாளுமன்ற மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார் அண்ணா.

### நாடாளு மன்றத்தில் முதல் சொற்பொழிவு

மே முதல் நாள். உலகத் தொழிலாளர்கள் நெஞ்சங்களில் எல்லாம் இன்பத் தேனை வார்க்கும் ஒப்பற்ற நாள்; உரிமைத் திருநாள்.

1962ஆம் ஆண்டு வந்த மே முதல் நாளோ, தொழிலாளர் இனத்துக்கு மட்டும் மகிழ்வூட்டிய நாள் அன்று;

கன்னித் தமிழ் நாட்டிலிருந்து சென்ற ஒரு சின்ன உருவத்தின் செவ்விதழ்க் கடையினின்றும், எழில் கொஞ்சும் ஆங்கில மொழியில் எஃகினும் வலிய உறுதியான குரலில், இந்தியா விடுதலை பெற்ற பிறகு, தன்னுடைய கூடத்தில் முதன் முதலாகப் பிரிவினை பற்றிய சிங்க முழக்கத்தைக் கேட்கும் பேற்றினை, நாடாளுமன்ற—மேலவை பெற்ற பெருநாளும் அந்த மே—முதல் நாளே!

அண்ணாவின் ஆங்கில நடையழகைப் புகழ்வதா? ராபர்ட் பர்ன்ஸ், ஹைரால்ட் லாஸ்கி, டாக்டர் ஜான்கால் பிரெய்த், நேரு, மீராபென் போன்ற அறிஞர்களின் கூற்றுக் களையெல்லாம் அவர் மேற்கோள் காட்டிப் பேசிய வாதத் திறமையைச் சுவைப்பதா? 'நான் திராவிட இனத்தைச் சார்ந்தவன்; என்னைத் திராவிடன் என்று சொல்லிக்கொள் வதிலே பெருமைப்படுகிறேன்' (I belong to Dravidian Stock. I am proud to call myself a Dravidian)—என்று பூரிப்போடு மொழிந்த அவரது உறுதிப்பாட்டை மெச்சுவதா?...... வெற்றியில் பெருமிதம் கொள்வதைக் காட்டிலும், ஆளும் கட்சி பணிவாகவும், மக்களாட்சி நெறியையும் கற்றுக் கொள்ள வேண்டும்...'சமதர்மம் என்பது சமூக நலம் மட்டும் அன்று ; சமூக நலத்துக்கு உறுதி தருவது மட்டும் அன்று ; சமத்துவத்தை உருவாக்க உழைப்பதே சமதர்மம்'... விருப்பம் வேறு; உண்மைகள் வேறு;—'கால வெள்ளத்தில் கரைத்துவிட்ட தத்துவங்களின் வறுமையே தேசீய ஒருமைப் பாடு'—என்பன போன்ற அண்ணாவின் பொன்மொழி களுக்கு ஆட்படுவதா?...'நான் எங்கிருந்து வந்தேனோ அந்த திராவிட பூ—பாகத்திற்குத் தன்னாட்சியை நிர்ணயிக்கும் உரிமையைத் தாருங்கள்'—என்று அஞ்சா நெஞ்சுடன் இந்திய ஒருமைப்பாட்டின் மீதே அவர் துணிந்து வீசிய அணுகுண்டைக் கேட்டு அதிர்ச்சிக்குப் பலியாவதா?

—என்றெல்லாம் திகைப்புக் கடலில் திணறும் அளவுக்கு, அண்ணாவின் அந்த முதல் நாடாளுமன்றச் சொற்பொழிவு, அவர் எதிரே குழுமியிருந்த அத்தனை உறுப்பினர்களையும் எங்கெங்கோ இட்டுச் சென்றது.

எட்மண்ட் பர்க், எவ்வாறு தம் முதற் பேச்சினாலேயே, பிரிட்டானியப் பாராளுமன்றத்தை முழுமையாகக் கவர்ந்து விட்டாரோ, அவ்வாறுதான் பேரறிஞர், அண்ணாவும் இந்திய நாடாளுமன்றத்தைத் தம் முதற்பொழிவினாலேயே மிக அருமையான முறையில் கவர்ந்துவிட்டார். அவருடைய கொள்கைகளினின்றும் மாறுபட்டவர்கள்கூட அவருடைய எடுப்பான குரலிலும் எழில் சொட்டும் சொல்லாட்சியிலும், எதிர்த்தரப்பினரை மடக்கும் இணையற்ற வாதத் திறமை யிலும் தங்கள் இதயத்தைப் பறிகொடுத்து விட்டனர்.

பத்திரிகைகளின் பாராட்டு:

"இந்து" - நாளேடு

"...கொள்கையிலே கொண்ட உண்மைப் பிடிப்பாலும், தமது ஆற்றல் மிக்க பேச்சுத் திறமையாலும், ஐயத்திற்கு இடமின்றி, அண்ணாதுரை, 'இராச்சிய சபா'வைக் கவர்ந்து விட்டார்."

—என்று செல்வாக்கு மிக்க 'இந்து'...நாளேடே அண்ணாவுக்குப் பாராட்டுப் பாமாலை சூட்டியது.

இந்துஸ்தான் டைம்ஸ்

"...தி. மு. கழகத் தலைவர், திரு. சி. என். அண்ணாதுரை, தென்னகத்திற்குச் சுய நிர்ணய உரிமை வேண்டும் என்ற கோரிக்கையைத் தெளிவாக எடுத்துரைத்தார். மாநிலங்கள் அவை இன்று கூடியிருந்து திராவிட நாட்டின் கொள்கைக்காகப் பாடுபடும் சொல்லாற்றல் மிக்க தலைவரின் பேச்சைக் கேட்டது, தேசியத்திற்கு இவர் ஒரு புதிய விதியைத் தந்தார்"

—என்று புது டில்லியிலிருந்து வெளிவரும், 'இந்துஸ்தான் டைம்ஸ்'—ஏடு போற்றிப் புகழ்ந்தது.

டைம்ஸ் ஆஃப்-இந்தியா

"...இந்தியாவிலிருந்து பிரிந்து போக வேண்டும் என்னும் குரல் முதன் முதலாக சுதந்திர இந்தியாவின் பாராளுமன்றத்தில் இன்று (1-5-62) ஒலித்தது. இந்த முழக்கத்தைத் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அண்ணாதுரை இன்று மாநிலங்கள் அவையில் முழக்கினார். இந்திய யூனியனிலிருந்து தென்னகம் பிரிந்து போகவேண்டும் என்ற அண்ணாவின் துணிவான வாதம் (நாடாளுமன்றத்தையே) நிலைகுலையச் செய்துவிட்டது.

—என்று பம்பாயிலிருந்து வெளிவரும் 'டைம்ஸ் ஆஃப் இந்தியா'—ஏடு பாராட்டி மகிழ்ந்தது.

மாத்ருபூமி

"ஆட்சி அமைப்பு முறையின் எதிரி என்ற அளவில் அறியப்பட்ட அண்ணாதுரையின் சொற்பொழிவு, என்ன

இருந்தாலும் பலமுறை—குறிப்பாக வட இந்தியாவிலிருந்து வந்திருந்த பல உறுப்பினர்களை வியப்பில் ஆழ்த்தாமல் இருக்கவில்லை. சிறந்த பேச்சாளர் என்றுள்ள நிலையில் நிறைந்த பெயர் பெற்றுள்ள அண்ணாதுரை அன்று மாநிலங்கள் அவையில் தம் திறமை முழுவதையும் வெளிப்படுத்தினார்"

—என்று மலையாள நாளேடு 'மாத்ருபூமி'—அண்ணாவின் திறமைக்குப் புகழாரம் சூட்டிப் பூரித்தது.

## சொற்பொழிவின் சிறப்புத் தன்மைகள்

## வடமொழியில் மேற்கோள்

அண்ணாவின் அந்த முதல் நாடாளுமன்றச் சொற்பொழிவிலிருந்து, அதுகாறும் அவரிடம் காணப்படாதிருந்த சில தனிச் சிறப்பியல்புகள் வெளிப்பட்டன.

சாதாரணமாக, தமிழிலிருந்தும், ஆங்கிலத்திலிருந்தும் பொன்மொழிகளை மேற்கோள் காட்டித்தான் அண்ணா பேசுவதை அதுவரை நாம் கேட்டிருக்கிறோம். ஆனால், இந்த முதற் சொற்பொழிவு, அவரால் வடமொழியிலிருந்தும் பொன்மொழிகளை மேற்கோள் காட்ட முடியும் என்பதை எடுத்தியம்பியது.

'I am reminded, sir, of the sayings of the Sanskrit pandits of my home town Conjeevaram, yatha raja tatha braja' (அரசன் எவ்வழி; குடிகள் அவ்வழி).

—என்னும் அண்ணாவின் கூற்று இதற்குத் தக்க சான்றாகும்.

இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் வந்து நாடாளுமன்றத்தில் குழுமியுள்ள முதிர்ந்த அரசியல் தலைவர்களை எளிதில் கவரும் பொருட்டுத்தான், தமிழைத் தவிர பிற எல்லா இந்திய மொழிகளோடும் நெருங்கிய உறவு கொண்ட வடமொழியிலிருந்து மேற்கோள் காட்டும் உத்தியை, அண்ணா கையாண்டிருப்பாரோ என்று எண்ணத் தோன்றுகிறது! இங்கே தாம் பிறந்த ஊராகிய காஞ்சீபுரத்தின் பெயரையும் அவர் அரங்கேற்றத் தவறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பிடித்தமான பேரறிஞர்

இந்தக் கன்னிச் சொற்பொழிவிலே இன்னொன்றைத் தலையாய அம்சமாகக் குறிப்பிட வேண்டும்.

தமக்குப் பிடித்த மேனாட்டறிஞர்களின் பெயர்களையும் அண்ணா மேற்கோள் வாயிலாகக் குறிப்பிட்டுள்ளார். அவர்களில் சிறப்பாக, ஹெரால்டு லாஸ்கி (Harold Laski) அவர்களைச் சுட்டிக்காட்டலாம்.

பிரிட்டானிய நாட்டுத் தொழிற் கட்சித் தலைவராகப் புகழ் ஒளி வீசியவர் ஹெரால்டு லாஸ்கி. கனடா நாட்டிலுள்ள மக்கில், சோவியத் நாட்டின் தலைநகராகிய மாஸ்கோ, அயர்லாந்து நாட்டின் தலைநகர் டப்ளின், அமெரிக்க நாட்டிலுள்ள யேல் பல்கலைக் கழகம், இங்கிலாந்திலுள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம் முதலான இடங்களில் எல்லாம், வரலாற்றுப் பேராசிரியராகவும், அரசியல்—விஞ்ஞானப் பேராசிரியராகவும், அவ்வப்போது பணியாற்றி அநுபவம் மிகுந்தவர். தம்முடைய முதிர்ந்த அநுபவங்களின் துணைகொண்டு, அவர் ஏராளமான அரசியல் தொடர்பான நூல்களை எழுதியுள்ளார். அவருடைய 'அரசியல் இலக்கணம்' (Grammer of Politics) போன்ற நூல்கள் உலகப் புகழ் வாய்ந்தவை.

இத்தகைய சிறப்புகள் வாய்ந்த லாஸ்கியின் நூல்களைப் படிப்பதில் பேரறிஞர் அண்ணாவுக்குத் தனியான ஓர் ஈடுபாடு; தணியாத ஒரு வேட்கை!

## லாஸ்கியின் பாணி!

லாஸ்கியிடம் குறிப்பிடத்தக்க ஆற்றல் என்னவெனில், தாம் சொல்ல விரும்பும் கருத்துக்களை ஒன்று, இரண்டு, மூன்று என்று வரையறுத்து வெளியிடுவதாகும். அதே முறையைத் தான் அண்ணாவும் இன்று கையாண்டு வெற்றி பெற்று வருகிறார்.

இந்த நயமான வரையறை முறையைத் தம்முடைய நாடாளுமன்ற முதற் சொற்பொழிவிலும் அண்ணா கையாளத் தவறவில்லை.

அப்போதைய குடியரசுத் தலைவராக இருந்த டாக்டர் இராசேந்திரபிரசாத்தின் உரைமீதான வாதத்தில் கலந்து கொண்டுதான் அண்ணா தம் சொற்பொழிவை நிகழ்த்தினார். அதில் அரசாங்கத்தின் நிருவாகத்தில் தமக்குப் பட்ட குறைபாடுகளை மூன்று அம்சங்களாகப் பகுத்துக்கொண்டு அவற்றைக் கண்டிக்கிறார்.

1. ...இந்தத் தேர்தல் சுமுகமாகவும் சுதந்திரமாகவும் நடைபெறவில்லை.
2. ...குடியரசுத் தலைவரின் உரையில் காணப்படும் உன்னதத் தத்துவங்கள், சனநாயகம், சமதர்மம், தேசியம் ஆகிய மூன்றில் சனநாயகம் உருக்குலைந்து விட்டது; சமதர்மம் சாரமற்றதாகிவிட்டது. தேசியம் தவறான பொருளில் திரித்துக் கூறப்படுகிறது.
3. ...(திராவிட நாடு பிரிவினை போன்ற) புதிய தேசிய உணர்வுக்குப் போதிய சிந்தனை செலுத்தவில்லை.

இவ்வாறாக, அரசியல் அறிஞர் லாஸ்கியின் பாணியில் தம்முடைய சொற்பொழிவை அண்ணா வரையறை செய்து ஆற்றியதும்,

"...சமத்துவம் என்பது எல்லோரையும் ஒரேமாதிரியாக நடத்துவது அல்ல; எல்லோருக்கும் சம வாய்ப்புத் தருவதாகும். (Equality is not identity of treatment but affording equal opportunities for all)"

—என்று அதே லாஸ்கியின் பொன்னுரையை அவர் மேற்கோள் காட்டியதும், மாநிலங்கள் அவையை மிகவும் கவர்ந்துவிட்டன.

## நாடாளு மன்றத்துக்குப் புதிய பொலிவு

அந்த முதற் சொற்பொழிவினால் மட்டுமின்றி, பின்னர் தாம் ஆற்றிய ஒவ்வொரு உரையினாலும் நாடாளுமன்றப் பேச்சுக் கலைக்கே ஒரு புத்துயிரும் புதிய பொலிவும் அளித்து விட்டார் அண்ணா.

இந்தித் திணிப்பைக் கண்டித்தும், சீன ஆக்கிரமிப்பைக் கண்டித்தும் அவர் ஆற்றிய நாடாளுமன்ற உரைகள் வரலாற்றுப் புகழ் படைத்தவை ஆகும்.

# 27. அண்ணா செய்த புரட்சிகள்

### பிறவித் தலைவர் யார்?

பழைய பாதையில் முயல் வேகத்தில் ஓடுகின்றவர்களைக் காட்டிலும் தமக்குத் தாமே புதுப்பாதை வகுத்து ஆமை வேகத்தில் ஊர்கின்றவர்களே புகழின் உச்சியைக் கெட்டியாகப் பற்றிக்கொள்ளுகிறார்கள்.

பிறரின் அடிச்சுவட்டைப் பின்பற்றியே நடந்து சென்றவர்கள் எந்தக் காலத்திலும் பிறவித் தலைவர்களாக உருவெடுக்க முடியாது. தம்முடைய சொந்தச் சிந்தனைக் கண்களால் தனிப்பாதை கண்டு முதற்பயணம் தொடங்குகின்றவர்களே வையமே அழியினும் தாம் அழியாத வரலாற்றைப் படைத்துக் கொள்கிறார்கள்.

### தனிப்பாதை கண்ட தகைமையாளர்கள்

தனிப்பாதை கண்டு, முதற் பயணம் சென்று அமெரிக்கக் கண்டத்தை இவ்வுலகுக்குக் காட்டியதால்தான் கொலம்பஸ் இன்று நீங்காப் புகழ்க் குன்றில் நிலையாகச் சிரித்து நிற்கிறார்!

விஞ்ஞானத் துறையிலே—தனிப்பாதை கண்டு முதற் பயணம் தொடங்கியதால்தான், கலிலியோ, எடிசன், மார்க்கோனி, பெல், பெயர்ட், நியூடன், க்யூரி தம்பதியார், ஐன்ஸ்டின் முதலானோர் வரலாற்றிலே அழியா இடம் பெற்று விட்டார்கள்.

மெய்ஞ்ஞானத் துறையிலே—

தனிப்பாதை கண்டு முதற்பயணம் தொடங்கியதால் தான் (இன்று காந்தியடிகளையும், இராமலிங்க அடிகளையும் பாமர மக்கள் தெய்வங்களாக வழிபடுதல் போன்று, முற்காலத்திலேயே வழிபாட்டுக்கு உரியவர்களாகி கோவில்களில் கொலுவோச்சும் பேறு பெற்றபோதிலும், எல்லாங்

கடந்த — எல்லாவற்றிலும் நிறைந்த — பரம்பொருளை அடைய முனைந்த திடஞானிகளாய் ஒரு காலத்தில் திகழ்ந்த) சிவபிரானும், திருமாலும், முருகரும், இராமரும், மற்றும் கௌதம புத்தரும், மகா வீரரும், யேசுவும், முகமது நபியும் இன்று அணையா மணி விளக்குகளாய் ஒளி வீசுகின்றனர்.

இலக்கியத் துறையிலே—

தமிழ்ப் பாவின் அமைப்பிலே 'குறள் வெண்பா' என்னும் புதிய வகையொன்றை வகுத்தளித்து, அதன் மூலம் மனிதனது அகவாழ்வு—புறவாழ்வு இரண்டுக்குமே வழி காட்டியாக இலக்கியஞ் சமைக்க முடியும் என்று நிறுவிக் காட்டிய திருவள்ளுவர், ஆங்கில மொழியிலே சுவை சொட்டும் நாடகங்களைப் படைத்த ஷேக்ஸ்பியர், வட மொழியிலே இன்பக் கங்கையைப் பொங்கவிட்ட காளி தாசன், உருசிய மொழியிலே புதிய சிந்தனைக் கதிர்களைப் பரப்பிய டால்ஸ்டாய் வங்க மொழியிலே கவிதை மலர்கள் சிரிக்கும் பூம்பொழிலாகத் தாமே திகழ்ந்ததுடன் அம் மொழியில் வளமான உரைநடை இலக்கியத்தை உருவாக்கிய முதற்கடவுள் என்னும் பெருமைக்கும் உரிய இரவீந்திர நாத் தாகூர்—முதலான எத்தனையோ இலக்கியக் கடவுளர் களும், தனிப்பாதை வகுத்து வரலாற்றுப் புகழை அணைத்து நிற்பவர்கள் ஆவர்.

அரசியல் துறையிலே—

தனிப்பாதை வகுத்து முதற் பயணம் தொடங்கிய, திருவள்ளுவர், சாணக்கியர், சாக்ரடீஸ், கார்ல்மார்க்ஸ், தாமஸ் ஜெபர்ஸன், அஹிம்சை முறையை முதன் முதலில் உலகுக்களித்த காந்தியடிகள் முதலானோர், வரலாற்றில் அழியாப் புகழ்பெற்று நிற்கிறார்கள்.

மேலே குறிப்பிடப்பெற்ற பெருமக்களைப் போலவே இன்று தம் தம்பியரால் மட்டுமே மிகவும் ஏற்றிப் போற்றப் பட்டாலும், இறந்த பின்னர் உலகம் முழுவதுமே தலைமேல் வைத்துக் கொண்டாடத்தக்க நிலையான புகழுக்கு நிலைக் களனாகத் தம்மை இளமையிலிருந்தே உருவாக்கிக்கொண்டு வந்திருப்பவர் பேரறிஞர் அண்ணா. ஏனெனில் இலக்கியத் துறையிலும் சரி, அரசியல் துறையிலும் சரி, கலைத் துறை யிலும் சரி, புதிய பாதைகளை அவர் வகுத்துக் கொடுத்திருக்

கிறார்; புதிய சிந்தனை விளக்குகளை அவர் ஏற்றித் தந்திருக்கிறார்; புதிய புரட்சிக் கொடிகளை அவர் பறக்க விட்டும் இருக்கிறார்!

## அண்ணாவின் பேச்சுப் புரட்சி!

### பண்டை நாள் பேச்சுப் புலிகள்:

பேச்சுக்கலை பற்றிய வரலாற்றின் முதற் பாகத்தைப் புரட்டிப் பார்க்கின்றவர்களுக்கு அங்கே டெமாஸ்தனிஸ் (Demosthenes) என்னும் கிரேக்கப் பேரறிஞன் தங்கள் கண்முன்னே புன்னகை பூத்து நிற்பதைக் காண்பார்கள். கி. மு. 384-இல் தோன்றிய அவன் ஏதன்ஸ் நகரிலேயே சொற்பொழிவுக் கலையில் இணையற்ற எழுஞாயிறாகத் திகழ்ந்தவன். பொதுவாழ்விலே எதிர்ப்புச் சுமைகளைத் தாங்கும் போது கழுதையாகத் தான் அவதியுற நேர்ந்த போதிலும் சொந்த வாழ்விலே அண்ணாவைப்போல் பண்பாட்டுச் சுடராகவே அவன் ஒளி வீசி வாழ்ந்திருக்கிறான். சான்றோனுக்கும் கடமைக்குரிய தந்தையைத் தன் இளமையிலேயே அவன் பறிகொடுத்துவிட்டான்; எனினும் அவனது அறிவுத் தாகம் எளிதில் அடங்கிவிடவில்லை. கி. மு. 354-இல், தன்னுடைய முப்பதாம் வயதில் அவன் நிகழ்த்திய முதற் சொற்பொழிவுதான் அவனை அரசியல் உலகின் அரிமாவாக—சிங்க ஏறாக—வெளியுலகுக்கு அறிமுகம் செய்துவைத்தது. அன்று முதல் தமிழக இளைஞரிடையே அண்ணா எவ்வாறோ, அவ்வாறுதான் கிரேக்க இளைஞர்கள் எறும்புச் சாரையாய் படையெடுத்து மொய்க்கும் கரும்புத் துண்டமாய் உயர்ந்துவிட்டான் டெமாஸ்தனீஸ்!

அடுத்து, வரலாற்றின் அடிவான நாட்களில் பேச்சுக் கலையிலே பேராற்றல் பெற்றவனாகப் பெரும் புகழ் குவித்தவன் அன்டோனியஸ் மார்க்கஸ் என்பவன். ரோமானியச் சொற்பொழிவாளர்களிலே தன்னிகரற்று விளங்கியவன் ஆவான் அவன்.

ஷேக்ஸ்பியரின் அற்புதமான நாடகக் காவியமான ஜூலியஸ் சீசரில், மார்க் ஆண்டனியின் (Antonious Marcus) பேச்சு வன்மைதான் என்னே? வஞ்சப் புகழ்ச்சிச் சொற்

பொழிவின் (Ironical Oration) மூலம் எதிரிகளை மடக்கு வதில் கைதேர்ந்தவன் அவன்! 'புரூட்டஸ் உயர்ந்தவனே! ஆனாலும்...' என்று தொடங்கி, அவன் ஆற்றிய உரை, எதிரே அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த பொது மக்கள் இறுதியில் 'எங்கே அந்த புரூட்டஸ்? அவனை இப்போதே கிழித்தெறிகிறோம்'—என்று பொங்கியெழும் அள வுக்கு உணர்ச்சிகளைத் தட்டியெழுப்பும் ஆற்றல் மிக்கதாய் அமையவில்லையா?

கி. மு. 106-இல் தோன்றிய மார்க்கஸ் டுல்லியஸ் சிசரோவின் சொற்பொழிவுத் திறனுக்குத்தான் ஒப்புவமை ஏது? தன்னுடைய இருபத்தைந்தாம் வயதிலேயே சட்ட நுணுக்கம் மற்றும் இலக்கிய ஆழம் பற்றி, முதன் முதலாக முதல்தரமான சொற்பொழிவை நிகழ்த்திப் பேச்சுக்கலை யிலே புகழ்முடி புனைந்துகொண்டவன் அவன். தத்துவ ஞானத்திலும் (Philosophy) வித்தகனாய் விளங்கிய அவன் ரோமானியப் பேரரசு கண்ட மிகச் சிறந்த அரசியல் அறிஞன் மட்டுமின்றி மிக உயர்ந்த பேச்சாளனும் ஆவான்.

இந்த இருபதாம் நூற்றாண்டைப் பொறுத்தவரை இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த 'வெள்ளி நாக்கு' (Silver tongue) என்னும் விழுப் புகழ் படைத்த அட்லாய் ஸ்டீவன்ச னும் இங்கிலாந்து நாட்டு வின்ஸ்டன் சர்ச்சிலும் தனிசிறந்த நாவலர்களாய்த் திகழ்ந்தவர்கள் ஆவார்கள்.

மேலே குறிப்பிடப்பெற்ற டெமாஸ்தனிஸ், ஆன்டனி, சிசரோ, சர்ச்சில், அட்லாய் ஸ்டீவன்சன் முதலான பேச்சுப் புலிகளையெல்லாம் ஒரே உருவில் காணவேண்டும் என்னும் வேட்கை எழுகிறதா? அவ்வாறாயின் பேரறிஞர் அண்ணாவைப் பின்தொடர்ந்து அவர் பேச்சைக் கேட்டாலே போதும்.

## தமிழகச் சொற்பொழிவாளர்கள்

ஏதோ வெற்றுப் புகழ்ச்சிகளுள் ஒன்றாக இவ்வாறு நாம் எழுதவில்லை. உலக அளவில் ஒப்பு நோக்குவது ஒரு புறம் இருக்க, தமிழகத்தை மட்டும் எடுத்துக்கொண்டாலும் அண்ணா ஒரு தன்னிகரற்ற பேச்சாளரே!

சர். ஏ. இராமசாமி முதலியார், ரைட் ஆனரபிள்—வி. எஸ். சீனிவாச சாஸ்திரி, திருப்பாதிரிப்புலியூர்—ஞானியார் சாமிகள், தமிழ்க் கடல்—மறைமலையடிகள், தமிழ்த் தென்றல்-திரு. வி. கலியாணசுந்தரனார், நாவலர் கணக்காயர்—ச. சோமசுந்தர பாரதியார், விடுதலை வீரர்—எஸ். சத்தியமூர்த்தி, சொல்லின் செல்வர்—ரா. பி. சேதுப்பிள்ளை, பொதுவுடைமைத் தலைவர்—ப. சீவானந்தம், தன்மான இயக்கத் தந்தை—பெரியார் ஈ. வெ. ராமசாமி ஆகியோர் சிறந்த சொற்பொழிவாளர்கள் அல்லரா என சிலர் கேட்கலாம்.

இவர்கள் யாவரும் ஐயப்பாட்டிற்கு இடம் இன்றிச் சிறந்த சொற்பொழிவாளர்களே! ஒப்புக் கொள்கிறோம்.

ஆனால், பேரறிஞர் அண்ணாவோ சிறந்த சொற்பொழிவாளர் மட்டுமல்லர்; மிகச் சிறந்த சொற்பொழிவாளர்; தலைசிறந்த சொற்பொழிவாளர்; புரட்சி மணக்கும் சொற்பொழிவாளர்!

## அண்ணாவின் சிறப்புக்கு என்ன காரணம்?

இப்படி நாம் உறுதியோடு உரைப்பதற்குக் காரணங்கள் என்னென்ன? அவற்றையும் தெரிந்துகொள்ள வேண்டுமல்லவா?

1. எதுகை—மோனை, கவிதை இலக்கியத்துக்கே உரிய கூறுகள்—அணிகலன்கள். அவற்றை முதன் முதல் படித்தவர்கள் மட்டுமின்றிப் படிக்காதவர்களும் கேட்டு இன்புறுமாறு, தம்முடைய மேடைப் பேச்சிலே மிக நயமாகவும் எளிதாகவும் கையாண்டு வெற்றி பெற்றவர் அண்ணா. இதனாலேயே 'அடுக்கு மொழி—அண்ணா' என்னும் சிறப்புப் பட்டம் அவரை வந்தடைந்தது.

2. ஒரு குறிப்பிட்ட தனி இடத்தில், ஓர் அறிஞரின் சிறப்புச் சொற்பொழிவைக் கேட்க வருகின்றவர்களிடம் கட்டணம் வழங்கும் முறை மேனாடுகளில் உண்டு. ஆனால், நம் நாட்டில் ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்கு முன்புவரைகூட இம்முறை இருந்தது இல்லை. ஆனால், தமிழ் நாட்டிலே திரைப்படம் பார்க்கக் கட்டணம் செலுத்திச் சீட்டு வாங்கிச்

செல்வதைப்போல, எந்த அறிஞரின் சிறப்புச் சொற் பொழிவைக் கேட்க, முதன் முதல் கட்டணஞ் செலுத்திப் பொதுமக்கள் பெருந்திரளாக வந்து வரிசையிலும் காத் திருந்து பேச்சு மன்றம் நுழைந்தனர் என்றால் அந்த அறிஞர் அண்ணா அவர்களே! அவருக்கு முன்னர் வேறு எந்தச் சொற்பொழிவாளரும் இத்தகைய பெரும் பேற்றினை எய்தவே இல்லை.

3. கவிஞர்கள்தாம் தத்தம் பாக்களில் உவமை அணி களை மிகுதியாகக் கையாளுவார்கள். உரைநடை இலக்கியம் வளர்ந்த பிறகு கலீல் கிப்ரான், வி. ச. காண்டேகர் முத லானோர் தங்கள் எழுத்துக் கலையிலும் உவமைகளை மிகுதி யாகப் பெய்து படிப்பாளர்களின் உள்ளத்தைக் கவர்ந்திருந் தார்கள். ஆனால் கவிஞர்களையும் மிஞ்சும்வண்ணம் மேடைப் பேச்சிலே முதன் முதல் உவமைகளை மலர்க்குவிய லாகப் பெரும் அளவில் அள்ளிச் சொரிந்து கேட்பாளர்களின் நெஞ்சத்தைக் கொள்ளையிடுகின்ற பெருமை அண்ணாவையே சாரும்.

4. பொதுவாகப் பேச்சாளர்கள், கற்றறிந்தாரிடம் பேசும்போது ஒருவகையாகவும், கல்லாத சிற்றூராரிடம் பேசும்போது வேறு வகையாகவும் உரை நிகழ்த்துவார்கள். அதாவது, முந்தின வகையில் மொழி இலக்கண மரபுகளை ஓரளவு மனத்தில் கொண்டும், பிந்தின வகையில் பேச்சு வழக்குக்குப் பெரும் இடம் அளித்தும் சொற்பொழிவு ஆற்று வார்கள். ஆனால், அண்ணாவோ பட்டணமாயினும், பட்டிக் காடாயினும், சிற்றூராயினும், பேரூராயினும் மொழியிலக் கண மரபுகள் ஓரளவு குறைந்துவிடாமலும், பேச்சு வழக்கில் நிலவும் கொச்சை மொழிகளுக்கு இடங்கொடுக்காமலும் தம் தரத்தைவிட்டு இறங்காமல் ஒரே சீரான குரலில் பேச வல்லவர். அத்துடன், தேனினும் இனிய நல்ல செந்தமிழ்ச் சொற்கள், பிறமொழிக் கலப்பில்லாத அழகுச் சொற்கள், முதன் முதல் சிற்றூர்களுக்கும் எட்டும்வணணம் செய்தவர் அண்ணாவே.

5. உலகில் எந்தப் பேச்சாளருமே தாம் எந்தக் கூட் டத்தில் பேசுவதாக இருப்பினும் அந்தக் கூட்டத்தில் நாம் பேசவேண்டிய பொருளின் தலைப்பு பற்றி முன்கூட்டியே

தெரிந்துகொள்வார், அல்லது தேர்ந்தெடுத்தும் சொல்வார். அந்தத் தலைப்பை ஒட்டித் தம் உரையைத் தாளில் இல்லாவிடினும், மனத்தளவிலேனும் தயாரித்து வைத்துக்கொள்வார். ஆனால், தலைப்பு என்ன என்பது முன்கூட்டியே தெரியாத நிலையிலும், எந்தத் தலைப்பைத் திடீரென்று கொடுத்தாலும், தட்டுத் தடங்கலின்றிச் சுவை குன்றாமல், மணிக்கணக்கில் பேசும் ஆற்றலை—ஏன் வழக்கத்தை—தமிழகத்தில் முதன் முதல் செயற்படுத்திய தீரர் அண்ணா அவர்களே; இவ்வாறு முன்கூட்டியே தலைப்புத் தெரியாமலும் தயாரிப்பு இல்லாமலும் பேசிய பேச்சுக்களுக்கு எத்தனையோ சொற்பொழிவுகளை எடுத்துக்காட்டாகக் கூறலாம். 'ஆற்றோரம்' என்னும் தலைப்பில அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய சொற்பொழிவும், (தமிழர்களுக்கு, தமிழ்நாட்டுக்கு உலகில் தலைமை இடம் இல்லை என்னும் பொருள்பட) 'தலைப்பில்லை' என்னுந் தலைப்பின்கீழ் சென்னைக் கல்லூரியொன்றில் ஆற்றிய சொற்பொழிவும் ஈண்டு குறிப்பிடத்தக்கன.

6. தமிழில் பேசவல்ல சிறந்த சொற்பொழிவாளர்களுக்கு ஆங்கிலத்தில் அத்துணைச் சிறப்பாகப் பேச்சு அமைவதில்லை. அதேபோன்று, ஆங்கிலத்தில் அழகுடன் உரையாற்ற வல்லவர்களுக்குத் தமிழில் பேச வராது. ஆனால், அண்ணாவோ, ஆங்கிலம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலுமே அழகு வழிய, தம் ஆற்றல் ஒளிர பேசுவதில் நிகரற்றவர்.

7. அண்ணாவுக்கு முன்னர் எந்த ஒரு சொற்பொழிவாளரின் உரையும் உடனே நூல் வடிவம் பெற்றதில்லை. ஆனால், ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்கு முன்னரே அண்ணாவின் சொற்பொழிவுகள் தமிழகத்திலே முதன் முதல் நூல் வடிவம் பெற்று மக்களிடையே பெரும் எண்ணிக்கையில் விற்பனையும் ஆயின.

இவ்வாறாக, பேச்சுக் கலையிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் புகுத்திய புதுமைகள்—புரிந்த புரட்சிகள் எண்ணற்றன. அதனால்தான அவரைப் பிற பேச்சாளர்களை விடத் தலைசிறந்த சொற்பொழிவாளர் என்பதைத் தயங்காமல் ஒப்புக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

## சர். ஏ. இராமசாமி முதலியார் பாராட்டு

அண்ணாவின் சொற்பொழிவைப் பாராட்டி வேறு சில அறிஞர்கள் அளித்த நற்சான்றுகளை ஈண்டுக் குறிப்பிடுவதும் பொருத்தமானதே.

அந்த நாட்களில், ஆங்கிலப் பேச்சுக் கலையில் நம் தமிழ் நாட்டிலே மாமன்னராய் மாட்சி பெற்றவர், ஆற்காடு சர். ஏ. இராமசாமி முதலியார் ஆவார். அமெரிக்க நாட்டிலுள்ள சான்பிரான்சிஸ்கோவில் நடைபெற்ற உலக அமைதி மாநாட்டில் இந்தியாவின் பிரதிநிதியாகக் கலந்துகொண்டு தம் பேச்சாற்றலால் அந்த மாநாட்டுக்கு வந்திருந்த அத்தனை அறிஞர்களையும் வியப்பில் ஆழ்த்திய விழுப்புகழ் அவருக்கு உண்டு. அவரே, ஒரு கூட்டத்தில் அஞ்சா நெஞ்சுடன், அழகு சிந்த, அண்ணா ஆற்றிய ஆங்கில உரையைக் கேட்டு என்ன சொன்னார் தெரியுமா?

"அண்ணாதுரை! ஆங்கிலப் பேச்சில் எனது வழித் தோன்றலாக—வாரிசாக—நீயாகத்தான் இருப்பாய்!"

## இராசாசி—பாராட்டு

சர். ஏ. இராமசாமி முதலியார், அண்ணாவைத் தம் வழித்தோன்றலாக மட்டுந்தானே அந்த நாளில் கணித்திருந்தார். ஆனால், உண்மையில் நடந்த நிகழ்ச்சி, திரு. இராமசாமி முதலியாரின் வழித்தோன்றலாக மட்டும் இன்றி, அவருடைய குருவாகவும்கூட அண்ணாவை உயர்த்திவிட்டது!

மூன்றாவது இந்தியப் பொதுத் தேர்தலின்போது காஞ்சிபுரத்தில் ஒரு தேர்தல் கூட்டம் நடைபெற்றது. அதில் சுதந்திராக் கட்சித் தலைவர் திரு. இராசாசி அவர்களும் கலந்துகொண்டார்கள். அண்ணாவும் அதில் பங்குகொண்டு உரை நிகழ்த்தினார். அவருக்குப் பின் இறுதியில் பேசிய அரசியல் மூதறிஞர் இராசாசி:

"...முன்னால் என்னுடைய பேச்சைக் கேட்டீர்கள்; பேச்சில் வல்லவரான இராமசாமி முதலியார் பேசியதையும் கேட்டீர்கள். அண்ணாதுரையோ, பேச்சிலே எங்கள் இரண்டு பேரையுமே மிஞ்சிவிட்டார்!"

—என்று வாயாரப் புகழ்ந்தார். இதைவிட அண்ணா வின் சொற்பொழிவுக்கு இன்னொரு நற்சான்றும் வேண்டுமா

## 'கல்கி' அளித்த 'அறிஞர்' பட்டம்

அண்ணாவின் பெயருக்கு முன்னால் 'அறிஞர்' என்னும் சொல்லைக் கூட்டி அழைப்பது, வெறும் மோனை மொழி—அடுக்கு மொழி—அழகுகளுக்காக மட்டும் அன்று. அவ்வாறு 'அறிஞர்' என்று அழைக்கப்படுவதற்கு எல்லா வகைகளிலும் தகுதி பெற்றவரே அண்ணா. இவ்வுண்மையை உணராத சிலர்,

"அண்ணாதுரைக்கு 'அறிஞர்' என்னும் பட்டத்தை யார் கொடுத்தது?" என்று கேலியாகக் கிளறி தம்முடைய அழுக்காற்றுப் பசியை ஆற்றிக்கொள்ள முயல்வதுண்டு.

ஆனால் அந்தப் பட்டம், தரத் தகுதி படைத்த இருவரால் பெறத் தகுதி படைத்த ஒருவருக்கு அளிக்கப்பெற்றதே! சென்னையில் சிந்தனையாளர் மன்றம் என்னும் ஓர் அமைப்பு இயங்கியது. அதன் சார்பில் நிகழ்ந்த விழா ஒன்றில் அண்ணாவுக்குப் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் வாழ்த்து மலர் கிட்டிற்று. அதிலேதான் முதன்முதலாக 'அறிஞர்' என்னும் படத்தைச் சூட்டியிருந்தார் புரட்சிக் கவிஞர். அதுவே நிலையான வழக்காறாக அமைந்து விட்டது.

தமிழ் இலக்கியத் துறையில் முதன் முதல் வரலாற்றுப் புதினங்கள் படைத்த வழிகாட்டி 'கல்கி' ரா. கிருட்டின மூர்த்தி அவர்களே! அவருடைய 'அலையோசை' என்னும் புதினம் இந்திய அரசின் சாகித்திய அகடமியால் ரூபாய் ஐயாயிரம் பரிசளிக்கப் பெற்றதாகும். அவர் எழுதிய 'சிவ காமியின் சபதம்', 'பொன்னியின் செல்வன்' முதலான புதினங்கள் இன்றும் இலக்கியச் சுவையார்வம் மிகுந் தோரால் மீண்டும் மீண்டும் படிக்கப் பெற்றன.

அத்தகைய சிறப்பு வாய்ந்த எழுத்தாளர் தலைவர் 'கல்கி' அவர்களின் தலைமையில் ஒரு கூட்டத்திற்கு ஏற் பாடாகி இருந்தது. அதில் அண்ணாவும் வேறு பலரும் உரை யாற்ற அழைக்கப்பட்டிருந்தனர். குறிப்பிட்டிருந்த நேரங் கடந்தும் அண்ணாவைத் தவிர பிற பேச்சாளர்கள் கூட்டத்

திற்கு வரவில்லை. இதனால் அங்கு குழுமியிருந்த பொது மக்களுக்குப் பெரும் மனக்குறை ஏற்பட்டுவிட்டது. அதனை யறிந்த அண்ணா அவர்கள் சலிப்பை அகற்ற ஓர் உத்தியைக் கையாண்டார். அந்தக் கூட்டத்தில் பிறர் பேசவேண்டிய தலைப்புகளையும் தாம் பேசவந்த தலைப்பினையும் எடுத்துக் கொண்டு, முன் குறிப்பு எதுவும் இன்றி, தட்டுத் தடங்கல் இல்லாமல் அண்ணா ஒவ்வொரு தலைப்பை ஒட்டியும் மிக அழ காகப் பேசி முடித்தார். பல்வேறு தலைப்புகளையும் வைத்து முன் தயாரிப்பு இன்றியே உரையாற்றிய அண்ணாவின் ஆற்றலைக் கண்டு 'கல்கி' அவர்கள் வியப்பில் ஆழ்ந்தார்; உளமாறப் பாராட்டினார்; அத்துடன் பொதுமக்கள் முன் னிலையில் அண்ணா அவர்களுக்கு 'அறிஞர்' என்னும் பட்டத் தையும் சூட்டி மகிழ்ந்தார்!

## அண்ணாவின் எழுத்துப் புரட்சி : புதிய உத்தி

பேச்சுக் கலையில் மட்டுந்தானா அண்ணா வல்லவர்? எழுத்துக் கலையிலும் அவருக்கு இணை அவரே!

தமிழ் உரைநடைப் போக்கிலேயே ஒரு புதிய மரபினைத் தோற்றுவித்துள்ள பெருமையும் அண்ணாவையே சாரும்.

சாதாரணமாக எழுவாயை (Subject) முதலிலும், செயப்படு பொருளை இடையிலும் (Object), பயனிலையை (Predicate) இறுதியிலும் வருமாறு சொற்றொடர் அல்லது வாக்கியம் அமைப்பது முன்பு தமிழில் வழக்கமாக இருந்தது. தமிழ் இலக்கண விதிகளுக்கு உடன்பாடானதும் அதுவே.

ஆனால் அண்ணா இந்த வாக்கிய அமைப்பு முறையில் ஒரு புதுத் திருப்பத்தை உண்டு பண்ணினார். அதாவது, எழுவாயை இறுதியில் வருமாறு வாக்கியங்களை அமைக்க முற்பட்டார். செயப்படுபொருள் முதலிலும், பயனிலை இடையிலும் வருமாறு எழுதினார்.

எடுத்துக்காட்டாக,

"கண்ணன் கனியைத் தின்றான்"

—என்னும் வாக்கிய அமைப்பை,

"கனியைத் தின்றான் கண்ணன்"

—என்றோ,

"தின்றான் கனியைக் கண்ணன்"

—என்றோ,

அண்ணா புதிய உத்திகளைக் கையாண்டு எழுதினார். இவற்றால், சொல்லவந்த பொருளில் ஒருவிதத் தனிச் சுவையும், சொல்லும் முறையிலே ஒரு சுறுசுறுப்புங்கூட ஏற்பட்டன!

இவ்வாறு எழுவாயை முதலில் பெய்யாது, இறுதியிலோ இடையிலோ வாக்கிய அமைப்புக்குள் தள்ளி எழுதுவது ஆங்கில மொழிநடை மரபினை ஒட்டியதென்று கூறுவர்.

ஆனால் இந்த உத்தி, நம்முடைய தமிழ்ப் பாக்களிலும் கையாளப் பெறுகின்றது.

"சீதையைக் கண்டேன்"

—என்பதை,

"கண்டேன் சீதையை"

—என்று அநுமன் கூறுவதாகக் கம்பராமாயணத்தில் வருவது ஈண்டு நினைவுகூரத் தக்கது.

## கவிதையுணர்வின் கனிவு

இவ்வாறு கவிதை மரபினை உரைநடையில் ஏற்றிய தன் மூலம் தமிழ் உரைநடை இலக்கியத்துறையிலே ஓர் அமைதியான புரட்சி ஏற்பட்டுவிட்டது; விறுவிறுப்புக் குன்றாத ஓர் அழகும் கனியலாயிற்று.

நாளடைவில், 'அண்ணாவைப் பின்பற்றித்தான் எழுவாய் பயனிலையை இடம் மாற்றி எழுதுகிறோம்' என்று வெளிப்படையாகச் சொல்ல வெட்கப்பட்டாலும் விரும்பாவிட்டாலும், இன்று அந்த உத்தியைக் கையாளாத எழுத்தாளரோ, ஆசிரியரோ, அறிஞரோ இல்லை என்னும் அளவுக்கு உரைநடைப் போக்கு மாறிவிட்டது.

முப்பதாண்டுகளுக்கு முன்னர் வெளிவந்த ஏடுகளையும், நூல்களையும் ஆழ்ந்து நோக்குவோர்க்கு இவ்வுண்மை புலனாகும்.

இந்த உத்தி ஒருபுறம் இருக்க, அண்ணாவின் எழுத்து நடையே கவிதைச் சாயலை உடுத்துக் கொண்டுதான் துள்ளி

ஓடும்! எதுகையும் மோனையும் தம்மை அறியாமலே அதில் தலை நீட்டி முறுவலிக்கும்.

'திராவிட நாடு'—பொங்கல் மலர் ஒன்றில், அவருடைய உரைநடையில் கமழும் கவிதை மணத்தைப் பாருங்கள்!

'...ஆரணங்கு அறிபாளர ஆடவர் முறைதன்னை
ஓரப் பார்வையுந்தான் வேறென்ன கூறிடுமோ?
உள்ளுக்குள் சிரிக்கின்றான் உன்போக்குத் தான்கண்டு
ஊரெல்லாம் விழாக்கோலம் கொண்டிடும் இத்திருநாளில்
மனையெல்லாம் மாளிகையாய் மாறிடவே வேண்டாமோ?
யார் அதனைச் செயவல்ல'மாயாவி' அவளல்லால்?
அறியாமல் அங்கிருந்து ஆயிரம் பேசுகின்றாய்!
அகன்றிடுவாய், அவள்இங்கு அழகளிக்கும் காரியத்தில்
ஆர்வம் மிகக் கொண்டுவிட்டாள் அடுத்த வீட்டு
அழகியுடன்
.................................
மான்துள்ளும் என்மனையில் மயிலாடும் பார்த்திடுவாய்!
தேன்சிந்தும் செடிகொடிகள், செடிகொடிகள் கைவண்ணம்
.........'

—ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல், அண்ணாவின் உள்ளத்தில் பொங்கி வழியும் கவிதை உணர்வு எவ்வாறு அவரது உரைநடையிலும் பொலிகிறது என்பதை எடுத்துக்காட்டவே மேலே சில வரிகளைத் துணைக்கு அழைத்துள்ளோம்.

எழுத்துக் கலையிலே இதுவும் ஒருவகைப் புரட்சியே அல்லவா?

## சிலேடைச் சிறப்பு

அண்ணாவின் எழுத்து நடைக்கு ஒரு தனி இளமை முறுக்கு, எழிலின் திரட்சி, தெளிவின் ஆழம் யாவும் உண்டு. தம் மூக்கிற்குப் பொடி போடுவது போலவே, சொற்களிலும் 'பொடி'—இருபொருள்—வைத்து எழுதுவதில் அண்ணா வல்லவர்! பண்டை நாட்களில் காளமேகப் புலவர் போன்றவர்கள் சிலேடைப் பாட்டுக்கள் பாடியுள்ளனர் அல்லவா? அதே 'சிலேடை' அணியை உரைநடையிலும் கையாண்டு வெற்றி கண்டவர் அண்ணா.

எழுத்துலகில் ஏறுநடை

'நவயுகம்' என்னும் கிழமை ஏடுதான் தொடக்க காலத்தில் அண்ணாவைத் தமிழ் எழுத்துலகுக்கு அறிமுகப்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

தம் இயற்பெயரில் மட்டுமின்றி 'பரதன்' 'சௌமியன்' ஆகிய புனைபெயர்களிலும் அண்ணா கதை, கட்டுரைகளை எழுதி வெளியிட்டுள்ளார்.

1939-இல் 'விடுதலை'—ஏட்டின் துணையாசிரியராகப் பொறுப்பேற்றுக்கொண்டபின், அண்ணா அதில் தீட்டிய சில தலையங்கங்கள் படிப்போரின் உள்ளத்தைப் பிடித்து இழுத்துப் பேராவலைத் தூண்டும்வண்ணம் சிறந்திருந்தன. 'கல்கத்தா காய்ச்சல்', 'ஓமான் கடற்கரையிலே', 'ரிப்பன் கட்டிடத்துச் சீமான்கள்'—முதலான கட்டுரைகள் அவற்றுள் மிகவும் குறிப்பிடத்தக்கவை.

'ரிப்பன் கட்டிடத்துச் சீமான்கள்'—என்னும் தலையங்கத்தைப் பெரியார் அடிக்கடி படித்துப் படித்து அகமகிழ்ந்ததோடு நில்லாமல், தம்முடைய தள்ளாத வயதிலும் மூன்றுவது மாடிவரை ஏறிச் சென்று அண்ணாவின் எழுத்தாற்றலைப் பாராட்டினார்.

இதைவிட அண்ணாவின் எழுத்து வன்மைக்கு வேறொரு நற்சான்று வேண்டுமா என்ன?

கம்ப ராமாயணத்தைக் கடவுள் நூலாக வழிபடும் மூட நம்பிக்கையைத் தகர்க்கும் பொருட்டும், அது ஒரு சாதாரண மனித இலக்கியமே என்பதை நிறுவும் பொருட்டும், அண்ணா எழுதிய 'கம்பரசம்' நூல் இலக்கிய ஆராய்ச்சித் துறையிலேயே ஒரு பெரும் புரட்சியாகும்!

பண்டித சவகர்லால் நேரு அவர்கள் அந்த நாளில் தம் மகளான சிறுமி இந்திராவுக்குக் கடிதங்கள் மூலமே உலக வரலாற்றைப் போதித்தார். அதே முறையை ஓரளவு பின்பற்றி, தம் கழகத் தோழர்களுக்குக் கொள்கை விளக்கம் அளிக்க முற்பட்டார் அண்ணா.

'தம்பிக்குக் கடிதம்'—பகுதியின் மூலம் பல்வேறு அரசியல் சிக்கல்களுக்கும் எவ்வாறு தீர்வு காண்பது என்பதற்குரிய பயிற்சியைத் தம் தொண்டர்களுக்கு ஊட்டி

வந்தார் அண்ணா. அதே நேரத்தில் அப்பகுதியில் வெளியான மடல்கள் அவருக்கும் கழகத் தோழர்களுக்கும் பிரிக்க முடியாத பாசப் பிணைப்பை வளர்ப்பதாகவும் அமைந்திருந்தன.

விடுதலை,
திராவிட நாடு,
காஞ்சி,
Home Land

—முதலான ஏடுகளில் அவர் அவ்வப்போது தீட்டிய கட்டுரைகளும், சிறு கதைகளும், நெடுங்கதைகளும் வெளிவந்து, சமூக மறுமலர்ச்சிக்குப் பெருந்துணை புரிந்துள்ளன.

அண்ணா புரிந்துள்ள எழுத்துப் புரட்சிக்கு எல்லையே இல்லை!

'எழுத்தாளன் என்பவன் அவனுடைய நாட்டின்—வர்க்கத்தின்—உணர்ச்சி மயமான ஊதுகுழல். அதன் செவி, கண், இதயம் எல்லாம் அவன்தான். அவன்தான் அவனது சகாப்தத்தின் குரல். அவன் பழமையைப்பற்றி எவ்வளவு தெரிந்துகொள்ள வேண்டுமோ அவ்வளவு தெரிந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் நிகழ்காலத்தில் தனது சமுதாயத்தின் முன்னுள்ள கடமைகளை வரையறுக்க முடியும்...''

—என்றார் மார்க்சிம் கார்க்கி.

அவருடைய கூற்றை ஒட்டினாற்போல்தான் அண்ணாவின் சிந்தனையும் எழுத்துப் புரட்சியில் ஈடுபட்டது?

## அண்ணாவின் கலைப் புரட்சி! நாடகக் கலை

"நாடகத்தில் மறுமலர்ச்சி மிகமிக முக்கியமானது. நாட்டின் விழிப்புக்கு அது நல்லதோர் அளவுகோல். நாளை எப்படி இருப்போம் என்பதற்கு அதுவே அறிகுறியாகும்"

—என்று நாடகம் பற்றி அண்ணாவே கூறியுள்ளார்.

தம் கூற்றுப்படியே சமுதாயப் புரட்சிக்கு நாடகத்துறையை நல்ல துணையாக வரித்துக்கொண்டார் அண்ணா.

அறிஞர் பெர்னாட்ஷா 'பிக்மேலியம்' என்னும் நாடகம் ஒன்றைத் தீட்டினார். அது 'என்னுடைய அழகிய அணங்கு' (My Fair Lady) என்னும் தலைப்பில் திரைக்காவியமாக

எடுக்கப்பட்டது. அந்தத் திரை ஓவியம், ஆஸ்கார் பரிசுகள் பல பெற்றதுடன், பல ஆண்டுகள் தொடர்ந்து மக்களின் விழிகளுக்கு விருந்தாகக் காட்டப்பட்டது; காட்டப்பட்டும் வருகிறது.

அண்ணு தீட்டிய 'ஓர் இரவு', 'வேலைக்காரி' நாடகங் களும், தமிழகத்திலே எதிர்பாராத புரட்சியை ஏற்படுத்தின. தஞ்சை, இராமநாதன் செட்டியார் மன்றத்தில், ஒருவாரம் இருவாரம் அல்ல; பல மாதங்கள், ஏன் ஆண்டுகள்கூட இந் நாடகங்கள் நடித்துக் காட்டப்பட்டன.

அண்ணு எழுதிய 'ஓர் இரவு' நாடகத்தைப் பார்த்து விட்டுத்தான் 'கல்கி'—ரா. கிருஷ்ணமூர்த்தி, அண்ணு அவர் களைத் 'தென்னுட்டுப் பெர்னுட்ஷா'—என்றும், 'இப்சன்' என்றும், 'கால்ஸ் வொர்த்தி' என்றும் பலபடப் பாராட் டினர்.

அண்ணுவின் முதல் படைப்பான 'சந்திரோதயம்' நாட கத்திலேயே கோவில் சொத்துக்கள் பொதுமக்களுக்குப் பயன்பட வேண்டும், தொழிலாளர் தோழனுக அரசாங்கம் இயங்க வேண்டும், பெண்கள் மறுமணம் செய்துகொள் வதைத் தடை செய்யக்கூடாது, பகுத்தறிவுப் பணிக்கு ஆக்கம் அளிக்கவேண்டும் என்பன போன்ற புரட்சிக் கருத் துக்கள் தீப்பொறி சிந்தின.

## நடிப்புக் கலை

இச் 'சந்திரோதயம்' நாடகம், 1943-ஆம் ஆண்டில் திருவனந்தபுரத்தில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தலைமை யில் நடைபெற்றது.

நாடகத்தை எழுதியதோடு அண்ணு அமைதியடைந்து உட்கார்ந்து விடவில்லை. தாமே அதில் வரும் தலையாய பாத்திரத்தை ஏற்று நடிக்கவும் நடித்தார்.

'குறிப்பாக, 'சந்திரமோகன்' நாடகத்தில், 'காகபட்ட ராக' அவர் பாத்திரமேற்று நடித்தது. நடிகர்களுக்கே வியப் பூட்டுவதாய் அமைந்திருந்தது.

'நீதி தேவன் மயக்கம்'—நாடகத்திலே, கம்பனைக் குற்ற வாளிக் கூண்டிலே நிறுத்தி, அவனைக் குறுக்கு விசாரணை

புரியும் இராவணனாக அண்ணா நடித்த நடிப்பும் எண்ணற்ற புகழ்மாலைகளை அள்ளிக்கொண்டு வந்து சேர்த்தது.

'ஓர் இரவு'—நாடகம் ஒரே இரவில் அண்ணாவின் கை வண்ணத்தில் உருவானது என்னில் நமக்கு எல்லையில்லாத வியப்பு ஏற்படுகிறது அல்லவா?

பிரஞ்சு நாடகாசிரியர் மோலியர், பிரஞ்சு மக்களைக் கவர்ந்ததைவிட, அண்ணா தம் நாடகங்கள் மூலம் தமிழக மக்களைக் கவர்ந்துவிட்டார். அதன்மூலம் நாடகத் துறையிலே புரட்சியாளராக உயர்ந்துவிட்டார்.

## திரைக் கலை

அவ்வாறே, திரையுலகிலும் அண்ணா புரிந்துள்ள புரட்சி குறிப்பிடத் தக்கதாகும்.

அவருடைய நாடகங்களில் 'வேலைக்காரி' நாடகம்தான் முதன்முதலாகத் திரையோவியம் ஆக்கப்பட்டது. அது வரை புராணப் படங்களையும், பொருந்தாத வரலாற்றுப் படங்களையுமே கண்டு அலுத்துப் போயிருந்த தமிழ் மக்களுக்கு அண்ணாவின் 'வேலைக்காரி'—படம் புதிய இன்பத்தையும், புதிய சிந்தனையையும், புதிய சுவையுணர்வையும் அளித்தது.

'சட்டம் ஓர் இருட்டறை; வக்கீலின் வாதம் அதில் விளக்கு.'

—என்பன போன்ற உரையாடல்கள், படத்தின் தரத்தை உயர்த்தி பார்ப்பவர்களின் சிந்தனையையும் கிளறின.

'ஓர் இரவு', 'நல்ல தம்பி', 'நல்லவன் வாழ்வான்', 'சொர்க்க வாசல்' முதலானவையும் திரையுலகில் பெரும் புரட்சி செய்த படங்களாகும்.

## அறிஞர்க்கெல்லாம் அறிஞர்!

'பெருமையை மூன்று அறிகுறிகள் மூலம் அறிந்து கொள்ளலாம். தோற்றத்தில் எளிமை, செயலில் மனிதத் தன்மை, வெற்றியில் வெறியின்மை ஆகியவையே அவ்வறிகுறிகள்'

—என்றார் பிஸ்மார்க்.

அவர் வாக்குக்கே ஓர் அரிய இலக்கியமாக விளங்கும் அண்ணா, பேச்சுக் கலையிலும், எழுத்துக் கலையிலும், நாடகக் கலையிலும், திரைப்படக் கலையிலும் பற்பல புரட்சிகள் நடத்தி யாரும் அடைய முடிந்திராத வெற்றிகளையெல்லாம் அடைந்தார். ஆயினும் அந்த வெற்றிகளின் அரவணைப்பு அவருக்கு வெறியை ஊட்டவில்லை.

அந்த வெறியின்மைதான்—அடக்கந்தான்—இன்று ஆட்சிப் பீடம் ஏறியுள்ள அவரை மனிதர்க்கெல்லாம் மாமனிதராக—அறிஞர்க்கெல்லாம் அறிஞராக உலகத் தலைவர்களுள் ஒருவராக உயர்த்தியுள்ளது!

# 28. கொள்கை மாற்றம்

## மக்களாட்சித் தன்மை

"சனநாயகம் சிரித்த முகத்தோடுதான் இருக்கும், ஆரம்பச் சூரத்தனம் அதனிடத்திலே இருக்காது; எனினும் அது ஆழ்ந்த ஆறு போன்றதாகும்; அதில் ஆழம் தெரியாமல் இறங்கினுல் அமுந்திப் போவார்கள்."

—என்று மக்களாட்சி நெறிமுறையாகிய சனநாயகத்தின் உண்மையான தன்மையைப் பற்றியும் ஆற்றலைப்பற்றியும் அழகு மிதக்கப் படம் பிடித்துக் காட்டியுள்ளார் அண்ணு.

## சீனத்தின் ஈனச் செயல்

அத்தகைய மக்களாட்சி நெறிமுறையை மண்ணோடு மண்ணுக்கும் வஞ்சகத் திட்டத்துடன், இந்தியாவின்மீது படையெடுத்தது செஞ்சீனம்.

நெஞ்சிலே கவடு என்பது கடுகளவும் இல்லாத நேருப் பெருமகனுரின் பஞ்சசீலத்தை, உலகுக்குக் கிட்டிய ஒப்பற்ற 'சஞ்சீவி'யாக ஒப்புக்கொண்டு கையெழுத்திட்ட நாடுதான் செஞ்சீனம்! ஆயினும் காலப் போக்கிலே தன்னுடைய உண்மை உருவதனை—நாடு பிடிக்கும் இரத்தப் பசியை—இட்லரின் பேராசை வெறியை—அது உலகுக்குக் காட்டவும் முற்பட்டுவிட்டது.

## என்ன காரணம்?

நட்பு நாடாகத் தொடக்கத்தில் பழகிய செஞ்சீனம் பின்னர் தோழமையைத் தூக்கிலே தொங்கவிட்டுவிட்டு இந்தியப் பகுதிகளை ஆக்கிரமிக்கும் எதிரிநாடாக மாறுவானேன்? காரணங்கள் பல.

பரப்பளவிலும், மக்கள் தொகையிலும் தான் பெரிய நாடாக இருந்தும்கூட அவ்விரண்டைப் பொறுத்த

வரையிலும் சிறிய நாடான இந்தியா மட்டும், உலக அரங்கிலே தன்னிகரற்ற செல்வாக்குடன் ஓங்குகிறதே! அதன் 'முடிசூடா மன்னர்' சவகர்லால் நேருவுக்கு மட்டும் வாழ்த்தும் வரவேற்பும் மலைபோலக் குவிகிறதே! மழை போலப் பொழிகிறதே! என்றெல்லாம் பொறாமைக்கும் புகைச்சலுக்கும் சீனநாடு இரையாகிவிட்டதே முதற் காரணம்.

சனநாயகத்தைக் காட்டிலும், பொதுவுடைமை அடிப் படையில் எழுந்த சர்வாதிகாரமே சாலச்சிறந்தது என்று இந்த ஞாலததை ஒப்புக்கொள்ள வைக்கவேண்டும் என்ற பேராசை ஆட்டிப் படைத்தது சீன நாட்டை. அதுவும் அது போர் தொடுத்ததற்கு ஒரு காரணம் ஆகும்.

நாளுக்கு நாள் பெருகிவரும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தவோ, தன்னுடைய மக்களுக்குத் தேவை யான உணவு, உடை முதலான வசதிகளை வழங்கவோ சீனத்தால் இயலவில்லை. இதனால் சலிப்பும் வெறுப்பும் உற்ற பொதுமக்கள் எங்கே தங்கள் ஆட்சியை எதிர்த்து உள்நாட்டுப் போரைத் தொடங்கிவிடுவார்களோ என்ற அச்சமும் ஆட்டிப் படைத்தது செஞ்சீனத் தலைவர்களை. அந்தப் பிரளயம் எழாமல் இருக்க மக்களின் கவனத்தை திருப்பும் பொருட்டும், சீன அரசு இந்தியாவைத் தாக்க முனைந்தது.

### எல்லையில் தொல்லை

இந்தியாவையும் சீனாவையும் பிரிப்பது மக்மோகன் எல்லைக்கோடு. நில வரையறை வல்லுனரான மக்மோகன் என்பவரால் இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி நடந்த காலத்திலேயே வரையறுக்கப்பட்டதே அந்த எல்லைக்கோடு. அன்றிருந்த சீன அரசாலும் அது ஒப்புக்கொள்ளப்பட்டதே. பின்னர் வந்த சியாங்-கை-ஷேக் அரசும் அதனை மறுக்க வில்லை. மா-சே-துங் தலைமையில் திரண்ட பொதுவுடைமைக் கட்சியினர் சீனாவின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுச் சில ஆண்டுகள் செல்லும்வரைகூட இந்த எல்லைக்கோட்டை அவர்கள் எதிர்க்கவில்லை. பிறகுதான் மக்மோகன் எல்லைக் கோடு சரியானதன்று என்னும் தங்கள் புதிய கண்டுபிடிப்

யைச் செஞ்சீன அரசுத் தலைவர்கள் வெளியிட்டார்கள்; அதை ஒரு காரணமாகக் காட்டி இந்தியப் பகுதிகளை விழுங்குவதற்கும் அவர்கள் துணிந்து விட்டார்கள்.

1962 செப்டம்பர் திங்களில்தான் சீன அரசின் ஈனத் தனமான போர்வெறி முழுமையான முறையில் தன் கோர மான பற்களைக் குவலயத்துக்குக் காட்டியது. எதிர்பாராத தாக்குதல் நடத்தி, எல்லைக் கோட்டுக்கு இப்பால் வந்து, பல்லாயிரக்கணக்கான சதுர மைல் பரப்பளவுள்ள இந்தியப் பகுதிகளை ஈவு இரக்கமின்றி அது 'காவு' கொண்டது.

சீனாவின் இந்த வஞ்சகச் செயலைக் கண்டு நாடே கொதித்தெழுந்தது. நாட்டுப்பற்றுச் சுடர்விட்டுக் கனன்று எழுந்தது! நாற்பது கோடி மக்களும் ஒரே அணியில் ஒரே கொடியின்கீழ் திரண்டனர்.

## அண்ணாவின் கண்டனம்

அப்போது பேரறிஞர் அண்ணா, அகவிலை உயர்வைக் கண்டித்து நடத்திய மறியலுக்காகத் தண்டனை பெற்று வேலூர்ச் சிறையில் இருந்தார்.

24—10—62-ஆம் நாள் அன்று, விடுதலை பெற்று வேலூர்ச் சிறையைவிட்டு வெளியே வந்ததுமே அண்ணா செய்த முதல் அறிவிப்பு என்ன தெரியுமா?

"சீனர்களின் ஆக்கிரமிப்பை நாம் ஒருபோதும் சகித்துக் கொண்டிருக்க மாட்டோம். ஆக்கிரமிப்பில் ஈடுபட்டிருக்கும் சீனர்களின் காலடி திருப்பி எடுக்கப்படும்வரை, திராவிட முன்னேற்றக் கழகம், நேருவின் கரத்தைப் பலப்படுத்தும்."

—என்பதே!

அடுத்தடுத்து, ஒவ்வொரு நாளும், சீன ஆக்கிரமிப்பைக் கண்டித்துப் பேசி, எல்லையைக் காப்பதற்காகப் பொது மக்களிடையே எழுச்சியூட்டுவதிலும், நெருக்கடி நேரத்தில் தி. மு. க. எப்படி பொறுப்போடு நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றித் தம் தம்பியரைப் பக்குவப்படுத்துவதிலும், தம் முழு நேரத்தையும் செலவிட்டார் அண்ணா.

அப்போது அவர் அழகாக எடுத்துக்காட்டிய சீனர்களைப் பற்றிய சித்திரிப்பு மிக அற்புதமானது.

...'சீனர்களைச் சாதாரணமானவர்கள் என்று கருதாதீர்கள், சீனாவில் மக்கட் தொகை விரைந்து பெருகியுள்ளதால், சில இலட்சம்பேர் செத்தாலும் பரவாயில்லை எனக் கருதி அவர்கள் இந்த ஆக்கிரமிப்பில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் ஒரு நூற்றாண்டில் ஐந்தாறு போர்களைச் சந்திக்கிறார்கள்; நாம் சில நூற்றாண்டாகப் போரையே சந்திக்கவில்லை!"

"சீன ஏகாதிபத்தியம் மண்ணாசை கொண்டிருக்கிறது. ஒரு கோடிப் பேரை பலியிட்டேனும் ஒரு கை பார்த்து விடுவது என்று நினைக்கிறது, அந்த ஏகாதிபத்திய வெறிக் கும்பல்!

மக்களின் கண்களைக் கட்டிவிட்டு ஆளும், காட்டுமிராண்டிச் சர்வாதிகார வெறிதான் பீக்கிங்கில் இருப்பது; அந்தச் சர்வாதிகாரம்தான் இப்போது சனநாயகத்தைத் தாக்குகிறது; இருந்தாலும் சனநாயகம் நிலைக்கும்.

## பாரதி வழியும் அண்ணா வழியும்

இவ்வாறு சீனநாட்டை ஆள்வோரின் வெறித் தன்மையை விளக்கியதோடு அண்ணா அமைதியுறவில்லை; அந்த வெறியைத் தகர்த்தொழிக்கும் வழிமுறைகளையும் தம் தோழர்களுக்கு அவர் வகுத்தளித்தார்.

"பட்டாளத்தில் சேர முடிந்தவர் சேருங்கள்; பண உதவி அளிக்க முடிந்தவர்கள் அளியுங்கள்; போர்ப் பீதி ஏற்படாமல் மக்களுக்குத் தெளிவூட்டக்கூடியவர்கள் அதைச் செய்யுங்கள்.

'லடாக்' பகுதியிலும், வடகிழக்குப் பகுதியிலும் கடுங்குளிரில் போரில் அடிபட்டுக் குற்றுயிரும் குறையுயிருமாகக் கிடக்கும் நமது படைவீரர்களுக்கு இரத்தம் செலுத்தினால்தான் பிழைக்க முடியும். அதற்கு நிறைய இரத்தம் தேவைப்படும். அதுவும் நல்லவர்கள் இரத்தம்தான் தேவை; தூயவர்களின் இரத்தம் தேவை; நமது தோழர்களின் இரத்தம் தேவை; திராவிட முன்னேற்றக் கழக இரத்தம் தேவை."

—அண்ணாவின் எழுச்சியூட்டும் இந்த உரைகளைக் கேட்டு, யார்தாம் உணர்ச்சி பொங்க, போர்க்கொடியை உயர்த்தமாட்டார்கள்?

மேலே, 'பட்டாளத்தில் சேர முடிந்தவர்கள் சேருங்கள்; பண உதவி அளிக்க முடிந்தவர்கள் அளியுங்கள்' என்றெல்லாம் அண்ணா மொழிந்துள்ளவை பாரதியின் பாட்டு ஒன்றினையும் நமக்கு நினைவுபடுத்துகிறது அல்லவா?

'நிதிமிகுந்தவர் பொற்குவை தாரீர் !
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர் !
அதுவும் அற்றவர் வாய்ச்சொல் அருளீர் !
ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர் !'

—என்ற பாரதியின் புரட்சிப் பாட்டையிலேயே பீடு நடை போட்டு, அண்ணா நாட்டு மக்களையும், கழகத் தோழர்களையும் தட்டியெழுப்பியது நல்ல விளைவுகளையே தந்தது.

## அண்ணாவின் பெருமிதம்

அண்ணாவின் ஆணைக்குக் கட்டுப்பட்டு, சீன ஆக்கிரமிப்பை எதிர்ப்பதில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தீவிரமாய் ஈடுபட்டனர். அவருடைய சொற்பொழிவையும், செயல்திட்டத்தையும் அக்கறையோடு அவர்கள் கவனித்தனர்; கடைப்பிடித்தனர்.

சீனப் போரினால் ஏற்பட்ட நெருக்கடி நேரத்தில், தம் கட்சியினர் ஆற்றும் பணிகள் பற்றியும், ஏற்கும் கடமை பற்றியும், வழங்கும் நன்கொடைகள் பற்றியும் அண்ணா எவ்வளவு பெருமிதத்துடன் குறிப்பிடுகின்றார் பாருங்கள்!

"காங்கிரசுமீதுள்ள கோபத்தில் நாட்டைக் காப்பாற்றும் பிரச்னையில் நமது தோழர்கள் தவறு இழைத்துவிடக் கூடாது. இந்த அரசு இவர்களுக்குத்தானா சொந்தம்? இப்பொழுது அரசியலில் இதே நிலை நீடித்து இருந்து வருமானால், ஆட்சி தி. மு. கழகத்திடம் வராது என யார் சொல்ல முடியும் ? இரண்டு ஆண்டுகளுக்குமுன் கேரளம் கம்யூனிஸ்டுக் கேரளமாக மாறி இருக்கவில்லையா? எனவே ஆட்சியாளர்கள் இதுவரை நமக்கு இழைத்த கொடுமை அநீதிகளையெல்லாம் மன்னிப்போம்—மறப்போம்! நமது கோட்டைக்குள் எதிரிகள் நுழைய முடியாதவாறு கதவை நன்றாகத் தாழிட்டுக்கொள்ள வீர சபதம் எடுத்துக்கொள்வோம்!

தி. மு. கழகம் ஒரு தீயணைக்கும் படை; தீயணைக்கும் படை, வேண்டியவர் வீடு—வேண்டாதவர் வீடு பார்த்து தீயை அணைப்பதில்லை; யார் வீடாக இருந்தாலும் தீயை அணைக்கிறது. அதுபோல தீயவை அழிக்க தி. மு. கழகம் துடிதுடித்துவரும். அதனால்தான் சீன ஆக்கிரமிப்பை எதிர்த்து அந்த விஷயத்தில் அரசாங்கத்தை ஆதரிப்பதாகக் கூறினோம்."

"ஜனநாயகம் எங்குப் பாழ்படுத்தப் படுகிறதோ, அங்குத் துடிதுடித்துப் பாய்ந்து உதவிக்கு வருகிறது தி. மு. கழகம்."

"...புரட்சி நடிகர், எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் போர் நிதிக்கு ரூ. 75,000 கொடுத்தார் என்ற செய்தி கேள்விப்பட்டதும் முதல் காணிக்கை முன்னேற்றக் கழகத் தோழருடையதுதான் என்பதை எண்ணிப் பெருமைப் படுகிறேன். அதேபோல, எல்லைப்போரில் முதல் பிணமும், சிந்தப்படும் முதல் இரத்தமும் தமிழனுடையதாகத்தான் இருக்கும் என்று நான் போளூரிலே நடந்த பாராட்டுக் கூட்டத்தில் பேசியபோது சொன்னேன். அடுத்த நாள் பத்திரிகையைத் திறந்து பார்த்ததும், தூத்துக்குடியைச் சேர்ந்த செல்வராசு என்னும் தமிழ் மகன் போரிலே இறந்து பட்டதாக அவர் குடும்பத்துக்குத் தந்தி வந்திருக்கிறது—என்று செய்தி வெளியாகி இருந்தது. ஆகவே முதலில் விழுந்த பிணமும் தமிழனுடையதாகவே இருந்திருக்கிறது!"

## வரவேற்பை உதறினார்

அண்ணா, பொதுமக்களிடையே போருக்கு ஆதரவு திரட்டியதோடு நிற்கவில்லை. அகவிலைப் போராட்டத்தால் சிறை சென்று திரும்பிய தமக்கு அளிக்கப்படவிருந்த வரவேற்புகளையெல்லாம் உதறியும் தள்ளினார் அவர்.

"இந்திய எல்லைக்குள் நுழைந்துள்ள சீன ஆதிக்க வெறியர்களை விரட்டியடிக்கும்வரை எனக்கு வரவேற்போ, பாராட்டு விழாவோ தேவையில்லை.

"இனி, சீனர்களை நமது படை முறியடிக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் அடுத்து—நமது வெற்றி விழாக் கூட்டங்களாக நடத்த வேண்டும்."

பேரறிஞர் அண்ணாவின் இப் பெருந்தன்மையைத் தமிழக மக்கள் உளமாரப் பாராட்டினர். இதன் மூலம், ஒரு குடிமகனுக்குத் தனது நாட்டின்மீது இருக்கவேண்டிய அழுத்தமான பற்று, பிடிப்பு, பொறுப்பு, ஆகியவற்றையும் தெளிவாக வெளிப்படுத்திவிட்டார் அண்ணா.

## தி. மு. க.வின் தனிச் செல்வாக்கு

சீனப் படையெடுப்பைக் கண்டித்து அண்ணா எழுப்பிய போர் முழக்கத்தால் திராவிட முன்னேற்றக் கழகத்துக்குப் பொதுமக்களிடையே ஒரு தனியான செல்வாக்கு உருவாகத் தொடங்கியது.

பொது மேடைகளில் மட்டுமின்றி, வானொலி வாயிலாகவும், அண்ணா மற்றும் நாவலர் - நெடுஞ்செழியன், கலைஞர் - கருணாநிதி, நாஞ்சில் - மனோகரன் முதலானோர் முழங்கிய போர்ப்பரணி மக்களின் நெஞ்சத்துள் தேனாக இனித்தது; தீரத்தை வளர்த்தது; செயலாற்றத் தூண்டி விட்டது! அது மட்டுமா? தி. மு. க.வின் சிறப்பு—தொண்டு—திறமை பற்றியெல்லாம் அவர்களைச் சிந்திக்குமாறும் திருப்பிவிட்டது.

"இந்தியாவின் எல்லையில் சீன ஆக்கிரமிப்பு ஒழிக்கப் படுகிறவரை, திராவிட நாடு பிரிவினைபற்றிப் பேசமாட்டோம் என்று நான் தெள்ளத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். நாங்கள் நினைப்பதைச் சொல்வோம்; சொல்வதைச் செய்வோம்."

—என்று அண்ணா வேறு, கட்சியின் இலட்சியத்தை ஒத்தி வைத்திருப்பதாக அறிவித்து விட்டதால், நாட்டுப் பற்றில் தி. மு. க.வினர் யாருக்கும் சளைத்தவர்கள் அல்லர் என்னும் நல்லெண்ணம் பொதுமக்களிடம் மட்டுமின்றி மாற்றுக் கட்சித் தோழர்களிடமும் விரைந்து பரவலாயிற்று.

நாளடைவில் அவர்கள் தி. மு. க. கூட்டங்களுக்குத் திரளாக வரத் தலைப்பட்டனர்; கழகத்தவர்கள் அழகு தமிழில் கூறும் அரிய கருத்துமணிகளைச் செவிமடுத்துக் கேட்டனர்; சிந்தனைத் தெளிவு பெறலாயினர்.

காங்கிரசாரின் கலக்கம்

தமிழகத்தில் மலர்ந்து கொண்டிருந்த இந்த அரசியல் நல்லுறவு—மாறுதல்—காங்கிரசுக் கட்சியின் மேலிடத்தை ஏனோ கதிகலங்க வைத்தது.

'இதே போக்கை நீடிக்கவிட்டால், பிறகு தி. மு. க. வளர்ச்சியைத் தடுக்கவே முடியாதுபோல் தோன்றுகிறதே!' என்று அவர்கள் உள்ளூர அஞ்சத் தலைப்பட்டனர்.

'வடக்கே சீனாவினால் ஏற்பட்டுள்ள விபத்தைக் காட்டிலும் தெற்கே இந்தத் தி. மு. க.வினால் காங்கிரசுக்கு ஏற்படக்கூடிய விபத்து பெரிதாக இருக்கும்போல் இருக்கிறதே!'—என்று அவர்கள் நடுங்கவும் நடுங்கினர்.

இந்த இருபதாம் நூற்றாண்டின் முற்பாதியில் சீன நாட்டை சியாங்-கை-ஷேக் சிறப்பாகத்தான் ஆண்டு வந்தார். மா-சே-துங் தலைமையில் அமைந்த பொதுவுடைமைக் கட்சி, அவரது செல்வாக்கை குறைத்து ஆட்சியைக் கைப்பற்ற எவ்வளவோ முயன்றது; முடியவில்லை. கடைசியில் ஒரு தந்திரம் செய்தது. உலகப் போர் மூண்டதல்லவா? அப்போது எதிரிகளை முறியடிப்பதில் அரசாங்கத்தோடு ஒத்துழைப்பதாகப் பொதுவுடைமைக் கட்சி நேசக்கரம் நீட்டியது. அது மோசக்கரமே என்று சியாங்-கை-ஷேக்கிற்குத் தெரியவில்லை. அரசாங்க நிருவாகத்தில் அவர்களையும் உள்ளுக்கு விட்டார். அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு படைக்கலன்களையெல்லாம் மறைமுகமாகப் பறித்துக்கொண்டு, அவற்றைப் பதுக்கியும் வைத்தனர் பொதுவுடைமையர்கள். பிறகு சமயம் பார்த்துப் புரட்சியைத் துவக்கினர்; தாம் முன்பு அரசாங்கத்திடமிருந்து தெரியாமல் பதுக்கி வைத்திருந்த படைக்கலன்களைப் பயன்படுத்தி, சியாங்-கை-ஷேக்கின் படைகளை ஓட ஓட விரட்டினர்; அவரும் பார்மோசா தீவை நோக்கி ஓட்டம் பிடித்தார்.

செஞ்சீனர் கையாண்ட அதே தந்திரத்தைத்தான் அண்ணாவும் கையாள்கிறாரோ என்ற வீணான அச்சம் காங்கிரசாரை அலைக்கழித்தது போலும்! உள்ளுக்குள் புகுந்து

கொண்டு எங்கே தங்களுடைய ஆட்சிப் பீடத்தையே உலுக்கி விட்டுவிடுவாரோ என்ற உதறல் எடுத்ததுபோலும் அவர்களுக்கு!

ஆனால், அண்ணாவோ, செஞ்சீனரைப் போல வன்முறையாளர் அல்லர்; வஞ்சகமான நெஞ்சங் கொண்டவரும் அல்லர்; ஆப்பிரகாம் லிங்கனைப்போல வாக்குச்சீட்டிலே நம்பிக்கை கொண்டவர்; ஆக்கப் பணிகளிலேயே நாட்டம் மிகுந்தவர்; அவர் போய் அழிவு வேலையையே பெருமிதமாகக் கொள்ளும் சீனப் பொதுவுடைமையர் போக்கைச் சிந்தையாலும் தொடுவாரோ?

எனவே, காங்கிரசுக் கட்சியினர் அண்ணாவைப்பற்றி அச்சங் கொண்டதில் பொருளே இல்லை.

## பிரிவினைத் தடைச் சட்டம்

ஆயினும், அறவழியிலேயே நின்று பிரிவினை கோரும் அண்ணாவையும் அவர் கட்சியையும் மேலும் வளரவிட்டால், தேர்தல் மூலமாகவே காங்கிரசு இயக்கத்தின் ஆணிவேரையே அண்ணா கல்லி எறிந்துவிடுவாரோ என்ற மாளாக் கவலைக்குக் காங்கிரசார் ஆளாயினர். தங்களுடைய ஆதிக்க வேட்டை தொடர்ந்து நடைபெறவும், பதவி வாய்ப்புக்கள் பறிபோகாமல் நிலைக்கவும் ஒரே வழி, தி. மு. கழகத்தை அடியோடு ஒழிப்பதுதான் என்ற கொடுமையான முடிவுக்கு அவர்கள் வந்தனர்.

அவர்களுடைய அந்த அச்சம்—கவலை—கலக்கம்—தந்த முடிவின் விளைவே 'பிரிவினைத் தடைச்சட்டம்'.

இச் சட்டத்தினால், பிரிவினைபற்றிப் பேசும் எவரும் கடுமையான தண்டனைக்கு உள்ளாவார்; அத்துடன் தேர்தலில் நிற்கத் தகுதி அற்றவராகவும் ஆக்கப்படுவார்; அதன் மூலமாக அவருடைய அரசியல் செல்வாக்கு அழிக்கப்படும்.

## இரண்டே வழிகள்

நம்முடைய இந்திய அரசியல் சட்டம், கருத்துரிமை, எழுத்துரிமை, பேச்சுரிமை என்றெல்லாம் அடிப்படை-

உரிமைகளை (Fundamental Rights) வாரி வழங்கியிருக்கிறது. அந்தத் துணிவில்தான் அண்ணா 'திராவிடநாடு பிரிவினை'யைப் பற்றி வெளிப்படையாகப் போராடி வந்தார்; பெரும்பாலான மக்களின் கருத்துக்கள் மதிக்கப்படும்—என்றெல்லாம் அவர் உறுதியாக நம்பியிருந்தார்.

ஆனால் பிரிவினைத் தடைச்சட்டம் வந்த பிறகோ...?

தம்முடைய கட்சியின் உயிர் இலட்சியத்தை நிறைவேற்றிக் கொள்ளவும் கட்சியைக் காப்பாற்றிக் கொள்ளவும் அண்ணாவுக்கு இரண்டே இரண்டு வழிகள்தான் திறந்திருந்தன.

ஒன்று: தேர்தலில் ஈடுபடாமல், அரசியல் கட்சி என்னும் தகுதியை இழந்து, மீண்டும் சாதாரணச் சமூக இயக்கமாக மாறி, திராவிட நாடு பிரிவினைக்காக அறப் போராட்டங்களில் ஈடுபடுவது.

இரண்டாவது: தேர்தலில் ஈடுபட முடியாமல் தடுக்கப்பட்டுவிட்ட நிலையில், புரட்சி இயக்கமாகக் கட்சியை மாற்றி தன்னுடைய பிரிவினை இலட்சியத்துக்காக வன்முறைப் போர்க்களத்தில் குதிப்பது.

இந்த இரண்டு வழிகளுமே இக்காலப் போக்குக்கும் நாட்டின் சூழ்நிலைக்கும், கட்சியைக் காக்கவோ அதன் இலட்சியத்தை எய்தவோ உகந்தவை அல்ல. எப்படி?

முதலாவதாக, வெறும் சமூக இயக்கமாக மட்டும் இருந்து தேர்தலில் ஈடுபடாமல் ஒதுங்கிவிடுவதால், உலகத்தின் கவனத்தை ஈர்க்கக்கூடிய வாய்ப்புக் குறைந்துவிடுகிறது. அத்துடன் அறப்போராட்டங்களுக்கு மதிப்பளிக்கக்கூடிய பெருந்தன்மை காங்கிரசு ஆட்சியாளருக்கு அணுவும் கிடையாது. இதற்கு ஒரு சிறிய எடுத்துக்காட்டே போதுமானது.

திரு. சங்கரலிங்கனார் என்பவர் தலைசிறந்த காந்தியவாதி. விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு, சிறைப்பறவையாய் வாடியவர். அவரிடம் தணியாத வேட்கையொன்று எழுந்தது. இந்தியாவின் பல பகுதிகளில் உள்ள மாநிலங்களுக்கும் ஊர்களுக்கும் ஆங்காங்கே நிலவும் தாய்மொழியி

லேயே பெயர் சூட்டப்படுவதுபோலவே நம்முடைய சென்னை மாநிலத்துக்கும் 'தமிழ் நாடு'—என்னும் பெயர் சூட்டப்பட வேண்டும் என்பதே அவர் கொண்ட வேட்கை. அதை நிறை வேற்றுமாறு அப்போதைய தமிழக ஆட்சியாளரை வேண்டிக் கொண்டார். அவருடைய வேண்டுகோளை யாரும் பொருட்படுத்தவில்லை. அதனால் மனம் உடைந்த அவர், தம் கோரிக்கை நிறைவேறும் பொருட்டு இறக்கும்வரை உண்ணா நோன்பு மேற்கொண்டார். 78 நாட்கள்வரை அவ்வாறு இருந்தார். இருந்து என்ன செய்ய? பழுத்த காந்தியவாதியான அவரை, அதே காந்தியவாதிகள் என்று தம்மைக் கூறிக்கொண்ட ஆட்சியாளர்கள் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. மனிதர் பரிதாபமாக இறந்தார்! காங்கிரசு ஆட்சியாளர்கள் அறப்போராட்டங்களுக்கு அளிக்கும் மதிப்பு இதிலிருந்தே தெரியவில்லையா?

காந்தியடிகள் அறப்போர் நடத்தி வெற்றி பெறவில்லையா என்று கேட்கலாம். அவர் வாழ்ந்த காலம் வேறு. அப்போது வெள்ளையர்கள் இந்த நாட்டை ஆண்டார்கள். அவர்கள் நம்மைக் கொள்ளையடித்துச் சென்றது உண்மையே. என்றாலும் அவர்களுக்குக் கொஞ்சம் பெருந்தன்மை உண்டு. வன்முறையைக் கண்டவிடத்தில்தான் அடக்குமுறையை வீசினார்களேயன்றி, அறப்போரில் ஈடுபட்டவர்களைச் சாகட்டுமே என்று அலட்சியப்படுத்தவில்லை. அவ்வாறு அலட்சியப்படுத்தியிருந்தால், அடிக்கடி உண்ணா நோன்பு மேற்கொண்ட காந்தியடிகள் எப்போதோ கண்ணை மூடியிருக்க மாட்டாரா? நாம்தான் விடுதலையைக் கண்டிருக்க முடியுமா?

எனவே, அறப்போர்களுக்கு உரிய மரியாதை அளிக்கும் பெருந்தன்மையற்ற ஆட்சியாளரிடம் தி. மு. க.வின் இலட்சியம் எப்படி நிறைவேற முடியும்?

ஆகவே, முதலாவதாகக் குறிப்பிட்ட வழி இயற்கையாகவே அடைபட்டுப் போகிறது.

இரண்டாவதாக, வன்முறைச் செயல் மூலம்தான் திராவிட நாடு பிரிவினையை எய்த முடியுமா?

உலகம் முழுவதையும் எடுத்துக்கொண்டாலும், காந்தியடிகள் தோற்றத்திற்குப் பிறகு, வன்முறையின் மூலம் எந்த இயக்கமுமே வெற்றி பெறவில்லை.

நேதாஜி சுபாஷ்சந்திரபோஸ் படைபலத்தால், விடுதலை பெற முயன்றார்; முடியவில்லை.

பிசோ, வன்முறை மூலம் நாகாலாந்து பிரிவினைக்குப் போராடினார்! சொந்த நாட்டிலேயே இருக்க முடியவில்லை.

சீனாவிலும், க்யூபாவிலும் வன்முறை இயக்கங்கள் வெற்றி பெறவில்லையா என்று கேட்கலாம்.

தி. மு. கழகம் பொதுவுடைமைக் கட்சி அன்று. மக்களாட்சி நெறிப்படி வளர்ந்துள்ள அது, அத்தகைய கடுமையான பரிசோதனைகளையெல்லாம் செய்து பார்க்கத்தக்க பக்குவம் பெற்றதும் அன்று.

ஆகவே இரண்டாவது வழியும் அடைபட்டுப் போகிறது.

## அண்ணா சிந்திக்கிறார்

இந்நிலையில், பல்லாயிரக்கணக்கான கிளைகளையும் பல இலட்சம் உறுப்பினர்களையும் கொண்ட ஒரு மாபெரும் கட்சி, தேர்தலில் நிற்கவே முடியாத காரணத்தால் தேய்ந்து அழிந்து போவதா?

பிரிவினை தவிர, வேறு இன்றியமையாத் தொண்டுகளையும் அக்கட்சி பொதுமக்களுக்குப் புரியக்கூடாதா?

அண்ணா சிந்திக்கிறார்...

இலட்சியத்தை விடமாட்டேன் என்றால், பிரிவினைத் தடைச் சட்டத்தின் மூலம் கட்சியே அழிந்துவிடுகிறது. அவ்வாறு அழியலாமா?

கட்சி அழிந்தபிறகு அதில் ஈடுபட்டவர்கள் பொதுத் தொண்டு ஆற்றக்கூடிய வழியும் அழிகிறது; இத்தனை காலமாகக் கட்டிச் சேர்த்த மனித ஆற்றல் வீணாகப் போகிறது. அவ்வாறு விடலாமா?

அண்ணா சிந்திக்கிறார்...

ஒரு மாபெரும் கட்சியைத் தனக்கிருக்கும் அதிகார வலிமையைப் பயன்படுத்தித் தந்திரமாகத்தானே காங்கிரசுக் கட்சியினர் அழிக்கப் பார்க்கின்றனர்.

அதே தந்திரத்தை நாமும் கையாண்டால் என்ன?

முதலில் கட்சி அழிந்துவிடாது காப்பாற்றுவோம்.

தேர்தலில் நிற்போம்.

ஆட்சியைக் கைப்பற்றுவோம்.

இந்த நாட்டு மக்களுக்கு வளமான வாழ்வு அளிக்க முயல்வோம்.

பிறகு?

மக்கள் விரும்பினால் காலப்போக்கும் ஒத்ததாக இருந்தால் பழைய இலட்சியம் பற்றி மறு ஆய்வு செய்வோம். இல்லையென்றால் விட்டுவிடுவோம்......

அண்ணாவின் சிந்தனை தெளிகிறது.

## முள்ளை முள்ளால்......

தம் கழகத் தோழர்களோடு ஆழ்ந்து, கருத்துப் பரிமாற்றம் நடத்தியபின் ஒரு முடிவுக்கு வருகிறார்.

முள்ளை முள்ளால்தான் எடுக்கவேண்டும்.

தந்திரத்தைத் தந்திரத்தால்தான் வெல்லவேண்டும்.

ஆகவே பிரிவினைத் தடைச் சட்டத்திற்கு உயிரே இல்லாதபடி அதனை வீழ்த்த 'பிரிவினைக் கொள்கை'யை விட்டுவிட்டதாக அறிவிக்கவேண்டும்.

அவ்வாறே அறிவித்தார் அண்ணா.

அதனால், கழகம் அழிந்துவிடாமல் காப்பாற்றப்பட்டது; தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பையும் பெற்றது; பொது மக்களுக்குப் பிற நலன்களையெல்லாம் புரியும் நிலைமையும் உருவாயிற்று.

## தற்கொலை சரியா ?

கட்சியே அழிந்தால்தான் என்ன? அதற்காக இலட்சியத்தைக் கைவிடலாமா ? என்று சிலர் கேட்கலாம்.

"துணிவிற்கான சோதனை தற்கொலை செய்துகொண்டு மடிவதில் இல்லை? வாழ்வதில்தான் இருக்கிறது."

—என்றார் அறிஞர் ஆல்பிரைட்.

பிரிவினைத் தடைச் சட்டத்தை எதிர்த்துப் போராடித் தேர்தலில் நிற்கும் வாய்ப்பை இழப்பது, கழகத்தைத் தானாகவே அழியவிடும் தற்கொலைக்கே ஒப்பானதாகும்.

அவ்வாறு தற்கொலை செய்துகொண்டுவிட்ட பிறகு மீண்டும் இலட்சியத்தைப்பற்றிச் சிந்திக்க முடியுமா? எப்படிச் சிந்திக்க முடியும்?

எனவே, முதலில் கட்சியை வாழவைப்போம்; பிறகு சோதனைகளுக்குத் தேவையிருந்தால் ஆயத்தமாவோம் என்னும் அளவில்தான் பிரிவினைக் கொள்கையை அண்ணா கைவிட நேர்ந்தது.

இதே வேளையில் அயர்லாந்து நாட்டு விடுதலை வரலாறும் நம் நினைவுக்கு வராமல் இல்லை. அங்கே ஒரே நூற்றுண்டுக் குள் விடுதலை கிட்டிவிடவில்லை. ஒரே கட்சியும் அதனைப் பெற்றுத் தந்துவிடவில்லை. எத்தனையோ நூற்றுண்டுகள் சென்றன. எத்தனையோ கட்சிகள் தோன்றி மறைந்தன. எத்தனையோ போராட்டங்கள் நடைபெற்றன. பிறகுதான் டிவேலரா தலைமையில் அமைந்த கட்சி அயர்லாந்துக்கு விடுதலை வாங்கிக் கொடுத்தது.

அதே நிலைமை இந்தியாவிலும் ஏற்படலாம்; ஏற் படாமலும் போகலாம்; அது மத்திய அரசு கடைப் பிடிக்கும் மொழிக் கொள்கையையும், பொருளாதாரக் கொள்கையையுமே பொறுத்துள்ளது.

நம்மைப் பொறுத்தவரை, நம்மீது பிறிதொரு மொழியின் ஆதிக்கம் சுமத்தப்படாதவரை, நம்முடைய பொருளாதார உரிமைகள் சுரண்டப்படாதவரை மத்திய அரசுடன் இணைந்திருப்பதே நமக்குத் தக்க பாதுகாப்பு என் பதை நாம் உணராமல் இல்லை. இந்த வகையில் மத்திய அரசாங்கப் பொறுப்பை ஏற்பவர்கள் அறிவுக் கூர்மையுடன் நடந்துகொண்டு இந்திய ஒருமைப்பாட்டைக் காப்பார்கள் என்று எதிர்பார்ப்போமாக!

இந்தச் சிந்தனைப் பின்னணியுடன் கூடிய கண்ணேட்டத் துடன்தான் அண்ணா பிரிவினைக் கொள்கையைக் கைவிட்டுள் ளார் என்று கருதுகிறேம்!

## தி. மு. க.வின் வெற்றிப் பீடம்

உலகத்தில் வேறு எந்தக் கட்சியும் தன் அடிப்படை இலட்சியத்தைக் கைவிட்ட பிறகு, தொடர்ந்து வளர்ந்த தாக வரலாறு உண்டா?

பொதுவுடைமைக் கட்சி தன்னுடைய 'சமத்துவம், சம வாய்ப்பு, சமதர்மம் பற்றிய கொள்கைகளைத் திடீரென்று கைவிட்டு விட்டால் என்ன ஆகும்?

இந்திய தேசீயக் காங்கிரசுக் கட்சி தன் விடுதலைக் கொள்கையைக் கைவிட்டிருந்தால் என்ன ஆகியிருக்கும்?

அழிவையே சந்திக்க நேர்ந்திருக்கும்!

ஆனால், தி. மு. கழகமோ தன் உயிர்க் கொள்கையைக் கைவிட்ட பிறகும் ஓங்கி வளர்ந்து கொண்டிருக்கிறது; தமிழகத்தின் ஆட்சிப் பீடத்தையே கைப்பற்றியும் விட்டது.

இந்த அற்புதம் எப்படி நிகழ்ந்தது?

இதைத்தான் அரசியல் திறனாய்வாளர்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

## அண்ணாவின் தாய்மைப் பாசம்!

தி. மு. கழகம் என்பது வெறும் கொள்கை ஒன்றினால் மட்டும் கட்டப்பட்டது அன்று. அண்ணாவின் தனி ஆற்றல்—தனிப் பண்பாடு—தனிக் குடும்பப் பாசம்—ஆகிய அடித் தளங்கள் மீதே எழுப்பப்பட்டது.

இல்லையென்றால், திரு. ஈ. வெ. கி. சம்பத் வெளியேறிய பிறகும் கழகம் பிளவுபடாமல் இருந்திருக்க முடியுமா? பிரிவினைக் கொள்கையை விட்ட பிறகும் அது சிதறாமல் இருந்திருக்க முடியுமா?

தம்முடைய தொண்டர்களை வெறுந் தொண்டர்களாக மட்டுமே கருதாமல், உடன் பிறந்த தம்பிகளைவிட மேலான அன்புக் குழந்தைகளாகவே பாவித்து அண்ணா பொழியும் தாய்மைப் பாசமே தி. மு. கழகத்தை இந்த அளவுக்குச் செழிக்க வைத்துள்ளது!

## உயிரைச் சுமக்கும் உடல்கள்?

"உண்மையான அறிஞரிடம் பிறரைத் தாழ்மையாக எண்ணும் எண்ணம் இருப்பதில்லை. ஆனால் ஏனையோரிட மிருந்து தாம் கற்றுக்கொள்ள வேண்டியது நிரம்ப இருக் கிறது என்ற ஆர்வம் நிலைபெற்றவண்ணம் இருக்கும்."

—என்றார், ஹாஸ்லிட் என்பவர்.

அந்த ஆர்வமாகிய ஊற்றுக் கண்ணிலிருந்து சுரந்து பொங்குவதுதான் அண்ணாவின் தாய்மைப் பாசம்.

அந்தப் பாசத்தை அண்ணா கைவிடாதவரை, அண்ணாவைக் கழகத் தோழர்கள் கைவிட மாட்டார்கள்; அவருடைய தம்பிகளாக அவர்கள் அழைக்கப் பெற்றாலும், ஓர் உத்தமத் தாயின் காலைப் பற்றி நிற்கும் அருமைக் குழந்தைகளாகவே, அவரைப் பின்தொடர்ந்து செல்வார்கள்!

அவர் எங்கே சென்றாலும் அவர்களுக்குக் கவலை இல்லை.

அவர் எங்கே நின்றாலும் அவர்களுக்குத் துயரமில்லை.

'அண்ணா'—என்னும் உயிர்மூச்சைச் சுமந்தவண்ணம் அந்தத் தம்பிகளாகிய உடலங்கள் போய்க்கொண்டே இருக்கும்!

# 29. முதலமைச்சர் அண்ணா

## உயிருக்கு நேர்

" எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு"

—என்று சங்கநாதம் புரிந்தார் பாவேந்தர் பாரதி தாசன்.

அந்த இன்பத் தமிழை இன்னுயிருக்கு நேர் எனக் கருதி வழிபடுகின்றவர்கள் தமிழர்கள். அதற்கு ஒரு சிறு ஊறு ஏற்பட்டாலும் அவர்களால் பொறுக்கவே முடியாது. அந்த ஊறு எந்த வடிவில் வந்தாலும், உயிரைக் கொடுத்தேனும் அதனை ஒழிக்கவே முயலுவார்கள்; துணிவார்கள்.

## நெஞ்சிலே நெருப்பு

என்றைக்கு முதன்முதல் தமிழ்நாட்டில் இந்தி கட்டாயப் பாடமாக நுழைக்கப்பட்டதோ, அன்றே தங்கள் நெஞ்சின் மீது நெருப்பு விழுந்துவிட்டது போன்ற உணர்வைப் பெற்று விட்டார்கள் தமிழர்கள்.

அந்த உணர்வின் விளைவாகத்தான் தாளமுத்து—நடராசன் இருவரும் களபலி ஆனார்கள். தமிழ் மறவன் சின்னசாமி போன்ற துடிப்புள்ள இளைஞர்கள், தமக்குத் தாமே தீ மூட்டிக்கொண்டு உயிரைக் காணிக்கை ஆக்கியிருக் கிறார்கள்.

## முப்பதாண்டுப் போர்

இந்த இந்தி எதிர்ப்புப் போர் முப்பதாண்டுக் காலமாக நடந்துகொண்டே வந்திருக்கிறது; இன்னும் நடந்து கொண்டே போகும்! இந்தித் திணிப்பினால் தமிழ்—தமிழர்—தமிழ் நாட்டின் தலையெழுத்து எப்படியெல்லாம் மாற்றப்படுமோ என்னும் நியாயமான அச்சம் நீக்கப்படாத

வரை, வலுவான அவநம்பிக்கை அகற்றப்படாதவரை—இந்த அறப்போர் ஓயுமா? ஒழியுமா? ஐயப்பாடுதான்!

## ஒரே வழி!

இவ்வாறு அச்சமும், அவநம்பிக்கையும் அகல்வதற்கு இந்திய அரசியல் சட்டத்தை—ஆட்சி மொழி பற்றிய விதியைத் தக்கவாறு திருத்தி ஆங்கிலத்தை இணைப்பு மொழியாக என்றென்றும் நீடிக்குமாறு செய்து இந்தியைப் பிற இந்திய தேசீய மொழிகளைப் போலவே அதுவும் ஒன்று என்னும் சாதாரண நிலையிலேயே வைத்து, வரையறை செய்வது ஒன்றே சரியான வழி—ஒரே வழி!

ஆங்கிலேயர் வந்த பின்னர்தான், இன்றுள்ள பரந்த இந்தியாவை—ஒருங்கிணைந்த இந்தியாவை—நம் நாட்டவரால் பார்க்க முடிந்தது. அவர்களுடைய ஆங்கில மொழியாகிய சொற்களைக் கொண்டே இந்திய ஒருமைப்பாடு என்னும் மாளிகை எழுப்பப்பெற்றது இது வரலாற்று உண்மை. இது மறைக்கவோ, மறுக்கவோ உரியதன்று. ஆங்கிலேயர் சீர்தனமாக அளித்துச் சென்ற இருப்புப் பாதை—புகை வண்டி, அஞ்சல்—தந்தி, மின்சாரம், மருத்துவ முறை—இன்னும் எத்தனை எத்தனையோ விஞ்ஞானக் கருவிகளையும், முறைகளையும் 'அந்நியரின் அடிமைச் சின்னம்' என்று அழுக்குத் துணிக்குள் மூட்டையாகக் கட்டி, எங்காவது ஆற்றிலோ குளத்திலோ தூக்கி எறிவதற்குத் துணியாத நாம், உலக நாகரிகத்தின் பலகணியாய் விளங்கும் ஆங்கில மொழியை ஏற்க மட்டும் வெட்கப்படுவானேன்?

இந்த வெட்கத்தின் விளைவாக இந்திமொழி பேசப்படாத பகுதிகளில் எத்தனை உயிர்கள் அநியாயமாகப் பலியாகிக் கொண்டிருக்கின்றன!

அத்தகைய பலி வாங்கும் படலம் தமிழகத்தில் எப்போது உச்ச கட்டத்தை எட்டியது தெரியுமா?

1965-ஆம் ஆண்டு சனவரி பிப்ரவரித் திங்களில்.

## துக்க நாள் கொண்டாட்டம்

"இந்தி மொழி பேசாத பகுதி மக்கள் விரும்பும் காலம் வரை அவர்கள்மீது இந்தி திணிக்கப்படமாட்டாது"

—என்று நேரு அளித்த வாக்குறுதி அவருக்குப் பின் வந்தவர்களால் காற்றில் பறக்கவிடப்பட்டது.

1965-ஜனவரி 26-ஆம் நாள் முதல் இந்தியை நாட்டின் ஒரே ஆட்சிமொழியாகச் செயற்படுத்தியே தீருவது என்று கங்கணம் கட்டினர் மத்திய அரசினர்.

ஒவ்வொரு ஆண்டும் சனவரி 26-ஆம் நாள் இந்தியக் குடியரசு நாளாகக் கொண்டாடப்படுவதை யாவரும் அறிவர்.

ஆனால் 1965 ஆண்டுக் குடியரசு நாளைத் துக்க நாளாகக் கொண்டாடுவது என்று தி. மு. கழகம் முடிவு எடுத்தது. அதன்மூலம், அன்று முதல், வலுக்கட்டாயமாக நாட்டின் ஆட்சி மொழியாக இந்தியை மட்டும் அரியணையில் ஏற்று வதை எதிர்க்க எண்ணியது தி. மு. கழகம்.

கழகத்தின் வாயிலாக வெளிவரும் அண்ணாவின் ஆணைப்படி குடியரசு நாளைத் துக்க நாளாகக் கொண்டாடு வதற்குத் தமிழக மாணவர் உலகு துடித்தெழுந்தது! இந்தித் திணிப்பால் முதலில் பாதிக்கப்படுபவர்கள் மாணவர்களே அல்லவா? எனவே, இந்தி ஆட்சிமொழி ஆகப் போகிறது என்று அறிந்ததும் அவர்கள் ஆத்திரங் கொண்டு ஆர்த் தெழுந்ததில் வியப்பேதும் இல்லை.

குடியரசு நாளான சனவரி 26 பொது விடுமுறையாகி விடுவதால், அதற்கு முந்தின நாளான சனவரி 25-ஆம் நாள் அன்றே 'படிப்பு நிறுத்தம்' செய்து எதிர்ப்பைக் காட்டுவது பொருத்தம் என்று மாணவர்கள் முடிவு செய்தனர். அவ்வாறே நாடெங்கும் அமைதியான முறையில் அறப்போர் தொடங்கி, ஊர்வலங்கள் நடத்த ஏற்பாடு செய்தனர்.

## கொழுந்து விட்ட தீ !

மதுரையில் ஊர்வலம் சென்று கொண்டிருந்தபோது மாணவர் ஒருவர் வெட்டப்பட்டார்.

அந்தச் செய்தி காட்டுத் தீ போல் தமிழகம் எங்கும் பரவிவிட்டது.

இதனால் மாணவர் உலகில் பெருங் கொந்தளிப்பு உண்டாயிற்று.

மாணவர்களின் மொழிப்பற்றை ஊன்றிக் கவனிக்கத் தவறிய அன்றைய தமிழக அரசு அடக்குமுறையை அவிழ்த்து விட்டது.

சிதம்பரத்தில் துப்பாக்கிச் சூடுகள்; பல இடங்களில் மாணவர் கிளர்ச்சிகள்.

அடக்குமுறையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்னும் கோரிக்கையுடன் அப்போதைய முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலத்தை மாணவர் பிரதிநிதிகள் சந்திக்கச் சென்றனர். முதலமைச்சர் பேட்டியளிக்கவில்லை. பேட்டியளிக்க விரும்பாத அவர் எதுவும் பேசாமலாவது இருந்திருக்கலாம்.

அவரோ, மாணவர்களின் மொழிப்பற்றை அலட்சியப் படுத்தியதோடு நிற்கவில்லை; அவமதித்தும் பேசத் தொடங்கி விட்டார்.

மாணவப் பருவம் துடிப்பு மிக்கது; இளமை முறுக்கு மேலோங்கி நிற்பது. அவர்களால் அலட்சியத்தையோ, அவமானத்தையோ எப்படித் தாங்க முடியும்?

தங்கள் ஆத்திரத்தையெல்லாம் கொட்டி அரசாங்கத்தைப் பழிவாங்கி விடுவது என்ற முறையில் போராட்டத்தை முடுக்கி விட்டனர். அரசாங்கமும் பின்வாங்கவில்லை.

இந்தப் போட்டா போட்டியினால், இந்தி எதிர்ப்புப் போர்த் தீ தமிழகம் முழுவதும் கொழுந்துவிட்டு எரிந்தது! தலைவர்களால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு எரிந்தது!

1947-ஆகஸ்டுக் கலவரம்கூட இப்படி நடக்கவில்லை என்று கூறும் அளவுக்கு மிகக் கடுமையாக இருந்தது போராட்டம்! பொருள்கள் நாசமாயின; காவல் துறையினர் தாக்கப்பட்டனர்.

துப்பாக்கி வேட்டு முழக்கம் எங்கு நோக்கினும் கேட்டது.

மாணவர்களும் பொதுமக்களும் ஆயிரக்கணக்கில் படுகாயம் அடைந்தனர்; நூற்றுக்கு மேற்பட்டவர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இரையாயினர்; துடிதுடித்துச் செத்தனர். சிதம்பரத்தில் மாணவர் இராசேந்திரன் கொல்லப்பட்டார். அரங்கநாதன், சாரங்கபாணி முதலான பல மாணவச் சிங்கங்களின் உயிர் பலியாயிற்று.

'அவர்களுடைய ஆவி இந்த ஆட்சியைச் சும்மா விடுமா?'

—என்று தங்கள், தம்பி—தங்கையரை, மனைவி—மக்களை, தாய்—தந்தையரைப் பறிகொடுத்தவர்கள் கதறிய கதறல் தமிழகம் முழுவதும் எதிரொலித்தது!

அண்ணா அவர்களே ஒன்றுக்கு மேற்பட்ட அறிக்கைகள் விடுத்தும் மாணவர்களின் ஆத்திரந் தணியவில்லை. பின்னர், தக்கவாறு அவர் தொடர்ந்து அமைதிப்படுத்திய பின்னரே போராட்டத் தீ அடங்கிற்று!

இந்த அறப்போரில் திரு. எல். கணேசன், திரு. பெ. சீனிவாசன், திரு. நாவளவன் முதலான பல மாணவ மணிகளின் புரட்சிகரமான ஈடுபாடும் இங்கே குறிப்பிடத் தக்கது.

## வெளிநாட்டுப் பயணம்

'தமிழகத்தில் மட்டுமின்றி வெளி உலகத்திலும், தமிழ் பேசும் மக்கள் வாழும் இடங்களில் எல்லாம் அண்ணாவின் பெயரை அறியாதவர்கள் இருக்க மாட்டார்கள்.'

—என்று 'இல்லஸ் டிரேட்டட் வீக்லி' கருத்துத் தெரிவிக்கும் அளவுக்குப் புவி முழுவதும் புகழ் மணம் பூண்டவரே அண்ணா.

ஆயினும், அவர் தமிழகத்தை விட்டுக் கடல் கடந்து வெளிநாடு சென்றது 1965-ஆம் ஆண்டில்தான்.

அந்த ஆண்டு ஜூலைத் திங்களில், கழக முன்னணி வீரர்களுள் ஒருவரான திரு. இரா. செழியன் எம். ஏ. பின்தொடர, மலேசியா, சிங்கப்பூர், சப்பான் முதலான கீழை நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டார் அண்ணா.

'கற்றோர்க்குச் சென்ற இடம் எல்லாம சிறப்பு'

—என்னும் அவ்வையின் அமுத வாக்கினை கீழை நாடுகளில் வாழும் மக்கள் பூரிப்போடு நிறைவேற்றி, அண்ணாவைப் புகழ்ப் பொய்கையில் நீராட்டினர். ஏராளமான பரிசுப் பொருள்களை அவர்க்கு வழங்கித் தம் அன்புத் தாகத்தைத் தீர்த்துக் கொண்டனர்.

பொதுமக்கள் மட்டுமின்றி, மலேசிய தலைமையமைச்சர் திரு. துங்கு அப்துல் ரஹ்மான், சிங்கப்பூர் முதலமைச்சர்

திரு. லீ—குவான்லீ, மற்றும் பல அமைச்சர் பெருமக்களும் கூடப் பேரறிஞர் அண்ணாவுக்கு உற்சாகமான வரவேற் பளித்து உள்ளம் பூரித்தனர்; அவருடைய தேன் சொட்டும் உரைகளைக் கேட்டு இன்பக் கடலில் திளைத்தனர்.

பின்னர், சப்பான் நாடுவரை சென்று தம் சுற்றுப் பயணத்தை முடித்து வெற்றிப் பெருமிதத்துடன் தாயகம் திரும்பினார் அண்ணா.

## தேர்தல் களத்தில்

"தமிழாய்ந்த தலைமகனே
தமிழ்நாட்டின் முதலமைச்சாய்
வருதல் வேண்டும்"

—என்ற பாவேந்தர் பாரதிதாசனின் வேட்கையைப் பற்றி இந்த நூலின் தொடக்கத்திலேயே குறிப்பிட்டுள் ளோம்.

அந்தப் புரட்சிக் கவிஞரின் கனவு பலிதமாகின்ற பொன்னான நாள் வெகு வேகமாக நெருங்கி வந்து கொண் டிருந்தது.

இந்தியப் பெருநாட்டின் நான்காவது பொதுத் தேர்தல் 1967-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் மிகவும் ஆர்ப்பரிப் போடு நடைபெற்றது.

தமிழகத்திலே ஒரே பரபரப்பு!

காங்கிரசுக் கட்சி மட்டும் தனித்து நின்று தேர்தலில் போட்டியிட, வலதுசாரி பொதுவுடைமைக் கட்சி நீங்கலான பிற எதிர்க்கட்சிகள் யாவும் ஒரே அணியாகத் திரண்டு நின்றன.

சென்னை மன்றத்திற்குரிய 234 தொகுதிகளிலும் காங் கிரசுக் கட்சி போட்டியிட்டது. தி. மு. கழகம் 170 தொகுதி களில் மட்டுமே தன் வேட்பாளர்களை நிறுத்தி வைத்தது. எஞ்சிய தொகுதிகளைக் கூட்டணியில் அங்கங்கொண்ட பிற கட்சிகளுக்கு ஒதுக்கி விட்டது.

## வியக்கத்தக்க வெற்றி!

காங்கிரசாரின் கணிப்புக்கு மாறாக தி. மு. கழகம் பெரு வெற்றி பெற்றது. 138 சட்டமன்றத் தொகுதிகள் அதன்

வசமாயின. 25 நாடாளுமன்றத் தொகுதிகளில் மட்டுமே போட்டியிட்டு அத்தனை தொகுதிகளிலுமே வெற்றி வாகை சூடிற்று.

"இவ்வாறு நாடாளுமன்றத் தேர்தலில் தான் போட்டியிட்ட எல்லாத் தொகுதிகளையுமே கைப்பற்றிய கட்சி, உலகிலேயே தி. மு. க.வைத் தவிர வேறு எதுவுமே இல்லை"

—என்று இராசாசியே வியந்து பாராட்டினார் என்றால் தி. மு. கழகத்தின் வெற்றிக் கீர்த்தி பற்றி விளக்கத் தேவையில்லை.

இத் தேர்தலில் புயலுக்கு இரையான புளியமரம்போல், தமிழகக் காங்கிரசுக் கட்சி வேர்ப்பிடுங்கலாக வீழும் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை.

அதே போல், தி. மு. கவும் அதைச் சார்ந்த கூட்டணிக் கட்சிகளும் முன்னைவிட அதிக இடங்களைப் பிடிக்கலாம் என்று அரசியல் திறனாய்வாளர்கள் கூறினார்களேயொழிய, ஆட்சிப் பொறுப்பைப் பிடிக்கும் அளவுக்குத் தேர்தல் காற்று கூட்டணிக்குச் சாதகமாக வீசும் என்று கற்பனைகூடச் செய்யவில்லை.

இதிலே இன்னும் ஓர் அற்புதம், கூட்டணிக் கட்சிகளின் துணையில்லாமலேயே அமைச்சரவை அமைக்கும் அளவுக்குத் தனிப் பெரும்பான்மை வலிமை பெற்ற கட்சியாக தி. மு. கழகம் வெற்றிக் கனியைக் கொய்ததே.

இந்தத் தேர்தலில் அண்ணா தமிழகச் சட்ட மன்றத்துக்குப் போட்டியிடவில்லை; புதுடில்லி நாடாளுமன்றத்துக்கே போட்டியிட்டார். தென் சென்னைத் தொகுதியில் நின்ற அவர் நிறைந்த எண்ணிக்கை வாக்கு வேறுபாட்டில் வெற்றியைத் தழுவினார்.

ஒருவாறு தேர்தல் முடிவுகள் யாவும் வெளியாகி, தி. மு. கழகமே தனியாக அமைச்சரவை அமைக்கப் போகிறது என்கிற நிலை உறுதியாகிவிட்டது.

பேரறிஞர் அண்ணாவுக்கோ தாம்தான் முதலமைச்சராக வந்துவிட வேண்டும் என்ற ஆசையே இல்லை. அத்தகைய ஆசை துளியேனும் இருந்திருந்தால் அவர் தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் நின்றிருக்கவே மாட்டார்.

ஆனால், அண்ணா விரும்பாவிட்டாலும், அவர்தாம் முதலமைச்சராக வழிகாட்ட வேண்டும் என்று கழகத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் உளமார ஆசை கொண்டனர். அவர்களுடைய நெடுநாளைய ஏக்கந் தீர்க்கப்படவும், கனவு நனவாகவும் தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர்கள் கூடித் தங்கள் தலைவராக—முதலமைச்சராகப் பேரறிஞர் அண்ணா அவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள்.

## முதலமைச்சர் ஆனார்

**1967—மார்ச்சுத் திங்கள்—6-ஆம் நாள்—**

**திருவள்ளுவர் ஆண்டு! 1968-ஆம் ஆண்டு மாசித் திங்கள் 22-ஆம் நாள்!**

தமிழகத்தின் பொற்காலம் புத்தொளி வீசிப் புலர்ந்த நாள்; பொன்னான நாள்; புனித நாள்!

முழு அறிவின் மொத்த வடிவான எழு ஞாயிறு சென்னைக் கோட்டையிலே செங்கதிர் பரப்பி எழில் சேரக் கொலுவேறிய இன்பத் திருநாள்!

கோடிக்கணக்கான இதயங்கள் கோட்டைப் பக்கம் வந்தும், வீட்டுக்குள்ளே இருந்தும் குளிரக் குளிர வாழ்த்து மலர் சொரிய, குணத்தில் தங்கமாய், கொள்கையில் வைர மாய், ஆண்மை ஒளிரும் அடலேறும் ஒருவர்க்கு 'ஆட்சி என்னும் நங்கை'—மாலை சூட்டிய மணநாள்.

ஆம்.

> அன்புக் கடலாம் அறிவுப் புதையலாம்
> பண்புச் சுனையாம் பாசப் புனலாம்
> கண்மலர் வளராக் கடமைச் சுடராம்
> மன்பதைக் குற்ற மாமணி விளக்காம்
> எழிலென உலகில் இருப்பவை அனைத்தும்
> வழியவே பேசும் இன்ப வாரிதி!

—என்றெல்லாம் என்னென்ன புகழ்ச் சொல் உண்டோ அத்தனைக்கும் இலக்கியமாய் ஒளிரும் பேரறிஞர் அண்ணா தமிழ் நாட்டின் தலைமகனாக அந்த நன்னாளில்தான் முதலமைச்சராய்ப் பொறுப்பேற்றார்!

இவ்வாறாக,

நாடக இலக்கியத் துறையிலே புதுப் புரட்சியை உண்டாக்கிய, 'கல்கி'—ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களாலேயே, 'தென்னாட்டுப் பெர்னாட்ஷா' என்று போற்றப்பட்ட அண்ணா முதலமைச்சர் ஆகிவிட்டார்!

"தமிழன் தகுதிக்குத் தரவேண்டிய ஆரம்பப் பதவி தான் முதலமைச்சர் பதவி என்று நான் கருதுகிறேன். அதை அண்ணா பெற்றிருக்கிறார். இதைவிட உயர்ந்த பிரதமர் பதவியையும் அவர் பெற வேண்டும் என்று விரும்புகிறேன்"—என்று சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சிவஞான கிராமணியார் அவர்களால் போற்றப்படும் வகையில் அண்ணா முதலமைச்சர் ஆகிவிட்டார்.

" அண்ணா துரை யென்னும்
அண்ணல் தமிழ்நாட்டு
வண்ணான் அழுக்கெடுப்பில்!
வாய்மொழியில் பண்ணாவன்!
சிற்பன் எழுத் தோவியத்தில்
செவ்வரசு நாவாயின்
அற்புதஞ்சூழ் மாலுமி
என்றாடு."

—என்று தமிழ்த் தென்றல் திரு. வி. க.வினால் பாராட்டப் பெற்ற அண்ணா முதலமைச்சர் ஆகிவிட்டார்!

"தமிழ் உயர்வும், தமிழர் தமது உரிமையையும் பெற உழைக்கும் (உழைக்கும்) மறுமலர்ச்சி இயக்கத்தின் தலைவராவார். முடிசூடா மன்னனென இளந்தமிழர், எழுத்தாளர், புகழ் புலவர். இவர் பணியின் பயனாகத் தமிழ் ஓங்க, தமிழர் நிலை உயர்வதாக!"

என்று நாவலர் சி. சோமசுந்தர பாரதியாரின் வாழ்த்துப் பலிக்கும் வகையில் அண்ணா முதலமைச்சர் ஆகிவிட்டார்!

"உருவத்தில் தமிழன்; உயர் குணத்தில் தமிழன்; அன்பு எனும் பண்பில் தமிழன் நமது அண்ணா"

—என்று கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களால் பாராட்டப்பெற்ற அண்ணா முதலமைச்சர் ஆகிவிட்டார்.

"...காந்தியக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதில் அவர் என்னைவிட உண்மையான காங்கிரசுக்காரராகத் திகழ்கிறார்"

—என்று ஆந்திர முதலமைச்சர் திரு. பிரும்மானந்த ரெட்டியார் புகழும் அளவுக்கு அண்ணா முதலமைச்சர் ஆகிவிட்டார்.

"...அறிஞர் அண்ணா அவர்களை முதல் மந்திரியாக்கிக் கண்குளிரப் பார்க்காமல் நான் உயிர் விடப் போவதில்லை!"

—என்று மூதறிஞர் இராசாசி அவர்களின் வாக்குப் பலிக்கும் அளவுக்கு அண்ணா முதலமைச்சர் ஆகிவிட்டார்!

## முழு மனிதர் முதலமைச்சர்

"அறிவு, ஆண்மை, பொறுமை, நேர்மை ஆகிய நான்கு உன்னதப் பண்பு நலன் வாய்ந்தவனே முழுமையான மனிதன்"—என்றார் பிளேட்டோ.

பேரறிஞர் அண்ணாவின் பெருவாழ்வை ஊன்றிப் பார்ப்பவர்கள் மேற்சொன்ன நான்கு பண்பு நலன்களும் இயற்கையாகவே அமைந்து கிடப்பதை எண்ணி மகிழலாம்.

அத்தகைய முழு மனிதர் இன்று தமிழக முதல் அமைச்சர் ஆகியிருப்பது தமிழ் செய்த தவப் பேறே!

கடமையுணர்வு மிக்க பேரறிஞர் அண்ணாவின் பொன்மொழி ஒன்றும் இங்கு நினைவு கூரத்தக்கது.

"எங்கள் தோளில் சுமத்தப்பட்டுள்ள சிலுவையை (பொறுப்பை) இறுதிவரை கொண்டு சேர்ப்போம்."

# 30. சிம்மாசனத்தில் சிட்டுக்குருவிகள்

## பாராளும் பாமரர்கள்

"சிட்டுக் குருவிகள் வல்லூறைப் போல் கொத்தும் திறனற்றவை: கூர்மையான நகம் அற்றவை; வல்லூறைவிட பலத்தில் குறைந்தவை; ஆனல்—ஒரு காலம் வரும்? சிட்டுக் குருவிகள் வல்லூறை வெல்லும் காலம் வரும்?

பாமர மக்கள் பாராளும் காலம் வரும்?"

—என்று பல ஆண்டுகளுக்கு முன்னல் கவிஞர் இக்பால் கூறினர்.

"சிட்டுக் குருவிகள் வல்லூறை வென்றது போல் பாமரர்கள் இப்போது பாராளுகிறர்கள்.

"நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகும் 'நாம் சிட்டுக் குருவிகள்தான்'—என்பதை மறக்கவில்லை..."

—என்று பேரறிஞர் அண்ணு அவர்கள் தமது கழகத் தலைவர் ஒருவருடைய பாராட்டு விழாவின்போது மேற் கண்ட கவிஞர் இக்பாலின் கவிதை மலரை எடுத்துக் காட்டித் தம்முடைய தன்னடக்கத்தை வெளிப்படுத்திக் கொண்டார்.

1967-பொதுத் தேர்தல், காங்கிரசுக் கட்சியைப் பொறுத்தவரை அகில இந்திய அளவில் சூறைக் காற்றுகவே வீசி அதனைத் தொல்லைகளுக்கு உள்ளாக்கிற்று; தமிழகத் தைப் பொறுத்த மட்டிலுமோ அதே பொதுத் தேர்தல், கொடும் புயலாகவே மாறி அக்கட்சியைச் சாதாரணமாக மட்டும் அலைக்கழிக்கவில்லை; அடியோடு வீழ்த்திற்று; வேர்ப்பிடுங்கலாகச் சாய்த்தும் விட்டது.

'வெள்ளையரை வெளியேற்றி நாட்டுக்கு விடுதலையே வாங்கிக் கொடுத்தது'—என்னும் மாபெரும் வரலாற்றுப் பின்னணியோடும், 'அகிம்சை' என்னும் அற்புத நெறியை

அகிலத்துக்கே அளித்த மகாத்மா காந்தியடிகளால் வளர்க்கப்பெற்றது என்னும் மாட்சிமையோடும் 'எத்தனை கட்சிகள் கூடினாலும் எம்மை அசைக்க முடியுமா?'—என்னும் இறுமாப்போடும் இருபதாண்டுகளாகக் கொடி கட்டிப் பறந்து ஆண்ட காங்கிரசு ஆட்சி இப்படி அடிமட்டமாக வீழ்ச்சியுறும் என்று எவருமே எதிர்பார்க்கவில்லை.

ஏன், அறிஞர் அண்ணா அவர்களே அப்படியொரு அரசியல் கணக்கைப் போடவில்லை? தமது கட்சி மட்டுமே தனித்து நின்று ஆட்சிப் பீடத்தில் அமரும் அளவுக்கு, தோழமைக் கட்சிகளின் துணை இல்லாமலே—தனிப்பெரும் பான்மை வலிமை தமக்குக் கிட்டக்கூடும் என்று அவர் தன்னம்பிக்கையும் கொள்ளவில்லை. அவ்வாறு அவர் எண்ணி யிருந்தால், அவர், ஏன் தென்சென்னைத் தொகுதியில் நாடாளு மன்றத்துக்குப் போட்டியிடப் போகிறார்?

ஆயினும்,

அரிசித் தட்டுப்பாட்டால் அவதியுற்ற ஏழை மக்கள்—

இந்தித் திணிப்பால் எரிச்சலுற்ற செந்தமிழ் மக்கள்—

அறிஞர் அண்ணாவை நம்பினார்கள்; அவரது தி. மு. கழகத்தை நம்பினார்கள்; ஆட்சிப் பீடத்தில் ஏற்றியும் வைத்து விட்டார்கள்.

இவ்வாறு, கோடிக்கணக்கான மக்கள் தமக்குப் பின்னே துணையாக நிற்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிந்தும்கூட, அண்ணா அகந்தைக்கு அடிமையானாரா? அடக்கத்தைக் கைவிட்டாரா? ஆணவத்தோடு நிமிர்ந்து நடந்தாரா?

அல்லவே, அல்ல.

26—2—67-இல், சென்னைக் கடற்கரையில் இலட்சோப லட்சம் வாக்காளர் பெருமக்களுக்கு நன்றியறிதலைத் தெரிவிக்கும்பொழுது அண்ணா, தமது தன்னடக்கத்தையும், மக்கள் நலனிலே தமக்குள்ள மாளாத பிடிப்பையும் எவ்வாறெல்லாம் கனிவும் பணிவும் நிரம்ப எடுத்தியம்பினார் தெரியுமா?

"...நீங்கள் நீண்டகாலம் ஆண்டு விட்டீர்கள்; மக்களுக்குச் செய்ய வேண்டியதைச் செய்யத் தவறி விட்டீர்கள்! எனவே வெளியேறி விடுங்கள்!" என்று பிரிட்டனில் ஆண்ட

கட்சியைப் பார்த்து ஆலிவர் கிராம்வெல் சொன்னதாக வரலாற்றில் படித்திருக்கிறேன். அதே போலத்தான், இன்று உயிர்ப்பிக்கப்பட்ட சனநாயகம் இந்த நாட்டை ஆண்டு வந்திருக்கும் ஆட்சியாளர்களைப் பார்த்துக் கட்டளையிட்டிருக்கிறது...

"...காங்கிரசு ஆட்சி இருபது ஆண்டுகள் வளர்ந்தது! அதன் வீழ்ச்சி நொடிப் பொழுதில் நடந்துவிட்டது! நாம் மகிழ்ச்சி பெறுவதற்கு அல்ல இதைச் சொல்வது; பொறுப்புணர்ச்சி எந்த அளவுக்கு வேண்டும் என்பதற்காகவே இதைச் சொல்கிறேன்.

"காங்கிரசுக்கே இந்தக் கதியென்றால்...

"நான் இதை ஓர் அரசியல் பாடமாகக் கொள்கிறேன்..."

"வெற்றியை எண்ணி நான் எக்களிப்புக் கொள்ளவில்லை...

"காங்கிரசுக் கட்சியிலே நல்லவர்களே இல்லை என்று சொல்லவில்லை; அப்படிச் சொல்லும் ஆணவமும் எனக்கு இல்லை!

"...இவ்வளவு பெரிய பண பலம்—பத்திரிகை பலம் இருந்தும் அவர்களுக்கு இந்த நிலை ஏற்பட்டது என்றால் இது அரசியலில் நல்ல பாடமாகும்.

"...தி. மு. க. நல்ல பொறுப்புணர்ச்சியோடும், அடக்க உணர்ச்சியோடும் 'பொது மக்கள்தான் எசமானர்கள்—நாம் சேவகர்கள்தான்' என்ற உணர்ச்சியோடும், ஆட்சியில் அமரும்.

"...இன்று எனக்கு ஏற்பட்டுள்ள அடக்க உணர்ச்சியை என் வாழ்நாளில் நான் கொண்டிருக்கவில்லை.

"...'ஒரு பெரிய பொறுப்பை ஏற்றுக்கொண்டு அதனைக் காப்பாற்றுவாயா' என்று நீங்கள் எல்லாரும் கேட்கவில்லை—உங்கள் கண்கள் கேட்கின்றன! அந்தக் கேள்விக் குறியின் மத்தியிலே நான் நிற்கிறேன்.

"...உங்களுக்குத் தோன்றுகின்ற யோசனைகளை நீங்கள் தாராளமாகக் கூறலாம்...நான் யார் சொல்லும் நல்ல கருத்துக்களையும் தள்ளிவிடமாட்டேன்... ஆட்சியிலிருந்து விலகும் காங்கிரசுக் கட்சியின் தலைவர்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்..."

—இவ்வாறு அடக்கத்தை—கடமை உணர்ச்சியை—பொறுப்புணர்ச்சியை—வெளிப்படுத்திய அண்ணா வெறும் சொல்லளவோடு நின்றுவிடவில்லை.

காங்கிரசுக் கட்சியின் தலைவர் திரு. கு. காமராசர், திரு. மாணிக்கவேலர், திரு. எம். பக்தவத்சலம் முதலானவர்களை நேரில் சந்தித்து அவர்களுடைய வாழ்த்தினைப் பெற்றார். அரசியல் மூதறிஞர் திரு. இராசாசி, சர். ஏ. இராமசாமி முதலியார், டாக்டர். ஏ. இலட்சுமணசாமி முதலியார் ஆகியோரது அறிவுரைகளையும் கேட்டார்.

எல்லாவற்றுக்கும் மணிமுடி வைத்தமாதிரி தம்முடைய ஒரே தலைவரும்—அரசியல் ஆசானுமாகிய பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்களைத் திருச்சிவரை சென்று வணங்கி வந்தார். அவரது இரு விழிகளான நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், கலைஞர் மு. கருணாநிதி அவர்களும், அப்போது அண்ணாவுடன் சென்று வந்தார்கள் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

## கள்ளும் பாலும் கதிரும்

பெற்ற வெற்றியோ மிகமிகப் பெரியது, பீடு மிக்கது, ஈடற்றது என்பதில் எள்ளளவும் ஐயமே இல்லை.

ஆனால் அந்த வெற்றியினால், அறிஞர் அண்ணா தமது அனுபவம், வயது, பக்குவம், பண்பாடு காரணமாகத் தமது பூரிப்பை அடக்கிக்கொண்டு பொறுமையாகப் பணியாற்றலாம். அவரது தம்பிகளோ இளைஞர்கள், துடிப்புள்ளவர்கள். பற்பல தியாக வேள்வியிலே தீக்குளித்து மீண்டும் வெற்றிக் கனி எப்போது கிட்டும் என்று எதிர்பார்த்து ஏங்கியவர்கள்; அவர்கள் எங்கே புதிதாக ஆட்சிப் பொறுப்பு தங்கள் கட்சிக்கு வந்துவிட்ட பூரிப்பில் தலைகால் தெரியாமல் தறிகெட்டுத் திரிவார்களோ—தலைக்கனம் கொள்வார்களோ—என்னும் அச்சமும் அண்ணாவின் உள்ளத்தில் எழுந்திருக்கும் போலும்! அதனால்தான் சமயம் கிடைத்த பொழுதெல்லாம் தம் தம்பியருக்கு அடக்கத்தை வலியுறுத்த அண்ணா தவறவில்லை.

"...கதிர் முற்றாத நிலையில் பயிர் காற்றடித்த பக்கமெல்லாம் ஆடுவதைப் பார்க்கலாம். கதிர் முற்றிய நிலையில்

நெற்பயிர் வயலில் படுத்தபடி இருக்கும். முற்றிய கதிரின் அடக்க உணர்ச்சியை நாம் பெற வேண்டும்"

—என்று அவர் குறிப்பிட்டிருப்பது எண்ணி மகிழத் தக்கது.

"...வெற்றி—பாலைப் போன்றது. பாலும் வெள்ளையாகத்தான் இருக்கிறது; கள்ளும் வெள்ளையாகத்தான் இருக்கிறது. ஆனால், இரண்டையும் பாத்திரங்களில் போட்டால் கள்—பொங்கி வழிகிறது; பாலோ—பாத்திரத்தில் அப்படியே இருந்து சுவையையும் தருகிறது. அதுபோல் வெற்றியை நாம் அமைதியான முறையிலேயே அனுபவித்து வருவோம்."

—இவ்வாறு 'வெற்றியும் தோல்வியும் வீரனுக்கு ஒன்றே!'—என்னும் போக்கில் இரண்டையுமே ஒன்றாக மதித்து அடங்கும் மனப்பாங்கு எல்லாருக்கும் வருமா? ஆனால், அறிஞர் அண்ணாவிடம் அத்தகைய பக்குவம் ஆட்சிக்கு வந்த அன்று மட்டுமல்ல, என்றுமே இருந்து வந்திருக்கிறது.

## புதிய மரபு புலர்ந்தது

அரசாங்கம் என்பது ஒரு பெரிய புகைவண்டி எனில், அதன் ஆதார சுருதியாய் அதனை இயக்குவது அரசு ஊழியர்களாகிய சக்கரங்களே!

இந்தப் பேருண்மையை மறந்துவிட்டுத்தான் அமைச்சர்களும், அதிகாரிகளும் ஊழியர்களை அலட்சியப்படுத்துவார்கள்; புறக்கணிப்பார்கள்.

அறிஞர் அண்ணாவோ, காஞ்சீபுரம் நகராட்சியில் ஒரு காலத்தில் எழுத்தராகவும் (கிளர்க்காகவும்) பணியாற்றிய பெருமை படைத்தவர் அல்லவா? அதனால், அரசு ஊழியர்களின் அருமையையும் திறமையையும் நன்றாக உணர்ந்திருந்தார். அவர்களை மதிப்பதில்தான் அரசாங்கத்தின் மதிப்பும் உயரும் என்று மனமார நம்பினார்.

எனவேதான், தமக்குமுன்னே எந்த முதல் அமைச்சரும் செய்யாத—செய்ய எண்ணாத—ஒரு புதிய மரபினைத் தோற்றுவித்தார்.

ஆம்; 6—3—67-இல், இராசாசி மண்டபத்தில், கடவுளின் பேரால் அல்லாமல், உண்மையின் பேரால்—தமது மனச்சான்றின் பேரால்—தமிழ் மொழியிலே பதவி ஏற்பு-உறுதிமொழி எடுத்துக்கொண்ட அண்ணா, அன்றே, தலைமைச் செயலகத்தில் (Secretariat) அரசு ஊழியர்களையும் அதிகாரிகளையும் சந்தித்து அவர்களது ஒத்துழைப்பை வேண்டினார்.

இதுவே, தமிழக ஆட்சி முறை வரலாற்றிலேயே இல்லாத ஒரு புது மரபாகும்.

அப்போது, ஊழியர்கள் அதிகாரிகள் முன்னிலையில் அவர் வெளியிட்ட அற்புதமான கருத்து என்ன தெரியுமா?

"...நீங்கள் எல்லோரும் இனிமேல் அரசாங்க—நிருவாகத்திலே புதிய இராகங்களைப் புகுத்த வேண்டும்; அதே போன்று புதிய தாளங்களையும் புகுத்த வேண்டும்; இரண்டும் (இராகம்—தாளம்) எளிமையானதாகவும் இருக்கவேண்டும்; கடுமையாக இருக்கக் கூடாது..."

—என்று பொதுமக்களுக்கும் அதிகாரிகளுக்கும் இருக்க வேண்டிய இணைப்பான நல்லுறவுபற்றி இசையோடு பொருத்திக் கூறினார் அண்ணா.

இதிலிருந்து அவர் ஊழியர்களிடம் வைத்திருந்த பெருமதிப்பு, பொதுமக்களுக்குத் தலைசிறந்த—புதிய நிருவாக தன்மையை அளிக்கவேண்டும் என்னும் பேரார்வம் ஆகியவற்றோடு, இசைக்கலையிலே அவருக்குள்ள ஈடுபாட்டையும், புலமையையும்கூட நம்மால் தெளிவாக உணர முடிகிறதல்லவா?

அடுத்து, சிம்மாசனம் ஏறிய இந்தத் தி. மு. க. சிட்டுக் குருவிகளின் தலைவராம் பேரறிஞர், அண்ணா அவர்கள், தமிழகத்திலே ஒரு பொற்காலத்தைக் கொணர்வதற்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டுச் சாதித்த சாதனைகளைச் சுருக்கமாகக் காண்போம்!

# 31. தலைமைச்சர் புரிந்த சாதனைகள்

## ஏழை வயிற்றில் பால்

பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதும் புரிந்த தலையாய சாதனை எது?

உணவு நெருக்கடியை நீக்கியதே ஆகும்.

காங்கிரசார் ஆண்ட காலத்தில் அரிசித் தட்டுப்பாடு எரிமலை போல் வெடித்து, பொதுமக்களின் வயிறு எரிய வைத்ததற்குக் காரணம், உற்பத்திக் குறைவு மட்டும் அன்று; கேரளம், மைசூர் ஆகிய அண்டை மாநிலங்களுக்குக் கள்ளக் கடத்தல் மூலம் உணவுப் பொருள்கள் சென்றதைத் தடுக்காமையும் ஆகும்.

ஆட்சிப்பீடம் ஏறியதும் அண்ணா செய்த முதல் வேலை தமிழக எல்லைகளைக் கடந்து திருட்டுத்தனமாக உணவுப் பொருள்கள் ஓடாவண்ணம் தடுத்ததே. 'பறக்கும் படை'—வரை பற்பல ஏற்பாடுகள் மூலம், தமிழக எல்லையோரப் பகுதிகளின் காவல்கள் வலுப்படுத்தப் பெற்றன.

"...பெட்டிச் சாவியிருந்தும் பூட்டாமல் விட்டுவிட்டால், யார் வேண்டுமானாலும் பெட்டிக்குள் கை போடுவார்கள்; அதுபோல எல்லைகளை மூடாவிட்டால், உணவு தமிழக எல்லை தாண்டிப் போய்விடும், இலாப நோக்கமுள்ள வியாபாரிகளால்!"

—என்று அழகிய உவமை கூறி அண்ணா எச்சரித்ததன் மூலம், கள்ளக் கடத்தல் தடுக்கப்பட்டு, நமது நாட்டில் உற்பத்தியான உணவு தானியங்கள் நமது நாட்டிலேயே தேங்கிப் பயன்தரும் நிலைமை உருவாயிற்று.

அடுத்து பதுக்கி வைக்கப்பட்ட உணவு மூட்டைகளை வெளிக் கொணரவும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க ஏற்பாடு செய்தார் அண்ணா.

இதனால், சென்னை நகர மக்களுக்கு ஒரே ஒரு நாளைக்கு மட்டுமே போதுமான வெறும் 500 டன் உணவு தானியத்தை மட்டும் பழைய காங்கிரசாட்சி வைத்துவிட்டுப் போன வறிய நிலையை மாற்றி, பல மாதங்களுக்குச் சென்னை மக்களுக்கு மட்டுமின்றி மாநிலத்திலுள்ள மற்றவர்களுக்கும் உணவுப் பொருள்கள் தாராளமாகக் கிடைக்கும் வாய்ப்பு வளர்ந்தது.

காங்கிரசு ஆட்சியிலே, அரிசியே எளிதில் கிடைக்காத தட்டுப்பாடு ஒரு புறம் இருக்க, கிடைத்த அரிசிக்கும், மிக மிக மிகுதியான விலைகொடுத்து வாங்க வேண்டிய கொடிய நிலைக்கும் பொதுமக்கள் ஆளாகி அல்லற்பட்டனர்.

கடத்தலைத் தடுத்துப் பதுக்கலையும் வெளிப்படுத்தியதால் மாநில முழுமையும், எல்லோருக்கும் எளிதில் அரிசி நெல் கிடைத்ததுடன், விலையும் சரசரவென்று கீழே இறங்கி விட்டது.

அண்ணாவின் முதல் இலட்சியமே, எளிதாகவும் குறைந்த விலையிலும் அரிசி கிடைக்குமாறு செய்து ஏழைகளின் வயிற்றில் பால் வார்க்க வேண்டும் என்பதே!

அவருடைய அந்த இலட்சியக் கனவு நனவாகும் நாளும் விரைந்து வந்தது.

ஆம்; 1967-ஆம் ஆண்டு மே திங்கள் 15-ஆம் நாள். 'ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி' என்னும் மாபெரும் திட்டத்தை அறிஞர், அண்ணா நடைமுறைக்குக் கொண்டு வந்தார்.

முதன்முதல் வாங்கியுண்போர் மிகுதியாக வாழும் சென்னை நகரிலும், கோவை நகரிலுமே இது செயற்படுத்தப் பெற்றாலும் உணவுப் பங்கீடு நடை முறையிலுள்ள எல்லாப் பகுதிகளுக்கும இதனை விரிவுபடுத்த வேண்டும் என்பதே அண்ணாவின் வேட்கை.

இத்திட்டத்தை முன்னாள் நாடாளுமன்ற அவைத் தலைவர் திரு. என். சஞ்சீவிரெட்டி அவர்களே—அவர் காங்கிரசைச் சார்ந்தவராக இருந்தும்கூட—பாராட்டியுள்ளார்.

"...வாக்குறுதி அளித்தபடி தமிழகத்தின் முதலமைச்சர் சி. என். அண்ணாதுரை அரிசி விலையைக் குறைத்துள்ளார். ஆனால், காங்கிரசுக் கட்சி ஆளும் மகாராட்டிரத்தில் இன்றி

வமையா உணவுப் பொருளான பாலின் விலை உயர்த்தப்பட்டிருக்கிறது! அந்த இரண்டு அரசுகளின் நடவடிக்கைகளுக்கிடையேயுள்ள வேறுபாடு கவனிக்கத்தக்கதாகும். தமிழகத்தில் விலை குறைப்பும், மகாராட்டிரத்தில் விலை உயர்வும் ஒரே வாரத்தில் நடந்திருக்கின்றன. இதன் விளைவாக, காங்கிரசுக் கட்சியின் புகழ் தாழ்ந்திருக்கிறது! தி. மு. கழகத்தின் புகழ் உயர்ந்திருக்கிறது!"

—என்று வடநாட்டிலிருந்து வெளிவரும் 'கரண்ட்' ஏடே போற்றியதும் இங்கு எண்ணி மகிழத்தக்கது.

படி அரிசித் திட்டத்தால் உணவுப் பொருள்களின் விலை மட்டுமின்றிப் பிற பொருள்களின் அக விலையும் கணிசமாகக் குறைந்தது நாளடைவில்.

இவ்வாறுக ஏழைகள் வயிற்றில் பாலை வார்த்து அவர்களுடைய இதயக் கோவிலின் இறைவன் ஆனுர் அறிஞர் அண்ணு.

## எளிமைக்கோர் இலக்கணம்

ஆடம்பரத்தை இளமை முதல் அறவே வெறுத்து வந்தவர் அறிஞர் அண்ணு. ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த பின்னரும் அந்த எளிமைக்கோர் இலக்கணமாகவே திகழ்ந்தார் அவர்.

காங்கிரசு அமைச்சர்கள் முன்பெல்லாம் பெரிய பெரிய கார்களில்தான் உல்லாசமாக உலா வந்தார்கள். அறிஞர் அண்ணுவோ சின்னஞ்சிறிய கார்கள் போதும் என்று வரையறை செய்துவிட்டார்.

அமைச்சர்களுக்குரிய பெரிய அரசாங்க மாளிகை வீட்டில் வசிக்கக்கூடிய வாய்ப்பினைத் துறந்து தமது சாதாரண இல்லமே போதும் என்று இருந்துவிட்டார்.

எல்லாவற்றையும்விட, தம் ஊதியத்தை அவர் குறைத்துக் கொண்டதாகும். காங்கிரசுக் கட்சியின் வரலாற்றிலே 'கராச்சி மாநாட்டு தீர்மான'த்துக்கு என்றுமே தனிப் புகழ் உண்டு. அதன்படி எவருடைய ஊதியமும் ரூபாய் ஐநூறுக்கு மேல் போகக் கூடாது என்பது காந்தியடிகளின விருப்பமாகும். ஆனுல், காங்கிரசுக் கட்சியைச் சார்ந்த அமைச்சர்

களே காந்தியடிகளின் எண்ணத்தைப் பின்பற்றாமல் அதிகப் படியான ஊதியத்தையே பெற்று வந்தனர்; இன்றும் பிற மாநில—மத்திய—அரசு அமைச்சர்களும் பெற்று வருகின்றனர்.

ஆனால் கேரளாவின் முதலமைச்சர் (பொதுவுடைமைத் தலைவர்) திரு. ஈ. எம். எஸ். நம்பூதிரிபாடு அவர்களே, 'இவர்களால் எப்படி இவ்வளவு குறைந்த தொகையில் காலந் தள்ள முடிகிறது?'—என்று மூக்கில் விரல் வைக்கும் அளவுக்கு அறிஞர் அண்ணாவோ, அமைச்சர்களின் ஊதியம் இனி ஆயிரம் ரூபாய் அல்ல, ஐநூறு ரூபாய்தான்'—என்று வரையறை செய்துவிட்டார்!

தனிப்பட்ட முறையில் தாமும் தம்மைச் சார்ந்த அமைச்சர்களும் எளிமையோடு வாழ்ந்தால் போதாது என்று கருதிய அண்ணா, அரசாங்க நிருவாக யந்திரத்திலும் எளிமைத் தன்மை நிலவவேண்டும் என்று விரும்பினார். சில நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

"வீட்டிலே உள்ள இடத்தில் கீரையும் பயிரிடலாம்; குரோட்டன்சும் வைக்கலாம். குரோட்டன்சு வைப்பது அழகாகத்தான் இருக்கும்; ஆனால், கீரை பயன்படும் அளவுக்குக் குரோட்டன்ஸ் பயன்படாது?

"அப்படிச் சில பதவிகள் அலங்காரத்துக்காகவும் ஆடம்பரத்துக்காகவும் இருப்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை; ஆகவே அந்தப் பதவிகளை நீக்குவதில் அரசு கவனம் செலுத்துகிறது"

—என்று தம்முடைய எளிமை தழுவிய சிக்கன நடவடிக்கைக்கு அழகோடு ஆதாரங் காட்டிப் பேசினார் அறிஞர் அண்ணா.

## முதல் டில்லிப் பயணம்

முதலமைச்சர் ஆன பின்னர் அறிஞர் அண்ணா முதன் முதலாக 7—4—67 அன்று புதுடில்லி சென்றார். அவருக்கு அங்கு மிக உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

காங்கிரசுக் கட்சித் தலைவர் திரு. காமராசர் நீங்கலாக எந்த ஒரு தென்னாட்டுத் தலைவருக்கும் கிட்டாத வரவேற்பு பாலம் விமான நிலையத்தில் அண்ணாவுக்குக் கிட்டிற்று.

புது டில்லியில் வாழும் தமிழ் மக்கள் தங்கள் தமிழ்த் தாயின் தவப் புதல்வனுக்கு அளவற்ற அன்பு மழை பொழிந்தார்கள்.

அச்சமயம், தோழமைக் கட்சிகளுள் தலையாயதான சுதந்திராக் கட்சியின் தலைவர் திரு. இராசாசி அவர்கள், அண்ணாவிடம் கொண்ட சிறுசிறு கருத்து வேறுபாடுகள் காரணமாக, தமக்கும் தி. மு. க.வுக்கும் உள்ள தொடர்பு நைந்துவிட்டது என்று மற்றவர்கள் நம்புகின்ற அளவுக்கு, 'தேனிலவு முடிந்துவிட்டது' என்று சொல்லிவிட்டார். அது பற்றிப் புதுடில்லிப் பத்திரிகைச் செய்தியாளர்கள் அண்ணாவிடம் கேள்விக் கணைகள் தொடுத்து மடக்கப் பார்த்தனர். நிதானத்துக்கும் பண்பாட்டுக்கும் பெயர் பெற்ற அண்ணாவோ, சுதந்திராவுடன் தி. மு. க.வுக்குள்ள உறவு முறியாது மேலும் வலுப்படும் என்பதை அறிவுறுத்துவது போல் :

''...தேனிலவு முடிவடைகிறது என்பது (பொறுப்புள்ள) குடும்ப வாழ்க்கை தொடங்குகிறது என்பதையே காட்டுகிறது''—என்று நயமாகக் கூறி இரு கட்சிகளுக்கும் உள்ள தொடர்பு துண்டாகிவிடாமல் காப்பாற்றினார்.

புதுடில்லியிலுள்ள 'தமிழக இல்லத்தில்'—பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் அளித்த விருந்தில் இந்திரா காந்தியைத் தவிர, மொரார்ஜி தேசாய் உட்பட பெரும்பாலும் எல்லா மத்திய அமைச்சர்களுமே கலந்துகொண்டு அண்ணாவைச் சிறப்பித்தார்கள்.

அப்போது அங்கு நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில், பிற மாநில முதலமைச்சர்களைக் காட்டிலும் அண்ணாவின் அறிவாற்றல்—பேச்சாற்றல்—வாதத் திறன்—தரங்குறையாப் பண்பாடு—எல்லாமே நன்கு ஒளிவீசிற்று.

மொத்தத்தில், புதுடில்லியில் தாம் கலந்துகொண்ட ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் எல்லோருடைய உள்ளத்தையும் கொள்ளை கொண்டு விட்டார் அண்ணா.

தம்மை ஒரு பெருந் 'தேசியத் தலைவர்'—என்று மற்றவர்கள் மதிக்கும் அளவுக்குத் தம்மைத் தாமே உயர்த்திக் கொண்டும் விட்டார் அவர்.

வடநாட்டுத் தலைவர்களிடம் இப்படியொரு அளவிடற்கரிய பெருமதிப்பைப் பெற்றதும் ஓர் அரிய சாதனையே அல்லவா?

## தமிழ் விளக்கு!

அறிஞர் அண்ணாவின் அரசியல் வாழ்வே, தமிழ் விளக்கை அணைக்க வந்த இந்திச் சூறைக் காற்றை எதிர்த்து நிற்பதிலேதான் தொடங்கியது.

தமிழிடம் அவருக்கிருந்த ஆழ்ந்த பக்தியும், அதைக் காப்பதிலும் வளர்ப்பதிலும் அவர் காட்டிய ஆர்வமும், ஆற்றிய பணிகளும் எழுத்தில் அடங்கமாட்டா.

''நமது தாய்மொழியான தமிழ் உயர் தனிச் செம்மொழி; இது உலகில் வேறு எந்த இனத்துக்காவது தாய்மொழியாக இருந்திருந்தால், இத்தனைக் காலத்திற்குள் உலகப் பொது மொழியாகி இருக்கும்''

—என்று பெருமிதமாகப் பேசிக் களித்த அண்ணா, தமது அரசு நிருவாகத் துறைகளிலும் தமிழ் கோலோச்சுவதில் மிகுந்த ஆர்வம் காட்டி வந்தார். அந்த ஆர்வ வெள்ளத்தின் ஒரு சிறு துளியே,

14—4—67 தமிழ்ப் புத்தாண்டு சித்திரை முதல் நாளில், சென்னைக் கோட்டை முகப்பிலே,

''தமிழக அரசு
தலைமைச் செயலகம்''

—என்னும் ஒளியுமிழ் பெயர்ப் பலகையை அண்ணா திறந்து வைத்தது ஆகும்.

## முதல் நிதி நிலை அறிக்கை

முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் வரலாற்றுப் புகழ்மிக்க தமது முதல் நிதிநிலை அறிக்கையை 17—6—67-ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் தாக்கல் செய்தார். அதனைப் படித்து முடிக்க 2 மணி நேரம் ஆயிற்று.

அதன்படி,

புன்செய் நிலங்களுக்கான வரி நீக்கப்பட்டது.

கல்லூரியில் புகுமுக வகுப்புவரை ஏழைகள் இலவசக் கல்வி பெற ஏற்பாடு செய்யப்பெற்றது.

கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்குத் தங்கப் பதக்கம் பரிசளிப்பு ஊக்கமூட்டும் திட்டம் நிறைவேறிற்று.

படிப்படியாக பஸ் போக்குவரத்தினை அரசுடைமை ஆக்குவதற்கு வழி செய்யப்பெற்றது.

சீரணி (Prosperity Brigade) அமைப்புக்கு வழி வகுக்கப் பெற்றது.

எல்லாவற்றையும்விட ஏழைகள்மீது எந்த ஒரு வரியுமே விதிக்கப்படவில்லை.

அண்ணாவின் இந்த நிதி நிலை அறிக்கையை 'இது ஒரு சோஷலிச பட்ஜெட்'—என்று சிலம்புச் செல்வர், ம. பொ. சிவஞான கிராமணியார் வரவேற்றார்.

"...மத்திய அரசாங்கத்திலே உள்ளவர்கள், தங்களுடைய பட்ஜெட்டைத் தயாரிப்பதற்கு அறிஞர் அண்ணாவிடம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்"—என்று உலகப் புகழ்பெற்ற ஆங்கிலப் பேச்சாளராம் சர். ஏ. இராமசாமி முதலியார் மனங்குளிரப் பாராட்டும் அளவுக்கு அண்ணாவின் அற்புதமான முதல் நிதி நிலை அறிக்கை அமைந்திருந்தது!

## சுயமரியாதைத் திருமணச் சட்டம்

உலகிலே புரட்சிகள் எத்தனையோ துறையில் தோன்றியிருக்கலாம். ஆனால் திருமண முறையிலே பெரும் புரட்சியை ஏற்படுத்திய பெருமை பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்களையே சாரும். அவர் புகுத்திய திருமண முறைக்குச் 'சுயமரியாதைத் திருமணம்' அல்லது 'சீர்திருத்தத் திருமணம்'—என்பது பெயராகும்.

இந்தப் பகுத்தறிவுத் திருமண முறைப்படி எத்தனையோ இளம் ஆடவரும் பெண்டிரும் இல்லறக் கூட்டிலே இணைந்திருக்கின்றனர். ஆயினும், முன்பிருந்த சட்டம், இதனை முறையானதாக ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் சுயமரியாதைத் திருமணம் புரிந்துகொண்ட எத்தனையோ பெண்டிர்கள் சட்டப் பாதுகாப்பு இன்றித் தவிக்க நேர்ந்தது; அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகளும் சொத்துரிமை இழந்து தத்தளிக்கும் சூழ்நிலை உண்டானது.

சுயமரியாதைத் திருமணத்தின் தந்தை பெரியார் என்னில் அதன் தாய் அறிஞர் அண்ணு அவர்களே. அதனுல்தான், அந்த முறைக்குச் சட்ட வடிவம் கொடுப்பதிலே தாம் முதலமைச்சர் ஆனதும், முனைந்து ஆர்வங் காட்டினுர் அவர். அவருக்கு இந்த வகையில் உறுதுணையாக இருந்தவர் சட்ட அமைச்சர் திரு. செ. மாதவன் என்பதும் இங்குக் குறிப்பிடத் தக்கது.

17—7—67-ஆம் நாள் அன்று சுயமரியாதைத் திருமணச் சட்ட வரைவு (மசோதா) தமிழ்நாடு சட்ட மன்றத்தில் கொண்டு வரப்பெற்றது.

அண்ணு சாதித்த சாதனைகளில் இது மிகப் புகழ் வாய்ந்தது. இம்மசோதா சட்டமாக நிறைவேறியதால், சுயமரியாதைத் திருமணம் புரிந்துகொண்ட ஆயிரக்கணக்கான பெண்களுக்கும் ஆடவர்களுக்கும் சட்டப் பாதுகாப்புத் தந்து வாழ்வளித்து விட்டார் அண்ணு.

பொதுவுடைமைத் தலைவர் திரு. ப. சீவானந்தம் அவர்களின் புதல்வியின் திருமணத்தில் கலந்துகொண்ட அண்ணு பெரியார் அவர்களிடம், "நெடுநாள் பிரிந்து போயிருந்த மகன் தன் தந்தைக்கு ஓர் அன்புப் பரிசு கொண்டு வருவது போல நானும் ஓர் அன்புப் பரிசு கொண்டு வந்திருக்கிறேன்; அதுதான் இந்த அரசு நிறைவேற்றப் போகும் சுயமரியாதைத் திருமணங்களைச் செல்லுபடியாக்கும் சட்டம்"—என்றுர்.

இதைக் கேட்டுப் புளகமுற்ற பெரியார் "இதை அண்ணுவின் அருள்வாக்கு என்றே ஏற்றுக் கொள்கிறேன்"—என்று பூரிப்படைந்தார்...!

## "தமிழ்நாடு" பெயர் மாற்றம்

"உலகமெலாம் இருள்மூடி
ஊமையராய் மக்களுற்ற
தலைநாளே நாகரிகத்
தனியரசு செலுத்தியவள்..."

—என்று ஒரு புலவர் மகிழ்ந்து போற்றும் அளவுக்குத் தொன்மைப் புகழ் படைத்த மென்மைத் தமிழ் வழங்கும் இந்த மாநிலம் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில்

'தமிழ்நாடு' என்று பெயர் பெறவில்லை; 'மெட்ராஸ் ஸ்டேட்'—என்று ஆங்கிலத்தில் வழங்கப்பட்டு வந்தது.

வடக்கே உள்ளவர்கள், 'காசி'யை 'வாரணாசி' என்றும், 'பார்லிமெண்டை'—'லோக்சபா' என்றும், 'பிரசிடெண்ட்'—என்று இருக்க வேண்டியதை 'ராஷ்டிரபதி' என்றும், 'பம்பாய்' என்பதை 'மகாராஷ்டிரா' என்றும் தங்கள் தங்கள் மொழிப் பற்றை வெளிக்காட்டிப் பழம் பெயர்களை மாற்றிக் கொண்டார்கள்; புதுப் பெயர்களையும் சூட்டி மகிழ்ந்தார்கள். ஆனால், தமிழ்த்தாயின் தவக் குறையோ என்னவோ, அந்தத் தாய் மொழியுணர்வு முன்னர் இங்கே ஆட்சி புரிந்தவர்களுக்கு ஏற்படவில்லை. காங்கிரசுத் தியாகியான திரு. சங்கரலிங்கனார் உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்தும் கூட 'தமிழ்நாடு' பெயர் மாற்றத்திற்கு அவர்கள் இணங்கவில்லை; இரங்கவில்லை.

ஆனால், அறிஞர் அண்ணாவோ தம்முடைய இலட்சியக் கனவுகளில் 'தமிழ்நாடு'—பெயர் மாற்றத்தையும் தலையாய ஒன்றாகக் கொண்டிருந்தார்.

எனவே தான்,

18—7—67-ஆம் நாளன்று, தமிழகச் சட்டமன்றத்திலே, சென்னை மாநிலத்துக்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்கும் தீர்மானத்தை முதலமைச்சர் அண்ணா முன்மொழிந்து ஒருமனதாக நிறைவேறுமாறு செய்தார். எதிர்த் தரப்பில் இருந்த காங்கிரசு உறுப்பினர்களும், அண்ணாவின் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்காதது மட்டுமின்றி, அண்ணா, 'தமிழ்நாடு!...' என்று மும்முறை குரல் எழுப்பியபோது, 'வாழ்க!... வாழ்க!... வாழ்க!...' என்று அவர்கள் முழங்கியதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

அண்ணாவின் அந்தத் தீர்மானத்தால், தமிழ்த் தாயே உள்ளம் பூரித்துத் தனது அருந்தவப் புதல்வன்மீது வாழ்த்து மலர் சொரிந்து மகிழ்ந்தாள்!

## சேலம் எழுச்சி நாள்

தென்னாடு தேயாமல் இருக்க இங்கே தொழில் வளங்கள் பெருக வேண்டும் என்பதிலே அழுத்தமான கருத்துக் கொண்டவர் அண்ணா.

தமிழகத்திலுள்ள சேலம் மாவட்டத்திலே இரும்புக் கனி கிடைப்பதற்கு நிரம்ப வாய்ப்பிருக்கிறது. அதனைத் தோண்டியெடுப்பதற்கு, முந்தைய காங்கிரசு அமைச்சரவையில் தொழில் அமைச்சராக இருந்த திரு. ஆர். வெங்கட்டராமன் அவர்கள் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும்கூட மத்திய அரசினர் கேளாக் காதினராகப் புறக்கணித்து விட்டனர்.

ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் அண்ணாவும், சேலத்து இரும்பால் விளையக்கூடிய செழுமையைப்பற்றி எவ்வளவோ எடுத்துரைத்தும் இடித்துரைத்தும் மத்திய ஆட்சியினர் செவி சாய்ப்பதாக இல்லை. எனவே, தமிழகப் பொதுமக்கள் இத்தகைய புறக்கணிப்பால் எவ்வளவு தூரம் புண்பட்டிருக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்த ஏதேனும் கிளர்ச்சி செய்தாலாவது டில்லியிலுள்ளவர்களுக்கு உறைக்காதா என்று எண்ணினார் அண்ணா. அவரது எண்ணத்தின் விளைவாக எழுந்ததே 'சேலம் எழுச்சி நாள்' என்பதாகும்.

1967—ஜூலை 23-ஆம் நாள் அன்று அந்த எழுச்சி நாள் தமிழகம் எங்கணும் அண்ணாவின் விருப்பத்திற்கிணங்க கொண்டாடப் பெற்றது.

இதன் மூலம் ஒரு மாநில அரசு, மத்திய அரசிடமிருந்து சில கோரிக்கைகளைப் பெற கிளர்ச்சிகளில் ஈடுபட்டுச் சாதிப்பதிலும் தவறில்லை என்பதற்கு முன்னோடியாக வழி காட்டினார் அறிஞர் அண்ணா.

## தீமையிற் கொடிய தீ

1967 ஜூலைத் திங்களின் தொடக்கம், உற்சாகமாக மக்களுக்குப் பல்வேறு நன்மைகளைப் புரிய திட்டமிட்டுச் செயலாக்கி வந்த அறிஞர் அண்ணாவின் உள்ளத்திலே நெருப்பை அள்ளிக் கொட்டிற்று.

ஆம்; தீயினும் கொடிய தீய சக்திகளான சிலர், சென்னையில் வாழும் ஏழை மக்களின் குடிசைகளுக்குத் தீ வைத்துச் சாம்பலாக்கினர்! ஆயிரக்கணக்கான பாட்டாளி—ஏழை மக்கள் பதறித் துடித்துக் கதறிப் புலம்பி நடுத் தெருவிலே நின்றும்கூட அந்த வஞ்சகர்களின் நெஞ்சம் கொஞ்சமும்

இரக்கம் கொள்ளவில்லை; தொடர்ந்து தீ மூட்டும் இன்பத்திலேயே திளைத்தனர்.

அண்ணாவின் 'படி அரிசி'த் திட்டத்தாலும், மற்றும் பல திட்டங்களாலும் பயன் பெறத் தொடங்கிவிட்ட ஏழை மக்கள், தங்கள் பாசக் கடவுளின் பிடிப்பிலிருந்து இனி எக்காலத்திலுமே விடுபடமாட்டார்களோ என்று எரிச்சலும் பொறாமையும் கொண்டவர்களே இப்படி எரிப்பு வேலையில் இறங்கியிருக்கலாம் என்றும் பரவலாகப் பேசப்பட்டது.

என்றாலும் பெருந்தன்மைமிக்க அண்ணா இந்தத் தீ வைப்புச் செயலுக்கு அரசியல் பூச்சுப் பூசித் தம் கட்சிக்கு இலாபம் தேட எண்ணவில்லை. ஏழை மக்களுக்கு மீண்டும் எப்படிப் புனர்வாழ்வு அளிப்பது என்பது பற்றியே தீவிரமாய்ச் சிந்தித்தார்.

அவரது சிந்தனையின் விளைவாக, நூற்றுக்கணக்கான தீப்பிடிக்காத வீடுகள் சென்னையிலே எழுந்தன.

தீமையையும் நன்மைக்கு அறிகுறியாக எடுத்துக் கொள்ளும் பக்குவம் பெற்ற அண்ணா,

"...மாபெரும் தீ விபத்துக்குப் பின்னரே, இப்போதுள்ள நிலையில் அழகான இலண்டன் மாநகரம் எழுந்தது. அதைப் போலவே தீய சக்திகளால் ஏழைக் குடிசைகள் எரிவதைக் கண்டு இதயந் துடிக்கின்ற இதே நேரத்தில், இந்தக் கொடிய செயலுக்கு மாற்றுப் பரிகாரமாக நம் சென்னையையும் அழகிய நகரமாக மாற்றியமைக்கப் பாடுபடுவோம்"—என்றார்.

அண்ணாவின் இந்தச் சீரிய கருத்து,

'இடுக்கண் வருங்கால் நகுக...'—என்னும் வள்ளுவரின் வாய்மொழியையே நினைவூட்டுகிறது அல்லவா ?

## நாட்டுடைமை ஆக்கும் நல்ல திட்டம்

ஒரு நாடு சமதர்மப் பாதையிலே நடை போடுகிறது என்னில், அங்கே, தனியாரின் செல்வாக்கைவிடப் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற அரசாங்கத்தின் செல்வாக்கு, முக்கியமான தொழில்கள் முதலாக எல்லாத் துறைகளிலுமே மேலோங்கி வரவேண்டும்; நாட்டுடைமை (தேசீயமயமாக்கும்) திட்டம் வெற்றியுற வேண்டும்.

அறிஞர் அண்ணு அவர்கள் எப்போதுமே உழவர் களிடமும் தொழிலாளர்களிடமும் பரிவு மிக்கவர். அவர் களுடைய வாழ்வு மலரவும் வளரவும் சமதர்மம் தழைக்க வேண்டும் என்பதிலே தளராத நம்பிக்கை கொண்டவர்; அதற்காகப் பேசியும் எழுதியும் வந்தவர்.

அந்தச் சமதர்மத்தின் முதற் கட்டமே நாட்டுடமை யாக்கும் திட்டம். அந்தத் திட்டத்தை முதன் முதலாகப் பஸ் போக்குவரத்துத் துறையில் செயற்படுத்த முனைந்தார் அண்ணு.

நாட்டுடைமையாகும் முதல் பஸ் (மார்க்கம்) வழித் தடமாக 'சென்னை—ஆரணி'—மார்க்கம் தேர்ந்தெடுக்கப் பெற்றது.

பொதுப்பணி அமைச்சர் கலைஞர் மு. கருணுநிதி அவர் களின் தலைமையில் அந்த பஸ் மார்க்கத்தில், 1-8-67-ஆம் நாளன்று முதல் அரசாங்க பஸ் போக்குவரத்தை அண்ணு தொடங்கி வைத்தார்.

## சிறப்புமிக்க சீரணி

"பொதுவாக நமது நாட்டில் படித்தவன் உழைக்க மாட்டான், உழைப்பவன் படித்திருக்கமாட்டான் என்ற ஒரு மனுேநிலை நிலவுகின்றது. இதுவே இந்த நாட்டின் நலிவு களுக்கும் ஒரு காரணமாக விளங்குகிறது. இந்த நிலை மாற வேண்டும். படிப்பது நன்ருக உழைத்திட என்ற எண்ணம் ஏற்பட வேண்டும்...உழைப்பின் பெருமையை உணர்த்திய வர் காந்தியடிகள் என்பார்கள்; உதட்டளவில் பேசப்படு வதல்லாமல் ஊர் மக்கள் மெச்சிடத்தக்க நோக்கங்களில் ஒன்ருகவும் அது ஆகிட வேண்டும்."

—என்று கருதிய அண்ணு, கட்சி அரசியலுக்கெல்லாம் அப்பாற்பட்டு மக்களிடம் புதைந்து கிடக்கும் மாபெரும் உழைப்புச் செல்வத்துக்கு ஓர் அற்புதமான உருக்கொடுக்க முனைந்தார்.

அந்த உருவமே சீரணி.

சென்னையில் 1300 தொண்டர்களைக் கொண்ட சீரணி யின் பணியினை முதன் முதல் 16-8-67-ஆம் நாளன்று அண்ணு தொடங்கி வைத்தார்.

அதைத் தொடர்ந்து தமிழகம் எங்கணும் மாவட்டந் தோறும் ஆயிரத்துக்கு மேற்பட்ட தொண்டர்களைக் கொண்ட சீரணிகள் செயற்படத் தோன்றின. அவற்றைச் செம்மைப்படுத்தி வழி நடத்த ஒரு தனி அதிகாரியே நியமிக்கப் பெற்றார்.

சீரணியில் எந்தக் கட்சியைச் சார்ந்தவரும் இடம் பெற லாம்; எந்தத் துறையில் அலுவல் பார்ப்பவரும் தமது ஓய்வு நேரத்திலே 'உழைப்புக் கொடை' அளிக்கலாம். ஆனால், தங்கள் உழைப்புக்காக ஊதியம் எதையும் அவர்கள் எதிர் பார்க்கக் கூடாது.

'கடமையைச் செய்; ஆனால் பலனைக் கருதாதே!'— என்னும் பகவத் கீதையின் அடிப்படைத் தத்துவத்தில் எழுந் ததே சீரணி என்றும் கூறலாம்.

இச்சீரணி பற்றிக் காந்தியடிகளின் இரு கண்களில் ஒரு கண்ணாக விளங்கிய, சர்வோதயத் தலைவர் திரு. செயப் பிரகாச நாராயணன் எவ்வாறு புகழ்ந்துள்ளார் தெரியுமா?

"...தமிழகத்தில் முதலமைச்சர் அண்ணாதுரை தலைமை யில் சீரணிப் படை அமைந்துள்ளது. மக்கள் தங்களுக்குத் தாங்களே உதவிக் கொள்ளும் ஆற்றலை வளர்க்கத்தக்க தாகும்; இது ஒரு நல்ல முயற்சி, நான் மகிழ்ச்சி அடை கிறேன். மக்களிடம் இத்தகைய ஒரு நன்முயற்சி வளர காங்கிரஸ் கலைக்கப்பட்டு 'லோக சேவக் சங்கம்' என்ற பெயரில் இயங்கவேண்டும் என்று மகாத்மா காந்தி தாம் கொல்லப்படுவதற்கு ஒரு நாளைக்கு முன்னர் தெரிவித்தார்.... மகாத்மா விரும்பிய இப்பணியைத்தான் சர்வோதய இயக் கத்தைச் சேர்ந்த நாங்கள் செய்து வருகிறோம். முதலமைச்சர் அண்ணாதுரையின் தலைமையில் சீரணிப் படை மேற் கொண்டுள்ள முயற்சிகள் வெற்றி பெறுமெனவும் நம்பு கிறேன்..."

—திரு. செயப்பிரகாசரின் பாராட்டுரையிலிருந்து, காந்தியடிகளின் எண்ணத்தையே, 'தென்னாட்டுக் காந்தி' யெனும் பெயருக்கேற்ப அண்ணாவும் சீரணி வாயிலாக முழங்குகிறார் என்பது தெளிவாகிறது அல்லவா?

## சென்னைக்கு ஒரு தேம்ஸ் நதி

எந்த ஒரு பெரு நகரத்தின் அழகும் அதன் நடுவே இயற்கையாகப் பாய்ந்தோடும் ஆற்றைப் பொறுத்தே அமைந்துள்ளது.

இலண்டன் மாநகரின் அழகுக்கு அழகூட்டுவது அங்கே பாயும் தேம்ஸ் நதி.

காஷ்மீரின் தலைநகராம் ஸ்ரீநகரின் எழிலுக்கு எழிலூட்டுவது அதன் நடுவே பாய்ந்தோடும் சீலம் நதியே!

ஆனால், சென்னை நகருக்கோ அதன் நடுவே செல்லும் கூவம் ஆறே கொடிய களங்கமாக அமைந்துவிட்டது.

சீர்கெட்டுக் கிடக்கும் அதனைச் செப்பனிட்டு அதன் இருமருங்கும் சாலைகள், சாலைகளை அடுத்துச் சோலைகள் என அழகுபடுத்தும் திட்டத்தைக் கலைஞர் மு. கருணாநிதி உருவாக்கினார்.

நாற்றமிகு கூவத்தை நறுமணம் வீசும் தேம்ஸ் நதியாக மாற்றும் 'கூவம் நதிச் சீரமைப்புத் திட்டத்தை' 19-9-67-ஆம் நாளன்று சென்னை மெரினாவில் கூவம் ஆற்றின் வடகரையில் அறிஞர் அண்ணா தொடங்கி வைத்தார்.

## காந்தியின் கண்ணான கொள்கை

மகாத்மா காந்தியடிகளின் உயிர் மூச்சான கொள்கைகளில் ஒன்று மதுவிலக்கு ஆகும். காங்கிரசுக்காரர்கள் என்றும், காந்தியடிகளைப் பின்பற்றுகிறவர்கள் என்றும் சொல்லிக் கொள்கின்ற பலர், அவரது கொள்கைகள் பலவற்றைக் காற்றில் பறக்கவிட்டு வருவதை நாம் கண்ணாரக் காண்கிறோம். அவ்வாறு கைவிடப்பட்டு வருவனவற்றுள் இந்த மதுவிலக்கும் ஒன்றாக் ஆகிவிட்டது.

காங்கிரசுக் கட்சியினரே ஆட்சிப் பீடத்தில் உள்ள பல மாநிலங்களில் இம்மதுவிலக்குத் தளர்த்தப்பட்டு குடிகெடுக்கும் குடிக்கு வாசற்கதவைத் திறந்து விட்டுவிட்டனர்.

அறிஞர் அண்ணா காங்கிரசுக்காரர் அல்லர்; காந்தியவாதியும் அல்லர் தாம். ஆயினும் அவரது உயிர்க் கொள்கைகளில் ஒன்றான மதுவிலக்கைத் தம்முடைய உயர்ந்த இலட்சியங்களுள் ஒன்றாக வரித்துக் கொண்டுவிட்டார் அண்ணா.

எந்த ஒரு நிலையிலும் அதனைத் தளர்த்தவே கூடாது என்னும் உறுதிப்பாடு அவரது நெஞ்சிலே ஆழப் பதிந்து விட்டது.

1967-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் நெஞ்சைப் பிளக்கும் நிகழ்ச்சியொன்று சென்னையிலும், பின்னர் செங்கற் பட்டு, காஞ்சீபுரம் முதலான நகரங்களிலும் நடந்து விட்டது. குடிப் பழக்கத்துக்கு இரையாகிய அறியா மக்கள், போதையுணர்ச்சியைப் பெறும் ஆசையில் வார்னிஷ் குடிக்கும் பழக்கத்துக்கும் இலக்காகிவிட்டனர். போதை தருவதாகக் கருதப்பட்ட அந்த வார்னிஷ் ஒரு நாள் அவர்களது உயிரையே பறித்துவிட்டது. ஏறத்தாழ நூற்றுக்கு மேற் பட்டவர் இறந்துவிட்டனர்.

இந்தச் செய்தியறிந்த அண்ணா அளவில்லாத துயரத் துக்கு ஆளானார். நெஞ்சம் பதைபதைத்து. மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருந்தவர்களை ஓடி ஓடிப் பார்த்து ஆறுதல் கூறினார்.

''என்னதான் கண்காணித்து, கணக்கற்றவர்களைச் சிறைக்கு அனுப்பியும்கூட, கடந்த சுமார் இருபது ஆண்டு களாக நடைமுறையில் உள்ள மதுவிலக்குச் சட்டத்தால் மக்களை முழுவதுமாகத் திருத்து முடியவில்லை. பலர் கள்ளத் தனமாக மதுவருந்துகிறார்கள்; உயர்ந்த வகை மது வாங்க வகையற்றவர்கள் இப்படி வார்னிஷ் குடித்தாவது தங்கள் ஆசையைத் தீர்த்துக் கொள்கிறார்கள்; அதன் விளைவாக இறந்தும் போகிறார்கள். மதுவின் மூலம் அரசுக்குக் கிடைக் கக்கூடிய கோடிக்கணக்கான ரூபாய் வருமானமும் வீணே இழக்கப்படுகிறது. எனவே, வார்னிஷ் குடித்து பலர் இறக்கும் நிலையைக் கண்ட பிறகாவது மதுவிலக்கை எடுத்துவிட்டால் என்ன?''—என்று சிலர் பேசத் தொடங்கினர்.

'...இந்தத் துக்ககரமான நிலவரத்தை முன்னிட்டாவது மதுவிலக்கு பற்றி அரசாங்கம் மீண்டும் புனர் ஆலோசனை செய்யுமா?'—என்று ஒரு செய்தியாளர் அண்ணாவைக் கேட்கவும் கேட்டார்.

அதற்கு அண்ணா என்ன விடையளித்தார் தெரியுமா?

''...வார்னிஷ் குடித்துப் பலர் செத்துப் போனது அதிர்ச்சி தரத்தக்கதுதான். ஆனால், அதிர்ச்சி தரத்தக்க

சம்பவங்களை வைத்து மட்டும் நிலையான கொள்கைகளை உருவாக்க முடியாது. ஏற்கனவே, ஆர அமர யோசித்து தீர்க்கமாக எடுக்கப்பட்ட முடிவு பற்றிப் புனராலோசனை செய்வது தேவையற்றது என்ற முடிவுக்கு நான் வந்துவிட்டேன்''— என்றார்.

21—9—67இல் மதுக் குடி ஒழிப்பிற்கான தேசியக் கழகத்தின் கூட்டமொன்று சென்னை இராசாசி மண்டபத்தில் நிகழ்ந்தது. அமெரிக்க நாட்டு மதுக் குடி ஒழிப்பு இயக்கத் தலைவர்களில் ஒருவரான ஈ. எச். ஜே. ஸ்டீல் என்பவரும், காங்கிரசுத் தலைவர்களில் ஒருவரான திரு. டி. செங்கல்வராயன் அவர்களும்கூட அந்த விழாவில் பங்கேற்க வந்திருந்தனர். அப்போதும் அண்ணா என்ன சொன்னார் தெரியுமா?

''...குடித்துவிட்டு வந்து தங்களது மனைவி மக்களையே தாக்கியவர்கள் பற்றிய பல கதைகளை நான் அறிவேன். அத்தகையவர்களிடம் அடிபட்ட பெண்களின் கதறல் இன்னும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அது ஒலித்துக் கொண்டு இருக்கும்வரை மதுக்கடை ஒன்றுகூடத் திறக்கப் படுவதை நான் அனுமதியேன்.''

—மதுவிலக்குக் கொள்கையில் அண்ணாவுக்குள்ள இந்த ஆழ்ந்த பிடிப்பு தற்போது இந்தியாவின் துணைக் குடியரசுத் தலைவராக உள்ள திரு. வி. வி. கிரி (இவர் குடியரசுத் தலைவராகவே ஆகிவிட்டார்). அவர்களை மிகவும் கவர்ந்துவிட்டது. அவர் எவ்வாறெல்லாம் உளந் திறந்து அண்ணாவைப் பாராட்டியிருக்கிறார் தெரியுமா?

''...தமிழகத்து முதல்வர்—அண்ணாதுரை அவர்கள் மதுவிலக்குக் கொள்கையில் உறுதியாக இருப்பது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். பிற மாநிலங்களெல்லாம் மதுவிலக்குக் கொள்கையைத் தளர்த்தும்போது தமிழக முதலமைச்சர் காந்தீய நெறியில் செல்கிறார்...மதுவிலக்குக் கொள்கையில் உறுதியாக இருக்கும் அவருக்கு எனது பாராட்டுக்கள்!''

மாண்புமிகு திரு. வி. வி. கிரி மட்டுமா?

அண்டை மாநிலமான ஆந்திராவின் முதலமைச்சர் திரு. பிரும்மானந்த ரெட்டியும் அண்ணாவுக்குப் புகழ் மகுடம் சூட்டிப் பூரிப்படைந்துள்ளார்.

"...காந்தீயக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதில் அவர் என்னைவிட உண்மையான காங்கிரசுக்காரராகத் திகழ்கிறார். இதற்கு உதாரணமாகக் கூற வேண்டுமானால்,—(அண்மையில்) பத்திரிகையாளர்களுக்கு அவர் (அண்ணாதுரை) அளித்த பேட்டியில், 'அண்டை மாநிலங்கள் மதுவிலக்கைத் தளர்த்த முடிவு செய்துவிட்டால்கூட தமிழ் நாட்டில் மதுவிலக்கைத் தீவிரமாக அமுல் நடத்துவேன்'—என்ற கருத்தை மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளார்..."

பழம்பெரும் காந்தீயவாதிகளான திரு. கிரி, திரு. பிரும்மானந்த ரெட்டி முதலியவர்களே இவ்வாறு பாராட்டி இருப்பதிலிருந்து, 'அண்ணா—தென்னாட்டுக் காந்தி'—என்பதில் மிகையேதும் இல்லை என்பது தெளிவாகிறது அல்லவா?

## மதுரைப் பல்கலைக்கழகம்

மதுரைப் பல்கலைக் கழகத்தின் முதல் பட்டமளிப்பு விழா 8—9—67இல் அதன் முதல் பட்டமளிப்பு விழாச் சொற்பொழிவை பேரறிஞர் அண்ணா அவர்கள் நிகழ்த்தினார்கள்.

"...நாட்டின் ஒற்றுமையைக் காக்கவேண்டிய கடமை மாணவர் சமுதாயத்துக்கு இருக்கிறது. ஆனால் அதே சமயத்தில் அந்த ஒற்றுமையைக் காக்க சுயமரியாதையை இழந்து—உனது தாய்மொழியைப் புறக்கணித்து—இன்னொரு மொழியின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொள் என்று சொன்னால் எந்த மனிதனும் அதற்கு உடன்படமாட்டான். சுயமரியாதை உணர்வும் ஆற்றல் அறிவும் மிக்க தமிழக மக்கள் தங்களது அரிய மொழியையும் பாரம்பரியத்தையும் இழக்கச் சம்மதிக்கமாட்டார்கள்"

—என்று அப்போது அவர் எச்சரித்தார்.

## ஆலைத் தொழிலாளரின் அருமைத் தோழர்

படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே அண்ணா மிகுதியாகப் பங்கெடுத்துக்கொண்டு சொற்பொழிவுகள் ஆற்றியது, தொழிலாளர் கூட்டங்களில்தான். ஒரு சமயம், பி. அண்ட். சி. மில் தொழிலாளர் சங்கத்தின் தலைவராக அண்ணாவை ஆக்கவேண்டுமென்று தமிழ்த் தென்றல்

திரு. வி. க. அவர்களே விரும்பியதாகக் கூறப்படுகிறது. இவ்வாறு தொழிலாளர் தோழராக இளமையிலிருந்தே பாடுபட்டு வந்திருக்கும் அண்ணு கோவை பஞ்சாலைத் தொழிலாளர்களிடம் பரிவு காட்டியதில் வியப்பேதும் இல்லை.

மத்திய அரசு மேற்கொண்ட 'நாணய மதிப்புக் குறைப்புக்' கொள்கையால் அந்நியச் செலாவணி பாதிக்கப்பட்டுப் பல ஆலைகளை மூடுகின்ற நிலையே உருவாயிற்று. இதனுல் ஆயிரக்கணக்கான ஆலைத் தொழிலாளர்கள் அல்லலுக்கு உள்ளாயினர். 1967 ஆகஸ்டுத் திங்களில் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவும் முடிவு செய்துவிட்டனர்.

அண்ணுவோ, தொழிலாளர் தலைவர்களை அவசரம் அவசரமாக அழைத்துக் கலந்துரையாடி ஆறுதல் கூறி, வேலை நிறுத்தம் நடைபெருதபடி தடுத்தார்.

இதுபற்றி (வலதுசாரி) அகில இந்தியப் பொதுவுடைமைக் கட்சித் தலைவர், திரு. எஸ். ஏ. டாங்கே அவர்களே,

"...மில் தொழிலாளர் வேலை நிறுத்தப் போராட்டத்தை நிறுத்துவதற்காக மிகவும் பாராட்டத்தக்க முறையில் தமிழக முதல் அமைச்சர் நடந்துகொண்டார். தொழிலாளர்களுக்கு அவர் அளித்த வாக்குறுதி மக்களின் விருப்பத்தை மதித்து நடப்பதில் அவருக்குள்ள சனநாயக உணர்வைப் பறைசாற்றுகிறது" என்று பாராட்டினுர்.

அறிஞர் அண்ணு முதலமைச்சராகப் பதவியேற்ற பின்னர் வந்த முதல் பிறந்த நாள் பெருவிழா—அதாவது அவரது 59-வது பிறந்த நாள் விழா—15—9—67-ஆம் நாளன்று கோலாகலத்துடன் நாடெங்கும் கொண்டாடப் பெற்றது.

அன்று எந்தப் பொது நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளாமல் சென்னையிலுள்ள தமது இல்லத்திலேயே ஓய்வாகத் தங்கியிருந்தார் அண்ணு.

அதிகாலை முதலே கவர்னர் உச்சல்சிங், அமைச்சர்கள், தாராகேசரி சின்கா, சட்டமன்ற—பாராளுமன்ற உறுப்பினர்கள், குடிசைவாழ் ஏழை மக்கள், தொழிலாளர்கள், கல்லூரி மாணவ—மாணவிகள், ஆசிரியர்கள், அதிகாரிகள், அரசு ஊழியர்கள், பெண்கள் மற்றும் சமுதாயத்தின் பல்வேறு பகுதியினரும் சாரை சாரையாக வந்து அண்ணுவுச்

குத் தங்கள் உளங்கனிந்த வாழ்த்துக்களை உரிமையாக்கிச் சென்றவண்ணமிருந்தனர்.

அன்று மாலை, அண்ணா பிறந்த ஊரான காஞ்சீபுரத்தில், அகிலம் முழுவதும் புகழ்மணக்க சென்னைப் பல்கலைக்கழகத்தின் தரமும் திறமும் உயர்வதற்காக 25 ஆண்டுகளாகத் துணைவேந்தராகப் பணியாற்றிவரும் டாக்டர் ஏ. இலட்சுமண சாமி முதலியார் அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலையைத் திறந்து வைத்தார்கள்.

"...கடந்த முப்பதாண்டுக் காலமாக அண்ணாதுரை அவர்களை அறிந்துகொள்ளும் ஒரு வாய்ப்பைப் பெற்றிருப்பவன் நான். அந்நாள் முதலாய் அவர் எத்தனையோ நல்லது, கெட்டதுகளை அனுபவித்தார். அந்நிய ஆட்சியில் மட்டும் துன்பப்பட்டார் என்பதல்ல, சுதந்திர நாட்டிலேயே துன்பங்களை ஏற்றார். இந்தச் சோதனைகளிலிருந்தெல்லாம் ஒரு மாவீரனாக—மக்களுக்காக—அவர்களது உரிமைகளுக்காகப் போராடும் கொடியை உயர்த்திப் பிடித்த மாவீரனாக —அவர் எழுந்தார்! சென்ற ஆறு மாத அண்ணாதுரையின் ஆட்சியில், மேற்கொள்ளப்பட்ட எல்லா நடவடிக்கைகளும் பாராட்டத்தக்கன. பாரபட்சமற்ற மக்கள் அனைவரின் கருத்தும் இதுதான். இந்தியாவிலேயே சிறந்த ஆட்சி நடக்கும் மாநிலம் தமிழகம்தான் என்பது பொதுவான கருத்து"—என்றெல்லாம் அப்போது அவர் பாராட்டு மலர்களைச் சொரிந்தார்.

மலேயா, சிங்கப்பூர், இலங்கை முதலான வெளிநாடுகளிலிருந்தெல்லாம் அண்ணாவுக்கு வாழ்த்துத் தந்திகள் வந்து குவிந்தன.

சென்னையிலுள்ள வெளிநாட்டுத் துணைத் தூதுவர்கள் பலரும் நேரில் வந்து அண்ணாவுக்கு வாழ்த்துக் கூறினார்கள். அவர்களில் ரஷ்யத் தூதுவர் திரு. கவேரின் வந்து வாழ்த்துக் கூறியது குறிப்பிடத்தக்கது.

அண்ணாவைக் காண வந்த அந்த ரஷ்யத் தூதர்,

"இதுதான் உங்கள் வீடா?"—என்று வியப்புடன் கேட்டார்.

"ஆமாம்; இதுதான் என் வீடு"—என்றார் அண்ணா.

"ரொம்பச் சின்ன வீடாக இருக்கிறதே!"

"இல்லையே! இது எங்களுக்குப் பெரிய வீடு. இதில்தான் என் அலுவலகமும் இருக்கிறது."

—அண்ணாவின் இந்தக் கூற்றைக் கேட்டதும் 'இலட்சக் கணக்கானவர்களின் இதயக் கோவிலிலே குடியேறும் பேறு பெற்றும் எத்துணை எளிய கோலத்துடன்—எளிய இல்லத்திலே—குடியிருக்கிறார்!'—என்று வாழ்த்துக் கூறவந்த அந்த ரஷ்யத் தூதர் வியப்புக் கடலில் ஆழ்ந்து சென்றார்.

அண்ணாவின் பிறந்த நாள் பரிசுகளாக அடியிற் காணும் சில திட்டங்களும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டன.

(1) தமிழக அரசு ஊழியர்களுக்கு, அவர்களுடைய மகன் அல்லது மகள் திருமணச் செலவுக்காக மூவாயிரம் ரூபாய் வரை கடனுகை வழங்குவது.

(2) அண்ணாவின் பிறந்த நாளான 15—9—67 முதல் சென்னையில் ஓடும் அரசாங்கப் பஸ்களின் கட்டணம் குறைக்கப்பட்டது.

(3) சமுதாய நலத்திட்டத்தில் அடுத்த ஓராண்டு எடுக்கப்போகும் தீவிர நடவடிக்கைகள் உள்ள ஓராண்டுச் சாதனைகளை அறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிறந்தநாள் பரிசாக்குவது என்று உள்ளாட்சித் துறை முடிவெடுத்தது.

(4) காங்கிரசு அரசால் கலைக்கப்பட்ட, நெல்லை அருப்புக்கோட்டை நகராட்சிகள் மீண்டும் புத்துயிர் பெற்றன.

(5) சென்னை சீரணித் தொண்டர்களால் உருவாக்கப் பெற்ற ஊரூர் உயர்நிலைப் பள்ளிக்கட்டிடம், அண்ணாவின் பிறந்தநாள் பரிசாக அளிக்கப் பெற்றது.

—வாழ்த்துக்களை அள்ளி வழங்கியவர்களுக்கெல்லாம்,

"...என் பிறந்தநாளைத் தமிழகத்தில் விழாவாக நடாத்தியது எனக்குப் பெருமையை அல்ல—பொறுப்புணர்ச்சியைத்தான் அதிக அளவு தந்திருக்கிறது...என் வாழ்வு எனக்காக அல்ல—மக்களுக்காக—என்பதை நினைவுபடுத்துவதே அந்த விழா...திட்டமிட்ட முன்னேற்றம், கசப்புணர்ச்சி அற்ற சமூக வாழ்வு—இவையே என் குறிக்கோள். பல ஆண்டுகளாகத் தமிழக அரசை நடத்திச் செல்லப் பணிக்கப்பட்

டவன் என்ற முறையில் இந்தக் குறிக்கோள் நிறைவேறப் பாடுபடுவதே என் வேலைத் திட்டம்...நேற்றைய விழாவை என்னைச் சமூகம் மேலும் பணியாற்ற இடும் கட்டளை எனக் கொள்கிறேன்..."

—என்று அடக்கத்தின் மொத்த உருவான அண்ணா தமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டார்.

## பெரியார் பிறந்த நாள் விழா

தம்முடைய பிறந்த நாளின்போது எந்தப் பொது நிகழ்ச்சியிலுமே கலந்து கொள்ளாமல் அமைதியாக இருந்த அண்ணா, தமது அரசியல் குருவான பெரியாரின் பிறந்த நாள் விழாவில் கலந்துகொள்ள திருச்சிக்கு ஓடோடிச் சென்றார்.

17—9—67-ஆம் நாளன்று 'பெரியார் மாளிகை' சென்று, பெரியாருக்கு வாழ்த்தையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டார்.

பதினான்கு ஆண்டுகள் இரண்டறக் கலந்து பழகி, பின்னர் பதினெட்டு ஆண்டுகள் இரு வேறு துருவங்களாகப் பிரிந்திருந்த தந்தையும் தனயனும் ஒன்றாய்க் கூடி அன்று அழகிய பூப்பல்லக்கில் ஊர்வலம் வந்த காட்சியையும் மாட்சியையும் கண்டவர்கள் மகிழ்ச்சிக் கண்ணீர் வடித்தார்கள்! இன்ப வெள்ளத்தில் மிதந்தார்கள்!

பிரிந்த பிள்ளையைத் திரும்ப அடைந்த ஒரு தந்தையினும் மேலான நிலையில் உவகைக் கடலில் மூழ்கினார் பெரியார்.

## சென்னைக்குப் பொன்னி

பல்லாண்டுகளாக ஏங்கித் தவித்த சென்னை மாநகர மக்களின் தாகம் தீர்க்கும் வகையில் காவிரியிலிருந்து நீர் கொண்டு வருவதற்கான திட்டத்தை 30—10—67-இல் அண்ணா துவக்கி வைத்தார்.

## அண்ணாமலை நகரில் அண்ணா

18—11—67-ஆம் நாளன்று அண்ணாமலை நகரில் அந்தப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

அதிலே அறிஞர் அண்ணா அவர்கள், பட்டமளிப்பு விழாச் சொற்பொழிவினை நிகழ்த்தினார்.

"...நமது கலாசாரமும் நாகரிகமும் முதிர்ந்ததுதான்; ஆனால் அவற்றின்மீது வடுக்களும் சுருக்கங்களும் ஏற்பட்டு உருக்குலைந்து போயிருக்கின்றன. ஆகவே நமது கலாசாரம் நாகரிகம் ஆகியவற்றில் உயர்ந்த அம்சங்களை ஆராய்ந்து கண்டுபிடித்து, பிற நாடுகளின் சாதனைகளில் நமக்குத் தேவையானவற்றைத் தாராளமாகப் பின்பற்றி முன்னேற வேண்டும். இப்படிச் செய்யாமல் நாம் வடுக்களையும் சுருக்கங்களையும் அழுகிப்போன பகுதிகளையும் நீண்ட காலத்துக்கு மூடி மறைத்து வைத்திருந்தோம். புதிய எண்ணம் கொண்ட பெரியார் போன்றவர்களையும் கண்டித்து வந்தோம்... பட்டம் பெற்றுவிட்ட நீங்கள் சமுதாயத்தை மாற்றி அமைப்பதிலும் சமுதாயத்தில் தாழ்ந்து கிடப்பவர்களுக்கு நம்பிக்கை ஒளி உண்டாக்குவதிலும் அனைவருக்கும் புது வாழ்வு மலரச் செய்வதிலும் பாடுபட வேண்டும்"

—என்று அப்போது மாணவ மணிகளைக் கேட்டுக் கொண்டார் அண்ணா.

## உலகத் தமிழ் மாநாடு

அறிஞர் அண்ணாவின் ஆட்சி வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய பெருநிகழ்ச்சி உலகத் தமிழ் மாநாடு ஆகும்.

1968-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் நாளே அந்த அரிய விழாவின் நறுமணம் கமழத் தொடங்கிவிட்டது.

சென்னை மாநகரின் முதுகெலும்பாய்ச் செல்லும் மவுண்ட் ரோடில்—ரவுண்டானா பகுதியில்—அன்று டாக்டர் ஏ. இராமசாமி முதலியார் அவர்கள், அறிவுக்கடலாம்—அன்புப் புதையலாம்—பேரறிஞர் அண்ணாவின் அழகுச் சிலையைத் திறந்து வைத்துப் புகழ்ந்தார்.

2—1—68-ஆம் நாள், சென்னையின் அழகான கடற்கரையில் தமிழ் வளர்த்த சான்றோர்களான, திருவள்ளுவர், ஜி. யு. போப், கால்டுவெல், வ. உ. சிதம்பரம் பிள்ளை, பாரதியார், பாரதிதாசன் முதலான ஒன்பதின்மருக்கும் கற்புக்கரசி கண்ணகிக்கும் சிலையெடுப்பு விழா சிறப்பாக நிகழ்ந்தது.

3—1—68-ஆம் நாள். காலை சென்னைக் கடற்கரையிலுள்ள பல்கலைக்கழகத் தேர்வு மண்டபத்தில் கலைப் பொருட்காட்சியை மூதறிஞர் திரு. இராசாசி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

3—1—68-ஆம் நாள் மாலை. தீவுத் திடலிலிருந்து 27 அலங்கார வண்டிகளுடன் கூடிய மாபெரும் ஊர்வலம் ஒன்று கிளம்பி சென்னை நகரின் தலையாய வீதிகளின் வழியாகக் கடற்கரையை அடைந்தது.

அன்று இரவு மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் கடற்கரை மணல் தெரியாதவாறு கடலெனத் திரண்டு நிற்க, இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. சாகீர் உசேன் அவர்கள் தொடக்கவுரையாற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டுத் தொடக்க விழா மிகக் கோலாகலத்துடன் நிகழ்ந்தேறியது. அறிஞர் அண்ணா அவர்கள் தலைமை தாங்கி வீரஞ்செறிந்த உரையாற்றினார்கள்.

இத்தொடக்க விழாவில் காங்கிரசுத் தலைவர் திரு. கு. காமராசர் அவர்களும் எதிர்பாராத விதமாக வரவேற்புரை நிகழ்த்தியது குறிப்பிடத்தக்கது.

பிரெஞ்சுப் பேராசிரியர் பிலியோசா, இலங்கை அமைச்சர் திரு. செல்வம், ஐ. நா. சமூகக் கல்வி கலாசார நிறுவனத்தின் (யுனெஸ்கோ) துணை டைரக்டர், திரு. மால்கம் ஆதிசேஷய்யாவும் மற்றும் பல அறிஞர்களும், தமிழின் பெருமையை மட்டுமின்றி அறிஞர் அண்ணாவின் தமிழ்ப் பணியையும்கூட மிகவும் வியந்து போற்றினார்கள்.

விழாவில், திருக்குறள் ஆராய்ச்சிக்கென, சென்னை, அண்ணாமலை, மதுரை ஆகிய மூன்று பல்கலைக்கழகத் துணை வேந்தர்களிடமும் தலைக்கு மூன்று லட்சம் ரூபாய் வீதம் மாநாட்டின் சார்பில் நன்கொடை வழங்கப்பெற்றது.

4—1—68 முதல் 11—1—68 வரை உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கு சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் சீராக நடந்தேறியது. முப்பதுக்கும் மேற்பட்ட அமெரிக்கா, கனடா, பிரிட்டன், பிரான்சு, சோவியத் நாடு, செக்கஸ்லோவேகியா முதலான நாடுகளிலிருந்து இருநூறுக்கும் மேற்பட்ட தமிழ் அறிஞர்களும், இந்தியாவிலேயே வெளி மாநிலங்களிலிருந்து முப்பது

அறிஞர்களும், தமிழகத்திலிருந்து மட்டும் நூற்றுத் தொண்ணூறு அறிஞர்களும் இக்கருத்தரங்கில் பங்கு கொண்டு தத்தம் ஆராய்ச்சித் திறனை வெளிப்படுத்தினர்.

கருத்தரங்கின் இறுதி நாள் நிகழ்ச்சியில் அறிஞர் அண்ணா ஆற்றிய பீடுமிக்க ஆங்கில உரை நயமும் நகைச் சுவையும் மலிந்து ஆங்கிலக் கவிதைப் புனலாகவே பெருக் கெடுத்துப் பாய்ந்தது. அதனைச் செவிமடுத்த வெளி நாட்டறிஞர்கள் அனைவரும் வாயைப் பிளந்தவண்ணம் மெய் மறந்து கரவொலி எழுப்பியவண்ணமே இருந்தனர்.

மேற்குறிப்பிட்ட நாட்களில், தீவுத் திடலில் அழகுற எழுப்பப்பெற்ற பூம்புகாரில், பழைய சங்ககாலமே மறுபிறவி யெடுத்து வந்த மாதிரி பல்வேறு இலக்கிய, கலை, இசை நிகழ்ச்சிகள் நடந்தன. பூம்புகார் விழாவின் இறுதி நாளன்று அண்ணா நிகழ்த்திய 'தயங்காதே தமிழா! மயங்காதே தமிழா!'—என்னும் அற்புதச் சொற்பொழிவு தமிழ் நெஞ்சங்களுக்குப் புத்துயிர் ஊட்டிப் புதுச்சுவை வழங்கியது.

மொத்தத்தில் அண்ணாவின் பெருமைக்கு மணிமகுடம் சூட்டுவதாகவே அமைந்திருந்தது உலகத் தமிழ் மாநாடு.

## இந்தி ஒழிந்தது!

'அறிஞர், அண்ணா அவர்களை அரசியல் துறைக்கு முனைந்து இழுத்துவிட்ட பெருமை இந்தியையே சாரும்!' என்பதை முன்னரே தெளிவாக விளக்கியுள்ளோம்.

அவருடைய முப்பதாண்டுக் கால அரசியல் இலட்சியக் கனவான 'இந்தியொழிப்பு'—ஒருவாறாக நனவாக நிறை வேறும் நாளும் வந்தது.

ஆம்; 23—1—68-அண்ணாவின் வரலாற்றில் மட்டுமின்றி தமிழகத்தின் வரலாற்றிலும் பொன்னெழுத்தில் அல்ல—வைர எழுத்துக்களில் பொறிக்கப்பட வேண்டிய நாளாகும்!

ஏனெனில் அன்றுதான், முதலமைச்சர், அண்ணா அவர்கள் தமிழகச் சட்ட மன்றத்தில் தம் கைப்பட இந்தி யொழிப்புத் தீர்மானத்தை எழுதி நிறைவேற்றினார்கள்.

''...பல்வேறு மொழி — பண்பாடு — நாகரிகங்களைக் கொண்ட இந்தியாவில் ஒரு வட்டார மொழியை மட்டும்

ஆட்சி மொழியாக்குவது இந்திய ஒற்றுமையையும் ஒருமைப் பாட்டையும் குலைத்து ஒரு மொழிப் பகுதி மற்ற மொழிப் பகுதிகளை அடிமை கொள்ளச் செய்திடும் என்று உணரப் படுவதால் தமிழும் மற்ற தேசீய மொழிகளும் மத்திய ஆட்சி மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டு அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும், அதுவரையில் ஆங்கிலமே ஆட்சி மொழியாகத் தொடர்ந்து இருந்து வரவேண்டும். அதற்கு ஏற்றபடி இந்திய அரசியல் சட்டத்தின் மொழிப்பிரிவு திருத்தப்பட வேண்டும் என்று இந்த மன்றம் வற்புறுத்து கிறது...

"...மத்திய அரசின் இந்தித் திணிப்புத் திட்டத்தை இந்த மன்றம் ஏற்க மறுக்கிறது.

"மத்திய அரசின் மொழித் தீர்மானத்தை இந்த அரசு செயல்படுத்த மறுக்கிற வகையிலும் தமிழக மக்களும் மாணவர்களும் வெளியிட்டுள்ள கருத்து மதிப்பளிக்கிற முறையிலும்,

தமிழகத்தின் எல்லாப் பள்ளிகளிலும் மும்மொழித் திட்டத்தை அகற்றிவிட்டுத் தமிழ்—ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளுக்கு இடமளித்து இந்தி மொழியை அறவே நீக்கிட இம் மன்றம் தீர்மானிக்கிறது.

என். ஸி. ஸி. முதலிய அணிகளில் பயன்படுத்தப்பட்டு வரும்—இந்தி ஆணைச் சொற்களை நீக்கி விடுவது என்றும், இதற்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்க மறுத்தால் என். ஸி. ஸி. போன்ற அணிகளைக் கலைத்து விடவும் இந்த மன்றம் தீர்மானிககிறது."

—வரலாற்றுப் புகழ்மிக்க இத்தீர்மானத்தால், தமிழக இளைஞர்களின் எதிர் காலத்தைச் சூழவிருந்த இருள் மூட்டத்தைக் கிழித்தெறிந்து ஒளி விளக்கை ஏற்றி வைத்து விட்டார் அண்ணா?

## பஸ் தொழிலாளர்—மாணவர் மோதல்

இன்றைய மாணவர்கள் நாளை நாட்டையே ஆளும் பொறுப்புமிக்க அமைச்சர்கள் ஆகக் கூடியவர்கள்.

தொழிலாளர்களோ, நாட்டுக்கே அச்சாணி போன்ற வர்கள்.

இரு தரப்பினருமே உணர்ச்சிகளுக்கு இரையாகித் தத்தம் பொறுப்புக்களையும் கடமைகளையும் மறந்து மோதிக் கொள்ளத் தொடங்கினால் நாட்டின் நிலைமை என்னாவது? அத்தகைய பயங்கரமான ஒரு மேக மூட்டம் 25—3—68 ஆம், நாளன்று திடீரென்று சென்னை நகரைக் கவ்விற்று.

சட்டக் கல்லூரி மாணவர் ஒருவருக்கும் அரசுப் பேருந்து (பஸ்) தொழிலாளருக்குமிடையே வெடித்த சிறு மோதல் பொறி பெரும் எரிமலையாகவே கொழுந்து விட்டுக் கலவரங் களைக் கக்கிற்று. சாகக் கிடக்கும் நோயாளிகளைக் காப்பாற் றும் பொறுப்பில் உள்ள டாக்டர்களே வேலை நிறுத்தம் செய்யும் அளவுக்கு நிலவரம் படுமோசமாக உருவெடுத்து விட்டது.

ஆனால், தம்மீது வீசப்பட்ட தாக்குதல் கணைகள் அத் தனையையும், 'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்'—என் னும் தாரகமந்திரத்தை உலகுக்கு வழங்கிய அண்ணா தாங் கிக் காட்டினார். பொறுமைக் கடலான அவர் மேற் கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக, மாணவர்—தொழிலாளர் மனக் கசப்புத் தணல் படிப்படியாகத் தணிய லாயிற்று.

# 32. அமெரிக்காவில் அறிவுச்சுடர்!

## பூங்குயில் புறப்பட்டது!

'கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு'—என்று எப்போதோ அவ்வைக்கிழவி சொல்லி வைத்த அமுத வாக்கு, அண்ணாவைப் பொறுத்து நூற்றுக்கு நூறு மெய்யாகப் பலித்துப் பரிமளிப்பதைத் தமிழ்மண் பல்லாண்டுகளாகவே கண்டு மகிழ்ந்து வந்திருக்கிறது.

எனினும், அமெரிக்க அரசினரின் அழைப்பின் பேரில் அந்த நாட்டிலுள்ள 'யேல்' (yale) பல்கலைக்கழகம் காண அண்ணா மேற்கொண்ட பயணத்திலே இணையேயில்லாத தனிச் சிறப்புகள் பல உண்டு.

அமெரிக்க நாட்டிலுள்ள நியூஹேவன் நகரில் 1701-ஆம் ஆண்டில் பத்து பிராட்டஸ்டண்ட் பாதிரிமார்களால் சிறு கல்விக் கூடமாகத் தொடங்கப் பெற்றதே இந்த யேல் பல்கலைக்கழகம். ஒரு சமயம் பொருளாதார நெருக்கடியின் காரணமாக அதை மூடவேண்டிய கட்டாய நிலையும் உருவாயிற்று. அதன் வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்கள் உலகெங்கும் நன்கொடை கேட்டு ஒரு வேண்டுகோள் விடுத்தனர்.

அப்போது, சென்னை மாநில ஆளுநராக (கவர்னராக) இருந்த எலிஹூ யேல் என்பவர் சிறு தொகையொன்றை நன்கொடையாக அனுப்பி வைத்தார். அதுவே கணிசமான தொகையாக, பல்கலைக்கழக வளர்ச்சிக்குப் புத்துயிர் ஊட்டுவதாக அமைந்துவிட்டது. அதனாலேயே அந்தப் பல்கலைக் கழகத்துக்கு ஆளுநர்—யேல் அவர்களின் பெயரையே சூட்டிவிட்டனர்.

எந்த மாநிலத்தின் ஆளுநராக இருந்தவரால் புதுவாழ்வு பெற்றதோ அந்தப் பல்கலைக் கழகம், அதே மாநிலத்தின் முதலமைச்சரை வரவேற்று விருது வழங்குவது ஒரு தனிச் சிறப்பே அல்லவா?

மேலும், யேல் பல்கலைக் கழகம் எல்லோருக்கும் எளிதிலே சிறப்புச் செய்து விடாது. அகில உலகப் புகழ்பெற்ற பேரறிவாளர்களுக்கே அது மதிப்பளித்து வந்துள்ளது. அத்துடன், அமெரிக்க நாட்டைச் சார்ந்த தலைவர்களையன்றி வேறு ஒரு வெளிநாட்டுத் தலைவரையும் அது வரவேற்றுச் சிறப்புச் செய்ததும் இல்லை.

அகில உலகத்தையே எடுத்துக் கொண்டாலும் அறிஞர் அண்ணாதான் முதன் முதல் அந்தப் பல்கலைக் கழகத்திலே சிறப்பிக்கப் பெறும் முதல் வெளிநாட்டுத் தலைவர் ஆவார்.

இவ்வாறு பல்வேறு வகையான தனிச்சிறப்புகள் கொண்ட ஒரு விருதினைப் பெறுவதற்காக, யேல் பல்கலைக் கழகம் அமைந்துள்ள, அமெரிக்க நாட்டை நோக்கி தமிழின் மாட்சியைத் தரணியெங்கும் பாடிவரும் பூங்குயிலாகப் பேரறிஞர் அண்ணா 15—4—68-ஆம் நாள் அன்று சென்னையை விட்டுப் புறப்பட்டார்.

ஆளுநர் சரிதார் உச்சல்சிங், அமைச்சர்கள், சென்னையிலுள்ள அமெரிக்கத் துணைத் தூதுவர் டாக்டர். ஆல்பர்ட் பிராங்ளின் முதலானோர் உற்சாகமாக வழியனுப்பி வைத்தனர். அவருடன் அவரது தனிச்செயலாளர் திரு. சொக்கலிங்கம் அவர்களும் சென்றார்கள்.

அண்ணாவைச் சுமந்த பெருமையுடன் பிற்பகல் 2-40 மணிக்குச் சென்னையிலிருந்து புறப்பட்ட விமானம் மாலை 5-மணி அளவில் பம்பாய் சென்றடைந்தது.

அன்று நள்ளிரவு 2 மணியளவில் பம்பாயிலிருந்து உரோம்நகர் நோக்கி அண்ணா பயணமானார்.

## போப் அவர்களின் பொன்னான ஆசி

உரோம் நகரை அடைந்த அண்ணா, வாடிகன் நகரில் உள்ள அகில உலகக் கத்தோலிக்க மதகுருவான போப் ஆண்டவரைச் சந்தித்தார்.

உலக சமாதானத்துக்காக இந்தியா ஆற்றிவரும் பணிகளுக்காக அண்ணாவிடம் பாராட்டுதல் தெரிவித்தார் போப் ஆண்டவர்.

தாம் கொண்டு சென்ற திருக்குறள் நூலையும், சென்னையில் 1968 சனவரித் திங்களில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப்பு மலரையும் போப் ஆண்டவருக்குக் காணிக்கைகளாக வழங்கினார் அண்ணா.

போப் ஆண்டவரின் உளம் நிறைந்த ஆசிகளைப் பெற்றுக் கொண்டு அண்ணா பின்னர் பாரிசுக்குப் புறப்பட்டார்.

## பிரெஞ்சுத் தலைநகரில் பேரறிஞர்

பிரெஞ்சுத் தலைநகரான பாரிஸ் விமான நிலையத்தில் பிரெஞ்சு அரசாங்கப் பிரதிநிதிகள் அண்ணாவைச் சிறப்பாக வரவேற்றனர்.

அந்த அரசாங்கத்தின் விருந்தாளியாகப் பாரிசில் தங்கிய அண்ணா வரலாற்றுப் புகழ்மிக்க வெர்செய்ல்ஸ் அரண்மனை, ரெனால்ட் கார் தொழிற்சாலை, லூவர் மியூசியம் முதலானவற்றைச் சுற்றிப் பார்த்து மகிழ்ந்தார்.

ஐ. நா. கல்வி நிறுவனத்தின் தலைமை அதிகாரியான திரு. ரெனே மகோ என்பவரையும் மற்றும் பல முக்கியத் தலைவர்களையும் சந்தித்து உரையாடினார்.

தாம் கொண்டு சென்றிருந்த உலகத் தமிழ் மாநாட்டு வருணனைத் திரைப்படத்தை அங்குப் போட்டுக் காட்டி எல்லோரையும் இன்ப வெள்ளத்தில் மூழ்கடித்தார்.

பின்னர் அமெரிக்காவை நோக்கிப் புறப்பட்டார் அண்ணா.

## அமெரிக்க மண்ணில் அறிஞர்க்கு வரவேற்பு

நியூயார்க்கிலுள்ள 'கென்னடி அகில உலக விமான நிலையத்தில்' பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பெரும் உற்சாகம் நிரம்பிய வரவேற்புக் காத்திருந்தது.

ஐ. நா. சபையின் இந்தியத் தூதுக் குழுவின் தலைவர், திரு. ஜி. பார்த்தசாரதி அவர்களே அண்ணாவை வரவேற்க வந்திருந்தார்.

அமெரிக்க அரசாங்க அதிகாரிகளும் அண்ணாவை வரவேற்க வந்திருந்தனர்.

நியூயார்க்கில் தங்கியிருந்தபோது, அங்கு நீக்ரோக்கள் வாழும் சேரிப் பகுதியை அண்ணா பார்வையிட்டார்.

வானளாவிய 'எம்பயர் ஸ்டேட்'—மாளிகைமேல் ஏறி அங்கிருந்தே நகரம் முழுவதையும் கண்டு களித்தார். லிங்கன் ராக்பெல்லர் நிலையங்களுக்குச் சென்றார்; விடுதலைச் சிலையையும் பார்வையிட்டார்.

நியூயார்க் மாநிலத்தின் வடபகுதியிலுள்ள பஃபாலோ நகருக்குச் சென்றார். அங்கிருந்து கண் கவரும் நயாகரா நீர்வீழ்ச்சியையும் பார்வையிட்டு மகிழ்ந்தார்.

ஐ. நா. பொதுச் செயலாளர் திரு. ஊதாண்ட் அவர்களையும் அண்ணா சந்தித்து அளவளாவினார்.

ஐ. நா.விலுள்ள இந்தியத் தூதுவர், திரு. பார்த்தசாரதி மட்டுமின்றி, ஐ. நா.வின் துணைச்செயலாளர், திரு. சி. வி. நரசிம்மன் அவர்களும் விருந்தளித்து அண்ணாவைச் சிறப்பித்தார்.

பின்னர் ஆல்பனி வழியாக கனெக்டிக்கட் மாநிலத்திலுள்ள 'லேக்வில்'—என்னுமிடத்திற்கு அண்ணா சென்றார். அங்கே 'மோனப்புல்வெளி'—என்னும் பண்ணை இல்லத்தவரான ஜான் பிரிஸ்கோ தம்பதியினரின் விருந்தோம்பலில் திளைத்தார்.

பிறகு, யேல் பல்கலைக் கழகம் உள்ள நியூஹேவன் நகருக்குப் புறப்பட்டார்.

## விருது பெற்ற வேந்தர்

நியூஹேவன் நகரிலுள்ள யேல் பல்கலைக் கழகம் ஏராளமான கல்லூரிகளையும், நூலகங்களையும், பரிசோதனைச் சாலைகளையும் விடுதிகளையும் 700 ஏக்கர் பரப்புள்ள விளையாட்டுத் திடலையும் கொண்டது. இப்பல்கலைக் கழகத்தில் மொத்தம் 8400 மாணவர்கள் பயில்கின்றனர்.

இங்குள்ள டிமோத்தி டுவைட் கல்லூரி மிகவும் புகழ் வாய்ந்தது. இங்குதான் 22—4—68 முதல் 5 நாட்கள் வரை 'சப்-பெல்லோ ஷிப்' (Chubb Fellowship) பெறும் சிறப்பு விருந்தாளியாக அண்ணா தங்கியிருந்தார்.

அமெரிக்காவின் புகழ்பெற்ற தலைவர்களான அவெரல் ஹாரிமன், அட்லாய் ஸ்டீவன்சன், அமெரிக்கத் துணைக் குடியரசுத் தலைவராக இருந்த ஹம்ப்ரே, பாரிகோல்டு வாட்டர், கவர்னர் ரோனல்ட் ரீகன் ஆகியோரே அண்ணா

வுக்கு முன்னர் 'சப்'—திட்டத்தின் கீழ்ச் சிறப்பிக்கப் பெற்ற வர்கள்.

யேல் பல்கலைக் கழகத்தில் தங்கியிருந்த அந்த ஐந்து நாட்களிலும் தம்முடைய திறமையான வாதத்தாலும் கூர்மையான அறிவாலும், நகைச்சுவையாலும் அமெரிக்க மாணவர்களின் உள்ளத்தையெல்லாம் கொள்ளை கொண்டு விட்டார் அண்ணா.

அங்கு நடைபெற்ற ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் அண்ணா நடந்துகொண்ட முறையும் பேசிய பேச்சும் அவரை உலகத் தலைவர்களோடு ஒப்பு நோக்கிப் பேசும் அளவுக்கு உயர்த்தி விட்டன.

"நேருவுக்குப்பின் இந்தியாவில் தன்னடக்கம் மிக்க தலைவர்களில் ஒருவர் அண்ணாதுரை; தமது கொள்கைகளின் பால் பொதுமக்களின் ஆதரவைத் திரட்டுவதில் வல்லமை பெற்றவர்"—என்றெல்லாம் யேல் பல்கலைக் கழக ஏடு கட்டுரை வெளியிட்டுப் பாராட்டியது.

"...சர்வதேசத் தலைவர்களுள் ஒருவர் என்கிற தகுதிப்படி அவர் யேல் பல்கலைக்கழகத்தில் ஐந்து நாட்கள் தங்கி யிருந்து மாணவர்களுடன் கலந்துரையாடுவார்"—என்று புதுடில்லியிலிருந்து வெளிவரும் 'பேரியாட்' ஏடு எழுதிய தைப் போலவே அண்ணா அங்கே சிறப்பிக்கப் பெற்றார்.

அங்குள்ள மாணவர்களுக்கு அவர் 'திருக்குறள் வகுப்பு' நடத்தினார்; அதன் மூலம் வள்ளுவர் புகழையும், தென்னு தமிழ்ப் புகழையும் திசையெட்டும் பரப்பிய செம்மல் ஆனார் அண்ணா!

பிறகு, யேல் பல்கலைக் கழக மாணவர்களிடமும் பேராசிரியர்களிடமும் பிரியா விடைபெற்று, அமெரிக்க நாட்டின் தலைநகரான வாஷிங்டனுக்குப் புறப்பட்டார்.

## அமெரிக்கத் தலைநகரில் அண்ணா!

பல இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்தவாறே இரயில்மூலம் வாஷிங்டன் வந்தடைந்த அண்ணா, வரலாற்றுச் சிறப்புமிக்க பல இடங்களையும் சுற்றிப் பார்த்தார். குறிப் பாக, லிங்கன் நினைவாலயம் முதல் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் வாஷிங்டன் நினைவாலயம், கென்னடியின் கல்லறை

யுள்ள ஆர்லிங்டன் பகுதி முதலானவற்றை அண்ணா கண்டு அஞ்சலி செலுத்தினார்.

கார்மன் கர்பி முதலான பல அரசியல் அறிஞர்களைச் சந்தித்துப் பேசினார்.

பின்னர், போர்ட்டோ ரீகோவையும் பார்த்து மகிழ்ந்தார்.

இந்தியாவின் நல்லெண்ணத் தூதுவராக எல்லோரும் போற்ற அமெரிக்கர்களைக் கவர்ந்துவிட்ட அண்ணா வெற்றி வீரராக அந்நாட்டை விட்டுக் கிளம்பினார்.

ஜப்பான், ஹாங்காங் முதலான இடங்களிலும் தமது அறிவு முத்திரையைப் பதித்துவிட்டு 12—5—68-ஆம் நாள் இரவு சென்னை வந்தடைந்தார்.

அறிஞர் அண்ணாவின் அமெரிக்கப் பயணத்தின் சிறப்புக்கு ஒரு சின்ன எடுத்துக்காட்டைக் கூறினாலே போதும்.

"...இந்தியப் பிரதமர் இந்திராவைப்பற்றி அமெரிக்காவில் குறிப்பிட்ட அண்ணா அவர்கள் 'இந்தியாவில் பல்வேறு சிக்கல்கள் உள்ள நிலையில் இந்தியப் பிரதமர் இந்திரா சிறப்பாகச் செயல் புரிகிறார்' என்று கூறியுள்ளார். அண்ணா அவர்களின் இந்தப் பேச்சும் அவர் தெரிவித்துள்ள இன்னும் சில கருத்துக்களும் அண்ணா அவர்கள் திறமை மிக்கதொரு மாநிலத் தலைவர் மட்டுமல்ல, இந்தியாவின் தேசியத் தலைவராகவும் வளர்ச்சி பெற்று வருகிறார் என்பதை உறுதி செய்கின்றன."

—என்று 'ராம்ப்லர்'—என்னும் ஆங்கில வார ஏடு அகமகிழ்ந்து பாராட்டிற்று.

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் போதும்!

ஆனால், அறிஞர் அண்ணா தேசியத் தலைவராக மட்டுமின்றி, அமெரிக்கப் பயணத்தின் மூலம் அகில உலகத் தலைவராகவே உயர்ந்து விட்டார்!

# 34. அறிவுச் சுடர் அணைந்தது!

**ஓய்வில்லா உழைப்பாளி**

அண்ணாவைப் போல ஓயாத உழைப்பாளியைக் காணவே முடியாது.

இரவெல்லாம் படிப்பு; பகலெல்லாம் கூட்டம் என்று அவரது அரசியல் வாழ்வில் ஓய்வே இருந்ததில்லை.

முதலமைச்சர் ஆன பின்னரோ கொஞ்சநஞ்சமிருந்த ஓய்வும் அவரை விட்டுப் பறிபோய்விட்டது.

ஆட்சிப் பொறுப்பு அவருக்குப் புதிய அனுபவம். 'இவருக்கு என்ன தெரியும்?' என்று உயர் அதிகாரிகள் அலட்சியமாய் நடக்காதபடியும் 'இவரை எப்படியும் திருப்பி விடலாம்' என்று அவர்கள் மனப்பால் குடிக்காதபடியும், 'இவரால் நிருவாகத்தைச் சீராக ஒழுங்குபடுத்தி ஓட்ட முடியுமா?' என்று பிற அரசியல் தலைவர்கள் எகத்தாளமாய்க் கேலி செய்யாதபடியும், எல்லோரையும் கட்டி மேய்த்து அதே சமயம், எல்லாத் தரப்பினரையும் திருப்தி செய்ய வேண்டிய பெருஞ்சுமையை முதன் முதலாக ஏற்றிருந்தார் அண்ணா.

புதிய புதிய கொள்கைகளை உருவாக்குவதுடன் தம்முடைய சக அமைச்சர்களுக்கு வழிகாட்ட வேண்டிய பெரும் பொறுப்பும் அவருக்கிருந்தது.

எந்த ஒரு திடீர்ச் சிக்கலுக்கும் நெருக்கடிக்கும் உடனடியாக முடிவெடுக்க வேண்டிய—தீர்வு காண வேண்டிய—பெருங்கடமையும் அவரது மென்னியைத் திருகுவதாக இருந்தது.

இந்த நிலையில் ஓய்வாவது, உறக்கமாவது?

இவ்வாறு அயராது உழைத்துவந்த அண்ணாவுக்கு 1968-செப்டம்பரில் திடீர் என்று உடல் நலம் குன்றியது. அவரது உணவுக் குழாயில், சிறு கட்டியொன்று கிளம்பி உணவே உட்கொள்ள முடியாதபடி ஆகிவிட்டது.

## புயல் வீசிற்று

1969-சனவரித் திங்கள் மூன்றாவது வாரம் அண்ணாவின் உடல்நிலை திடீர் என்று பாதிக்கப்பட்டது. அடையாறு புற்றுநோய்க் கழகத்தில் அண்ணா சேர்க்கப்பட்டார்.

தமிழகமே பதறிற்று.

டாக்டர் மில்லரும், டாக்டர் ஹெயின்ஸ்கேயும் அமெரிக்காவிலிருந்து வந்தனர்; சிகிச்சையளித்தனர்.

மதிநுட்பம் மிகுந்த மருத்துவர்கள் குழு டாக்டர் சதாசிவத்தின் தலைமையின் கீழ்க் கண்ணும் கருத்துமாய்க் கவனித்தது.

நாளாக நாளாக, அண்ணாவின் உடல்நிலை மோசமாகிக் கொண்டே வந்தது.

தமிழ்நாடே நிலைகுலைந்து வானொலிப் பெட்டிகளின் அருகே முற்றுகையிட்டது.

தமிழ்நாடு சட்டமன்றம் காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டது.

அமைச்சர்கள் அடையாறு மருத்துவமனையில் குடியாய்க் கிடந்தார்கள்.

ஆளுநர் உச்சல்சிங் அடிக்கடி போய்க்கவனித்து வந்தார்.

பொதுமக்கள் ஒவ்வொரு நாளும் அடையாறு நோக்கிப் படையெடுத்த வண்ணமே இருந்தனர்.

காங்கிரசுத் தலைவர் காமராசர், இராசாசி, ம. பொ. சி. முதலான பல்வேறு கட்சிகளைச் சார்ந்த தலைவர்களும் அண்ணாவைப் போய்ப் பார்த்து வந்தனர்.

## விளக்கு அணைந்தது

எத்தனை பேர் பார்த்து என்ன? எத்தனை பேர் கதறித் துடித்து என்ன? எத்தனை பேர் உயிரைக் கொடுக்க ஓடோடி வந்து என்ன?

வாழ்க்கையெல்லாம் போராடிப் போராடிக் களைக்காதது போல நோயோடும் போராடிப் போராடியே களைப்புறாமல் இருந்துவந்த அண்ணா—

கோடிக்கணக்கான இதயங்கள் பதறித் துடித்துக் கதறி அழ—

அந்த நிகழ்ச்சியோடு மட்டுமாவது தம் உடலுக்கு ஓய்வு கொடுத்தாரா ?

இல்லை.

தொடர்ந்து பலப்பல கூட்டங்கள் — விழாக்கள்.

## இராசாசிக்குப் புகழ்முடி

அமெரிக்காவுக்குப் போய் வந்தபின் அண்ணா கலந்து கொண்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் 14—12—68இல் நடை பெற்ற மூதறிஞர் இராசாசி அவர்களின் பிறந்தாள் விழா வும் ஒன்றாகும். அப்போது,

"ராஜாஜி எழுதிய சிறு கதையானாலும், திருக்குறள் விளக்க உரையானாலும், சட்டங்கள் செய்வதானாலும் அவற்றிலெல்லாம் அவரது தனித்தன்மை விளங்கக் காண் கிறோம். அந்த அளவுக்கு அவர் கூர்த்த மதியினராகத் திகழ்கிறார்...ராஜாஜி போன்ற தலைவர்கள் தலைமுறைக்கு ஒருவரேனும் தோன்றாவிடில் அரசியல் தூய்மை பெறாது. நான் அவரிடத்தில் பெருமதிப்போடு கவனிப்பதெல்லாம் மக்கள் எல்லோரையும் அவர் சிந்திக்கும்படி செய்திருக்கிறார் என்பதேயாகும். இதுவே ராஜாஜி அவரது வாழ்க்கையில் பெற்றுள்ள மகத்தான வெற்றிகளில் தலையாயது" என்று வெகுவாகப் புகழ்ந்துள்ளார் அண்ணா.

## இறுதி நிகழ்ச்சி

இது ஒரு நிகழ்ச்சி மட்டுந்தானா? இன்னும் எத்தனை எத்தனையோ?

தம் வாழ்நாளில் அண்ணா கலந்துகொண்ட கடைசி பொது நிகழ்ச்சி எது தெரியுமா?

சென்னையிலே நிகழ்ந்த 'கலைவாணர் சிலை திறப்பு விழாதான்'! 14—1—69 பொங்கற் புதுநாள் அன்று நடந்தது அது.

அதற்குப் பிறகு—

அண்ணா எந்தப் பொது நிகழ்ச்சியிலுமே கலந்துகொள்ள வில்லை.

# 35. கண்ணியக் கடவுள் அண்ணா!

1. அன்னைத் தமிழின் அருந்தவப் பேற்றால்
தென்னவர் கோனாய்த் தோன்றிய செம்மல்!
முன்னம் ஆண்ட முப்பெரு வேந்தரைக்
கண்முன் காட்டும் காஞ்சித் தலைவன்!
பன்னீர்ப் பூவின் புன்னகை வீசி
கண்மலை ரால்புவி கவரும் முகத்தன்
கண்ணீர் துடைக்கக் கடவுள் அனுப்பிய
மன்னவன்; பாச மழையின் அகத்தன்.

2. வீணைக் குரலோன்; வேய்ங்குழல் நாவோன்;
தேனைப் பொழியும் செஞ்சொற் கொண்டல்;
வானை விஞ்சி வளரும் சிந்தனை
பூணும் அறிஞன்; புதுமைச் சிற்பி
ஏணியாய்ப் பலரை ஏற்றி வைத்தவன்;
தோணியாய்ப் பலரைத் தூக்கிச் சுமந்தவன்;
கூனிய நெஞ்சங் கொண்ட கொடியரும்
நாணியே திருந்த நன்மையே பெய்பவன்!

நாடும் தமிழும் நம்மிரு விழியென
பாடிப் பேணும் பாவலன் காவலன்!
மூடு பனிபோல் மூண்ட துயரெலாம்
ஓட எழுந்த உதய சூரியன்?
ஓடாய் இளைத்தே உழைப்பார் என்றும்
வாடா வாழ்வு வழங்கும் வள்ளல்!
சாடான் பிறரை; சான்றோன்; அவன்பேர்
பாடாக் கவியின் பாட்டும் பாட்டோ?

4. வெண்ணிறத் தாடி வேந்தர் 'பெரியார்'
எண்ணிய புதுமைகள் இயற்றும் தளபதி?
'தென்னகக் காந்தி' என்னும் படிக்கே
பொன்னெறி 'அகிம்சை' போற்றும் புனிதன்!
'அண்ணா! அண்ணா! அண்ணா!' என்றே
பண்ணாய்ப் பாடிப் பாசம் பொழியும்
எண்ணில் அடங்கா இளைஞர் நெஞ்சில்
கண்ணியம் மிக்க கடவுள் ஆனான்!

—அ. மறைமலையான்

1969-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 2-ஆம் நாள் நள்ளிரவு மணி 12-20க்கு மீளா உறக்கத்தில் ஆழ்ந்து விட்டார்!

எதையும் தாங்கிவந்த இதயம், இப்போது சென்னை கடற்கரையிலே அமைதியாக உறங்குகிறது!

காலம் பொல்லாதது!

கருணைத் தெய்வத்தை—கண்ணியக் கடவுளை—பண்பாட்டுத் திலகத்தை—இப்படியா அது பறிக்கவேண்டும்?

அறிவு விளக்கு அணைந்துவிட்டது!

தமிழகத்தில் இருள் சூழ்ந்து விட்டது!

இதற்கு முன்னரும் சரி, பின்னரும் சரி, இத்தகைய ஓர் அற்புதச் சுடரை—அறிவுக் கருவூலத்தை—அன்புப் பெருங் கடலை—இனி இந்தத் தமிழ் மண் காண்பதற்குக் கொடுத்து வைக்குமா?

ஐயோ, காலமே!

கடவுளே!!

அண்ணா புகழ் வாழ்க!